பவானந்தர் கழக வெளியீடு, 1.

இறையனர் அகப்பொருள்

3

பவானந்தர் கழகம்
வேப்பேரி, : : : : சென்னை.

இறையனார் அகப்பொருள்



பவானந்தர் கழக ஸ்தாபகர்

திவான்பகதூர் ச. பவானந்தம் பிள்ளையவர்கள்,

I.S.O., O.B.E., M.R.A.S. (London), F.R.H.S. (London).

வித்துவான்
கே. பாலசுப்பிரமணியன்.

பவானந்தர் கழக வெளியீடு, 1.

க ள வி ய ல்

என்னும்

இறையனர் அகப்பொருள்

மூலமும் நக்கீரனர் உரையும்

பதிப்பாசிரியர்கள் :

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,

மாஜித் தலைமைத் தமிழாசிரியர்,

பச்சையப்பன் கல்லூரி உயர் கலாசாலை, சென்னை

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை,

தலைமைத் தமிழாசிரியர்,

பெப்ரீஷியஸ் உயர் கலாசாலை, சென்னை.

பவானந்தர் கழகம்

வேப்பேரி : : : : சென்னை

பதிப்புரிமை

1939

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
முகவுரை	...	vii
திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்....		ix
மும்மணி	....	xiv
1. களவு	....	1
2. கற்பு	....	193
மேற்கோள் இலக்கியக் குறிப்புரை	....	255
இந்நூலுரையில் பயின்று வந்துள்ள உவமைகள்	....	349
அரும்பதம் முதலியவற்றின் அகராதி	....	351
சூத்திர முதற்குறிப்பகராதி	....	379
மேற்கோட்சூத்திர முதற்குறிப்பகராதி	....	380
மேற்கோள் இலக்கிய முதற்குறிப்பகராதி	....	381

அந்தமு மாதியு மவ்வுனவ் வுங்நின் றமலன்றந்த
செந்தமி ழென்னுக் திறங்காட்டி யீதைத் திணையகநூல்
வந்தன யாவும் வளரன்பின் மேனவென் வாய்மைக்கன்றே
முந்துமன் பின்முத லாய்மேன வென்று முடிந்ததுவே.

முகவுரை

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்."

—கம்ப நாடர்

தமிழ் நூற்பொருள்களை இனிது விளக்குதற்கு ஆடியின் அமைந்த உரையாசிரியர் பலராலும், மற்றைத் தமிழ்ப் புலவர்களாலும் போற்றிப் புகழப்பட்டு வரும் சொற்பொருட்செறிவும் அருமையும் அமைந்த உரையோடு கூடிய இறையனர் அகப்பொருள், தமிழ் நூல் வளர்ச்சியின் பொருட்டுப் பெரிதும் உழைத்தவரும் அரும்புலச் செல்வருமாகிய யாழ்ப்பாணம் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் இரு முறை பதிப்பிக்கப்பெற்றது. அவ்விரு பதிப்பும் செலவான பிறகு அந்நூலை வாங்கிப் படிக்க விழைவார்க்கு அது கிடைத்தல் அரிதானமையைத் தமிழ் மொழியில் அளவில் ஆர்வம் உடையவரும் தமிழ் வளர்ச்சியைத் தம் வாழ்க்கை நலத்தின் வளர்ச்சியெனக் கொண்டவருமாகிய திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள், I. S. O., F. R. H. S., M. R. A. S., கி. பி. 1916-ஆம் ஆண்டு, பல வகைக் குறிப்புகளோடு பதிப்பித்தார்கள். அப்புத்தகங்களும் இப்பொழுது செலவாகி விட்டன. மேற்படி பிள்ளையவர்களால் தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தமிழ் மக்களின் நன்மையினைப் பெரிதும் நாடித் தமிழ் மொழியினைப் பல வகையினும் வளர்த்தற்பொருட்டு அமைக்கப் பெற்ற பவானந்தர் கழகத்தின் தரும பரிபாலன சபையார், ஐந்து பேரடங்கிய ஆலோசனைக் கழகம் ஒன்றை அமைத்து, அக்கழக அங்கத்தினருள் ஒருவனுகிய என்னைப் பதிப்பாசிரியனுகவும், மற்றோர் அங்கத்தினராகிய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களை உதவிப் பதிப்பாசிரியராகவும் ஏற்படுத்தி, மூல நூலைப் பதிப்பிக்க வேண்டினர்.

நான் மூல நூலுரையின் சில அருந்தொடர்களுக்குக் குறிப்புரையும், மேற்கோள் இலக்கியக் குறிப்புரையும் எழுதினேன். அவற்றுள் உரையின் அருந்தொடர்க் குறிப்புரைகள் அவ்வப்பக்கங்களிலேயே அடிக்குறிப்பாக எண்ணுக் குறியிட்டுச் சேர்க்கப்பட்

டன. பழைய பதிப்பிற்கண்ட குறிப்புகள் உடுக்குறி முதலிய பிற குறிகளிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. மேற்கோள் இலக்கியக் குறிப்புரை நூலின் முடிவிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சென்னைப் புரசைப்பாக்கம் ஸ்த்தரன் மிஷன் பெப்ரீஷியஸ் உயர் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியரும், என் மாணவருள் ஒருவரும், பல நூற்களின் ஆசிரியருமாகிய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், இந்நூலைப் படிப்பார்க்குப் பொருள் இனிது விளங்கும்படி கடின சந்திகளைப் பிரித்துப் பொருளமைதிக்கேற்ப நிறுத்தக் குறிகளையமைத்து, அரும்பத முதலியவற்றின் அகராதியைத் தொகுத்து, இந்நூலுரையிற் பயின்று வரும் உவமைகளைத் திரட்டியமைத்து, கழக ஸ்தாபகரின் ஓரளாற்றுச் சுருக்கமெழுதி, அச்சாகுங்கால் அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்குதல் முதலியவற்றைச் செய்து, நூல் இனிது முடியும்படி பேருதவி புரிந்தனர். இவருக்கு நீண்ட ஆயுளும், உடல் நலமும், செல்வமும், புகழும் ஆகிய இவற்றை இனிது அளித்தருள வேண்டும் எனத் திருமகள் நாதனை வணங்கி வேண்டுகின்றனன்.

ஆலோசனைக் கழகத்தின் மற்றை அங்கத்தினர்களாகிய கிறித்தவ கல்லூரி மாஜித் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு. S. D. சற்குணர், B. A., அவர்களும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு. M. கந்தசாமி முதலியார், B. A., M, R. A. S., அவர்களும், வித்துவான் தே. போ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M. A; B. L., M. O. L., அவர்களும் இந்நூலைப் பதிப்பித்தற்கான பல நன்முறைகளைக் கூறிப் பேருதவி புரிந்தார்கள். கைம்மாறு வேண்டாது இப்பேருதவி புரிந்த இவர்களுக்கு எனது நன்றியறிதலோடு கூடிய வந்தனத்தையன்றி யான் செய்தற்கு யாதுளது!


பவானந்தர் கழகத்தின் தரும பரிபாலகர்களாகிய உயர் திருவாளர்கள் P. M. சிவஞான முதலியார் B. A., B. L., அவர்கள், M. அப்பாதுரைப் பிள்ளை அவர்கள், T. G. தாமோதர முதலியார் அவர்கள், T. S. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள், J. கண்ணப்ப முதலியார் அவர்கள் என்னும் இவர்கள் எங்களை நன்கு உபசரித்து இந்நூலைப் பதிப்பிக்க வேண்டிய உதவிகளைப் புரிந்து மேன்மைப் படுத்தினர்கள். இப்பெருந்தகையாளர்களுக்கு எங்கள் அன்போடு கூடிய வந்தனம் என்றும் உரியதாகுக.

சென்னை,
19—5—'39.

இங்ஙனம்,
கா. ர. கோவிந்தராஜ முதலியார்.

திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளையவர்கள்

வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்



"தோன்றிற் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று." —திருக்குறள்

என்னும் வள்ளுவர்தம் வாய்மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இவ்வுலகில் தோன்றித் தம் புகழ் நிறுவிச் சென்ற பெருமக்களுள் திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளையவர்களும் ஒருவர். இவர் முத்துச்சாமிபிள்ளை என்னும் வேளாண்குடிச் செல்வரும் சந்திரமதி என்னும் அவர்தம் மனைவியாரும் செய்த நற்றவப்பயனுய்த் தோன்றினர். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்,' என்னும் முதுமொழிக்கேற்ப இளமைப் பருவத்திலேயே இவரிடம் சீரிய குணங்கள் தோன்றித் தழைத்தன. இவர் இளமையில் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து, ஒழுக்கத்திற்சிறந்து, 'இம்மைந்தரைப் பெற இவர்தம் பெற்றோர் எத்தவம் இழைத்தனரோ!' என்று கண்டோர் கூற விளங்கினர். இவர் வழக்கறிஞராக விரும்பி இங்கிலந்து செல்ல முயன்றபோது, வைதிக மதப்பற்றுள்ளவராகிய இவர்தம் அன்னையார் மறுக்க, 'காய்சொல் துறந்தால் வாசகம் இல்லை,' எனும் கட்டுரைக் கிணங்கி அக்கருத்தினை ஒழித்தனர்.

அந்நாளில் நகரக் காவற்படையின் திறத்தையும் உரத்தையும் வளர்க்கக் கருதின கர்னல் டி. வெல்டன், ஸி. ஐ. இ. என்னும் புகழ் பெற்ற நகரக் காவற்படை அதிகாரத் தலைவர் * கல்வியில் தேர்ந்த இளைஞரை நகரக் காவற்படையிற் சேர்க்க விரும்பிப் போட்டிப் பரீட்சை ஒன்றை ஏற்படுத்தினர். அப்பரீட்சை எழுதியவர்களில் முதல்வராய்த் தேறிய பிள்ளையவர்களைக் கர்னல் வெல்டன் துரை தாம் புதிதாக ஏற்படுத்திய குற்ற வர்த்தமான விசாரணை வகுப்பில் † தமது நேர்முகக் காரியஸ்தராக ‡ நியமித்தனர். இவர் தாம்

* The Commissioner of Police.

† The Criminal Intelligence Department.

‡ Personal Officer.

மேற்கொண்ட தொழில்களைக் கர்னல் வெல்டனும் பிறரும் கண்டு வியக்கும்படி செய்து இளம்புகழ் ஈட்டினர்.

இவர் தென்னிந்தியாவிற் பற்பல இடங்களில் ஏற்பட்ட குழப்பங்களைத் திறம்பட அடக்கி, ஐரோப்பிய மேற் பார்வை உத்தியோகஸ்தர்களால் 'அற்புதம் விளைத்த விற் பனர்' எனப் புகழ்ந்துரைக்கப்பட்டார்; கொலை, கொள்ளை, பொய்க் கையெழுத்து, மோசம் முதலிய சிக்கலான வழக்கு களைக் கண்டுபிடித்து, தமது நுண்ணறிவால் அவற்றில் உண்மையை நாடி அறிந்து வெளிப்படுத்தியதால் தம் மேலதிகாரிகளாலும் நீதிபதிகளாலும் மிகவும் பாராட்டப் பட்டனர். மனந்தடுமாறுமை, நேர்பட ஒழுகல், நிருவாக சாதுரியம் ஆகிய அரும்பண்புகள் இவரிடம் விளங்கின. இவர் சட்டப் பரீட்சையில் தேறுதவராயினும், தமக்கு இயற் கையிலேயே சட்ட நூற்களை ஆராய்வதில் ஏற்பட்டிருந்த பெருவிருப்பத்தால் அவற்றை நன்கு ஆய்ந்துணர்ந்த சட்ட அறிஞராவர்.

இவர் F. L., B. L., சட்டப் பரீட்சைகளுக்குரிய 30 நூல்களை ஆராய்ந்தெழுதிப் பதிப்பித்துள்ளார்.

1904-ஆம் ஆண்டு முதல் 1912-ஆம் ஆண்டு வரையில் இவர் சென்னை நகரக் குற்ற வர்த்தமான விசாரணை வகுப் புத் தலைவராய் அமைந்து அரசாங்கத்திற்கு அரிய சேவை செய்தனர்.

மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும் இளவரசியா ரும் சென்னைக்கு விஜயஞ்செய்த போது (1906ஆம் ஜன வரிமீ 24—28உ) அவர்களுக்கு மெய்காப்பாளராயிருக்கும் பொறுப்பை ஏற்று இவர் திறம்படச் செயலாற்றியதற்கு வியந்து இளவரசர் தம் திருக்கரத்தாலேயே **விசேட விருதுப் பதக்கம்*** ஒன்றை இவருக்கு அணிந்து மகிழ்ந்தார். மிண்டோ பிரபுவும், ஹார்டிஞ்சு பிரபுவும் சென்னையில் தங்கியிருந்த போதும் இவரே அவர்களுக்கு மெய் காப்பாளராயிருந்து அவர்கள் மெச்சும்படி செயலாற்றினர்.

* Special Medal.

1918ல் இவர் சென்னைத் தென் பாரிச நகரக் காவற் படை அதிகாரத் தலைமைப் பிரதிநிதியாய் இருந்த போது இவர் ஆற்றிய செயல்கள் துரைத்தனத்தாரால் மிகப் பாராட்டப்பட்டன.

இங்ஙனம் முப்பத்தைந்தாண்டுகள் இவர் ஆற்றிய உத்தமத் தொண்டுகளைத் துரைத்தனத்தார் தொடர்ச்சி யாக அரசாங்க அறிக்கைகளிலும்* வர்த்தமானப் பத்திரி கைகளிலும் அடிக்கடி புகழ்ந்திருக்கின்றனர். இவர் சென்னை ஷெரீப்பாகவும் விளங்கினர்.

இவர் தமது உத்தியோக அலுவல்களைத் திறம்படச் செய்து புகழீட்டியதுடன் அமையாமல், நாட்டு மக்களின் நலங்கருதி அறிவுத்துறையிலும் பற்பல தொண்டுகள் ஆற்றி வந்தனர். இதனால் வர்த்தமானப் பத்திரிகைகள் இவரைப் **'பரோபகாரப் போலீஸ் உத்தியோகஸ்தர்'** எனப் பா ராட்டியிருக்கின்றன. இவர் தம் பெயரால் **'பவானந்தர் கழகம்'** என்னும் கல்விக் கழகம் ஒன்றை நிறுவி, அதன் வளர்ச்சிக்காகவும் தொண்டுகளுக்காகவும் தாம் அரிதின் ஈட்டியபெரும்பொருளை இறுதிமுறி†வாயிலாக அர்ப்பணம்செய் திருக்கின்றனர். பல துறைகளில் ஆராய்ச்சிகள் புரிவதும், பொது ஜன நன்மைக்கான ஞானத்தையும் கல்வியையும் நீதிநெறியிலும் உடற்கூற்றுத் துறையிலும் மக்களிடையிற் பரவச்செய்வதுமே அக்கழகத்தின் நோக்கமாகும். அக் கழகச் சார்பில் இவரால் நிறுவப்பட்ட நூல் நிலையம் ஒன்று திகழ்கின்றது. அந்நூல் நிலையத்தில் சற்றேறக் குறைய நாற்பது ஆண்டுகளாக இவரால் அரிதின்முயன்று தொகுக்கப்பெற்ற பல்லாயிரம் நூல்கள்—ஏட்டு வடிவிலும் கையெழுத்திலும் அச்சிலும் அமைந்தவை—உள்ளன.

இவர் இலண்டன்மாநகர ராஜரீக தேச சரித்திர சங்கத் தில் ஓர் அங்கத்தினர்.‡ ராஜரீக ஆசிய சங்கத்திலும் ஓர்

---

* Administration Reports.

† Will.

‡ Fellow of the Royal Historical Society.

அங்கத்தினர். * தமிழ் நூல்கள் பலவற்றை இவர் பல வகைக் குறிப்புகளுடனும் ஆராய்ச்சி முகவுரைகளுடனும் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழுலகத்திற்குச் சிறந்த தொண்டாற்றியிருக்கின்றார். தமிழ் மொழியிடத்தும் தமிழரிடத்தும் இவருக்கிருந்த அன்பின் பெருக்கினை அளவிட்டுக் கூறல் இயலாது. தமிழிலக்கணங்களில் தொன்மை வாய்ந்தனவும் சிறந்தனவுமாகிய **தொல்காப்பியம் பொருளதிகாரம்** (நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரையுடன்), **யாப்பருங்கல விருத்தியுரை, இறையனாரகப்பொருளுரை, பேரகத்தியத்திரட்டு**, இராமானுச கவிராயர் சங்கர நமச்சிவாயப் புலவர் சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்களின் உரைகளைத்தழுவி எழுதப்பட்ட நன்னூல் காண்டிகையுரை முதலியவற்றை இவர் தம் பொருளைக்கொண்டு வெளியிட்டிருக்கின்றனர். இவரால் இயற்றப்பட்ட நாடகங்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் பல. இவர் இயற்றிய நாடகங்கள் இலண்டன்மா நகரத்தில் மாட்சிமை தங்கிய **ஐந்தாம் ஜார்ஜ்** சக்கரவர்த்தியாரும் **மேரி** மகாராணியாரும் கண்டு களிக்க அவர்கள் முன்னிலையில் நடித்துக்காட்டப்பட்டமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத் திராவிட வாசக சங்கத்திற்குத் தலைவராயும், மேற் பல்கலைக் கழக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட திராவிடச் சொற்றொடராக்கச் சங்கத்தின் அங்கத்தினராயுமிருந்திருக்கிறார்; தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் சபாநாயகருக்குப் பிரதிநிதியாய் † இருந்திருக்கிறார். இவர் இயற்றிய நூல்களிற் பல, பல்கலைக் கழகச் சார்பில் நடைபெறும் கல்லூரிகளின் மாணவர்களுக்கும் உயர்தரப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் பாடபுத்தகங்களாக அமைக்கப்பட்டன. இவரியற்றிய வாசக பாடங்கள் இளஞ்சிறார்க்குப் பயன்பட்டு வருகின்றன.

---

* Member of the Royal Asiatic Society.

† Vice-President.

இவர் தலைவராயும் அங்கத்தவராயும் அமர்ந்து தொண்டாற்றிய கலைக் கழகங்களும் சபைகளும் பலவாகும். அக்கழகங்களும் சபைகளும் இவரைப் பெரிதும் பாராட்டி உள்ளன. அவற்றைப்பற்றிய குறிப்புகள் யாவும் இவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் விரிவான நூலில் வெளி வருமாதலின் விரிவஞ்சி இங்கு விடப்பட்டன.

இவர் அரசாங்கத்தாரால் பெற்ற பட்டங்களும் பரிசுகளும் மதிப்புரைகளும் பல. 1889-ஆம் ஆண்டு உத்தியோகத்திற் சேர்ந்த இவர் படிப்படியாக உயர்ந்து, 1908-ஆம் ஆண்டு போலீஸ் அஸிஸ்டெண்டு கமிஷனர் பதவியை ஏற்றனர்; 1918-ஆம் ஆண்டு டெபுடி கமிஷனர் பதவியை மேற்கொண்டனர்.

இவர் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியாருக்கும், அரசாங்கத்திற்கும், நாட்டுக்கும் ஆற்றிய அரும்பெருந்தொண்டுகளுக்காக ஆண்டுதோறும் ஆயுள் வரையில் இவருக்கு அறுநூறு ரூபாய் நிரந்தர வருமானமளிக்கும் ஜாகீர் ஒன்று 1922 ஆம் ஏப்பிரல்மீ 12ஆ முதல் பயன் தருமாறு வழங்கப்பட்டது.

இவருடைய பக்தி மிகுந்த பரிசுத்தமான பிரமசரிய வாழ்க்கையும், இனியகுணமும், சிறந்த கலையுணர்வும், வசீகரத் தோற்றமும், வணங்கிய வாக்கும், நுணங்கிய கேள்வியும், வள்ளன்மையும், அடுத்தவரை ஆதரிக்கும் நற்பண்பும் இவரை எவரும் விரும்பிப் பாராட்டும் பண்புகளாயிருந்தன. கற்றருடன் கலந்துரையாடி மகிழ்வதிலும் பேரின்பம் வேறில்லை என்னும் கருத்துடன் இப்பெரியார் வாழ்ந்து வந்தமையின் புலவருங் கவிஞரும் போற்ற வாழ்ந்தவர் ஆவர்.

இங்ஙனம் அரசறிய வாழ்ந்து, பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும் ஊருணி நீர் நிறைந்தது போலவும் பலர்க்கும் பயன்படுபவராய் விளங்கிய இப்பெரியார், 1932-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆந்தேதி இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகத்தார்க்கு நல் விருந்தினராயினர். இறைவன் திருவடி நீழலில் இவர் ஆன்மா என்றும் நிலவி இன்பந் திளைப்பதாகுக!

திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளையவர்களைப்பற்றிக்

கா. ர. கோவிந்தர்ாஜ முதலியாரவர்கள் பாடிய

மும்மணி

கட்டளைக் கலித்துறை

தோக்கார்ந் தவிரு மருநூல்க
டம்மகந் தோய்ந்தநுட்பம்
புக்கார்ந் தறியும் வளவான்
புலத்தின் பொலிதருவோன்
மைக்கார்க் கடலையும் பாற்கட
லாக்கும் வளப்புகழெண்
டிக்கார்ந் தவிரும் பவானந்த
னென்றுரை சீரியனே. (க)

நம்மாறு வேண்டாக் கடப்பாட்டின்
யாமே கனமுடையோம்
எம்மாண்பு கொண்டா ரிலையென்று
கொள்ளே லெழின்முகிலே !
செம்மாண்பு கொண்ட புலத்தோர்கள்
போற்றச் சிறந்துளனுல்
மெய்ம்மாண்பு கொண்ட பவானந்தன்
ரூனுமிம் மேதினிக்கே. (உ)

ஐந்தரு மாண்பில வானகத்
துள்ளன வாதலின்வான்
வந்தெழு மேகமு மாண்பில
தாஞ்சேண் வதிதரலான்
முந்துற நாவலர் தம்மரு
குற்று முகமனுரை
தந்திடு நல்லான் பவானந்தன்
காண்மாண்பு சார்ந்தவனே. (ங)

ஓம்:

கணியம்

என்னும்

இறையனார் அகப்பொருள்

1. கணவு

க. அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவ
தந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்

என்பது சூத்திரம். 'எந்நூல் உரைப்பினும், அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க,' என்பது மரபு; என்னை?

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே"

என்றாராகலானும், 'பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்,' என்பவாகலானும், 'பாயிரம் உரைத்துரைக்கவேண்டும்,' என்பது மரபு. 'என் போல?' எனின், 'கொழுச் சென்ற வழித் துன்னூசி இனிது செல்லும்; அது போல,' என்பது.

அப்பாயிரம் இரு வகைப்படும், பொதுவும் சிறப்புமென. அவற்றுள் பொதுப்பாயிரம் என்பது, எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுவது; சிறப்புப்பாயிரம் என்பது, தன்னுள் உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாதது.

'பாயிரம்' என்ற சொற்குப் பொருள் யாதோ?' எனின், புறவுரை என்றவாறு. 'ஆயின், நூல் கேட்பான் புகுந்தோன்* நூல் கேளானே? புறவுரை[1] கேட்டென்னை?'

* 'நூல் கேளாமுன் புறவுரை கேட்பதென்னையோவெனின்' என்பதும் பாடம்.

1. 'கேட்டலால் யாது பயன்?' எனின்

எனின், நூற்குப் புறனுக வைத்தும், நூற்கு இன்றியமை யாததாதலினென்க.[1] 'என்போல?' எனின்,[2] கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகை மாண்ட நெடுஞ்சுவர்க்கு வகை மாண்ட † ஓவியம் போலவும் என்பது. ஆகலின், பாயிரம் கேட்டே நூல் கேட்கப்படும்.

அவற்றுள் அப்பொதுப்பாயிரந்தான் நான்கு வகைப்படும்: ஈவோன் தன்மையும், ஈதல் இயற்கையும், கொள்வோன் தன்மையும், கோடல் மரபும் என. ஏன்னை?

"ஈவோன் தன்மை ஈதல் இயற்கை
கொள்வோன் தன்மை கோடல் மரபென
ஈரிரண் டென்ப ‡போதுவின் இயற்கை"

என்பவாகலின்.

ஈவோன் தன்மை என்பது, ஆசிரியனது தன்மை என்றவாறு; ஈதல் இயற்கை என்பது, அவன் உரைக்கும் முறைமை என்றவாறு; கொள்வோன்தன்மை என்பது, மாணாக்கனது தன்மை என்றவாறு; கோடல் மரபு என் பது, அவன் கேட்கும் முறைமை என்றவாறு. அவை எல்லாம் விரித்துரைப்பின், பெருகும்; முடிந்த நூலிற் கண்டுகொள்க.

இனிச் சிறப்புப்பாயிரம் எட்டு வகைப்படும். 'அவை யாவையோ?' எனின், ஆக்கியோன் பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனும் என இவை. என்னை ?

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே

---

1. 'நூற்குப் பாயிரம் இன்றியமையாததாதல் எவை போல?' எனின்

2. கரு என்றது மக்கள் தொகுதியையும், அத்தொகுதிக்கு வேண்டிய பொருள் வளங்களையுமாம்.

† 'பாவை' என்பது முன் அச்சுப்பிரதியில் கண்ட பாடம்.

‡ 'இயல்புணர்ந் தோரே' என்பதும் பாடம்.

கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாயீப்பக் காட்டல் பாயிரத் தியல்பே''

என்னுராகலின்.

காலமும் களமும் காரணமும் கூட்டிப் பதினென்று என்பாரும் உளர். என்னை ?

'' காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே''

என்பவாகலின்.

இனி, **ஆக்கியோன் பெயர்** என்பது, நூல் செய்த ஆசிரியன் பெயர் என்றவாறு. 'இந்நூல் செய்தார் யாரோ?' எனின், மால் வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயிற் பால் புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் சூறுங்கண்ணியாக உடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள் என்பது.

வழி என்பது, இந்நூல் இன்னதன் வழித்து என்பது. இது, *'விணையி னீங்கி விளங்கிய அறிவின் முனை வ'னுற் செய்யப்பட்டமையால், வழி நூலென்று சொல்லப்படாது; முதனூல் எனப்படும் என்பது.

எல்லை என்பது, இந்நூல் இன்ன எல்லையுள் நடக்கும் என்பது. 'இந்நூல் எவ்வெல்லையுள் நடக்குமோ?' எனின், வடக்கு வேங்கடம், தெற்குக் குமரி, கிழக்கும் மேற்கும் கடல் எல்லையாக நடக்குமென்பது. என்னை ?

'' வடக்தும் நெற்தும் குடக்தும் குணக்தும்
வேங்கடம் குமரி தீம்புனல் பௌவமென்
றந்நான் கெல்லை அகவயின் கிடந்த
† நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்''

எனவும்,

‡ '' வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து''

எனவும் காக்கைபாடினியாரும், தொல்காப்பியனாரும் சொன்னுராகலின் என்பது.

---

* 'தொல். பொருள். மரபியல், சூ. 94.

† 'நூன்முதன் முறைமை' என்பதும் பாடம்.

‡ தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் பாடிய பாயிரம். அதுபக்தம் நோக்குக.

நூற்பெயர் என்பது, நூலது பெயர் என்றவாறு. நூல் பெயர் பெறுமிடத்துப் பல் விகற்பத்தாற் பெயர் பெறும்; என்னை? செய்தானுல் பெயர் பெறுதலும், செய்வித்தானுல் பெயர் பெறுதலும், இடுகுறியால் பெயர் பெறுதலும், அளவினுல் பெயர் பெறுதலும், சிறப்பினுல் பெயர் பெறுதலுமென. செய்தானுல் பெயர் பெற்றன, அகத்தியம், தொல்காப்பியம் என இவை; செய்வித்தானுல் பெயர் பெற்றன, சாத வாகனம், இளந்திரையம் என இவை; இடுகுறியால் பெயர் பெற்றன, நிகண்டு, * நூல், கலிக்கோட்டுத் தண்டு என இவை; அளவினுல் பெயர் பெற்றது, பன்னிரு படலம் என்பது; சிறப்பினுல் பெயர் பெற்றது, களவியல் என்பது. என்னை? களவு, கற்பு என்னும் கைகோளிரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன். என்னை?

† ''முற்படப் புணராத சொல்லின் மையின்
கற்பெனப் படுவது களவின் வழித்தே''

என்று வேண்டுதலின். கற்பு, களவு போல ஒருதலையான அன்பிற்றன்று.

இனி, யாப்பு என்பது, நூல் யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும்: [1]தொகுத்

* 'நூல்' என்று பெயர் பெற்றதொரு நூல் உண்டென்பது, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்து '' 'ஆயிரகாரம்பிற்றுதி * * * புலவர்,' என நூலுள்ளும், '' என்றலானும், அரங்கேற்று காதை உரைக்கண், 'ஆடிட முக்கோல் ஆட்டுவார்க் கொருகோல் என்று நூலிற் கூறின முறைமை,' என்றலானும் உணரற்பாற்று. மயிலைநாதரும் நன்னூல் உரைக்கண், 'இடுகுறியால் பெயர் பெற்றன நிகண்டு, நூல், கலிக்கோட்டுத்தண்டு,' என உரைத்தார். ('தலிக்கோட்டுத் தண்டு' எனவும் பிரதி பேதம் உண்டு.)

† களவியல், சூ. 15

1. தொகுத்தல் முதலிய நான்கும் வழிநூல் வகை என்பது ஆசிரியர் தொல்காப்பியனுர் கருத்து.

''வழியின் நெறியே நூல்வகைத் தாகும்.''

(தொல். பொருள். மரபியல், சூ. 96.)

''தொகுத்தல்.....அனைமர பினவே.'' (ஷை. சூ. 97.)

இவ்வுரையாசிரியர் இவற்றை முதனூலுக்கும் உரியன எனக் கொண்டனர்.

தும், விரித்தும், தொகைவிரியாகவும், மொழி பெயர்த்தும் என. என்னை?

* "தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததரீப்பட யாத்தலோ †டனமர பினவே"

என்றாராகலின்.

அவற்றுள், இது தொகுத்தியாக்கப்பட்டது; என்னை? உலகத்து நடக்கும் அகப்பொருள் செய்யுள் இலக்கண மெல்லாம் இவ்வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானுத லின் என்பது.

இனி, நுதலிய பொருள் என்பது, நூற்பொருளைச் சொல்லுதல் என்பது. 'இந்நூல் என்னுதலிற்றோ?' எனின், தமிழ் நுதலியதென்பது.

கேட்போர் என்பது, இன்னார் கேட்டார் என்பது. 'இந்நூல் ‡கேட்டார் யாரோ?' எனின், சூற்றமுடைய நூலாயினன்றே சூற்றமின்மை ஆராயவேண்டுவது? §இது முனிவனுல் ‖செய்யப்பட்ட நூலாகலான், $ சூற்றம் இன்றாயினமையின், கேட்டாரை இன்றென்பது. இன்றெனினும், உரை நடந்து வாராநின்றமை ¶நோக்கக் கேட்டாரையும் உடைத்தென்பது. 'கேட்டார் யாரோ?' எனின், மதுரை உப்பூரி குடி கிழார் மகனுவான் ❡ உருத்திர சன்மன் என்பது. அவன் கேட்டற்குக் காரணம் சொல்லு தும்:

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப் பட்ட சங்கம் இரீஇயினர் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்கமிருந்தார் அகத்தியனுரும், திரிபுரமெரித்த விரிசடைக் கட வுளும், குன்றெறிந்த முருக வேளும், முரஞ்சியூர் முடிநாக ராயரும்,

* தொல். பொருள். மரபியல், சூ. 17.
† 'அனைவகைப் படுமே' என்பதும் பாடம்.
‡ 'யார் கேட்டாரோவெனின்?' என்பதும் பாடம்.
§ 'முனைவன் றன்னுல்' என்பதும் பாடம்.
‖ 'சொல்லப்பட்ட' என்பதும் பாடம்.
$ 'குணமின்மை யின்மையின்' என்பதும் பாடம்.
¶ 'நோக்கி' என்பதும் பாடம்.
❡ இவரே அகநானூறு தொகுத்தவராவர்.

நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினர் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவி அரங்கேறினர் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவருக்கு நூல் அகத்தியம்.

இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமுமென இவையென்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினர், வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினர், ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப. *அக்காலத்துப்போலும் பாண்டியனுட்டைக் கடல் கொண்டது!

இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியரும், †சேந்தம்பூதனாரும், அறிவுடையாரனாரும், ‡பெருங்

* 'அக்காலம் போலும்' என்பதும் பாடம்.
† 'சேந்தன் பூதனாரும்' என்பதும் பாடம்.
‡ 'பெருங்குடி கிழார்' என்பதும் பாடம்.

குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந் துவனரும், மருதனிளநாகனரும், கணக்காயனர் மகனர் நக்கீரனரு மென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்ப தின்மர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற் றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றி சையும், பேரிசையுமென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது *ஆயிரத்தெண்ணூற்றைம் பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த †முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினர் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப.

அக்காலத்துப் பாண்டியனுடு பன்னீரியாண்டு வற் கடம் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாம் கூவி, 'வம்மின்; யான் உங்களைப் 9ப புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின் றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடா யின ஞான்று என்னை உள்ளி வம்மின்,' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக் கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை, அரசன், 'இனி நாடு நாடாயிற்று ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க,' என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப் பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்,' என்று வந்தார். வர, அரசனும் புடை

* ஆயிரத்துத் தொள்ளாயிரத்தைம்பதென்பாரும் உளர்.

† கடைச்சங்கம் இரீஇய முதற்பாண்டியன் வங்கியசேகரன் என் பது திருவிளையாடற்புராணமுடையார் கூற்று.

படக் கவன்று, 'என்னை! எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்!' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையது ஆகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்,' என்று, இவ் வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடுவான் தேவர் *கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்து, பூவிட்டு, பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினன், 'அலகிடுவன்,' என்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ் வலகினேடும் இதழ் போந்தன. போதரக் கொண்டு போந்து நோக்கினுற்கு வாய்ப்புடைத்தாயிற்றூர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்ட, பார்ப்பான் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையின் கவல்கின்றான் என்பது [1]பட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானுகும்!' என்று, தன் அகம் புகாதே கோயிற்றலைக்கடைச் சென்று நின்று, கடை காப்பார்க்குணர்த்த, கடை காப்பார் அரசற்குணர்த்த, அரசன், 'புகுதருக,' என்று பார்ப்பானைக்கூவ, சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, 'இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானுகற்பாலது!' என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின்,' என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து, கன்மாப்பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாம்

* 'குலத்தை' என்பதும் பாடம்.

1. உலகிற்பொருந்தி வழங்குகின்றமை அறிந்து

தாம் உரைத்த உரையே நன்றென்று சிலநாளெல்லாம் சென்றனர். செல்ல, 'நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும் என்று கொண்டு போந்து, அவனல் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றுயொழியக் காண்டும்,' என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல, அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்,' என, 'போமின்! நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; [1]நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே!' என்று அரசன் சொல்லப் போந்து, பின்னையும் கன்மாப்பலகை ஏறியிருந்து, 'அரசனும் இது சொல்லினன்; யாம் காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்!' என்று சிந்தித்திருப்புழி, 'சூத்திரம் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுள் அன்றே! அவனையே, காரணிகனையும் தரல்வேண்டும் என்று சென்று வரங்கிடத்தும்,' என்று சென்று வரங்கிடப்ப, இடை யாமத்து, 'இவ்வூர் **உப்பூரி குடி கிழார்** மகனுவான் **உருத்திர சன்மன்** என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டு போந்து, ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினுல் தோன்றினன்,' என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ்

1. 'உமக்கு ஒப்பாவார் பிறர் இருப்பின், உம்முடைய தொகை நாற்பத்தொன்பதின் மிகும்,' என்பது கருத்து.

வார்த்தையெல்லாஞ்சொல்லி, 'ஐயனுவான் உருத்திர சன்மனைத் தரல்வேண்டும்,' என்று வேண்டிக்கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப்பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்த இடத்து ஒரோவழிக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இடத்துப் பதந்தொறும் *கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றும் இந்நூற்கு!' என்றார்.

அதனால், 'உப்பூரி குடி கிழார் மகனுவான் உருத்திர சன்மனுவான் செய்தது இந்நூற்குரை,' என்பாருமுளர்; அவன் செய்திலன்; மெய்யுரை கேட்டானென்க. மதுரை ஆலவாயில் பெருமானடிகளால் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமார சுவாமியால் கேட்கப்பட்டது என்க. இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்:

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், தம் மகனார் 1 கீரங்கொற்றனார்க்குரைத்தார்; அவர், தேனூர்க்கிழார்க்குரைத்தார்; அவர், படியங்கோற்றனார்க்குரைத்தார்; அவர், செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர், மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்குரைத்தார்; அவர், செல்லூராசிரியர் ஆண்டைப்பெருங்குமாரனார்க்குரைத்தார்; அவர், திருக்குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; அவர், †மாதவனார் இளநாகனார்க்குரைத்தார்; அவர், முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

இனிப் பயன் என்பது, 'இது கற்க இன்னது பயக்கும்,' என்பது. 'இது கற்க இன்னது பயக்குமென்பதறியேன்; யான் நூற்பொருள் அறிவல்,' என்னுமேயெனின், 'சில்லெழுத்தினுன் இயன்ற பயனறியாதாய், பல்லெழுத்

---

* 'கண்ணீர் வீழ்த்தி' என்பதும் பாடம்.

1. 'கீரவி கொற்றனார்க்கு' என்பதும் பாடம்.

† 'மாதளவனார்' என்பதும் பாடம்.

தினன் இயன்ற நூற்பொருள் எங்ஙனம் அறிதியோ, பேதாய்!' எனப்படுமாகலின், இன்னது பயக்குமென்பது அறியல்வேண்டும். 'என் பயக்குமோ இது கற்க?' எனின், வீடு பேறு பயக்கும் என்பது. 'என்னை? இது களவியலன்றே? இது கற்க வீடு பேறு பயக்குமாறு என்னை? களவு, கொலை, காமம், இணை விழைச்சு என் பனவன்றே சமயத்தாரானும் உலகத்தாரானும் கடியப் பட்டன? அவற்றுள் ஒன்றன்றலோ இது?' எனின், அற்றன்று; களவெனுஞ் சொற்கேட்டுக் களவு தீதென் பதூஉம், காமமெனுஞ் சொற்கேட்டுக் காமம் தீதென்ப தூஉமன்று; மற்றவை நல்லவாமாறுமுண்டு: என்னை? ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து, 'நஞ்சுண்டு சாவல்!' என்னும் உள்ளத்தளாய், நஞ்சு கூட்டி வைத்து, 'விலக்குவாரில்லாத போழ்து உண்பல்,' என்று நின்ற இடத்து, அருளுடையானொருவன் அதனைக்கண்டு,'இவள் இதனையுண்டு சாவாமல் கொண்டுபோய் உசுப்பல்,' என்று அவளைக் காணமே கொண்டுபோய் உசுத்திட் டான்; அவளும் சன நீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள், அது காணலாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினன் அவளை உய்யக்கொண்டமையான், *நல் லுழிச் செல்லுமென்பது. மற்றும் இது போல்வன களவாகா; நன்மை பயக்குமென்பது.

இனிக் காமம் நன்றுமாறுண்டு: 'சுவர்க்கத்தின்கண் சென்று போகந்துய்ப்பல்,' என்றும், 'உத்தர குருவின் கண் சென்று போகந்துய்ப்பல்,' என்றும், 'நன்ஞானம் கற்று வீடுபெறுவல்,' என்றும், 'தெய்வத்தை வழிபடுவல்,' என்றும் எழுந்த காமம் கண்டாயன்றே? மேன்மக்களானும் புகழப்பட்டு, மறுமைக்கும் உறுதி பயக்குமாதலின், இக்காமம் பெரிதும் உறுதியுடைத்தென்பது. உறுதி உடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாசாண்டிகரும், இணை விழைச்சுத் தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத் தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே

* 'நல்லுழின்' என்பதும் பாடம்.

களவே வெகுளியே செருக்கே மானமே என்றித்தொடக்கத்துக் குற்றம் நிகழுமென்பது. அது கேட்கவே, தலையாயினர் அதன்கணின்று நீங்குவர். இனி இடையாயினர், 'பெண் என்பது எற்புச்சட்டகம்; முடைக்குரம்பை; புழுப்பிண்டம்; 'பைம்மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகைமைத்து'; ஐயும் பித்தும் வளியும் சூடரும் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திர புரீடங்களும் என்று இவற்றது இயைபு; பொருளன்று; பொருளாயின், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றுல் புணையவேண்டாவன்றே, தான் இயல்பாக நன்றுயின்?' என்று, அதன் அசுபத்தன்மை உரைப்பக் கேட்டு நீங்குவர். கடையாயினர், எத்திறத்தானு நீங்கார்; என்னை? பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின், அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க,' என்பதனல், அவன் தாழப்பட்ட இணை விழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடில்லது; நிச்ச நிரப்பிடும்பை இல்லது; இவனும் பதினுரூட்டைப் பிராயத்தானுய், இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையராய்ப் பிறிதொன்றிற்கு ஊனமின்றிப் போகந்துய்ப்பாரென்று காட்டப்பட்டது என்பது. 'என் போலவோ?' எனின், கடுத் தின்னுதானைக் கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறு போலவும், கலங்கற்சின்னீர் தெருளாமையான் உண்பானை, அறிவுடையானெருவன் பேய்த் தேரைக் காட்டி, 'உதுக்காணுய் நல்லதொரு நீர்த்தோன்றுவது. அந்நீர் பருகாய்; இச்சேற்று நீர் பருகு என் செய்தி?' என்று கொண்டுபோய் நல்லதொரு நீர் தலைப்படுவித்து ஊட்டியது போலவும், தான் ஒழுகாகின்றதோர் இணை விழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கம் காட்டினுன். காட்ட, 'அது பெறுமாறு என்னை கொல்லோ?' எனும்; எனவே, 'மக்கள் பாட்டினுலும்

வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவது அன்று; தவம் செய்தாற் பெறலாம். என்னை?

* "வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"

என்பதாகலான்,' என்பது. அது கேட்டு, 'யானும் தவஞ் செய்து இதனைப் பெறுவன்,' என்று அதன்மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும்; செய்யாநின்றுழி, 'பாவீ, இதன் †பரத்ததோ வீடுபேற்றின்பம்?' என்று வீடு பேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான், பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு அவலக்கவலை கையாற்றினீங்கி, மணியினது ஒளியும் ‡மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்ப $வெள்ளத்தது என்பது கேட்டு, அதனை விட்டு வீடு பேற்றின்கண்ணே அவாவி நின்று, தவமும் ஞானமும் புரிந்து வீடு பெறுவானும் என்பது. அவனை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையின், **களவியல்** என்னும் குறி பெற்றது.

இனிப் புகழ் பொருள் நட்பு அறனென்னும் நான்கினையும் பயக்கும் இது வல்லனகு: என்னை? கற்று வல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத்தாராலும் சமயத்தாராலும் ஒருங்கு புகழப்படுமாகலான் என்பது. இனிப் பொருளும் பயக்கும்: என்னை? பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பவாகலின் என்பது. இனி நட்பும் பயக்கும்: என்னை? 'கற்றுரைச் சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவு பெருகும்,' என்று பலரும் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும்: என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்.

இனிக் **காலம்** என்பது, கடைச் சங்கத்தார் காலத்

---

* குறள், தவம், செய். 5.

† 'பாகத்ததோ' என்பதும் பாடம்.

‡ 'அணிமலர் நாற்றமும்' என்பதும் பாடம்.

$ 'வெள்ளத்ததென, அது கேட்டு' என்பதும் பாடம்.

துச் செய்யப்பட்டதென்பது. இனிக் களம் என்பது, உக்கி ரப் பெருவழுதி அவைக்களம் என்பது. காரணம் என் பது, அக்காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெரிது இடர்ப்படுவாரைக் கண்டு, ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது. பாயிரம் முற்றும்.

இனிப் பாயிரம் உரைத்த பின்றை நூலாமாறும் உரைக்கற்பாலது. அதுதான் நான்கு வகையான் உரைக்கப்படும். 'அவை யாவையோ?' எனின், நூல் நுதலியது உரைத்தலும், நூலுள் அதிகாரம் நுதலியது உரைத்தலும், அதிகாரத்துள் ஒத்து நுதலியது உரைத்த லும், ஒத்தினுள் சூத்திரம் நுதலியது உரைத்தலும் என இவை. அவற்றுள், நூல் நுதலியது உரைக்குமிடத்து நூலாமாறும் நூலென்ற சொற்குப் பொருளாமாறும் உரைத்து உரைக்கற்பாற்று.

அவற்றுள், நூலாமாறு உரைக்குமிடத்து, நூல்தான் மூன்று வகைப்படும்: முதல் நூலும், வழி நூலும், சார்பு நூலும் என ; என்னை ?

* "முதல்வழி சார்பென நூல்முன் றுதும்"

என்றாராகலின். அவற்றுள் முதல் நூலாவது, வரம்பில்றி வன் பயந்ததாகும் ; என்னை ?

¶ " வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூல் ஆதும் "

எனவும்,

" முதல்வன் நூற்குப் பிறன்கோள் கூறது "

எனவும்,

" தந்திரம் சூத்திரம் விருத்தி முன்றற்தும்
முந்துநூல் இல்லது முதனூல் ஆதும் "

---

* இக்குறியிட்ட சூத்திரம், யாப்பருங்கலக் காரிகை உரையிலும் யாப்பருங்கல விருத்தி உரையிலும் வந்த சில குறிப்புகளைக்கொண்டு பாடலனூர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டதாயிருக்கலாமென் றும், அதையே பிற்காலத்தில் நன்னூலாசிரியர் தம்முடைய நூலில் ஆசிரிய வசனமாக எடுத்து ஆண்டுகொண்டனரென்றும் கருதற்கு இட முண்டு.

¶ தொல். பொருள். மரபியல், சூ. 94.

என்னவும் சொன்னராகலின். இனி, அந்நூலோடு ஒத்த † மரபிற்றாய், ஆசிரிய மத விகற்பம்படக் ‡ கிளப்பது வழி நூல் எனப்படும் ; என்னை ?

*" முன்னோர் நூலின் முடிபொருங் கோத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழிநூல் ஆகும் "

என்றாராகலின். இவ்விரு நூலுள்ளும் § ஒரு வழி முடிந்த பொருளை ஒருபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது சார்பு நூல் ஆகும் ; என்னை ?

*" இருவர் நூற்றும் ஒருசிறை தொடங்கித்
தீர்புவே றுடையது புடைநூல் ஆகும் "

என்றாராகலின்.

எதிர் நூல் என்பதும் ஒன்றுண்டு. 'அது யாதோ?' எனின், முதனூலின் முடிந்த பொருளை ஒருவன் யாதானும் ஒரு காரணத்தால் பிறழ வைத்தால், அதனைக் கருவியால் திரிவு காட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒரு புலவனுல் உரைக்கப்படுவது ; என்னை ?

" தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்ப
தெதிர்நூல் என்பர் ஒருசா ரோரே "

என்றாராகலின். அல்லதூஉம்,

" நூலெனப் படுவது நுதலிய பொருளை
ஆதிக் கண்ணே அறியச் சுட்டி
ஓத்துமுறை நிறுத்துச் சூத்திரம் நிரைஇ
முதல்வழி சார்பென மூவகை மரபின்
தோகைவகை ¶ விரியின் வகையறத் தெரிந்து
ஓபகம் செம்பொருள் ஆயிரு வகையின்
பாவமைத் தோழதும் பண்பிற் றுகிப்
புணர்ச்சியின் அமைத்து பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே "

---

† 'முடிவிற்றாய்' என்பதும் பாடம்.

‡ 'கிடப்பது' என்பதும் பாடம்.

§ 'கொண்டு முடிந்த' என்பதும் பாடம்.

* இச்சூத்திரங்களும், யாப்பருங்கலக்காரிகையுரையினும், யாப்பருங்கல விருத்தியுரையினும் வந்த சில குறிப்புகளைக்கொண்டு பாடலனுர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டனவாயிருக்கலாமென்று கருதற்கு இடமுண்டு.

¶ 'விரியும்' என்பதும் பாடம்.

எனவுஞ் சொன்னராகலின். அன்றியும், * நூலெனப் படுவது நுதலிய பொருளை முதலிற்கூறி, முதல் நடு இறுதி மாறுகோள் இன்றி, தொகை வகை விரிபடப் பொருள் வைத்து, பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச் சம் என்னும் உரையில் பொருள் விளங்கும் நுண்மைக்கு வரம்பாக நோக்குடையது; என்னை ?

"நூலெனப் படுவது நுவலும் காலை
நுதலிய பொருளை முதலில் கூறி
முதல்நடு இறுதி மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றமைந்த உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

என்றாராகலின்; இவ்வகை சொல்லப்பட்டது நூலென்ப.

இனி நூலென்ற சொற்குப் பொருளுரைக்கப்படும்: நூல் போறலின் நூலென்ப; பாவை போல்வாளைப் பாவை என்றாற்போல. நூல் போறல் என்பது, நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளால் கைவல் மகடூஉ தனது † செய்கை மாண்பினால் ஓரிழைப்படுத்தலாம், உலகத்து நூனூற்றலென்பது; அவ்வாறே, ‡ சுரந்து பரந்த சொற் பரவைகளால் பெரும்புலவன் தனது உணர்வு மாட்சியில் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடை படக் கோத்தலாம், உலகத்து நூல் செய்தலாவது; அவ் வகை நூற்கப்படுதலின், நூலெனப்பட்டது. இனி, ஒரு சாரார், நூல் போலச் செப்பம் செய்தலின் நூலென்ப. இனித் தந்திரம் என்னும் வடமொழிப் பொருளை நூல் என வழங்குதல் தமிழ் வழக்கெனக் கொள்க. இது நூலென்ற சொற்குப் பொருள்.

இனி, நூல் நுதலியதூஉம் உரைக்கற்பாலது. அது 5ப பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலியதென்பது.

* இவ்வுரைப்பகுதி முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் எட்டுப்பிரதியிற்கண்டது.

† 'செயற்கை நலந்தோன்ற' என்பது முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

‡ 'சுகிர்ந்து' என்பதும் பாடம்.

தமிழ்தான் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமென.

'அவற்றுள் இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதோ?' எனின், பொருளாராய்தலே நுதலி எடுத்துக்கொள்ளப்பட்டது. *அதிகாரம் நுதலியதூஉம் அதிகாரத்துப்பெயர் உரைப்பவே விளங்கும். இனி, அதிகாரம் நுதலியதெல்லாம் அதிகாரத்துள் ஒத்து நுதலா அன்றே, பல ஒத்துக்கொண்டது ஓர் அதிகாரமாதலான்? 'இதனுள் இவ்வோத்து என்னுதலி எடுத்துக்கொள்ளப் பட்டதோ?' எனின், [1]ஒத்தினது பன்மை இன்மையின், ஒத்து இன்றென்பது.

இனிச் சூத்திரம் நுதலியதும் உரைக்கற்பாலது. சூத்திரம் உரைக்கின், அது நான்கு வகையான் உரைக்கப்படும். அஃது உரைக்குமாறு: கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத் திரட்டி அகலம் கூறல் என.

'இச்சூத்திரத்தின் கருத்தென்னையோ?' எனின், இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருள் இன்னதென்பதூஉம், இன்னதனோடொக்கும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று. அன்னதாதல், இச்சூத்திரம் கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல் என்பது, பதப்பொருள் சொல்லுதல்.

இதன் பொருள்: அன்பின் ஐந்திணைக் களவு எனப் படுவது - அன்பினுளைய ஐந்திணையுள் களவு எனப்பட்ட ஒழுக்கம், அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள் - அந்தணர் என்பார் பார்ப்பார்; அருமறை என்பது வேதம்; மன்றல் என்பது மணம்; எட்டு என்பது அவற்றது தொகை; கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்—கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் †ஒழுக்கினைக் களவென்று சொல்லுவர் கற்று வல்லோர் என்றவாறு.

---

* இச்சொற்றொடர் மூன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் ஏட்டுப் பிரதியிற் கண்டது.

1. இதற்குப் பல இயல்கள் இல்லாமையினால், இயல் இன்றாயென்பது. (ஒத்து-இயல்)

† 'வழக்கினை' என்பதும் பாடம்.

இனிப் பொழிப்புத் திரட்டல் என்பது, அன்பினை யைந்திணையில் களவெனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மகட்கோடலாறு என்னும் எட்டினுள் கந்தருவர் ஒழுகலாறு ஒப்பது. அதனைக் களவென்று சொல்லுவர் கற்று வல்லோர் என்றவாறு.

இனிச் சூத்திரத்துப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடா விடை உள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரை எனக் கொள்க. 'அன்பின் ஐந்திணை' என்றவிடத்து, 'அன்பு அறிந்தேனையினன்றே அன்பினை யைந்திணையும் அறிவது?' எனின், அது குடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும் போல, 'இதுகாண் அன்பு,' என்று தந்து காட்டலாகாது. அன்புடையான குணங் கண்டவிடத்து, 'இவை உண்மையான் ஈங்கு அன்புண்டு,' என்று அனுமித்துக்கொள்ளற்பாற்று. 'அன்புடையான குணம் யாவையோ?' எனின், 'சாவிற்சாதல், நோவின்நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனி வேட்டல், பிரிவு நனியிரங்கல் என இவை,' என்றார்க்கு, 'இவை திரிபுடைய: 'என்னை இவை திரிபுடையவாமாறு?' எனின், சாவிற்சாதல் என்பது அன்பினனே நிகழ்வதன்று; பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள்,[1]'இது [2]தலைக்கீடாகச் சாவல்,' என்று சாவவும் பெறும்; இனி, 'கண்டீரன்றே, சூடுமிக் கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையுமிருந்து சோறு தின்று வாழ்கின்றாள்! ஓ! கொடியளேகாண்!' என்று நித்தல் பழி தூற்றப்பட்டு இருந்து, *'பின்னுமே ஒரு நாட் சாவன்; அதனன் இன்றே சாவன்,' எனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் †புகழ் வேண்டியும், 'கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவர்,' என்னும் உரை கேட்டு, அது வேட்கையானும்

1. சாவிற்சாதல்
2. தலைவி தான் சாதற்குத் தக்க காரணமாக

* 'பின்னுமொருநாட் சாவராதலின்' என்பதும் பாடம்.
† 'புகழ் வேண்டிச் சாவவும் பெறும்' என்பதும் பாடம்.

சாம்; அப்பரிசன்றி, அன்பிலனும் சாம்; அஃது ஒரு தலையாக நிகழ்வதன்று,' என்பது.

இனி, நோவிலதெனின்பது, *மெய்ந்நோ என்றறியலாகாது; அதுவும் திரிபுடைத்து; அன்புள் வழியும் அன்பில் வழியும் தோன்றுமென்று மறுக்கப்படும்.

ஒண்பொருள் கொடுத்தல் என்பது, கணிகையர் கூட்டம் பொருளானும்; ஆதலின், அதுவும் அன்பன்று

நன்கினிது மொழிதலென்பது, நன்கினிது சொல்லிப் பகைவரும் தங்கருமம் முடிப்பாராதலின், அதுவும் அன்பன்று.

புணர்வு நனிவேட்டலென்பது, அச்சம் காரணத்தானும் புணர்வு வேட்டோர் போலப் புணர்வாராதலின், அதுவும் அன்பன்று.

பிரிவு நனியிரங்கலென்பது, நீரும் ஆடார், பூவும் சூடார், சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார் போல வாடியிருப்பர் அன்பிலாதாரும் ஆகலின், அதுவும் திரிபு உடைத்து.

இனித் திரிபின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்புண்டெனக் கொள்க. 'அஃதெங்ஙனம் நிகழுமோ?' எனின், அவன் இறந்து பட்டவாறே தானும் இறந்து பட்டவழி அன்பினனே ஆயிற்றெனக்கொள்க. அல்லனவும் இவ்வகையால் திரிபில்லன அன்பினனே ஆயின என்றுணர்ப. அல்லதூஉம், அன்பெனப்பட்டது, தான் †வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி. அதனைக் காட்டிக் 'காண்க,' என்னனன்றே! தான் அறிந்த பொருளாகலின்; என்னை? மாணக்கன், நீர் வேட்ட வேட்கையைக் 'காட்டுக,' என்னுன், தான் அறிந்த பொருளாகலின்; 'காட்டுக,' என்னுமே எனின், வஞ்சித்தானும். 'அவனை ஆசிரியன் அறிவிக்கலுறுமே?' என்னின், பேதையாயினனும்.

---

* 'இன்னகோ' என்பதும் பாடம்.

† 'வேட்ட வேட்ட' என்பதும் பாடம்.

அல்லதூஉம், உலகத்துப் பொருள்தான் இரண்டு வகையான் உணர்த்தப்படும்: உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென. அவற்றுள், உண்மையுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமும் துன்பமும் முதலாக உடையன ; என்னின் ?

* ‘‘ஓப்பும் உருவும் வேறுப்பும் என்ற
கற்பும் ஏரும் எழிலும் என்ற
சாயலும் நாணும் மடனும் என்ற
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்
காவயின் வருஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டல் ஆகாப் பொருள என்ப”

என்றாராகலின். இனி, உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன, மாடக்கூடல், மாநிலத் தொடக்கத்தன என்று கொள்க.

‘அன்பென்பது உண்மை மாத்திரையல்லது பிழம்பு உணர்த்தப்படாதென்பது,’ என்றார்க்கு, அன்பென்பது தான் கருதப்பட்ட பொருளின்கண் தோன்றும் வேட்கையன்றே ஈண்டு நம்மால் அன்பென்று விகற்பிக்கப்படாநின்றது? ‘அஃது யாதோ?’ எனின், நாணுச் சுருங்கப் புணர்வு வேட்கை பெருக, ஒருவனெடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணமுடைத்து என்று கொள்க.

‘அஃதேயெனின், அன்பு அறிந்தேன். ஐந்திணையாவன யாவையோ ?’ எனின், குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதம் என இவை. ‘ஆயின், ஐந்திணை என்றது அல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரே!’ எனின், இது சுருக்க நூலாகலின், சொல்லிற்றிலர்; அவை முடிந்த நூலிற் கொண்டுரைக்கப்படும்; உரைக்குமிடத்து, முதல் கரு உரிப்பொருள் என மூன்று வகையான் உரைக்கப்படும்; என்னின் ?

* தொல். பொருள். பொருளியல், சூ. 53.

* "முதல்கரு உரிப்போருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறைசிறத் தனவே"

என்றூராகலின்.

அவற்றுள், முதல், இரண்டு வகைப்படும், நிலமும் பொழுதும் என; என்னை?

† "முதலெனப் படுவது நிலம்பொழு தீராண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

என்றூராகலின்.

குறிஞ்சிக்கு நிலம், மலையும் மலை சார்ந்த இடமும்; பொழுது, கூதிரும் யாமமும் முன் பனியும்.

நெய்தற்கு நிலம், கடலும் கடல் சார்ந்த இடமும்; பொழுது, எற்பாடு.

பாலைக்கு நிலமில்லை; என்னை?

‡ "நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே"

என்றூர் தொல்காப்பியனராகலின். பொழுது, நண்பகலும் வேனிலும்; பின் பனியும் உரித்து. 'நிலமின்றிப் பொழுதினனேயும் திணையாமோ?' எனின், குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம்பற்றிப் பாலையாம் என்பது.

முல்லைக்கு நிலம், காடும் காடு சார்ந்த இடமும்; பொழுது, காரும் மாலையும்.

மருதத்திற்கு நிலம், பழனமும் பழனம் சார்ந்த இடமும்; பொழுது, வைகறை யாமம். 'அஃதென்னை பெறுமாறு?' எனின்,

¶ "மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய [1]பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

---

* தொல். பொருள். அகத். சூ. 3.
† ,, ,, ,, சூ. 4.
‡ ,, ,, ,, சூ. 2.
¶ ,, ,, ,, ,, 5.
1 'பெரும்புன லுலகமும்' என்பதும் பாடம்.

* ‘‘ காதும் மாலையும் முல்லை தறிஞ்சி
கூதிர் யாமம் என்மனூர் புலவீர்.’’
† ‘‘ பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.’’
‡ ‘‘ வைகுறு விடியல் மருதம் எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.’’
$ ‘‘ நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கில் முன்னிய நெறித்தே.’’
§ ‘‘ பின்பனி தானும் உரித்தென மொழிப.’’

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின், அறுவகை இருதுவும் உரிய எனக் கொள்க. இவை முதல்.

இனிக் கரு என்பன, தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் செய்தியும் யாழின் பகுதியும் முதலாக உடையன; என்னை?

¶ ‘‘ தெய்வம் உணவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப’’

என்றாராகலின். அம்முறையானே சொல்லுதும்:

குறிஞ்சிக்குத் **தெய்வம்**, முருக வேள்; **உணு**, ஐவன நெல்லும் தினையும்; **மா**, புலியும் பன்றியும் யானையும்; **மரம்**, அகிலும் ஆரமும் திமிசும் தேக்கும் வேங்கையும்; **புள்**, கிளியும் மயிலும்; **பறை**, வெறியாட்டுப் பறையும் தொண்டகப் பறையும் குரவைப் பறையும்; **செய்தி**, தேன் அழித்தலும் கிழங்கு அகழ்தலும் குன்றம் ஆடுதலும் தினைக்கிளி கடிதலும்; **யாழ்**, குறிஞ்சி யாழ்.

‘பிறவும்’ என்றதனால், **தலைமகன் பெயர்**, சிலம்பன் வெற்பன் பொருப்பன்; **தலைமகள் பெயர்**, கொடிச்சி குறத்தி; **நீர்**, அருவி நீரும் சுனை நீரும்; **ஊர்**, சிறு குடியும் குறிச்சியும்; **பூ**, குறிஞ்சியும் காந்தளும் வேங்கையும்

---

* தொல். பொருள். அகத். சூ. 6.
† ,, ,, ,, ,, 7.
‡ ,, ,, ,, ,, 8.
$,, ,, ,, ,, 9.
§ ,, ,, ,, ,, 10.
¶ ,, ,, ,, ,, 18.

சுனைக் குவளையும்; **மக்கள் பெயர்,** குறவர் இறவுளர் குன்றவர்.

நெய்தற்குத் தெய்வம், வருணன்; **உணவு,** மீன் விலையும் உப்பு விலையும்; **மா,** சுறவும் முதலையும்; **மரம்,** புன்னையும் ஞாழலும் கண்டலும்; **புள்,** அன்னமும் அன்றிலும் மகன்றிலும்; **பறை,** மீன்கோட்பறையும் நாவாய்ப்பறையும்; **செய்தி,** மீன் விற்றலும் உப்பு விற்றலும் அவை படுத்தலும்; **யாழ்,** விளரி யாழ்.

இனிப் 'பிறவும்' என்றதனால், **தலைமகன் பெயர்,** துறைவன் கொண்கன் சேர்ப்பன்; **தலைமகள் பெயர்,** நுளைச்சி பரத்தி; **நீர்,** *மணற்கிணறும் உவர்க்கழியும்; **பூ,** வெள்ளிதழ்க் கைதையும் நெய்தலும்; **ஊர்,** கலமேறு பட்டினமும் †சிறு குடியும் பாக்கமும்; **மக்கள் பெயர்,** பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

தொல்காப்பியனர் **பாலைக்கு** நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின், தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையும் **தெய்வம்** என்று வேண்டுவர்; **உணவு,** ஆறலைத்தனவும் ஊரெறிந்தனவும்; **மா,** வலி அழிந்த யானையும் புலியும் செந்நாயும்; **மரம்,** இருப்பையும் ஓமையும்; **புள்,** கழுகும் பருந்தும் புறவும்; **பறை,** பூசற் பறையும் ஊரெறி பறையும் நிரைகோட்பறையும்; **செய்தி,** நிரை கோடலும் சாத்து எறிதலும் சூறையாடலும்; **பண்,** பஞ்சுரம்.

'பிறவும்' என்றதனால், **தலைமகன் பெயர்,** மீளி விடலை காளை; **தலைமகள் பெயர்,** எயிற்றி பேதை; **பூ,** மராம்பூவும் குராம்பூவும் பாதிரிப்பூவும்; **நீர்,** வறுநீர்க்கூவலும் அறுநீர்ச்சுனையும்; **மக்கள் பெயர்,** எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்; **ஊர்,** கொல் குறும்பு.

முல்லைக்குத் தெய்வம், வாசுதேவன்; **உணவு,** வரகும் சாமையும்; **மா,** முயலும் சிறு மானும்; **மரம்,** கொன்றையும் குருந்தும்; **புள்,** கானங்கோழியும் மயிலும் சிவலும்; **பறை,** ஏறு கோட்பறையும் முரசும்; **செய்தி,** வரகு கவர

---

* 'மணிநீர்கேணி' என்பதும் பாடம்.

† 'துறை சேர் குடி' என்பதும் பாடம்.

கட்டலும் அவை அறுத்தலும் கடா விடுதலும் நிரை மேய்த்தலும் ஏறு கோடலும்; **பண்**, முல்லை.

'பிறவும்' என்றதனால், **தலைமகன் பெயர்**, குறும் பொறை நாடன்; **தலைமகள் பெயர்**, கிழத்தி மனைவி; இப் பெயர் மருத நிலத்துத் தலைமகட்கும் உரிய: **பூ**, முல்லையும் தோன்றியும்; **நீர்**, கான் யாறு; **ஊர்**, பாடியும் சேரியும்; **மக்கள் பெயர்**, இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்.

மருதத்துக்குத் தெய்வம், இந்திரன்; **உணா**, செந்நெல்லும் வெண்ணெல்லும்; **மா**, எருமையும் நீர் நாயும்; **மரம்**, வஞ்சியும் காஞ்சியும் மருதும்; **புள்**, நீர்க்கோழியும் தாராவும்; **பறை**, மண முழவும் நெல்லரி கிணையும்; **செய்தி**, நெல் அரிதலும் அவை கடா விடுதலும் பயிர்க்குக் கூல கட்டலும்; **யாழ்**, மருத யாழ்.

'பிறவும்' என்றதனால், **தலைமகன் பெயர்**, ஊரன் மகிணன்; **தலைமகள் பெயர்**, கிழத்தி மனைவி; **பூ**, தாமரைப் பூவும் செங்கழுநீர்ப்பூவும்; **நீர்**, மணைக்கிணறும் பொய்கையும் யாறும்; **ஊர்**, பேரூர் எனப்படும்; **மக்கள் பெயர்**, கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர்.

இக்கூறப்பட்ட கரு, மயங்கியும் வரப்பெறும்; என்னை?

* "உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே,"
† "எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"

என்றாராகலின்.

இனி, உரிப்பொருளாவது, திணைக்கு உரிய பொருள் என்றவாறு. 'அவை யாவையோ?' எனின், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், அவற்றினிமித்தம் என இவை; என்னை?

‡ "புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேரும் காலத் திணைக்குரிப் பொருளே"

என்றாராகலின்.

---

* தொல். பொருள். அகத். சூ. 13.
† ,, ,, ,, ,, 19.
‡ ,, ,, ,, ,, 14.

அவற்றுள், புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி; பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை; இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை; இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல்; ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம். 'புணர்தலே கொல்லோ குறிஞ்சி?' எனின், புணர்தலேயன்று; பிரிவச்சமும், வன்புறையும், தலைமகன் நீங்கினவும், பாங்கற் குரைத்தனவும், பாங்கன் கழறினவும், தலைமகன் எதிர் மறுத்தனவும், பாங்கன் எதிர்ந்தனவும், நீங்கினவும், தலைமகளைக் கண்டனவும், ஆற்றுன் ஆயினவும், தலைமகற்கு வந்துரைத்தனவும், தலைமகன் சென்றனவும், தலைமகன் தலைப்பெய்தனவும் இத்தொடக்கத்தனவெல்லாம் தலைமகட்கும் தோழிக்கும் இவ்வகையானே நோக்கி விகற்பிக்க இறப்பவும் பலவாம். அவையெல்லாம் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

இனி ஒழுக்கத்தினைத் திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமே திணையெனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது; என்னை? விளக்காகிய சுடர் இருந்த இடனும் விளக்கெனப்பட்டது போல என்பது. இனி ஒரு சாரார் ஒழுக்கத்தினையும் திணை என்ப; நிலத்தினையும் திணை என்ப; 'ஆகலானன்றே, 'அன்பின் ஐந்திணை' என்றது, ஐந்திணையாடை ஐந்திணை மஞ்சிகை என்றது போல?' என்ப; அது பொருந்தாது.[1] அஃதே கருதியதெனின், முன்னர்த் * 'திணையே கைகோள்' என்ஞன் அன்றே? 'இணையே கைகோள்' என்னுமன்றே? இணை என்று கருதினையின் என்பது. [2] 'அஃதே எனின்,

1. ஒழுக்கமும் நிலமுமாகிய இரண்டினையும் திணை என்றலே கருதியது எனின்

* இறையனர் களவியல், சூ. 56.

2. ஒழுக்கத்தினைத் திணை என்றலே கருதியது எனின்

[1]'ஐந்து திணை' என்னும், ஐந்து சாண் ஐந்து கணம் என்றது போல,' எனின், அறியாது கடாவினைய்! ஐந்து தலை உடைய நாகத்தை ஐந்தலை நாகமுமென்ப; ஐந்து தலை நாகமுமென்ப; இரு முடிபுமுடைத்து; என்னை? குற்றிய லுகரப்புணரியலுள்,

† "முதலீற்றலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஏதமவத் தோன்றினும் யவவந் தியையினும்
முதலீற்றலை இயற்கை என்மனார் புலவர்"

என்றாராகலின்.

[2]'அஃதேயெனின், அன்பினுன் ஆய ஒழுக்கத்தை அன்பின் வேறென்று கொள்வன், தச்சனுடைய மாடம் தச்சனின் வேறாயது போல,' என்றார்க்கு, [3]'அதுவன்று: பொன்னினுடைய குடம் பொன்னின் வேறல்லது போலக் கொள்க,' என்பது. [4]மூன்றும் வேற்றுமை, காரண காரியத்தை வேறுணரவும் நிற்கும், வேறன்றியுணரவும் நிற்கும்; வேறன்றியுணர நிற்கும் பகுதி கொள்க. 'அஃதே எனின், ஐந்திணை என்பதன் முன்னர்க் களவு என்னும் சொல் எத்திறத்தால் வந்தது? ஒரு சொல் முன் ஒரு சொல் வருங்கால் பயனிலை வகையானும் தொகை நிலை வகையானும் எண்ணு நிலை வகையானுமென மூன்றனுள் ஒன்று பற்றியன்றே வருவது? அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோ?' எனின், தொகை நிலை வகையான் வந்ததென்பது. [5]'தொகைதாம் பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோ?' எனின், வேற்

1. சூத்திரத்தில் 'ஐந்திணை' என்றிருத்தலின் இங்ஙனம் கூறப்பட்டது.

† தொல். எழுத். குற். சூ. 73.

2. அஃது அவ்விரு முடிபும் உடையதாயின்

3. அஃது உவமையன்று.

4. மண்ணுனைய குடம், வேறன்றி உணர நின்றது; தண்ட சக்கரங்களானைய குடம், வேறுணர நின்றது.

5. தொகை பல இவையாம் என்பதை,

"வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே

றுமைத்தொகையான் வந்தது என்பது. [1]'அவ்வேற்றுமைத் தொகைதாம் பல; அவற்றுள் இஃது எவ்வேற்றுமைத்தொகையோ?' எனின், ஏழாம் வேற்றுமைத் தொகை என்பது. [2]'ஏழாம் வேற்றுமையுருபுதாம் பல; அவற்றுள் யாது தொக்கது?' எனின், உள் என்பது தொக்கது. 'ஐந்திணையுள் களவென்பதாயின், ஐந்திணையுள்ளும் களவு வேறுகாதோ, கூடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் அவ்விடத்தின் வேறுயது போல?' எனின், அதுவன்று; ஏழாம் வேற்றுமை [3]இடத்தையும் இடத்து நிகழ் பொருளையும் வேறுணரவும் நிற்கும்; வேறன்றி உணரவும் நிற்கும். அவற்றுள், வேறுணர நின்றவழிக் காட்டிக் கடாவினுய்; வேறன்றியுணர நின்றவழிக் காட்டியக்கால், அதுபோலக் கொள்க. 'அரங்கினுள் அகழ்ந்தான், மாடத்தினுள் அகழ்ந்தான்,' என்றது போல, ஐந்திணையுள்ளும் களவு வேறன்று என்பது. 'அஃதே

உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே''

(தொல். சொல். எச்சவியல், சூ. 16.)

என வரும் இச்சூத்திரத்தான் அறிக.

1. வேற்றுமைத் தொகை பல என்றது, இரண்டு முதலிய ஆறு வேற்றுமைத் தொகைகளே.

2. ஏழாம் வேற்றுமை உருபுகளே,

''கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனஅ
முன்னிடை கடைதலே வலம்இடம் எனஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனூர்''

(தொல். சொல். வேற்றுமை இயல், சூ. 21.)

என வரும் சூத்திரத்தான் அறிக.

கண்கால் முதலியவற்றை உருபு என்றூர் இளம்பூரணர். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் என்றூர் சேனவரையர். இவற்றுள் கண் என்னும் உருபு எல்லா இடத்தும் வரும். மற்ற உருபுகள் இடம் அறிந்து கொள்ளப்படும். ஆதலின், ஈண்டு 'உள் என்பது தொக்கது,' என்றூர்.

ஈண்டுக் கூறியவற்றின் விளக்கத்தை மேற்காட்டிய சூத்திரத்திற்கு இளம்பூரணரும் சேனவரையரும் கூறிய உரைகளாற் கொள்க.

3. 'கூடத்துள் விளக்கு, தடற்றுள் வாள்' என்பன வேறுணர நின்றன; 'இல்லுள் அறை' என்பது வேறன்றி உணர நின்றது.

எனின், 'அன்பினைந்திணைக் களவு அந்தணர் அருமறை' என அமையாதோ? 'எனப்படுவது' என்றது எற்றிற் கோ?' எனின், செய்யுள் இன்பத்தின்பொருட்டு வந்தது என்னும் ஒருவன்; 'அற்றன்று, அதனுன் ஒரு பொரு ளுரைப்பன்,' என்னும் ஒருவன். அதனுன் ஒரு பொரு ளுரைப்பான் பக்கம் வலியுடைத்து. 'அஃதியாதோ?' எனின், களவென்றற்குச் சிறப்புடைத்து என்றவாறு. 'ஊரெனப்படுவது உறையூர்,' என்ற இடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப் புடைமை சொல்லுப. இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி, அக்களவுகட்கெல்லாம் இக்களவுசிறப்புடைமை சொல்லும்; துறக்கம் வீடு பேறுகளை முடிக்குமாகலான் எனப்படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம். மற்று, உலகத்துக் கள வாயின எல்லாம் கை கூறைப்பவும் கண் சூலவும் கழு ஏற்றவும்பட்டு, பழியும் பாவமுமாக்கி, நரகத்தொடக் கத் தீக்கதிகளில் உய்க்கும். இது மேன்மக்களால் புக ழப்பட்டு, ஞான ஒழுக்கத்தோடொத்த இயல்பிற்று ஆக லானும், பழி பாவம் இன்மையானும் 'எனப்படுவது' என்று விசேடிக்கப்பட்டது.

இனி, **'அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்'** என்பது: அந்தணர் என்பார், பார்ப்பார்; அருமறை என்பது, வேதம்; மன்றல் என்பது, மணம்; எட்டென்பது, அவற் றது தொகை கொடுத்துச் சொன்னவாறு. 'அவை யாவையோ?' எனின், **பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய் வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம்** என இவை. என்னை?

> ''அறநிலை ஓப்பே டொருள்கோள் தெய்வம்
> யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே
> இராக்கதம் பேயிநிலை என்றிக் கூறிய
> மறையோர் மன்றல் எட்டிவை; அவற்றுள்
> துறையமை நல்லியாழ்த் துணைமையோர் *இயல்பிதன்
> பொருணமை எனமனுர் புலமை யோரே''

* 'புணர்ப்பிதன்' என்பதும் பாடம்.

என்பதன் பொருள் என்று உணர்வது.

பிரமம் என்பது, நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணி கலன் அணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓரிருதுக் காட்சி ஒருவனைச் சாராது கழிந்தவிடத்து, ஒரு பார்ப் பனக் கொலையோடு ஒக்கும் என்பது; அதனை **அறநிலை** என்பது.

பிரசாபத்தியம் என்பது, மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றூல், மறுது கொடுப்பது; அதனை **ஒப்பு** என்பது.

ஆரிடம் என்பது, ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து, *அவற்றிடை நீரில் கொடுப்பது; அதனைப் **பொருள் கோள்** என்பது.

தெய்வம் என்பது, வேள்வியாசிரியற்கு வேள்வித்தீ முன் வைத்துக் கொடுப்பது; †அதனைத் தெய்வமென்று வழிபடப்பட்டது.

காந்தர்வம் என்பது, இருவர் ஒத்தார், தாமே கூடும் கூட்டம்; அதனை **யாழோர் கூட்டம்** என்ப.

அசுரம் என்பது, 'கொல்லேறு கொண்டான் இவளை எய்தும்; வில்லேற்றினன் இவளை எய்தும்; திரி பன்றி எய்தான் இவளை எய்தும்; மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும்; இன்னதொரு பொருள் தந்தான் இவளை எய்தும்,' என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது; அஃது **அரும்பொருள் வினை நிலை** என்பது.

இராக்கதம் என்பது, அவள் தன்னினும் தமரினும் பெறுது வலிந்து கொள்வது.

பைசாசம் என்பது, மூத்தாள் மாட்டும் துயின்றூள் மாட்டும் களித்தாள் மாட்டும் சார்வது; அது **பேய் நிலை** எனப்படும்.

---

*'அவற்றோடு' என்பதும் பாடம்.

†'அது தெய்வமென்று வழிபடும்,' என்பது வேறொரு பிரதியிற் கண்ட பாடம்.

இவ்வெட்டு மணமும் 'மன்றல் எட்டு' என்று சொல்லப்பட்டன என உணர்க.

இனிக் **கந்தருவ வழக்கம்** என்பது, கந்தருவரென்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது. அது கந்தருவ மணம். அதனை ஒப்பதனைக் களவென்று வேண்டும் இவ்வாசிரியன். 'அஃதேயெனின், கந்தருவ வழக்கம் போல்வது என்னுது, 'கந்தருவ வழக்கம்,' என்றமையான், அதனைக் களவு என்று கொள்ளாமோ?' எனின், கொள்ளாம்; நூற்கிடக்கை அவ்வியல்பிற்று அன்மையானும், போல்வது என்றே கொள்ளற்பாலது. போறல் என்பது, சிறிது ஒத்துச் சிறிது ஒவ்வாதொழிவது; என்னை? 'குவளைப்பூப் போலுங்கண்,' என்றால், நீல மாத்திரை ஒக்கும்; மற்று ஒவ்வாப் புடை பெரிது; 'பவளம் போலும் வாய்,' என்றால், செம்மை மாத்திரை ஒக்கும்; மற்று ஒவ்வாப் புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் புணர்தலும், ஒத்த குலத்தினராகலும், ஒத்த அன்பினராகலும்என்னும் இத்துணையே ஒப்பிக்கப்பட்டது; மற்றப் புடையெல்லாம் ஒவ்வா. 'அஃதே எனின், கந்தருவ வழக்கம் போல்வதென வேண்டாவோ சூத்திரத்துள்?' எனின், வேண்டா. உவமம் தொகுத்தவாறு சொல்லுதும்: பசுப்போல்வாளைப் பசு என்றலும், பாவை போல்வாளைப் பாவை என்றலும் என்பது. 'அஃதே எனின், அவை எட்டும், அதனையொத்த இதுவுமெனமணம் ஒன்பதாகற்பால பிற,' எனின், அதுவன்று; அவ்வெட்டும் *உலகிலுள்ளன; இஃது அன்னதன்று; இல்லது இனியதுநல்லது என்று புலவரால் நாட்டப்பட்ட தோர் ஒழுக்கமாகலின், இதனை உலக வழக்கினெடு இயையானென்பது. 'அஃதேயெனின், இதனை முதல்நூல் என்று புகுந்தமையால், கந்தருவ வழக்கம் என்றே

* 'உலகியல்' என்பதும் பாடம்.

மொழியற்பாற்று; 'என்மனார் புலவர்,' என்று சொல்லற் பாற்றன்று; அது வழிநூல் வாய்பாடாகலான்,' என் பது கடா. அதற்கு விடை: 'பிற நூல்களெல்லாம் [1]ஆசி ரியப் பகுதிப்படும்; இதுவும் அவையே போல ஆசிரியப் பகுதிப்படுங்கொல்லோ?' எனிற் படாது. கந்தருவ வழக் கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப் புலவர்க் கும் ஒப்ப முடிந்தமையான், அவ்வகை சொன்னனென் பது. 'அஃதேயெனின், தன்னொடொத்த புலவரில்லை அன்றே, தான் தலைவனுகலான், எல்லாம் உணர்ந்தா னுகலான்?' எனின், அஃதே கருத்து, அறிந்திலை; தன் னனே உரைக்கப்பட்டதெனினும், பிறவற்றையெல்லாங் திரியவும் திரியாமையும் கொண்டார், இதனைத் திரியா மையே கொண்டார் *எல்லாரும் என்றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன் மதம் உணர்ந்தாரையும் புலவ ரென்றான், அறிபொருளுக்கு ஏனைரும் புலவராகலின்.

இனி, 'என்மனார்' என்பது, 'என்ப' என்னும் முற் றுச் சொல் 'குறைக்கும்வழிக் குறைத்தலும்' என்பத னற் பகரம் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' என்பத னால் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார்' என்றுயிற்று. என்மனார் என்பது புலவர் என்னும் பெயர் கொண்டு முடிந்தது, முற்றுச் சொல் எச்சப்பெயர் கொண்டு முடியுமாகலினென்பது.

உ. அதுவே,
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்

'என்பது என்னுதலிற்றோ?' எனின், மேல் கந்தருவ வழக்கத்தோடொக்கும் ஒழுக்கம் களவென்று வேண்டிற் றல்லது இன்ன இலக்கணத்தது என்றிலாதார் அதனை உணர்த்துதல் துதலிற்று. † இச்சூத்திரத்துள் கருதிய பொருள் மேலதனோடு இயையும்.

1. முன்னோராகிய ஆசிரியர்தம் நூற்களின் வழி வரும் பகுதியிற் சேரும்.

* 'எல்லாரு மென்றவ்வகையே' என்பதும் பாடம்.

† 'இச்சூத்திரங் கருதியதூஉம்' என்பதும் பாடம்.

இதன் பொருள்: அதுவே - (பண்டறி சுட்டு) மேற்சொல்லப்பட்ட கந்தருவ வழக்கம்போலும் களவு; தானே அவளே - தானே அவள், அவளே தான்; 'என்பது என் சொல்லிய வாறே?' எனின், தான் அவள் என்னும் வேற்றுமையிலர் என்றவாறு.

இங்ஙனம் வாசகம் வேறுபடச் சொல்லப்பட்டாராயினும், அன்பினனும் குணத்தினனும் கல்வியினனும் உருவினனும் திருவினனும் திரிவிலர் ஒருவரொருவரின் என்பதாம். 'அஃதென் போலவோ?' எனின், உருளரிசி கொத்தமுரி என்றாற்போல எனின், அது பொருந்தாது; 'என்னை காரணம்?' எனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமெனவே வேற்றுமையின்மை முடிந்தது, அவர் வேற்றுமையிலராகலின்; இன்னுமொருகால் வாசகம் வேறுபடுத்து அப்பொருளே சொல்லப் புனருத்தமாம்; என்னை? ஒரு பொருளை வேறுபட்ட வாய்பாட்டால் பல்கால் சொல்லுவது புனருத்தமாகலின்.

இனி, ஒருவன் சொல்வது: இவனும் பற்பன்னூறு யிரவர் கூர்வேலினஞரொடு திரிதரினன்றித் தமியனதலினன், பெரியனதலால்; இவளும் பற்பன்னூறுயிரவர் ஆய மகளிர் புடை சூழத் திரிதரினன்றித் தமியளாதலினள், பெரியளாதலால்; இங்ஙனமில்லாதான் இவனும் இளஞரினீங்கித் தானேயாய், இவளும் ஆயத்தினீங்கித் தானேயாய், இங்ஙனம் *புணர்வரென்ப. இவனை இளஞரினீக்கியும் இவளை ஆயத்தின் நீக்கியும் பிரித்துக்கோடற்குத் தானே அவளே என்று சொல்லப்பட்டது என்னும்.

இவ்வுரையும் பொருந்தாது; 'என்னை காரணம்?' எனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமெனவே, தமியராய்ப் புணர்தல் முடிந்தது; இன்னும் ஒருகால் அப்பொருளையே சொல்லப் புனருத்தமாம் என்பது. 'மற்றென்னை உரை?' எனின், தானே அவளே என்பது, ஆண் பால்களுள் இவனைடு ஒத்தாருமில்லை, மிக்காரும்

* 'புணர்வரோ அன்று இவனை இளஞருள் நீக்கியும்' என்பதும் பாடம்.

இல்லை, குறைபட்டாரல்லது; எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் *குணத்தானும் உருவினானும் திருவினானும் பொருவிலன் தானே என்பது. இவளும் அன்னளெனவே, இருவரும் பொருவிறந்தார் என்பதனைப் பயக்கும். 'நின்ற ஏகாரம் ஐந்து ஏகாரத்துள்ளும் என்ன ஏகாரமோ?' எனின், ஆண் குழுவின் †இவனையேபிரித்து வாங்கினமையானும், பெண்குழுவின் இவளையே பிரித்து வாங்கினமையானும், பிரிநிலை ஏகாரமெனப்பட்டது, ‡பலவற்றுள் ஒன்று பிரிப்பது பிரிநிலை ஏகாரம் எனப்படுமாகலானென்பது. 'அஃதேயெனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமெனவே எத்திறத்தானும் குறைபாடு இன்மை முடியாதோ?' எனின், முடியாது; கந்தருவர்க்கும் ஞானக் குறைபாடும் தருமக் குறைபாடும் ஆள்வினைக் குறைபாடும் உண்டு. இச்சொல்லப்பட்டன §சிறிதே என்றே ஒப்பித்து, அது பொருவிறப்புச் சூத்திரத்தாற் சொல்லவேண்டும் என்பது.

தமியர் காண - தம்முணர்வினரன்றி எதிர்ப்பட என்றவாறு.

'அஃதேயெனின், இவர் தம்முணர்வினர் அல்லராகின்றது காணு முன் ஆபவோ, கண்ட பின் ஆபவோ, காட்சியோடுடன் ஆபவோ? காணுமுன் தம்முணர்வினரல்லர் ஆபவெனின், காட்சி காரணமன்றுயிற்றும், தம்முணர்வினர் அல்லராதற்கு; அல்லதூஉம், காரணமின்றியாகலான் எப்பொழுதுந் தம்முணர்வினர் அல்லராகல்வேண்டும். இனிக் கண்ட பின் தம்முணர்வினர் அல்லாரெனின், காட்சியது நீக்கத்துக்கண்ணும் தம்முணர்வினர் அல்லராகல்வேண்டும்; 'உண்டபின் வந்தான் சாத்தன்,' என்றால்,

* 'ஒழுக்கத்தானும் ஆள்வினையானும் பொருளினானும்' என்பதும் பாடம்.

† 'இவனையே பெருமைக்கட்பிரித்து' என்பதும் 'இவளையே பெருமைக்கட் பிரித்து' என்பதும் பாடம்.

‡ இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

§ 'சிறியதேயன்றேயொப்பது பொருவிறப்பிற் சூத்திரத்தால்' என்பதும் பாடம்.

உண்டற்கருமக் கழிவின்கண் வந்தது போல என்பது. அல்லதூஉம், கண்ட பின் தம்முணர்வினர் அல்லராகவே, கண்ட சமவாயத்துத் தம்முணர்வினர் ஆகல்வேண்டும். ஆகவே, கண்டும் தம்முணர்வினராய் நின்றூர் பின்னை மயங்குதற்குக் காரணமென்னையோ என்பது. இனி, 'காட்சியும் தம்முணர்வினர் அல்லராகலும் உடன் நிகழுமே?' எனின், காட்சியென்னும் காரணத்தால் தம் உணர்வினரல்லராதல் தன்மை நிகழற்பாற்றன்று. ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள் [1] ஒன்றினை ஒன்று முடித்தன எனப்படாமை காண்டும், [2] ஆவிற்கு இரு கோடு போல என்பது. அதனால், மூன்றல்லது நான்காவது காலம் இன்மையின், இவர் காட்சியானே தம் உணர்வினரல்லரென்பது முடிக்கல் வேண்டும். 'எங்ஙனம் முடிக்குமாறு?' எனின், காணு முன்னே தம்முணர்வினர் அல்லராகல் தன்மையுடையராதலினென்பது. என்னை? ஏனுதி மோதிரம் செறித்த திருவுடையாளொருவன் [3] ஏனுதி மோதிரம் செறிக்கும் அத்திரு, அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; *முற்கொண்டு அமைந்து கிடந்தது. அரசு வீற்றிருந்த திருவுடையாளொருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு, அவன் அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது. அது பின்னையொரு காலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அது போலே, இன்ன நாள் இன்ன பக்குவத்து இன்ன பொழுது இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன்னுணர்வினனல்லனும் என்பதூஉம், இவன் காரணமாக இவள் தன் உணர்வினளல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து

1. முடித்தன காரணமும் முடிக்கப்பட்டன காரியமும் ஆம்.

2. ஆவிற்கு ஒரு காலத்து உடன் உண்டான இரு கோடு ஒன்றற்கு ஒன்று காரணமாதல் இன்மை போல

3. ஏனுதிப் பட்டத்திற்குரிய மோதிரம்

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியிலில்லை.

* கிடந்தன. அது பின்னும் கொணர்ந்து எய்துவிக்கும்; என்னை? 'ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது,' என்பதாகலான். காட்சி துணைக்காரணம், அவ்வினை பயத்தற்கு; வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதுவுந் துணைக்காரணமாயிற்றுப்போலவும், சோறுதலியல்பிற்றாகிய அரிசி சோறுதற்கு அடுவானைத் தொடக்கமாக உடைய காரணம் துணைக்காரணமாயிற்றுப் போலவும் என்பது. 'அஃதேயெனின், காட்சி துணைக்காரணம் பிற,' எனின், காட்சியின் முற்கிளர்ந்ததோ, பிற்கிளர்ந்ததோ, உடன் கிளர்ந்ததோ? †உள்ளத்துத்தான் கிளர்கின்றதெனின், முன்னைக்கடா வந்து எய்துமால். 'என்னையோ?' எனின், ‡காட்சியோடு உடனே கிளரும்; என்னை? இருட்டகத்து விளக்குக் கொண்டு புக்கால், விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்கு வந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்கு வருதலும் இருள் நீக்கமும் உடனே நிகழும். அதுபோல, காட்சியும் ஞானவொழுக்கக் கூறுகளது தன்மையழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக் கொண்டு, ஞான ஒழுக்கங்களை இருளாகக் கொள்க.

இனிக் 'காமப்புணர்ச்சி' என்பது, தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கை மிகலினற் புணர்வது.

ஆயின், இவர், மேல் பொருவிறந்தார் தலைமகனும் தலைமகளுமென்றமையான், அவனும் கற்கந்தும் $ எய்ப்போத்தும் கடுங்கண் யானையும் தறுகட்பன்றியும் கருவரையும் இருநிலனும் பெருவிசும்பும் அனையார், ஆளி மொய்ம்பினர், அரிமான் துப்பினர், பற்பன்னூறியிரவர் கூர்வேல் இளைஞர் தற்சூழச் செல்வன் என்பது முடிந்தது.

---

* 'கிடந்தவாகக் கிடந்தே' என்பதும் பாடம்.

† 'உள்ளதுதான்' என்பதும் பாடம்.

‡ 'காட்சியோடுடன்கிளருங் கிளருமிடத்து' என்பதும் பாடம்.

$ 'எறி போத்தும்' என்பதும் பாடம்.

அவளும் உடன் பிறந்து, உடன் வளர்ந்து, நீர் உடனுடி, சீர் உடன் பெருகி, ஒல் உடனுட்ட, பால் உடனுண்டு, பல் உடனெழுந்து, சொல் உடன் கற்று, பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பன்னூறுயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண் மதி போலச் செல்வாளென்பது முடிந்தது. 'முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனெடு மாறுகொள்ளும்,' எனின், மாறு கொள்ளாது; என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினல் பிரியும். 'என்னை பிரியுமாறு?' எனின், *ஒன்றொருவரின் முன்னம் தழை விழைதக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்தும் என்றும், போது மேதக்கன கொய்தும் என்றும், மயிலொடு †மாறுதும் என்றும், குயிலொடு மாறு கூவுதும் என்றும், ‡அருவியாடி அஞ்சுனை குடைதும் என்றும், வாச மலர்க்கொடியின் ஊசலாடுதும் என்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார்கொல்லோ என்றும் இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார்கொல்லோ என்றும் இவ்வகை நினைத்துப் பிரிப என்பது.

'இவ்வகை அவளைத் தமியளாக்கிப் பிரிபவோ?' எனின், எட்டியும் சுட்டியும் காட்டப்படும் குலத்தளல்லளாகலானும், பான்மையும் அவ்வகைத்தாகலானும், பிற வாறு நினையார் பிரிப என்பது. 'ஆயின், இவ்வகைப் பட்ட ஆயத்திடை மேலுள் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ?' எனின், நிற்கும், தான் பயின்ற இடம் தன் ஆயத்தினெடு ஒக்குமாகலானென்பது. 'யாங்

* 'ஒன்றொருவர் முன்-ஒருவரொருவர் முன்னுக என்று கொள்ளின், ''ஒன்றொருவரின் முன்னந் தழை விழைதக்கன கொய்தும்,'' என்றது போலும்' என்பது, புற-வெ-மாலை-பொதுவியற்படலம்-11-ஆம் வெண்பா உரை.

† 'மாறிகலுதும்' என்பதும் பாடம்.

‡ 'அருவியாடுதும்' என்பதும் பாடம்.

ஈனம் நிற்குமோ?' எனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆஞினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணம் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றை யொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனுர்ந்து, வரிக்குயில்கள்* இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு தூடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் †களிகூர்ந்து, தன் செம் மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம் மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, ‡நறை விரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்த இடத்து, மரகத மணி விளிம்படுத்த மாணிக்கச்சுணை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூகாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொன் சிகரங்களின் முகடு தொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து மணி வரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணி கிளரருவி ஆடகப் பாறைமேல் அகிர் சூரல் முரசின் கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயிலும் கிளியும் பாட, தண்தாது தவிசு படப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித் தலத்து மிசை, நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொள விரித்து, முளியிளஞாயிற்று §இளவெ யில் எறிப்ப, ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்ருள்.

---

* 'வரி பாட' என்பதும் பாடம்.

† 'கழிகூர' என்பதும் பாடம்.

‡ 'நறுமலர் வேங்கை' என்பதும் பாடம்.

§ 'இளவிரிகதிர்' என்பதும் பாடம்.

அப்பால், தலை மகனும் பற்பன்னூறுயிரவர் கூர்வேல் இளைஞரொடு நளிர்மாமலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றுன், ஆண்டெழுந்ததோர் கடுமானின் பின் ஓடி, காவலிளைஞரைக் கையகன்று, நெடுமான் தேரொடு பாகனை நிலவு மணல் காணியாற்று நிற்கப் பணித்து, தொடுகழல் அடியதிரச் சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்து, கடிகமழ் நறுங்கண்ணி மேல்கொண்டு வண்டு மணம் அயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்து நாற, *அடு சிலையொடு கணை ஏந்தி வடிவு கொண்ட காமன் போலச் சென்று, அவள் நின்ற இரும்பொழில் புகும். 'அஃதியாங்ஙனமோ?' எனின், வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க் கனலியும் தணகதிர் மதியமும் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைப்பெய்து, ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்.

தமியராதலென்பது, தம்மூணர்வினரல்லராதல்.'தம் உணர்வினரல்லராதலென்பது என்னே?' எனின், தலை மகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். 'அறிவென்பது என்னே?' எனின்,

> $ "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்றுராகலின், எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை அறிவது. 'நிறை என்பது என்னே?' எனின், காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பென்பது, ஒரு பொருளை †ஆராய்ந்து உணர்தல் என்பது. கடைப்பிடி என்பது, கொண்ட பொருள் மறவாமை. இந்நான்மையும் தலை மகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப் ‡புனலால் மீதூரப்பட்ட புற்போலச் சாய்ந்து கிடப்பது.

---

* 'வரிசிலை' என்பதும் பாடம்.

$ குறள், அறிவுடைமை, செய். 3.

† 'உணர்ந்து ஆராய்ந்துகொள்வது' என்பதும் பாடம்.

‡ 'புனல் ஓடிவழிப் புற்சாய்ந்தாற்போல' என்பதும் பாடம்.

இனித் தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன குணம். அவற்றுள், நாண் என்பது பெண் டிர்க்கு இயல்பாகவே உளதொரு தன்மை. மடம் என் பது, கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச் சம் என்பது, பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பு என்பது, பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. இந்நான்மையும் புனல் ஓடுவழியிற் புற்சாய்ந்தாற்போல வேட்கையால் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பது.

'வேட்கையென்பது என்னை?' எனின், ஒருவரொரு வரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் [1]நாண் வழிக் காசு போலவும், நீர் வழி மிதவை போல வும், பான்மை வழியோடி இருவருயிரையும் புணர்விக்கும் என்பது. ஆதலால், தமியராய்ப் புணர்தல் தலைமையொடு மாறுகொள்ளாதென்பது.

இது காமப்புணர்ச்சி என்பது. இதனை ஓராசிரி யன், 'உள்ளத்தானே புணர்ந்தார்,' என்னும். என்னை? மெய்யுறு புணர்ச்சி பொருவிறந்தார் என்பதனொடு மாறு கொள்ளும். 'யாங்ஙனம் மாறுகொள்ளும்?' எனின், ஏகதேசத்துப் பிறர்க்குரிய பொருளை வௌவினனைப் பெருமை சொல்லப்படாது; அது போல, இவனும் கொடுப்ப அடுப்ப எய்தற்பாலான் ஏகதேசத்துத் தலைப் பட்டுச் சென்றெய்தி முயங்கினமையின். என்னை? பிறர்க்குரிய பொருள் எளிதாகச் செய்யப்படாமையினும் பெரியனுய்ச் சென்றது. அங்ஙனமாகில், [2]உலகத்துப்

---

1. கயிற்றின் வழிக் காசு என்னும் பொன் நாணயம் போலவும் (இதனைக் காசு மாலை என்பர்.)

2 சீராத பொழுது பிறர் உடைமை கொள்ளாது, சீர்த்தபொழுது வௌவுதலால், உலகத்துப் பன்மக்களெல்லாம் பெரியர் என இயைக்க.

சீராத - சீர் அடையாத; சீர்த்த - சீர் அடைந்த; (இவற்றுள், முன்னையது எதிர்மறைப் பெயரெச்சம்; பின்னையது உடன்பாட்டுப் பெயரெச்சம்; இவை பொய்யாத, பொய்த்த என்பன போல்வன.)

ஈண்டுச் 'சீர்' எனும் பண்புப்பெயர் வினைத்தன்மை எய்தி நின்றது.

* பன்மக்களெல்லாம் பெரியர், சீராத பொழுது பிறர் உடைமை கொள்ளாது சீர்த்த பொழுது வௌவுதலால்.

இனி, இவளும் குரவரது பணியாற்சென்று அவனை வழிபடற்பாலாள் ஏகதேசத்துத் தலைப்பட்டு மயங்கி வழி பட்டமையான் பெருமையிலள்; என்னை? தேர்ந்து காணுது உள்ளம் ஓடினவழி ஓடுதலான். உள்ளத்தான் வேட்கப் படாத பொருளில்லை அன்றே? அவ்வேட்கப்பட்டவற் றுக்கணெல்லாம் அறத்தின் வழாமையும் பொருளின் வழாமையும் தனக்குத் தகவும் ஆராயாது உள்ளம் ஓடினவழி ஓடுதல் தக்கதன்று என்பதனால் அது மாறு கொள்ளும் என்பது.

'மற்றென்னையோ உரைக்குமாறு?' எனின், அவர் தம்முள் மெய்யுற்றுப் புணர்ந்திலர்; இருவர்தம் காமமுமே தம்முள் புணர்ந்தன என்றிங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி; இது பிறரொருவர் உணர நெடுங் காலம் புணர்தலாகாதென நீங்கும் நீக்கம் பிரிவு; அப் பிரிவின்கண் சொல்லுவது, மெய்யுறு புணர்ச்சிக்குச் சொல்லுவன எல்லாஞ் சொல்ல அமையும். பாங்கற்கூட் டத்தின்கண்ணும் தோழியிற்கூட்டத்தின்கண்ணும் எல் லாம் இதுவே. வரைந்து எய்திய ஞான்று மெய்யுறு புணர்ச்சி உண்டாவதென்ப. அது பொருந்தாதென்று மெய்யுறு புணர்ச்சி வேண்டுவார் சொல்லுவது: மெய்யுறு புணர்ச்சி தக்கின்றென்று ஆகாதே உள்ளப்புணர்ச்சி வேண்டுவது? அங்ஙனம் கருதின், பிறர்க்குரிய பொருட் கண் உள்ளத்தை ஓட விடுதல் தக்கின்றென்று மீட்க அமையாதோ என்பது. அல்லதூஉம், உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றாராயிற்று. அதன்கண் இருபுடை கருதி ஆகாதே? ஆகவே, இவட்குக் கற்பழி யும் பிறரொருவரை வழிபட; இனி உள்ளம் சென்ற பொழுதே அமைந்து இரண்டாவதில்லையென்று கருதி னானே எனினும் மெய்யுறவே; குற்றம் என்னை என்

* 'நன்மக்களெல்லாம் பெரியராயிராத பொழுது' என வேறோர் எட்டுப்பிரதியிற் காணப்படுகின்றது.

பது. அல்லதூஉம், மெய்யும் மொழியும் என்பன உள்ளத்தின் வழியவன்றே? அஃதிறந்த பின்னே இறவாது நின்றது என்னே என்பது. அல்லதூஉம், பார்ப்பான் பாதகமாயிற்றென்று நினைக்குமாயின், பிராயச்சித்தத்திற்கு உரியனும்; அதனால், செய்கையும் நினைப்புமொக்கும் என்பது; அல்லதூஉம், மெய்யுறுவதாகாதென்னும் தெரிந்துணர்ச்சியுண்டாயின், தமியரென்பதனெடு மாறு கொள்ளுமென்பது.

அல்லதூஉம், கந்தருவர் உள்ளத்தால் புணர்ந்தாராயின் இவரும் உள்ளத்தால் புணர்ப என்பது; என்னை? கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமென்றமையின் என்பது. அல்லதூஉம், தெரிந்துணர்வுண்டாமேயெனின், அன்பினன் நிறைந்தாரென்பதும் அமையாது. என்னை? நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங்கொடாதது போல என்பது. இருவரும் உத்தமராகலான் உள்ளத்தானே புணரப் போகம் முடியுமெனின், பின்னையும் எஞ்ஞான்றும் மெய்யுறவு வகை கூடாதாம். 'புத்திரலாபத்திற்கு மெய்யுறுபவே?' எனின், கருமப்பொருட்டன்றி வேட்கையில்லை என்பதனால், உள்ளப்புணர்ச்சி உரையன்று என்று மெய்யுறு புணர்ச்சியே வேண்டப்பட்டது.

இனி, ஒரு சாரார் உரைக்குமாறு: மெய்யுறு புணர்ச்சி தக்கது, இன்சொல்லும் கூற்றும் இன்றிப் பசுப்போலப் புணர்ந்தார் என்பது ஆகாது, சொற்படுகால் முறைமையான் நிகழ்ந்து புணர்தல் தகவுடைத்து. 'அவை யாவையோ?' எனின், காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என இவை.

அவற்றுள், காட்சி என்பது, இருவரும் தம்முள் கண்ணுறுவது. அதற்குச் செய்யுள் வருமாறு :

"பூம்மரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலையரும்பாத்
தேம்மரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தைவென்ற
மாமரு தாணெயெம் கோன்வையை வார்பொழில் வர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே களித்தளம் கண்ணிணையே." (க)

ஐயம் என்பது, கண்ணுற்றபின் ஐயப்படுவது. 'எங்ஙனமோ?' எனின், 'வரை அரமகள்கொல்லோ! வான் அரமகள்கொல்லோ! நீர் அரமகள்கொல்லோ! சூர் அரமகள்கொல்லோ இத்துணை மேதகவு உடையாள்! அன்றி மக்களுள்ளாள்கொல்லோ!' என்று ஐயப்படுவது. அதற்குச் செய்யுள் வருமாறு:

"உரையுறை தீந்தமிழ் வேந்தன் உகிதன்தென் னுட்டொளிசேர்
விரையுறை பூம்பொழில் மேலுறை தெய்வங்கொல் அன்றிவிண்தோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொல் நீர்மணந்த
திரையுறை தெய்வங்கொல் ஐயம் தருமித் திருந்ததலே!" (உ)

இவளும் அவனை ஐயப்படும்: 'கடம்பு அமர் கடவுள் கொல்லோ! இயக்கன்கொல்லோ! அன்றி, மக்களுள்ளான்கொல்லோ!' என்று இங்ஙனம் ஐயப்படும்.

இவ்வகை நினைந்த பின்னைத் தெளிவு வருமாறு: ஆடை மாசுண்டலானும், கால் நிலம் தோய்தலானும், கண் இமைத்தலானும், கண்ணி வாடுதலானும், சாந்து புலர்தலானும் என்று இங்ஙனம் தெரியும். தெரிந்த பின்னைத் துணியுமென்பது. அதற்குச் செய்யுள் வருமாறு:

"பாவடி யாணைப் பராங்குசன் பாழிப் பகைதணித்த
தூவடி வேல்மன்னன் கன்னித் துறைச்சுரும் பார்குவளைப்
பூவடி வாள்நெடுங் கண்ணும் இமைத்தன; பூமிதன்மேல்
சேவடி தோய்வகண் டேன்; தெய்வம் அல்லளிச் சேயிழையே." ஊ

இவளும் அவனை அவ்வாறு தெரிந்து, மக்களுள்ளானென்பது துணியும். துணிந்த பின்னை இருவருக்கும் வேட்கை மிகத் தம்முட்கூடுவது. இவ்வாறு புணரப் பெரிதும் வனப்புடைத்தாய்க் காட்டுமென்பது. இவ்வுரை பொருந்தாது. 'என்னை காரணம்?' எனின், இது கைக்கிளை இலக்கணம். 'தெய்வங்கொல்லோ! மகடூஉக்கொல்லோ!' என ஐயமுற்ற ஐய நிலையும், தெய்வ இலக்கணம் தீண்டாவாகலின் ஐயந்தெளிந்து மகடூஉவாதல் துவர உணர்ந்த அத்துணிவு நிலையும் எனக் கைக்கிளை இலக்கணமாகச் சொல்லப்பட்டமையின். ஈங்கு அகத்திணையுள் அஃதுரைப்

பது திணை மயக்கமாகலின், மேலதே பொருள். [1] 'காமப் புணர்ச்சி என்றமையின், காமத்தின் வேறு புணர்ச்சி யாகல் வேண்டும் பிற, [2]வாளாற்கொண்ட கொடி என் றதுபோல,' எனின், அற்றன்று. [3]பொன்னுற்செய்த மஞ் சிகை, மண்ணுற்செய்த குடம் என்பதுபோல வேறன்றி நிற்புழிக்கொள்க. இஃது இயற்கைப் புணர்ச்சி எனப்படும், புலவரால் கூறப்பட்ட இயல்பினால் புணர்ந்தார் ஆக லானும், கந்தருவ வழக்கத்தோடு ஒத்த இயல்பினால் புணர்ந்தார் ஆகலானுமென்பது. இனி, தெய்வப் புணர்ச்சி எனவும்படும், இருவரும் தெய்வத் தன்மையால் புணர்ந்தாராகலின் என்பது. அல்லதூஉம், முயற்சியும் உளப்பாடும் இன்றி ஒருவற்கு ஒரு கருமம் கைகூடின இடத்துத் தெய்வத்தினான் ஆயிற்று என்பது. அது போல, இருவர்க்கும் முயற்சியும் உளப்பாடும் இன்றிப் புணர்வு முடிந்தமையானும் தெய்வப் புணர்ச்சி எனப்பட் டது. இதுவே முன்னுறு புணர்ச்சி எனவும்படும், இவள் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும், இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையா னும் என்பது.

மற்றும், 'தெய்வப்புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சியென இவற்றுள் ஒன்று சொல் லாது, காமப்புணர்ச்சி என்றே கூறிய காரணமென்னை?' எனின், இவற்றுள் ஒன்றே சொல்லினுமொக்கும்; அல் லது அவையெல்லாம் அன்பினானே நிகழுமாகலின், காமப்புணர்ச்சி என்றார் என்பது. பல காரணத்தினிய பொருளை ஒரு காரணத்தினால் சொல்லுப, சிறப்புடைமை நோக்கி; என்னை? நிலனும் நீரும் காலமும் வித்துமென இவற்றது கூட்டத்தினையை முளையை நெல் முளை என்ப, நெல் முளைக்கு நெல் சிறப்புடைக்காரணம்; நிலனும் நீரும்

1. காமத்தால் எய்தும் புணர்ச்சி என்றமையின்

2. வாளாற்கொண்ட கொடி என்பது வேறுணர நின்றது.

3. பொன்னுற்செய்த மஞ்சிகை மண்ணுற்செய்த குடம் என்பன வேறன்றி உணர நின்றன.

முதலாக உடையன பொதுக்காரணம்; அவை பயற்று மூலை முதலாகவுடையனவற்றிற்கும் காரணமாதல் ஒக்கு மாகலான். அது போல, ஈண்டும் தெய்வமும் இயற்கை யும் முன்னுறவும் பொதுக்காரணமும், காமம் சிறப்புக் காரணமுமாகலான், காமப்புணர்ச்சி எனப்பட்டது.

இனி, 'இருவயின் ஒத்தல் என்பது என் சொல்லிய வாறோ?' எனின், புணராத முன் நின்ற அன்பு புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்குமென்றவாறு. 'ஆயின், உலகினோடு ஒவ்வாது பிற, உலகினில் புணராத முன் நின்ற *வேட்கை புணர்ந்த பின்றைத் தவிர்தலானும், உண்ணுதல் முன் நின்ற வேட்கை உண்ட பின்றைத் தவிர்தலானும்,' என்பது. என்றற்கு, 'அறியாது சொல் லுதி! இஃது †உலகத்துள்ள பான்மை; முன்னே கேட்டா யன்றே? இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட் டப்பட்டதென நூல் எடுத்துக்கோடற்கண்ணே சொல் லிப்போந்து, இனி ஒரு கால் உலகினோடொவ்வாதெனல் வேண்டுமோ?' என்பது. 'ஆயின், உலகினுள் அன்பன் றாக; புணராத முன் நின்ற வேட்கை புணர்ந்த பின் னும் அப்பெற்றியே நிற்குமெனில், புணர்ச்சியானைய பய மில்லையாம் பிற; உண்பதன் முன்னின்ற வேட்கை உண்ட பின்றையும் தவிராது அப்பெற்றியே நிற்குமா யின், உண்டதனையை பயமில்லை; அதுபோல,' என்றற்கு, 'அதுவன்று: புணராத முன் நின்ற வேட்கை புணர்ச்சி யுள் குறைபடும்; அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கண் தம்முட்பெற்ற செய்குணங்களானைய அன்பு நிறைவிக் கும்; பின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்தில் குறை படும்; அதற்கு இடையின்றியே குணத்தினையை அன்பு நிறைவிக்கும்; நிறைவித்த பின் முன்னின்ற அன்பு கூட்டத்தில் குறையாது எஞ்ஞான்றும் ஒரு பெற்றியே யாய் நிற்கும்,' என்பது.

---

*'அன்பு' என்பதும் பாடம்.

†'உலகிலுள்ள தன்மை' என்பதும் பாடம்.

இனி, 'அவ்வகை புணராத முன்னும் புணர்ந்த பின்னும் ஒத்த அன்பினையுடைய தலைமகன் பிரியும் என்றுமோ? பிரியான் என்றுமோ? பிரியுமென்றுமே எனின், அன்பிலன் ஆயினனும்; என்னை? பிரிவு அன்பிற்கு முதலியாகலான். இனிப் பிரியானேயெனினும், அன்பிலனாயினனும். என்னை? பிரியாதிருப்ப இவ்வொழுக்கலாறு பிறர்க்குப் புலனும்; ஆகவே, இவள் இறந்து படும்; இவள் இறந்துபாட்டிற்குப் பரியான் ஆயினனும். ஆகவே, மூன்றாவது செய்யப்படுவது இல்லையாலோ?' எனில், பிரியும் என்பது. 'ஆயின், அன்பின்மை தங்காதோ?' எனில், தங்காது. பிரிவும் அன்பினாலே நிகழுமாறு சொல்லுதும்:

தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் இயற்கை அன்பினனும் செயற்கை அன்பினனும் கடாவப்பட்டுத் தனது நயப்புணர்த்தும். இயற்கையன்பென்பது, காரணமின்றித் தோன்றும் அன்பு; செயற்கை அன்பென்பது, அவள் தன் குணங்களால் தோன்றிய அன்பு. அவ்விரண்டினனும் கடாவப்பட்டு நின்று தலைமகன் சொல்வது நயப்பு என்பது.

நயப்பு

நயப்பு என்பது, தலைமகன் வண்டிற்கு உரைப்பானாய்த் தலைமகள் கேட்பத் தன் நயப்பு உணர்த்தியது. 'எங்ஙனம்?' எனின், 'இவள் கையினைச் செங்காந்தள் எனவும், கண்ணினைக் கருங்குவளை எனவும், வாயினை அரக்காம்பல் எனவும் சென்று தடுமாறி, குழல்மேலும் கோதைமேலும் சுழல்வாய், இவள் செவ்வாயது நறுநாற்றம் அறிதி அன்றே! இனி நீர்ப்பூ நிலப்பூக் கோட்டுப்பூக் கொடிப்பூ என்று இப்பல்வேறு வகைப்பட்ட பூவின்மேலும் செல்வாய், ஆம்பல் பூவினது நாற்றம் அறிதி அன்றே! அறிவாய்! இவ்வகைப்பட்டாள் செவ்வாய் போல நாறும் தகைமைய உள்ளே ஆம்பல் நறுமலர்? என்னுல் தேறப்படும் வண்டே, உரையாய்,' என உணர்த்தினனென்பது. அதற்குச் செய்யுள் வருமாறு:

"வேறும் எனநின் றிகல்மலைந் தார்விழி ஞத்துவிண்போய்
ஏறும் திறங்கண்ட கோன்தென் பொதியில் இரும்பொழில்வாய்த்
தேறும் தகையவண் டே!சொல்லு: மெல்லியல் செந்துவர்வாய்
நாறும் தகைமைய வேஅணி ஆம்பல் நறுமலரே?" (சு)

என்றது, 'வேறும் என நின்று இகல் மலைந்தார் விழி ஞத்து விண் போய் ஏறும் திறங்கண்ட கோன் தென் பொதியில் இரும்பொழில்வாய் வண்டாதலால், தேறும் தகைமையது,' என்றவாறு.

இதனுல் போந்த பொருள்: 'வெல்லுவது கருதி விழி ஞத்துக் கடற்கோடியுள் மலைந்த பல்வேந்தரையும் படுத்து 'இவரென் பகைஞர்,' என நினையாது அவர்க்குத் தவத் தானும் தானத்தானும் அன்றிப் புகலாகாச் சுவர்க்கம் கொடுத்த பெருந்தன்மையானது நிலத்து வண்டாதலின், நீயும் பெருந்தன்மையை; ஆகலின், தெளியப்படுதி. அல்லதூஉம், பொதியில் என்பது எல்லாத் தேவர்க்கும் பொதுவாகிய இல் என்றவாறு; அத்தேவர்களுடைய வனம் அவ்விரும்பொழிலென்றவாறு; அப்பொழில் வாழ் வாய் நீயும் அத்தன்மையையன்றே! ஆகலானும் தெளியப் படுதி. அன்னுய் நீ பொய்யுரையாய்; இவள் வாய் போல நாறும் ஆம்பல் பூவும் உளவோ?' என்றவாறு.

என்றதனுல் தன் நயப்பு உணர்த்தினன். இனி, மெல் லியலென்பது, மென்மையைத் தனக்கு இயல்பாகவுடைய ளென்றவாறு. மென்மை என்பது, பெண்டிர்க்கு மிக இயல்பு; அதனைத் தனக்குச் செய்துகோள் அன்றி இயல் பாக உடையாளென்றவாறு: எனவும் தன் நயப்புணர்த் தினன். இனிச் செந்துவர் வாய் என்பது, செம்மையைத் தனக்கு மிகவுடைய வாயென்றவாறு. செம்மையுடையார் என்பது, உலகத்துத் தம் குணங்களை மறையாது ஒழுகு வாரை. இவள் வாயும் தன் குணமாகிய வடிவும் மொழி யும் நறுநாற்றமுமென்று இவற்றுன் விளங்கிப் பொலிந்து தோன்றுவதென்றவாறு. என்றதனுனும் தன் நயப்பு உணர்த்தினனும். இனி, 'நாறும் தகைமையவே?' என்பது,

ஐந்து ஏகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினவின்கண் வந்த ஏகாரம் எனக்கொள்க.

* "தேற்றம் வினவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே"

என்பவாகலின். அணி ஆம்பல் நறுமலரென்பது, அழகிய ஆம்பல் நறுமலரென்றவாறு. அணியாம்பனறுமலர் என்றதனால் போந்த பொருள், அழகியாரின் குணங்களும் பெரும்பான்மையும் அழகியவாகலால், அவ்வாம் பற்கண்ணும் நறுநாற்றமிக்கது என்றற்குச் சொல்லப் பட்டது. 'அவ்வகை நறுநாற்றம் மிகவுடைய ஆம்பல் இவள் வாய்போல நாறுமே?' என்றவாறு. மலரே என்று நின்ற ஏகாரம், ஈற்றசை ஏகாரம்.

இனி, இதனைச் சோதிக்குமாறு: ' 'செந்துவர் வாய் நாறும் தகைமையவே?' என்றதல்லது, 'போல' என்றது இல்லையாலோ?' எனின், உவமம் தொக்கு நின்றதென்று கொள்க. என்னை?

† "வேற்றுமைத் தோகையே உவமத் தோகையே
வினையின் தோகையே பண்பின் தோகையே
உம்மைத் தோகையே அன்மொழித் தோகையென்
றவ்வா றென்ப தோகைமொழி நிலையே"

என்று ஓதினமையின்.

'ஆயின், உவமம் தொகுக; உவமிக்கும் முறைமை அன்றி உவமித்தீர், உலகத்துப் பெண் பால்கள் வாயது நறுநாற்றத்திற்கு உவமையாவது [1]ஆம்பலென்றவாறு. என்னை? 'ஆம்பல் நாறும் தேம்பொதி கிளவி,' என்பவாகலின். அவ்வாறன்றி, 'இவள் வாய் போல நாறும் ஆம்பலுளவே?' என இவள் வாயை உவமையாக்கி, ஆம்பலை உவமிக்கப்படும் பொருளாகச் சொல்லுதல் குற்றம்பிற,' எனின், அறியாது சொல்லினாய்! உலகத்து இவை உவமை, இவை உவமிக்கப்படும் பொருளென்று நிலை

* தொல். சொல். இடை. சூ. 4.
† ,, ,, எச்ச. சூ. 16.
1. 'ஆம்பலென்றன்றே?' என்பதும் பாடம்.

பெற்றன உளவேயில்லை. *உரைக்கும் கவியது குறிப்பி னுன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம்; உவமிக் கப்படும் பொருளும் உவமையாகவும் அமையும். என்னை?

> "போருளது †புரைவே புணரீப்போன் குறிப்பின்
> மருளற வருஉம் மரபிற் றென்ப"

என்றேதினமையால், ‡ 'கண்போல் நெய்தல் போர்வில் பூக்கும்,' எனவும், 'கண்ணென மலரும் குவளை,' எனவும், 'குவளை உண்கண் இவளும் யானும்,' எனவும், 'நெய்தல் உண்கண் பைதல் கூர,' எனவும் $ இரு வகையானும் சொல்லுபவாகலின், இரு வகையானும் உவமிக்க அமை யும் என்பது.

இனி, 'மருத நிலத்து ஆம்பலைக் குறிஞ்சி நிலத்த தாகச் சொல்லுதல் திணைவழுவாம் பிற,' எனின், ஆகாது; குறிஞ்சி நிலத்து வண்டு குறிஞ்சி நிலத்தே திரிதருவன அல்ல, எல்லா நிலத்தும் சென்று எல்லாப்பூவும் ஊது மாகலானும் அமையும்; அல்லதூஉம்,

> ¶ "எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
> அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
> வந்த நிலத்தின் பயத்த ஆகும்"

என்பதாகலானும் அமையும். இனிச் சுனைக்குவளையும் சுனையாம்பலும் உண்மையானும் அமையும். அது பெருங் குறிஞ்சியில் கண்டுகொள்க.

இனி, 'தலைமகன் என்னும் சொல்லொடு மாறு கொள்ளும், பிறனெரு தலைமகன் நிலத்துப் புணர்ந்தான் என்றமையினன்,' எனின், மாறுகொள்ளாது; என்னை? நின்ற ஒருவனைய பாண்டியனது பொதியில் இடமாகச் சொன்னமையான். என்னை? அக்குலத்துள் தோன்று

---

* 'புணர்க்கும் கவியது குறிப்பினுன்' என்பதும் பாடம்.
† 'புணர்ப்பே' என்பதும் பாடம்.
‡ கற்றிணை, செய். 8, அடி, 8.
$ 'இவ்வகையானும்' என்பதும் பாடம்.
¶ தொல். பொருள். அகத். சூ. 19.

வார் தேவர்களே ஆகலான், நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருள் மிக்கானெனப்படான், மக்களுள் மிக்கானையதல்லது. ஆகலின், இவன் நிலத்துப் புணர்ந்தானென்பது தலைமையொடு மாறுகொள்ளாது என்பது.

அல்லதூஉம்,

* "மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
கழைகிலை பெரூஅக் காவிரி நீத்தம்
குழைமாண் ஒள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயம்நா டியாணையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழில் ஆகத்துப் பூந்தார் குழைய
நெருநல் ஆடிணை புனலே"

என்றும்,

† "பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்து"

என்றும் கிளவித் தலைமகனைப் பாட்டுடைத் தலைமகன் நிலத்துப் புனலாடினன் என்றும் புணர்ந்தான் என்றும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் சொல்லப்பட்ட தாகலானும் அமையும் என்பது. இப்பாட்டினுள் தன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து நயப்பு உணர்த்திற்று ஆயிற்றுப் போந்த பொருள். இன்னும் செய்யுள்:

"தூவுண்டை வண்டினங் காள்!வம்மின் சொல்லுமின்: துன்னிநில்லாக்
கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்கொங்க ராட்டஞ்செங்கேழ்
மாவுண்டை வாட்டிய நோக்கிதன் வார்குழல் போற்கமழும்
பூவுண்டை தாமுள வோநுங்கள் கானல் பொழிலிடத்தே?" (சு)

"இருங்கழல் வானவன் ஆற்றுக் குடியிகல் சாய்ந்தழியப்
பொருங்கழல் வீக்கிய பூழியன் மாறன்தென் பூம்பொதியில்
மருங்குழ லும்களி வண்டினங் காள்!உரை யீர்:மடந்தை
கருங்குழல் நாறுமென் போதுள வோதும் கடிபொழிலே?" (சு)

---

* அகம். செய். 6. அடி, 4—11.

† " " 36.

"விண்டே எதிர்ந்ததெவ் வேந்தர் படவிழி ஞத்துவென்ற
ஒண்தேர் உதிதன்எங் கோன்கொல்லிச் சாரல் ஒளிமலர்த்தா
துண்டே உழல்வாய் அறிதியன் றோஉள வேலுரையாய்
வண்டே! மடந்தை குழல்போல் கமழும் மதுமலரே." (எ)

"போருங்கழல் வானவற் காய்அன்று பூலங்கைப் போர்மலைந்தார்
ஓருங்கழல் ஏறவென் றுன்கொல்லிச் சாரலொண் போதுகள்தம்
மருங்குழல் வாய்ஈ அறிதிவண் டே!சொல் எனக்குமங்கை
கருங்குழல் போலுள வோவிரை நாறும் கடிமலரே?" (அ)

"தேற்றமில் லாததெவ் வேந்தரைச் சேவூர்ச் செருவழித்துக்
கூற்றம் அவர்க்காய வன்கொல்லிச் சாரல்கொங் குண்டிழல்வாய்
மாற்றம் உரைஈ எனக்குவண் டே!மங்கை வார்குழல்போல்
நாற்றம் உடைய உளவோ அறியும் நறுமலரே?" (கூ)

* "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோஈ அறியும் பூவே?"

இவையும் அப்பாற்படுத்துக்கொள்க.

அவ்வகை தன்னைப் புகழத் தலைமகள் ஆற்றுளா யினள். என்னை? சிறியவரும் †தம்முன் நின்று தம்மைப் புகழ்ந்தவிடத்து நாணி வருந்துப ஆகலால், தான் பெருமையும் பெருநாணும் உடையாள் தலைமகன் முன்னின்று தன்னைப் புகழ ஆற்றுளாவது சொல்ல வேண்டுமோ? அவ்வகை ஆற்றுளாயினளது ஆற்றுமை தலைமகற்குப் புலனயிற்று. புலனுக, அதனைக் கண்டு, 'நீருடை நிலத்து நிவந்த நீள் மண மரம் வெப்பத்தால் தெறப்படாதது போல, யான் உழையேனுக இவ்வேறு பாடு இவட்காகாதன்றே! இஃது எற்றினுயிற்றுக்கொல் லோ!' என நினைந்தான்; நினைந்து, 'அறிந்தேன்! தன்னை யான் காதல் மிகவினுல் பாராட்டப்போலும்!' என

* குறுந்தொகை, செய். 2.

† 'தம்முன் நின்று புகழப் புகழ்ந்தவிடத்து' என்பதும் பாடம்.

உணர்ந்து, 'யான் தன்னை முன்னின்று பாராட்ட இவ் வகை மெலிவு சென்ற பெருநாணுடையாள், 'புறத்து ஒரு வர் இவ்வொழுக்கத்தை உணர்வர்கொல்லோ!' என்று உட்கொண்ட ஞான்று இவள் இறந்துபடும் போலும்!' எனப்பெரியதோர் ஆற்றுத் தன்மையளாயினள். ஆற்றுத் 52
தன்மையன் என்பது, எவ்வுணர்வும் இன்றி, அவ்வாற்று மைதானே ஆவது. இவ்வகை ஆற்றலைய தலைமகனது ஆற்றுமைக்குக் கவன்று *[1]முன் நாணிற்சென்று எய் திய ஆற்றுமை நீங்கித் தலைமகள் ஆற்றுளாயினள், † [2]வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல. அது 2
தலைமகற்குப் புலனுயிற்று. புலனுக, 'இவள் எவ்விடத் தும் தன் தன்மையென்பது ஒன்றிலள்; என் தன்மை யளே; [3]யான் ஆற்ற ஆற்றி, யான் ஆற்றது விடத் தானும் ஆற்றுளாம்; ஆகலான், யான் பிரிந்தவிடத்து 53
என் குறிப்பன்றி இறந்துபடாள்; அல்லதூஉம், யான் பிரியாது விடப் புறத்தார் உணர்வர். புறத்தார் உண ரவே, இவள் ஆற்றுளாம். ஆகலான், யான் பிரியவே 54
புறத்தார் உணரார். ஆகவே, இவள் ஆற்றும்,' எனக் கருதி, 'இவள் கருங்குழற்கற்றை மருங்கு திருத்தி, அளக மும் நுதலும் தகை பெற நீவி, ஆகமும் தோளும் அணி பெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறி, தளிர்ப்ப முயங்கிப் பிரிவல்,' என்று வலித்தான். வலித்துப் பிரிவச்சமென்ப தொன்று சொல்லும்:

---

* 'முன் நாணினுனுகிய ஆற்றுமை' என்பதும் பாடம்.

† 'வேலேறு பெற்றுத் தேளேறு தீர்ந்தாற்போல,' என்பதும் பாடம்.

1. தலைமகன் தன்னைப் புகழ, அதனுலாகிய நாணத்தினுல் தலை மகள் கொண்ட ஆற்றுமை, தலைமகன் ஆற்றுமையைக் கண்டதனுல் நீங்கப்பெற்று, தலைமகன் ஆற்றுமைக்கு ஆற்றுளாயினுள் என்பது கருத்து.

2. தலைமகள் முன் நாணத்தினுற்கொண்ட ஆற்றுமை தலைமகன் கொண்ட ஆற்றுமையைக் கண்டு கொண்ட கவலையினுல் நீங்கப்பெற்ற தற்கு உவமை ஆயிற்று.

3. யான் ஆறுதலடையத் தானும் ஆறுதலடைந்து, யான் ஆறுத லடையாதவிடத்துத் தானும் ஆறுதலடையாளாம்.

பிரிவச்சம் என்பது, தான் பிரிவு அஞ்சிற்றும் பிரிவச்சம்; அவளைப் பிரிவு அஞ்சுவித்ததும் பிரிவச்சம்; ஆதலின், பிரிவச்சம் எனப்படும். 'அது யாங்ஙனம் சொல்லுமோ?' எனின், 'நின்னின் பிரியேன்; பிரியினும் ஆற்றேன்,' என்னும். அதற்குச் செய்யுள்:

பிரிவச்சம்

"மின்னின் பொலிந்தசெவ் வேல்வலத் தான்விழி ஞத்தெதிர்ந்த
மன்னிற்கு வானம் கொடுத்தசெங் கோல்மன்னன் வஞ்சியன்னாய்
நின்னின் பிரியேன்; பிரியினும் ஆற்றேன்; நெடும்பணைத்தோள்
பொன்னில் பசந்தொளி வாடஎன் ஞங்கொல் புலம்புவதே?"(கo)

"அணிகிற நீள்முடி வேந்தரை ஆற்றுக் குடியழியத்
துணிகிற வேல்வலம் காட்டிய *மீனவன் தொண்டியன்ன
பிணிகிற வார்குழல் பெய்வளைத் தோளி!நின் னிற்பிரியேன்;
மணிகிறம் பொன்னிறம் ஆகஎன் ஆவி வருந்துவதே?" (கக)

"போன்னர் புனைகழல் பூழியன் பூலந்தைப் பூவழிய
மின்னுர் அயில்கொண்ட வேந்தன் விசாரிதன் வெண்திரைமேல்
மூன்னுள் முதல்அறி யாவண்ணம் நின்ற பிரான்முசிறி
அன்னுய்! பிரியேன்; பிரியினும் ஆற்றேன்; அழுங்கற்கவே." (கஉ)

இவ்வாறு இவை கேட்ட தலைமகள், 'எம்பெருமான், 'நின்னின் பிரியேன்; பிரியினும் ஆற்றேன்,' என்கின்றனுல், பிரிவு என்பதும் ஒன்று உண்டு போலும்! கேட்ட தகைமையால் அது தம் காதலரைக் காணுதும் கேளாதும் கையினகன்று மெய்யின் நீங்குவது,' எனக் கலங்கி,[1] கார்மருங்கின் மின்னுப் போலவும் நீர் மருங்கின்

---

* 'தென்னவன்' என்பதும் பாடம்.

1. கார் மருங்கின் மின்னுப் போலவும், நீர் மருங்கின் கொடிப் போலவும் தைந்து கவினி எழாநின்றதாகிய கொடி எனவும், எழாநின்றதாகிய ஒரு கவின் பெற கொடிப்போலும் காரிகை எனவும் இயைத்துக்கொள்க. எழாநின்றதோர் கவின்பெற கொடி-எழாநின்றதும் ஒப்பற்ற அழகு பெற்றதுமாகிய கொடி; (இது வேறிடத்துக் காணப்படாத அழகு; மூன்னையது வேறிடத்தும் காணப்படுவது.) 'இஃது உவமைக்கு உவமையாக வருதலின், அடுத்து வரலுவமை என்னும் அலங்காரக் குற்றத்தின்பாற்படுவதன்றே?' எனின், ஒரே பொரு

கொடிப்போலவும், தளிரும் முறியும் ததைந்து குளிரும் நளிரும் கவினி எழாநின்றதோர் கவின் பெறு கொடிப் போலும் காரிகை, கண்ணுடி மண்டிலத்து ஊது ஆவி போலக் காணக் காண ஒளி மழுங்கி, கனல் முன்னிட்ட மெழுகு பாவை போல மனமுருகிப் பசந்து காட்டினுள்; காட்டியும், ஆற்றினுள், 'யான் ஆற்றாது இறந்துபடில் எம்பெருமானும் இறந்துபடும்,' என. அங்ஙனம் ஆற்றினுளது நீர்மையைக் கண்டு, 'இவள் எவ்விடத்தும் எக்காலத்தும் தன் தன்மை என்பது ஒன்று இலள்; என் தன்மையளே போலும்!' எனப் பெரியதோர் கழியுவகை மீதூரநின்று, வன்புறை என்பதோர் சொல் சொல்லும்:

வன்புறை

வன்புறை என்பது, வற்புறுத்துவது. 'அஃது யாங்ஙனமோ?' எனின், 'அணித்து எம்மிடம்,' என்பது. அதற்குச் செய்யுள்:

"பாவணை இன்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
ஏவணை வெஞ்சிலை யான்வஞ்சி அன்னாய்! இனையல்;எம்மூர்த்
தூவண மாடச் சுடர்தோய் நெடுங்கொடி துன்னிதும்மூர்
ஆவண வீதியெல் லாம்நிழல் பாயகின் றண்வருமே." (கஙூ)

"திணிநிற நீள்தோள் அரசுகத் தென்னனை யாற்றுமின்னூர்
துணிநிற வேல்கொண்ட கோன்தொண்டி அன்னாய்! துயரல்;எம்மூர்
மணிநிற மாடத்து மாட்டிய வான்சுடர் மாலைதும்மூர்
அணிநிற மாளிகை மேல்பகல் பாரித் தணவருமே." (கசு)

"ஒன்றக் கருதா வயவர் நறையாற் றுடனழிந்து
பொன்றப் படைதொட்ட கோன்புனல் நாடனே யாய்!நுமர்கள்
குன்றத் திடைப்புனம் காவலர் இட்ட குரூஉச்சுடர்எம்
மன்றத் திடையிருள் நீக்கும் படித்தெங்கள் வாழ்பதியே." (கஙு)

ளில் ஒன்றுக்கொன்று உவமையாக வருவதே அக்குற்றத்தின்பாற்படுவதாம். இது வெவ்வேறு பொருளில் வருதலின், அக்குற்றத்தின்பாற் படாது. எழாநின்ற கொடிக்குத் ததைதலினும், (வேறிடத்துங் காணப்படுதற்குரிய) கவின் பெறுதலினும், கார் மருங்கில் மின்னும் நீர் மருங்கின் கொடியும் உவமையாம் எனவும், காரிகைக்கு எழாநிற்றலினும் (வேறிடத்துக் காணப்படாத) கவின் பெறுதலினும் எழாநின்றதாகிய கொடி உவமையாயிற்றெனவுங் கொள்க. (எழாநிற்றல் - வளராநிற்றல்)

"சேலங் குளர்வயல் சேவூர் எதிர்நின்ற சேரலனே
மாலங் கடைவித்த மன்னன் வரோதயன் வஞ்சியன்ன
ஏலம் கமழ்குழல் ஏழை!எம் ஊர்எழில் மாடத்துச்சிச்
சூலம் துடக்கும்தும் ஊர்மணி மாடத் துகில்கொடியே." (கசு)

என, அங்ஙனம் கேட்ட தலைமகள், 'எம்பெருமான், 'அணித்து எம்மிடம்,' என்கின்றனை, 'அணியதற்கு அருமையில்லை,' என்கின்றனம்; அருமையில்லை என்றதனை போந்த பொருள், பல்காலும் கேட்கவும் காணவும் ஆம் என்றவாறு போலும்! பல்காலும் கேட்பாரும் காண்பாரும் ஆற்றியுளர் ஆவரன்றே? அதனை, எம் பெருமான் என்னைக் காண்டற்கும் கேட்டற்கும் ஆற்றி உளனும் போலும்!' என ஆற்றியுளளாம். அங்ஙனம் ஆற்றுதலை அறிந்த பின்னைப் பிரிவானும். இனி, 'இவளும் பெருநாணினள். யான் பிரியாது விட இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனும். புலனுகவே, இவள் ஒருதலையாக இறந்துபடும்,' என இவ்வகை பிரிவச்சமும் வன்புறையும் சொல்லிப் பிரியும் ஆகலின், பிரிவும் அன்பினனே நிகழ்ந்தது என்பது.

அருமையறிதல்

'இவ்வாறறிவு தலைமகளை ஆற்றுவித்துப் பிரிந்த தலைமகன், அவளைத் தமியளாக விட்டு நீங்குமோ ?' எனின், நீங்கான். அவள் தன்னைக் காணுமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் மழைக்கொண்டலில் மின்னுப் புக்கு ஒளித்தாற்போல ஒரு *தழைப் பொதும்பரிடை மறைந்து நிற்கும். நிற்க, தலைமகளும் தன் குழல் கற்றையும் கோதையும் துயல்வர, கொடியிடை நடுவு தளர, பரவை அல்குல் துகிலசைய, பைம்பொன் தோடு மின்னுப் படைப்ப, † வரி வண்டறையும் தாமரை அக இதழ் புரையும் அஞ்செஞ்சீறடிமேல் பைம்பொன் சிலம்பரற்ற, அன்னம் போல மென்மெல ஒதுங்கி, காம வல்லியும் கற்பகக் கொழுந்தும் நடை கற்பதென நடந்து

*'தனிப்பொதும்பர்' என்பதும் பாடம்.
†'அரவ வண்டு' என்பதும் பாடம்.

சென்று, அணி வரைச்சாரல் அருகினதோர் மணியருவி மருங்கு ஓலுறுத்தப் பளிங்கு விளிம்படுத்த நீலப் பைஞ் சுனை மருங்கினதோர் மரகதச் சிலா வட்டத்து அயல் மாணிக்கச் சதுரப்பாறைமேல், தாது தவிசு அடுத்த மாதவிப்பந்தர்ப் போது வேய்ந்த பூநாறு கொழு நிழல் இருந்தாள். இருந்தாளாக, தாதும் தளிரும் போதும் மேதக்கனவற்றூல் குறுங்கண்ணியும், நெடுங்கோதையும், விரவுத்தழையும், * சூட்டுக் கத்திகையும், மோட்டு வலய மும், பிறவுமாகப் புனைந்து, வண்டும் தேனும் புடை மருட்ட, அடியுறை ஏந்தி, பிரிந்த ஆயம் †புடை மருவப் பெயர்ந்தெய்தி, போற்றும் பல்லாண்டும் கூறி நின்றூர். நிற்ப, அவளும் தாரகை நடுவண் தண்மதி போல்வதோர் பொலிவினளாய்க் காட்டினுள். காட்டினுளைக் கண்டு, 'இவளை யான் எய்தினேன் எனக் கருதினன்! எய்தியது உண்டேல், கனப்போலும்! நனவேயாயினும், இவள் எனக்கு எய்துதற்கு அரியளாம்!' என ஆற்றுனையினன். அதற்குச் செய்யுள் :

"சினவேல் வலங்கொண்டு செங்கிலத் தேற்றதெவ் வேந்தர்கள்போய்
இனவேய் நரல்குன்றம் ஏறவென் ரேன்இருந் தண்‡சிலம்பின்
புனவேய் அணியமென் தோளிதன் ஆகம் புணர்ந்தெல்லாம்
கனவே; நனவாய் விடினும்எய் தாதினிக் கண்ணுறவே." (கஎ)

"இருநிலம் காரணம் ஆக நறையாற் றிகல்மலைந்த
பொருநில வேந்தரைப் பொன்னுல காள்வித்த பூமுகவேல்
பெருநிலங் காவலன் தென்புனல் நாடன்ன பெண்ணணங்கின்
திருநலம் சேர்ந்ததெல் லாம்கன வேஎன்று சிந்திப்பனே." (கஅ)

"கையேர் சிலைமன்னர் ஓடக் கடையல்தன் கண்சிவந்த
கெய்யேர் அயில்கொண்ட நேரியன் கொல்லி நெடும்பொழில்வாய்
மையேர் தடங்கண் மடந்தைமெல் லாகம் புணர்ந்ததெல்லாம்
பொய்யே; இனிமெய்ம்மை யாயினும் இல்லைப் புணர்திறமே." கக

---

* 'சூட்டுங்குருக்கத்தியும்' என்பதும் பாடம்.

† இச்சொற்ருெடர் முன் அச்சுப்பிரதியிலில்லை; வேருெரு பிரதி யிற்கண்டது.

‡ 'பொதியில்' என்பதும் பாடம்.

என இவ்வகையான் அவளது அருமை நினைந்து இவ் வொழுக்கம் கைகூடாதெனக் கருதுவானுயின், வரையும்; இனி, 'யான் இவ்வகையாளைப் புணருமாறு என்னை கொல்லோ!' என்று கருதுவானுயின், கூட்டத்திற்கே முயல்வானும். அவ்வகை நினைந்து நீங்குவான், ஆயத் தோடும் செல்லாநின்ற தலைமகளை நோக்கிச் சொல் லும். அதற்குச் செய்யுள் :

"தேயத் தவர்உயி ரைப்புலன் அன்றென்பர்; செந்நிலத்தைக்
காயக் கனன்றெதிர்ந் தார்மரு மத்தக் கடுங்கணைகள்
பாயச் சிலைதொட்ட பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்பொழில்வாய்
ஆயத் திடையிது வோதிரி கின்றதென் ஆருயிரே!" (உ0)

"இன்னுயிர் கண்டறி வாரில்லை என்பர்; இகல்மலைக்தார்
மன்னுயிர் வான்சென் றடையக் கடையுளுள் வென்றுவையம்
தன்னுயிர் போல்நின்று தாங்கும்எங் கோன்கொல்லித் தாழ்பொழில்வாய்
என்னுயிர் ஆயத் திடைஇது வோநின் றியங்குவதே!" (உக)

என இவ்வாறு சொல்லி ஆற்றுவிப்பான். [1]அவ்வாற்று மை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். 'அஃது யாதோ?' எனின், தான் எய்திய ஆரணங்காகிய அவ்வருவினை நினைந்து தானெய்தும் உபாயமாவது தன் காதல் தோழனை இது கொண்டு முடிக்குங்கொல்லோ என்பது. அது பற்றுக்கோடாக ஆற்றி நீங்கும் என்பது.

கூ. ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்
பாங்க னோரின் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் தமியோள் இடந்தலைப் படலும்என்
றாங்கவ் விரண்டே தலைப்பெயல் மரபே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், 'இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் அதன் பின்னே தெருண்டு வரைதல் தலை; *தெருளாயுயின், இவ்வாறு

---

1. அவ்வாற்றுமையை ஆற்றுதற்குரியதாகிய உபாயம் ஒன்றனைத் தேடிக்கொள்வன்.

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் எட்டுப்பிரதியிற்கண்டது.

ஒழுகும்,' என்று அவன் ஒழுகும் திறன் உணர்த்துதல் நுதலிற்று. என்னை? வழி போகாநின்றான் ஒருவன் * இழுக்கிச் சேறனும் சாணகமானும் மிதித்தவிடத்து அப்பொழுதே காலைக் கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புகும்; அதுபோல இவனும் ஞான ஒழுக்கக் குணங்களின் வழியே செல்லாநின்றான், இழுக்கின், அவ் விழுக்கினை இழுக்காவது அறிந்து, அதன்கணின்று மீடல் மிக்கது; மீண்டு நிற்கலான் எனின், இவ்வாறு ஒழுகும் என்பது.

இதன் பொருள்: ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் - அவ்வாறு கூடிப்பிரிந்த தலைமகன், தன்வயின் பாங்கனோரின் குறி தலைப்பெய்தலும் - தன்பாங்கனால் குறியிடத்துத் தலைப்பெயலும், பாங்கினன் தமியோள் இடந்தலைப்படலும் - பாங்கனையின்றித் தனியாளை இடத்தெதிர்ப்படுதலும் ('ஆங்க' என்பது அசைச் சொல்; 'இரண்டு' என்பது தொகை), தலைப்பெயல் மரபே - தலைப் பெய்தற்கு இலக்கணம் என்றவாறு.

அவ்வாறு புணர்ந்து மீங்கிய தலைமகன், பிற்றை ஞான்று தன் பாங்கனால் குறியிடத்துத் தலைப்பெய்தலும் பாங்கனையின்றித் தமியாளை இடத்து எதிர்ப்படுதலும் என அவ்விரண்டினுள் ஒன்றே தலைப்பெய்தற்கு இலக்கணம் என்றவாறு.

'ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன்' என்பது, தெய்வம் இடைநிற்கப் பான்மையால் † உய்க்கப்பட்டு, யாருமில் ஒரு சிறைத் தலைப்பெய்த தலைமகன் என்றவாறு. ‡ எனவே, அவ்வாறு புணரப்பட்டாள் தலைமகள் எனப் பட்டது. கிழமையுடைமையின், கிழவோன் எனப்படும்; தலைமையுடைமையின், தலைவன் எனப்படும். அவட்கும் அவ்வாறே கொள்க.

இனி, பாங்கற்கூட்டம் ஆமாறு சொல்லுதும்: இயற்

---

* 'பிழைத்துச் சென்றானுஞ் சாணகமானும்' என்பது முன் அச்சுப் பிரதியிற்கண்ட பாடம்.

† 'ஊக்கப்பட்டான்' என்பதும் பாடம்.

‡ 'அவ்வாறு புணர்ந்தான் தலைமகன் எனப்படும்' என்பதும் பாடம்.

கைப் புணர்ச்சி புணர்ந்து ஆற்றுவித்துப் பிரிந்த தலை மகன், * [1]பிரிந்தன்று வார்த்தை எல்லாம் நினைக்கும். 'நினைக்குமாறு யாதோ?' எனின், ' 'நின்னிற்பிரியேன்; பிரியின் ஆற்றேன்,' எனச் சொல்லிப் பாங்கற்கூட்டம் பிரியப்பட்டாள், தன்னைக் காணுதை என் நிலைமை நினைந்து † ஆற்றுங்கொல்லோ, ஆற்றாள்கொல்லோ!' எனவும், 'ஆற்றாளாகி நின்றாள், தனது வேறுபாட்டைப் புறத்தாரறியாமை ‡ மறைக்கு மாறு அறியுங்கொல்லோ, அறியாது வருந்துங்கொல் லோ!' எனவும், இவை முதலாயின நினைந்து ஆற்றாளும். ஆற்றா நிலைமையானைப் பிற்றை ஞான்று சிறுகாலை தலைப்படும் பாங்கன்; தலைப்பட்டு, அடியிற்கொண்டு முடி காறும் நோக்குவான், புதையிருள் இரியல் போகப் பொன்தாழ்அருவி மணிநெடுங்கோட்டு உதயமென்னும் [2] மணிவரை உச்சி [3]உலகு துயில் $ பெயர்த்துத் தோன் றிய வளர் ஒளி இளமுலை ஞாயிற்றின் வனப்பழித்த [4] திருவொளி மழுங்கியது நோக்கி, 'என்னைகொல்லோ எம்பெருமாற்கு [5]இற்றை வேறுபாட்டு வாட்டம்!' என் னும். அதற்குச் செய்யுள்:

"நீடிய பூந்தண் கழனிகெல் வேலி நிகர்மலர்ந்தார்
ஓடிய வாறுகண் டொண்சுடர் வைவேல் உறைசெறித்த
ஆடியல் ‖யானை அரிகே சரிதவ்வர் போலழுங்கி
வாடிய காரணம் என்னைகொல் லோவுள்ளம் வள்ளலுக்கே!" உஉ

---

* 'ஆங்குப்பட்ட' என்பதும் பாடம்.

1. பிரிந்த அன்று சொன்ன சொற்களை எல்லாம்

† இச்சொற்றொடர் மூன் அச்சுப்பிரதியில் இல்லை.

‡ இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

2. அழகிய மலையினது உச்சியின்கண்

3. உலகில் உயிர்களின் துயிலை நீக்கி

$ 'போர்வந்து தாறிய' என்பதும் பாடம்.

4. தலைவனது உடம்பின் அழகிய ஒளி

5. இன்று திருமேனி வேறுபடுதற்குக் காரணமான மனவாட்டம்

‖ 'தானை' என்பதும் பாடம்.

"வண்டிறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் ஓடவைவேல்
கொண்டிறை கீக்கிய தென்னவன் கூடல் கொழுந்தமிழின்
ஒண்டிறை மேலுள்ளம் ஓடிய தோ? அன்றி உற்றதுண்டோ?
தண்டிறை வா! சிந்தை வாடிஎன் ஞங்கொல் தளர்கின்றதே?" உரு

"தெவ்வாய் எதிர்நின்ற சேரலர் கோனைச் செருக்கழித்துக்
கைவான் நிதியமெல் லாம்உட னேகடை யல்கவர்ந்த
செவ்வாய் அயில்நெடு மாறன் பகைபோல் நினைந்துபண்டை
ஒவ்வா உருவும் மொழியும்என் னேவள்ளல் உள்ளியதே?" (உசை)

இவ்வகை பாங்கன் தலைமகனை விஞவாஞயின், தலைமகற்கு உற்றது கடைப்பிடியாது விட்டானும். இவ்வகை கடைப்பிடித்து விஞயின பாங்கற்கு, 'நெருநல் இவ்வகையார் ஒருவரைக் கண்டேற்கு என் உள்ளம் பள்ளத்து வழி வெள்ளம் போல ஓடி இவ்வகைத்து ஆயிற்று!' என்று சொல்லும். அதற்குச் செய்யுள் :

உற்றது உரைத்தல்

"அஞையார் அரவின் குருளை அணங்க அறிவழிந்து
தஞையார் நெடுங்கைக் களிறு நடுங்கித் *துயர்வதுபோல்
வஞையார் முஞையெயிற் ரூர்மன்னன் மாறன்வண் கூடல்அன்ன
இஞையார் ஒருவர் அணங்கநைந் தால்யான் இணங்கின்றதே!" (உரு)

"அஞையார் கழல்மன்னர் ஆற்றுக் குடியழல் ஏறச்செற்ற
கொஞையார் அயில்படைக் கொற்றவன் கூடலன் னர்ஒருவர்
முஞையாய் முகிழ்த்துமென் தோளாய்ப் பணைத்து முகத்தனங்கன்
சிஞையாய்க் குனித்துக் குழலாய்ச் சுழன்றதென் சிந்தனையே!" (உசு)

"பொருநெடுந் தாணைப்புல் லார்தம்மைப் பூலங்கைப் பூவழித்த
பருநெடுந் திண்டோள் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்த்
திருநெடும் பாவை அனையவள் செந்தா மரைமுகத்துக்
கருநெடுங் கண்கண்டு மீண்டின்று சென்றதென் காதன்மையே!"

† "சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யாஞை அணங்கி ஆஅங்
கஞையள் முஞைவாள் எயிற்றள்
வஞையுடைக் கையள்எம் அணங்கி யோளே."

---

*'சுழல்வதுபோல்' என்பதும் பாடம்.
† குறுந்தொகை, செய். 119.

* "எலுவ! சிறுஅர் ஏமுறு நண்ட!
புலவர் தோழ! கேளாய் அத்தை:
மாக்கடல் நடுவண் எண்ணுள் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி ஆங்குக்
கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே."

இவ்வாறு சொல்லக் கேட்ட பாங்கன் கழறும்.

கழறுதல் என்பது, அன்புடையார் மாட்டுத் தீயன கண்டால், அவ்வன்பின் தலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது. கழறுமாறு:

கழறியுரைத்தல்

'சூன்றம் உருண்டால் சூன்றி வழியடை ஆகாதவாறு போலவும், யானை தொடுவுண்ணின் மூடும் கலம் இல்லது போலவும், கடல் வெதும்பின் வளாவும் நீரில்லது போலவும், எம்பெருமான் நின் உள்ளம், அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியின் வரைத்து அன்றிக் கைம்மிக்கோடுமே எனின், நின்னைத் தெருட்டற்பால நீர்மை யாரும் உளரோ, நீ பிறரைத் தெருட்டினல்லது? அப் பெற்றியாய நீ, 'இன்னதோரிடத்து இன்னதோர் உருவு கண்டு என் உணர்வு ஒழியப் போந்தேன்,' என்றல் தக்கின்று,' என்னும். அதற்குச் செய்யுள்:

"ஆய்கின்ற தீந்தமிழ் வேந்தன் அரிகே சரிஅணிவான்
தோய்கின்ற முத்தக் குடைமன்னன் கொல்லியஞ் சூழ்பொழில்வாய்
ஏய்கின்ற ஆயத் திடையோர் இளங்கொடி கண்டெனுள்ளம்
தேய்கின்ற தென்ப தழகிய தொன்றே சிலம்பனுக்கே?" (உஅ)

"தண்டேன் அறைநறுந் தார்மன்னர் ஆற்றுக் குடிதளரத்
திண்டேர் கடாய்ச்செற்ற கொற்றவன் கொல்லிச் செழும்பொழில்வாய்
வண்டேய் நறுங்கண்ணி யாய்! அங்கொர் மாதர் மதிமுகம்நீ
கண்டே தளரின்நல் லார்இனி யார்இக் கடலிடத்தே?" (உசு)

இவ்வாறு பாங்கன் கழறத் தலைமகன் ஆற்றாமையைச் சொல்லும் சொற்கள் கழற்றெதிர்மறை என்பது. அதற்குச் செய்யுள்:

கழற்றெதிர்மறை

* குறுந்தொகை, செய். 129.

"விண்டார் படவிழி ஞக்கடல் கோடியுள் வேல்வலங்கைக்
கொண்டான் குடைமன்னன் கொல்லிக் குடவரைக் கொம்ப ரொக்கும்
வண்டார் குழல்மட மங்கை மதர்வைமென் னோக்கமென்போல்
கண்டார் உளரேல், உரையார் *பிறஇன்ன கட்டுரையே." (ஈ0)

† "விண்டலங் கெஃகொடு கோட்டாற்றி னின்றவெவ் வேந்தழித்திம்
மண்டலங் காக்கின்ற மான்தேர் வரோதயன் வஞ்சியன்னார்
குண்டலம் சேர்ந்த மதிவாள் முகத்த கொழுங்கயற்கண்
கண்டிலிர்; கண்டால், உரையீர் கழறிய கட்டுரையே." (ஈக)

"மண்கொண்டு வாழ ‡வலித்துவந் தார்தம் மதன்அழித்துப்
புண்கொண்ட நீர்மூழ்கப் பூலந்தை வெண்ரூன் புகார்அனைய
பண்கொண்ட சொல்லம் மடந்தை முகத்துப்பைம் பூங்குவளைக்
கண்கண்ட பின்னே உரையீர் உரைத்தஇக் கட்டுரையே." (ஈஉ)

¶ "அம்ம வாழி கேளிர் முன்னின் றறு
கண்டனிர் ஆயின் கழறவிர் மன்னே!
நுண்தாது பொதிந்த செங்கால் கொழுமுகை
முண்டகம் கெழீஇய மோட்டுமணல் அடைகரைப்
பேஎய்த் தலைஇய பிணர்அரைத் தாழை
எயிறுடை நெடுந்தோடு $காப்பப் பலவுடன்
‖ வயிறுடைப் போது வாலிதின் § விரைஇப்
புலவுப் பொருதழித்த பூநாறு §§ பரப்பின்
இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடித் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தல்
போது புறக்கொடுத்த உண்கண்
மாதர் வாள்முகம் மதைஇய நோக்கே."

---

* 'உரைத்தவிக் கட்டுரையே' என்பதும் பாடம்.

† இச்செய்யுள் மூன் அச்சுப் பிரதியில் விடுபட்டிருக்கின்றது; வேறூர் எட்டுப்பிரதியிற்கண்டமையின், இங்கே சேர்க்கப்பட்டது.

‡ 'வலித்துடன் ரூர்தம்' என்பதும் பாடம்.

¶ அகம். செய். 130.

$ 'காய' என்பதும் பாடம்.

‖ 'வயிறிடைப் போது' என்பதும் பாடம்.

§ 'விரிந்து' என்பதும் பாடம்.

§§ 'வரைப்பின்' என்பதும் பாடம்.

* "இடிக்கும் கேளிர் தும்குறை யாக
‖ நிறுக்கல் ஆற்றினே னன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே."

கவன்று உரைத்தல்

இவ்வாறு தலைமகன் தனது ஆற்றுமையின் கழற் றெதிர் மறுத்து உரைப்பது கேட்ட பாங் கன், 'எம்பெருமான் தானே தகாதன வற்றைத் தகாஎன்று உணரற்பாலான், யான், 'எம்பெருமாற்கூத் தக்கதோ இவ்வாறு உள் மெலிவது?' எனவும் தெருண்டிலன்; தெருளாஞயது தான் காணப்பட்ட உருவும் அந்நீர்மைத்து ஆகவே; அன்ரு யின், தெருளுமன்றே?' எனக் கவன்ரூன். கவற்சிக்குச் செய்யுள் :

"வன்ரூள் களிறு கடாய்அன் றுவல்லத்து † மன்அவியச்
சென்ரூன் கருங்கயல் சூட்டிய சென்னிச்செம் பொன்வரைபோல்
நின்ரூன் நிறையும் அறிவும் கலங்கி நிலைதளரும்
என்ரூல், தெருட்டவல் லார்இனி யார்இவ் விருநிலத்தே!" (கூகூ)

இயலிடம் கேட்டல்

இவ்வகை சிந்தித்து, 'இவனே இடனன்றிக் கழறி னன். என் பாக்கியம் பிற கழற்றெதிர் மறுத்துச் சொல் வானுயிற்று. சொல்லாது இறந்துபட்டா ஞயினும் செய்வதில்லை. பெரியதோர் இழுக்கம் செய்தேன்!' என ஆற்ரூன் ஆயினன். அவ்வாற்ரூமை ஆற்றுவது ஒன்றனைப் பற் றும்; 'யான் இறந்துபட்டவிடத்து இவனே இஃது எய்து விக்கலாகாது; யான் இறந்துபடாது ஆற்றுவதே பொருள்,' என இறந்துபடானுய் நின்று, 'எவ்விடத்து எத்தன்மைத்து நின்னுல் காணப்பட்ட உரு?' என்னும். அதற்குச் செய்யுள்:

---

* குறுந்தொகை, செய். 58.
‖ 'நிறுக்க லாற்றி னெனன்றுமற் றில்லை,' என்பதும் பாடம்.
† 'மன்னிரிய' என்பதும் பாடம்.

"வல்லிச் சிறுமருங் குல்பெருந் தோள்மட வார்வடிக்கண்
புல்லிப் பிரிந்தறி யாதமந் தாரத்தெம் கோன்புனல்நாட்
டல்லித் தடந்தா மரைமல ரோ,அவன் தன்னணியார்
கொல்லிக் குடவரை யோ,அண்ணல் கண்டதக் கொம்பினையே?"

"கண்டார் மகிழும் கடிகமழ் தாமரை யோ,கடையல்
விண்டார் விழுநிதிக் குப்பையும் வேழக் குழாமும்வென்று
கொண்டான் மழைதவழ் கொல்லிக் குடவரை யோ,உரைகின்
ஒண்டார் அகலம் மெலிவித்த மாதர் உறைவிடமே?" (ஊடி)

அங்ஙனம் கேட்ட தலைமகன் கோடையால் தெறப்பட்டு வாடி நின்ற சந்தன மரம் மழை பெற்றுத் தளிர்த்தாற்போலப் பெரியதோர் கழியுவகை

இயலிடங்கூறல்

மீதூர, 'இவ்விடத்து இத்தன்மைத்து என்னல் காணப்பட்ட உருவம்,' என்னும். அதற்குச் செய்யுள்:

"அடிவண்ணம் தாமரை; ஆடர வல்குல்; அரத்தம்அங்கை; [கரும்பின்
கொடிவண்ணம் நுண்ணிடை; கொவ்வைசெவ் வாய்;கொங்கை கோங்
படிவண்ணம்;செங்கோல் பராங்குசன் கொல்லிப்பைம் பூம்பொழில்வாய்
வடிவண்ண வேல்கண்ணி னல்என்னை வாட்டிய வாள்நுதற்கே."

"திருமா முகம்திங்கள்; செங்கயல் உண்கண்;செம் பொன்சுணங்கேர்
வருமா முலைமணிச் செப்பினை; வானவன் கானமுன்னைக்
குருமா மெயிலதில் கோட்டாற் றரண்கொண்ட தென்னன்கன்னிப்
பெருமான் வரோதயன் கொல்லியஞ் சாரல்அப் பெண்கொடிக்கே."

"கடித்தடம் விண்ட கமலம் முகம்;கம லத்தரும்பேர்
பொடித்தடங் காமுலை; பூலுலகைத் தெம்மன்னர் பூவழிய
இடித்தடங் காவுரும் ஏந்திய கோன்கொல்லி ஈர்ம்பொழில்வாய்
வடித்தடங் கண்ணினை யாலென்னை வாட்டிய வாள்நுதற்கே."

* "நினங்கொள் புலால்உணங்கல் நின்றுபுள் ஓப்புதல் தலைக்கீடாகக்
கணங்கொள்வண் டார்த்துலாம் கன்னி நறுஞாழல் கையில் †ஏந்தி
மணங்கமழ் பூங்கானல் மன்னிமற் றுண்டோர்
அணங்குறையும் என்ப தறியேன்; அறிவனேல் அடையேன் மன்னோ."

---

* சிலப்பதிகாரம், கானல் வரி, செய். 9.

† 'ஊன்றி' என்பதும் பாடம்.

இவ்வாறு உணர்த்தப்பட்ட பாங்கன், 'நீ இனையை ஆகல்; என்னினுவதுண்டேல், காண்பென்,' என்று தலைமகனை ஆற்றுவித்து, அவன் சொன்ன இடம் நோக்கிச் செல்வானுவது. இது தலைமகன் நிலைமை.

இனி, தலைமகளது நிலைமை: பிற்றை ஞான்று தன் ஆய வெள்ளத்தொடும் வந்து தான் விளையாடும் இடம் புகுதலுடையாள், 'நெருநலை நாளால், 'நின்னின் பிரியேன்; பிரியின் ஆற்றேன்,' என்று சொல்லினர், ஆயத்துள்ளே வருவார்கொல்லோ!' என்னும் பெருநாணினுனும், 'ஆற்றுமையான் இறந்துபட்டார்கொல்லோ!' என்னும் பேரச்சத்தினுனும் மீதூரப்பட்டுத் தன் தன்மையள் அன்றித் தன் ஆயங்கள் புடைபெயருமாறு புடை பெயர்ந்து வருகின்றுள், நெருநலை நாளால் தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்படும். எதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போன்றுள். என்னை? இனியாரொடு தலைப்பெய்த இடம் கண்டாலும், அவ்வினியாரைக் கண்டாலே போல்வது உலகத்துத் தன்மை. அவ்வாறு நிற்ப, ஆயங்களும் நெருநலை நாளால் பிரிந்தாற்போலத் 'தழை விழைதக்கன *தொடுத்தும்,' என்றும், 'கண்ணி தண்ணறு காற்றத்தன செய்தும்,' என்றும், 'போது மேதக்கன கொய்தும்,' என்றும், இவ்வாறு விளையாட்டு விருப்பினுல் பிரியும். 'பிரிய நின்றுள், எப்பெற்றி நின்றுளோ?' எனின், 'ஆயத்துள்ளே வருவான்கொல்லோ!' என்னும் நாண் நீங்கிற்று. என்னை? ஆயங்கள் நீங்கினமையான். இனி, 'இறந்துபட்டான்கொல்லோ!' என்னும் அச்சத்தினுல் மீதூரப்பட்டு நின்றுள். நின்ற நிலைமைக்கண் பாங்கன் சென்று, அவள் தன்னைக் காணுமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் காணும். கண்டு, 'இவ்விடமே அவனுல் காணப்பட்ட இடமும்; இவ்வுருவே அவனுல் சொல்லப்பட்ட உருவும்,' எனத் துணியும். அதற்குச் செய்யுள்:

* 'கொடுத்துமென்றும்' என்பதும் பாடம்.

"தண்டா தலர்கண்ணி அண்ணல்தன் உள்ளம் தளர்வுசெய்த
வண்டார் குழல்அவ ளேயிவள்; மானீர் மணற்றிமங்கை
விண்டார் உடற்குன்றம் ஏறி விழிகண் * கழுகுறங்கக்
கண்டான் பொதியில் இதுவே அவன்சொன்ன கார்ப்புனமே."

"சினமும் அழிந்து செருவிடைத் தோற்றதெவ் வேந்தர்கள்போய்க்
கனவும் படிகடை யல்செற்ற வேந்தன் கனங்குழலார்
மனமும் வடிக்கண்ணும் தங்குமந் தாரத்து மன்னன்கொல்லிப் 63
புனமும் இது;இவ ளேஅவன் தான்கண்ட பூங்கொடியே." (சO)

தலைவனே வியந்துரைத்தல்

என நினைந்து நின்று, 'இவ்வருவினைக் கண்ட எம் பெருமான் †[1]ஆற்றான் ஆகாமைக்குக் காரணம் என்னே! [2]பெரியவர்க்கே ஆகாதே! அரியனதாம் கற்று வல்லன் அவன் ஆகலான் ஆற்றினன்! பிறராயின், இறந்து படுப! இறந்துபடாது என்காறும் ‡வந்த இருந்துணைப் பெருந்தக்காணே யான் [3]பெரியதோர் இடனன்றிக் கழறினேன்!' என நினைக்கும். அதற்குச் செய்யுள்:

"இருநெடுங் தோளண்ண லேபெரி யான்;வல்லத் தேற்றதெவ்வர்
வருநெடுங் தானையை $வாட்டிய கோன்கொல்லி மால்வரைவாய்த்
திருநெடுங் பாவை அனையவள் செந்தா மரைமுகத்துக்
கருநெடுங் கண்கண்டும் ஆற்றிவந் தாம்என்னைக் கண்ணுற்றதே."

"பெரிய நிலைமை யவரே பெரியர்; பிறைஎயிற்றுக்
கரிய களிறுந்தி வந்தார் அவியக் கடையல்வென்ற

---

* 'கழுதுறங்க' என்பதும் பாடம்.

† 'ஆற்றுதற்கு' என்பதும் பாடம்.

1. ஆற்றுதவன் ஆகாமைக்கு ஆற்றினமைக்கு என்பது. ஈண்டு இரண்டு எதிர்மறை கூடி ஓர் உடன்பாட்டுப் பொருளே உணர்த்தின.

2. இவ்வருவினைக் காணின், பெரியவர்களுக்கும் ஆற்றுதல் இயையாதே! (பெரியவராவார் தவ ஞான ஒழுக்கங்களிற்சிறந்தார்.)

‡ 'வருந்துணைப் பெருந்தக்காணே' என்பதும் பாடம்.

3. கழறுதற்குரிய சிறந்த இடனுமிய காரணம் இல்லாமல் இருக்க யான் கழறினேன். (அக்காரணமாவது அவர்க்கு வேண்டாத செய்கை. கழறுதல் - இடித்துரைத்தல்.)

$ 'மாற்றிய' என்பதும் பாடம்.

வரிய சிலைமன்னன் மான்தேர் வரோதயன் வஞ்சியன்னுள்
அரிய *மலர்நெடுங் கண்கண்டு மாலண்ணல் ஆற்றியதே!" (சூ)

மற்று இவ்வகையும் சிந்திக்கும்:

†"துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புனைப் பூவுதிர்ந்து நுண்தாது போர்க்கும் கானல்
நிறைமதி வாள்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்!"

"மணங்கமழ் குழலிவள் வடிக்கண்செய்த மம்மர் வெந்நோய்
சுணங்கணி வனமுலை அல்லது தீர்க்கலா."

என நினைந்து ஆற்றுளியினும், இறந்துபடான் ஆயினன், 'அவனை அஃது எய்துவிக்கும் திறம் என்னைகொல்லோ!' என்பதனன். அவ்வகை நினைத்துத் தலைமகனைச் சென்று எய்தி, 'யான் கண்ட இடம் மேதக்கதேகாண்!

கண்டமை கூறல்

இரவோ ரன்ன கொழுநிழற் ருஅய்
நிலவோ ரன்ன வெண்மணல் ஒழுகி
வண்டும் தேனும் வரிக்கடைப் பிரசமும்
கொண்டு புணர்நரம் பென்ற மூரன் று
விழைவு விடுத்த விழுமி யோர்க்கும்
விழைவு தோற்று விக்கும்

பண்பிற்று,' என்னும். அதற்குச் செய்யுள்:

"மின்னேர் ஒளிமுத்த வெண்மணல் மேல்விரை நாறுபுன்னைப்
பொன்னேர் புதுமலர்த் தாய்ப்பொறி வண்டு மூரன்றுபுல்லா
மன்னேர் அழிய மணற்றிவென் ருன்கன்னி வார்துறைவாய்த்
தன்னேர் இலாத தகைத்தின் றியான்கண்ட தாழ்பொழிலே." சஉ

"களிமன்னு வண்டுளர் கைதை ‡வளாய்க்கண்டல் வீண்டுதண்டேன்
துளிமன்னு வெண்மணல் பாய்இனி தேசுடர் ஏர்மருமான்
அளிமன்னு செங்கோல் ‖அதிரியன் ஆற்றுக் குடியுள்வென்ற
ஒளிமன்னு முத்தக் குடைமன்னன் கன்னி உயர்பொழிலே." (சச)

* 'கயல் நெடுங்கண்' என்பதும் பாடம்.
† சிலப்பதிகாரம், கானல் வரி, செய். 8.
‡ 'விராய்' என்பதும் பாடம்.
‖ 'அதிசயன்' என்பதும் பாடம்.

"தேனுறை பூங்கண்ணிச் சேரலன் சேவூர் அழியச்செற்ற
ஊனுறை வைவேல் உசிதன்தன் வையை உயர்மணல்மேல்
கானுறை புன்னைப்பொன் ஏர்மலர் சிந்திக் கடிகமழ்ந்து
வானுறை தேவரும் மேவும் படித்தங்கோர் வார்பொழிலே." (சரி)

என்பது சொல்லி, 'நீயாகாதே இவ்வகை மேதக்கன எய்தற்பாலாய்?' என, தலைமகனும் அவ்விடம் நோக்கிச் செல்லும்; சென்றவிடத்துத் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்படும். எதிர்ப்படவே, தலைமகள் காணும். காணவே, 'ஆற்றுமையான் இறந்துபட்டான்கொல்லோ!' என்னும் அச்சம் நீங்கிற்று. நீங்க, தன் தன்மையளாயினள். தன் தன்மை என்பது, நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் இவற்றொடு கூடி நிற்பது. அத்தன்மையளாய் நிற்பத் தலைமகளது [1]குறிப்பறியாமைச் சாரலாகாமையின், ஆற்றுஞையினன் தலைமகன். ஆற்றுமையாவது, பிறிதெவ்வுணர்வுமின்றி, அவ்வாற்றுமைதானே ஆவது. அவ்வாற்றுமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். ஆற்றுவது பிறிது இன்மையின், ஒரு சொல் சொல்லும். 'என் சொல்லுமோ?' எனின், 'கின்னை யான் இப்பொழுறை தெய்வமென ஐயுறுவல்; அல்லையாயின், வாய் திறவாய். ஆவி சென்ற பின்னைப் பெயர்ப்பதரிதன்றே?' என இவ்வகை போல்வன சொல்லும். அதற்குச் செய்யுள் :

மோழி பேற வருந்தல்

"மேவியொன் ஞரைவெண் மாத்துவென் றூன்கன்னி வீழ்*பொழில்
தேவியென் றும்நின்னை யானினைக் கின்றது சேயரிபாய் [வாய்த்
காவிவென் றுயகண் ணுய்! அல்லை யேல்ஒன்று கட்டுரையாய்:
ஆவிசென் றுல்†பின்னை யாரோ பெயர்ப்பர் அகலிடத்தே." (சசு)

---

1. குறிப்பறியாமல் அருகிற்சார்தல் தகுதியன்றுகலின்

* 'துறை' என்பதும் பாடம்.

† 'பெயர்ப்பாரினியார் இவ்வகலிடத்தே?' என்பது மூன் அச்சுப் பிரதியிற்கண்ட பாடம்.

"திரையுறை வார்புனல் சேவூர்ச் செருமன்னர் சீரழித்த
உரையுறை தீந்தமிழ் வேந்தன் உசிதன்ஒண் பூம்பொதியில்
வரையுறை தெய்வமென் றேற்கல்லே யேல்உன்றன் வாய்கிறவாய்
விரையுறை கோதை! உயிர்செல்லின் யார்பிறர் மீட்பவரே?" (சுள)

மருங்கணைதல்

[1]'ஏன்ரூன் தலைமகனே?' எனின், அல்லன்; [2]தலைமகனிடனுகப் பிறந்த ஆற்ரூமை. அதுவும் தலைமகன் எனவேபடும். அச்சொல் கேட்டலும் இறந்துபட்டானெனக் கவன்று நோக்கி உண்மை கண்டாட்குக் கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக்கொண்டாற்போலப் பெரியதோர் ‡உவகையாயிற்று; ஆக, அவ்வுவகை ஒரு மூரல் முறுவல் [3] தோற்றிற்று; தோற்ற, 'எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேன்!' என ஆற்ரூளாயினுள். 'யான் முன் என் தன்மையேனுய் நிற்ப ஆற்ரூனுயினுன் எம்பெருமான்; எனது ஆற்ரூமை கண்டவிடத்து இறந்துபடும் பிற,' என ஆற்ரூமை நீங்கும். நீங்க, நாண் வந்து அடையும். அடைய, [4]மறைவது காணுது மாதுபடு நோக்கி, தன் மணிக்காந்தள் மெல்விரலால் போது புரை நெடுங்கண் புதைத்தாள். புதைப்ப, 'இனிச் [5] சார்வாற்றும்,' என நினைந்து, 'நின் கருநெடுங்கண் புதைத்தது இவற்குப் பெரியதோர் ஆற்

---

1. என்ரு இங்ஙனம் கூறியவன்

2. தலைமகனே இடனுகக் கொண்டு தோன்றிய ஆற்ரூமையே அங்ஙனம் கூறிற்ரு.

‡ இச்சொற்ரொடர்கள் முன்னச்சுப் பிரதியில் இல்லை; வேரூர் ஏட்டுப் பிரதியிற்காணப்பட்டன: இவைகள் இல்லாமையான் முன் அச்சுப்பிரதியில் இப்பகுதி பொருட்பேறு இன்றிக் கிடக்கின்றது. ஈண்டுச் செய்யப்பட்ட ஏனைய திருத்தங்களும் வேரூர் ஏட்டுப் பிரதிக்கு இணங்கவே செய்யப்பட்டிருக்கின்றன.

3. தோற்றுவித்தது - உவகை ஒரு மூரல் முறுவலைத் தோற்றுவித்தது என இயைத்துக்கொள்க. தோற்றிற்று என்பது தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது; ஈண்டுப் பிறவினைப் பொருளில் நின்றது.

4. நாண் மறைத்தற்குரியதாகிய வேறு உபாயத்தைக் காணுமல்

5. இனி அருகிற்சார்தல் கூடும் என எண்ணி

ருமை செய்யுமென்றுகாதே? அவற்றின் பரத்தவோ சுரும்புடைக்கோதை நின் கரும்புடைத்தோள்?' என்னும். அதற்குச் செய்யுள்:

"அரும்புடைத் தொங்கற்செங் கோல்அரி கேசரி கூடல்அன்ன
சுரும்புடைக் கோதைநல் லாயிவற் குத்துயர் செய்யுமென் றுன்
பெரும்புடைக் கண்புதைத் தாய்;புதைத் தாய்க்குநின் பேரொளிசேர்
கரும்புடைத் தோளுமன் றேஎன துள்ளம் கலக்கியதே!" (சஅ)

"தேந்தண் பொழிலணி சேவூர்த் திருந்தார் திறலழித்த
வேந்தன் விசாரிதன் தெவ்வரைப் போல்மெலி விக்கும்என் றுன்
பூந்தடங் கண்புதைத் தாய்;புதைத் தாய்க்குன் பொருவில்செங்கேழ்க்
காந்தள் விரலுமன் றேஎம்மை உள்ளம் கலக்கியதே!" (சகூ)

* "சோல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவீளை யாடிய புலவுகாறு வேழத்தின்
தலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ வல்ல; நண்ணூர்
அரண்தலை மதிலர் ஆகவும் மூரசுகொண்
டோம்பரண் கடந்த † அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே."

என்பது சொல்லி, அவள் குழலும் கோதையும் திருத்து வானுய்ச் சென்று சாரும்.

இது **பாங்கற்கூட்டம்** ஆயினவாறு.

இனி, [1]பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படுமாறு;

போழிலிடைச் சேறல்

'யான் இவளை எய்திற்று விதியானே: இன்னும் அவ்விதி கைதருமேல், காண்பல்,' எனப் பாங்கற்குச் சொல்லாதே

---

* நற்றிணை, செய். 39.

† 'திண்டேர்ச்செழியன்' என்பதும் பாடம்.

1. தலைவன் பாங்கனுல் தலைவியைச்சேர்தல் இலனுய்த் தனிமையளாயிருக்குந் தலைவியின் இடத்தைக் கூடும் வகை

தான் முன்னெதிர்ப்பட்ட இடமே நோக்கிச் செல்லும். அதற்குச் செய்யுள்:

"ஆமா றறிபவர் யாரே விதியைஅம் தீந்தமிழ்நர்
கோமான் குலமன்னர் கோன்நெடு மாறன்கொல் லிச்சிலம்பில்
ஏமாண் சிலைதுதல் ஏழையை முன்னெதிர்ப் பட்டணைந்த
தூமாண் இரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே." (ரூ0)

"பெரும்பான் மையும்அறி கற்கரி தாம்விதி பேணிநில்லாப்
பொரும்பார் அரசரைப் பூலந்தை *வாட்டிய கோன்பொதியில்
கரும்பார் மொழிமட மாதரைக் கண்ணுற்று முன்னணைந்த
சுரும்பார் இரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே."(ரூக)

பொழில் கண்டு உவத்தல்

என நெருநலே நாளால் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். புக்காற்கு, அப்பொழில்பெரிய தோர் சார்வாயிற்றாக, ஆற்றாமை நீங்கினான். என்னை? [1] 'இனியாரோடு தலைப் பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போலும்,' என்னும். அதற்குச் செய்யுள்:

" துனிதான் அகலமண் காத்துத் தொடுபொறி யாயகெண்டை
பனிதாழ் † வடவரை மேல்வைத்த பஞ்சவன் பாழிவென்ற
குனிதாழ் சிலைமன்னன் கூடல்அன் னாளது கூடலைப்போல்
இனிதாய் எனதுள்ளம் எல்லாம் குளிர்வித்த தீர்ம்பொழிலே." (ரூட)

" தேர்மன்னு தானை பரப்பித்தென் சேவூர்ச் செருமலைந்த
போர்மன்னர் தம்மைப் புறங்கண்டு காணிய பூங்கழற்கால்
ஆர்மன்னு வேல்அரி கேசரி அந்தண புகார்அனைய
ஏர்மன்னு கோதையைப் போலினி தாயிற்றிவ் வீர்ம்பொழிலே."

என்று முன் பாங்கற்கூட்டத்துச் சொன்னவாறே சென்று நின்ற தலைமகளை ஆங்குச் சொன்னவாறே சொல்லித் தலைமகன் புணர்வது. இது பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படுமாறு.

---

* 'ஓட்டிய' என்பதும் பாடம்.

1. இனியவரோடு கூடியிருந்த இடம்

† 'பருவரை' என்பதும் பாடம்.

பாங்கற்கூட்டம் நிகழின், இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழின், பாங்கற்கூட்டம் நிகழாது. என்னை?[1] அத்துணை எளியள் அல்லளாகலான். 'அஃதே எனின்,'பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலும் பாங்கனோரின் குறிதலைப் பெய்தலும்,' என்று எழுற்பாற்றுச் சூத்திரம் ; என்னை ? இடந்தலைப்பாடு தெய்வப்புணர்ச்சியோடு ஒக்குமாகலான்,' என்றூர்க்கு, [2] 'அதுவே; அங்ஙனம் சொன்னனேயெனினும், மொழி மாற்றிக் கொள்க,' என்பது. 'அது பொருந்தாது ; மொழி மாற்றுதல் என்பது செய்யுள் கிடந்தவாறு செய்யலாகாதவழிச் செய்வது. அவ்வாறு செய்யும் சூத்திரம் இனிதாய்க் கிடப்புழி மொழி மாற்றுச் சூத்திரமாகச் * சொல்ல வேண்டுமோ ?' என்பது. பெரும்பான்மையும் பாங்கனனுமென்பது சிந்திக்கும்; சிறுபான்மை விதியினனுமென்பது சிந்திக்கும். அதனால், அவன் சிந்திக்குமாற்றாலே சூத்திரம் செய்யப்பட்டது; மொழி மாற்றுச் சூத்திரம் அன்றென்பது. அல்தூஉம், உலகத்தோர் இடுக்கணுற்றால், விதியானே தீருமென்றிராரர், முன்னம் தீர்த்தற்குச் சுற்றத்தாரையும் நட்டாரையும் நினைப்பர். ஆகலானும், அவ்வாறே சொல்லப்பட்டது. 'அஃதே எனின், புறத்தார் உணர்ந்தார் உளரென்பது உணர்ந்த ஞான்று இவள் இறந்துபடும் 51
என்னும் கருத்துடையான், பிற்றை ஞான்றே சென்று பாங்கற்குணர்த்தற்பாலனே?' எனின், 'குற்றம் குணம்

1. இரண்டும் நிகழ்தற்குரிய அவ்வளவு எளியள் அல்லள் ஆகையால் (தலைவியைப் பன்முறை தமியளாயிருக்கக் காணுதல் அருமையாதலின், இவ்வாறு உரைக்கப்பட்டது.)

2. ஆசிரியன் கருத்து அதுவே. 'பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலும், பாங்கனோரின் குறிதலைப் பெய்தலும்,' என்று சொல்ல வேண்டியவற்றை முன்னும் பின்னுமாக மாற்றிச் சொன்னனையினும், மொழி மாற்றி அக்கருத்தே கொள்க. ('அக்கருத்தையே அங்ஙனம் முன்னும் பின்னுமாக மாற்றிச் சொன்னனையினும்,' என்றலுமாம்.)

* இப்பகுதி முன்னச்சுப்பிரதியில் பொருட்பொருத்தமின்றியும் பலவாறு பிறழ்ந்து கிடக்கின்றது; ஆதலின், வேறொரு பிரதி நோக்கி இங்கே பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

என்பது தெருளாது உணர்த்தும்,' என்னும் ஒருவன். அது பொருந்தாது. 'அங்ஙனம் தெருளாது உணர்த்தின், பாங்கற்கே உணர்த்தக் கடவனே? வழி போவார்க்கு உணர்த்த அமையாதோ?' என்பது. 'மற்றென்னே?' எனின், 'தான் உணர்ந்தானன்றே இவ்வொழுக்கத்தினை! தான் உணர்ந்ததனோடு ஒக்குமன்றே இவன் உணர்ந்தது! அவனைத் தன்னின் வேறல்லன் என்று கருதினமையான் அமையும்,' என்பது.

'இனி, 'பாங்கனுல் குறி தலைப்பெய்தலும்' என்று ஒருமைப்படச்சூத்திரஞ்செய்யாது,'பாங்கனோரின்'என்று பன்மைப்படக்கூறியது எற்றிற்கு? அவனொருவனுலோ?' எனின், பாங்கன் பார்ப்பானகலின், பன்மை வாசகத்தால் சொன்னுர் என்பது. அல்லதூஉம், இருமூது குரவராலும், 'இவனை எம்போல் கொண்டொழுகு,' என்று தலைமகற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் பாங்கன் என்பதூஉம், 'நீயும் எம்போலத்* தீயன கண்டு பண்பான விடத்து அடக்குவாயாக,' என்று பாங்கற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் தலைமகன் என்பதூஉம் போதரல் வேண்டி, இவ்வாறு பன்மை வாசகம்படச் சொன்னுர் என்பது. 'அஃதே எனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று இவளது வேறுபாடு கண்டு தாய் இல்செறிக்கில் என் செய்யுமோ?' எனின், பார்ப்பார் சான்ருரை முன்னிட்டு அருங்கலங்களோடு பாங்கன் சென்று வரைந்து எய்துவிக்கும். [1]'அங்ஙனம் கிடந்ததே விதி?' என்னின், அன்று; இவ்வாற்ருல் புணர்தல் முறைமையாக்கும் விதியெனில், [2]தாய்க்கு அது புலனுகாமைக்கொள்ளும் என்பது. 'அஃதே எனின், ஆயம் கழிக்கானலிடையே கொண்டு புகுதாது, மற்ருரு

---

* ஈண்டைப் பொருட்கு இன்றியமையாத இச்சொற்ருெடர் மூன் அச்சுப்பிரதியில் இல்லை.

1. 'அவ்வாறு அமைத்தது ஊழ்?' எனில், அவ்வாறு அமைந்திலது.

2. தாய்க்குத் தன் மகளின் வேறுபாடு தோன்ருமற்செய்யும்.

கானலிடமே கொண்டு புக்கவிடத்துத் தலைமகன் குறியும் பிழைக்கும்; பாங்கன் சென்ற செலவும் பிழைக்கும்; இவையெல்லாமாம் பிற,' எனின், அதுவன்று; அவ்வாறு படினும் வரைந்து புகும்; அதுவன்றிப் பிற்றை ஞான்று இக்கூட்டம் நிகழ்விப்பான் நின்ற விதி பிறிதோர் கானவிடம் கொண்டு புக உள்ளம் பிறப்பிக்குமோ என்பது. 'அஃதே எனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று பாங்கன் தலைமகனைக் கண்டு, 'எற்றினன் ஆயிற்று நினக்கு இவ்வேறுபாடு?' என்று வினவின வாறு போல, அன்றேயானும் பிற்றை ஞான்றேயானும் தலைமகளது வேறுபாடு கண்டு, 'நினக்குஇஃதெற்றினன் ஆயிற்று?' என்று தோழி வினவாமைக்குக் காரணம் என்னையோ?' எனின், தலைமகளது வேறுபாட்டை விதி தோழிக்குப் புலனுகாமைக் காக்குமென்பது. 'ஆயின், தலைமகன் மாட்டு வேறுபாட்டையும் விதி பாங்கற்குப் புலனுகாமைக் கொள்ளற்பாற்று; அன்றுகில், காரணம் கூறற்பாற்று,'எனின், விதிக்குக் காரணம் கூறற்பாற்று அன்று என்பது; காரணம் கூறினும், பாங்கற்குப் புலனுகலானுய பயனுண்டு; அக்கூட்டம் பாங்கனறிந்து வினவ முடியும். தோழி தலைமகள் மாட்டு வேறுபாடு கண்டறிந்து வினவப் பாங்கற்கூட்டம் முடியாது; தோழி தன்னல் ஆவதும் இல்லை. இது காரணம் என்பது. 'அஃதேயெனின், 'ஆங்கவிரண்டே தலைப்பெயல்,' என அமையாதோ? 'மரபு' என்றது எற்றிற்கோ?' எனின், தலைப்பெயற்கு இலக்கணம் என்றவாறு. மரபெனினும், இலக்கணம் எனினும், எல்லாம் ஒரு பொருட்பன்மொழி என்றவாறு.

ச. அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்
எவ்விடத் தானும் களவிற் கில்லை

'என்பது என்னுதலிற்றோ?' எனின், இந்நூலகத்துக் களவினது இலக்கணத்தையும் கற்பினது இலக்கணத்தையும் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

சூத்திரக் கிடக்கை நான்கு வகைப்படும்: ஆற்றொழுக்கமும் அரிமா நோக்கமும் தவளைப்பாய்த்தும் பருந்து வீழ்க்காடும் என. அவற்றுள் **ஆற்றொழுக்கு** என்னும் சூத்திரக் கிடக்கை ஆற்று நீர் தொடர்பு அறாது ஒழுகுமாறு போலச் சூத்திரங்களும் தம்முள் இயைபுபட்டு ஒழுகுவது. **சிங்க நோக்கு** என்பது, முன்னேரையும் பின்னேரையும் நோக்கும் சிங்க நோக்கம்; அது போல, இறந்ததனேடும் எதிர்வதனேடும் இயைபுபடக் கிடப்பது. **தவளைப்பாய்த்து** என்பது, தவளை பாய்கின்றுழி இடையிடை நிலம் கிடப் பப் பாயும்; அது போலச் சூத்திரம் *இடையிட்டுப்போய் இயைபு கொள்வது. **பருந்தின் வீழ்க்காடு** என்பது, தான் கருதின பொருளை எங்கானும் வீழ்ந்து கொண்டு போம் பருந்து போல இதுவும் தான் கருதி முடிக்கும் பொருளை முடித்துப்போம், இயைபின்றியே என்பது. இஃது அவற் றுள் சிங்க நோக்கு என்று கொள்க. 'என்னே காரணம்?' எனின், இறந்த பாங்கற்கூட்டத்தினையும் நோக்கி, வரு கின்ற தோழியிற்கூட்டத்தினையும் கற்பினையும் எல்லாம் நோக்கிற்று ஆகலான் என்பது.

இதன் பொருள்: அவ்வியல்பல்லது-மேற்கூறப்பட்ட இயற் கைப் புணர்ச்சி புணர்ந்த இயல்பல்லது, கூட்டக் கூடல் - ஒருவர் இடை நின்று புணர்ப்பார் உளராகப் புணர்தல், எவ்விடத் தானும் களவிற்கு இல்லை - எந்நேரத்துக்கண்ணும் களவெனப் பட்ட ஒழுக்கத்திற்கில்லை என்றவாறு.

எனவே, உலகினுள் ஒருவனேடு ஒருத்தியிடை நிக ழும் ஒழுக்கமன்று, கூட்டவும் நிகழ்ந்து, கூட்டாமையும் உலகினுள் நிகழ்தலுடைமையால்; இது புலவரால் நாட்டப் பட்ட ஒழுக்கம் என்பது அறிவிக்கப்பட்டது என்பது. 'கூட்டக்கூடல் எவ்விடத்தானும் களவிற்கில்லை,' எனவே, †'கூட்டாமைக் கூடல் கற்பினுக்கில்லை,' என்பதாம். தலை மகன் உலாப்போயின இடத்துப் பரத்தையர் மாட்டுப்

* 'இடை விட்டுக் கொள்வது' என்பதும் பாடம்.

† இங்கே முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம் பொருட்கு இயை பில்லதாயிருக்கின்றது.

பிரிந்தானென்று கருதி, ஒரு சிவப்புண்டாம். அச்சிவப்பு நீக்கி வாயில்கள் கூட்டவே கூடும் என்பது. 'அஃதே எனின், இஃதன்றே நெடுந்தொகைப் பாட்டினுள் *'கூர்முள் முள்ளி' கூட்டாமற் கூடிற்று?' எனின், அதுவும் கூட்டவே கூடிற்று என்பது. 'ஆயின், எவ்வாயிலால் கூடினனே?' எனின், ஆற்றுமை வாயிலால் கூடினன். கூடினவாறு அதனுரையகத்துக் கண்டுகொள்க. 'அஃதே எனின், களவினுள் 'கூட்டக் கூடலில்லை,' என்றது எற்றுக்கோ? அங்கு ஆற்றுமை கூட்டக் கூடுப என்னுமோ?' எனின், அங்கு ஆற்றுமை கூட்டுமே எனினும், வாயில் இலக்கணமின்று; இங்கு வாயில் இலக்கணம் உடைத்து; என்னை? 'வாயில்களும் அவளது பொறுமை நீக்குவது அன்றே செய்வது? இதுவும் அவளது பொறுமை நீக்கினமையின், அமையாதோ?' எனின், அமையாது; இங்கு வாயில் இலக்கணமுடைத்தாகலின், அமையும் என்பது.

'அவ்வியல்பல்லது கூட்டக்கூடல் களவிற்கில்லை,' என அமையாதோ?'எவ்விடத்தானும்' என்றது என்னை?' எனின், உணர்த்த உணர்தல் ஓரிடத்து உண்டு என்றற்குச் சொல்லினர். 'யாருணர்த்த உணர்பவோ?' எனின், தோழி உணர்ந்தமை தலைமகன் உணர்த்தத் தலைமகள் உணரும் என்பது. அஃது ஆமாறு :

பகற்குறி வந்தொழுகாநின்ற தலைமகன் புணர்ச்சி இறுதிக்கண் ஒருகால் தலைமகளைக் கோலம் செய்தான். செய்ய, அவள் இறப்ப நாணினள். நாண, தலைமகன் கருதுவான்: 'யான் செய்கின்றது இயற்கைக் கோலமல்லது [1]போலும் என்னும் இவள் வேறுபடுகின்றது,' என

---

* அகம். செய். 26.

1. ஈண்டுப் 'போலும்' என்பது உரையசையாய் நின்றது. இஃது ஒப்பில் போலி எனப்படும்.

'ஒப்பில் போலியும் அப்பொருட் டாதும்'

(தொல். சொல். இடை. சூ. 30.)

என்னும் சூத்திர உரையை நோக்குக. போலும் என்பது உவமை இன்றி வருமிடங்களிலெல்லாம் உரையசையாகவே கொள்ளப்படும்.

உணர்ந்து, அவளை ஆற்றுவித்தற்கு, 'நின் தோழி செய்யுமாறே கோலம் செய்தேன்,' எனச் சொல்லும். சொல்ல, 'ஒக்கும்; [1]இவர் என் தோழியொடு தலைப்பெய்துடையர் போலும்!' என உணர்வாளாவது.

'அவ்வாறு உணர்ந்தாள் பெருநாணினள் ஆதலின், இறந்துபடாளோ?' எனின், இறந்துபடாள், இவளைத் தன்னின் வேறன்றிக் கருதுமாகலின். 'வேறன்றி உணரின், இவ்வொழுக்கந்தன்னை உணர்த்த அமையாதோ?' எனின், உணர்த்தாள், 'யான் [2]காவல் குற்றப்பட்டேன்!' எனத் தோழி கவலுமாகலின். *'தலைமகன் உணர்த்தியதனால் பயன் என்னை?' எனின், நெடுங்காலம் ஒழுகக் கருதுவான், 'யான் பிரிந்த பொழுது இவளை ஆற்றுவித்துக் கொண்டிருக்கும்,' என்பதனானும், 'மேல் தான் ஒரு நாள் இதனை அறியும்; அறிந்தக்கால் கதுமென ஆற்றாளாங் கொல்லோ!' என்பதனானும், 'இவ்வாறுணர்த்த ஆற்றுதற்குக் காரணமாம்,' என்பதனானும் உணர்த்தும். இது பொருந்தாது என்ப ஒரு சாரார்; என்னை? பகற்குறிக்கண் இது நிகழுந்துணையும் நடவாது. இவ்வகை வந்த சான்றோர் செய்யுளும் இல்லை. ஆகலான், 'எவ்விடத்தானும் இல்லை,' என்பது, நன்று மறுத்தற்குச் சொல்லப்பட்டதாம்; மிகையன்று என்பது. இனி, ' 'கூட்டக்கூடல் களவிற் கில்லை,' என்றிரால், பாங்கற்கூட்டம் தோழியிற்கூட்டம் என்று பேரிட்டது எற்றிற்கோ?' எனின், அவர் துணையாயினமையின், அவ்வாறு சொல்லப்பட்டது. 'துணையாயினரைக் கூட்டினர் என்னுமோ?' எனின், என்னும்; கூடும் இருவரும் அக்கருத்தினர் அல்லர் ஆகலான் என்பது.

---

1. 'இவர் என் தோழியைக் கண்டிருக்கின்றார்,' என்று கருதுவாள். [உணர்வாளாவது—கருதுவாளாதல் உண்டாம்.]

2. 'தலைவியைப் பாதுகாத்தலில் தவறிவிட்டேன்!' என்று கவலை அடைவாள்.

* பொருட்கு இன்றியமையாத இச்சொற்றொடர் மூன் அச்சுப் பிரதியில் இல்லை.

நு. புணர்ந்த பின்றை ஆங்ஙனம் ஒழுகாது
பணிந்த மொழியால் தோழி தேஎத்
திரந்துகுறை யுறுதலும் கிழவோன் மேற்றே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், 'பாங்கனுன் ஆதல், தமியாளை இடத்தெதிர்ப்பட்டாதல் புணர்ந்த தலைமகன், 56
தான் பின்னைத் தெருண்டு வரைதல் தலை; அல்லாது விடின், இவ்வாறொழுகும்,' என்று அவனொழுகும் திறம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: புணர்ந்த பின்றை - பாங்கனுனும் தமியாளை இடத்தெதிர்ப்பட்டானும் புணர்ந்த பின்றை, ஆங்ஙனம் ஒழுகாது-பிற்றை ஞான்றும் அப்பெற்றியே ஒழுகாது, பணிந்த மொழியால் - இழிந்த சொற்களான், (இழிந்த சொல்லென்பது ஒலி வாய்பாட்டு இன்மை நோக்கிப் பணிந்த மொழி எனப் பட்டது. பணிந்த மொழியாமன்றே,'இத்தழை நல்ல; இக்கண்ணி நல்ல,' என்று இங்ஙனம் கையுறை பாராட்டிச் சென்று நிற்றல்? தனக்குத் தகாதன்றே? இழிந்தார்க்கன்றே அஃதுரியதென்பது.) தோழி தேஎத்து - தோழி மாட்டு, இரந்து குறையுறுதலும் கிழவோன் மேற்றே - இரத்தலும் குறையுறுதலும் செய்து நிற்றல் தலைமகற்கு உரித்து என்றவாறு.

இரத்தலென்பது,குறையுடையார் செய்யும் செய்கை செய்து ஒழுகுவது. குறையுறுதல் என்பது, இக்குறை 71
இன்றியமையான் என்பதுபடப் பசைந்து ஒழுகுதல்; 'அஃதே எனின், அவளால் இக்குறை முடியுமென்றிரக்குமோ, முடியாதென்றிரக்குமோ?' எனின், முடியுமென்றிரக்குமே எனின், இவளை இகழ்ந்து மதித்தானும்; தோழியென்பாள் குற்றேவல் மகள், அவளால் எய்தலாமென்று கருதினமையான் என்பது. இகழ்ந்து மதிப்பவே, 'அருமையும் பெருமையும் காவலும் உடையாள், இவளை எத்திறத்தானும் எய்துவதரிது,' என்று கருதி 54
னன் என்பதனெடு மாறுகொள்ளும் என்பது. இனி, 'முடியாதென்றிரக்குமே?' எனின், இரத்தலானே பயம் இன்று. *ஒருவரால் ஒரு கருமம் ஆகாமை அறிந்தே

* 'ஒரு கருமம் ஆகாமையறிந்தே அதன்கண் முயல்வார் தெறி அறியாதாரன்றே' என்பது,' என்பதும் பாடம்.

அவருழைச்சென்று அக்கருமத்திற்கு முயல்வார் நெறி அறியாதாரன்றே என்பது. 'மற்றென்னே?' எனின், முடியும் முடியாதென்று சீர் தூக்கிக்கொண்டு இரப்பானல்லன், தனதாற்றுமை மீதூரப்பட்டிரக்கும் என்பது. 'அஃதே எனின், இவளால் முடியும் முடியாதென்று கருதாளுகலான், பிறரானும் முடியும் முடியாதென்று கருதாளுகல் வேண்டும்; ஆகலான், பிறரையும் இரக்க அமையாதோ?' எனின், அதுவன்று; இது முடியுஞான்று இவளாலே முடிவதாய்க் கிடந்தது ஆகலான், அவ்விதி இவளுழையே செல்லும் உளம் பிறப்பிக்கும் என்பது. அதுவன்றே உலகத்தார்க்குப் பண்பின் வழியே *ஊக்கம் நிகழும் என்பது?

'இவள் எப்பெற்றி கருதுமோ இதனை?' எனின், ஐயப்பட்டு நிற்கும். 'இவன் ஒரு குறையுடையான் போலும், அக்குறை இன்றியமையான்; அஃதென்மாட்டதென்று கருதுவேனையின், இறப்பப் பெருந்தன்மையனுகலின், இறப்பச் சிறியேனுழை வேண்டும் கருமம் இலன் அன்றே! அதனால், என்கண்ணது எனவுமாகாது; யாரறிவார்! சிறியாரால் பெரியார் முடிக்கும் கருமங்களுமுள. அதனால், என்கண்ணது என்பதன்கண்ணும் ஐயமேயாம். இனி, எம்பெருமாட்டிகண்ணதென்று கருதுவேனையின், அவளொருவரால் சுட்டவும் சொல்லவும்படும் தன்மையள் அல்லளாகலான், அவள்கண்ணதென்றும் கருதலாகாது. யாரறிவார்! இவர்தாமும் அவள் துணைப் பெருந்தன்மையராகலான், 'அவள்கண்ணதுகொல்லோ!' எனவும் ஐயமேயாம். இனி, 'இவ்வாயத்துள் ஒருவர்கண்ணதேகொல்லோ!' எனவும் ஐயமேயாம். பேராராய்ச்சியளாகலான், கதுமெனத் துணியாளன்றே ஒன்றன் திறத்து? இனி அருள் காரணமாகக்கொல்லோ இத் தழையும் கண்ணியும் கொண்டு வருவது எனவும் ஆகாது. ஆற்றுத இயல்பினனுய் வருமாதலான், இதன்கண்ணும்

* 'ஒழுக்கம் நிகழுமென்பது,' என்பதும் பாடம்.

ஐயமேயாம்,' என்பது. அதற்குச்செய்யுள் *'மூன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்' என்னும் சூத்திரத்துள் காட்டுதும். 'அஃதே எனின், இவளை அவட்குச் சிறந் தமை அவன் அறியுமாறு என்னை? பிறர் சொல்லினுரும் இல்லையாலோ?' எனின், அறிந்தானன்றே! இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னைத் தன்னை அவள் *காணு மைத் தான் அவளைக் காண்பதோர் அணிமைக் 57
கண் நின்றுன். நின்றுனுக, மற்றையோரெல்லாம் தலை மகட்குச் செய்யும் வழிபாடும், இவள் விசேடத்தால் செய்யும் வழிபாடும், எல்லார்க்கும் தலைமகள் செய் யும் அருளிச்செய்கையும், இவட்கு விசேடத்தால் செய்யும் அருளிச்செய்கையும் கண்டமையான், 'இவ ளாம் அவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பு,' என்பதனை உணர்ந்தான். உணர்ந்தமையான், இவளுழையே செல்லும் என்பது. 'அஃதே எனின், இவளுழைச் செல்கின்றுயங்கள் ஐயுறுவோ?' எனின், ஐயுறு. 'எங்ஙனம் ஐயுறுதவாறு?' எனின், தழையும் கண்ணியும் கோடற்பொருட்டாக † வேறுரிடத்துத் தனியளாய் நின்ற நிலைமைக்கண் செல்லும் என்பது. 'இவள் இன்னணம் தனியளாய் நிற்பது அறிந்து செல் லுமோ?' எனின், செல்லான்; விதி கொண்டு சென்று தலைப்படுக்கும் என்பது.

'அஃதேயெனின், 'இரந்துறுதல் கிழவோன் மேற் றே,' என்னது, 'குறையுறுதல்' என்றது எற்றிற்கோ?' 7
எனின், இரத்தல் என்பது, குறையுடையார் செய்யும் செய்கை செய்து ஒழுகுதல்; குறையுறுதல் என்பது, 'இக் குறை இவனின்றியமையான்,' என்பதுபடப் பசைந்து ஒழுகுவது. 'அஃதே எனின், 'இரந்து குறையுறுதல்' என அமையாதோ? 'இரந்து குறையுறுதலும்' என்று

---

* களவியல், சூ. 7.

† 'வேறுரிடத்தினளாய் நின்ற நிலைமைக்கண் செல்லும் என் பது; அஃதேயெனின், இவள் அந்நிலையளாய் நிற்கும் நிலைமையறிந்து,' என்பதும் பாடம்.

உம்மை கொடுத்தது எற்றிற்கோ?' எனின், தெருண்டு வரைதல் சிறப்புடைத்து; தெருளாது ஒழுகில், இவ்வாறு ஒழுகுதல் என்பதற்குச் சொல்லப்பட்டது.

இனி, ஒரு சாரார் சொல்லுவது: புணர்ந்த பின்றை என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்றை என்ற வாறு.'ஆங்ஙனம் ஒழுகாது,'என்பதற்கு,'பாங்கனுனும் தமியாளை இடத்து எதிர்ப்பட்டானும் புணர்ந்தொழுகாது தோழியை இரந்து பின்னிற்றற்கண்ணே முயலும்,' என் பாரும் உளர். அது பொருந்தாது. 'என்னை காரணம்?' எனின், தன் பாங்கன் தனக்குச் சிறந்த துணை, அவள் பாங்காய தோழி சிறக்குமாறு உண்டோ என்பதனன். அப்பொழுது அவளை நினையான், தன் பாங்கனையே நினைக்கும் என்பது,

சூ. இரந்துகுறை யுறுது கிழவியும் தோழியும்
ஒருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கும் உரியன் என்ப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், 'மதியுடம்படுக்கும் திறனிது,' என்பது உணர்த்துதல் நுதலிற்று. 'மேற்சூத்திரத்தினோடு இதற்கு இயைபென்னையோ?' எனின், மேற் பணிந்த மொழியால் தோழியை இரந்து பின்னிற்கும் எனப்பட்டது. அங்ஙனம் இரந்து பின்னின்றவிடத்து, 'எத்திறத்துக்கொல்லோ இவனுடைய குறை!' என்று ஐயப்பட்டு நிற்பதல்லது, இன்னதென்று உணராளன் றே! உணராமையால், 'என் குறை இன்னது என்றறிவித்து இரந்து பின்னிற்பன்,' என்னும் கருத்தினால், இது செய்யும் என்பது மேற்சூத்திரத்தோடு இயைபு.

இதன் பொருள்: இரந்து குறையுறுது - இரந்துவைத்துக் குறையுறவு தோன்றுமை, கிழவியும் தோழியும் - (கிழவி எனப்படுவாள் தலைமகள்; தோழி எனப்படுவாள் செவிலித்தாய் மகள்; என்னை? *'தோழி தானே செவிலி மகளே,'

* தொல். பொருள். களவியல், சூ. 34.

என்றாராகலின்) அவ்விருவரும், ஒருங்கு - ஓரிடத்தராதல், தலைப் பெய்தல் - கூடியிருத்தல், செவ்வி நோக்கி - அன்னதோர் பதம் நோக்கிச் சென்று நிற்றல், (அங்ஙனம் நிற்பாற்கு ஒரு சொற்பதி கால் முறைமை வேண்டும்): பதியும் பெயரும் பிறவும் வினவுதல்- பதி வினவுதலென்பது, 'எவ்வூரீர்?' என்பது; பெயர் வினவுதலென் பது, 'என்ன பெயரீர்?' என்பது; பிற வினவுதலென்பது, 'இங்கே சில †மா போந்தன வுளவே? இலையர் போந்தார் உளரே? யாணர் போந்தன வுளவே?' ‡ என்றித்தொடக்கத்தன வினவுதல்.

அதற்குச் செய்யுள் :

பதியும் பெயரும் வினவுதல்

$ "நீரின் மலிந்தசெவ் வேல்கெடு மாறன்நெல் வேலிஒன்னார்
போரின் மலிந்தவெந் தாணை உரங்கொண்ட கோன்பொதியில்
காரின் மலிந்தபைம் பூம்புனம் காக்கின்ற காரிகையீர் !
ஊரின் பெயரும்தம் பேரும் அறிய உரைமின்களே." (நிச)

"நீதியின் கிழவன் நிலமகள் கேள்வன்நெல் வேலிஒன்னார்
கதியின் மலிந்தவெம் மாவும் களிறும் கவர்ந்துகொண்டான்
பொதியில் மணிவரைப் பூம்புனம் காக்கும் புனையிழையீர் !
பதியின் பெயரும்தம் பேரும் அறியப் பகர்மின்களே." (நிநி)

"அறையார் கழல்மன்னர் ஆற்றுக் குடியமர் சாய்ந்தழியக்
கறையார் அயில்கொண்ட கோன்கொல்லிக் கார்ப்புனம் காக்கின்றவான்
பிறையார் சிறுநுதல் பெண்ணீர் அமிழ்தன்ன பெய்வளையீர்!
மறையா துரைமின் எமக்குந்தம் பேரொடு வாழ்பதியே." (நிசு)

"கறையின் மலிந்தசெவ் வேல்வலத் தால்தென் கடையல்வென்ற
அறையும் கழல்அரி கேசரி அந்தண் புகார்அனைய
பிறையின் மலிந்த நுதல்பேர மர்க்கண் மடவீர்!
உறையும் பதியும்தம் பேரும் அறிய உரைமின்களே." (நிஎ)

'பிறவும்' என்றதனால் இவையும் சொல்லிச் சென்று நிற்கும். அவையிற்றிற்குச் செய்யுள்,

† 'மான் போந்தன வுளவே?' என்பதும் பாடம்.

‡ 'மயில் போந்தன வுளவே? நாய் போந்தன வுளவே?' என்பவும் வேறோர் எட்டுப்பிரதியிற்காணப்படுகின்றன.

$ இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது.

வேழம் விளைதல்

"வருமால் புயல்வண்கை மான்தேர் வரோதயன் மண்ணளந்த
திருமா லவன்வஞ்சி அன்ன அம் சீறடிச் சேயிழையீர்!
கருமால் வரையன்ன தோற்றக் கருங்கைவெண் கோட்டசெங்கண்
பொருமால் களிறொன்று *போந்ததுண் டோநும் புனத்தயலே?"

1"கண்ணுற் றெதிர்ந்ததெவ் வேந்தர் படக்கடை யல்கொடிமேல்
விண்ணுற்ற கோள்உரும் ஏந்திய வேந்தன் வியன்பொதியில்
பண்ணுற்ற தேமொழிப் பாவைநல் லீர்!ஓர் பகழிமூழ்கப்
புண்ணுற்ற மாவொன் றுபோந்ததுண் டோநும் புனத்தயலே?"(நிகூ)

"முடியுடை வேந்தரும் மும்மத யானையும் மொய்யமருள்
பொடியிடை வீழத்தென் பூலந்தை வென்றொன் புகார்அனைய
வடிவுடை வேல்நெடுங் கண்மட வீர்!நுங்கள் வார்புனத்தில்
பிடியொடு போந்ததுண் டோவுரை யீர்ஓர் பெருங்களிறே." (சுo)

கலைமான் விளைதல்

"சினமாண் கடற்படைச் சேரலன் தென்னறை யாற்றுவந்து
மனமாண் பழியவை வேல்கொண்ட கோன்வையை நாடனைய
கனமாண் வனமுலைக் கையார் வரிவளைக் காரிகையீர்!
இனமான் புகுந்தது வோஉரை யீர்நும் இரும்புனத்தே." (சுசு)

"சிலைமாண் படைமன்னர் செங்நிலத் தோடச் செருவிளைத்த
கொலைமாண் அயில்மன்னன் தென்புனல் நாடன்ன கோல்வளையீர்!
இலைமாண் பகழியின் ஏவுண்டு தன்னினத் திற்பிரிந்தோர்
கலைமான் புகுந்ததுண் டோஉரை யீர்நுங்கள் கார்ப்புனத்தே." (சுஉ)

வழி விளைதல்

"வெல்லும் திறம்நினைந் தேற்றூர் விழிஞத்து விண்படரக்
கொல்லின் மலிந்தசெவ் வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலின்தேன்
புல்லும் பொழில்இள வேங்கையின் சீழ்நின்ற பூங்குழலீர்!
செல்லும் நெறிஅறி யேன்உரை யீர்நும் சிறுகுடிக்கே." (சுஙூ)

---

* 'போதருமோ' என்பதும் பாடம்.

1. 'கண்ணுற் றெதிர்ந்த', 'முடியுடை வேந்தரும்' என்னும் தொடக்கத்தினையுடைய இவ்விரு செய்யுட்களும் முன் அச்சுப் பிரதியில், 'தன்னும் புரையும்' என்னும் தொடக்கச் செய்யுளின் பின் அமைந்துள்ளன.

மொழி பெறுது கூறல்

"தன்னும் புரையும் மழையுருமும் ஏறுதன் தாணிழன்னல்
தன்னும் கொடிமிசை எந்திய கோன்கொல்லிச் சூழ்பொழில்வாய்
மின்னும் கதிரொளி வாள்முகத் தீர்!என் வினவுரைத்தால்
மன்னும் சுடர்மணி போந்துகு மோதுங்கள் வாயகத்தே?" (சூச)

என்பன கொள்க.

புதுவோன் போல-எஞ்ஞான்றும் அந்நிலத்துச் சென்றறியாதானும் அவரைக் கண்டறியாதானும் போல, பொருந்துபுகிளந்து-அந்நிலத்திற்கும் அவரை வினுதற்கும் பொருந்துவன சொல்லி, மதி உடம்படுத்தற்கும் உரியன் என்ப-(மதியென்பது, அறிவு;) அவ்வறிவினை ஒருப்படுத்தற்கும் உரியன் என்றவாறு.

'யார் அறிவையோ?' எனில், தோழி அறிவை எனக் கொள்க. அவளது அறிவினை ஒருப்படுக்கும் எனவே, முன் கவர்ந்தமை பெற்றாம். 'எங்ஙனம் கவர்ந்ததோ?' எனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த ஞான்று [1]முதற் கொண்டு கண் சிவந்து நுதல் வேறுபட்டுக் காட்டிற்று; 'இவட்கு இவ்வேறுபாடு தெய்வத்தினன் ஆயிற்றுக் கொல்லோ!' எனவும், *'மக்களினன் ஆயிற்றுக் கொல்லோ!' எனவும், இனி, இவனும் அது [2]முதற் கொண்டு தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலை முனியாது இரந்து பின்னிற்கின்றான்; 'இவனுடைய குறை யார்மாட்டது கொல்லோ!' எனவும் [3]எனக்கொள்க. அங்ஙனம் கவர்ந்த தோழி, 'இவள் வேறுபட்டது இவன் காரணமாகப் போலும்! இவன் இரந்து பின்னின்றது இவள் காரணமாகப் போலும்!' என [4]ஒருங்கு கண்ணி, வேறாக வகுத்துணரும் என்பது. அதற்குச் செய்யுள்,

---

1, 2. 'தற்கொண்டு' என்பது மூன் பதிப்பிலுள்ள பாடம்.

* இச்சொற்றொடர் மூன் அச்சுப் பிரதியிலில்லை; வேறோர் எட்டுப் பிரதியிற்கண்டது.

3. 'எனவும், எனவும், எனவும் அவளது அறிவு (தோழியின் அறிவு) கவர்ந்தது எனக் கொள்க,' என்பது. ஈண்டுக் கவர்தல் என்றது தோழி ஐயங்கொண்டு உணர்தலை.

4. அவற்றை ஒன்றாக வைத்து எண்ணிப் பிறகு அவற்றை வெவ் வேறாகப் பகுத்து ஆய்வாள் தோழி என்பது.

இருவர் நினைவும் ஒரு வழி உணர்தல்

"விரையா டியகண்ணி வேந்தன் விசாரிதன் கொல்லிவிண்தோய்
வரையா டியபுனம் காவலும் மானின் வழிவரவும்
நிரையா டியகுழ லாட்டும் இவற்கும் நினைப்பின் இல்லை;
உரையா டுவர்கண்ணி னைன்;உள்ளத் துள்ளதும் ஒன்றுளதே!"

"பொருங்கண்ணி சூடிவந் தார்படப் பூலந்தைப் பொன்முடிமேல்
இருங்கண்ணி வாகை அணிந்தான் பொதியில் இரும்பொழில்வாய்
மருங்கண்ணி வந்த சிலம்பன்தன் கண்ணும்இவ் வாள்நுதலாள்
கருங்கண்ணும் தம்மில் கலந்ததுண் டாம்இங்கொர் காரணமே."

என இத்தொடக்கத்தன கொள்க.

'அஃதே எனின், 'இரந்து குறையுறுது கிழவியும் தோழியும் தலைப்பெய்த செவ்வி நோக்கி,' என அமையாதோ? 'ஒருங்கு' எனல் வேண்டியது என்னை?' களவு காலத்துத் தலைமகன் தேரொடும் * மருங்கு செல்ல அமையும் என்றதற்கு வைத்தார்; என்னை? சான்றோர் செய்யுளுள் அங்ஙனம் வந்தது ஆகலான். அதுவருமாறு:

† "நேர்ந்தகம் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய் வாழி கடலோதம்!
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய் போல்தீர்ந் திலையால் வாழி கடலோதம்!"

என்றித்தொடக்கத்தன எனக் கொள்க. ''மதியுடம் படுத்தற்கும் உரியன்,' என்ற உம்மை யாதோ?' எனின், வரைந்தெய்துதல் மிக்கதே என்பது போதர ஆங்ஙனம் உரைத்தார்.

எ. முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென்
றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தோழி உணர்ச்சியைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'ஒருங்கு' என்பதும் பாடம்.

† சிலப்பதிகாரம், கானல் வரி, செய். 36.

இதன் பொருள்: முன்னுற உணர்தல்–இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று அவள் கண் சிவப்பும் நுதல் வேறு பாடும் கண்டு கரவு நாடி உணர்வது.

'எங்ஙனம் உணருமோ?' எனின், [1]'எம் பெருமாட்டிக்குப் பண்டைத் தன்மைத்து அன்மை இவ்வேறுபாடு; *இஃது எற்றினன் ஆயிற்று? சொல்லு நீ,' என்னும். என, 'நெருநல் நின்னை நீங்கி மேதக்கதோர் சுனை கண்டு நெடுங் காலமும் ஆடினேற்கு ஆயிற்று ஆகாதே கண் சிவப்பும் நுதல் வேறுபாடும்?' என்னும். என, 'என்னை! சுனையாடினர்க்கெல்லாம் [2]இக்காரிகை நீர்மை பெறலாம் எனின், யானும் அதுவே செய்து காணேனே!' என்னும். அதற்குச் செய்யுள்:

சுனையாடல் கூறி நகைத்தல்

"தேர்மன்னு வாள்படை செங்கிலத் தோடச் செருவிளைத்த
போர்மன்னன் தென்னன் பொதியில் புனமா மயில்புரையும்
ஏர்மன்னு காரிகை எய்தலுண் டாம்எனின் யானும்நின்போல்
நீர்மன்னும் நீல நெடுஞ்சுனை ஆடுவன் நேரிழையே!" (சுனை)

"புண்டாம் அருநிறத் துற்றுத்தென் பூலந்தைப் போர்மலைந்த
ஒண்டார் அரசர் குழாமுட னேஒளி வானடையக்
கண்டான் பொதியில் மயிலன்ன காரிகை எய்தல்நின்போல்
உண்டாம் எனில்தையல்! யானும்சென் றாடுவன் ஒண்சுனையே."

[3]"பையுள் மாலைப் பழுமரம் படரிய
கொல்வுப்பறை வாவல் நோன்சிறை ஏய்க்கும்
மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்
திடுகுகவுள் மடப்பிடி எவ்வம் கூர
வெந்திறல் ஆளி வெரீஇச் சுற்றின்
பொரியரை மிளிர்க் குத்தி வான்கேழ்
உருவ வெண்கோ டியக்கொண்டு கழியும்

---

1. எம் பெருமாட்டியாகிய உனக்கு

* இவ்விருந்து ஏழு வரிகளில் ஏட்டுப்பிரதியை நோக்கிப் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

2. இவ்வழகின் தன்மை

3. தொல். பொருள். களவியல், சூ. 23. நச். உரை.

கடுங்கண் யானை காலுற ஒற்றலின்
கோவா ஆரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
* பேஎம் நாறும் தாழ்நீர்ப் பனிச்சுனை
கோனேர் எல்வளை தெளிர்ப்ப நின்போல்
யானும் ஆடிக் காண்கோ தோழி!
வரைவயிறு கிழித்த நிழல்திகழ் நெடுவேல்
திகழ்பூண் முருகன் தீம்புனல் அலைவாய்க்
கமழ்பூம் புறவில் கார்பெற்றுக் கலித்த
ஒண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே.''

எனக் கேட்டுத் தலை சாய்த்து நிலம் கிளையாநிற்பப் புணர்ச்சி உண்டென்று உணர்ந்துகொள்வாள் ஆவது.

'பிறைதொழுக,' என்றல்

அல்லதூஉம், அங்ஙனம் வேறுபாடு கண்டு ஐயுற்று நின்றாள், அந்தி வான் கண் செங்கோட்டு மதர்வைக் குழவித் திங்களைக்கண்டு தான் தொழுது, 'நீயும் தொழுதுகாண்,' என்னும். அதற்குச் செய்யுள்:

''நீரும்மால் அகலம்செஞ் சாந்தணிந் தன்னசெவ் வான்முகட்டுக்
கருமா மலர்க்கண்ணி கைதொழத் தோன்றிற்றுக் காண்வந்தொன்னார்
செருமால் அரசுகச் செங்கிலத் தட்டதென் தீந்தமிழ்நர்
பெருமான் தனது குலமுதல் ஆய பிறைக்கொழுந்தே.'' (சூகூ)

1''முன்னும் தொழத்தோன்றி முள்ளெயிற்றாய்! அத்திசையே
இன்னும் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போல்
பெருகொளியால் மிக்க பிறை.''

எனக்கேட்டுத் தலைமகள் தொழாதே நிற்கும், கற்பழியும் என்பதனால்; அது கண்டு புணர்ச்சி உண்மை அறிந்துகொள்ளும் என்பது. அஃதன்றி, அவளை வரையணங்காகவும் சொல்லும். அதற்குச் செய்யுள்:

வேறுபடுத்துக் கூறல்

* 'பாலி னலும்' என்பதும் பாடம்.

1. தொல். பொருள். களவியல், சூ. 28. நச். உரை.

"மண்டான் நிறைந்த பெரும்புகழ் மாறன்மந் தாரம்என் னும்
தண்டா ரவன்கொல்லித் தாழ்சுனை ஆடிய தானகன்றுள்
ஒண்டா மரைபோல் முகத்தவள் நின்னை டுருவம்ஒக்கும்
வண்டார் குழலவள் வந்தால் இயங்கு வரையணங்கே!" (எ0)

இங்ஙனமும் சொல்லும்:

புணர்ச்சி உரைத்தல்

"ஆணெடுந் தாணையை ஆற்றுக் குடிவென்ற கோன்பொதியில்
சேணெடுங் குன்றத் தருவினின் சேவடி தோய்ந்தகில்லை;
வாணெடுங் கண்ணும் சிவப்பச்செவ் வாயும் விளர்ப்ப வண்டார்
தாணெடும் போதவை சூட்டவற் றேஅத் தடஞ்சுனையே?" (எக)

[1] இவை நாண நாட்டம்.

இனி நடுங்க நாடுமாறு: 'நம் புனத்துள் உதிரம் அளைந்த கோட்டது ஓர் களிறு கண்டேன்!' என்னும. அதற்குச் செய்யுள்:

நடுங்க நாட்டம்

"கலவா வயவர் களத்தூர் அவியக் கணைபுதைத்த
*குலவார் சிலைமன்னன் கோன்நெடு மாறன்தென் கூடல்அன்ன
இலவார் துவர்வாய் மடந்தை!நம் ஈர்ம்புனத் தின்றுகண்டேன்
புலவார் குருதி அளைந்தவெங் கோட்டோர் பொருகளிறே."(எஉ)

"போருதிவ் வுலகமெல் லாம்பொது நீக்கிப் புகழ்படைத்தல்
கருதிவந் தார்உயிர் வான்போய் அடையக் கடையல்வென்ற
பருதி நெடுவேல் பராங்குசன் கொல்லிப்பைம் பூம்புனத்துக்
குருதிவெண் கோட்டது கண்டேன் மடந்தையொர் குஞ்சரமே."

[2] "பண்டிப் புனத்துப் பகலிடத் தேனஞள்
கண்டிக் களிற்றை அறிவன்மற் - றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணுய்!
உதிரம் உடைத்திதன் கோடு."

---

1. ஈண்டு 'இவை' என்றது, சுனையாடல் கூறி நகைத்தல், 'பிறை தொழுக,' என்றல், வேறுபடுத்துக் கூறல், புணர்ச்சி உரைத்தல் என்னும் இவற்றை.

* 'கொலையார் சிலை' என்பதும் பாடம்.

2. தொல். பொருள். களவியல், சூ. 23. நச். உரை.

அது கேட்டு, 'பல்காலும் இவ்விடத்து வந்து இயங்குவான் எம் பெருமானுதலான், அவனைக் கள்ளிறு ஏதம் செய்ததுகொல்லோ!' என்று நடுங்கும். அது கண்டு, கூட்டம் உண்மை உணரும். அது பொருந்தாது. நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்திணையிலக்கணம் அன்று என்க. என்னை?

"நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேஎத்து"

என்பதாகலான். அல்லதூஉம், இவள் பெருநாணினள் ஆகலானும் பேரச்சத்தினள் ஆகலானும் இறந்துபடுமாகலான், அவள் ஏதத்திற்குக் கவலாள் ஆயினுமாம்; அல்லதூஉம், அவனை அவமதித்துக் கருதினுமாம்; அவளது குறிப்பறியாது உரைத்தமையான், ஆசாரம் அறியாளுமாம் என்பது. இக்குற்றமெல்லாம் தங்கும். அவ்வகை உரைப்பார்க்கு.

'மற்றென்னே உரை?' எனின், முன்னுறவுணர்தல் என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னை, அவளது வேறுபாடு 'தெய்வத்தினுன் ஆயிற்றுக்கொல்லோ, மற்றொருவாறு ஆயிற்றுக்கொல்லோ!' என ஐயுற்றுநிற்பது. அதற்குச் செய்யுள்:

வாட்டம் வினுதல்

"கந்தார் அடிகளி யானைக் கழல்நெடு மாறன்கன்னிக்
கொந்தா டிரும்பொழில் வாய்ப்பண்ணை ஆயத்துக் கோலமென்பூம்
பந்தா டலினிடை நொந்துகொல் பைங்குழல் வெண்மணல்மேல்
வந்தா டலின்அடி நொந்துகொல் வாள்நுதல் வாடியதே!" (எச)

"போருந்திய பூந்தண் புனல்தான் குடைந்துகொல் பொற்கயிற்றுத்
திருந்திய ஊசல்சென் றூடிக்கொல் சேவூர்ச் செருஅடர்த்த
பருந்திவர் செஞ்சுடர் வென்வேல் பரங்குசன் *பற்றலர்போல்
வருந்திய காரணம் என்னைகொல் லோமற்றிவ்வாள்நுதலே!" (எடு)

இனி, 'குறையுற உணர்தல்' என்பது, அவன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலை முனியாது

* 'தன்பகைபோல்' என்பதும் பாடம்.

நிற்ப, 'ஒக்கும்; இவன் இரந்து பின்னின்றது அவள் காரணமாகப்போலும்!' என உணர்வது. அது பொருந்தாது அன்றே? யாரானுமொருவர் தன்னுழை ஒருகுறையுடையராய்ச் சென்றவிடத்து அவள் கண்ணதென்று கருதுவாள் ஆயின், அவளை அவமதித்துக் கருதினுமாம்; அவளது பெருமையொடும் மாறுகொள்ளும் என்பது. 'மற்றுஎன்னே குறையுற உணருமாறு?' எனின், 'இவன் இரந்து பின்னிற்கின்றது எற்றிற்குக்கொல்லோ!' என உணர்வதாயிற்று. அதற்குச் செய்யுள்:

குறையுற உணர்தல்

"மழையும் புரைவண்கை வானவன் மாறன்மை தோய்பொதியில்
வழையும் கமழும் மணிநெடுங் கோட்டுவண் சந்தனத்தின்
தழையும் விழைதகு கண்ணியும் ஏந்திஇத் தண்புனத்தில்
தழையும்; *பிரியல் உருன்;அறி யேன் இவன் உள்ளியதே!"(எசு)

"திண்பூ முகைநெடு வேல்மன்னர் சேவூர்ப் படமுடிமேல்
தண்பூ மலர்த்தும்பை சூடிய தார்மன்னன் கேரியென்னும்
வண்பூஞ் சிலம்பின் வரைப்புனம் நீங்கான் வரும்;சுரும்பார்
ஒண்பூந் தழையும் தரும்:அறி யேன் இவன் உள்ளியதே!" (எஎ)

[1]இவை இரண்டும் ஐயவுணர்வே; துணிபில.

'இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்' என்பது: அவ்வைய உணர்வொடு நின்றுள் இருவரும் உள்வழி அவன் வந்து நின்று பதியும் பெயரும் பிறவும் வினவத் துணிந்து உணரும் எனக் கொள்க. அதற்குச் செய்யுள்:

இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல்

"தெறிந்தார் கருங்கழல் தென்னவன் செங்கிலத் தைச்செருவின்
மறிந்தார் புறங்கண்டு காணிய கோன்கொல்லிச் சாரல்வந்த
நெறிந்தார் கமழ்குஞ்சி யாளை டிவளிடை நின்றதெல்லாம்
அறிந்தேன்; பலகிணைத் தென்னே!ஒன் றேஇவர் ஆருயிரே." (எஅ)

---

* 'பிரியகில்லான்' என்பதும் பாடம்.

1. முன்னுற உணர்தல், குறையுற உணர்தல் என்னும் இவை இரண்டும்.

"வண்ண மலர்த்தொங்கல் வானவன் மாறன்வை வேல்முகமும்
கண்ணும் சிவப்பக் கடையல்வென் ரூன்கடல் நாடனைய
புண்ணும் புரைசொல் இவட்கும் இவற்கும் பலநினைந்திங்
கெண்ணும் குறையென்னை! ஒன்றே இருவர்க்கும் இன்னுயிரே."

[1] "ஏனல் காவல் இவளும் அல்லள்;
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்;
நரந்தம் கண்ணி இவனே டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே;
நம்முன் நாணுவர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப;
சொல்லும் ஆடுப கண்ணி னானே."

இதனை மதியுடம்பாடு என்றமையானும், [2]முன்னை அறிவு கவர்ந்து நின்றது என்பது பெற்றும்; துணிவு உணர்வு பெற்றிலம் என்பது. 'அஃதே எனின், 'அம் மூன்றென்ப தோழிக்குணர்ச்சி,' என்று மூன்றினையும் உணர்ச்சியென்றே சொன்னமையால், துணிவுணர்வே ஆகற்பாலது,' எனின், துணிவுணர்வும் உணர்வே எனப் படும்; ஐயவுணர்வும் உணர்வே எனப்படும், உணர்வென் னும் பொதுமை நோக்க; சந்தனமும் காஞ்சிரையும் மரம் எனப்பட்டதே போல. இவ்வாறுகவே தோழி ஆராய்ச்சியுடைமையும், ஆசாரமுடைமையும், ஏதத்திற் குக் கவறலும், நன்கு மதித்தலும் வெளிப்படுமென்பது. 'அஃதேயெனின், 'அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி,' என்றதென்னை? மூன்றுமே என்று துணிந்தானுயின், உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும்; என்னை?

* "இனைத்தென அறிந்த சினைழதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்"

---

1. தொல். பொருள். களவியல், சூ. 23. நச். உரை.

2. சுண்டு 83-ஆம் பக்கத்தில், 'அவளது அறிவை ஒருப்படுக்கும் எனவே, முன் கவர்ந்தமை பெற்றும்,' என்றதையும், அதன் கீழ்க் கூறியவற்றையும் நோக்குக.

* தொல். சொல். கிளவி. சூ. 33.

என்றாராகலின்.' அஃதே; உம்மை ஈண்டுத் தொகுத்துக் கூறினர், அஃது அங்ஙனம் தொகுத்தற்கு இலக்கணம் உண்மையான். [1]"ஆயின், 'இருவரும் உள்வழி அவன் வரவு' என்றாகாது, 'அவன் செலவு' என்பது அன்றி; என்னை ?

† "தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீர் இடத்த."

‡ "ஏனை இரண்டும் ஏனை இடத்த"

என்றாராகலின்.' அஃது அறியாது சொன்னாய்,

§ "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்"

என்னும் சூத்திரத்துள் இலேசினால் முடியும். ஆகலின் அன்றே, $ 'தாண்டில் வேட்டுவன் வாங்க வாராது,' என்று சொல்லினர் சான்றோர் என்பது.

அ. ஆங்குணர்ந் தல்லது கிழவோள் தேஎத்துத்
தான்குறை உறுதல் தோழிக் கில்லை

'என்பது என்னுதலிற்றோ ?' எனின், இதுவும் தோழிக் குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

1. 'தருசொல் வருசொல்' எனும் சூத்திரத்தால், தா, வா என்னும் முதனிலைகளின் அடியாகத் தோன்றும் முற்று எச்சம் முதலியன தன்மை முன்னிலை இடங்கட்கும், 'ஏனை இரண்டும்' என்னும் சூத்திரத்தால், செல், கொடு என்னும் முதனிலை அடியாகத் தோன்றும் முற்று எச்சம் முதலியன படர்க்கைக்கும் உரியனவாம் என்பது பெறப்படுதலின், ஈண்டுப் படர்க்கையில் 'வரவு' என்பது வருதலாகாது; 'செலவு' என்பதே வருதல் வேண்டும் என்பது தடை.

"செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய" (தொல். சொல். கிளவி. சூ. 28.)

என்று மூன்றிடத்திற்கும் வரைவின்றியாம் எனவும் கொள்ள வைத்த இலேசினால் அவை மயங்கி வரினும் அமையும் என்பது விடை.

† தொல். சொல். கிளவி. சூ. 29.
‡ ,, ,, ,, சூ. 30.
§ ,, ,, ,, சூ. 28.
$ அகம். செய். 36. அடி. 6.

இதன் பொருள்: ஆங்கு உணர்ந்து அல்லது - அங்ஙனம் உணர்ந்த பின்றை அல்லது, கிழவோள் தேஎத்து - தலைமகள் மாட்டு, தான் குறை உறுதல் தோழிக்கு இல்லை - தான் 'குறை யுற்று *முடிப்பல்,' என்று நிற்கும் தன்மை தோழிக்கு இல்லை என்றவாறு.

'எனவே, என் சொல்லப்பட்டதாம்?' கரவு நாடி வேண்டுவாரையும் மறுக்கப்பட்டதாம். 'அஃதேயெனின், 'குறையுறுதல் தோழிக்கு' என அமையாதோ? 'தான்' என்றது எற்றிற்கோ?' எனின், பின்னையும் தானல்லள் குறை நயப்புக் கூறுவாள்; அவனது ஆற்றுமையைத் தன்கண்கொண்டு நின்றமையால் [1]அவனே எனப்படும்.

கூ. முன்னுற வுணரினும் அவன்குறை யுற்ற
பின்னர் அல்லது கிளவி தோன்றுது

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தலைமகன் முன் நின்று தோழி சொல்லாடும் திறன் உணர்த்துதல் நுத லிற்று.

இதன் பொருள்: முன்னுறவு உணரினும் - மதியுடம்படுப் பக் கூட்டமுண்மை உணர்ந்தாளாயினும், அவன் குறையுற்ற பின்னர் அல்லது - அவன் இரந்து பின்னின்ற பின்னர் அல்லது (அவன் இரந்து பின்னிற்குமாறு ‡'குறையுறும் கிழவீன உணர்ந்த தோழி' என்னும் சூத்திரத்துள் சொல்லுதும்), கிளவி தோன்றுது - 'முடிப்பல்,' என்னும் சொல் தோன்றுது என்ற வாறு.

அஃதாமாறு: மதியுடம்படுத்துத் தன் கருத்து அறி வித்துப் பின்னைத் தழையும் கண்ணியும் கொண்டு [2]பின் னிற்கும். நின்றவனெடு முடிப்பக்கருதுவாள், தன்கண் நாணுக் கெடுந்துணையும் [3] குறியாடும். ஆட, [4] அற்றைக்

* 'முடிப்பல் என்னுஞ்சொல்' என்பதும் பாடம்.

1. குறையுறுவான் தலைவனே என்பது பெறப்படும்.

‡ களவியல், சூ. 12.

2. தலைவன் இதமான சொற்களைச் சொல்லுவான் (பின்னிற்றல் - இதம் சொல்லுதல்.)

3. தோழி குறிப்பாகப் பேசுவாள்.

4. அப்பொழுதைக்கப்பொழுது

கன்று ஆற்றுமை அவற்குப் பெருகும். பெருகுவது கண்டு, அற்றைக்கன்று இவட்கு நாணுச் சுருங்க, இரண்டும் [1] தூலாத்தலைப்பட்டு எடாநின்றன. நின்றுழி, அவனது ஆற்றுமையும் இதனினுங்குப் பெருகுமாறு இல்லையெனப் பெருக்கத்துக்கு வரம்பெய்தி நின்றது. இவளது நாணும் இதனினுங்கு நுணுகுமாறில்லையென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது. நின்ற நிலைமைக் கண் தலைமகன் ஒரு சொல் சொல்

மடல் திறம்

லும். 'என் சொல்லுமோ?' எனின்,

* 'இதனினுங்கெல்லாம் இக்கருமம் நின்னல் முடியுமெனக் கருதி வந்து † ஊழ்ந்தேன்; இனி நின்னல் முடியாமை உணரப்பட்டது; பட்டமையின், இளிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றி யமையேனுகலால்,' என்னும். இனி, இளிவந்தன செய்து முடித்தல் என்பது, மடலூர்வதாயினும் வரை பாய்வதா யினும் என்றவாறு. அதற்குச் செய்யுள்:

104

"படலே றியமதில் மூன்றடைப் பஞ்சவன் பாழிவென்ற
அடலே றயில்மன்னன் ‡தெம்முனை போல்மெலிந் தாடவர்கள்
கடலே றியகழி காமம் பெருகக் கரும்பனையின்
மடலே றுவர்;மற்றும் $செய்யா தனஇல்லை மாநிலத்தே." (அ0)

"பொருதெடுத் தானைப்புல் லார்தம்மைப் பூலன்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேல்நெடு மாறன்தென் னாடனையாய்!
அருநெடுங் காமம் பெருகுவ தாய்விடின் ஆடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மடல் ஊரக் கருதுவரே." (அக)

---

1. தராசிலிட்டு நிறுக்கப்பட்டன போலத் தலைவனது ஆற்றுமைப் பெருக்கத்தின் இயல்பும், தோழியினது நாணுச் சுருக்கத்தின் இயல்பும் சமநிலை எய்தி நின்றன என்பது கருத்து. (ஈண்டு 'எடா நின்றன,' என்பதற்கு அவ்விரண்டு இயல்புகளும் சமநிலையாக நிறுக்கப் பட்டு நின்றன என்பது பொருளாம்.)

* 'இன்றினுங்கெல்லாம்' என்பதும் பாடம்.

† 'மூயன்றேன்' என்பதும் பாடம்.

‡ 'தெவ்வர்' என்பதும் பாடம்.

$ 'செய்யா தனசெய்வர்' என்பதும் பாடம்.

* "மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே."

'என்ரூன் தலைமகனே?' எனின், அல்லன்; தலைமகன் இடனுகப் பிறந்த ஆற்ரூமை. அது கேட்டலும் முன் குறைபாட்டின்கண் சென்று நின்ற நாண் உண்டன்றே? அது கெடும். கெட, அவனது ஆற்ரூமையைத் தன்கண் கொண்டு தலைமகனை ஆற்றுவிப்பதோர் சொல் சொல்லும். 'அஃதியாதோ?' எனின், 'அரியன தாங்கலன்றே பெரியாரது பெற்றிமை? நீயிர் இதன் திறத்தினர் ஆகன்மின். யானும் அதன் திறத்து என்னின் ஆவது உண்டேல், காண்பன்,' என்னும். அருளால் அறிதென வீலக்கல் என, அவனது ஆற்ரூமை நீங்கும். அது நீங்க, தலைமகனது நிலைமை நோக்கி, 'இவன் இறந்துபடான்,' என்பது உணர்ந்து, இவை சொல்லும்: 'அவை யாவையோ?' எனின், ''மடல் ஏறுவன்,' என்றிரால்; மடல் ஏறுதல் இயையாது கொல்லோ! என்னை? நீர் பேரருளினர் ஆகலான்;' என்னும். அதற்குச் செய்யுள்:

"பலமன்னு புள்ளினம் பார்ப்பும் சிணையும் அவையழிய
உலமன்னு தோளண்ணல் ஊரக் கொளாய்கொல் ஒலிதிரைசூழ்
நிலமன்னன் கேரியன் மாறன் கெடுங்களத் தட்டதிங்கள்
குலமன்னன் கன்னிக் குலவளர் பெண்ணைக் கொழுமடலே." (அ௨)

1 "வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே;
அவையினும் பலவே சிறுகருங் காக்கை;
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுள் சிணையே."

---

* குறுந்தொகை, செய். 17.

1. தொல். பொருள். களவியல், சூ. 20. நச். உரை.

அன்றியும், ''மடலேறுவன்,' என்றிரால்; மடல் ஏறப்படுவார் உருவெழுதிக்கொண் டன்றே ஏறுவது? நுமக்கு அவ் வுரு எழுதல் ஆமோ?' என்னும்.

அவயவம் எழுதல் அரிதென விலக்கல்

அதற்குச் செய்யுள் :

* "அண்ணல் நெடுந்தேர் அரிகே சரிஅகன் ஞாலம்அன்னாள்
வண்ணம் ஒருவா றெழுதினும் மாமணி வார்ந்தனைய
தண்ணென் கருங்குழல் நாற்றமும் மற்றவள் தன்னடையும்
பண்ணென் மொழியும் எழுத உளவே படிச்சந்தமே?" (அஉ)

"களிசேர் களிற்றுக் கழல்நெடு மாறன் கடையல்என்ற
தெளிசேர் ஒளிமுத்த வெண்குடை மன்னன்தென் னுடனையாள்
கிளிசேர் மொழியும் கருங்குழல் நாற்றமும் கேட்பின்ஐய!
எளிதே எழுத? எழுதிப்பின் ஊர்க எழில்மடலே." (அச)

அல்லதூஉம், எழுதின ஞான்று, 'இங்ஙனமோ நீர் எழுதுவது!' என்று சொல்லும். அதற்குச் செய்யுள்:

"விற்றூண் எழுதிப் புருவக் கொடியென்றிர்; தாமரையின்
முற்றூ முகைநீர் எழுதி முலையென்றிர்; மொய்யமருள்
செற்றூர் படச்செந் நிலத்தைவென் றூன்தென்னன் கூடல்அன்னாள்
சொற்றூன் எனக்கிள்ளை யோநீர் எழுதத் துணிகின்றதே!" (அரு)

அது கேட்டுத் தலைமகன் பெயர்த்தும் ஆற்றானும்; ஆக, இறந்துபடல் ஆகாதென்று, 'நீர் இந்நீரர் ஆகன்மின்; நுமக்கு இக்குறை முடித்துத் தருவன்; நும்மால் கருதப்படுவாள் என்மாட்டுப் பெரிதும் அருளுடையள் ஆயினளிப்பருவம்,' என்னும். அதற்குச் செய்யுள்:

உடம்பட்டு விலக்கல்

"ஓங்கும் பெரும்புகழ்ச் செங்கோல் உசிதன் உறுகலியை
நீங்கும் படிநின்ற கோன்வையைப் வாய்நெடு நீரிடையான்
தாங்கும் புணையொடு தாழ்ந்தண் பூம்புனல் வாயொழுகின்
ஆங்கும் வருமன்ன தால்இன்ன நாளவள் ஆருளே." (அசு)

* இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் எட்டுப் பிரதியிற்கண்டது.

"காடார் கருவரை யும்கலி வானும் கடையல்அன் றுகூடார் செலச்செற்ற கோன்தெடு மாறன்தென் கூடல்அன்ன ஏடார் மலர்க்குழ லாள்எங்கு நிற்பினும் என்னையன்றி ஆடாள் *புனலும்மெல் லூசலும்; ஈதவள் ஆருளே." (அள)

† "தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்;
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்;
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிரன் னோளே."

அது கேட்டுத் தலைமகன், 'இவள் இனி எனக்கு இக்குறை முடிக்கும்,' என முன்னின்ற ஆற்றுமை நீங்கி, ஆற்றும் என்பது. என்னை? உலகத்து ஒரு பொருள் முடியாதெனக் கவன்று நின்றூர், முடிப்பதோர் உபாயம் கண்ட ஞான்று அப்பொருள் எய்தினாரேபோல மகிழ்வார் ஆதலின், இவனும் தன்னுடைய குறை எய்தினனே போலப் பெயர்ந்தான். இது கொண்டு நிலை கூற்று என்று சொல்லுவது. என்னை? தலைமகன் இறந்துபடுவானை அச் சொல் தாங்கிக்கொண்டு நின்றமையின் என்பது. இது சொல்லி இவனை ஆற்றுவித்துத் தலைமகள் மாட்டுச் சென்று அக்குறை முடிக்கும் உபாயம் ஆராய்வாள் ஆவது.

கo. உள்ளத் துணர்ச்சி தெள்ளிதின் கரந்து
கிழவோள் தேஎத்துக் குறையுறூஉம் உள்ளே
குறிப்பறி வுறூஉம் காலை ஆன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி, தலைமகளைக் குறை நயப்பிக்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'சுனையும்' என்பதும் பாடம்.

† குறுந்தொகை, செய். 222.

இதன் பொருள்: உள்ளத்து உணர்ச்சி தெள்ளிதின் கரந்து-தன் உள்ளத்து நின்ற உணர்ச்சியை நன்கு புலப்படாமை மறைத்து, கிழவோள் தேஎத்து-தலைமகள்மாட்டு, குறையுறூஉம் உளவே - குறை வேண்டலும் உள, குறிப்பு அறிவுறூஉம் காலை ஆன - தலைமகனது ஆற்றுமைக் குறிப்பினை அறிவுறுத்து மிடத்து என்றவாறு.

''உள்ளத்துணர்ச்சி' என்பது யாதோ?' எனின், கூட்டமுண்மை உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், 'அவர் இக்குறையினை இன்றியமையார்,' என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; 'யான் குறையுற, அவள் இதனை ஆற்றுங்கொல்லோ!' என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லது, 'என்னெஞ்சு கூட்டம் முடியாது விடின் இவன் இறந்துபடுமாகலின், அவளைக் குறை நயப்பித்துக்கொண்டு முடிக்கலாங்கொல்லோ!' என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்.

'தெள்ளிதின் கரந்து கிழவோள் தேஎத்துக் குறை யுறூஉம் உளவே,' என்பது, 'இவள் *கூட்டமுண்மை உணர்ந்தாள்போன்று குறையுறுகின்றாள்,' எனத் தலை மகட்குப் புலனுகாமை நன்று மறைத்துக் குறையுறூஉம் குறையுறவும் உடையள் தலைமகள் மாட்டுக் குறை நயப் புக் கூறுமிடத்து என்றவாறு.

''உண்டு,' என்னுது, 'உள' என்ற பன்மைச்சொல் எற்றிற்கோ?' எனின், குறையுறுதல்தாம் பல என்றற் குச் சொல்லப்பட்டது. 'அவை யாவையோ?' எனின், மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தலும், வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தலும் என இவை.

மென்மொழியால் கூறல்

இவற்றுள் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்கு மாறு: 'இங்கு வந்து ஒழுகாகின்றாள் ஒருத்தோன்றல் உளன்; அவன் என்னெஞ்சதொரு குறையுடையான்

---

* 'கூட்டமுண்மை உணர்ந்து உணராதாள் போன்று குறையுறுகின்றாளென' என்பதும் பாடம்.

போலும்! ஒருவராலும் ஒரு குறை கொள்ளும் *தன்மையானும் அல்லன், ஒருவர்க்கு ஒரு குறை முடிப்பின் அல்லது; அதனால், குறை இன்றியமையாமை நோக்கி யான் முடிப்பனென்று பொய்த்தேன். பொய்ப்பல் என்று பொய்த்தேனுமல்லேன்; 'இப்பொழுதைக்குள்ளாய் அப் பொய்யினால் பின்னுமோர் உபாயத்தால் முடித்துக் கொள்ளப் பொறுரோ!' என்று பொய்த்தேன். என்னை? † 'உயிருடையார் எய்தா ஒரு பொருளில்லை,' என்ப ஆகலான்; அவ்வாறு கருதிப் பொய்த்தேற்கு அவர் அதனை மெய் என்று கருதிக் கைக்கொண்டு சென்றார், தாம் பொய் அறியாமையின். அன்னர் இன்றும் வருவர்; வந்தால், குறை முடியாமையின், பொய்யென உணர்வராகாரோ?' என்னும். அதற்குச் செய்யுள்:

"பாமாண் தமிழுடை வேந்தன் பராங்குசன் கொல்லிப்பைம்பூந்
தேமாந் தழையொடு கண்ணியும் கொண்டிச் செழும்புனத்தில்
ஏமாண் சிலையண்ணல் வந்துநின் றூர்பண்டு போலின்று;
பூமாண் குழலாய்! அறியேன் உரைப்பதொர் பொய்ம்மொழியே." (அஅ)

அல்லதூஉம்,

"கொடியார் நெடுமதில் கோட்டாற் றரண்கொண்ட கோன்பொதியில்
கடியார் புனத்தயல் வைகலும் காண்பல் கருத்துரையான்
அடியார் கழலன் அலங்கலங் கண்ணியன் மண்ணளந்த
நெடியான் சிறுவன்கொல் லோஅறி யேனெஞ் நெடுந்தகையே."

"நண்ணிய போர்மன்னர் வான்புக நட்டாற் றமர்விளைத்த
மண்ணிவர் செங்கோல் வரோதயன் வையையன் ஞடனையாய்!
கண்ணியன் தண்ணந் தழையன் கழலன் கடுஞ்சிலையன்
எண்ணிய தியாதுகொல் லோஅக லானிவ் விரும்புனமே." (கூO)

"பன்னிய தீந்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
மன்னிய சீர்மன்னன் கொல்லிமம் வார்புனம் கட்டழித்துத்

---

* 'தகைமையானும்' என்பதும் பாடம். இங்கிருந்து ஐந்து வரிகளில் வேறோர் எட்டுப் பிரதிக்கிணங்கப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

† 'உயிருடையதா ஒரு பொருளில்லை;' என்னும் மூன் அச்சுப் பிரதியிற்கண்ட பாடம் பொருட்பேறின்று.

தின்னிய வந்த களிறு *தடிந்த சிலம்பன் தந்த
பொன்னியல் பூண்மங்கை! வாடுப வோமற்றிப் பூந்தழையே?''

''அரைதரு மேகலை அன்னமன் ஞய்!பண் டகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோன் உசிதன்ஒண் பூம்பொதியில்
வரைதரு வார்புனம் கையக லான்வந்து மாவினவும்
விரைதரு கண்ணியன் யாவன்கொ லோஓர் விருந்தினனே!'' (கூஉ)

''போரும்பார் அரசரைப் பூலங்தை வாட்டிய கோன்பொதியில் [லான்
அரும்பார் தழையுங்கொண் டியான்சொன்ன பொய்யைமெய் என்றக-
பெரும்பான் மையும்இன்று வாரா விடான்;வரின் பேரமர்க்கண்
சுரும்பார் கருங்குழ லாய்! அறி யேன்இனிச் சொல்லுவதே.''

''தேம்மாண் பழிந்துசெந் தீமூழ்கச் சேவூர்ச் செருவின்அன்று
வெம்மாப் பணிகொண்ட வேந்தன்தென் னுடன்ன மெல்லியலாய்!
இம்மாத் தழையன் அலங்கலங் கண்ணியன் யாவன்கொல்லோ!
கைம்மா வினுய்வந் தகலான் நமது கடிப்புனமே.'' (கூச)

''சிலையுடை வானவன் சேவூர் அழியச் செரு அடர்த்த
விலையுடை வேல்நெடு மாறன் கழல்இறைஞ் சாதவர்போல்
நிலையிடு சிந்தைவெந் நோயொடிந் நீள்புனம் கையகலான்
முலையிடை நேர்பவர் நேரும் இடமிது மொய்குழலே!'' (கூரு)

1''இலைசூழ்செங் காந்தள் எரிவாய் முகையவிழ்த்த ஈர்ந்தண் வாடை
கொலைவேல் நெடுங்கண் கொடிச்சி கதுப்புளரும் குன்ற நாடன்
உலைவுடை வெந்நோய் உழக்குமால் அந்தோ!
முலையிடை நேர்வார்க்கு நேரும் இடமிது மொய்குழலே!''

என இவ்வகை கூறக் கேட்டு, ''நின்னிற்பிரியேன்; பிரியின் ஆற்றேன்,' என்ற எம் பெருமான் இவளை வந்து இரந்து பின்னின்றமையான், இறந்துபட்டிலன்,' என்று ஏமாப்பாள் ஆவது.

வன்மொழியால் கூறல்

இனி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்குமாறு: 'இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன்; என்னின் ஆவ தொரு குறையுடையான் போலும்! ஒருவராலும் ஒரு குறைகொள்ளும் தன்மையனுமல்லன்,

* 'கடிந்த' என்பதும் பாடம்.

1. தொல். பொருள். களவியல், சூ. 23. நச். உரை.

தான் பிறர் குறை முடிப்பின் அல்லது. *அதனால், குறை இன்றியமையாமை நோக்கிக் குறை முடிப்பன் எனப் பொய்த்து ஒழுகினேன்; ஒழுக, நெருநல் நாளால் இக் கானலுள் வந்து என்னை எதிர்ப்பட்டுத் தன் துணைப் புறந்தருவதோர் அலவனைக்கண்டு, 'இதுவாகாதே அறிவும் ஆண்மையுமுடையது!' என அதனை நன்கு மதித்து, ஆற்றலுய், என்னையும் நோக்கி, அலவனையும் நோக்கி, உணர்வினை என்கண்ணும் அவ்வலவன்கண்ணும் ஒழியப் போயினன்; எத்தன்மையன் ஆயினன்கொல்லோ! இன்று வந்திலன்,' என்னும். அதற்குச் செய்யுள் :

"பாடும் சிறைவண் டறைபொழில் பாழிப்பற் றூரசர்
ஓடிம் திறங்கண்ட கோன்கன்னிக் கானல் உறைதுணையோ
டாடும் அலவன் புகழ்ந்தென்னை நோக்கி அறிவொழிய
நீடு நினைந்துசென் றன்நென்னல் ஆங்கொர் நெடுந்தகையே." கூசு

"போன்ற விரிபுகழ் †வானவன் பூலந்தைப் பூவழிய
வென்றன் வியன்கன்னி அன்னந்தன் மென்பெடை மெய்யளிப்ப,
'நன்றும் இதன்செய்கை!' என்றென்னை நோக்கி நயந்துருகிச்
சென்றூர் ஒருவர்;பின் வந்தறி யார்இச் செழும்புனத்தே." (கூஎ)

‡ "புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்தைதூங் கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரிஐம் பாலோய்! வண்ணம்உண் டேனல்."

§ "ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்,
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனில் போகி யோனே;
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ!
வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையின் கலுழுமென் நெஞ்சே."

---

* வேரூர் எட்டுப்பிரதி நோக்கி இப்பகுதியில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

† 'தென்னவன்' என்பதும் பாடம்.

‡ சிலப்பதிகாரம், கானல் வரி, செய். 31.

§ குறுந்தொகை, செய். 176.

இது கேட்டு இறந்துபடாளாயிற்று. 'எற்றிற்கோ?' எனின், இறந்துபடாளன்றே, [1]'இவன் உளனுயினும் இறந்துபடும் பிற, யான் இறந்துபடின்,' என்றதனன்?

கக. தன்னுள் குறிப்பினை அருகும் தோழிக்கு
முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், அங்ஙனம் குறை நயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்ன தன்மையள் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தன் உள் குறிப்பினை - தோழி தன் உள்ளத்துக் குறிப்பினை, அருகும் தோழிக்கு - சார்த்தலுறும் தோழிக்கு, முன்னுறு புணர்ச்சியின் - இயற்கைப் புணர்ச்சி அங்கு 'நின்னிற்பிரியேன் பிரியினுற்றேன்,' என்றது உண்டன்றே? அதனின், அருகலும் உண்டு - தலைமகள் தனது தன்மையைச் சார்த்தலும் உடையள் என்றவாறு. *

மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தவிடத்து, 'எம் பெருமான் தனக்குத் தகாத †இளிவுபட ஒழுகாநின்றான்!' எனக் கவற்சி உண்டன்றே? அது புலப்படாமை நிற்கும். வலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறினவழி, 'நெருநல் வரானுயினென்,' என்றமையின், இறந்துபட்டானென [2]ஆற்றுமை பெறிதாய், அங்குப் புலப்பட நிற்குமென்பது.

இனி ஒரு திறத்தார் வேண்டுவது, சொல் நிகழ்தலும் உண்டு, சொல் நிகழாமையும் உண்டு என்பது. அஃது ஆமாறு: மெலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறியவழி முன் இறந்துபட்டான்கொல்லோ எனக்கருதி

---

1. 'இவன் இப்போது இறந்துபடாது இருக்கின்றான் ஆயினும், யான் இறந்துபடின், உடனே தானும் இறந்துபடுவன்,' என்னும் கருத்தினுல் தலைவி இறந்துபடாமல் இருப்பள் என்க.

* 'என்பதென் சொன்னவாறெனின், அறிய நிற்றலுமுடையள், அறியாமை நிற்றலுமுடையள் என்றவாறு,' என்னும் ஒரு சொற்றொடர் ஈண்டுளதென்பது வேறோர் எட்டுப் பிரதியால் தெரிகின்றது; இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† 'இழிவர' என்பதும் பாடம்.

2 அவ்வாற்றுமை தோழிக்கு விளங்க நிற்கும்.

ஆற்றுமையொடு நின்றுள், [1]உண்மை கேட்ப ஆற்றுமை நீங்கி நாணு வந்து அடைய, தோழி முன்னர் நிற்கலாது, 'வேங்கைப்பூக் கொய்வாம்; மயிலாடுமாறு காண்பாம்; *குயில் கூவுமாறு கூவுவாம்; அருவி ஆடுவாம்,' என ஒன்றன்மேலிட்டு நீங்கும். அதற்குச் செய்யுள்:

"கணிநிற வேங்கையும் கொய்தும்; கலாவம் பரப்பிநின்று
மணிநிற மாமயில் ஆடலும் காண்டும்;வல் லத்துவென்ற
துணிநிற வேல்மன்னன் தென்னர் பிரான்சுடர் தோய்பொதியின்
அணிநிற மால்வரைத் தூநீர் அருவியும் ஆடுதுமே." (கூஅ)

"வீரைவளர் வேங்கையும் காந்தளும் கொய்தும்; வியல்அறைமேல்
நிரைவளர் மாமயில் ஆடலும் காண்டும்; நிகர்மலைக்தார்
திரைவளர் பூம்புனல் சேவூர்ப் படச்செற்ற தென்னன்கொல்லி
வரைவளர் மாநீர் அருவியும் ஆடிதும் வாள்துதலே!" (கூகூ)

எனச் சொல் நிகழ்ந்தவாறு. வலிதாகச் சொல்லிக்குறை நயப்புக் கூறின வழி, 'நெருநல் வரானுயினுன் ஆதலின், இறந்துபட்டான்,' என †ஆற்றுமையது பெருமையால் சொல் பிறவாதெனக் கொள்க.

இனி ஒரு சாரார் சொல்வது: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததற்கு இடையின்றியே இற்செறிக்கப்பட்ட தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று என்ப. அவர் கூறும் பொருளாமாறு:

தன்னுட்குறிப்பினை அருகும் தோழிக்கு - தன்கண் வேறு பாட்டை அறியலுறும் தோழிக்கு, முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டு - [2]முன்னுறு புணர்ச்சி காரணமாகச் சார்தலும் உண்டு என்றவாறு.

---

1. தலைவன் உளனுதலைக் கேட்டலால்

* 'இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது.

† 'ஆற்றுமை நிகழ்ந்து பெருமையால்' என்னும் முன் அச்சுப் பிரதியிற்கண்ட பாடம் பொருட்பேறின்று.

2. முன்னுறு புணர்ச்சி நிகழ்ந்தபின் தன் கற்பைக் காத்தற் பொருட்டுத் தலைவி தோழிக்குத் தன் நிலைமையைக் குறிப்பால் அறிவிப்பள் என்பது கருத்து. இது கருத்தாதலை அடுத்து வரும் மேற்கோட்சூத்திரத்தால் அறிக.

ஈண்டு அருகுதல் என்பது அணுகுதல், அணுகுவித்தல் என்னும்

என்னை ?

"முற்படு புணரீச்சியின் *கற்படு கிழத்தி
மெய்ப்பாட் டவலம் புரியும் தோழிக்
கேதீ டாக எண்ணிய முறையால்
†கூறவும் படூஉம் குறிப்பொடு புணர்ந்தே
கற்புக்கடை காக்கும் கருத்தி னை."

இதன்பொருட்டுத் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றது என்ப. அஃது இங்குச் சொல்ல வேண்டுவதில்லை. போக்கி,

‡ "அந்நா லிடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே"

என்பதன்கண் சொல்லுதும். ஒருவர்க்கு ஒரு சொல் சொன்னவிடத்து அச்சொல்லப்பட்டார் இன்ன நிலைமையர் ஆயினர் என்பது சொல்ல வேண்டும் அன்றே? மேல் சூத்திரத்துத் தோழி தலைமகளைக் குறையுறும் என்றார், இச்சூத்திரத்துக் குறையுறப்பட்ட தலைமகள் இன்ன நிலைமையள் ஆயினளென்பது சொல்ல வேண்டும் என்பதனால், மேலதே உரை.

இவ்வகை குறை நயப்புக் கூறப்பட்ட தலைமகள் தலைமகனைக் [1]காணலுறவினளாம். அக்குறிப்பு உணர்ந்த தோழி, தலைமகள் குறை நேர்ந்தாள் என்பது தலைமகற்கு அறிய நிற்கும் என்பாரும் உளர். அதற்குச் செய்யுள்:

தழை விருப்பு உரைத்தல்

"சிலைமிசை வைத்த புலியும் கயலும்சென் றேங்குசெம்பொன்
மலைமிசை வைத்த பெருமான் வரோதயன் வஞ்சியன்னாள்
முலைமிசை வைத்துமென் தோள்மேல் கடாய்த்தன்மொய் பூங்குழல்சோர்
தலைமிசை வைத்துக்கொண் டாள்அண்ணல்! நீதந்த தண்தழையே."

இரு பொருளும் தந்து நின்றது. ஈண்டுச் சார்தல் என்பது தலைவன் நிலையைத் தோழி அறியும்படி செய்தல் என்னும் பொருளது.

* 'கடிபடு கிழத்தி' என்பதும் பாடம்.

† 'கூறவும் பெறூஉம்' என்பதும் பாடம்.

‡ களவியல், சூ. 29.

1. 'காணவேண்டும்,' என்னும் கருத்தினளாம்.

"கழுது குருதி படியக் கலிநீர்க் கடையல்வென்ற
இழுது படுநெடு வேல்மன்னன் ஈர்ம்புனல் கூடல்அன்னாள்
தொழுது தலைமிசை வைத்துக்கொண் டாள்வண்டும் தும்பியும்தேன்
கொழுதும் மலர்நறுந் தார்அண்ணல்! நீதந்த கொய்தழையே." (கo௯)

கஉ. குறையுறும் கிழவனை உணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேண்பட நிறுத்தலும்,
'என்னை மறைத்தல் எவனு கியர்?' என
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலும்,
மாயப் புணர்ச்சி அவனெடு நகாஅ,
'நீயே சென்று கூ'றன விடுத்தலும்,
அறியாள் போறலும், குறியாள் கூறலும்,
படைத்துமொழி கிளவியும் குறிப்புவேறு கோளலும்,
அன்ன பிறவும் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக் குரிய என்ப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தலைமகளைக் குறை நயப்பித்து, அவளது குறிப்புணர்ந்து, தன்னினும் கூட்டம் கூட்டலுறும் தோழி, தலைமகன் தெருண்டு வரைந் தெய்தல் வேண்டி இவையிவையெல்லாம் கூறிச் சேட்பட நிறுத்தப்படும் என்பதுணர்த்துதல் நுதலிற்று. மதியுடம் படுத்துப் பின்னின்றுணுகத் தான் இதனை முடிக்கக் கருதுவாள் தன்கண் நாணுக் கெடுத்தலையும் குறியாடிக் கொண்டு ஒழுகுமாறு உணர்த்துதல் நுதலிற்று எனவும் அமையும்.

இதன் பொருள்: குறையுறும் கிழவனை உணர்ந்த தோழி - குறையுறும் தலைமகனைக் கடைப்பிடித்த தோழி (கடைப்பிடியாது சென்ற காலமும் உளவாதலால், இனி அன்னது அன்று என்றவாறு. அல்லதூஉம், 'குறையுறும் கிழவனை உணர்ந்த தோழி,' என்பது குறையுறவினுன் ஆற்றுணுகிய தலைமகனை உணர்ந்த தோழி என்றுமாம். அல்லதூஉம், இரத்தலும் குறையுறுதலும் செய்து ஆற்றுணுகிச் செல்லாநின்ற தலைமகனைத் தன்னினும் கூட்டம் முடியாது விடின் ஆற்றுணும் என்பதனைத் திரிவின்றி உணர்ந்த தோழி என்றுமாம்), சிறையுறக் கிளந்து சேண்பட நிறுத்தலும் - (சிறை என்பது, காப்பு; உற என்பது, மிக; கிளத்தல் என்பது, சொல்லுதல்; சேண் என்பது, அகற்றல்; பட

என்பது, நிகழ்தல்; நிறுத்தல் என்பது, தழீஇக்கோடல்;) காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக்கோடலும் என்றவாறு.

ஆற்றுத தன்மைக்கண் நிறுத்தல் என்னும் சொல், தழீஇக்கொள்ளுமென்பது. எனவே, தலைமகனை ஆற்றுமை செய்வன போன்று ஆற்றுவிப்பன சொல்லுமென்பதும் போந்தது. நிறுத்தலென்னும் சொல்லால் தழீஇக் கொள்ளுமென்பதன்று; *'நீக்கிநிறுத்தார், உய்ந்துவிட்டார், போக்கிவிட்டார்,' என்பன போல ஒரு சொல் விழுக்காடுபட நின்றது என்பாருமுளர். அங்ஙனம் காப்பு மிகுதி சொல்லுமாறு: 'இவ்விடம் மிக்க காவலுடைத்து; நீயிர் வரற்பாலிரல்லீர்,' என்னும். அதற்குச் செய்யுள்:

'காப்புடைத்து,' என்று மறுத்தல்

"மண்ணிவர் செங்கோல் வரோதயன் வல்லத்து மாற்றலர்க்கு
விண்ணிவர் செல்வம் விளைவித்த வேந்தன்விண் தோய்பொதியில்
கண்ணிவர் பூந்தண் சிலம்பிடை வாரன்மின்; காப்புடைத்தால்
பண்ணிவர் வண்டறை சோலை வளாயளம் பைம்புனமே." (கo2)

"புல்லா வயவர் நறையாற் றழியப் பொருதழித்த
வில்லான் விளங்குமுத் தக்குடை மன்னன் வியனிலத்தார்
எல்லாம் இறைஞ்சநின் ரூன்கொல்லி மல்லலஞ் சாரல்இங்கு
நில்லா தியங்குமின்; காப்புடைத் தைய!இந் நீள்புனமே." (கoரு)

"பூவலர் தண்பொழில் பூலந்தைப் புல்லா அரசழித்த
மாவலர் தானை வரோதயன் கொல்லி மணிவரைவாய்
ஏவலர் திண்சிலை யார்எமர் நீங்கார் இருபொழுதும்
காவல ராய்நிற்பர்; வாரன்மின் நீர்இக் கடிப்புனத்தே." (கoச)

'இவ்வாறு தோழி சொல்லத் தலைமகன் ஆற்றின வாறு என்னையோ?' எனின், அச்சொல்லே ஆற்றுவிக்கும்; 'இவள் இவ்விடத்து நிலைமையை மறையாதுளனக்கு உரைப்பாளாயது என்கண் கிடந்த பரிவினன் ஆகாதே! இத்துணை என்கண் பரிவுடையாள், †எனக்கு இது முடி-

* 'நீக்கி நின்றுற்றார், ஆய்ந்துவிட்டார் என்றுற்போல' என்பதும் பாடம்.

† 'என் குறை முடியாதவாறில்லை,' என்பதும் பாடம்.

யாமை இல்லை,' என ஆற்றுவானும். இனி இப்படி அருமைத்தாகலின், இவளின் ஆகாதென்று உணர்வானுயின், வரைந்தெய்துவானும். 'இவள் இவையெல்லாம் தலைமகனைச் சொல்லுதற்குக் காரணமென்?' எனின், 'தன் ஆற்றுமையால் யான் முடிக்கின்ற அதனை எளிதென உணரும்; அது படாமை அரிதென உணர்வானுக,' என்றற்கு. இனி, 'அச்சொல்லே ஆற்றுவித்த காரணமென்னை?' எனின், 'இது முடியாதென உணரின் இறந்து படுவான்கொல்லோ!' என்னும் அச்சம் என்பது. இதனை இச்சூத்திரத்துள் எங்கும் தந்து உரைக்க.

என்னை மறைத்தல் எவனுகியரென-(ஆற்றுனுகி நின்ற தலைமகனை, 'இஃது இறப்ப இவன் இறந்துபடும்,' என நின்ற தோழி) 'என்னை! நீர் இவ்வகையில் [1]திரிதற்குக் காரணம் என்னை?' என்னும்.

மறைத்தமை கூறி நகைத்துரைத்தல்

'எனது ஆற்றுமை இன்னதின் ஆயதென அதனை அறிந்திலள். அறியாதாட்கு இன்னது என் குறை என்பேனுயின், இவள் மறுக்கவும் பெறும்; இவளை இன்னும் பல்கால் நெகிழ ஒழுகின், தானே அறிந்து முடிக்கும்,' என உணர்ந்து, 'இன்னது என் குறை,' என்னுதானை, 'நும் குறை என்னை? மறைத்தால் நுமக்காவது என்னை?' என்னும். அதற்குச் செய்யுள்:

"மின்னை மறைத்தசெவ் வேல்வலத் தால்விழி ஞத்துளொன்னுர்
மன்னை மறைத்தளம் கோன்வையை சூழ்பௌவ நீர்ப்புலவந்
தன்னை மறைத்திள ஞாழல் கமழுந்தண் பூந்துறைவா!
*என்னை மறைத்திவ் விடத்திய லாதுகொல் எண்ணியதே."(கoடு)

"திண்டேர் வயமன்னர் சேவூர் அகத்துச் செருவழியக்
கண்டே கதிர்வேல் செறித்தளம் கோன்கொல்லிக் கார்ப்புனத்து

---

1. மறைத்தற்கு

* 'என்னை மறைத்த விடத்தியை யாதுகொ லெண்ணியதே,' என்பதும் பாடம்.

வண்டேய் நறுங்கண்ணி கொண்டே குறையுற வந்ததனன்
உண்டே முடித்தல் எனக்கு மறைப்பினும் உள்ளகத்தே?" (கoசு)

* எனவே, 'மறையாது விட்டவிடத்து முடிவுண்டு,' என்றுள் என்பது.

மூன்னுறு புணர்ச்சி முறை முறை செப்பலும் - மூன்னுறு புணர்ச்சி என்பது, இயற்கைப்புணர்ச்சி; அதன் முறை என்பது, பாங்கற்கூட்டம்; அதன் முறை என்பது, தோழிதன்னிலையை கூட்டம்; அஃது, 'என்னை மறையாது விட முடிப்பன்,' என்றுளாம். அதனன், 'என் குறை அறிந்திலள்; அறிந்த ஞான்று முடித்துத் தரும்,' என ஆற்றுவானும்.

மாயப் புணர்ச்சி அவளெடு நகாஅ நீயே சென்று கூறு என விடுத்தலும் - அவன் இரந்து பின்னின்றவிடத்து, 'மாயமான புணர்த்துச் சொல்கின்றது உலகத்து நிகழ்வதொன்றன்றுலோ?' என்று அவளெடு நகாநின்றே, 'யாரறிவார்? அது நிக முவும் பெறும், நிகழாமையும் பெறுமே! எனினும், யாம் குற்றேவல் மகளிராதலால், துணிந்து அவள் குறிப்பறியாது சொல்லகில்லேம்; அவளுக்கு நீயே சென்று நின் குறை சொல்,' என்னும்.

'நீயே கூறு,' என்று மறுத்தல்

அதற்குச் செய்யுள்:

"சேயே எனநின்ற தென்னவன் செந்நிலத் தேற்றதெவ்வர்
போயே விசும்பு புகச்செற்ற கோன்அந்தண் பூம்பொதியில்
வேயே அணையமென் தோளிக்கு நின்கண் மெலிவுற்றநோய்
நீயே உரையாய் விரையார் அலங்கல் நெடுந்தகையே!" (கoஎ)

"புரைத்தார் அமர்செய்து பூலந்தைப் பட்டபுல் லாதமன்னர்
குரைத்தார் குருதிப் புனல்கண்ட கோன்கொல்லிப் பாவையன்ன
நிரைத்தார் கருமென் குழலிக்கு நீயே நெடுந்துறைவா!
உரைத்தால் அழிவதுண் டோசென்று நின்றுநின் உள்மெலிவே?"

என்னும். என்றவிடத்து ஆற்றாளும்; என்னை? உலகத்தார் ஒருவரை, 'இக்குறை முடித்துத்தரல் வேண்டும்,'

* 'எனவே என்சொல்லப்பட்டதாம்? மறையாது விட்டவிடத்து ஆமென்பதும் உண்டு என்றுளாம்,' என்பது வேறோர் ஏட்டுப்பிரதியில் கண்ட பாடம்.

என்று இரந்தவிடத்து, 'என்னின் ஆகா; நீரே சென்று முடித்துக்கொண்மின்,' என்றல், எத்துணையும் இன்னாது அன்றே? அது போல என்பது. அவ்வகை ஆற்றுளைய் நின்றனது ஆற்றுமை, ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். என்னை? 'நகாநின்றன்றே சொல்லியது? அங்ஙகை ஒன்றுடைத்து,' என ஆற்றுவது. இனி,

அறியாள் போன்று நினவு கேட்டல்

அறியாள் போறலும் - தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னின்றவிடத்தும், 'தும்மாற் சொல்லப்படுவாளை அறியேனுலோ?' என்னும்.

அதற்குச் செய்யுள் :

"பொறிகெழு கெண்டை *வடவரை மேல்வைத்திப் பூமியெல்லாம்
நெறிகெழு செங்கோல் நடாநெடு மாறன்நெல் வேலிவென்றான்
வெறிகமழ் பூங்கன்னிக் கானல் விளையாட் டயரின்ற
செறிகுழ லார்பலர்; யார்கண்ணு தோ அண்ணல் சிந்தனையே?"

"தினையா எதிர்நின்ற தெம்மன்னர் சேவூர்ப் படச்சிறுகண்
துளையார் கருங்கைக் களிறுந்தி னுன்தொண்டிச் சூழ்துறைவாய்
வளையார் வனமுலை யார்வண்ட லாடும் வரிநெடுங்கண்
இளையார் பலருளர்; யார்கண்ணு தோ அண்ணல் இன்னருளே?"

என்னும். இது கேட்டு ஆற்றுளைய் நின்று, 'என் குறை இன்னர்கண்ணதென்று அறிந்திலள்; அறிந்த ஞான்று முடித்துத் தரும்,' என ஆற்றுவானுவது.

குறியாள் கூறலும் - 'இத்தழை நல்ல; இக்கண்ணி நல்ல; இவை கொள்ளற்பால,' என்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் அவற்றை ஏற்றுக்கொள்ளாது மற்றென்று சொல்லி நீங்குவது.

அதற்குச் செய்யுள் :

குறியாள் கூறல்

"மன்னன் வரோதயன் வல்லத்தொன் னுர்கட்கு வான்கொடுத்த
தென்னன் திருமால் குமரியங் கானல் திரைதொகுத்த
மின்னும் சுடர்ப்பவ ளத்தரு கேவிரை நாறுபுன்னைப்
பொன்னந் துகள்சிந் தி வானவில் போன்றதிப் பூந்துறையே."

*'பொன் மால்வரை' என்பதும் பாடம்.

"காரணி சோலைக் கடையல் இடத்துக் கறுத்தெதிர்ந்தார்
தேரணி தானை சிதைவித்த கோன்கன்னித் தென்துறைவாய்
நீரணி வெண்முத்தி னுல்இந் நெடுமணல் மேல்இழைத்த
ஏரணி வண்டல் சிதைக்கின்ற தால்இவ் வெறிகடலே." (ககஉ)

என்பது கேட்டு, 'இவள் இக்குறை முடியாள்; அவத்தமே வருந்தினேன்; யான் சொல்லியது இருப்ப [1]ஏதிலது ஒன்று சொல்லினமையின்,' என்று *ஆற்றுளியினென். அவ்வாற்றுமை, ஆற்றுவதொன்றனைப் பற்றும்; 'ஆற்றுவது யாதோ?' எனின், 'இவள் பிறிதொன்றிற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன்; அல்லாக்கால், மறு மாற்றம் தாராமை இல்லை; இவள் கவன்று நில்லா நிலைமைக்கண் வருவென்,' என அந்நசையால் ஆற்றும்.

படைத்து மொழி கிளவியும்-†இவன், 'இத்தழை நல்ல; இக் கண்ணி நல்ல; இம்முத்து நல்ல; இவை கொள்ளற்பால,' என்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் இங்ஙனம் சொல்லும்; 'யாதோ?' எனின், 'இவ்விடம் என்னையானும் தன்னையானும் பல்காலும் புகுதரப்படுமால்; அவர் நம்மைக் கண்டால் ஏதம் செய்வார், கூற்றினும் கடுஞ் சினத்தராதலான்; நீர் உடையதோர் குறை உண்டேயெனின், அகன்று நின்று முடித்துக்கொள்ளற்பாற்று,' என்னும்.

படைத்து மொழி யால் மறுத்தல்

அதற்குச் செய்யுள் :

"பொன்னயர் வேங்கையம் பூந்தழை ஏந்திப் புரிக்கிலங்கு
மின்னயர் பூணினை வாரல் சிலம்ப! விழிஞுத்தொன்னர்
மன்னயர் வெய்தவை வேல்கொண்ட வேந்தனம் மாந்தையன்னுள்
தன்னயர் தீயர்; பல்கால் வருவர்இத் தண்புனத்தே." (ககஙூ)

"பூட்டிய மாநெடுந் தேர்மன்னர் பூலந்தைப் பூவழிய
ஓட்டிய திண்தேர் உசிதன் பொதியின் உயர்வரைவாய்
ஈட்டியர் காயினர் வீணயர் வாளியர் எப்பொழுதும்
கோட்டிய வில்லர் குறவர்;கண் ணன்மின் இக் கொய்புனத்தே." (ககச)

---

1. அயலானது ஒன்று

* 'அவ்வாற்றுல் தான் ஆற்றுளியினென்,' என்பதும் பாடம்.

† இவன், 'இத்தழையுமிக்கண்ணியும் நல்ல; இம்முத்துமிவ்விப்பியும் நல்ல,' என்பதும் பாடம்.

'இது படைத்து மொழி கிளவி ஆயினவாறு என்னையோ?' எனின், [1]பெரியார்களிடம் எனப்படுவன பெண் பால்கட்கு உரியவழி ஆண் பால்கள் புகுதலும் ஆண் பால்கட்கு உரியவழிப் பெண் பால்கள் புகுதலும் செய்யப்படாதன. அவற்றை இல்லது படைத்து மொழிந்தமையால் படைத்து மொழி கிளவியெனக் கொள்க. அது கேட்டு ஆற்றுணும்; என்னை? 'இவள் ஒரு திறத்தின் நீக்குதற்கு இவ்வாறு சொல்லுகின்றாள்,' என ஆற்றுன் ஆயினுன்.

அவ்வாற்றுமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும்; 'என் பற்றுமோ?' எனின், 'இவ்வகை என்கண் ஏதத்திற்குக் கவல்வாள், யானெய்தாது விடின் உளதாம் ஏதத்திற்கும் கவலும்,' என ஆற்றுவானும்.

குறிப்பு வேறு கொளலும் - தான்கூட்டம் வேண்டும் குறிப்பினளாயினும் சொல்லும் கூற்றும் குறிப்பும் இன்றி வேண்டாத குறிப்பினளாய்க் காட்டுவது.

அது கண்டும் ஆற்றுணும். என்னை? 'இவள் என் குறை முடியாள். அவத்தமே வருந்துகின்றேன்,' என. இது தானே ஆற்றுதற்குக் காரணம் ஆமாறு: 'ஒக்கும்; பிறிது ஒன்றற்குப் புடை கவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன்; அப்புடை கவற்சியில்லா நிலைமைக்கண் வந்தால், ஒரு மாற்றம் சொல்லும் பிற,' என ஆற்றிப் பெயரும். 'அஃதே எனின், மேலனவும் எல்லாம் 'குறிப்பு வேறு கொள'லே அல்லவே ? *இதனையே குறிப்பு வேறுகொளலெனச் சொல்லியது எற்றிற்கோ?' எனின், அவை எல்லாம் சொல் நிகழ்ச்சியுடைய ; இது சொல் நிகழ்ச்சியின்றிக் கூட்டம் வேண்டாக் குறிப்பினளாவது எனக் கொள்க.

1. 'பெண் பால்கட்கு உரியவழி ஆண் பால்கள் புகுதலும், ஆண் பால்கட்கு உரியவழிப் பெண்பால்கள் புகுதலும் செய்யப்படாதன பெரியார்களிடம்,' என இயைக்க.

* இங்கிருந்து ஐந்து வரிகள் வேறொரு பிரதியிற்காணப்படவில்லை.

இனிப் பிறர், 'குறிப்பு வேறு கொளலும்,' என்ப தனைச் சொல்லுமாறு: தன் குறிப்பினள் அன்றி நின் ரூட்கு, 'என் சொல்லிச் செல்கேன்!' என்னும். அதற்குச் செய்யுள் :

தலைவி தன் குறிப்பினள் அல்லள் என்றல்

"ஆடியல் மாநெடுந் தேர்மன்னர் ஆற்றுக் குடியழியக்
கோடிய திண்சிலைக் கோன்நெடு மாறன்தென் கூடல்அன்னாள்
நீடிய வார்குழல் நீலமும் சூடாள் நினைந்துநின் ரூள்;
தோடியல் பூந்தொங்க லாய்!அறி யேன்சென்று சொல்லுவதே."

"நெறிநீர் இருங்கழி நீலமும் சூடாள்;
பொறிமாண் வரியலவன் ஆடலும் ஆடாள்;
சிறுநுதல் வியர்வரும்பச் சிந்தியா நின்ரூட்
கெறிநீர்த்தண் சேர்ப்ப!யான் என்சொல்லிச் செல்கோ ?"

என இவ்வாறு சொல்ல ஆற்ரூளாயினன், அச்சொல்லே பற்றுக்கோடாக ஆற்றுமென்பது. அவள் தன் குறிப்பினள் அன்றி நின்ரூளெனச் சொல்லினமையின், தன் குறிப்பினளாய் நின்ற பொழுது சொல்லுமென ஆற்றுவானும்.

அன்ன பிறவும் தலைப்பெயல் வேட்கை முன்னுறு புணர்ச்சிக்கு உரிய என்ப-அன்ன மற்றமுள்ள முன்னுறு புணர்ச்சியைப் போலத் 'தலைப்பெய்விப்பல்,' என்னும் உள்ளத்தாள் சொல்லுதற்கு உரிய கிளவிகள் எனக்கொள்க.

[1]அங்ஙனம் ஒதுவான் புகப் பெருகுவது கண்டு சிலவோதிச் சில புறனடுத்தார், அஃது இலக்கணமாகலான் என்பது. 'அன்ன பிறவும்' என்றதனான், இங்ஙனமும் சொல்லும்: 'நீயிர் விருந்தினிராகலான், அவளது அருமை பெருமை அறியீர் அன்றே? அவள் தாமரைக் கொட்டையின் அல்லியே போலக் கிளை புறங்காப்பச் செல்வாள், இந்நிலத்து மிக்காள் ஒரு தலைமகள், எமக்

1. அங்ஙனம் எல்லாவற்றையும் கூறப் புகுந்தால் பெருகுவது அறிந்து, சிலவற்றை எடுத்துக்கூறி, சிலவற்றைப் புறனடையால் கூறினர். ஈண்டுப் புறனடையாவது, 'அன்ன பிறவும்' என்பது.

குக் கண்கூடாகச் செல்வதோர் தெய்வமல்லளோ? அவளைக் கண்ணிற்கண்டு கையிற்கூப்பித் தலையிற்பண்ணிந்து வழிபடச் செல்வதல்லது எம்போல்வார்களால் ஒரு குறை வுணர்த்தும் தன்மையளோ?' என்று சொல்லும். அதற்குச் செய்யுள்:

அருமை சாற்றல்

"புட்புலம் பும்புனல் பூலந்தைப் போரிடைப் பூழியர்கோன்
உட்புலம் போடு செலச்செற்ற வேந்தன் உறந்தையன்னாள்
கட்புல ஞச்செல்லும் தெய்வங்கண் டாய்கமழ் பூஞ்சிலம்பா!
வட்கில ஞகியெவ் வாறு மொழிவன் இம் மாற்றங்களே?" (ககசு)

1 "நேருஞலும் முன்னுள் எல்லியும் ஒருசிறைப்
புதுவை ஆகலின் கிளத்தல் ஞணி,
'நேரிறை வளைத்தோள் நின்தோழி செய்த
* ஆரஞர் வருத்தம் களையா யோ?'என
எற்குறை யுறுதிர் ஆயின், சொற்குறை
எம்பதத் தெளியள் அல்லள்; எமக்கோர்
கண்காண் கடவுள் அல்லளோ பெருமை!
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறம் தைவரும்
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே."

இனி இவ்வகையும் சொல்லும்: 'நீயிர் பெரியீர்; யாம் சிறியேம்; நும்மோடு எம்மிடைக் கட்டுரை பொருந்காது,' என்னும். அதற்குச் செய்யுள்:

குல முறை கூறி மறுத்தல்

"நடைமன்னும் என்றெம்மை நீர்வந்து ஞண்ணன்மின்;நீர்வள்ளாட்
டிடைமன்னு செல்வர் நுமர்;எமர் பாழி †இகலழித்த
படைமன்னன் ‡தென்குல மாமதி போல்பனி முத்திலங்கும்
குடைமன்னன் கோடியர் கொல்லியஞ் சாரல் குறவர்களே."

1. தொல். பொருள். களவியல், சூ. 23. நச். உரை.
* 'ஆருயிர் வருத்தம் களைமா யோளென' என்பதும் பாடம்.
† 'இகன்மலைந்த' என்பதும் பாடம்.
‡ 'தொல்குல மாமதி பெற்றபன் முத்திலங்கு' என்பதும் பாடம்.

"உற்றவ ரேதுமக் கொண்புனல் நாட்டுறு *செல்வர்சொல்லின்
மற்றெமர் ஆய்விடின் வானவன் தானுடை மான்இனையச்
செற்றமர் சேவூர்ப் புறங்கண்ட திங்கள் திருக்குலத்துக்
கொற்றவன் மாறன் குடக்கொல்லி வாழும் குறவர்களே."(ககஅ)

"இழைவளர் பூணண்ணல்! ஈர்ம்புனல் நாடீர நீ;எமரோ,
மழைவளர் மானக் †களிறுந்தி மாகீர்க் கடையல்வென்ற
தழைவளர் பூங்கண்ணி மூன்றுடை வேந்தன்தண் ணம்பொதியில்
குழைவளர் ஆரத் தருவியஞ் சாரல் குறவர்களே." (ககக)

‡"இவளே, கானம் நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே; நீயே,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
§கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே;
நிணச்சுரு அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ?
புலவு நாறுதும்; செலநின் றீமோ;
பெருநீர் வியனுள் எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே;
எம்ம னோரின் செம்மலும் உடைத்தே."

என ஆற்றுளியினன்; ஆற்றுளன், ''நீயிர் பெரியீர்; யாம் சிறியேம்,' என்பதன்றே சொல்லியது? யானும் அத் தன்மையனாக எய்தலாமன்றே?' என்று ஆற்றும் என் பது. இனி இவ்வாறும் சொல்லும். அதற்குச் செய்யுள்:

"நீடுநீர்க் கானல் நெருநலும் நித்திலங்கொண் டையல்! வந்திர்;
கோடுயர் வெண்மணல் கொற்கையெம் மூரிவற்றுல் $குறைவி லம்யாம்
ஆடும் கழங்கும் அணிவிளக்கும் அம்மனையும் பிறவும் எல்லாம்
பாடிய வைப்பனவும் ‖பந்தாடப் படுவனவும் பனிநீர் முத்தம்."

---

* 'உயர்செல்வர்' என்பதும் பாடம்.
† 'களிறுகை' என்பதும் பாடம்.
‡ நற்றிணை, செய். 45.
§ 'கடுந்தேர்ச் செம்மல்' என்பதும் பாடம்.
$ 'குறையேமல்லேம்,' என்பதும் பாடம்.
‖ 'பந்தர்ப் படுவனவும்' என்பதும் பாடம்.

"முன்னேத்தம் சிற்றில் முழங்கு கடலோதம் *மூழ்கிப் போக
'அன்னைக் குரைப்பன் அறிவாய் கடலே!' என் றலறிப் பேரும்
தன்மை மடவார் தணந்துகுத்த வெண்முத்தம் †தயங்கு கானல்
புன்னையரும் பென்னப் போவாரைப் பேதுறுக்கும் ‡புகாரே எம்மூர்."

இன்னும், 'அன்ன பிறவும்' என்றதனுனே தழீஇக் கொள்ளப்படுவனவற்றிற்குச் செய்யுள் :

"வேழம் வினவுதிர்; மென்பூந் தழையும் கொணர்ந்துநிற்றிர்;
ஆழம் உடைய கருமத்திர் போறிர்; அணைந்தகலீர்;
சோழன் சுடர்முடி வானவன் தென்னன்துன் னுதமன்னர்
$தாழ மழையுரும் ஏந்திய கோன்கொல்லித் தண்புனத்தே."

"பாவுற்ற நீந்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிப்பற்றுக்
கோவுற்ற அல்லல்கண் டான்கொல்லிச் சாரலெம் கொய்புனத்துள்
ஏவுற்ற புண்ணெடு மான்வந்த தோவென்னும் ஈர்ஞ்சிலம்பா !
மாவுற்ற புண்ணிற் கிடுமருந் தோநின்கை வார்தழையே?" (கஉக)

"வேனக நீண்டகண் ணுளும் விரும்பும் சுரும்பரற்றத்
தேனக நீண்டவண் டார்கண்ணி யாய்!சிறி துண்டு:தெவ்வர்
வானக மேறவல் லத்துவென் றுன்கொல்லி மால்வரைவாய்க்
கானக வாழ்நரும் §கண்டறி வார்இக் கமழ்தழையே." (கஉஉ)

"துடியார் இடைவடி வேற்கண் மடந்தைதன் சொல்லறிந்தால்
கடியார் கமழ்கண்ணி யாய்!கொள்வல் யான்களத் தூரில்வென்ற
வடியார் இலங்கிலை வேல்மன்னன் வானே றணிந்தவென்றிக்
கொடியான் ¶மழைவளர் கொல்லியஞ் சாரல்இக் கொய்தழையே."

"அங்கேழ் அலர்நறுங் கண்ணியி னுய்!அரு ளித்தரினும்
எங்கேழ் அவருக் கியைவன போலா; இருஞ்சிறைவாய்
வெங்கேழ் அயில்நலம் கொண்டவன் விண்தோய் பொதியிலின்வாய்ச்
செங்கேழ் மலரின் தளிரிளம் பிண்டியின் தீந்தழையே." (கஉச)

---

* 'மூழ்கிப்பெயர' என்பதும் பாடம்.
† 'தகைசூழ் கானல்' என்பதும் பாடம்.
‡ 'கொற்கையெம்மூர்' என்பதும் பாடம்.
$ 'தாழுமரையரு' என்பதும் பாடம்.
§ 'கண்டறியார்' என்பதும் பாடம்.
¶ 'மழைதவழ்' என்பதும் பாடம்.

"வேரித் தடந்தொங்கல் அண்ணல் விருந்தா யிருந்தமையால்
பூரித்த மென்முலை ஏழை புணியின்பொல் லாதுகொல்லாம்
பாரித்த வேந்தர் பறந்தலைக் கோடிப் படப்பரிமா
வாரித்த கோமான் *மணிநீர் மலயத்து மாந்தழையே." (கூடு)

"ஏமாண் சிலைதுதல் ஏழையும் ஏற்கும்;இன் தேனகலாப்
பூமாண் கமழ்கண்ணி யாய்!நின்ற தொன்றுண்டு: பூழியர்கோன்
பாமாண் தமிழின் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்த்
தேமாண் பொழிலின் அகத்தன்றி இல்லயித் தேந்தழையே." (கூடூ)

† "கைந்நிலத் துக்கணை யால்சிலை உந்திக் கறுத்தெதிர்ந்தார்
செந்நிலத் துப்படச் சீறிய கோன்செழுந் தண்பொதியில்
இந்நிலத் திம்மலை மேலலவ் வாஇருந் தண்சிலம்பா!
எந்நிலத் தெம்மலை மேலஇச் சந்தனத் தீர்ந்தழையே?" (கூஎ)

இவையும் ஏற்கச் சொல்லிக்கொள்க. 'அஃதேயெனின், இவற்கு முடிக்கக் கருதுவாள் இவ்வாற்றூன் இவனை வருத்துவதெற்றிற்கோ?' எனின், தன்கண் ‡நாணுண் டாந்துணையும் குறையாடி, நாணினது நீக்கத்துக்கண் கொண்டு நிலை கூறுவாள் என்பது. 'அஃதேயெனின், முன்னுறு புணர்ச்சி போல, 'தலைப்பெய்விப்பல்,' என்னும் வேட்கை அவட்குரிய என்றமையான், முன்னுறு புணர்ச்சியை உணர்ந்தாளோ?' எனின், உணர்ந்தாளல்லள்; 'அந்நீர்மைக்கு வரம்பெய்தப் புணர்ப்பல்,' என்னும் நினைப்பினள்; அந்நினைப்பினை ஆசிரியன் தான் $முன்னுறு புணர்ச்சியா ஒப்பித்தான் என்பது.

கஙூ. குறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக்
கிழவிக் கில்லை தலைப்பெயல் ஆன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தலைமகளது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'மணிநீண்மலையத்து' என்பதும் பாடம்.

† 'கைந்நிலத் துச்சிலை யாற்கணை சிந்தி' என்பதும் பாடம்.

‡ 'நாணுக் கெடுந்துணையும் குறியாடி' என்பதும் பாடம்.

$ 'முன்னுறு புணர்ச்சியோடு' என்பதும் பாடம்.

இதன் பொருள்: குறையுறு புணர்ச்சி - *குறையுறவினுல் புணரும் புணர்ச்சி, தோழி தேளத்து-தோழி மாட்டு, கிழவிக்கு இல்லை-தலைமகட்கு இல்லை, தலைப்பெயல் ஆன - †தலைப்பெய்தற் கண் என்றவாறு.

தோழி பக்கம் நின்ற குறையுறவினையை கூட்டம் தலைமகட்கு இல்லை என்றவாறு.

'அஃதியாங்ஙனமோ?' எனின், 'ஈங்கு வந்து ஒழுகா நின்ருன் ஒரு தோன்றல் உளன்; அவன் என்னினுவ தோர் குறையுடையான் போலும்! அக்குறை இன்றி யமையாமையான், அக்குறை முடித்தருளாயாயின், என் னைக்குற்றேவல் இழத்தி,' என, அவளை இழப்பதற்கஞ்சிக் குறை நேர்ந்து தலைமகள் தலைமகனை ஏற்றுக்கொண்டு கூடும் கூட்டமில்லை, வழக்கினுட்போல என்பது.

‡ ' " அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்
எவ்விடத் தானும் களவிற் கில்லை "

என அமையாதோ?' எனின், அது சொல்லிப் போந்து,

§ " உள்ளத் துணர்ச்சி தெள்ளிதின் கரந்து
கிழவோள் தேளத்துக் குறையுறூஉம் உளவே
குறிப்பறி வுறூஉங் காலை ஆன "

என்றது சொல்லவே, 'இவ்வகை தோழியால் குறையுறப் புணரும் புணர்ச்சி உண்டுகொல்லோ!' என்று ஐயமாம் என்று மேலதனையே வலியுறுத்தற்கு இச்சூத்திரம் வேண்டிற்று என்பது.

இனி ஒரு சாரார் சொல்லுமாறு: 'குறையுறு புணர்ச்சி தோழி தேளத்துக் கிழவிக்கில்லை,' என அமை யாதோ? 'தலைப்பெயல் ஆன' என்றது எற்றிற்கோ?' எனின், தோழி கூட்டந்தான் தலை இடை கடையென மூன்று வகைப்பட்டது. அவற்றுள் ¶தலைக்கண்ணேயில்

* 'குறையுறவினையுணரும் புணர்ச்சி' என்பதும் பாடம்.

† 'தலைப்பெய்தற்கு இலக்கணம்' என்பதும் பாடம்.

‡ களவியல், சூ. 4.

§ ,, ,, 10.

¶ 'தலைக்கண்ணே அறிய நில்லாது' என்பதும் பாடம்.

லாது இடையாம் தரத்தும் இறுதிக்கண்ணும் எல்லாம், 'இவள் கூட்டமே கூடுகின்றேன்,' என்பது அறிந்தே கூடும். *இங்ஙனம் அல்லாவிடத்து,

1"அருள்புரி நெஞ்சமோ டெஃகு துணையாக
வந்தோன் கொடியனும் அல்லன்; தந்த
நீதவ றுடையையும் அல்லை; நின்வயின்
ஆனா அருமபடர் செய்த
யானே தோழி! தவறுடை யேனே."

என்னுமாறு உண்டோ என்பது. மற்றும் எங்கும் இப் பெற்றியே வந்தன எல்லாம் கொள்க.

கசை. தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோள் இல்லா மொழியுமார் உளவே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், †போய் அறத் தொடு நிலை உணர்த்துவார் அவ்வறத்தொடு நிற்கும் முறைமை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தோழிக்கு உரியவை-தோழி சொல்லு தற்கு உரிய, கோடாய் தேஎத்து - செவிலித்தாய் மாட்டு, மாறு கோள் இல்லா மொழியுமார் உளவே - மாறுகொள்ளாமைச் சொல்லும் சொற்களும் உள என்றவாறு.

'எவற்றினெடு மாறுகொள்ளாமையோ?' எனின், தாய் அறிவினெடு மாறுகொள்ளாமையும், தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையும், தலைமகளது கற்பினெடு மாறுகொள்ளாமையும், தோழிதனது காவ லொடு மாறுகொள்ளாமையும், நாணினெடு மாறுகொள் ளாமையும், உலகினெடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க. 'என்னெத்துக்கண்ணே?' எனின், ‡'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்' என்னும் சூத்திரத் துள் சொல்லப்பட்ட நான்கு இடத்தும் வேறுபாடு உண்

* 'இங்ஙனமில்லாவிட்டவிடத்து' என்பதும் பாடம்.
1. அகம். செய். 72. அடி. 18—22.
† 'பெயர்த்தொருநிலை' என்பதும் பாடம்.
‡ களவியல், சூ. 29.

டாம். அஃது எப்பொழுதுண்டாயிற்று, அப்பொழுதே தோழிக்குப் புலனும். என்னை? தான் அவள் என்னும் வேற்றுமையிலள் ஆகலான். அவ்வாறு ஆயினவிடத்துத் தோழி, 'எனக்குப் புலனுயினவாறே போல யாய்க்கும் புலனுயின ஞான்று வாளா ஒழியாள், அறிவாரை விளவும்; விளவின இடத்து, விளவப்பட்டார் தெய்வத்தினுன் ஆயிற்றென்ப; *என்னை? பிறிதொன்று சூட்டி உணரும் தன்மைத்தன்று இக்குலமாகலானும், [1]அதுவே சொல்லுதற்பயத்தது தம் கருமம் ஆகலானும், [2]அறியாதேயும் சொல்லுப. சொல்ல, இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும்; செய்விக்கத் தலைமகட்குக் கற்பழியும். என்னை? தம் தலைமகனையன்றிப் பிறிதோர் தெய்வம் வணங்கார் பத்தினியாராகலின். தெய்வத்தை வணங்கக் கற்பழியும் என்று தலைமகள் ஆற்றுளாம்.

அல்லதூஉம், [3]'ஒழுக்கக் குற்றக் குறைபாடு நீங்கி ஓங்கிவாராநின்ற தொல் குலம் மணிக்கலம் [4]கதுவாய்ப் பட்டதுபோல [5]யான் தோன்றி இவ்வகை அணங்காட்டு அறியாது அணங்காட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது,' என வும், 'யாம் உற்றது †கிரம்பற்பாட்டினனும் வேலன்றனது வெறியாட்டு வலத்தினனும் எம் பெருமானை அவ்வெறிக் களத்துக் கொண்டுவருங்கொல்லோ!' என்னும் பேரச் சத்தினனும், 'எம் பெருமானை அவ்வெறிக்களத்துக் [6]கொண்டு வருகல்லாது என்கண் நின்ற வேறுபாட்டைப்

---

* இது முதல் ஐந்து வரிகள் வேரூர் எட்டுப்பிரதியில் காணப் படவில்லை.

1. அதனையே சொல்லுதலாகிய பயனை உடையது.
2. தெய்வத்தினுலாயிற்று எனத் தாமறியாதிருந்தும்
3. ஒழுக்கத்தின்கண் உளதாம் குற்றமாகிய குறைபாடு
4. குற்றப்பட்டாற்போல
5. ஓங்கி வளராநின்ற தொல்குலம், இவ்வகை வெறியாட்டை அறியாதிருந்து யான்தோன்ற அக்குலத்தால் இவ்வணங்காட்டெடுத்துக் கொள்ளப்படுவதாயிற்று.

† 'நிரப்பப்பாட்டானும்' என்பதும் பாடம்.

6. கொண்டுவாராமல் செய்தற்பொருட்டு

புறத்தார்க்குப் புலனுகாமை மறைப்பதுகொல்லோ!' எனவும், 'அங்ஙனம் மறைத்ததனைக் கேட்ட எம் பெருமான், [1]'என்னினைய வேறுபாடு [2]பிறிதொன்றினனும் நீங்கும்போலும்!' என்று உட்கொள்ளும்,' எனவும் தலைமகள் ஆற்ருளாம் என்று தோழி ஆற்ருளாம்.

ஆற்ருளாயினளது ஆற்ருமை, ஆற்றுவதொன்ற னைப்பற்றும்; ஆற்றுவது பிறிதின்மையின், 'யாய் *அறிவாரை வினவுமிடத்து என்னை வினவும்; வினவ, யான் அறியேன் என்றதன் புறத்தாம் பிறரை வினவுவது; அங்ஙனம் என்னை வினவினவிடத்து இனி யாது சொல்லுவேன்!' என்று [3]கூட்டமில் நாட்ட வகையால் சிந்தித்துக்கொண்டிருந்தாள்; இருந்த நிலைமைக்கண் தாய் பிற்றை ஞான்று சிறுகாலையே படிமக்கலத்தொடும் புக்காள், மகளை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கினள்; நோக்கி, 'அன்னாய், என் மகள் பண்டையள் அல்லளால்; இவ்வேறுபாடு எற்றினன் ஆயிற்று? நின்னல் அறியப்படுவது உண்டோ?' என்னும்; என்றவிடத்து, இவள், 'அன்றுகொண்டு என்னலும் சிறிதுண்டு அறியப்படுவது: யாதோவெனின், எம்மைக்கூழைக்கற்றைக்குழவிப் பிராயத்து மாழை கலந்த ஏழை நீர்மையாரொடு நாள்தோலம் செய்து, 'விளையாடி வம்மின்,'என்று போக்கினாய்;போக்கின வழி,யாம் போய், ஒரு வெண்மணல்பரந்த தண்†மலர்ப் பொழிலிடை விளையாடி நின்றேமாக, ஒரு தோன்றல் ‡இரு சுனைக்குவளைப் பூக்கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின் மகள் அவனை நோக்கி, 'அப்

---

1. என்னல் தலைவிக்கு உண்டான வேறுபாடு

2. என்னல் நீங்குவது மாத்திரமன்றி, வேருென்றினலும் நீங்கும் போலும்!

* 'இவற்றை வினவுமிடத்து' என்பதும் பாடம்.

3. பலவற்றிற்செல்லாமல் ஒன்றிலேயே செல்லும் கருத்தினல் ஆராயும் ஆராய்ச்சி வகையினல்

† 'மணப்பொழில்' என்பதும் பாடம்.

‡ 'ஒரு சுனைக்குவளைப்பூ' என்பதும் பாடம்.

பூவினை என் பாவைக்கு அணியத் தம்மின்,' என்றாள்; அவனும் பிறிது சிந்தியாது கொடுத்து நீங்கினன்; இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்தது,' என்னும். அதற்குச் செய்யுள்:

அறத்தொடு நிற்றல்

"கந்தார் களிறு கடாய்ச்செந் நிலத்தைக் கறுத்தெதிர்ந்து
வந்தார் அலியவை வேல்கொண்ட கோன்*கன்னி வார்துறைவாய்ப்
பந்தார் விரலிதன் பாவைக்கு வேண்டப்†பைம் போதொருவர்
தந்தார்; தரஅவை கொண்டணிந் தாள்இத் தடங்கண்ணியே."

"திண்போர் அரசரைச் சேவூர் அழிவித்த தென்னன்நன்னீர்
மண்போய் அழிக்குஞ்செங் கோல்மன்னன் வையைஎன் னூடனையாள்
கண்போல் குவளையம் போதங்கொர் காலையைக் கண்டிரப்பத்
தண்போ தவன்கொடுத்தான்; அணிந் தாள்இத்தடங்கண்ணியே."

இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததனை அறிவதறிந்து, கொண்டார்க்குரியர் கொடுத்தார் என்பதும் உற்றூர்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பதும் நினைந்து, அவனை வழிபடாது [1]பிறிதோராறு ஆவதாயின், இக்குலத்துக்கு வடுவாங்கொல்லோ எனக் கருதினமையான், நின் மகள் வேறுபட்டதென்னும். எனவே, தாயறிவினெடு மாறுகொள்ளாதாயிற்று: என்னை? 'விளையாடி வம்மின்,' என்றமையின். இனி, பெருமையொடு மாறுகொள்ளாதாயிற்று, அக்காலத்து நற்செய்கை செய்ததனை இக்காலத்து நினைந்தமையின். இனி, கற்பினெடு மாறுகொள்ளாதாயிற்று, 'இவ்வாறு அன்றிப் பிறிதோராறு ஆயின இடத்துக் குடிக்கு ‡வடுவாம்,' எனக் கருதினமையின். இனி, தன் காவலொடு மாறுகொள்ளாதாயிற்று, இருவரும் இருந்த நிலைமைக்கண் நிகழ்ந்ததென்றமையின். இனி, நாணினெடு மாறு

---

* 'சென்னி வார்பொழில்வாய்' என்பதும் பாடம்.

† 'பனிக்குவளை' என்பதும் பாடம்.

1. வேறு தெய்வம் தொழுவதாகிய வேறு ஒரு வழி

‡ 'வழு' என்பதும் பாடம்.

கொள்ளாதாயிற்று, அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்த தென்றமையின். இனி, உலகினெடு மாறுகொள்ளாதா யிற்று, உற்றுர்க்குரியர் பொற்றொடி மகளிர் என்றமை யின். இது மாறுகோள் இல்லா மொழியாய் நிகழ்ந்த வாறு. இது பூத்தரு புணர்ச்சி.

இனி, களிறு தரு புணர்ச்சிக்குச் செய்யுள்:

"உறுகற் புடைமையின் உள்ளும்இப் பேதை உரிதன்ஒன்னுர்
மறுகத் திறலுரும் ஏந்திய கோன்கொல்லி மால்வரைவாய்த்
துறுகல் புனமும் சிதைத்தெங்கள் தம்மையும் துன்னவந்த
சிறுகண் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே." (கஉ0)

"கனஞ்சேர் முலைமங்கை உள்ளுமிப் போதும் கடையலொன்னுர்
மனஞ்சேர் துயர்கண்ட வானவன் மாறன்மை தோய்பொதியில்
புனஞ்சேர் தினையும் கவர்ந்தெம்மைப் போகா வகைபுகுந்த
சினஞ்சேர் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே." (கஉக)

இவையும் அவ்வாறே உரைத்துக்கொள்க.

இனி, புனல் தரு புணர்ச்சிக்குச் செய்யுள்:

"ஓங்கிய வெண்குடைப் பைங்கழல் செங்கோல் உரிதன்வையை
வீங்கிய தண்புனல் ஆடி விளையாட் டயர்பொழுதில்
தேங்கிய தெண்திரை வாங்க ஒழுகிநின் சேயிழையாள்
நீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே." (கஉஉ)

"சின்னுள் மறந்திலம் யாமும்தென் சேவூர்ச் செருமலைந்த
மன்னுள் செலச்செற்ற வானவன் மாறன்வை யைத்துறைவாய்ப்
பொன்னுர் புனலெம்மை வாங்கும் பொழுதங்கொர் பூங்கணைவேள்
அன்னன் ஒருவன் அணைந்தெமக் குச்செய்த ஆரருளே." (கஉஊ)

இவையும் அவ்வாறே உரைத்துக்கொள்க.

*"'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனே டொழுகலான்
நீணுக †நறும்பைந்தார் தயங்கப்பாய்ந் தருளினுல்
பூணுகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம்

---

* கலித்தொகை, செய். 39.

† 'நறுந்தண்டார்' என்பதும் பாடம்.

வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே.''

என இதுவும் புனல் தரு புணர்ச்சி.

இனி, உம்மையான் மாறுகோளில்லாக் குறிப்பும் உள எனக்கொள்க. அக்குறிப்பு நிகழுமாறு: இவளை வினவாதே அறிவாரை வினயினவிடத்து, அறிவோர் தெய்வத்தினுன் ஆயிற்றென்ப. என்றக்கால், தெய்வத்திற்கு வழிபாடு செய்விப்பான் வேலனைக் கூவி வெறியாட்டு எடுத்துக்கொண்டு வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லும். அதற்குச் செய்யுள்:

''வண்டார் இரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்த
விண்டார் உடலின் மறியறுத் தூட்டி வெறியயர்த்து
தண்டார் முருகன் தருகின்ற வேல்!தண் பூஞ்சிலம்பன்
ஒண்டார் அகலமும் உண்ணுங்கொலோநின் உறுபலியே!'' (கஙச)

* '' முருகயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன்:
பல்வே றுருவின் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
† ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே!''

என்பனவற்றுள் சொல்லப்பட்டது, 'சிலம்பன் ஒண்தார் அகலமும் பலியுண்ணுமேல், தக்கது நின்னால் செய்யப்படுகின்றது,' என்றவாறு. அது கேட்ட தாய், 'என் சொல்லியவாறே ?' என்னும், அவள் குறிப்பறிதற்கு. என்ற இடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற் பாளாம் என்பது.

இனி, தெய்வம் ஏறியது கண்டு அதனை நோக்கி அருகு நின்றார்க்கு உரைப்பாளாய் உரைக்கும். அதற்குச் செய்யுள் :

---

* குறுந்தொகை, செய். 362.

† 'தண்டாரகலமும்' என்பதும் பாடம்.

"வாரணங் குங்கழல் வானவன் மாறன்வண் கூடல்அன்ன
வேரணங் கும்இள் மென்முலை யாட்கிருந் தண்சிலம்பன்
தாரணங் காவ தறிந்தும் வெறியின்கண் தாழ்ந்தமையால்
ஆரணங் காயினும் ஆக;இச் செவ்வேள் அறிவிலனே." (கஉடு)

"பொன்னணங் கீர்ம்புனல் பூலந்தை ஒன்னர் புலால்அலைந்த
மின்னணங் கீரிலை வேல்தென்னர் கோன்வியல் நாட்டவர்முன்
தன்னணங் கன்மை அறிந்தும் வெறியின்கண் தாழ்ந்தமையால்
மன்னணங் காயினும் ஆக; இச் செவ்வேள் மதியிலனே." (கஉசு)

* "கடவுள் கற்சுனை அடையிறத் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன்னியத் தாடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்னணங் கன்மை அறிந்தும் †அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவுள் ஆயினும் ஆக;
மடவை மன்ற வாழிய முருகே!"

என இவை கேட்ட தாய், 'என் சொல்லியவாறே ?' என்னும், அவள் குறிப்பறிதற்கு. என்றவிடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்பாளாம்.

கடு. முற்படப் புணராத சொல்லின் மையின்
கற்பெனப் படுவது களவின் வழித்தே

'என்பது என்னுதலிற்றே ?' எனின், கற்புக்கு இலக்கணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: 'முற்படப் புணராத சொல் இன்மையின்' என்றது, மொழி மாற்றுச் சூத்திரம்; அதனை, 'புணராத முற்படச் சொல் இன்மையின்' என்று மொழிமாற்றிக் கொள்க. கற்பு எனப்படுவது களவின் வழித்தே - கற்பென்பதற்குச் சிறப்புடையது களவின் வழித்து என்றவாறு.

---

* கற்றிணை, செய். 34.

† 'மாணத' என்பதும் பாடம்.

என்னை? புணராத முன் சொல் இன்மையின், கற் பென்று சிறப்பிக்கப்பட்ட ஒழுக்கம் களவென்னும் ஒழுக் கத்தின்வழித்தென்றவாறு. *களவின்கண் புணராதமுன் சொல் இல்லை என்வே, புணராத முன் சொல் நிகழும் என் பாரை மறுத்தாராம். இனி, புணராதமுன் சொல் இல்லை எனவே, புணர்ச்சியுள்ளும் புணர்ச்சிப் பின்னும் சொல் உள எனப்பட்டதாம். ஆயினும், புணர்ச்சியுள் புலனல்ல †அவர்க்குத் துப்பாயினல்லதென்பது. இனி, புணர்ச்சி யின்பின் ‡சொற்கள்புலனும்; 'அவையாவையோ?'எனின் நயப்பு உணர்த்தினவும் பிரிவச்சமும் வன்புறையும் எனக் கொள்க. அப்பெற்றிப்பட்ட களவொழுக்கத்தின் வழி நிகழ்ந்து பின்னைத் தமரால் பெற்று எய்துவது கற்பு எனக் கொள்க. எனவே, இவ்வாற்றானும் உலகக் கள வன்று என்பது பெற்றாம்; என்னை? உலகக்களவு புண ராத முன்னும் சொல் நிகழ்ச்சி உடைமையின் என்பது. ''கற்புக் களவின் வழித்து,'என்னுது, 'எனப்படுவது'என் றது எற்றிற்கோ?' எனின், 'களவின்வழி நிகழாதேயும் உண்டு உலகக் கற்பு; அஃது இத்துணைச் சிறப்பின்று,' என்றற்குச் சொல்லப்பட்டது. எனவே, இச்சூத்திரப் பொருள் களவினையும் கற்பினையும் தழீஇயிற்று என்பது.

கசு. களவினுள் தவிர்ச்சி காப்புமிகின் உரித்தே
வரைவிடை வைத்த காலை ஆன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், களவு காலத்துச் சென்று ஒழுகாநின்ற தலைமகற்கு இடையிடும் இடை யீடு இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி - களவு காலத்துத் தலைமகள் புணராது இடையிடும் இடையீடு (தலைமகளை எய்தாத நாளெனினும் ஒக்கும்), காப்பு மிகின் உரித்தே - காப்பு மிக்க வழியும் உரித்து, வரைவிடை வைத்த காலை ஆன - வரைவிடை வைத்த காலத்துக்கண்ணும் உரித்து என்றவாறு.

---

* 'கற்பினில்' என்பதும் பாடம்.

† 'அவர் கருத்துப் பாயினவல்லது' என்பதும் பாடம்.

‡ 'நிகழுஞ்சொல்லுப்புலனும்,' என்பதும் பாடம்.

'களவினுள் தவிர்ச்சி காப்பு மிக்க வழியும் உரித்து; வரைவிடை வைத்த காலத்துக்கண்ணும் உரித்து,' என்ற வாறு.

காப்பென்பது, தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டல் என இவை. மீகுதல் என்பது, பெருகுதல்; அஃது ஒன்று பன்னூலும் வருதலும், பல மயங்கி வருதலும், முறையில் தோன்றலும் என இத்திறத்தான் ஆம் என்பது.

அவற்றுள், தாய் துஞ்சாமை என்பது, தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாகின்ற காலத்து ஒரு நாள் தாய் கண்படாளாகி, மகளை அறிவும் ஆசாரமும் கற்பித்தற் பொருட்டாக இருக்கும்; இருந்த காலத்தும் இடையீடாம் என்பது.

நாய் துஞ்சாமை என்பது, வழியறி ஞமலி பட்டதற் கெல்லாம் எப்பொழுதும் குரைத்தக்கால், அதுவும் ஆகாதன்றே? 'என்னைகொல்லோ இவ்விடத்துப் பல் காலும் குரையாநின்றது!' என ஆராய்ச்சி வரும்; அதனால், இதுவும் இடையீடாம் என்பது.

இனி, ஊர் துஞ்சாமை என்பது, ஊர் கொண்ட பெரு விழா நாளாய்க் கண்பாடில்லையாமாகவும் இடையீடாம் என்பது. அவை மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளி விழாவே என இவையும், இவை போல்வன பிறவும் எல்லாம் அப்பெற்றியான பொழுது இடையீடாம் என்பது.

காவலர் கடுகுதல் என்பது, காவலரென்பார் காப்பாளர். ஊர் காத்தல் இடம் காத்தல் என இவற்றைக் 'கடிது காத்தும்,' என்று காவலாளர் ஏமம் சூழ்ந்து கை விளக்கினெடு திரிவாரன்றே? அப்பெற்றியான பொழுதும் இடையீடாம் என்பது.

நிலவு வெளிப்படுதல் என்பது, நிலாப் பகல் போலும் பெற்றித்தாய், அன்று ஞாயிறு பட்டவாறே எழுந்து ஞாயிறு எழுந்துணையும் இடையீடாம் என்பது.

பிறவுமன்ன. இவற்றுக்கெல்லாம் செய்யுள் * 'காம மிக்க கழிபடர் கிளவி,' என்னும் சூத்திரத்துள் சொல்லுதும்.

''வரைவிடை வைத்தகாலையான,' என்பதே சூத்திர மாயின், காப்பு மிகினும் வரைவிடை வைத்த காலையும் களவின் இடையீடாம் என்பது பொருந்தாது, வரைவிடை வைத்த காலைக் காப்பு மிகினும் இடையீடாம் என்பது அன்றி,' எனின், அஃதே; 'வரைவிடை வைத்த காலையானும்' என்னும் உம்மை இறுதி திரிந்து, 'வரைவிடை வைத்த காலை ஆன' என நின்றது. உம்மை இடைச்சொல்லாகலின், இறுதி திரியும்; என்னை?

† '' தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப ''

என்பது இலக்கணமாதலால் என்பது.

கள. அல்லகுறிப் படுதலும் அவ்வயின் உரித்தே
அவன்வர வறியும் குறிப்பின் ஆன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், இதுவும் களவினுள் இடையீடாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அல்ல குறிப்படுதலும் - குறியல்லதனைக் குறியாகக் கருதலும் (குறியாமாறு போக்கிச் சொல்லுதும்), அவ்வயின் உரித்தே - இதுவும் களவினுள் இடையீடாதற்கு உரித்து, அவன் வரவு அறியும் குறிப்பின் ஆன - அவன் வரவினை அறிவிக்கும் குறிப்பு அவனனன்றிப் பிறிதின் நிகழ்ந்து சென்றவிடத்து என்றவாறு.

அஃதாமாறு: தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகா நின்ற காலத்து ஒரு நாள் தலைமகன் செல்லாமே அவனால் செய்யப்படும் குறிப்புக்கள் தாமே வெளிப்பட்டன. அவை புன்னைக்காய் நீரிலிடுதலும், புள் எழுப்புதலும் என இவை.

---

* களவியல், சூ. 30.

† தொல். சொல். இடை. சூ. 3.

அவை வேரூனும் நிகழுமாறு: புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் விழும்; வளி எறியவும் விழும்; புள் துளக்கவும் விழும். புள் எழுமிடத்து வெருவியும் எழும்; வேற்றுப்புள் வரவும் எழும். இவை கண்டு, 'இவனை ஆயின,' எனக் கொண்டு போந்து, அவ்விடம் புகுந்து, அவனிருகாமை உணர்ந்து போந்து, மனையகம் புக்க பின்னை அவன் வந்து அக்குறி செய்யும்; செய்தக்கால், இரண்டாவது கொண்டு போகல் ஆகாதன்றே? என்னை? சிறிது முன்னுகப் போனானன்றே, அக்கை புடை பெயராமைப் போகின்றானென்று உற்றார் பின்நின்று ஆராய்தலான் என்பது. 'அகத்தினின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து *நின்று பெயர்ந்தேம்,' என்பதனை அவனுக்கு †உணர்த்தும், திங்கள்மேல் இட்டானும் அன்னத்தின்மேல் இட்டானும் ‡ஓதத்தின்மேல் இட்டானும் என்பது. அதற்குச் செய்யுள்:

"அறைவாய் அதிர்கழல் வேந்திகல் ஆற்றுக் குடியழித்த
கறைவாய் இலங்கிலை வேல்மன்னன் கன்னியம் கானலின்வாய்
இறைவாய் அணிவளை யாய்!என்னை கொல்லோ இரவினெல்லாம்
தறைவாய் இளம்புன்னை மேலன்னம் ஒன்றும் துயின்றிலவே!" (கஉஎ)

"பூநின்ற வேல்மன்னன் பூலந்தை வான்புகப் பூட்டழித்த
வேனின்ற வெஞ்சிலை வேந்தன் இரணுந் தகன்அறியும்
பானின்ற இன்தமிழ் அன்னகல் லாய்!நம்பைங் கானலின்வாய்த்
தூநின்ற மென்சிறை அன்னமின் றொன்றும் துயின்றிலவே!" (கஉஅ)

$ "புன்னை நுணைப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் தோழி நடையொக்கும்
அன்னம் நுனையாதி வாழி கடலோதம்!"

¶ "அரவுமை மென்தோள் அனுங்கத் துறந்து
கரவலம் என்றுரைக் கண்ட திலையால்
இரவெலாம் நின்றுயால் ஈர்ங்கதிர்த் திங்காள்!"

---

* 'நின்ற போந்தேம்,' என்பதும் பாடம்.

† 'உரைக்கும்,' என்பதும் பாடம்.

‡ இச்சொற்றொடர் மூன் அச்சுப்பிரதியில் இல்லை.

$ ¶ தொல். பொருள். களவியல், சூ. 42. நச். உரை.

இவற்றுள் யாதானும் ஒன்றன்மேல் வைத்துச் சொல்லும்; சொல்ல, 'இரவெலாம் என்பாலராய் நின்று துயிலாராயினர் போலும்! என்னை? தாம் துயிலாது நின்றாரன்றே துயிலாதனை அறிவார்? இவற்றின் துயிலெழ, வினையேன் குறி என்று வந்து பெயர்ந்தார் போலும்!' என ஆற்றாளைப் பெயரும். பெயர்வான், இறந்துபடாளையிற்று. 'எற்றிற்கோ?' எனின், இறந்து படானன்றே? 'யான் இறந்துபடின், இவளும் இறந்து படும்,' எனக் கருதி என்பது. அவ்வகைப் பெயர்வான் தன் நெஞ்சினை நெருங்கியதற்குச் செய்யுள்:

"ஒளியார் திருநுத லாளை எளியள்என் றுன்னிவந்து
விளியா வருந்துயர் செய்தமை யால்விழி ஞத்துவென்ற
களியார் களிற்றுக் கழல்கெடு மாறன் கடிமூனைமேல்
தெளியா வயவரில் தேய்வாய் அளியஎன் சிந்தனையே!" (கஙஉ)

* "ஏரார் குழல்மட வாளை எளியள்என் றுன்னிவந்து
தீரா விழுமம்தந் தாய்;தென்னன் சேவூர்ச் செருவடர்த்த
காரார் களிற்றுக் கழல்மன்னன் மாறன் கழல்பணிந்து
சேரா வயவரில் தேய்வாய் அளியஎன் சிந்தனையே!" (கசo)

† "குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி மூன்துறை
அயிரை ஆரைக் கணவன் தாங்குச்
சேயள் அரியோள் படர்கி
நோய நெஞ்சே! நோய்ப்பா லோயே."

எனக் கண்டுகொள்க.

கஅ. குறியேனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த இடம்என மொழிப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், குறி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* இச்செய்யுள் மூன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் எட்டுப் பிரதியிற்கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

† குறுந்தொகை, செய். 128.

இதன் பொருள்: குறியெனப்படுவது-குறியென்று சொல்லப்படுவது, இரவினும் பகலினும் என்றாயினும் மொழிமாற்றிப் பகலின்கண்ணும் இரவின்கண்ணும் எனக் கொள்க. என்னை? பகற்குறி நிகழ்ந்த பின்னை இரவுக்குறி நிகழற்பாலதாகலான். அவ்வொழுக்கம் நிகழ்ந்த முறையான் நோக்கி மொழி மாற்றுச் சூத்திரமாகப் பொருள் உரைக்கப்படும். 'அஃதேயெனின், 'குறியெனப்படுவது பகலினும் இரவினும்,' என அமையாதோ?' என்பது கடா; அதற்கு விடை, அவ்வொழுக்கம் மறைத்தலைத் தனக்கு * இலக்கணமாக உடைத்தாகலான், இரவுக்குறி பொருந்திய தூணைப் பகற்குறி †பொருந்திற்றன்று என்பதனை உணர்த்துதற்பொருட்டுச் சூத்திரத்துள் 'இரவினும் பகலினும்' என இரவுக்குறி முன் வைக்கப்பட்டது. அறியக் கிளந்த இடமென மொழிப-உணரச் சொல்லப்பட்ட இடம் என்ப ஆசிரியர் என்றவாறு.

'யார்க்கு யார் சொல்லிற்றோ?' எனின், தோழி தலைமகற்குச் சொல்லும் என்றவாறு. அஃதாமாறு, [1]தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின்னின்ற இடத்து, ஆற்றுவன சில சொல் சொல்லி ஆற்றுவித்துக் குறை நயப்பித்து அவ்வாறு நின்ற தோழியைப் பின்னும் தலைமகன் எதிர்ப்படும்; எதிர்ப்பட்டானை, 'இன்ன இடத்து வா,' என்று குறிப்பினன் உணர்த்தும். அதற்குச் செய்யுள்:

"மருள்போல் சிறைவண்டு பாட நிலவன்ன வார்மணல்மேல்
இருள்போல் கொழுநிழல் பாய்அறிந் தார்கட்கின் றீர்ந்தமிழின்
பொருள்போல் இனிதாய்ப் புகழ்மன்னன் மாறன் பொதியிலின்கோன்

---

* 'அணிகலமாக' என்னும் முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம் சிறப்புடைத்தன்று.

† 'பொருந்திற்று' என்னும் முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம் பொருட்பொருத்தமின்று.

1. தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின்னின்ற இடத்து அவனை ஆற்றுவிக்கும் சில சொல் சொல்லி ஆற்றுவித்து, தலைமகனைக் குறை நயப்பித்தவாற்றான் நின்ற தோழியைப் பின்னும் தலைமகன் எதிர்ப்படும்,' என்பதும் பாடம்.

அருள்போல் *குளிர்ந்தன்ன மும்தன்னும் நீர்த்தெங்கள் ஆடிடமே.''

''காவியந் தண்துறை சூழ்ந்து கடையல் கறுத்தவர்மேல்
தூவியம் பெய்தவன் தொண்டிவண் டார்புன்னைத் தூமலர்கள்
தாவிய வெண்மணற் றுய்அறிந் தார்கட்குத் தண்தமிழின்
ஆவியும் போல இனிதாய் உளதெங்கள் ஆடிடமே.'' (கசஉ)

அது கேட்டு, 'இவ்விடத்துக்கண் வா என்னூள்,' என்பதனை உணர்ந்து, அவ்விடத்திற்குச் செல்லும். செல்ல, தலைமகனது வரவு உணர்ந்து, தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சென்று, 'யான் செங்காந்தள் பூக்கொய்துகொடு வருவன்; அவ்விடம் தெய்வம் உடைத்து; நின்னால் வரப்படாது; நீ அவ்வளவும் இப் பொழிலிடத்தே நில்,' என்று நிறீஇ நீங்கும். அதற்குச் செய்யுள் :

'அஞ்சிறை வண்டறை காந்தளம் போதுசென் றியான்தருவேன்;
பஞ்சுறை தேரல்கு லாய்!வரற் பாற்றன்று பாழிஒன்னூர்
நெஞ்சுறை யாச்செற்ற வேல்மன்னன் கேரி நெடுவரைவாய்
மஞ்சுறை சோலை வளாய்த்தெய்வ மேவும் வரையகமே.'' (கசஙூ)

''நீவிரி கோதை! இங் கேநில்;நின் னல்வரற் பாலதன்று;
தீவிரி காந்தள்சென் றியான்தரு வேன்;தெய்வம் அங்குடைத்தால்
பூவிரி வார்பொழில் பூலந்தை வானவன் பூவழித்த
மாவிரி தானையெங் கோன்கொல்லி சூழ்ந்த வரையகமே.'' (கசச)

† ''செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியாஅனைக்
‡ கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் சூலைக்காந் தட்டே.''

இவ்வாறு நீடு சொல்லி நீங்கும். நீங்க, தலைமகள் பொழிலிடத்து நிற்கும். நின்னூளைத் தலைமகன் எதிர்ப் பட்டுப் புணரும். புணர்ச்சி இறுதிக்கண் தோழி வந்து,

---

* 'சுரந்து' என்பதும் பாடம்.

† குறுந்தொகை, செய். 1.

‡ 'கழலுரூஉ சேஎய குன்றம்' என்பதும் பாடம்.

'நின் கைபோலக் காந்தள் மலர்ந்தன கொண்டு வந்தேன்; எம் பெருமாட்டி, நீட்டித்தாளென்று சீறியருளாது போந்தருள்,' என்று அவளைக் கொண்டுபோய் * ஆய வெள்ளத்தொடு கூடும். இது பகற்குறி ஆமாறு.

இவ்வகை பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் [1]காணும் பொழுதின் காணப்பொழுது பெரிதாகலான், ஆற்றுளாய், [2]நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து, [3]கடலிற்கானும், கானலிற்கானும், புள்ளிற்கானும், நெஞ்சிற்கானும், வறிதே குழவி அழுதாற்போல யாதானும் ஒரு சொல் சொல்லும். அவ்வகை சொல்லுமதற்குச் செய்யுள் :

"பொருமா மணிமுடி மன்னரைப் பூலந்தைப் பூவழித்த
குருமா மணிவண்ணன் கோன்நெடு மாறன் குமரிமுன்நீர்
அருமா மணிதிகழ் கானலின் வாய்வந் தகன்றகொண்கன்
திருமா மணிநெடுந் தேரொடு சென்றதென் சிந்தனையே." (கசஞ)

தலைமகள் அவ்வாறு சொல்லி, அவ்விடத்துத் தலைமகன் கேட்பின், வரைந்து புகுவானும்; தோழி கேட்பின், தலைமகனை வரைவு கடாவுவாளாம். யாரும் கேட்பார் இல்லையாயின், தலைமகள் சொல்லி ஆற்றுவாளாம். மூடி இருந்து வேவதோர் கொள்கலம் †மூய் திறந்த இடத்து ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினற்போல, அச் சொல் சொல்ல ஆற்றுமை [4]பண்டையின் சிறிதளவு படுவதாம்.

---

* 'ஆய வெள்ளத்தோடும் கூட்டும்' என்பதும் பாடம்.

1. காணும் பொழுதினும் காணப்பொழுது பெரிதாகத் தோன்றுதலால்

2. மனத்தின்கண் மிக்குத் தோன்றும் எண்ணம் தானே வாய் சோர்ந்து வருதலால்

3. கடலுக்கேனும், கடற்கரைச் சோலைக்கேனும், பறவைக்கேனும், தன் மனத்திற்கேனும்

† 'மூடி திறந்த' என்பதும் பாடம்.

4. முன்னையிற்சிறிதளவு குறைவதாம்.

இனி, பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதின் காணப்பொழுது பெரிதாகலான், தலைமகள் ஆற்றுளாயின இடத்துத் தோழி அவளது ஆற்றுமைக்குப் பரிந்து உடனுயிருந்த புள்ளு நோக்கி, 'இவை கண்டு ஆற்றிச் செல்வாட்கு [1] இவையும் நீங்கின; இனி எங்ஙனம் ஆற்றுங்கொல்லோ!' எனத் தலைமகற்குச் சிறைப்புறனுகச் சொல்லும். அதற்குச் செய்யுள் :

"அன்னம் புரையும் நடையாள் புலம்பெய்த அத்தமென்னும்
பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும் போயினவால்
தென்னன் திருமால் கழல்நெடு மாறன் திருத்துசெங்கோல்
மன்னன் குமரிக் கருங்கழி மேய்ந்தவண் டானங்களே." (கசசு)

†"பொருங்கழல் மாறன்புல் லாமன்னர் பூலங்தைப் பூங்குருகி
மருங்கழி நீர்மூழ்கக் கண்டஎம் கோன்தொண்டிக் கானல்வண்டார்
கருங்கழி மேய்ந்தசெங் கால்வெள்ளே அன்னம் கதிரொடுத்தம்
பெருங்கழி காதன்மை நீங்கி ‡இவனிற் பிரிந்தனவே." (கசஎ)

"மேயின தம்படை யோடும்எம் மெல்லிய லாளைவெந்தீப்
பாயின மாலைக்குக் காட்டிக் கொடுத்துப் பரந்துமண்மேல்
ஆயின சீர்அரி கேசரிக் கன்றள நாட்டுடைந்து
போயின தெவ்வரின் போயின கானலில் புள்ளினமே." (கசஅ)

இவ்வகை சொல்லக் கேட்ட தலைமகன், 'யான் வந்து ஒழுகாநின்ற இவ்வொழுகலாறுதான் இவர்க்கு ஆற்றுமைக்குக் காரணமாயிற்றுப் போலும்!' என அவ்வாறு வந்தொழுகாது வரைந்து புகுவானுவது. இவை எல்லாம் பகற்குறியுள்ளே அடங்கும் எனக் கொள்க.

இனி, இரவுக்குறி ஆமாறு: பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன், 'இன்று தெருளும்; நாளைத் தெருளும்,' எனத் தெருளானுய், நெடுங்காலமும் வந்தொழுக, 'இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனுயது அறிந்த

1. இப்பறவைகளும்

† 'பொருங்கழி மான' என்பதும் பாடம்.

‡ 'இவளைப் பிரிந்தனவே' என்பதும் பாடம்.

இடத்து இவள் இறந்துபடும்; இவள் இறந்துபட, இவனும் இறந்துபடும்!' என ஆற்றுளாய், வரைவு கடாதற்குச் செறிப்பு அறிவுறுக்கின்று முன்னுடைத்தாக [1]அறிவுறூஉம். என்னை? கதுமெனத் தமர் இற்செறித்தவிடத்து, 'எமர் எம்மை *இற்செறித்தார் என்ற ஞான்று ஆற்றுளகவும் பெறும்; அதனால், முற்படவே செறிப்பு அறிவுறூஉம்; என்னை? ஆற்றுளும் எனின், 'சொல்லுவது தெளியச் சொன்னேன்,' எனத் தெருட்டுதற்பொருட்டு என்பது.

இனி, தோழி வரைவு கடாவு வகை, குறிப்பினன் வரைவு கடாவுதலும் வெளிப்படையான் வரைவு கடாவுதலும் என இரு திறத்தன. அவற்றுள் குறிப்பினன் வரைவு கடாவுமாறு: 'யாய் எம் †உறுப்பில் குறிக் கொண்டு நோக்கினள்,' என்னும். எனவே, தலைமகன், ''இவர் இற்புறத்துப்போய் விளையாடும் பதத்தர் அல்லர்; இவரை இற்செறிக்க வேண்டும்,' என்று போலும் அவ் வாறு நோக்கியது!' எனத் தெருண்டு, வரைந்து எய்தப் பெறும்.

'யாய் ‡உறுப்பில் குறிக்கொண்டு நோக்கினள்,' என்னும் அதற்குச் செய்யுள்:

''நீர்வண்ணன் வெண்திரை மேல்நின்ற வேந்தன்நெல் வேலிஒன்னார்
போர்வண்ணம் வாட்டிய பூழியன் பூந்தண் குருந்தொசித்த
கார்வண்ணன் போல்வண்ணன் காவிரி நாடன்ன காரிகையாள்
ஏர்வண்ணம் நோக்கினின் றென்னையும் நோக்கினள் எம்மனையே.''

---

1. முன்பின் எதிர் பாராத நிலையில் திடீரென, 'எம்மை இற் செறித்தார்,' எனத் தலைவனிடம் கூறின், அவன் ஆற்றுளதலும் உள தாம் என்றெண்ணிச் செறிப்பறிவுறுத்தல் பின் உளதாயிருக்கவும் தலைவ னது தன்மை அறிந்து அவனைத் தேற்றுதற்பொருட்டுப் பொய்யாகத் தோழி அவனுக்குச் செறிப்பறிவுறுத்துவள்.

*'இற்செறிப்பவென்றனள்' என்பதும் பாடம்.

†‡'உறுப்பிற்கொண்டு' என்பதும் பாடம்.

*"உள்மலி யாமைத் திருத்திப் பொருவான் உடன்றெழுந்தார்
கள்மலி யாமைக் கடையல்வென் றான்கடல் தானை அன்ன
வெள்முலை வான்முறு வல்தையல் ஆகத்து வந்தரும்பும்
இள்முலை நோக்கினின் றென்னையும் நோக்கினள் எம்மனையே." (கடுக)

அல்லது இவ்வாற்றானும் செறிப்பு அறிவுறூஉம். அதற்குச் செய்யுள் :

"செயல்மன்னு மாவது சொல்லாய் சிலம்ப!தென் பாழிவென்ற
கயல்மன்னு வெல்கொடிக் காவலன் மாறன் கடிமுனைமேல்
அயல்மன்னர் போல்கொய்து மாள்கின்ற தால்அணி வானிஞ்சும்
புயல்மன்னு கோட்ட மணிவரைச் சாரல்எம் பூம்புனமே." (கடுக)

'என்னோர் அழியா வகைஎன்னை வெற்ப! இருஞ்சிறைவாய்
மன்னோர் அழியவென் றான்முனை போல்கொய்து மாள்கின்றதால்
மின்னோர் திகழும் மழைகால் கழிய வியலறைவாய்ப்
பொன்னோர் திகழும் அணிவரைச் சாரல் புனத்தினையே." (கடுஉ)

'இனி இவ்விடத்து வரப்பெறும்,' என்பதுபடத் தலைமகற்குத் தோழி முன்னின்று சொல்லவும்பெறும். இனி முன்னிலைப்புறமொழியாகத் தலைமகனது வரவு உணர்ந்து வேங்கைக்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்ப இவ்வாறு சொல்லியும் செறிப்பு அறிவுறுத்தும். அதற்குச் செய்யுள் :

"திரையார் குருதிப் புனல்மூழ்கச் செந்நிலத் தன்றுவென்ற
உரையார் பெரும்புகழ்ச் செங்கோல் உசிதன் ஒண் பூம்பொதியில்
வரையார் திணைப்புனம் கால்கொய்ய நன்னுள் வரைந்துநின்ற
விரையார் மலரியல் வேங்காய்! நினக்கு விடையில்லையே." (கடுந)

"வானுடை யான்முடி மேல்வரை எற்றியும் வஞ்சியர்தம்
கோனுடை யாப்படைக் கோட்டாற் றழிவித்தும் கொண்டவென்றி
தானுடை யான்தென்னன் சத்ரு துரந்தரன் பொன்வரைமேல்
மீனுடை யான்கொல்லி வேங்காய்! நினக்கு விடையில்லையே."

இவ்வாறும் சொல்லும். அதற்குச் செய்யுள்:

---

* இச்செய்யுள் மூன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் ஏட்டுப் பிரதியிற்கண்டமையின், இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

"நன்றுசெய் தாம்அல்லம் என்னுத லாய்!நறை யாற்றுவெம்போர்
நின்றுசெய் தார்உந்தி வந்த நெடுங்கைக் களிற்றுடலால்
குன்றுசெய் தான்கொல்லி வேங்கையை மெல்லரும் பாகக்கொய்தல்
அன்றுசெய் தாம்எனில் நிற்பதன் றோஅகன் புனமே?"(கநிநி)

இங்ஙனமும் சொல்லும். அதற்குச் செய்யுள் :

"உலம்புணீ தோள்மன்னர் ஓடவல் லத்தட் டவர்உரிமை
கலம்புணீ கோதையர் அல்லல்கண் டான்கொல்லிச் சாரல்கண்ணி
வலம்புணீ வில்லோ டிருவிப் புனம்கண்டு வாடிநின்றூல்
சிலம்பணீ கையற்க என்னுங்கொல் வேங்கைச் செழும்பொழிலே?"

இங்ஙனமும் சொல்லும். அதற்குச் செய்யுள் :

"போருங்கண்ணி சூடிவந் தார்படப் பூலந்தைப் பொன்முடிமேல்
இருங்கண்ணி வாகை அணிந்தஎம் கோன்கொல்லி ஈர்ஞ்சிலம்பில்
கருங்கண்ணி காக்கின்ற பைம்புனம் கால்கொய்ய நாள்வரைந்த [தே!"
பெருங்கண்ணி யாரைப்பொன் வேங்கைஎன் றோஇன்னும் பேசுவ

இங்ஙனமும் சொல்லும். அதற்குச் செய்யுள் :

"பைக்கின்ற ஆடர வேர்அல்கு லாள்செல்ல நாள்பணித்த
இக்கின்ற வேங்கை குறையா திளஞ்சந் தனம்குறைத்தார்
மெய்ங்கின்ற செங்கோல் *வினையச் சரத்தன்வின் தோய்பொதியில்
மைங்கின்ற சாரல் வரையக வாணர் மடவியரே." (கநிஅ)

இவ்வகை செறிப்பு அறிவுறுக்கப்பட்ட தலைமகன் தெருள்வானுயின், 'இந்நாள் வரைவல்; அத்துணையும் இவளை ஆற்றுவித்துக்கொண்டிரு. நினக்கு அடைக்கலம்,' எனக் கைப்பற்றும்; கைப்பற்றியதனைத் தோழி சூளுறவாகக் கருதினுள்; உலகத்துச் சூளுறுவார் பசுவையும் பார்ப்பாரையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராகலான், சூளுறவு ஆற்றூர் என்பது நினைந்து, 'நீ வரைவல் என்றதே அமையாதோ? சூளுற வேண்டுமோ? பொய்த்தலும் வாய்த்தலும் உடையார் அன்றே சூளுறுவார்? மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறவு வேண்டுமோ? நின்கண்ணும் பொய்யுண்டாயின், மெய் என்பது இவ்வுலகத்து நிலை பெற்ற வழி இல்லையாகாதே?' என்னும். அதற்குச் செய்யுள்:

* 'விசயசரி' என்பதும் பாடம்.

சூளுறவு மறுத்தல்

"நெய்யொன்று வேல்நெடு மாறன்தென் ஞாடன்ன நேரிழையிம்
மையொன்று வாள்கண் மடந்தை திறத்திட் டறம்திரிந்து
பொய்யொன்று நின்கண் நிகழுமென் றூல்பின்னைப் பூஞ்சிலம்பா!
மெய்யொன்றும் இன்றி ஒழியுங்கொல் லோஇவ் வியலிடமே!"

"திரைப்பால் இரும்புன்ல் சேவூர் எதிர்நின்ற சேரலர்கோன்
வரைப்பால் அடையச்செற் றூன்வையை அன்ஞள் திறத்துவண்டார்
விரைப்பால் நறுங்கண்ணி யாய்!பொய்ம்மை நீசொல்லின் மெய்ம்மையெ
துரைப்பார் பிறரினி யாவர்கொல் லோஇவ் வுலகினுள்ளே!" [ன்ப

* "வேள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி துண்ணிடை வயின்வயின் நூடங்க
மீன்சினை அன்ன வெண்மணல் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி † பிறழ்ந்த
ஆரல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர!
விழையா உள்ளம் விழைவ தாயினும்
என்றும்,
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தன்தக வுடைமை நோக்கி மற்றதன்
பின்ஞ கும்மே முன்னியது முடித்தல்;
அனைய பெரியோர் ஒழுக்கம்; அதனுள்
அரிய பெரியோர்த் ‡தேருங் காலை
நும்மோர் அன்ஞர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோ இவ் வுலகத் தானே!"

என், 'யான் தனக்கு அடைக்கலமென்று கைப்பற்றிற் றைச் சூளுறவாகக் கருதித் திரிய உணர்ந்தாளாகலான் நீட்டிக்கல் ஆகாது,' எனப் பிற்றை ஞான்றே வரை வொடு புகுவானும்.

---

* அகம். செய். 286.
† 'இறந்த' என்பதும் பாடம்.
‡ 'தெரியும்' என்பதும் பாடம்.

இனி, தெருளாஞயின், 'இரவுக்குறி வாரா வரை வல்,' என்னும். அது கேட்ட தோழி, இரவுக்குறியது ஏதம் காட்டி மறுக்கும். 'யாங்ஙனம் மறுக்குமோ?' எனின், 'அரவும் உருமும் புலியும் எண்கும் வெண் கோட்டு யானையும் என்று இவற்றது ஏதம் உடைத்து; *ஏற்றிழிவு உடைத்தாய அருவரையிடத்து ஒரு வேல் துணையாக நீயிர் ஆரிருள் நடு நாள் வரவு ஆற்றும் நீர் மையதோ?'.என்னும். [1]என்பது கேட்ட தலைமகன் ஆற் றுவானுயின், வரைந்து எய்தும்; ஆற்றான் ஆயின், 'இறந்துபடும்,' எனக் கருதி, இறந்துபாட்டு அச்சத்தி னன், இரவுக்குறி நேரும். நேர்ந்தாள், தலைமகற்கு, 'நின் நாட்டார் என்ன பூவினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின்கீழ் விளையாடுவர்?' என்னும். அது கேட்டுத் தலைமகன், 'முன்னெல்லாம் எனக்கு மறுத்தா ளன்றே? மறுத்தாள், இது சொல்லிற்று ஒரு காரணம் நோக்கி,' என உணர்ந்து, தானும், 'நின்னுட்டார் என்ன பூவினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின்கீழ் விளை யாடுவது?' என்னும். என்றக்கால், தோழி, 'யாம் காந் தளும் வேங்கையும் சூடுதும்; சந்தனச் சாந்து பூசு தும்; †பிண்டி மரத்தின்கீழ் விளையாடுவது,' என்னும். அதற்குச் செய்யுள்:

குறியிடம் கூறல்

‡ "வந்தணங் காமன்னர் தேயமுன் னுள்மழை யேயுயர்த்த
கந்தணங் காமத யானைக் கழல்மன்னன் கார்ப்பொதியில்

---

* 'ஏற்றிழிவுடைத்தாயவிடத்து' என்பதும் பாடம்.

1. 'என்று நாம் கூறியதைக் கேட்ட தலைமகன் ஆற்றுவானுயின், வரைந்தெய்துவன்; ஆற்றானுயின், இறந்துபடுவன்,' என்றெண்ணித் தோழி இரவுக்குறியை உடன்படுவாள். (இறந்துபாடு - இறந்துபடுதல், இறந்துபாட்டு அச்சம் - இறந்துபடுவன் என்னும் எண்ணத்தினுல் ஆன அச்சம். இறந்துபடுவன் என்னும் எண்ணத்தை 'இறந்துபாடு' என்றது மரபு வழுவமைதி.)

† 'வேங்கை மரத்தின்கீழ்' என்பதும் பாடம்.

‡ 'வந்திணங் காமன்னர் சாயமுன் னுள்மழை யேறுயர்த்த' என்பதும் பாடம்.

சந்தனம் சார்ந்துசெங் காந்தளம் பூத்தழல் போல்விரியும்
கொந்தணங் கீர்ம்பிண்டி யாம்விளை யாடும் குளிர்பொழிலே.'' (கசுஙக)

''காந்தளம் போதெம் கருங்குழல் போது; கடையல்ஒன்னார்
தார்த்தளர்த் தோடவை வேல்கொண்ட வேந்தன்தண் ணம்பொதியில்
சூர்தம்எம் சாந்தம்; விளையா டிடமும் தளையவிழும்
பூந்தளம் பிண்டி எரிபோல் விரியும் பொழிலகமே.'' (கசுஉ)

குறிஞ்சி நிலமாகலின், இவ்வகை சொல்லும்; அல்லா நிலத்துக்கும் அவற்றுக்குத் தக்கவாறு சொல்லும். இவை சொல்ல, 'ஒக்கும்; 'இவை செய்துவந்து நின்றின்,' என்றவாறு போலும்!' என உணர்ந்து, பிற்றை ஞான்று அப்பூக்கொண்டு சூடி, அச்சாந்து அணிந்து, அம்மரத்தின்கீழ் விளையாடல் குறிசெய்து நிற்கும். நின்ற இடத்து, அவனது வரவு உணர்ந்து தோழி சொல்லிய அதற்குச் செய்யுள்:

வரவுணர்ந்து உரைத்தல்

''அணிகிற மாப்பக டந்திவர் தார்வல்லத் தன்றவியத்
துணிகிற வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலின் சூழ்பொழில்வாய்
மணிகிற மாமயில் என்னீர்கொல் பொன்னேர் மலர்தைதந்த
கணிகிற வேங்கையின் மேல்துயி லாது கலங்கினவே?'' (கசுஙூ)

''கயில்கொண்ட வார்கழல் போர்மன்னர் ஓடக் கடையல்கண்சேந்
தயில்கொண்ட கோன்அரி கேசரி கொல்லி அருவரைவாய்ப்
பயில்வண்டும் தேனும்பண்*போல்முரல் வேங்கைப் பசும்பொழில்வாய்த்
துயில்கொண் டிலதுணை யோடும்†என் செய்தன தோகைகளே?''

இவ்வாறு தலைமகன் வரவு உணர்ந்து, தோழி, 'குவளை அலர்ந்தனவேல், காண்பாம்; பரந்த முல்லை அரும்பினவேல், காண்பாம்,'எனச் சொல்லித் தலைமகளைக் கொண்டு போதும். அதற்குச் செய்யுள்:

குறியிடத்துக் கொண்டு சேறல்

''ஆழிக் கடல்வையம் காக்கின்ற கோன்அரி கேசரிதென்
பாழிப் பகைசெற்ற பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்புறவில்

* 'போல் முரலும்பைம் பூம்பொழில்வாய்' என்பதும் பாடம்.
† 'என்னே செய்ய தோகைகளே' என்பதும் பாடம்.

பூழிப் புறமஞ்ஞை அன்னகல் லாய்!கொள்கம் போதுதியேல்
தாழிக் குவளைநின் கண்போல் விரியும் தடமலரே.'' (கசுரு)

''வீளைக்கின்ற பல்புகழ் வேந்தன் விசாரிதன் விண்டெரிந்து
தீளைக்கின்ற மன்னரைச் சேவூர் அழித்தவன் தீந்தமிழ்போல்
வாளைக்கொன்று கைம்மங்கை யாய்!சென்று கோடும்நின் வாயுள்வந்து
மூளைக்கின்ற முள்ளெயிற் றோர்கொண் டரும்பின முல்லைகளே.''(கசுசு)

என்று தலைமகளைக் கொண்டு போந்து, [1]அக்குறியிடம் புகுந்து, பகற்குறியின்கண் நீங்கினவாறே நீங்கித் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சி இறுதிக்கண் தோழி தலைமகளைக் கொண்டு போதும். இஃது இரவுக்குறி ஆமாறு.

''குறி இரவினும் பகலினும்' என்னுது, 'எனப்படுவது' என்றது எற்றிற்கோ?' எனின், [2]குறி என்றற்குச் சிறப்பு உடையது என்றவாறு.

'வண்டும் தும்பியும் வரிக்கடைப் பிரசமும்
கொண்டு புணர்கரம் பென்றும் முரன்று'

ஐந்து வாயிலானும் கொள்ளப்படும் துப்புரவினைத் தன்னகத்து உடைத்தாய், பல வகைப்பட்ட மரங்களானும் பொலிவு உடைத்தாய், புறத்தார் அகத்தாரைக் காண்பது அரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்பது எளிதாய்,

'விழைவு விடுத்த விழுமி யோரையும்
விழைவு தோற்றுவிக்கும்'

பண்பிற்று என்பதற்குச் சொல்லப்பட்டதுஎன்பது.'அஃதே எனின், 'அறியக் கிளக்கப்பட்ட இடம்' என்னுது, 'கிளந்த இடம்' என்றது எற்றிற்கோ?' எனின், வினைச் சொற்கள் நான்கு விகற்பம் உடைய; 'யாவை அவ்விகற்

---

1. அக்குறியிடம் சென்று பதற்குறியில் நீங்கினவிதமாகவே தோழி தலைவியை விட்டு நீங்குதலால் தனியளாய் நின்ற தலைவியை என்க.

2. 'குறி என்றற்குச் சிறப்புடையது அவ்விடம்,' என்றற்கு ஏன்க.

பம் ?' எனின், [1]கருத்தன், ஏதுக்கருத்தன், கருவிக்கருத்தன், கருமக்கருத்தன் என இவை ; அவற்றுள் கருத்தன் என்பது, தச்சன் எடுத்த மாடம், கொல்லன் செய்த வாள் ; ஏதுக்கருத்தன் என்பது, ஏவினானைக் கருத்தாவாகச் செய்வது: அரசர் தொட்ட குளம், அரசர் எடுத்த தேவ குலம் என இத்தொடக்கத்தன; இனி, கருவிக் கருத்தன் என்பது, வாள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற்குறுணி அரிசிச் சோறு அடும் என இத்தொடக்கத்தன ; இனி, கருமக் கருத்தன் என்பது, தின்னை மெழுகிற்று, கலம் கழுவிற்று, மரம் குறைத்தது என்று சொல்லுவது. 'அறியக் கிளந்த இடம்,' என்னும் அச்சொல் கருமக்கருத்தனைய் நின்றது என்பது. 'அஃதே எனின், இவ்வகை கருமக் கருத்தனைக் சொல்லுதற்கு இலக்கணம் உண்டோ?' எனின், உண்டு :

* "செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே"

என்பது. 'அஃதே எனின், 'குறியெனப்படுவ' என்றூ காதே சூத்திரம் செயற்பாலது ? என்னை? இரவுக்குறி பகற்குறி என்று இரண்டு சொல்லுகின்றமையின்.' அஃதன்று; இடமென்னும் ஒருமை நோக்கால் 'குறியெனப்படுவது' என்றூர் என்பது.

ககூ. இரவுக் குறியே இல்வரை இகவாது

'என்பது என்னுதலிற்றோ ?' எனின், மேற்சூத்திரத்துள் குறி இரண்டு என்றூர், அவற்றுள் இரவுக்குறி நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இரவுக்குறி-இரவின்கண் குறியிடம், இல்வரை இகவாது-இல்லிடத்தை விட்டு நீங்காது என்றவாறு.

---

1. கருத்தன்-இயற்றுதற்கருத்தா. ஏதுக்கருத்தன்-ஏவுதற்கருத்தா. கருவிக் கருத்தன்-கருவியாகிய கருத்தா (கருவியே கருத்தாவாய் வருவது.) கருமக் கருத்தன்-செய்ப்படு பொருளாகிய கருத்தா (செயப்படு பொருளே கருத்தாவாய் வருவது.)

* தொல். சொல். வினை. சூ. 49.

எனவே, 'புறத்தது அன்று,' என்றவாறும்.

"இரவுக் குறியே இல்வரை இகவா
துணர உரைத்த உரையின் ஆன"

என்றார் பிறரும் எனக்கொள்க. 'இரவின்கண் குறி இல் வரை இகவாது,' எனப் 'பகற்குறி இல் வரை இகக்கும்,' என்பது சொல்லினர். 'இராப் புட்கள் உண்ணு,' என் றல், 'பகற்புள் உண்ணும்,' என்பது முடிந்தது. இனி இராக்குறியென்று ஆகற்பாலது இரவுக்குறி என்றாயிற் றுச் செய்யுளாகலான். என்னை ?

* "குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே"

என்றாராகலின்.

20. பகற்குறி தானே இகப்பினும் வரையார்

'என்பது என்னுதலிற்றோ ?' எனின், பகற்குறி இடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பகற்குறிதானே-பகற்குறி இடந்தான், இகப்பினும் வரையார்-இகந்துபடினும் குற்றம் கூறார் என்ற வாறு.

இகத்தல் என்பது, ஒன்றின் இறத்தல் என்றவாறு. இகத்தல் எனினும் இறத்தல் எனினும் ஒக்கும். ஒன் றின் இறத்தல் என்பது, பலவாதல் என்றவாறு. ஒரு ஞான்று வேங்கைப் பொதும்பினுள் ஆம்; ஒரு ஞான்று கோங்கம் பொதும்பினுள் ஆம், குறிஞ்சி நிலமாயின். ஒரு ஞான்று புன்னையங்கானலுள் ஆம்; ஒரு ஞான்று கைதையங்கானலுள் ஆம், நெய்தல் நிலமாயின். இவ் வகை ஏனை நிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க.

"பகற்குறிப் புணர்வுகள் பலவா தும்மே"

என்றாராகலின். 'இகப்பினும் வரையார்,' என்ற உம்மை யால் பகற்குறியும் [1]ஒன்றாகலே வலியுடைத்து. என்னை

* தொல். எழுத். உயிர். சூ. 32.

1. ஓர் இடமாதலே

எனின், தம் குறை முடித்தற்பொருட்டு ஒரு பொழி லகத்தே கொண்டு சென்று விளையாடும் ஆயங்களும் தன் வழிய ஆகலான் என்பது. இனி யார் அறிவார், பண்டு போலாது இப்பருவம் ஒரு கானலகத்தே கொண்டு புகுகின்றாளென் று கருதுவார்க்கு, அறிந்து பல பொழிலி னுள்ளும் புகுதலின் பல பொழிலாகவும் பெறும்.

உக. இரவுமனை இகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை

'என்பது என்னுதலிற்றோ?' எனின், இரவுக்குறி வகுக் கப்பட்ட இடம் வேறுபாடு உடையது கண்டு, அவ்வேறு பாடு உணர்த்துதல் நுதலிற்று. மேல் இரவுக்குறி இல் வரை இகவாது என, [1]இல்வரையகத்து அன்றெனின், சாரான். [2]அவற்றுள்ளும் இரவுக்குறியாதல் சென்றது. சென்றதனை நீக்கியவாறு.

இதன் பொருள்: இரவு மனை இகந்த-இரவின்கண் மனை யகத்து நீங்கிய, குறியிடத்து அல்லது-குறிக்கப்பட்ட இடத்து அல்லது, கிழவோற்சேர்தல் கிழத்திக்கு இல்லை-தலைமகற்சேர்தல் தலைமகட்கு இல்லை என்றவாறு.

எனவே, இல் வரைப்பகத்தே ஆக வேண்டும் என் பதூஉம், மனையகத்து ஆகற்க என்பதூஉம் உணர்த்தப் பட்டன. [3]அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூட காரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி என இவற்றுள் நீங்கி, [4]செய்குன்றும் இளமரக்காவும் பூம் பந்தரும் விளையாடு இடமும் இவற்றைச் சார்ந்தனவற் றுள்ளும் பிறவற்றுள்ளுமாக என்றவாறு. எனவே, பகற் குறி இடம் போல வேறுபட்டது ஆகற்க இரவின் குறி

1. இல்லால் வரையப்பட்ட அகம். அஃதாவது, மனையைச் சார்ந்த இடம். பின், 'இல் வரைப்பு' என்றதும் அது. இல்வரையகத்து அன்றெனில்-இல்லைச் சார்ந்த இடத்து அன்றாயின் (அஃதாவது, மனையகத்தாயின் என்பது).

2. மனைக்கண்ணவாய இடங்களுள்ளும்

3. இவை மனையகமாம்.

4. இவை இல்வரையகமாம்.

இடம் என்றவாறு. 'அஃதே எனின், மனையகத்தாக அழிவதுண்டோ?' எனின், குரவர்கள் உறையும் இடமாதலின், தெய்வத் தானமென்று கருதப்படும். அல்லதூஉம், புகவும் போகவும் அருமை உடைமையானும், ஆகாது என்பது. என்றூர்க்குச் செய்யுள் 'வால மனையகத்துச் சார்ந்தான் தலைமகன்,' எனப்பட வந்தன எனின், அவை அகமல்ல, அகப்புறத்தே அடங்கும் என்பது.

"இரவுக் குறியோன் றெய்தும் அதுவே
மனையோர் கிளவி கேட்கும் இடத்துச்
சேலவுயர் வில்லாத் தோழிமிற் றுகி
மனையிறந் தெல்லையின் மாண்புடைத் தாகும்;
அகப்புற மாயின், மறுதலைப் படுமே"

என்றூர் பிறரும் எனக்கொள்க.

உஉ. அம்பலும் அலரும் களவு

'என்பது என்னுதலிற்றோ?' எனின், களவு ஒழுக்கினது நெடுங்காலச் செலவின்கண் இவர்க்கு நிகழும் உள்ள நிகழ்ச்சி இன்னது என்று உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அம்பலும் அலரும் களவு-அவ்விரண்டும் நிகழ்ந்தன என்பது தாம் அறியினல்லது யாவரும் அறிவாரில்லை; இன்மையின், அவை களவு என்றவாறு.

களவு என்பது, செய்தாரே அறிந்து மற்றொருவர் அறியாததாகலான் என்பது. *அம்பல் என்பது, முகிழ்த்தல்; அலர் என்பது, சொல் நிகழ்தல்; அம்பல் என்பது, சொல் நிகழ்தல்; அலர் என்பது, இல் அறிதல்; அம்பல் என்பது, இல் அறிதல்; அலர் என்பது, அயல் அறிதல்; அம்பல் என்பது, அயல் அறிதல்; அலர் என்பது, சேரி அறிதல்; அம்பல் என்பது, சேரி அறிதல்; அலர் என்பது, ஊர் அறிதல்; அம்பல் என்பது, ஊர் அறிதல்; அலர் என்பது, நாடு அறிதல்; அம்பல் என்பது, நாடு

* 'அம்பலென்பது முகிழ் முகிழ்த்தல்' என்பதும் பாடம்.

அறிதல்; அலர் என்பது, தேசம் அறிதல். அது பொருந்தாது; என்னை? அம்பலெனப்பட்டதே அலரும், அலரெனப்பட்டதே அம்பலும் ஆயின. 'இஃது அம்பற்கு இலக்கணம்; இஃது அலருக்கு இலக்கணம்,' என்று விசேடம் காட்டிற்றிலர்: இவை இரண்டால் தம்மூள் வேற்றுமை பெறப்படுமாகலான் என்பது. 'மற்றென்னே?' எனின், அம்பல் என்பது, சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வதாயிற்று; இன்னதின்கண்ணது என்பது அயல் அறியலாகாது என்பது. அலர் என்பது, 'இன்னானோடு இன்னாளிடையதுபோலும் பட்டது!' என விளங்கச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது, பெரும் போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலரென்பது, அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம். தாம் நெடுங்காலம் இவ்வொழுக்கத்தை ஒழுகினராதலான், வேறு நின்று தம் கருமம் உசாவுவாரை உணர்ந்து, 'இத்தன்மைத்து இவர் ஆராய்வது; இதுபோலும்!' என்று கருதுப. தம் மனத்து ஒரு கோட்டமுடையார், அப்பெற்றியே கருதுவது உலகத்துத் தன்மை. இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனுகாதன்றே, தெய்வத்தினுன் ஆயது ஆகலான்? 'அம்பலும் அலரும் எவ்விடத்து நிகழுமோ?' எனின், காப்புக் கைம்மிக்கவிடத்து நிகழுமென்பது. களவினது நெடுங்காலத்துக்கண், 'இவ்வொழுக்கம் வெளிப்படுங்கொல்லோ!' என்னும் அயிர்ப்பினுன் நிகழும் என்பது. 'அங்ஙனம் அயிர்ப்பினுல் களவொழுக்கம் ஒழிந்து நின்ற நிலைமை கற்பென்று கொள்ளுவேனுயின், வரைந்து புகுந்தின்மையின், கற்பெனலுமாகாது; களவினகத்தென்று கொள்ளுவேனுயின், ஒழுக்கம் நிகழ்கின்றின்மையின், களவெனலுமாகாது; என்னைகொல்லோ இதனை ஒருபால் சார்த்துமாறு!' என்று ஐயப்பட்டு நின்ற மாணக்கற்கு அம்பலும் அலருமென்று நின்ற நிலைமையைக் களவின்பாலே கொள்க என்பது. இது பொருந்தாது; என்னை?

* ''தந்தை தாயே தன்னையர் என்றுங்
கன்னவர் அறியப் பண்பா தும்மே''

என்றமையின், இவரறியாத முன் எல்லாம் களவென் பது போதும் என்பது.

உரு. வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி

'என்பது என்னுதலிற்றோ?' எனின், அம்பலும் அல ரும் ஆயினவென்று உள்ளத்து வெளிப்பட்ட பின்றை நிகழற்பாலது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: 'வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி,' என்றாரெனினும், 'வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரிய,' என மொழி மாற்றிக்கொள்க. கிளவி என்பது, மகட்கூறுதல்; அதுவும் உரித்தென, மற்றுமொன்றுண்டு கூற்றமால். 'அஃதி யாதோ?' எனின், அவனுடன் போக்கும் உரித்தென்றவாறு.

அஃதாமாறு சொல்லுதும்: இது பலராலும் அறி யப்பட்டதென்னும் கருத்தால் நிகழ்கின்ற தலைமகட்கும் தோழிக்கும் உடனே நிகழும். இருவரும், 'யாமே உணர்ந் தேம்,' எனக் கருதுதலால், கதுமென இந்நிலைமைக்கண் வரினும் வாராமைக் கொள்வேன் என்னும் கருத்தினால் பண்டு அவன் வந்து பயின்றவிடத்தே தோழி செல்லும். செல்ல, தோழியை எதிர்ப்பட்ட தலைமகனை வலங் கொண்டு சார்ந்து, முன்பு நின்று, 'நின்னால் தலையளிக் கப்பட்ட தலையளி அலராயிற்று, பலரானும் அறியப் பட்டு,' என்னும். அதற்குச் செய்யுள்:

அலர் அறிவுரைத்தல்

''பலராய் எதிர்நின்று பாழிப்பட் டார்தங்கள் பைந்நிணம்வாய்
புலரா அசும்புடை வேல்மன்னன் வேம்பொடு போந்தணிந்த
மலரார் மணிமுடி மான்தேர் வரோதயன் வஞ்சியன்னுட்
கலராய் விளைகின்ற தால்அண்ணல்! நீசெய்த ஆருளே.'' (கசுஎ)

''போருள்தான் எனநின்ற மானதன் பூலந்தைத் தோற்றுப்புல்லார்
இருள்தான் அடைகுன்றம் எறவென் றோன்கன்னி ஈர்ம்பொழில்வாய்
மருள்தான் எனவண்டு பாடும்தண் தாரண்ணல் வந்துசெய்த
அருள்தான் அலராய் விளைகின்ற தால்மற்றிவ் வாயிழைக்கே.''

* களவியல், சூ. 26.

* "அறிந்தோர் அறனிலர் என்றலர் சிறந்த
இன்னுயிர் கழியினும் நனிஇன் னாதே;
புன்னீயங் கானல் புணர்குறி வாய்த்த
பின்னீர் ஒதியென் தோழிக் கன்னே!
படுமணி யானைப் பசும்பூண் சோழர்
கொடிதுடங்கு மறுகின் ஆர்க்காட் டாங்கண்
கள்ளுடைத் தடவில் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவின் அன்ன
கௌவை ஆகின்ற தையநின் அருளே."

இது சொல்லிப் பின்னும், [1]"நீ இது புகுதருந்துணையும் இவ்வாறு ஒழுகுவாயாயினுய், அறன் அறியாமையான்; அறிதி என்னின், இது புகுதாமை வரைந்தெய்துவாய் மன்னே; அல்லதூஉம், பிறரும் வரைந்தெய்துதற்கு மூலை விலையொடு புகுந்து பொன்னணிவான் நின்றருமூளர்,' எனப்படைத்து மொழிந்து சொல்லும். அதற்குச் செய்யுள்:

மகட்பேச்சு உரைத்தல்

"நீரணி வேலி நெடுங்களத் தொன்னூர் நிணம்அளைந்த [வான்
போரணி வேல்மன்னன் கன்னியன் னுள்தன்னைப் பொன்னணி
காரணி வார்முர சார்ப்பப் பிறரும் கருதிவந்தார்
வாரணி பூங்கழல் அண்ணல்என் னுகி வலிக்கின்றதே!" (கசுகூ)

"வேலைத் தலைத்தகண் ஏழை திறத்தின்று விண்ணுரிஞ்சும்
சோலைச் சிலம்ப! தணிவொன் றறிந்து சுடருமுத்த
மாலைக் குடைமன்னன் வாள்நெடு மாறன்வண் கூடலின்வாய்க்
காலைத் திருமனை முற்றத் தியம்பும் கடிமுரசே." (களo)

"போர்மலி தெவ்வரைப் பூலந்தை வென்றன் புகார்அணைய
வார்மலி கொங்கை மடந்தையை வேறூர் மணங்கருதிக்
கார்மலி வார்முர சார்ப்பப் பிறரும் கருதிவந்தார்
ஏர்மலி தாரண்ணல் என்னே இதன்திறத் தெண்ணுவதே!"

---

* நற்றிணை, செய். 227.

1. அறன் அறியாமையான் இஃது (அலர்) உண்டாமளவும், நீ இவ்வாறு ஒழுகுவாயாஞய்; அறன் அறிவாயாஞல், இது புகுவதன் முன்னே தலைவியை வரைந்துகொள்வாய்.

"வேயும் புரையுமென் தோளி திறத்தின்றை எல்லியுள்விண்
தோயும் சிலம்ப! துணிவொன் றறிந்துதொன் னூல்புலவர்
ஆயும் தமிழ்அரி கேசரி கூடல் அகனகர்வாய்
ஏயும் திருமணி முற்றத் தியம்பும் எறிமுரசே." (களஉ)

இங்ஙனமும் சொல்லும்:

போன்னணிவு உரைத்தல்

"குன்றெறுத்த யாணைச்செங் கோன்றெடி மாறன்தென் கூடலன்ன
மென்தொத் தணிகுழல் ஏழை திறத்து விளைவறிந்தே
இன்றெறுத்த தொன்று துணிநீ சிலம்ப!அன் றுயின்எம்மூர்
மன்றத்து நின்று முழங்குங்கொல் நாளை மணமுரசே." (களஙு)

"நலம்புரி தெய்வமன் னுய்!செய்வ தென்?நறை யாற்றுவென்ற
உலம்புரி தோள்மன்னன் தென்புனல் நாட்டொரு வற்கியைந்து
குலம்புரி கோதையைக் காப்பணிந் தார்;கொடி மாடமூன்றில்
வலம்புரி யோடு முழங்குங்கொல் நாளை மணமுரசே." (களச)

இங்ஙனம் சொல்லப்பட்ட தலைமகன், 'என்னுல் செய்யப்பட்டது என்னை?' என்னும். என, தோழி, 'என்னை வினவற்பாலை அல்லை; நீ இதற்குத் தக்கவாறு அறிந்து செயற்பாலை,' என்னும் என்பது.

'"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே."

என்பதாகலான், நீ ஒரு பொருளை விகற்பித்து அறியுந் துணை, யான் அறியுமாறு இல்லை பிற; அல்லதூஉம், யாம் குற்றேவல் மகளிர்; நீயாயின், அவ்வாறு ஒழுகுவ தல்லது, 'இது கொண்டு இது செய்மின்,' என்றற்குத் தக்கேம் அல்லேம்,' என்னும். அதற்குச் செய்யுள்:

மூலை விலை உரைத்தல்

"என்னுல் இதுசெய்கென் றென்சொல்ல லாமிகல் பாழிவென்ற
மின்னுர் அயில்படைச் செங்கோல் விசாரிதன் வீங்கொலிநீர்த்
தென்னு டெனினும்கொள் ளார்விலை யாத்தமர்; சீர்செய்வண்டு
முன்னுள் மலரென் றணியும்கண் ஏழை முகிழ்முலைக்கே." (களஙு)

இது கேட்ட தலைமகன், 'உடன் கொண்டு போவது துணிந்தேனெனினும், நிழலும் நீரும் இல்லாத அழல்

வெங்கானம் ஆற்றகில்லாள்கொல்லோ!' என்னும்.என்ன, 'அன்ன வெங்கானம் எனினும், எம் பெருமாட்டி நும் மொடு வரப் பெரிதும் இனியவாம்,' என்னும். அதற்குச் செய்யுள்:

ஆதரம் கூறல்

"மால்புரை யானை மணிமுடி மாறன்மண் பாய்நிழற்றும்
பால்புரை வெண்குடைத் தென்னன் பறந்தலைக் கோடிவென்ற
வேல்புரை வெம்மையங் கானம் எனினும்அவ் வேந்தன்செய்ய
கோல்புரை தண்மைய ஆம்நும்மொ டேகினக் கொம்பினுக்கே."

"கழலணி போர்மன்னர் கானீர்க் கடையல் படக்கடந்த
தழலணி வேல்மன்னன் சத்ரு துரந்தரன் தன்முனைபோன்
றழலணி வெம்மைய ஆயினும் கானம் அவன்குடையின்
நிழலணி தன்மைய ஆம்நும்மொ டேகின்எம் கேரிழைக்கே."

அது கேட்டு, 'ஆயின் உடன் போக்கு வலித்தேன்; நீ இதனை அவட்குச் சொல்ல வேண்டும்,' என, 'நன் றென்று எம்பெருமான் அருளிச்செய்தது எம்பெருமாட் டிக்கு உணர்த்துவல்,' என்று தலைமகனை வலங்கொண்டு போந்து, தலைமகளுழைச் சென்று, அவள் குறிப்பு அறிந்து, 'எம் பெருமாட்டி, நம் பெருமான் நம்மைத் தம் மோடு உடன் கொண்டு செல்லக் கருதுகின்றார்; நின் குறிப்பென்னை?' என்னும். என்றவிடத்து, உடம்படுத லும் உடம்படாதொழிதலுமென இரண்டல்லது இல்லை; சென்று வழிபடுமே எனின், நாணிலள் ஆயினளாம்; உடன்படாளாயின், கற்பிலள் ஆயினளாம்; 'இரண்டி னுள்ளும் எத்திறத்தள் ஆயினளோ?' எனின், நாணுக்கற் பென்னும் இரண்டல்லவே அவள்கண் உள்ளன? அவற்றுள் நாணின் கற்பு வலியுடைத்து; 'என்னை வலி உடையவாறு?' எனின்,

* "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

* தொல். பொருள். களவியல், சூ. 22.

என்பதாகலான், நாண் அழியினும் கற்பு அழியாமை நினைக்கும். நினைத்து, உடன் போக்கு நேர்ந்து, தலை சாய்த்து நிலம் நோயாநிற்கும் நிலைமை, இது சொல்லு வதே போன்றது. அதற்குச் செய்யுள்:

நாணிழந்து வருந்தல்

"ஏணும் இகலும் அழிந்துதெவ் வேந்தர்எல் லாம்இறைஞ்சிக்
காணும் கழல்நெடு மாறன்செங் கோல்நின்று காக்குமண்மேல்
சேணும் அகலா துடன்என்னெ டாடித் திரிந்துவந்த
நாணும் அழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே." (களஅ)

* "அளிதோ தானே நாணே; நம்மொடு
கனிநீ டிழந்தன்று மன்னே; இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறைத்
தீம்புனல் நெரிதர வீந்துக் காங்குத்
தாங்கும் அளவை தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே."

இன்னும் இது சொல்லுவது போன்றது அங்கிலைமை:

† "சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி! கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனெடு
செலவயர்ந் திசினல் யானே;
அலர்சுமந் தொழிக இவ் வழுங்கல் ஊரே."

இங்ஙனம் இவள் உடன்படும். உடன்பட்டது உணர்ந்துவைத்துத் தாயுழைச்செல்லும். தாயும், மகளது வேறுபாடு கண்டு, உற்றது அறியாது, நற்றிறம் படர்ந்து செல்கின்ற காலமன்றே! ஆதலால், கண்டவாறே, 'அன்

* குறுந்தொகை, செய். 149.
† கற்றிணை, செய். 149.

ஞய்! என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினன் ஆயிற்று? எனக்குச் சொல்லாய்,' என்னும். என்ன, 'என்னுல் அறியப்பட்டதும் சிறிதுண்டு,' என்று அறத்தொடு நிற்குமாறு, * 'தோழிக் குரியவை கோடாய் தேளத்து' என்ற சூத்திரத்தில் சொல்லிப் போந்தாம்: அவ்வகை அறத்தொடு நிற்கும். நிற்க, செவிலித்தாய் இன்புற்ற மனத்தளாய், 'என் மகள் பெரிது அறிவு உடையளே காண்,' என்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும், இன்புற்ற மனத்தளாய்த் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமும் கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொல் மறுத்தும் தலையிறைஞ்சி நிற்பர். 'இங்ஙனம் சென்று மாட்சிப்பட்டுக் காட்டுமே?' எனின், பெரிதும் மாட்சிப்பட்டுக் காட்டிற்று. காட்ட, இவள், [1] 'நீரில் ஆற்றிடைப்போய் வருந்தும் குறையென்னே?' என்று தலைமகனைச் [2] செலவு அழுங்குவிக்கும். அவ்வகையால் சொல்லும் அதற்குச் செய்யுள் :

"பாயப் புரவி கடாய்வந்து பாழிப் பகைமலைந்தார்
தேயச் சிலைதொட்ட தென்னவன் தேந்தண் பொதியிலின்வாய்
வேயொத்த தோளி! நும் மோடு வரவு விரும்பவும்தன்
ஆயத் தவரை நினைந்துகண் ணீர்கொண் டலமந்தவே." (களகூ)

† "விளம்பழம் கமழும் கமம்சூல் குழிசிப்
பாசம் தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வையிய செல்வோள்
இவைகாண் தோறும் நோவர் மாதோ;

---

* களவியல், சூ. 14.

1. நீர் இல்லாத (பாலை) வழியிற்சென்று

2. செல்லுதலைத் தவிர்ப்பள் தோழி.

† கற்றிணை, செய். 12.

அளியரோ அளியரென் ஆயத் தோரென
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத் தன்றியும் கலுழ்ந்தன கண்ணே.''

இது கேட்ட தலைமகன் செலவு அழுங்கும். அழுங்க, 'நாளை நீ வரைந்து புகுத நினக்கு வரைவு மாட்சிப்படும்,' என்று தலைமகளைத் தவிர்த்து, பெயர்ந்து தலைமகளுழை வந்து, 'நிழலும் நீரும் உடையவாய்க் கானம் தண்ணிய வாஞல் சேறும்,' என்று உடன்போக்கு அழுங்குவித்த இடத்து, தலைமகனும் அந்நாள் வரைவொடு *விரைந்து புகுவானும். இது வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரியவாயினவாறு.

இனி உம்மையால் உடன் போக்கும் உரித்தாமாறு: அவ்வாறு அறத்தொடு நிலை மாட்சிமைப்பட்டது இல்லை யாயின், இரவுக்குறிக்கண் தலைப்பெய்விக்குமாறுபோலத் தலைமகளை முற்படுத்து உடன் போக்க மாட்சிப்படும். படுத்து, ஓம்படை சொல்லும். அதற்குச் செய்யுள்:

ஓம்படுத்து உரைத்தல்

''கோங்கை தளரினும் கூந்தல் நரைப்பினும் ஏந்தல்! மற்றிவ்
வங்கை அடைக்கலம் என்றே கருதி அருள்கண்டாய்
கங்கை மணாளன் கலிமத னன்கடி மாமணற்றி
மங்கை அமரட்ட கோன்வையை நாடன்ன மாதரையே.'' (கஅ0)

''மென்முலை வீழினும் கூந்தல் நரைப்பினும் விண்ணுரிஞ்சும்
நன்மலை நாட! இகழல்கண் டாய்நறை யாற்றில்வென்ற
வின்மலி தானை நெடுந்தேர் விசாரிதன் வேந்தர்பெம்மான்
கொன்மலி வேல்நெடுங் கண்ணிணைப் பேதைக் கொடியினையே.''

† ''அண்ணற் றேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!
இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்

---

* 'வந்து புகுவானும்,' என்பதும் பாடம்.
† கற்றிணை, செய், 10.

கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் பேரர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னகின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.''

* ''பெருநன் முற்றின் பேணுரும் உளரே;
ஒருநன் றுடையள் ஆயினும் புரிமாண்டு
† புலவி தீர வளிமதி இலகவர்
பாடமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட! நின்னல திலளே.''

‡ ''நனைமுதிர் ஞாழல் சினைமருள் திரள்வீ
நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்றும் உரவுநீர்ச் சேர்ப்ப!
தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்(டு)
'அன்னாய்!' என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிததலை அளிப்பினும்
நின்வரைப் பினளென் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே.''

[1]''இவளே நின்னல திலளே; யாயும்
குவளை உண்கண் இவள்அல திலளே;
யானும் ஆயிடை யேனே;
மாமலை நாட! மறவா தீமே.''

இவ்வகை ஓம்படுத்துத் தான் தவிருமென்றவாறு. [2]''தான் தவிர்வதோ செயற்பாலது? போகாளோ?'' எனில், தனது வருத்தத்திற்குக் கவன்று போகாதாள் அல்லள்; இதனைப் [3]பண்பாக உரைத்தற்பொருட்டுத் தவிருமென்பது. 'செவிலித்தாய்க்கு உரைத்தாளன்றே? அவள் அத

---

* குறுந்தொகை, செய். 115.

† 'புலவி தீர்வழி மதியிலை கவர' என்பதும் பாடம்.

‡ குறுந்தொகை, செய். 397.

1. தொல். பொருள். பொருளியல், சூ. 6. இளம். உரை.

2. தோழி தலைவியொடு போகாமல். இருத்தலோ அவள் செய்தற்குரிய பான்மையது ?

3. தக்க விதமாக

னைப் பண்பாக உரையாளோ?' எனின், [1] இவள் சொல்லியது தெளியுமாறு செவிலித்தாய் சொல்லியது தெளியாரென்றவாறு: என்னை? எப்பொழுதும் கைவிடாத மாபினள் ஆகலான் என்பது.

இனி, தலைமகளைத் தலைமகன் ஆற்றுவித்துக் கொண்டு சென்றதற்குச் செய்யுள்:

மெல்லக் கொண்டேகல்

"பண்டான் அனையசொல் லாய்பைய ஏகு; பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்வையை சூழ்வியல் நாட்டகம்போல்
வண்டார் பொழிலும் மணியறல் யாறும் மருங்கணைந்து
கண்டார்மகிழும் தகைமையத்தியாஞ்செல்லும் கானகமே."(கஅஉ)

"சிறியைங் கண்களி றார்ந்துதென் பாழியில் செற்றெதிர்ந்தார்
மறியவை வேல்கொண்ட தென்னவன் வையைநன் ஞாட்டகம்போல்
முறியைபம் போதுகள் மேல்வண்டு பாடி முருகுயிர்க்கும்
நறியைங் கானம்நை யாது நடக்கஎன் நன்னுதலே!" (கஅசு)

* "அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாஅங்
கலமரல் வருத்தம் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தினம் ஆகலின்
பொரிப்பூம் புன்கின் எழில்நகை ஒண்முறி
சுணங்கணி வனமுலை அணங்குகொளத் திமிரி
நிழல்காண் தோறும் நெடிய வைகி
மணல்காண் தோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே!
மாநீ கொழுதி மகிழ்குயில் ஆலும்
நறுந்தண் பொழில கானம்
குறும்பல் ஊரயாம் செல்லும் ஆறே."

எனத் தலைமகளைத் தன் ஆயத்தோடும் செல்வாள்

1. இவள் (தோழி) சொல்லியதை நன்குணர்தல்போலச் செவிலி சொல்லியதை நன்குணராக் காரணம் யாதெனில்: தோழி தலைவியை எப்பொழுதும் விட்டு நீங்காத முறைமையினை உடையளாதல் என்க.

* கற்றிணை, செய். 9.

போலக் கொண்டு செல்லும். அவ்வகை போவாரை இடைச் சுரத்துக் கண்டார் சொல்லியதற்குச் செய்யுள்:

நேரி விலக்கிக் கூறல்

"அலைமன்னு பைங்கழல் செங்கோல் அரிகே சரிஆளியார்
இலைமன்னு மாலைமுத் தக்குடை யான்இகல் வேந்தரைப்போல்
மலைமன்னும் வெய்யோன் மறைந்தனன்; மாதுமெய் வாடிநைந்தாள்;
சிலைமன்னு தோளண்ணல்! சேர்ந்தனை செல்லம் சிறுகுடிக்கே."

"நின்றுங் கெதிர்ந்தார் குருதியுள் ஆழ நெடுங்களத்து
வென்றுன் விசாரிதன் கூடல்அன் னுளும் மிகமெலிந்தாள்;
குன்றூர் சுடரோன் மறைந்தனன்; கூர்வேல் விடலை!தங்கிச்
சென்றூல் அழிவதுண் டோ?அணித் தாலம் சிறுகுடியே."

*"எம்மூர் அல்ல தூர்நனித் தில்லை;
வெம்முரண் செல்வன் கதிரும் †ஊழ்த்தனன்;
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப!
இனையள் மெல்லியள் மடந்தை;
அரிய சேய பெருங்கல் ஆறே."

இன்னும் இடைச்சுரத்துக் கண்டார் இவ்வாறும் சொல்லுப:

நகரணிமை கூறல்

"நீயும் இவளும்இன் றேசென்று சேர்திர்;நெல் வேலிஒன்னூர்
தேயும் படிசெற்ற தென்னவன் தென்புனல் நாட்டிளையர்
வாயும் முகமும் மலர்ந்த கமல மணித்தடத்துப்
பாயும் கயலவர் கண்போல் பிறழும் பழனங்களே." (கஅசு)

பிற்றை ஞான்று மகளது போக்கு உணர்ந்து செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய், 'நெருநலை இவை செய்தது இது கருதிப்போலும்!' என்னும். அதற்குச் செய்யுள்:

கவன்று உரைத்தல்

"ஒண்முத்த வார்கழல் கைதந்தென் ஊரு வறுமுலையின்
கண்முத்தம் கொண்டு முயங்கிற்றெல் லாம்கரு வெங்கழைபோய்

* சிற்றெட்டகம் † 'இழந்தனன்' என்பதும் பாடம்.

விண்முத்த நீள்சுரம் செல்லிய வோவிழி ஞத்துவென்ற
தண்முத்த வெண்குடை யான்தமிழ் நாடன்ன தாழ்குழலே!" கஅள

* "பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே;
கழல்தொடி யாஅய் மழைதவழ் பொதியின்
வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான்தண் ணியளே."

என்று பின்னும் கவன்று ஆற்றாளாய், 'இவ்வகைப் பட்ட கானம் இவ்வகைப்பட்டாள் எவ்வகை செல்லுங் கொல்லோ!' என்னும். அதற்குச் செய்யுள்:

சுரத்தருமை நினைந்து இரங்கல்

"வேடகம் சேர்ந்தவெங் கானம் விடலிபின் மெல்லடிமேல்
பாடகம் தாங்கி நடந்ததெவ் வாறுகொல் பாழிவென்ற
கோடக நீள்குடிக் கோன்நெடு மாறன்தென் கூடலின்வாய்
ஆடக மாடம் கடந்தறி யாதளன் ஆரணங்கே." (கஅஅ)

'இவ்வகை மெல்லியவாகிய அடி இவ்வகை வெய்ய வாகிய கானம் எவ்வகை சென்றனள்கொல்லோ!' என்னும். அதற்குச் செய்யுள்:

அடி நினைந்து இரங்கல்

"நளிமுத்த வெண்மணல் மேலும் பனிப்பன நண்பன்பின் போய்
முளியுற்ற கானம் இறந்தன †போலும் நிறம்திகழும்
ஒளிமுத்த வெண்குடைச் செங்கோல் உசிதன் உறந்தைஅன்ன
தெளிமுத்த வாள்முறு வல்சிறி யாள்தன் சிலம்படியே." (கஅக)

இனி, செவிலி பின் சென்றாள் சுரத்திடைக் குரவி னெடு புலம்பிச் சொல்லியதற்குச் செய்யுள்:

குரவோடு வருந்தல்

"மழைகெழு கார்வண்கை வானவன் மாறன்வண் கூடல்அன்ன
விழைகெழு கொங்கைஎன் பேதையொர் ஏதில னெடியைஎன்றிக்
கழைகெழு குன்றம் கடப்பவும் நீகண்டி நின்றனையே
தழைகெழு பாவை பலவும் வளர்க்கின்ற தண்குரவே!" (கக0)

* குறுந்தொகை, செய். 84.
† 'போன்மொய்' என்பதும் பாடம்.

"நீணப்பரும் புண்ணியம் செய்தாய் குரவே! நெடுங்களத்து
வீணப்பொலி மால்களி றுந்திவென் முன்வியல் நாட்டகத்தோர்
மீணப்பொலி பாவை பயந்தேன் வருந்தவும் கீகடத்துள்
ஏணைப்பல பாவை பயந்தும்எய் தாயொர் இருந்துயரே." (ககக)

"வில்லவன் தாணை நறையாற் றழிந்துவிண் ணேறவெல்ல
வல்லவன் மாறன்எம் கோன்முணை போல்சுரம் வாள்துதலாள்
சொல்லவன் பின்சென்ற வாறென்ற போழ்தெனக் குச்சொல்லுமே
பல்லவம் ஆக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவே!"(ககஉ)

சுரத்திடைச் செல்லும் தலைமகனையும் தலைமகளையும் கண்டு எதிர் வருகின்றார், 'யார்கொல் இவ்வாறு போந்தார்!' எனச் சொல்லியதற்குச் செய்யுள்:

கண்டவர் கூறல்

"வில்லான் விறலடி மேலன பொன்கழல்; வெண்முத்தன்ன
பல்லாள் இணையடி மேலன பாடகம்; பஞ்சவற்கு
நெல்லார் கழனி நெடுங்களத் தன்று நிகர்மலைந்த
புல்லா தவர்என யார்கொல் அருஞ்சுரம் போந்தவரே!" (ககஉ)

* "வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல் அளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையின் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றெரிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே!"

இனி, செவிலி எதிர் வருகின்ற பார்ப்பாரைக் கண்டு வினயதற்குச் செய்யுள்:

வேதியரை வினுதல்

"நிழலார் குடையொடு தண்ணீர்க் கரகம் நெறிப்படக்கொண்
டழலார் அருஞ்சுரத் தூடு வருகின்ற அந்தணிர்காள்!
கழலான் ஒருவன்பின் செங்கோல் கலிமத னன்பகைபோல்
குழலாள் ஒருத்திசென் றீரோ உரைமின்இக் குன்றிடத்தே." (ககஎ)

"குடையார் நிழல்உறி சேர்கர கத்தொடு குன்றிடத்து
நடையால் மெலிந்து வருகின்ற அந்தணிர்! ஞாலம்எல்லாம்

* குறுந்தொகை, செய். 7.

உடையான் ஒளிவேல் உசிதன்தென் கூடல்ஒண் தீந்தமிழ்போல்
இடையாள் விடலைபின் சென்றன ளோஇவ் விருஞ்சுரத்தே?''

சுரத்திடைச் செல்லாநின்ற தலைமகள் நின்ற சூழலும் தலைமகன் எய்த வேழமும் கண்டு செவிலி சொல்லியதற்குச் செய்யுள்:

வியந்து உரைத்தல்

''சேறிகழல் வேந்தரைச் சேவூர் அமர்வென்ற தென்னன்செய்ய
நெறிகெழு கோன்நெடு மாறன் முனைபோல் நெடுஞ்சுரத்து
வெறிகமழ் கோதைஇங் கேகின்ற திம்மாத் விடலைதன்கைப்
பொறிகெழு திண்சிலை *வாளியின் எய்த பொருகளிறே.'' (ககசு)

''கோடுவில் படைமன்னர் கோட்டாற் றழியக் கணையுதைத்த
நெடுவில் தடக்கைஎம் கோன்நெடு மாறன்தென் னேரிமுன்னல்
இடுவில் புருவத் தவள்நின்ற சூழல் இது;உதுவாம்
கடுவில் தொடுகணை யால்அண்ணல் எய்த கதக்களிறே.'' (ககஎ)

பின் சென்ற செவிலித்தாய் எதிர் வருவாரைக் கண்டு வினவ, அவ்வினவப்பட்டார் தலைமகளையும் தலைமகனையும், 'இன்னதோரிடம் சேர்வர்கள்,' என்னும் அதற்குச் செய்யுள்:

அழுங்கு தாய்க்கு உரைத்தல்

''ஆளையும் சீறும் களிற்றரி கேசரி தெவ்வரைப்போல்
காளையும் காரிகை யும்கடம் சென்றின் றுகாண்பர்வெங்கேழ்
வாளையும் செங்கண் வராலும் மடல்இளந் தெங்குகுத்த
பாளையும் தேறல் பருகிக் களிக்கும் பழனங்களே.'' (ககஅ)

''நகுவா யனபல பெய்துள்ள நட்டாற் றருவரைபோன்
றகுவாய் மதக்களி றந்திவென் றூன்மனம் போன்றுயர்ந்த
தொகுவா யனசுணை சேர்குன்றம் நீங்கலும் துன்னுவர்போய்ப்
பகுவா யனபல வாளைகள் பாயும் பழனங்களே.'' (ககக)

இடைச்சுரத்துப் புலம்பும் செவிலியை எதிர் வருவார் கண்டு தெருட்டியதற்குச் செய்யுள்:

---

* 'வில்லியின்' என்பதும் பாடம்.

உலகியல்பு உரைத்தல்

"கட்வரை காதல னோடு கடந்த கயல்நெடுங்கண்
படவர வல்குல்உம் பாவைக் கிரங்கன்மின்; பண்டுகெண்டை
வட்வரை மேல்வைத்த வானவன் மாறன் மலயம்என்னும்
தடவரை தானே அணிந்தறி யாதுதண் சந்தனமே" (உ00)

"வேங்கீர் அருஞ்சுரம் காளைபின் சென்றதும் மெல்லியல்மாட்
டிங்கீர் மையீர்!இரங் கன்மின்; நறையாற் றிகலரசர்
தங்கீர் அழிவித்த சத்ரு துரந்தரன் தண்குமரி
முங்கீர் பயந்தால் அணிவார் பிறர்என்ப முத்தங்களே." (உ0க)

"நெருங்கடல் வேல்நெடு மாறன் நெடுங்களத் தன்றுவென்றான்
பெருங்கடல் ஞாலத்துள் பெண்பிறந் தார்தம்பெற்றார்க்குதவார்;
இருங்கடல் போல்துயர் எய்தன்மின்; ஈன்றனை என்றுமுந்நீர்க்
கருங்கடல் வெண்சங் கணிந்தறி யாதண் கதிர்முத்தமே."(உ0உ)

* "எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல்அசைஇ வேறுரா நெஞ்சத்துக்
குறிப்பீபவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்;
அன்னுர் இருவரைக் காணிரோ பெருமஇ'
'காணம் அல்லேம்; கண்டனம் கடத்திடை;
ஆணழில் அண்ணலோ டருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறிர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படிப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்!
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கணியளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்!
தேருங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கணியளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்!

---

* கலித்தொகை, செய். 9.

சூழுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கணியளே!
எனவாங்கு,
இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின் !
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்;
அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே.''

'செவிலி சுரத்திடைச் செல்லாது மனையகத்திருந்து சொல்லும்,' என்பாரும் உளர்; அது பொருந்துமாறு அறிந்துகொள்க.

அல்லதூஉம், ஆங்ஙனம் புணர்ந்து உடன் போய்ச் சில நாள் கழிந்த பின்னை,

''அறத்தோடு நிலையின் அஃதறிந் திருந்த
சிறப்புடை மரபின் தெய்வம் அன்ன
இருபெருங் குரவரொடு பேர்நுவில் ஊற்றல்
தன்னையர் தம்மைச் சால்புடை மரபின்
மன்னிய சிறப்பின் மதியோர் தேற்ற''

பண்பாதல் விதியுளி; தெருண்ட பின்,

''மீண்டு வந்து வியனகர் விரும்ப
மாண்டது சிறப்பின் வரைதீதெய் துமென''

அவ்வகை மறித்து வாராநின்றுள், சுரத்திடை முன்னுறச் செல்வாரை, 'என் ஆயத்தார்க்கு எனது வரவினைச் சொல்லுவீர்,' என்னும். அதற்குச் செய்யுள்:

வழிச்செல்வோரை, 'வரவு உரைமின்,' என்றல்

''செம்மைத் தனிக்கோல் திறல்மன்னன் சேவூர்ச் செருமலிந்தார்
தம்மைப் புறங்கண்ட சத்ரு துரந்தரன் தன்முனைபோல்
வெம்மைச் சுரம்வரு கின்றனள் என்று விரைந்துசெல்வீர் !
அம்மைத் தடங்கண்என் ஆயத் தவருக் கறிமின்களே.'' (உ0ங)

''கோடரில் மீளமதில் கோட்டாற் றரண்விட்டுக் குன்றகம்சேர்
காடரில் வேந்தர் செலச்செற்ற மன்னன்கை வேலின்வெய்ய
வேடரில் வெஞ்சுரம் மீண்டனள் என்று விரைந்துசெல்வீர்!
ஓடரி வாள்கண்என் ஆயத் தவருக் குரைமின்களே.'' (உ0ச)

*''கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றைக்
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்

* ஐங்குறுநூறு, செய். 397.

சுரம்நனி வாரர் நின்றுளர் என்பது
முன்னுற *விரைந்தனிர் உரைமின்
இன்னகை முறுவல்என் ஆயத் தோர்க்கே.''

அல்லதூஉம், மகள் வருகின்றாள் எனக் கேட்ட தாய், 'நம் நெடுநகர்க்கே வருமோ, தன் கடிமனைக்கே கொண்டு போமோ!' என அவன் குறிப்பு அறிதற்கு வேலனை வினவும். அதற்குச் செய்யுள்:

வேலனை வினுதல்

''அங்கண் மலர்த்தார் அரிகே சரிதென்னர் கோன் அயில்போல்
வெங்கண் நெடுஞ்சுரம் மீண்ட விடலை கெடலருஞ்சீர்
நங்கள் மனைக்கே வரஅல்கு மோசொல்லு வேல!அல்கு
தங்கள் மனைக்கே செலவுய்க்கு மோமற்றென் தையலையே.''(உ0நி)

''உருமினை ளீள்கொடி மேல்கொண்ட செங்கோல் உதென்எங்கோன்
செருமுனை போல்சுரம் மீண்ட விடலைஎம் தீதில்செல்வத்
†திருமனைக் கேஅல்குங் கொல்லோ வதுவை செயத்தனது
பெருமனைக் கேயுய்க்கு மோ!உரை யாய்மற்றென் பேதையையே.''

‡ ''அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோள் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வரும்எனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினி தயரும் என்ப; யானும்
மான்பிணை கோக்கின் மடநல் லாளை
ஈன்ற நட்பிற் கருளான் ஆயினும்
இன்னகை முறுவல் ஏழையைப் பன்னாள்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை உதவியோ உடைமேன் மன்னே;
அஃதறி கற்பின் அன்றுமற் றில்ல;
அறுவை தோயும் ஓருபெருங் குமிழிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கருங்கோல்

---

* 'செல்வீ ருரைமின்' என்பதும் பாடம்.

† 'திருமனைக் கேவர நல்குங்கொ லன்றுய் விடிற்றனது' என்பதும் பாடம்.

‡ அகம். செய். 195.

ஆகுவ தறியும் முதுவாய் வேல!
கூறுக மாதோ கழங்கின் திட்பம்;
மாரு வரும்பனி கலுழும் கங்குல்
ஆனுத துயரும்எம் கண்இனிது படீஇயர்
எம்மனை முந்துறத் தருமோ,
தம்மனை உய்க்குமோ, யாதவன் குறிப்பே?''

இங்ஙனம் புகுந்து பெயர்ந்த பின்றைத் தலைமகன் கன்னகத்தே வதுவைக் கலியாணம் செய்வான் எடுத்துக்கொண்டான் என்பது கேட்ட நற்றாய், 'ஒழிந்த கலியாணம் செய்யினும், நம்மகத்தே வதுவைக் கலியாணம் செய்ய நேருங்கொல்லோ காளையைப் பயந்தாள்?' என்னும். அதற்குச் செய்யுள்:

"தாளை வணங்கா தவர்படைச் சங்கமங் கைத்தனது
வாளை வலங்கொண்ட மாறன் இவ் வையத் தவர்மகிழ
நாளைநம் இல்லுள் வதுவை அயர்தர நல்குங்கொல்லோ,
காளையை ஈன்ற கடனறி நன்னெஞ்சின் காரிகையே?'' (உ0ஏ)

"மையே றியபொழில் மாரீர்க் கடையல்மன் ஓடவென்றான்
மெய்யே றியசீர் மதுரை விழவினைப் போல்நம்இல்லுள்
செய்யோர் குழலி வதுவை அயர்தர நேருங்கொல்லோ,
பொய்யே புரிந்தஅக் காளையை ஈன்ற பொலங்குழையே?'' (உ0அ)

* "நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
சொல்லின் எவனே மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே."

உசு. களவு வெளிப்படா முன்னுற வரைதல்
களவு வெளிப்பட்ட பின்றை வரைதல்என்
றுயிரண் டென்ப வரைதல் ஆறே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், † 'வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரிய,' என்றமையான், வெளிப்பட்ட பின்றை வரைதல் முறைமையானல்லது இல்லை

* ஐங்குறுநூறு, செய். 399.
† களவியல், சூ. 23.

எனக் கொண்டு நின்ற மாணாக்கற்கு, மற்று வரைதலாறு உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவு வெளிப்படா முன்னுற வரைதல் - பலரானும் சிலரானும் அறியப்பட்டது இவ்வொழுக்கம் என்னும் கருத்து எய்தா முன்னம் வரைதல், (இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னே தெருண்டு வரைதலும் உரியன்; அங்ஙுத் தெருளாஞுய்விடின், பாங்கற்கூட்டம் கூடித் தெருண்டு வரைதலும் உரியன்; அங்ஙுத் தெருளாஞுய்விடின், தோழியை இரந்து பின்னின்று அவள் தீஞுயுரைத்தகைமை செய்யத் தெருண்டு வரைதலும் உரியன்; அங்ஙுத் தெருளாஞுய்விடின், மதியுடம்படுத்து இரந்து பின்னின்ற நிலைமைக்கண் தோழி சேண்படுப்பத் தெருண்டு வரைதலும் உரியன்; அங்ஙுத் தெருளாஞுய்விடின், தோழியிற்கூட்டம் கூடியாதல், செறிப்பு அறிவுறுக்கப்பட்டாதல், இரவுக்குறியது ஏதம் காட்டவாதல், வரைவு கடாவப்பட்டாதல் தெருண்டு வரைதலும் உரியன். ஈதெல்லாங் களவு வெளிப்படா முன்னுற வரைதல் விகற்பமெனக் கொள்க. இனி, வெளிப்பட்ட பின்னை வரைதல் விகற்பமின்றெனக் கொள்க. அவற்றுள் களவு வெளிப்படா முன்னுற வரைதல் சிறப்புடைத்து. இது தனக்காகாமையால் வரைந்தமையின் சிறப்பின்றெனக் கொள்க. இது களவு வெளிப்பாடன்றென்று மறுத்துக் களவு வெளிப்படா முன்னுற வரைதல், அறத்தொடு நிலை நிகழாமுன் வரைதல் என்ற வாறு.) களவு வெளிப்பட்ட பின்னை வரைதல்-அறத்தொடு நிலை நிகழ்ந்த பின்னை வரைதல், (களவு வெளிப்படா முன்னுற வரைதலும் களவு வெளிப்பட்ட பின்னை வரைதலும் ஆமாறு முன்னே சொல்லிப்போந்தாம். அவ்வுரையே இதற்கும் உரைத்துக்கொள்க.) என்று ஆ இரண்டு என்ப வரைதலாறு - என்று இரண்டு வகை என்பர் வரைதல் முறை என்றவாறு.

உரு. பட்ட பின்னை வரையாக் கிழவன்
நேட்டிடை கழிந்து பொருள்வயின் பிரிதலும்
பொருள்வயின் பிரியா தொருவழித் தணத்தலும்
புரைவ தென்ப கற்பால் ஆன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், அறத்தொடு நிலை நின்ற பின்னை வரும் விகற்பம் உணர்த்துதல் நுதலிற்று.

மேல் சூத்திரத்து *வரையும் இடம் உணர்த்தினர், அவ்வரைவிற்கு வரும் இடையீடு இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இனி, 'தலைமகளை வரைந்து எய்தினனல்லன்; அறத்தொடு நின்றவாறே பிரிந்தான்; ஆகலான், அன்னாள் கற்பினளோ, களவினளோ?' என்ற மாணாக்கற்கு, 'இவள் கற்பினளே எனப்படும்,' என்றவாறு.

இதன் பொருள்: பட்ட பின்றை வரையாக் கிழவன் - அறத்தொடு நிலை நின்ற பின்றை வரைந்து எய்தாத தலைமகன், நெட்டிடை கழிந்து பொருள்வயின் பிரிதலும் - நாடும் காடும் இடைபிட்ட பல்காதமும் நீங்கிப் பொருட்குப் பிரியும் பிரிவும், பொருள்வயின் பிரியாது ஒரு வழித் தணத்தலும் - பொருட்குப் பிரியாது ஓரிடத்தானுய் உறைதலும், புரைவது என்ப கற்பால் ஆன - அவை பொருந்தும் கற்பினளாகற்கு என்றவாறு.

'அறத்தொடு நிலை நின்றமை என்னை தலைமகன் அறியுமாறு?' எனின், தோழியால் உணர்த்தப்பட்டு அறியும் என்பது. இதன் கருத்து, இவ்விரண்டு இடையீட்டின்கண்ணும் தலைமகள் ஆற்றுளாய காலத்துத் தோழி ஆற்றுவித்தலும், ஆற்றுவித்து அதனெதிர் மொழிதலும், பிறவும் எல்லாம் கற்பினோடு ஒக்கும் என்பது. 'இப்பிரிவு தலைமகள் அறியப் பிரியுமோ?' எனின், அறியவே பிரியும், தோழிக்கும் தலைமகட்கும் எல்லாம் உணர்த்தி என்பது. அவ்வாறு பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபட்டாள்; வேறுபட, 'எம் பெருமான் இதற்கு நல்லது புரிவான் பிரிவான். பிரிய, நீ ஆற்றுயாவதோ தகாது,' என்ற தோழிக்கு, 'யான் பிரிய ஆற்றேனுயினேன் அல்லேன்; அவர் சென்ற கானத்துத் தன்மையை நோக்கி அவர்க்குக் கவன்று நினைந்து ஆற்றேன் ஆயினேன்; ஏதிலர் அதனைத் தீரிய உணர்ந்தார்,' என ஊர்மேல் வைத்துச் சொல்லும். அதற்குச் செய்யுள்:

* 'வரையுமிடத்து வரையுமிடம் உணர்த்தினர்' என்பதும் பாடம்.

ஊர்மேல் வைத்து உரைத்தல்

"மின்றுன் அனைய விளங்கொளி வேலொடு வெண்டிரைமேல்
நின்றுன் நிலமன்னன் நேரியன் மாறன் இகல்முனைபோல்
கொன்று றலைக்கும் சுரமன்பர் நீங்கலும் கோல்வளைகள்
சென்றுல் அதுபிறி தாகவிவ் வூரவர் சிந்திப்பரே." (உ0கூ)

இயற்பட மொழிதல்

இப்பிரிவின்கண்ணே ஆற்றுளாய் வேறுபட்ட தலைமகளை இவ்வாறன்றி ஆற்றுவிக்கலாகாதெனக் கருதித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்படமொழியும். அதற்குச் செய்யுள்:

*"தொல்கவின் தொலையத் தோள்நலம் சாஅய்
நல்கார் நீத்தனர் ஆயினும் நல்குவர்
நட்டனர் வாழி தோழி! குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரி
தலரெழச் சென்றனர் ஆயினும் அலர்கவிந்து
மாமடல் அவிழ்ந்த காந்தளஞ் சாரலின்
ஞால்வாய்க் களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே."

இயற்பழித்தல்

அல்லதூஉம், நெட்டிடை கழிந்து பொருள்வயின் பிரிந்தவிடத்துத் தலைமகளது ஆற்றுமை கண்டு தோழி தலைமகனை இயற்பழிக்கும். 'எங்ஙனம் இயற்பழிக்குமோ?' எனின், 'இவளை இங்ஙனம் ஆற்றுளாகப் பிரிந்த அவரினும் கொடிய, இவளது ஆற்றுமை கண்டும் அதற்கு நல்லது புரியாது தம் நாணின்மையால் பகலே புகுந்து இரை தேர்கின்ற நாணுப் பறவைகள்,' என்னும். அதற்குச் செய்யுள்:

* நற்றிணை, செய். 14.

"இகலே புரிந்தெதிர் நின்றதெவ் வேந்தர் இருஞ்சிறைவான்
புகலே புரியவென் முன்கன்னி அன்னுள் புலம்புறுகோய்
மிகலே புரிகின் றதுகண்டும் இன்றிவ் வியன்கழிவாய்ப்
பகலே புரிந்திரை தேர்கின்ற நாணுப் பறவைகளே." (உ.கo)

என்பது கேட்ட தலைமகள், 'என் ஆற்றுமை கண்டன்றே இவள் இவ்வகை சொல்லுவாளாவது?' எனத் தனது ஆற்றுமை நீங்குவாளாவது பயன்.

இனி ஒருவழித் தணந்தவிடத்துத் தலைமகள் வேறுபட, 'இவ்வகைப்பட்ட நிலத்தில் தலைமகன் நம்மைத் துறவான்; நீ எற்றிற்கு ஆற்றுயாகின்றுய்?' எனத் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

"அடிமலை போல்களி யானை அரிமேக சரியுலகின்
வடிமலை யாதசெங் கோல்மன்னன் வஞ்சியன் னுய்!மகிழ்ந்து
படிமலை போல்வண்டு பாடிச்செங் காந்தள்பைந் தேன்பருகும்
நெடுமலை நாடனை நீங்குமென் றேநீ நினைக்கின்றதே?" (உ.கக)

1"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தள் குலைமேல் பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ அளியவென் றடல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சசைந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனை அல்லன்."

உசு. வெளிப்படை தானே விரிக்குங் காலத்
தந்தை தாயே தன்னையர் என்றுங்
கன்னவர் அறியப் பண்பா கும்மே

'என்பது என்னுதலிற்றே?' எனின், மேல் வெளிப்படையே சொல்லிப் போந்தார், அவ்வெளிப்படை இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: வெளிப்படைதானே - களவு வெளிப்படைதானே, விரிக்குங்காலை - விரித்து உணர்த்துமிடத்து, தந்தை தாயே தன்னையர் என்றுங்கு அன்னவர் அறியப் பண்பு ஆகும்மே - தந்தை தாயே தன்னையர் என்று அவர் அறியப் பண்பாகும் என்றவாறு.

---

1. இச்செய்யுள் யாப்பருங்கலக் காரிகையில் ஈற்றடி இரண்டும் இரு சீர் குறைந்து வந்த ஒரோலி வெண்டுறைக்கு உதாரணமாம்.

பண்பு எனினும், இலக்கணம் எனினும், இயல்பு எனினும் ஒக்கும். வெளிப்படையென்பது, அறத்தொடு நிலையென்றவாறு. வெளிப்படையெனினும், அறத்தொடு நிலையெனினும் ஒக்கும் என இவ்விரண்டும் ஒரு பொருண்மேல் கிடந்தனவாயினும், கருத்து வேறுபாடு உடையவாம். யாவரும் அறியப்படாத களவு, தந்தையும் தாயும் தன்னையரும் அறிய நிகழ்ந்தமையின், களவு வெளிப்படை எனப்பட்டது; இனி, தலைமகள் அறன் அழியாமை நிற்றலின், அறத்தொடு நிலை எனவும் பட்டது.

உஎ. அவருள்,
தாயறி வுறுதலின் ஏனோரும் அறிப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், [1]இவர் தாம் அறியுமிடத்துத் தாய் சொல்ல அன்றித் தாமாக [2]அறிவிலர் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவருள் - சொல்லப்பட்ட மூவருள்ளும், தாய் அறிவுறுதலின் ஏனோரும் அறிப - தாய் அறிவுறுக்கப்பட்டுத் தந்தைக்கும் தன்னையன்மாருக்கும் அறத்தொடு நிற்கும் என்பது. [3]செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்குமென்பது. 'இது பெற்றவாறென்னை?' எனின், உரையிற்கோடல் என்னும் தந்திர உத்தியால் பெறுதும் என்பது.

உஅ. தந்தை தன்னையர் ஆயிரு வீற்றும்
முன்னம் அல்லது கூற்றவண் இல்லை.

'என்பது என்னுதலிற்றோ?' எனின், தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தந்தை தன்னையர் ஆ இரு வீற்றும் - தந்தையென்றும் தன்னையன்மார் என்றும் சொல்லப்பட்ட

---

1. தந்தையும் தன்னையரும்

2. அறிதல் இலர்.

3. 'தாய் அறிவுறுக்கப்பட்டு' என்றவிடத்து, 'யாரால் அறிவுறுக்கப்பட்டு?' என்று எழும் வினாவிற்கு விடையாக இது கூறினர்.

இரண்டு கூற்றுர்க்கும், முன்னம் அல்லது கூற்று அவண் இல்லை - அவர்க்கு முன்னத்தானல்லது செவ்வனம் சொல்லப் பெறுள் என்றவாறு.

நற்றாய் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்குமிடத்து, 'இன்னதொன்று உண்டால்: அஃதென்னேவெனின், குலத்தானும் செல்வத்தானும் மிக்கான் ஒருவன், உலகத்தாரெல்லாம் ஒரு குறை வேண்டப்படுந்தன்மையன், ஒருவர்பால் ஒரு குறை வேண்டும் சிறுமையனல்லன், இத்தன்மையானவன் நம்மை வழிபட்டு வாழலுறும்; அவனையாம் கிழமை கொள்ள அழிவதுண்டோ?' என்னும். 'என்பது கேட்டு அவர் என் கருதுவரோ?' எனின், [1]'இவள் கருதிச் சொல்லுகின்ற குறிப்பாவது இதுபோலுந் தன் மகள் திறத்தினுகாதே?' என உணர்வாராவது.

'அவண்' என்ற மிகை வாய்பாட்டான் முன்னத்தானன்றியும் முன்னம்போலும் சொல்லானும் சிறுபான்மை சொல்லும் என்பது. அது வருமாறு: தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு அருங்கலங்களோடு வரைவு வேண்டி விட்டவிடத்துத் தந்தையும் தன்னையன்மாரும் வரைவு மறுத்தார், [2]மறுப்பார் சூழ்தலும் அருகுதலு முடைமையான். நூற்றியாண்டைக் கற்றவரோடு எண்ணிச் செய்யப்படுமாகலான், சூழப்படும். இனிக் கண்டீரே [3]தம் மகளை வேண்டுவாரைப் பார்த்திருந்தார்

1. 'இவள் (நற்றாய்) கருதிச் சொல்லுகின்ற குறிப்பான மொழி இதுவாயிருக்கும்; அது தன் மகளைப் பற்றியதாய் இராதோ? (அது வாகத்தான் இருக்கும்.)

2. நற்றாரோடு ஆய்தலும் கேட்டார்க்கு மகட்கொடை மறுத்தலும் உடையர். அருகுதல் - சுருங்குதல், குறைதல். அஃதீண்டித் தாம் மகட்கொடை நேராமையைத் தெரிவித்தல் என்னும் பொருளதாய் நின்றது.

3. இவர்கள் தம் மகளை வேண்டுவாரை எதிர்பார்த்திருப்பவர்கள் ஆயினும், தம்மிடம் மகட்கொடை நேர்வார், 'நாம் இப்பிறப்பில் நற்கருமங்களைச் செய்தவர்களே ஆயினும், இங்ஙனம் மிக்காராகிய இவர்களிடை மகட்பெறுதல் யாரால் இயலும்? இவர்களிடை மகட்கோடல் அரிதாகும்,' எனக் கருதும்பொருட்டு மறுப்பர் என்பது.

ஆகாதே, நாம் இந்நூற்றிடைக் கருமம் நூற்றவரே, இவர்களிடை மகட்பெறுவார் யாரெனவும் பெறுதற்கு அருமை உடைத்தெனவும் கருத அருகுப. இனிக் கண்டீரே தம் மகளே வேண்டுவார் உரைப்பனவும் பொய் போலும், வேண்டுதற்கு இடையின்றியே பெற்றாராகலின் இவ்வகை விரைந்து கொடுத்தாரா லென்னும் புறவுரை நோக்கியும் அருகுப. அல்லதூஉம், இறப்பச் சிறியாரும் தம்மின் மிக்கார் மகள் வேண்டிச் சென்றவிடத்தும் அருகுப. இனி உலகியலானும் அருகுப. அல்லது உலகியல்பல்லாவழி இவர் *அருகுவதற்குச் சொல்ல வேண்டுமோ என்பது. எனத் தலைமகன் வரைவு மறுக்கப்பட்டான் என்பதனை உணர்ந்த தலைமகள் ஆற்றாளாமாகத் தோழி யாய்க்கு அறத்தொடு நிற்ப, செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப, அவள் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்கும், முன்னம் போலும் சொல்லான் என்றவாறு. அவ்வாறு சொல்லுமதற்குச் செய்யுள்:

அறத்தோடு நிற்றல்

"சான்றோர் வரவும் விடுத்தவர் தந்தக வும்நுமது
வான்றோய் குடிமையும் நோக்கினல் லால்வண் பொருள்கருதின்
தேன்றோய் கமழ்கண்ணிச் செம்பியன் மாறன்செங் கோன்மணந்த
மீன்றோய் கடலிடங் தானும் விலையன்றிம் மெல்லியற்கே." (உகஉ)

"நடையால் இதுவென்று நேரினல் லால்நறை யாற்றுவென்ற
படையான் பனிமுத்த வெண்குடை வேந்தன்பைங் கொன்றைதங்கும்
சடையான் மூடிமிசைத் தண்கதிர்த் திங்கள்தன் தொல்குலமா
உடையான் உசிதன் உலகும் விலையன்றெம் ஒண்ணுதற்கே." (உகங)

1 "சான்றோர் வருந்திய வருத்தமும் நுமது
வான்தோய் வன்ன குடிமையும் நோக்கித்
திருமணி வரன்றும் குன்றம் கொண்டிவள்
வருமுலை ஆகம் வழங்கினை நன்றே;

---

* 'அருமை கூறுவது' என்பதும் பாடம்.

1. இச்செய்யுள் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் வெளியிட்ட 'களவியற்காரிகை' என்னும் நூலில் 128-ஆம் பக்கத்தில் நற்

அஃதான், றடைபொருள் கருதுவி ராயின் குடையொடு
கழுமலம் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவின் உறந்தையும் சிறிதே.''

என இவ்வாறு நற்றூய் சொல்லக் கேட்டு, 'கொடாது விடின், இக்குலத்துக்கு வடுவுண்டுபோலும்!' என உணர்வார் ஆவது. அதனால், பொருள் அறத்தொடு நிலை மாட்சிப்படுவது.

உகூ. காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்,
நோதுமலர் வரையும் பருவம் ஆயினும்,
வரைவெதிர் *கோள்ளாது தமரவண் மறுப்பினும்,
அவனூ றஞ்சும் காலம் ஆயினும்,
அங்நா லிடத்தும் மேய்ந்நாண் ஒரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், மேல் அறத்தொடு நிற்கும் நிலை உணர்த்திப்போந்தார், இனி அறத்தொடு நிற்கும் இடம் கூறுவான் எடுத்துக்கொண்டார்; அஃது உணர்த்துதல் நுதலிற்று.

'மேற்சூத்திரத்தோடு இயைபு என்னை?' எனின், [1] மேல் அறத்தொடு நிலை அதிகாரம் வாராநின்றதாகலான் என்பது.

இதன் பொருள்: காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும் - † காப்புக் கையிகப்பாட்டின் வேட்கை பெருகினும்,

---

றிணை என்னுங் குறிப்புடன் காணப்படுதலின், நற்றிணைப் பதிப்பில் விடுபட்டுள்ள 234-ஆம் செய்யுளாயிருக்கலாம் எனத்தோன்றுகிறது. 'விரவும் பெருமை' எனத்துவங்கும் வேறொரு செய்யுள் வேறூர் எட்டுப் பிரதியில் இங்கே காணப்படுகின்றது; அச்செய்யுளின் முதலடி பொருள் புலனுகாவாறு பலபடச் சிதைந்து கிடத்தலின், அஃதீண்டெடுத்துக் காட்டப்படவில்லை.

* 'கொள்ளார்' என்பதும் பாடம்.

1. மேற்கூறிய அறத்தொடு நிற்றல் எனும் அதிகாரம் தொடர்ந்து வருகின்றமையான், அத்தொடர்பே மேற்சூத்திரத்தோடு இச்சூத்திரத்திற்கு இயைபாம் என்பது.

† 'காவல் கைமிக்குப்பாட்டின்' என்பதும் பாடம்.

தொதமலர் வரையும் பருவம் ஆயினும் - அயலார் வரைந்து புகும் காலமாயினும், வரைவு எதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும் - வரைவினை ஏற்றுக்கொள்ளாது தமர் அவ்விடத்து மறுப்பினும், அவன் ஊறு அஞ்சும் காலம் ஆயினும் - அவற்கு நிகழும் ஏதம் அஞ்சின இடத்தும், அங்காலிடத்தும் மெய் காண் ஓரீஇ - அங்காலிடத்தும் மெய்க்கணின்ற காண் நீங்கி, அறத் தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே - அறத்தொடு நிற்கும் நிலைமை தோழிக்கும் உரித்து என்றவாறு.

'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்' என்பது, காப்பு என்பது இரண்டு வகைத்து, நிறை காவல் சிறைகாவல் என; அவற்றுள், நிறை காவல் என்பது, காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம் என்றவாறு;

* "சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை."

என்பதாகலான். இனி, சிறை காவல் என்பது, தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டல் என இவை. அவற்றுள், ஈண்டுச் சிறை காவல் கொள்ளப்படும். அச்சிறை காவலது மிகவின் கண் இடையீடாயினவிடத்துத் தலைமகட்குப் பெரிய தோர் வேறுபாடு உண்டாம்; உண்டாயினவிடத்துத் தோழிக்குப் புலனும்; புலனுயினவிடத்துத் தோழி, 'எனக்குப் புலனுயினவாறே யாய்க்கும் புலனும்; புலனுயின விடத்து யாய் அறிவாரை விலவும்; விலவினவிடத்து அறிவார் தெய்வத்தினன் ஆயிற்றென்ப; அது சொல்லு தற்பயத்தது. தங்கருமமாகலானும் பிறிதொன்று சூட்டி உணரும் தன்மைத்தன்று இக்குலமாகலானும், 'தெய்வத்தினன் ஆயிற்று,' என்ப. என்றவிடத்து, இவளை முன் நிறீஇத் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும். செய்த விடத்துக் கற்பழியும். இவட்குக் கற்பழிவு வந்ததென்றும் இவட்கு ஆற்றுமை தணியாதன்றே, தெய்வத்தினன்

* குறள், வாழ்க். செய். 7.

ஆயிற்று என்றமையின்? பெயர்த்தும் அது கண்டு யாய்க்கு ஆற்றுமை பெருகுமென்றும் தலைமகளது கற்பழிவுக்கும் தாய் ஆற்றுமைக்கும் தோழி தான் ஆற்றுளாம்.

ஆற்றுமை என்பது, பிறிது எவ்வுணர்வுமின்றி ஆற்றுமைதானேயாவது. ஆற்றுமை, ஆற்றுவதொன்றி னைப் பற்றும். [1]ஆற்றுவது பிறிதின்மையின், 'அறிவாரை வினவுமிடத்து என்னை வினவ, யான் அறியேனென்றதன் புறத்தாம் பிறரை வினவுவாளாவது; என்னை வினவினவிடத்து இது சொல்லுவன்,' என்று கூட்டமில் நாட்ட வகையால் சிந்தித்துக்கொண்டிருக்கும். இருந்த நிலைமைக்கண் தாய் படிமக்கலத்தொடும் புக்கு, மகளை அடிகொண்டு முடிகாறும் நோக்கி, 'அன்னாய், *என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினானியிற்று?' என்னும், என்றவிடத்து, 'என்னால் அறியப்படுவதும் சிறிதுண்டு,' என்று †மேற்சொல்லியவாறே மாறுகோள் இல்லாத வகையான் அறத்தொடு நிற்கும். அங்ஙனம், அவள் ‡நற்றாய் தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடு நிற்கும் என்பது.

இனி, 'நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்,' என்பது: §நொதுமலர் என்பார் ஏதிலர்; அவர்தாம் வரைவொடு வந்தார் என்பது கேட்டவிடத்துத் தலைமகள் அதற்கு ஆற்றுளாம். ஆற்றுளாயினவிடத்து, மேற் சொல்லியவாறே தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும் என்பது.

---

1. ஈண்டு 111-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

* 'நம் பெருமாட்டிக்கு' என்பதும் பாடம்.

† 'களிறுதரு புணர்ச்சியான் மாறுகோளில்லா வகையானுரைத்து அறத்தொடு நிற்கும்' என்பதும் பாடம்.

‡ 'நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், அவள் அத்தொடக்கத்தார்க் கெல்லாம் அறத்தொடு நிற்கும்,' என்பதும் பாடம்.

§ 'ஏதிலரானவர் வரைவொடு வந்தார்' என்பதும் பாடம்.

'வரைவெதிர் கொள்ளாது தமர் அவண் மறுப்பி னும்' என்பது தலைமகன் தமர், பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களொடு வரைதற்குப் புகுவர்; புக்கவிடத்து ஒரு காலைக்கு மறுப்பர். பிற *போகாக் குமரியை உடையார் போலக் கதுமென நேர்ந்திடார் அன்றே! 'பரியம் சிறிது,' என்றனும், 'இளையளாலோ,' என்றனும், 'நாளும் புள்ளும் திருத்தி வாரீரோ?' என்றனும் அங்ஙனம் தமர் மறுத்தாரென்பதனைத் தலைமகள் கேட்ட ஞான்றும் ஆற்றுளாம். என்னை? 'எம் பெருமான் ஒருவர்க்கு ஒரு குறை முடிப்பினல்லது, ஒருவரை ஒரு குறை வேண்டும் தன்மையனல்லன். அல்லாதான் இக் குறை வேண்டியது என்கண் கிடந்த அருளாகாதே? இவற்கு இவ்விளிவரவாக்கினேன் பாவியேன்,' எனவும், 'எம்பெருமாற்கு மறுத்தார் இனி மற்றொருவாறாகாதே!' எனவும் தலைமகள் வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனும். புலனியனவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்கும் என்பது.

'அவன் ஊறு அஞ்சும் காலமாயினும்' என்பது: தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற நிலைமைக் கண், 'எம்பெருமான் வரும் வழி எண்கும் வெண்கோட்டு யானையும் அரவும் உருமும் புலியும் †வானர மகளிரும் வரையர மகளிரும் உடைத்து; மற்றும் தெய்வங்கள் வெளவும் வண்ணத்தன; ஏதம் நிகழ்வதுகொல்லோ!' என வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனும். புலனியனவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்கும் என்பது.

'அந்நாலிடத்தும்' என்பது, அச்சொல்லப்பட்ட நான்கிடத்தும்; 'மெய் நாண் ஒரீஇ' என்பது, ‡மெய்யி னைய நாண் நீங்கி; நாண் உண்டாயினவிடத்துத் தாய்

* 'போதாக்குமரி' என்பதும் பாடம்.

† இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

‡ 'மெய்க்கணின்ற' என்பதும் பாடம்.

முன்னின்று சொல்லாள் என்பது. 'அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே,' என்பது, அறமென்பது தக்கது; தக்கதனைச் சொல்லி நிற்றல் தோழிக்கும் உரித்தென்ற வாறு. அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு; கற்பின்றலை நிற்றல் என்பதூஉமாம்.

இனி, 'தோழிக்கும் உரித்து,' என்ற உம்மையால், தலைமகட்கும் அறத்தொடு நிலை உரித்தென்பது. அஃதாமாறு, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தானும் பாங்கற்கூட்டம் கூடியானும் தெருண்டு வரைந்தெய்தலுற்றுத்தமரை விடும்; விட்டவிடத்து அவர் மறுப்ப; அஃது இலக்கணமாகலான். அங்ஙனம் மறுத்தவிடத்துத் தலைமகள் வேறுபடும். 'எம் பெருமான் மறுக்கப்பட்டமையால் மற்றொரு வாறுங்கொல்லோ!' எனக் கலங்கி வேறுபாடு எய்தின பொழுதே தோழிக்குப் புலனும்; புலனுபினவிடத்து, 'எம் பெருமாட்டி, நினக்கு இவ்வேறுபாடு எற்றிஞையிற்று!' என்னும். என்றவிடத்து, 'இஃதெனக்குப்பட்டது: இன்னவிடத்து ஒரு ஞான்று நீயும் ஆயங்களும் தழையும் கண்ணியும் கோடற்கு * எண்ணிச் சிறிது நீங்க, யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட அம்மணிச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப்பூக்களால் மயங்கி மேதக்கது கண்டு, வேட்கையான் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத் 'தோழியோ!' என, நீ அங்ஙனம் கேளாயாயினுயாக, ஒரு தோன்றல் தோன்றி வந்து, எனது துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினுன். நீட்டினவிடத்து †மலக்கத்தான் நின் கையெனப் பற்றினேன்; பற்ற, வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங்கினுன்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனுயினேன்; நீ எவ்வெல்லைக்கண்ணும் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடலினை ஆக்கிற்று விதியாகாதே

* 'என்னிற்சிறிது நீங்கினுயாக, ஈங்கு நின்றேன்,' என்பது முன் அச்சுப்பிரதியிற்கண்ட பாடம்.

† 'மயக்கத்தினுன்' என்பதும் பாடம்.

இனிப் பிறிதொன்றுங்கொல்லோவெனக் கலங்கி வேறு பட்டேன்,' என்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நிற்கும். பின்னைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற் கும், மேற்சொன்னவாற்றான் என்பது.

'அங்ஙனமாயின், தோழி காவலொடு மாறுகொள் ளாதோ?' எனின், கொள்ளாது; தோழிக்கு அறத்தொடு நிற்குமாகலானென்பது. காவலொடு மாறுகொள்ளினும் 'காவற்குற்றப்பட்டேன்!' என்று தோழி இறந்துபடா மைக் காக்கும் விதியென்பது. 'அஃதேயெனின், நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக் கூறித்து படைத்து மொழிந்தமை யால் பொய்யுரைத்தவாறும் பிற,' எனின், பொய்யுரைக் கப்பட்டதாகாது; என்னை? பழியும் பாவமும் அதனால் வாராமையின்; என்னை ?

*"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."

என்றாராகலின், குற்றமின்றென்பது. அறத்தொடு நிற் கும் இடங்களைப் பெயரும் எண்ணும் சொல்லின மாத் திரையே இச்சூத்திரத்துப்பொருள். அறத்தொடு நிற்கும் இலக்கணமும் அவற்றுக்குச் செய்யுளும் மேலே காட்டிப் போந்தாம்.

கூ0. காமம் மிக்க கழிபடர் கிளவியும்,
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்,
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்,
'இரவினும் பகலினும் நீவரு வ'கன்றலும்,
கிழவோன் தன்னை 'வாரல்' என்றலும்,
தன்னுள் கையா றெய்திடு கிளவியும்,
அன்ன மரபின் பிறவும் தோகைஇத்
தன்னை அழிந்த கிளவி எல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள என்ப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், வரைவு கடாவும் இலக்கணமெல்லாம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

* குறள், வாய்மை, செய். 2.

'மேலதனோடு இயைபு என்னையோ?' எனின், மேலும் களவு நீக்கிக் கற்பாயதோர் இலக்கணமுணர்த்தினர், இவ் வரைவும் அன்னதாகலான், அதன் பின்னே வைக்கப் பட்டது.

இதன் பொருள்: காமம் மிக்க கழிபடர் கிளவியும் - (காமம் என்பது, வேட்கை; மிகுதல் என்பது, பெருகுதல்; கழியென் பது, சிறத்தல்; படர் என்பது, நினைத்தல்; கிளவியென்பது, சொல்;) வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்லும், காப்புச் சிறை மிக்க கையறு கிளவியும் - காப்புச்சிறைமிகவினுல் கையற்றுச் சொல்லும் சொற்களும், ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவியும் - அவன் வரும் வழியது ஏதம் சிந்தித்து ஆற்றுளாய்ச் சொல்லும் சொற்களும், இரவினும் பகலினும் வீருக என்றலும் - 'இரவின்கண்ணும் பகலின்கண்ணும் நீயிர் வந்து *ஒழுகுவ தாகாதோ?' எனச் சொல்லும் சொற்களும், கிழவோன் றன்னை வாரல் என்றலும் - தலைவனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வரவேண்டாவென்று சொல்லும் சொற்களும், தன்னுள்கையாறு எய்திடு கிளவியும் - தன்னுள் கையாற்றினை ஏதிலது ஒன்றின்மே லிட்டுச் சொல்லும் சொற்களும், அன்ன மரபின் பிறவுந் தொகை இ - அன்ன இலக்கணத்த பிறவும் தொகுத்து, தன்னை அழிந்த கிளவி எல்லாம் - தன்னுற்றுமையால் சொல்லும் சொல்லெல்லாம், வரைதல் வேட்கைப் பொருள என்ப - வரைதல் வேட்கைப் சொல் லும் சொல் என்றவாறு.

காமமிக்க கழிபடர் கிளவி

இனி, காமம் மிக்க கழிபடர் கிளவியாமாறு: பகற் குறியானும் இரவுக்குறியானும் தலை மகன் ஒழுகாகின்ற நிலைமைக்கண் ஒரு காற் கண்டு தரிக்கும் தன்மைத்தன்றும் வேட்கை; என்னை? [1] காணும் பொழுதின் காணப் பொழுது பெரிதாகலான். அவ்வகையளாய் நின்று புன்னைக்கானும், அன்னத்திற்கானும், கடலிற்கானும், கழிக்கானும், அவ்வகை பிறவற்றிற்கானும், †கெட்டுறு

*'ஒழுகுமென' என்பதும் பாடம்.

1. ஈண்டு 131-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

†'தன்கட்டுறு குறை' என்பதும் பாடம்.

குறை தணிப்பவராகச் சிந்தித்துச் சொல்லுவதாயிற்று. அதற்குச் செய்யுள் :

"தாதலர் நீள்முடித் தார்மன்னன் மாறன்தண் ணங்குமரிப்
போதலர் கானல் புணர்குறி வாய்த்தாள் புலம்பிஞைய
ஏதிலர் நோய்செய்வ தோகின் பெருமை எனகெருங்கிக்
காதலர் தம்மைக் கழறினென் ஊனம் கருங்கடலே!" (உகச)

"ஒண்டேவி காராய்!நின் சேவலும் நீயுமாய்
வண்டேது பூங்கானல் வைகலும் சேறிரால்;
'பெண்டேது வந்தேம்,' எனவுரைத்தெம் காதலரைக்
கண்டீர் கழறியக்கால் [1]காதலர் கடிபவோ?"

இவை கடலுக்கும் நாரைக்கும் சொல்லிய எனக் கொள்க. 'இதனைத் தலைமகன் [2]கேளா வருமே?' எனின், 'இங்ஙனம் வந்தொழுக இவள் ஆற்றுளாம்,' என்று ஒரு வகையால் முற்பட்டுப் பிற்றை ஞான்று வரைவொடு புகுவானும்; 'தோழி கேட்குமே?' எனில், தலைமகனை முன்னின்று வரைவு கடாவுவாளாம்; யாரும் கேட்பாரில்லையெனின், ஆற்றுதலைப் பயக்கும். என்னை? *மூடி வேவாகின்ற அக்கலத்தை மூய் திறந்தவிடத்து அகத்து நின்ற வெப்பம் குறைபடும்; அது போல, இவட்கும் அயர்வுயிர்ப்பாம் அச்சொற்கள் † புலப்படுத்தலான் என்பது. இம்மூன்றினுள் ஒன்றுகாமையில்லையென்பது. "தலைமகன் கேட்பின், இன்னதொன்றும்; தோழி கேட்பின், இன்னதொன்றும்; யாரும் கேட்பார் இல்லையெனினும், இன்னதொன்றும்,' என்று ஒரு பயனைச் சிந்தித்துச் சொல்லுமோ?' எனின், சொல்லாள்; குழவி அழுதாற் போல வேட்கை மிகுதியால் சொல்லினவிடத்து அப் பயன் நிகழும். குழவி அழுகின்றது, 'எனக்குப் பால்

1. 'கானல்' என்பதும் பாடம்.

2. கேட்டுக்கொண்டு வருவானுயின். ஈண்டு 131-ஆம் பக்கத்திற் கூறியவற்றை நோக்குக.

* 'மூடி வேவாகின்றதோர் பொருளை' என்பதும் பாடம்.

† 'புறப்படுத்தலான்' என்பதும் பாடம்.

தம்மின்; நீர் ஆட்டுமின்,' என்று அழாது, துக்கம் வந்த தாக அழும். அழ, அறிவார் பயம் எய்துவிப்பர் என்பது.

காப்புச் சிறை மிக்க கையறு கிளவி

'காப்புச் சிறை மிக்க கையறு கிளவியும்' என்பது, காப்புச்சிறை மிகவினுல் கையற்றுச் சொல்லுஞ் சொல். *[1]காப்புத்தான் இரு வகைய; நிறை காவல் சிறை காவ லென; அவற்றுள் நிறை காவல் என் பது, நிறையின் வேறுபாடு புறத்தார்க் குப் புலனுகாமைக் காப்பாள்; காத்தும், முறையின் முறை யின் வேட்கை பெருகக் காணலுறவினுன் ஆற்றுளாய்ச் சொல்லியதற்குச் செய்யுள்:

"மின்கண் படாவடி வேல்நெடு மாறன்விண் டார்முனைமேல்
மன்கண் படாத மயங்கிருள் †நாள்வந்த நீர்த்துறைவற்
கென்கண் படாத நிலைமைசொல் லாதிளஞ் சேவல்தழீஇத்
தன்கண் படாநின்ற அன்னத்த தேயால் தகவின்மையே." (உகடு)

‡"புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்! நீ எய்தும் கனவினுள்
வன்கண்ணர் கானல் வரக்கண் டறிதியோ!" (உகசு)

[2]'சிறை காவல்' என்பது, தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கோழி குரல் காட்டல் என இவை. அவற் றுள், தாய் துஞ்சாமைக்குச் செய்யுள்:

"ஆயும் தமிழ்மன்னன் செங்கோல் அரிகே சரிமுனைபோல்
தேயும் நினைவொடு துஞ்சாள் மடந்தையிச் சேயிழையாள்
தாயும் §துயில்மறந் தாள்இன்ன நாள்தனித் தாள்நெடுந்தேர்க்
காயும் கதிரோன் மலைபாய் மறைந்த கனையிருளே." (உகசு)

---

* 'வேரூர் ஏட்டுப் பிரதிக்கு இயைய ஈண்டுப் பல திருத்தங் கள் செய்யப்பட்டன.

1. ஈண்டு 169-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

† 'நாள்மலி நீர்த்துறைவற்கு' என்பதும் பாடம்.

‡ 'நிலப். கானல் வரி, செய். 33.

2. ஈண்டும் 169-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

§ 'துயிலலறுள்' என்பதும் பாடம்.

இனி, நாய் துஞ்சாமைக்குச் செய்யுள்:

"வாருந்து பைங்கழல் செங்கோல் வரோதயன் வஞ்சியன்னுள்
சேரும் திறமென்னே தேன்தண் சிலம்பணைத் திங்கள்கல்சேர்ந்
தாரும் துயின்றிடம் காவல ரோடன்னே உள்ளுறுத்தெல்
லாரும் துயிலினும் துஞ்சா ஞமலி அரையிருளே." (உகள)

இனி, ஊர் துஞ்சாமைக்குச் செய்யுள்:

"மாவும் களிறும் மணிநெடுந் தேரும்வல் லத்துப்புல்லாக்
கோவும் துமியவை வேல்கொண்டகோன் அந்தண் கூடல்அன்னுய்!
*பூவும் புகையும் கமழ்ந்துபொன் னுமும்பர் பேருலகு
மேவும் விழவொடு துஞ்சா திரவிவ் வியனகரே." (உகஅ)

இனி, காவலர் கடுகுதற்குச் செய்யுள்:

"அடிக்கண் அதிரும் கழல்அரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் இடியுரும் ஏந்திய தென்னவன் கூடல்அன்னுய்!
வடிக்கண் இரண்டும் வளநகர் காக்கும்வை வேலிளைஞர்
துடிக்கண் இரண்டுங்கங் குல்தலை ஒன்றும் துயின்றிலவே!" (உகக)

இனி, நிலவு வெளிப்படுதற்குச் செய்யுள்:

"சென்று செருமலைந் தார்கள்செந் தீமூழ்கச் செந்நிலத்தை
வென்று களங்கொண்ட கோன்தமிழ் நாடன்ன மெல்லியலாய்!
இன்றிவ் விரவின் இருள்சென்றிடங்கொண்டதெங்குக்கொல்லோ
நின்று விசும்பில் பகல்போல் விரியும் நிலாமதியே." (உஉ0)

இனி, சிறை காவல் எல்லாம் வந்த செய்யுள்:

† "இரும்பிழி மகாஅரிவ் வழுங்கல் மூதூர்
விழவின் முயினும் துஞ்சா தாகும்;
மல்லல் ஆவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னே துஞ்சாள்;
பிணிகொள் அருஞ்சிறை அன்னே துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின் வையெயிற்று

---

* 'பூவும் புகையும் விரையுங் கமழ்ந்து பொன்னுலகம்' என்பதும் பாடம்.

† அகம். செய். 122.

நாய்
பால் வலஞ்சுரித் தோகை ஞாளி மருளும்;
*அரவவாய் ஞமலி குரையாது மடியின்
பகலுரு வுறழ நிலவுகான் றுவிரும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே;
திங்கள் கல்சேர்பு கனியிருள் மடியின்
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்;
வளைகண் சேவல் வாளாது மடியின்
மணிச்செறி கோழி மாண்குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்த காலத் தொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே;
அதனுல் அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
கொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்மூட் டின்றுல் தோழி!நகம் களவே.''

இனி, 'ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவியும்' என்பது, தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற நிலைமைக் கண், ஆறென்பது, வழி; பார்த்துறுதல் என்பது, பரிவுறுதல்; அச்சம் என்பது, குறிப்பின்றியே தோன்றும் நடுக்கம்; கிளவி என்பது சொல்; அஃதாமாறு: 'எம்பெரு மான் வரும்வழி இறப்பவும் இன்னது; நீருடைத்து; கல்லுடைத்து; முள்ளுடைத்து; ஏற்றுடைத்து; இழிவுடைத்து,' எனக் கவறல்; இஃதாம் ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி என்ப ஒரு திறத்தார்; அவரறியார்; இஃது ஆறு பார்த்துற்ற கிளவியே. இனி அச்சக்கிளவி என்பது, 'கள்ளருடைத்து; புலியுடைத்து; எண்குடைத்து; வெண் கோட்டியானையுடைத்து; உருமுடைத்து; பாந்தளுடைத் து;' எனக் கவலும் கவற்சியால் சொல்லுவது. அவற் றுள் ஆறு பார்த்துற்றதற்குச் செய்யுள்:

''உருள்தங்கு மாகெடுந் திண்தேர் உசிதன் உலகளிக்கும்
அருள்தங்கு செங்கோல் அடல்மன்னன் கொல்லி அருவரைவாய்

* 'அவ்வாய் ஞமலி' என்பதும் பாடம்.

மருள்தங்கு வண்டறை சோலைப் பொதும்பின் வழங்கற்கின்னு
இருள்தங்கு நீள்நெறி எம்பொருட் டால்வந் தியங்கன்மினே."

இது கேட்ட தலைமகன் வரைவானும்.

இனி, அச்சக் கிளவிக்குச் செய்யுள்:

"பண்குடை சொல்லிவள் காரண மாப்பனி முத்திலங்கும்
வெண்குடை வேந்தன் விசாரிதன் மேற்கரை ஏற்றெதிர்ந்தார்
புண்குடை வேல்மன்னன் தென்னன் பொதியில் புனவரைவாய்
எண்குடை நீள்வரை *நீயரை எல்லி இயங்கன்மினே." (உஉஉ)

"அன்பெதிர்ந் தாலும் வருதல்பொல் லாதைய! ஆரமருள்
முன்பெதிர்ந் தார்படச் சேவைவென் றூன்முகில் தோய்பொதியில்
பொன்பிதிர்ந் தாலன்ன மின்மினி சூழ்புற்றின் முற்றியசோற்
றின்பிதிர் வாங்கிளண் கேறு திளைத்துண் ணும் ஈண்டிருளே."

இன்னும் அவற்றிற்குச் செய்யுள்:

"கையமை வேல்விளக் காகக் †கனையிருள் கள்ளிரவின்
ஐயமை தோய்வெற்ப! வாரல்; நறையாற் றமர்கடந்திவ்
வையமெல் லாங்கொண்ட மன்னவன் மாறன்‡மை தோய்பொதியில்
தெய்வமெல் லாமரு விப்பிரி யாத சிறுநெறியே." (உஉச)

"தோள்வாய் மணிநிற மங்கைக்கு வாட்டவும் துன்னுதற்கே
நாள்வாய் வருதிவிண் தோய்சிலம் பா!நறை யாற்றுநண்ணர்
வாள்வாய் உகச்செற்ற வானவன் மாறன்மை தோய்பொதியில்
கோள்வாய் இளஞ்சிங்கம் நீங்கா திரிதரும் குன்றகமே." (உஉடி)

"காந்தள் முகையன்ன மென்விரல் ஏழைதன் காரணமாப்
பூந்தண் சிலம்ப! இரவின் வருதல்பொல் லாதுகொலாம்
வேந்தன் விசாரிதன் விண்டோய் குடுமிப் பொதியிலென்றும்
தேந்தண் சிலம்பின் அரிமா திரிதரும் தீநெறியே." (உஉசு)

$ "அழுதும் புலம்பியும் நையும் இவள்பொருட் டாகஐய!
தொழுதும் குறையுற்று வேண்டுவல்: வாரல்துன் னார்நிணமும்
இழுதும் மலிந்தசெவ் வேல்நெடு மாறன்எம் கோன்முனைபோல்
கழுதும் துணிந்து வழங்கல்செல் லாத கனையிருளே." (உஉஎ)

---

* 'நீயைய வெல்லி' என்பதும் பாடம்.
† 'கனையிரு ணுளரிவை' என்பதும் பாடம்.
‡ 'வண்டார் பொதியில்' என்பதும் பாடம்.
$ 'அழுது புலம்பியும்' என்பதும் பாடம்.

"போய்தலை வைத்த அருளொடு பூங்குழ லாள்பொருட்டாக
மைதலை வைத்தவண் பூங்குன்ற நாட! வரவொழிதீ
நெய்தலை வைத்தவை வேல்நெடு மாறன்எம் கோன்முனைபோல்
கைதலை வைத்துக் கழுதுகண் சோரும் கனையிருளே." (உஉஅ)

இவை தோழிக்குரியன. இனி, தலைமகட்குரியன வருமாறு :

"பணிகொண்டு வாழா தெதிர்ந்து பறந்தலைக் கோடிப்பட்டார்
துணிகொண்டு பேய்துள்ளவேல்கொண்ட கோன்சுடர்தோய்பொதியின்
அணிகொண்ட தாரண்ணல் வாரல் விடர்நின் றரவுமிழ்ந்த
மணிகொண்டு கானவர் வேழம் கடியும் மயங்கிருளே." (உஉகூ)

[1]இவ்வகை சொல்லினவிடத்துத் தலைமகன் கேட்பானுயின், வரைவானும்; தோழி கேட்பின், வரைவு கடாவுவாளாம்; யாரும் கேட்பாரில்லையாயின், தானே சொல்லி ஆற்றுவாளாம். இஃது இரவுக்குறிக்கண்ணதே.

இனி, 'இரவினும் பகலினும் நீவரு கென்றலும்' என்பது, பகற்குறியானும் இரவுக்குறியானும் வந்தொழுகாநின்ற தலைமகனை,'இரவும் பகலும் வா,' என்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் :

'இரவினும் பகலினும் நீவருக,' என்றல்

"உரவும் கடல்சூழ் உலகுடை வேந்தன் உசிதன்ஒன்னார்
பரவும் கழல்மன்னன் கன்னியங் கானல் பகலிடம்நீ
வரவு மகிழ்ந்திலள் தையல்;வெய் யோன்போய் மலைமறைந்த
இரவும் வரவென்ன வூனமென் றுயின தின்னருளே." (உகூ0)

இது கேட்டு, 'இவ்வகை யான் வந்தொழுகப் பொருதுபோலும் இவ்வகை சொல்வாளாயிற்று!' என வரைந்து புகுவானும் என்பது.

இனி, ஒரு சாராசிரியர், 'இரவினும் பகலினும் நீ வருக,' என்றதனை, இரவு வருவானைப் பகல் வருகென்றலும், பகல் வருவானை இரவு வருகென்றலும் என்றவாறு

1. ஈண்டு 176-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

என்ப; அவற்றுக்குச் செய்யுள் வேறு காட்டுப. அவற்றுள் இரவு வருவானைப் பகல் வருகென்றதற்குச் செய்யுள் :

'பகல் வருக,' என்றல்

"அடிமேல் அகலிடம் எல்லாம் வணக்கி அமரர்தங்கோன்
முடிமேல் வளைபுடைத் தோன்செடி மாறன்முன் ஞளுயர்த்த
கொடிமேல் உருமதிர் கூரிருள் வாரன்மின்; நீர்மகிழும்
படிமேல் பகல்வம்மின்: வந்தால் விரும்புமென் பல்வளையே."

என்பது கேட்டு, 'யான் இரவு வந்தொழுகப் பொருளாய்ப் 'பகல் வம்மின்,' என்கின்றது,' எனக் கருதி, வரைந்து புகுவானுவது.

இனி, பகல் வருவானை இரவு வருகென்றற்குச் செய்யுள் :

'இரவு வருக,' என்றல்

"அஞ்சா தெதிர்மலைந் தாரமர் நாட்டிட னேமடிய
நஞ்சார் இலங்கிலை வேல்கொண்ட தென்னன்நன் னாடனைய
பஞ்சார் அகலல்குல் பால்பகல் வந்தால் பழிபெரிதாம்
மஞ்சார் சிலம்ப! வரவென்ன வூன மயங்கிருளே." (உஉ)

என இது சொல்ல, 'பகல் வருவேனை இரவு வருகென்றது இவ்வொழுக்கம் பொருமையினும்,' என வரைந்து புகுவானும்.

இனி, 'கிழவோன் தன்னை வாரல் என்றலும்' என்பது, தலைமகனை, 'இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வாரல்,' என்று சொல்லுதல்; அதற்குச் செய்யுள் :

இரவும் பகலும் வரவு விலக்கல்

"ஓதம் கடைந்தம ரர்க்கமு தாக்கி உணக்கொடுத்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வாய்
ஏதம் பழியினெ டெய்துத லால்இர வும்பகலும்
மாதங் கடைந்தமெல் நோக்கி திறத்தைய! வாரன்மின்னே."

* "கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவா அன்
தேங்கமழ் இணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு தொகைஇ
† மறுகு வாங்கும் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பிணை ‡வயகாய் பிற்படப்
பகல்வரின் கௌவை அஞ்சுதும்; இகல்கொள
இரும்பிடி கன்றெடு விரைஇக் கயவாய்ப்
பெருங்கை யாணை கோள்பிழைத் திரீஇ
அடிபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள்
தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்;
என்னு குவள்கொல் தானே; பன்னுள்
புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்;
அளியள் தானேநின் அளியல திலளே."

'ஒன்று மறுப்பின் ஒன்றின்கண்ணே நிற்குங் கொல்லோ!' என்று இரண்டும் மறுத்து வரைவின் கண்ணே படுத்தவாறெனக் கொள்க.

'தன்னுள் கையாறு எய்திடு கிளவியும்' என்பது, தன்னுள் கையாற்றினை ஏதிலது ஒன்றின்மேலிட்டுச் சொல்லுதல்; அதற்குச் செய்யுள்:

தன்னுள் கையாறு எய்திடு கிளவி

"தன்போல் சினத்தரும் ஏந்திய கோன்கன்னித் தாழ்துறைவாய்ப்
பொன்போல் மலர்ப்புன்னைக் கானலும் நோக்கிப் புலம்புகொண்ட
என்போல் இரவினெல் லாம்துயி லாதுநின் றேங்குதியால்
அன்போ டொருவற் கறிவிழந் தாயோ அலைகடலே!" (உஙச)

"பொன்றுன் பயப்பித்து நன்னிறம் கொண்டு புணர்ந்தகன்று
சென்றூர் உளரோ நினக்குச்சொல் லாய்செந் நிலத்தைவெம்போர்
வென்றுன் வியனில வேந்தன் விசாரிதன் வெல்கழல்சேர்ந்
தொன்றூர் முனைபோல் கலங்கித்துஞ் சாயால் ஒலிகடலே!"

---

* அகம். செய். 118.

† 'மறுகிற் றூங்கும்' என்பதும் பாடம்.

‡ 'வயமாப் பிற்பட' என்பதும் பாடம்.

"பறைவாய் ஒலியோதம் பந்தர் உகளும்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினும் துஞ்சாய்
நிறையில் மருள்மாலை எம்போல நீத்த
துறைவன் உடையையோ நீவாழி வீராய்!"

'என்போல் இரவினெல்லாம் துயிலாய், நீயும் நின் காதலர் மாட்டு *என்போல் அறிவிழந்தாயோ!' என்னும்; [1]என்றது தலைமகன் கேட்பின், வரைவானும்; தோழி கேட்பின், வரைவு கடாவுவாளாம்; யாரும் கேட்பாரில்லையாயின், தானே சொல்லி ஆற்றுவாளாம்.

†'அன்ன மரபின் பிறவும் தொகைஇத் தன்னை அழிந்த கிளவி எல்லாம்' என்பது, அன்ன மரபின் பிறவும் தனது ஆற்றுமையால் சொல்லும் சொல் என்ற வாறு.

'வரைதல் வேட்கைப் பொருளா என்ப,' என்பது, வரைதல் வேட்டுச் சொல்லும் சொற்களும் என்றவாறு; வரைதல் வேட்பச் சொல்லும் தலைமகள் சொல்லெல்லாம், தலைமகனைத் தோழி சொல்லும் சொல்லெல்லாம் வரைதல் வேட்டுச்சொல்லும் சொல் என்றவாறு. 'அன்ன மரபின் பிறவும்' என்றதனால், பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்தொழுகும் தலைமகற்குத் தலைமகளும் தோழியும் ஆற்றுத்தன்மையராய் வரைவு பயப்பச் சொல்லும் சொல் எல்லாம் கொள்க. அக்கிளவி பல; அவற்றுள் சில வருமாறு:

நிலை கண்டு உரைத்தல்

"நெய்க்கின்ற வேல்நெடு மாறன்எம் கோன்அத்தண் நேரிஎன்னும்
மைக்கின்ற குன்றச் சிறுகுடி நீரைய! வந்துகின்றால்
கைக்கின்று கூப்பி வரையுறை தெய்வமென் ஞாதகண்டார்
மெய்க்கின் றுணர்ப எனினுய்யு மோமற்றிம் மெல்லியலே?" (உருசூ)

---

* 'அன்போ டறிவிழந் தாயோ' என்பதும் பாடம்.

1. ஈண்டு 181-ஆம் பக்கத்திற்கூறியவற்றை நோக்குக.

† வேரூர் எட்டுப்பிரதி நோக்கி ஈண்டுப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

என்பது, 'இரவுக்குறியிடத்து வந்து நின்ருல், கண்டார் நும்மை முருகவேளென்று கருதாது மெய்ம்மை உணர்ப வாயின், இவள் பெருநாணினளாகலின், இறந்துபடுமே!' என்னும். அது கேட்டுத் தலைமகன், 'பெரியதோர் இழுக் குடைத்தாக ஒழுகினேன்காண்,' என அன்று ஒருவகை யால் முற்பட்டுப் பிற்றை ஞான்று வரைவானும். இன் னும் 'அன்ன மரபின் பிறவும்' என்றதற்குச் செய்யுள்:

படைத்து மொழி கிளவி

"'அன்னாய்! நெருநல் நிகழ்ந்தது கேள்: அயல் வேங்கைஞ்சும்
பொன்னுர் கழல்கெடு மாறன் குமரியம் பூம்பொழில்வாய்
மின்னுர் மணிநெடுந் தேர்கங்குல் வந்தொன்று மீண்டதுண்டால்!'
என்னு முகஞ்சிவந் தெம்மையும் நோக்கினள் எம்மனையே." (உகஎ)

*என்பது இரவுக்குறியின்கண் தலைமகன் சிறைப்புறத் தானுவதறிந்து, தலைமகற்குத் தோழி படைத்து மொ ழிந்து சொல்லியது. 'எங்ஙனமோ?' எனின், 'நெருநல் அன்னை, 'நீங்கள் விளையாடும் கானலிடத்து ஒரு தேர் வந்து போயிற்று!' என முனிந்து, என்னையும் நோக்கிப் போயினுள்; இன்னது கருதியென்பது அறியேன்!' என் னும். என, 'ஒக்கும்; யான் வந்து ஒழுகுகின்ற ஒழுக்கம் புறத்தார்க்குப் புலனுயிற்றுப்போலும்!' எனப் பிற்றை ஞான்றே வரைந்து புகுவானும். இன்னும் 'அன்ன மர பின் பிறவும்' என்றதற்குச் செய்யுள்:

"பண்ணிவர் சொல்லிகண் டாள்தென்னன் பாழிப் பகைதணித்த
மண்ணிவர் சீர்மன்னன் வாள்கெடு மாறன் மலயமென்னும்
விண்ணிவர் குன்றத் தருவிசென் ரூடியொர் வேங்கையின்கீழ்க்
கண்ணிவர் காதல் பிடியொடு நின்ற கருங்களிறே." (உகஅ)

என்பது பகற்குறி வந்து ஒழுகும் தலைமகற்குத் தோழி படைத்து மொழிந்து வரைவு கடாயது. அவ்வகைத்தால் களிற்றேடு ஒரு பிடி வேங்கைக்கீழ் நின்றபடி கண்டு,

* வேரூர் ஏட்டுப் பிரதியின்படி இப்பகுதியிற் பல திருத்தங் கள் செய்யப்பட்டன.

'இதுபோல நம் பெருமானும் நமக்கு வழிபட முடியுங் கொல்லோ!' என்றுள் என்பது. இன்னும் 'அன்ன மரபின் பிறவும்' என்றதற்குச் செய்யுள்:

"தோடுத்தால் மலரும்பைங் கோதை!நம் தூதாய்த் துறைவனுக்கு
வடுத்தான் படாவணம் சொல்லுங்கொல் வானோர்க் கமிழ்தியற்றிக்
கொடுத்தான் குலமன்னன் கோட்டாற் றழித்துத்தென் ஞாதன்கைப்
படுத்தான் பராங்குசன் கன்னியங் கானல் பறவைகளே?" (உஉக)

இதுவும் அப்பொருட்கு ஏற்பச் சொல்லிக்கொள்க. 'அஃதேயெனின், இச்சூத்திரத்துட் சொல்லப்பட்டன எல்லாம் தலைமகட்கே உரியனவும், தோழிக்கே உரியனவும், தலைமகட்கும் தோழிக்கும் உரியனவும் என மூன்று வகைப்பட்டன. காமமிக்க கழிபடர் கிளவியுந் தன்னுள் கையாறெய்திடு கிளவியும் எல்லாம் தலைமகட்கே உரிய. 'இரவினும் பகலினும் நீ வருக,' என்றலும், கிழவோன் தன்னை 'வாரல்,' என்றலும் இவ்விரண்டும் தோழிக்கே உரிய. ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவியும், காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் இருவர்க்கும் உரிய. 'உரிமையால் 'தம்மையழிந்த கிளவியெல்லாம்' என்று பன்மையால் சொல்லாது ஒருமையால் சொல்லியது எற்றிற்கோ?' எனின், தோழி, தலைமகளென இருவரையும் வேறுபடுத்துக் கருதாது ஒருவராகவே கருதற்பொருட்டாக ஒருமையால் புணர்த்தார் என்பது.

ஙக. ஆறின் ஞமையும் ஊறும் அச்சமும்
தன்னை அழிதலும் கிழவோற் கில்லை

'என்பது என்னுதலிற்றோ?' எனின், களவு காலத்துத் தலைமகனது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. 'மேல் சூத்திரத்தோடு இயைபு என்னையோ?' எனின், மேற்சூத்திரத்துள் 'ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி' என்றார், தலைமகன்கண்ணும் ஆறு பார்த்துறவுண்டென்று கருதுவராயின், கருதற்க என்றற்குச் சொல்லப்பட்டது.

இதன் பொருள்: ஆறு இன்மையும் என்பது, ஆறு எனினும் வழியெனினும் ஒரு பொருட்கிளவி; 'வரும் வழி ஏற்றுடைத்து; இழிவுடைத்து; * இழுக்குடைத்து; கல்லுடைத்து; மூள்ளுடைத்து,' என்றல்; ஊறு என்பது, இடையூறு; புலியானும், யானையானும், சூர மகளிரானும், * கள்ளரானும், எண்ணானும் இடையூறு உடைத்தென்றல்; 'அச்சம்' என்பது, அஞ்சப்படுவன கண்டவிடத்து †மனக்குறிப்பன்றியே அஞ்சுவது; அச்சமும் இவன்கண் இல்லை என்றவாறு; 'தன்னையழிதலும்' என்பது, தன்கண் ஒரு துன்பம் வந்தவிடத்து 'எனக்காகாததோர் ஒழுக்கம் எடுத்துக்கொண்டேன்!' எனத் தன்னை நெஞ்சினால் நோதலும் என்றவாறு; 'கிழவோற்கு இல்லை,' என்பது, இன்ன தலைமகற்கு இல்லையென்றவாறு.

'அஃதே எனின், அவற்கு அவையுளவாய் வைத்து நினையாமையின் இல்லையோ, இல்லையாய் இல்லையோ?' எனின், உளவேயெனின், நினையானுயினும் வந்து நிகழும். உலகத்து உயிர் வாழ் சாதிகளெல்லாம் தமது சாக்காடு நினைத்துச் செல்கின்ற உளவே? இல்லையன்றே? இல்லை எனினும், அவை வந்து நிகழ்ந்தேவிடும். அது போல, இவன் நினையானுயினும், உளவாயின் நிகழவேண்டும்; இனி இல்லையாயே இல்லையெனின், இல்லதனை இல்லையென வேண்டுவதில்லை. என்னை? ஆகாயப்பூ இல்லையென வேண்டுவதில்லை, அது போல என்பது; என்றூர்க்கு இல்லதனையே இல்லையென்றூர், இவன் உலகத்துத் தலைமகனல்லன், புலவரால் காட்டப்பட்ட தலைமகனென்பதனை யாப்புறுத்தற்கு. உலகத்துத் தலைமகனுயின், இவையெல்லாம் இல்லாமை இல்லையென்பது. கிழவோற்கில்லையெனவே, கிழவிக்குந் தோழிக்கும் அவையுள என்பது பெற்றும். அவர் ஆறு இன்னது என்றும் இடையூறுகள் உளவென்றும் அவற்றிற்கு அஞ்சுதலும், 'எம் பெருமான் தனக்குத் தகாத‡ இழிவர

* இச்சொற்றொடர்கள் முன் அச்சுப்பிரதியிலில்லை.

† 'மக்கள் குறிப்பன்றியே' என்பதும் பாடம்.

‡ 'இளிவர' என்பதும் பாடம்.

ஒழுகுதற்குக் காரணமாயினேம் ஆகாதே?' என்று தம்மை அழிதலும் உடையர் என்றவாறு.

'அஃதெனின், வயிரமுடையான் ஒருவன் வயிரம் மூள எறியுமென்று அஞ்சான்; அது போல இவரும் அஞ்சாது விடற்பாலார் பிற, அவற்கு அவையின்மை யால்,' எனின், அதுவன்று; [1]பெண்மை என்பது ஒரு பொருளைப் பட்டாங்கு அறியாமையாகலான், [2]அவை அவற்கு இல்லையெனினும் உளவாகக் கருதுப என்பது. [3]'அஃதெனின், மேல் இவனைப் பொருவிறந்தான் என்று போதரப்பட்டதன்றே? பட்டமையான், அச்ச மும் தன்னையழிதலும் இல்லையெனக் கொள்ளாமோ, மனத்தான் வரும் நோயெல்லாம் உணர்வின்மையான் வரும் ஆகலான்?' என்பது கடா; அதற்கு விடை, இவன் ஞானத்தையும் ஒழுக்கத்தையும் விதி இழுக்கினமையால் சிற்றறிவினர் தன்மையுண்மையான் உளகொல்லோ என்று கருதின், அவையில்லை என்பது போதரச் சொல் லப்பட்டது.

---

1. பெண் தன்மை என்பது ஒரு பொருளை உண்மையாக அறி யும் அறிவின்மையுடையதாதலின்

2. (ஆற்றினுமையும் இடையூறும் என்பவற்றின் அச்சமும், தன்னையழிதலுமாகிய) அவை தலைமகனுக்கு இல்லையாகவும், தலை மகளும் தோழியும் அவனுக்கு அவையுள்ளனவாகக் கருதுவர் என்பது.

3. 'அங்ஙனமாயின், முன்னே இவனைப் பொருவிறந்தவன் என்பது அறியும்படி சொல்லப்பட்டது அன்றே? அங்ஙனஞ் சொல் லப்பட்டமையால் (இவன் பேரறிவுடையனாகலின்) அது கொண்டே அச்சமும் தன்னையழிதலும் இவனுக்கு இல்லை என்பது கொள்ள மாட்டாமோ, மனத்தால் வரும் நோய் எல்லாம் உணர்வின்மையான் வருவனவாகலின்? ஈண்டு அவை அவற்கு இல்லை என்பதை விதந்து சொல்லவேண்டியது என்னை?' எனின், இவனுடைய ஞானத்தையும், ஒழுக்கத்தையும் ஊழ் இழுக்குவித்தமையான், சிற்றறிவினர் இயல்பு இவன்பாலும் உளவாகத் தோன்றலின், 'இவற்கும் அச்சமும் தன்னை யழிதலும் உளகொல்லோ!' எனக் கருதுவார்க்கு இவற்கு அவை இல்லை என்பது விளங்குதற்பொருட்டு விதந்து சொல்லப்பட்டது என்பது.

நூஉ. களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப

'என்பது என்னுதலிற்றோ?' எனின், களவினுள் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இத்துணைக்காலம் அல்லது இல்லை என்று வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி - களவினுள் தங்குதல், வரைவின் நீட்டம் - வரைந்தெய்துந்துணை நீட்டிக்குங்காலம், திங்கள் இரண்டின் அகமென மொழிப - இரண்டு திங்களகம் எனக் கொள்க என்றவாறு.

இவ்வாற்றானும் இஃது உலகத்து இயல்பன்று என்பது பெற்றாம், உலகத்து ஒழுக்கத்திற்குக் கால வரையறை இன்மையான் என்பது. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தவிடத்துப் பிராயமும் ஈங்கே உரைக்கப்பட்டதாம். பதினோராண்டும் *பத்துத் திங்களும் புக்க தலைமகளோடும் பதினையாண்டும் *பத்துத் திங்களும் புக்க தலைமகனைப்போலும் புணர்தல் வேண்டிற்று என்பது பெற்றாம். அவளும் இரு திங்கள் களவொழுக்கொழுகப் பன்னீராட்டைப் பிராயத்தாளாம். அது மக்கட்பேற்றுக்குக் காலம்; களவொழுக்கத்திற்குப் பொருந்தாதென விலக்கப்பட்டதாம் ஆசிரியர்களான் என்பது. இவனும், இரு திங்கள் களவொழுக்கொழுகப் பதினாறாட்டைப் பிராயத்தானும். அஃது ஆண்மை நிலைபெறும் காலமாகலான், களவொழுக்கிற்கு விலக்கப்பட்டது என்பது. 'அஃதேயெனின், இரு திங்களென்னுது அகமென்றது எற்றிற்கோ?' எனின், இரு திங்களுள் ஐந்தானும் ஆறானும் நாள்உளவாகக் களவொழுக்கு ஒழிந்து நின்று வரைந்து புகுவதனோடும் மறுப்பதனோடும் அத்துணை நாளும் புக்கு நிறைந்து நின்ற பின்னை [1]அது படின், மிகுவான் புகும் என்பது. அஃதேயெனின், இவர்க்கு

* 'பதின்றிங்களும்' என்பதும் பாடம்.

1. அக்களவொழுக்கம் உளதாயின் (காலம்) இரண்டு திங்களின் மிகும்படியாகும்.

மூப்புப்பிணி சாக்காடில்லை என்று மேல் சொல்லியதனோடு மாறுகொண்டு காட்டிற்றும், [1]அது பட உரைத்தமையின் என்பது. 'எங்ஙனமோ?' எனின், இரு திங்கள் புகப் பன்னீராட்டைப் பிராயத்தாளேயாயக்கால், பின்னைப் பதின்மூவாட்டைப் பிராயத்தாளாய், இவ்வகை நூற்றிருபது புக்குத் தலை மடிய வேண்டும் என்பது; இவற்கும் அம்முறையே கொள்க என்பது; மூப்புப் பிணி உள்வழிச் சாக்காடுண்மையான் என்பது கடா. 'அதற்கு விடை எங்ஙனமோ?' எனின், இரு திங்கள் புக இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய், இவனும் பதினொட்டைப் பிராயத்தானுய்ச் செல்வதல்லது, மற்றை யன நிகழா; [2]உலகினோடு இத்துணை மாத்திரையே ஒத்து மற்றை விகற்பமெல்லாம் ஒவ்வா எனக்கொள்க. ஒத்து ஒவ்வாதாயன்றே செல்கின்றது என்பது. 'அஃதே எனின்,

* "அண்ணற் றேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
† நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!"

என [3]இலக்கியம் வருவன உளவாலோ?' எனின், அஃதில்லைமன், ஈங்கிதே பட்டுவிடினும் என்றவாறு.

இனி, ஒரு திறத்தார் திங்கள் இரண்டினகம் என்பதனைச் சொல்லுமாறு:

---

1. அம்மாறுபாடு தோன்றக் கூறினமையால்

2. பதினேராண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகளும், பதினேயாண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகனும், இரண்டு திங்கள் உடன் கூட முறையே பன்னீராண்டும், பதினொண்டும் உடையராகும் இவ்வளவு மாத்திரமே

* கற்றிணை, செய். 10.

† இச்செய்யுள் முழுவதையும் 151-52-ஆம் பக்கத்திற்காண்க.

3. இச்செய்யுளில் இப்பொருளே தோன்றிற்றுயினும், மூப்புப் பிணி முதலிய வாய்ந்து சாக்காடுமஃது இவர்க்கு இல்லை என்பது. (ஈண்டு மன் என்பது அசை நிலையாய் நின்றது என்க.)

பிறைத்திங்கள் மதித்திங்களென இரண்டு; அவற்றுள் பிறைத்திங்கள் முன்னெளியாய்ப் பின்னிருளாம்; மதித்திங்கள் பின்னெளியாய் முன்னிருளாம்; அவ்விரண்டுஞ் சந்தித்து நின்ற இருட்காலத்தாக என்றவாறு. அது பொருந்தாது; 'என்னே காரணம்?' எனின், [1]இரவுக்குறிக்கே சொல்லினமையான். அல்லதூஉம், காலவரையறையின்றியே எஞ்ஞான்றும் * இருள் திங்கட்கண்ணே களவொழுக்கம் வேண்டப்பட்டதாம் என்பது. இனி, ஒரு சாரார் திங்களிரண்டின் அகமென்பதனை ஒரு திங்களை இரண்டு கூறிட்ட ஒரு கூறென்று பதினைந்து நாளாகச் சொல்லுப. அதுவும் பொருந்தாமை அறிந்து கொள்க.

நகூ. களவினுள் †தவிர்ச்சி கிழவோற் கில்லை

'என்பது என்னுதலிற்றோ?' எனின், களவு காலத்துத் தலைமகனது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை - களவு காலத்துத் தலைமகன் காரணமாக இடையீடு இல்லை என்றவாறு.

தலைமகற்கு இல்லையெனவே, அருத்தாபத்தியால் தலைமகள் காரணமாக உண்டென்பது. இன்னும் 'களவினுள் தவிர்ச்சி கிழவோற்கில்லை,' என்பதனானே, கற்பினுள் தலைமகள் காரணமாக இடையீடில்லை என்றும். என்னை? இவன் ஒரு ஞான்று ஒருகால் அக்குறியிடத்து வந்து பெயரும் தலைமகளைச் சார்ந்த இடையூறுகள் எய்தானும் என்பது. இனி ஆண்மை மிக்க தலைமகன் பிரிவு வேண்டுவதல்லது, தலைமகள் வேண்டாள் கற்பினகத்து

---

1. களவொழுக்கம் பகலும் இரவுமாகிய இரண்டு பொழுதினும் நிகழ்வதாகலானும், ஈண்டுக் கூறிய பொருள் இரவுக்குறிக்கே உரிய தாமாதலானும் அது பொருந்தாது என்க.

* 'மதித்திங்கட்கண்ணே' என்பதும் பாடம்.

† 'தவிர்தல்' என்பதும் பாடம்.

என்றவாறு. இது சொல்ல வேண்டா; 'என்னே காரணம்?' எனின்,

* "களவினுள் தவிர்ச்சி காப்புமிகின் உரித்தே
வரைவிடை வைத்த காலை ஆன."
† "அல்லதுறிப் படுதலும் அவ்வயின் உரித்தே
அவன்வர வறியும் குறிப்பின் ஆன"

எனவும் ‡ இவ்வகையான் இடையீடு தலைமகளைச் சார்ந்து மொழியவாகலான் பெறப்பட்டது என்பது. இனி, ஓதல், காவல், பகை தணி வினை என இவை தலைமகனியல்பாதலால், கற்பினுள் தலைமகன் இடையீடாகலும் பெறப்பட்டது; ஈங்குரைக்கல் வேண்டா என்பது. அவ்வகை இலேசினன் இது பெறப்படும். அதனையே மாணக்கன் இனிது உணரல் வேண்டி எடுத்தோதினர் என்பது. அல்லது, ஒரு திறத்தார் களவினகத்துத் தலைமகளுழைத்தங்கிப் பிற்றை ஞான்று போதல் தலைமகற்கு இல்லையென்றவாறு என்ப. அது பொருந்தாது. வந்து பெயர்வதல்லது §நீட்டிக்கில் இடையீடாம், அஃது உணரப்படுதலான் என்பது. 'மற்றென்னே?' எனின், களவினுள் தவிர்தல் என்பது, [1]தமியனுகல் தன்மை ஒழிதல் என்றவாறு. நோய் தவிர்ந்தது வெப்புத் தவிர்ந்தது என்ப, ஒழிந்தது என்பார். இனி, 'கிழவோற்கில்லை,' என்பது தலைமகற்கில்லை என்றவாறு. எனவே, அவ்விரு திங்கள்காறும் தெருளாதே வந்தொழுகும் தலைமகனுயினவிடத்து. தலைமகளாயினவிடத்து,

---

* களவியல், சூ. 16.

† களவியல், சூ. 17.

‡ 'மூன்று வகையான்' என்பதும் பாடம்.

§ 'நீட்டிக்கிலிடைப்படாமை உணரப்படும் ஆகலானென்பது' என்பதும் பாடம்.

1. அவ்விருதிங்களினும் தெருளாஞகி ஒழுகுந்தன்மை (தெருளுவனேல், தெருளுடன் கூடியவனுதலின், தமியனுகற்றன்மை நீங்கும் என்பது.)

அன்று தெருளாளாய்ப் பின்னை நெறியன்று என்று உணரும் என்பது. 'ஆயின், இவனுகாதே தெருளற் பாலான், பெருஞானத்தனுகலான்? இவளாகாதே தெருளாது விடற்பாலாள், அவன் தூணைப் பேரறிவினள் அன்மையான்?' எனின், அதுவன்று. அவன்கணின்ற தமியனுதல் தன்மையை விலக்குவது இல்லை; இன்மையான், [1]அப்பெற்றி சுட்டப்பட்டது. [2]இவள் மாட்டு அதனை விலக்குவது உண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்கும் கவன்ற கவற்சி என்பது. அதனுல் இவன் தெருளாமைக்கும் இவள் தெருடற்கும் காரணம் இது என்பது.

களவு முற்றும்.

---

2. கற்பு

ரூ. கற்பினுள் துறவே கடிவரை வின்றே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், இங்குநின்றும் கற்பினது இலக்கணம் உணர்த்துதல் நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் பொருள்: கற்பினுள் துறவே - கற்பினகத்து நீக்கம் (துறவு எனினும், நீக்கம் எனினும், பிரிவு எனினும், அகற்சி எனினும் *ஒக்கும்), கடி வரைவு இன்றே - கடிந்து வரையப்படாது ஆசிரியர்களால் என்றவாறு.

'அஃதேயெனின், †'கற்பினுள் துறவே கடிதல் இன்றே,' எனவும், 'வரைதல் இன்றே,' எனவும் சொல்

---

1. (தலைவன்பால்) அத்தன்மை குறித்துரைக்கப்பட்டது.

2. 187-ஆம் பக்கத்தில், 'அவர் (தலைவியும் தோழியும்) ஆறு இன்னுது என்றும், இடையூறுகள் உள என்றும் அவற்றிற்கு அஞ்சுதலும், 'எம்பெருமான் தனக்குத் தகாத இளிவர ஒழுகுதற்குக் காரணமாயினேமாகாதே?' என்று தம்மையழிதலும் உடையர்,' என்றதை ஈண்டு நோக்குக. (தம்மையழிதல்-தம்மை நோதல்.)

* 'ஒரு பொருட்கிளவி' என்பதும் பாடம்.

† 'கடியவும்படாது வரையவும்படாதென்னுது' என்பதும் பாடம்.

லாது, 'கற்பினுள் துறவே கடிவரை வின்றே,' என்றது எற்றிற்கோ?' எனின், ஆசிரியர்களால் விலக்கவும் படாது, இத்துணைக் காலமென்று *வரையறுக்கவும் படாது என்றவாறு. எனவே, களவினகத்துப் பிரியும் பிரிவு, ஒரு காலல்லது இல்லை என்றவாறு. 'களவின் அகத்துப் பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்து பிரியுமாகலான், அதுவும் பல்காலும் நிகழ்தலு டைத்துப் பிற,' எனின், அவையெல்லாம் இவ்வாசிரிய ரால் பிரிவென்று வேண்டப்படா, ஒரு கருமம் நோக்கிப் பெயர்ந்தன அன்மையின். அல்லதூஉம், அவையே யாயினும், †வரையறை உடைய களவு காலம் வரை யறை உடைத்தாகலான் என்பது.

ஈரு. ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றிங்க வாறே அவ்வயின் பிரிவே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், மேல் கற்புக்காலத் துப் பிரிவு பல என்றார், அவையிற்றைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: ஓதல் - கல்வி காரணத்துப் பிரியும் பிரிவு, காவல் - நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு, பகை தணி வினை - இருவர் அரசர் ‡தம்மில் பொருப் என்றவிடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு, வேந்தர்க்கு உற்றுழி - (வேந்தரென்பார், அரசர்) அரசர்க்கு உற்றுழிப் பிரியும் பிரிவு, பொருட்பிணி - பொருட்குப் பிரியும் பிரிவு, பரத்தை - புறப் பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு, (பரம் என்பது, புறம்; அஃது ஆரியச்சொல்), என்று-எண்ணுதற்குரியதோர் வாய்பாடு, ஆங்கு - அசைச்சொல், ஆறு - அவற்றது தொகை, அவ்வயின் - கற்பி னிடத்து, பிரிவு - நீக்கம் என்றவாறு.

---

* 'பிரியவும்படாது' என்பதும் பாடம்.

† இச்சொற்றொடர் மூன் அச்சுப்பிரதியில் இல்லை.

‡ 'தம்மிற் பொராகின்றவிடத்து' என்பதும் பாடம்.

ஏ என்பது ஈற்றசை ஏகாரம்; பெயர்–சொல்லப் பட்ட பெயர், முறை-கிடந்த முறை, தொகை - ஆறு எனக்கொள்க.

இனி, ஓதற்குப் பிரியும் பிரிவு முன் வைக்கப்பட் டது, தலையான பிரிவாகலானும் *உயர்ந்தோர்க்கு உரித் தாகலானும் என்பது. பரத்தையிற்பிரிவு பின் வைக்கப் பட்டது, காமம் பின் வைத்தெண்ணப்படுமாகலான் என்பது.

அஃதேயெனின், இவர் முன் பொருவிறந்தாரென் பதனெடு மாறுகொண்டது இச்சூத்திரம்; 'என்னையோ?' எனின், தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவான் எனின், முன் ஞானம் இலனும்; இலனுகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கம் ஆகலானும், ஒழுக்கத் தின் வழித்துத் † தலைக்குலம் ஆகலானும், இவையெல் லாம் குறைவுபட்டானும் என்பது. இனி, காவல் என் பது, இவன் நாட்டைப் பிறர் புகுந்து ‡ அலைப்பதும் கொள்வதும் செய்ய, அவரை நீக்குதற்கு நீங்கும் எனின், இங்ஙனம் பிறரான் இழிவந்தன செய்து நலி யப்படுமே எனின், ஆண்மையில் குறைபட்டானும் என்பது. இனி, பகை தணி வினை என்பது, சந்து செய்வித்தற்குப் பிரியுமே எனின், தூதுவனுயினனும்; தூதுவராவார், பிறர்க்குப் பணி செய்து வாழ்வாராவர், அவரது பொருவிறப்பு என்னையோ என்பது. இனி வேந்தர்க்கு உற்றுழிப் பிரியுமே எனின், கருமச் சேவக னும்; கருமம் செய்வான் சேவகனும் என்ப, இறப்பவும் இழிவந்ததோர் ஒழுக்கம்; பிறர் குறிப்பன்றித் தன் குறிப்பு இல்லையெனப்படும்; ஆதலின், இவரது பொரு

---

* 'உயர்ந்த வருணத்தார்க்கு' என்பதும் பாடம்.

† வாளா 'குலமாதலானும்' என்பதும் பாடம்.

‡ 'நவைப்படுமாய்க் கொள்வதுஞ் செய்யப்பட்டு' என்பதும் பாடம். இங்கிருந்து சில வரிகளில் வேறோர் பிரதிக்கு இணங்கப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

விறப்பு என்னையோ என்பது. இனி, பொருள்வயின் பிரியுமே எனின், முன்னர்ப் பொருளிலன் ஆயினுமும்; ஆகவே, எள்ளுநர்ப்பணித்தலும் இரந்தோர்க்கீதலும் * என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாமையின், இக்குறைபாடெல்லாம் உடையனும்; அவையுடையானது பொருவிறப்பு என்னையோ என்பது. இனி, பரத்தையர் மாட்டுப் பிரியுமே எனின், இவன் கண்டார்கண் தாழ்வானும்; ஆகலான், தலைமகள் மாட்டே கிடந்த அன்பிலன் ஆயினுமும். அல்லதூஉம், கண்டுழி எல்லாம் உள்ளத்தைச் செலீஇ உள்ளத்தின் வழி ஒடுமாகலான் நிறையிலனும்; நிறையிலானது பொருவிறப்பு என்னையோ என்பது.

'இவையெல்லாம் சொல்லப் பெரிதும் மாறுகொண்டு காட்டிற்று,' எனின், மாறுகொள்ளாது; 'மாறுகொள்ளாமைக்குக் காரணம் என்னையோ?' எனின், ஓதற்குப் பிரியும் என்பது, கற்பான் பிரியும் என்பதன்று, பண்டே குரவர்களால் கற்பிக்கப்பட்டுக் கற்றுன் அறம் பொருளின்பம் வீடுபேறுகள் நுதலிய நூல்களெல்லாம்; 'இனி, பரதேசங்களிலும் அவை வல்லார் உளரெனின், காண்பல்,' என்றும், வல்லார்கள்உள்வழிச்சென்றுதன்ஞானம் மேற்படுத்து அவர்கள் ஞானம் கீழ்ப்படுத்தற்குப் பிரியும் எனக் கொள்க.

இனி, காத்தற்குப் பிரியுமென்பது, நலிவார் உளராக, நலிவு காத்தற்குப் பிரியும் என்பதன்று, நாட்டகத்து நின்றும் நகரகத்தும் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார்தம் முறைக்கருமம் கேட்டுத் திருத்துதற்பொருட்டாகவும், காட்டகத்து வாழும் உயிர்ச்சாதிகள் ஒன்றனை

* 'நள்ளுநர் நாட்டலும் நயவாரொழுக்கலும்' என்னும் வேறிரு சொற்றொடர் வேறொரு பிரதியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

ஒன்று நலிவன உளவாயினவிடத்துத் தீதென்று அவற்றை முறை செய்வதற்கும், கொடி வலிப்பட்டுக் கிடந்தனவற்றைத் துறை நீக்குதற்பொருட்டாகவும், வளன் இல்வழி வளம் தோற்றுவித்தற்பொருட்டாக வும், தேவ குலமே சாலியே அம்பலமே என்று இத் தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடி ஓம்பு தற்கும் பிரியும் என்பது. அல்லதூஉம் பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவது போலத் தன்னுல் காக்கப் படும் உயிர் வாழ் சாதிகள் தன்னைக் கண்டு இன்புறுத லின், தான் அவர்கட்குத் தன் உருக் காட்டுதற்கும், மாற்றரசர் ஒற்று வந்தவிடத்து அவர் முன்னர்த் தனது ஊக்கம் காட்டுதற்பொருட்டாகவும் பிரியும். அதனனே மாற்றரசரும் திறை கொடுப்பர் என்பது.

இனி, 'பகை தணிவினை' என்பது, தூதுவர் போலச் சந்து செய்வித்தற்குப் பிரியும் என்பதன்று; இருவர் அரசர், 'நாஞப்பொருதும்; இன்று பொருதும்,' என்று மூரண் கொண்டு இருந்த நிலைமைக்கண், தான் அருள் அரசனுகலின், 'இம்மக்களும் இவ்விலங்குகளும் எல்லாம் பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்; அதனுல், இப்போர் ஒழிப்பன்,' என்று இருவரையும் இரந்து சந்து செய்வித்தலும் ஒன்று. அல்லதூஉம், தேவரும் அசுர ரும் பொருத காலத்துத் தேவரையும் அசுரரையும், *'ஒரு வீர் ஒருவீர் மிக்காரையொறுப்பல் யான்,' எனப் **பாண்டியன் மாகீர்த்தி** சந்து செய்வித்தது போல, 'இருவரின் மிகை செய்தீரை ஒறுப்பல்,' என்றுசந்துசெய்வித்தலும்ஒன்று, இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடையனுகலான் என்பது. 'அஃதேயெனின், தன்னகத்து †இருந்துவிட அமையாதோ அன்ன ஆற்றலன் ஆகலான்? தான் செல்லவேண்டுமோ?' எனின், செல்லவேண்டும் என்பது. என்னை? காதலர்ப் பிரிந்து ஒரு கருமம் முடிப்பதனின்

---

* வாளா 'மிக்க செய்தாரை ஒறுப்பெனென்று' என்பதும் பாடம்.

† 'நின்றுவிட' என்பதும் பாடம்.

மிக்க ஆள்வினை இல்லை என்பது. ஆதலால், பிரிந்தே சந்து செய்விக்கும் என்பது.

இனி, 'வேந்தர்க்குற்றுழி' என்பதற்குச்சேவகனுய்ப் பிரியுமென்பதன்று, தனக்கு நட்டான் ஓரரசன் சென்றவிடத்து * அவற்கு ஆய மறுதலையை வென்று நீக்குதற்குப் பிரியும் என்று கொள்க.

இனி, 'பொருட்பிணி' என்பது, பொருளிலனுய்ப் பிரியும் என்பதன்று, தன் முதுகுரவரால் படைக்கப் பட்ட பல வேறு வகைப்பட்ட பொருளெல்லாம் கிடந்தது மன், அது கொடு துய்ப்பது ஆண்மைத் தன்மையன் றெனத் தனது தாளாற்றலால் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியும் என்பது; அல்ல தூஉம், தேவர் காரியமும் பிதிரர் காரியமும் தனது தா ளாற்றலால் படைத்த பொருளால் செய்தன தனக்குப் பயன்படுவன; என்னை? தாயப் பொருளால் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறூர். ஆதலான், அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியும் என்பது.

இனி, 'பரத்தை' என்பது, புறப்பெண்டிர் மாட்டுப் பிரிவு: இவள்கண் அன்பிலனுய்க் கண்டார்கண் தாழ்ந்து நிறையிலனுய்ப் பிரிந்தானல்லன்; என்னை? 'தலைமகளின் நீங்கி ஆடல் காண்பல்; பாடல் கேட்பல்,' எனப் பிரியும்; பிரிய, அவற்றின்கண் சென்ற உணர்வு தலைமகள் மாட்டு நின்ற உணர்வினை மறைக்கும்; என்னை? இரண்டு ணர்வு உடன் நில்லாமையின்; இவ்வகை மறைப்ப, இவர் கண்ணதே உள்ளமாம் என்பது; என்னை? தாம் இயல் பாகவே பிறரையும் நயப்பிக்கப்படும் வனப்புடையார், 'ஆடல் தகையானும் பாடல் குரலானும் நயப்பித்தும்,' என்று எடுத்துக்கொண்டால், ஆடவர்கள் நயப்பது சொல்லவேண்டுமோ என்பது. அவற்றது பொருள்

* 'அதற்கு ஆபதம் அறுத்தல் இனி'தென்று நீக்குதற்கு' என்பது மூன் அச்சுப்பிரதியிற்கண்ட பாடம்.

அறியாது கடாயினுய், இஃது அவற்றுப் பொருளென்று கொள்க என்பது.

இனி, பிரிவுகளை வேறு உரிமை கூறுமிடத்து அவற்றுக்குச் செய்யுள் காட்டுதும்.

நூ. அவற்றுள்,
ஓதலும் காவலும் உயர்ந்தோர்க் குரிய

'என்பதுஎன்னுதலிற்றோ?' எனின், மேல்சொல்லப்பட்ட பிரிவினை நிறுத்த முறையானே மூன்பிரண்டும் இன்னர்க்கு உரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொ அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட அறு வகைப் பிரிவினுள்ளு :, ஓதலும் காவலும் - ஓதற்குப் பிரியும் பிரிவும் நாடு காத்தற்குப் பிரியும் பிரிவும், உயர்ந்தோர்க்கு உரிய - உயர்ந்தோரென்பார் பார்ப்பாரும் அரசரும், அவ்விருவர்க்கும் உரிய என்றவாறு.

'ஓதற்குப் பிரியும் பார்ப்பான்; நாடு காத்தற்குப்பிரியும் அரசன்,' என நிரல் நிறையாகக் கொள்க. 'அது பொருந்தாது; என்னை? ஓதலும் காவலும் அந்தணர் அரசரென்று இருவர்க்கும் உரியவெனினும் நிரல் நிறையாவது,' என்றூர்க்கு, அவ்வாறு சொல்லிற்றிலராயினும் *பொருள் வகையின் ஒக்கும் என்பது. என்னை? 'உயர்ந்தோர்க்கு உரிய' எனவே, உயர்ந்தோராவார் பார்ப்பாரும் அரசருமேயாகலான் என்பது. என்றூர்க்கு, ''உயர்ந்தோர்க்கு உரிய,' என்றதனால், பார்ப்பார்க்கே கொள்ளேனே?' எனின், கொள்ளப்படாது. காவல் பார்ப்பார் தொழிலன்று; ஆகலின், இருவர்க்கும் உரிய என்பது பெறுதும். அல்லதூஉம், உரையிற்கோடல் என்பது தந்திர உத்தி ஆகலானும், இருவர்க்கும் உரியஎன்பது பெறுதும். ஓதற்குப் பிரிதலுறும் தலைமகன், தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச் செய்யுள்:

* 'ஒரு வகையான் நோக்க ஒக்குமென்பது,' என்பதும் பாடம்.

ஓதற்பிரிவு உரைத்தல்

"மைதான் இலாததம் கல்வி மிகுத்து வருவதெண்ணிப்
பொய்தான் இலாதசொல் லார்செல்வர் போலும்புல் லாதமரே
செய்தார் படச்செந் நிலத்தைக் கணிமழை திண்சிலையால்
பெய்தான் விசாரிதன் தென்னனன் னூட்டிறை பெண்ணணங்கே!"

காத்தற்குப் பிரியலுறும் தலைமகன், தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச்செய்யுள்:

காவற்பிரிவு உரைத்தல்

"தேக்கிய தெண்திரை முந்நீர் இருநிலம் தீதகலக்
காக்கிய செல்வது காதலித் தார்அன்பர் காய்ந்தெதிரே
ஆக்கிய வேந்தர் அமர்க் டையத்தள் ர் வாள்
நோக்கிய கோனந்தண் கூடல் அரைய நுட ைடையே!" (உசக)

ந.எ. வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே 'என்பது என்னுதலிற்றோ?' எனின், பார்ப்பார்க்குப் பிரிவு என்றோதப்பட்டது கல்வி மிகுத்தற்குப் பிரியும் பிரிவு அன்றே? அதுவல்லாமலும் பிறிதும் ஒரு பிரிவு உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: 'வேந்து' என்பது, அரசு; 'வினை' என்பது, செய்கை; 'இயற்கை' என்பது, தன்மை; 'பார்ப்பார்க்கும் உரித்தே' என்பது, பார்ப்பார்க்கும் கிழமை உடைத்து என்றவாறு.

என்பதனால் போந்த பொருள், வேந்து செய்வித்தற்கு உரிய சந்து, பார்ப்பார்க்கும் உரித்தென்றவாறு. 'வேந்தர்க்குச் சந்து செய்வித்தல் உரித்தென்று மேற்சொல்லிப் போந்தாராயினன்றே 'வேந்து வினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே' என்பது?' [1]அது மேற்சொல்லினரே! என்னை? காவல் பகை தணிவினை என்று இரண்டினையும் ஒருங்கு வைத்தார் அவ்விரண்டினையும்

1. 35-ஆம் சூத்திரத்துக் காவலும் பகை தணி வினையும் உடன் வைத்ததனால், சந்து செய்வித்தல் வேந்தர்க்கு உரியது என்பது மேற் சொன்னராயிற்று என்பது கருத்து.

அரசர்க்கு உரிய என்றற்பொருட்டு எனக் கொள்க. 'என்னை அரசர்க்கு உரித்தாமாறு?' எனின், இருவர் அரசர் வேறுபட்டு மாறுகொண்டிருந்தவிடத்து அவர் களைச் சந்து செய்வித்தற்குப் பிரியாதுவிடின், [1] அவர் களைச் சார்ந்து வாழ்வாரும் அவர்கள் நாடும் பெரிதுந் துன்பம் எய்துமன்றே? அதனை நீக்கும் பெருமையுடை யான் அதனை நீக்காது உடன்பட்டிருப்பப் பழியும் பாவ மும் பெரியவா[illegible]சர்க்கும் உரித்து. அவ் வகை அவர்க[illegible]பார்ப்பார்க்கும் உரித்து; என்னை? அவ[illegible]மையுடையராகலின். அதற்குச் செய்யுள்:

[illegible]வு கூறல்

"தாக்கிய போர்வய[illegible] இருவர்க்கும் சந்திடைநின்
முக்கிய செல்வது கா[illegible]த் தார்நமர் ஆரமருள்
வீக்கிய வார்கழல் வேந்தர்தம் மானம்வெண் மாத்துடனே
நீக்கிய கோன்கெடு நீர்வையை நாடன்ன நேரிழையே!" (உசஉ)

ஈஉ. அரசர் அல்லா ஏனை யோர்க்கும்
புரைவ தென்ப ஓரிடத் தான

---

1. ஈண்டு இரு திணையும் விரவிச் சிறப்பினுல் அஃறிணை முடி பேற்றன. நன்னூல், சொல்லதிகாரம், பொதுவியலில், 'திணைபால் பொருள்பல' என்று தொடங்கும் சூத்திரத்தின் உரையில், 'வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்..... .....வேள்வி முற்றி, யூப நட்ட வியன் களம் பலகொல், யாபல கொல்லோ பெரும!' என்பதையும்,

'தொல்லை நால்வகைத் தோழரும் துணைமணி நெடுந்தேர்
மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் முதையுஞ் செழுந்தவ ரொடுவள நாடும்
வல்லை தொக்கன வளங்கெழு கோயிலு ளொருங்கே.'

என்பதையும் திணை விரவிச் சிறப்பினுன் அஃறிணை முடிபேற்றதற்கு உதாரணங் காட்டினர் இராமானுச கவிராயர்.

சங்கர நமச்சிவாயப் புலவரும், சிவஞான முனிவரும் இரண்டாஞ் செய்யுளிலுள்ள 'தொக்கன' என்பதற்குப் பதிலாகத் 'தொக்கது,' என்பதைப் பாடமாகக்கொண்டு, அச்செய்யுளைத் 'திணை விரவிச் சிறப் பினுன் ஒருமை முடிபு ஏற்றது,' எனக் கொண்டனர்.

'என்பது என்னுதலிற்றோ?' எனின், சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு அரசர்க்கன்றியும் வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்து என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அரசர் அல்லா ஏனையோர்க்கும் - அரசரல்லாத ஏனையோராவார் ஒழிந்த வணிகரும் வேளாளரும் என்ற இருவர்க்கும், புரைவது என்ப ஓரிடத்து ஆன - பொருந்தும் என்ப அவர் இல்வழி என்ற

அரசரில்லாவழி வணி[illegible]ரும் [1] வேறுபட்டு நின்ற இருவரையும் சந்து[illegible]ற்குப் பிரியப் பெறுப என்பது. பொருளா[illegible]னும் அரசரோடொப்பர், வணிகரும் வேள[illegible]னும் வேற்றுமையில்லது என்பது. 'அஃதே[illegible] மேற்சூத்திரம் வேண்டா, அரசரல்லா ஏனையோ[illegible]வே பார்ப்பாரும் அடங்குவர் ஆகலான் என்பது.' என்றார்க்கு அதுவன்று; அரசரல்லா ஏனையோர் என்பது அரசரிற் பின்னைச் சொல்லப்படும் வணிகரையும் வேளாளரையுமேதழுவுதற்குச் சொன்னராகலான் என்பது. அல்லாக்கால், 'வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்து,' என்னார்மன் என்பது. இவ்விருவர்க்கும் செய்யுள் மேற்காட்டிற்றே கொள்க. (நி)

நகூ. வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவேன்
றுங்க விரண்டும் இழிந்தோர்க் குரிய

'என்பதென்னுதலிற்றோ?' எனின், வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியதோர் பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: வேந்தர்க்குற்றுழி - அரசர்க்குற்றுழி; பொருட்பிணிப் பிரிவு - பொருள் வேட்கையிற் பிரியும் பிரிவு; 'என்று' என்பது, எண்ணுதற்குரியதோர் வாய்பாடு; 'ஆங்க' என்பது, அசைச்சொல்; 'இரண்டு' என்பது, தொகை; உம்மை, முற்றும்மை; இழிந்தோர்க்கு உரிய - வணிகர்க்கும் வேளாளர்க்கும் கிழமையுடைய என்றவாறு.

1. 'வேறுபட்டு நின்ற அரசரையும்' என்பதும் பாடம்.

'இழிபுபடச் சொல்லினாால், இழிந்தார் என்பது பொருவிறப்பினெடு மாறுகொள்ளும்,' எனின், கொள்ளாது; இந்நூல் உலகினேடொத்தும் ஒவ்வாதும் நடக்கின்றதாகலான், உலகியல் நோக்கிச் சாதி வகையான் இழிந்தாரெனப்பட்டது. ஒழிந்தவற்றுள் பொருவிறப்பு இவர்க்கும் ஒக்கும் என்பது. அவற்றுள், வேந்தர்க்குற்றுழிப் பிரியலுறும் தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்து[illegible]தற்குச் செய்யுள்:

[illegible]தல்

புருவம் முரிவித்த தென்னவன் பொன்னங் கழலிறைஞ்சாச்
செருவெம் படைமன்னர் போலவெங் கானகஞ் சென்றவரே.''

விதலை யாப்பு வருமாறு :

''பண்டான் அணையசொல் லாய்!பரி விட்டுப் பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்கொல்லிப் பாங்கர் விரைமணந்த
வண்டார் கொடிநின் னுடங்கிடை போல வணங்குவன
கண்டால் கடக்கிற்ப ரோ?கட வார் அன்பர் காணரே.'' (5 களவு)

பாசி நீக்கு வருமாறு :

''சென்றூர் வருவது [illegible]ந் தேன்;செரு
வென்றூன் பகைபோல் மெலி[illegible]ந்
நின்றூன் அளந்த நிலம்
பொன்றூன் மலர்ந்து

கொண்டு கூட்டு வருமாறு :

''கோவைக் குளிர்முத்த வெண்குடைக் கோனெடு மாறன்முந்நீர்
தூவைச் சுடர்வே லவர்சென்ற நாட்டினுந் தன்னுங்கொலாம்
பூவைப் புதுமலர் வண்ணன் திரைபொரு நீர்க்குமரிப்
பாவைக் கிணையணை யாய்!கொண்டு பண்டித்த பன்முகிலே.''

ஒரு சிறை நிலை வருமாறு :

''கோடல் மலர்ந்து குருகிலை தோன்றின; கொன்றைசெம்பொன்
பாடல் மணிவண்டு பாண்செயப் பாரித்த; பாழிவென்ற
ஆடல் நெடுங்கொடித் தேரரி கேசரி அந்தண்பொன்னி
நாடன் பகைபோல் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே!''

விற்பூட்டு என்பது, முதலுங் கடையும் பொருள் கொண்டு நிற்பது; விதலையாப்பு என்பது, தலையும் நடுவுங் கடையும் பொருள் கொண்டு நிற்பது; பாசி நீக்கு என்பது, சொற்றோறும் அடிதோறும் *பொருளற்று நிற்பது; கொண்டு கூட்டு என்பது, சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுமாறு அறிந்து பொருள் [1]கொள்ள நிற்பது; ஒரு சிறை நிலை என்

---

* 'பொருளேற்ற நிற்பது' என்பதும் பாடம்.

1. 'கொண்டு கூட' என்பதும் பாடம்.

பது, ஒரு பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒரு வழி நிற்பது.

ஆங்கப்பத்தே அகனைந்திணையும் உரைத்தலாறே - 'ஆங்க' என்பது, அசைச்சொல்; 'பத்து' என்பது, தொகை; 'ஏ' என்பது, ஈற்றசை: அகனைந்திணையும் உரைத்தல் ஆறே-அகனைந் திணையும் அறிந்து உரைக்க அகப்பாட்டினை வல்லோர் சொல்லு மிடத்[illegible] வாறு.

[illegible]ற்கண கானவ[illegible] முகிற்கணங்கள்
[illegible]க்க தன்று த[illegible] ஞன்மேல்
[illegible]கே சரியந்தண் கூடலன்ன
[illegible]ருவதே." (ஈஉக)

[illegible]கோள் - களவு; கூற்[illegible]ன் - தலைவன்; இடம்-முன்னிலை; [illegible]ழு கூறு[illegible] காலம்-எதிர் காலம்; * வந்தொழுகாநின்றானுக்கு உரைத்த மையான், நிகழ் காலமாகவுங் கொள்க. எச்சம்-'நீ' என் பது எஞ்சி நின்றது; மெய்ப்பாடு-அச்சம்; என்னை? 'இவ் வொழுக்கம் பிறரறியின் இறந்துபடும்,' என்னும் நினைப் பினளாகையின்; பயன்-வரைவு கடாதல்; பொருள்கோள்-'தளிதரு தண்சிலம்பா, தக்கதன்று இவள் கைய இவ் வாறு ஒழுகுவது,' எனக் கொண்டமையின், இது விதலை யாப்பு.

"மானக் கடுஞ்சிலை மான்தேர் வலோதயன் வாள்முனைபோன்
றானப் படநினைந் தூடல்பொன் னே!உறு வெஞ்சுரத்து
நானக் குழல்மிசை நான்கொய்து கொண்டு நயந்தணிந்த
கானக் குரவின்அம் போதே கமழுமென் கைத்தலமே." (ஈஉஉ)

இப்பாட்டுத்திணை-மருதம்; கைகோள் - கற்பு; கூற்று-தலைமகன் கூற்று; தலைமகன் பரத்தையைக் கோலம் செய் தானென்று வேறுபடலுற்ற தலைமகள் குறிப்பறிந்து தலைமகன் சொல்லியது; கேட்டாள் - தலைமகள்; இடம் - முன்னிலை; காலம் - இறந்த காலம் பற்றி வந்த நிகழ் காலம்;

* 'அறியாதானுக்கு' என்பதும் பாடம்.

எச்சம்-'என்னோடு'என்பது எஞ்சிற்று; மெய்ப்பாடு-நடுக்கம்; பயன்-கேட்டுத் தலைமகள் ஊடல் தீர்வாளாவது; பொருள் கோள்-விதலை யாப்பு, 'யான் கொய்து அணிந்த குரவினம் போதே இன்னுங் கமழும் என் கைத்தலம்,' என்று மூன்றிடத்தும் பொருள் கொண்டமையான் என்பது.

நூ. அவற்றுள்,

எச்சமும் கோளும் இன்மையும் உரிய

'என்பது என்னுதலிற்றோ?' எனின், [illegible] பத்தினுள்ளும் 'எச்சமுங்கோளும் இன்றி' பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவற்றுள் [illegible] ளும், எச்சமும் கோ[illegible] ளேனும் இரண்டினுள் வும் பெறும் என்றவாறு.

அவற்றுள் எச்சமின்றி வந்ததற்குச் செய்யுள்:

"ஆமான் அணையமென் னோக்கி! அழுங்கல்; அகன்றுசென்ற தேமா நறுங்கண்ணி யாரையுங் காட்டுந்தென் பாழிவென்ற வாமா நெடுந்தேர் மணிவண்ணன் மாறன்வண் தீந்தமிழ்நர் கோமான் கொடிமேல் இடியுரும் ஆர்க்கின்ற கூர்ம்புயலே." (நூஉந)

இனி, கோளின்றி வந்தது வருமாறு:

"வாடும் நிலைமையை நீக்கிமண் காத்துவல் லத்தெதிர்ந்தார் ஓடும் நிலைமைகண் டான்வையை ஒண்ணுதல் மங்கையரோ டாடும் நிலைமையை அல்லை; அவரொடம் பூம்பொழில்வாய் நீடும் நிலைமையும் அல்லை;சொல் லாயென் நெடுந்தகையே!" (நூஉச)

எனக் கொள்க.

நூ. சொல்லே குறிப்பே ஆயிரண் டேச்சம்

'என்பது என்னுதலிற்றோ?' எனின், மேற்கூறப்பட்ட எச்சம் இரண்டு வகைப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: சொல்லே குறிப்பே ஆ இரண்டு எச்சம்-சொல்லெச்சமுங் குறிப்பெச்சமும் என இரண்டு எச்சமாம் என்றவாறு.

சொல்லெச்சம் என்று சொல்லப்பட்ட வாய்பாடு இன்றிப் பிற வாய்பாட்டால் தோன்றினும் என்றவாறு. எச்சமென்பது ஒழிதல் என்றவாறு.

சொல்லெச்சத்திற்குச் செய்யுள்:

"பள்ளத்து நீலம் பறந்தலைக் கோடிப்பட் டார்குருதி
வெள்ளத்துச் செங்கழு நீர்வைத்தகோன் தொண்டிவண்டுமென் பூ
வள்ளத்து தேமகிழ் கானல்வந் தார்சென்ற தேர்வழியெம்
[illegible]தையவந் தூரும் ஒலிகடலே." (ஈஉரி)

[illegible]ச்சம் வந்த செய்யுள்:

[illegible]இ... [illegible]ணைதயன்றன்
உணர்ந்துவண்பூங்
கன்ற
[illegible]கோடிய குருவனமே." (ஈஉசு)

ருகூ. முற்படக் கிளந்த பொருட்படைக் கெல்லாம்
எச்சம் ஆகி வரும்வழி அறிந்து
கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே

'என்பது என்னுதலிற்றோ?' எனின், இந்நூலுள் எடுத்தோத்தே இலேசேயென்று இவற்றுல் முடியாது நின்றன எல்லாம் இது புறனடையாகத் தந்துரைக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: முற்படக்கிளந்த பொருட்படைக்கு எல்லாம் - முன்னுல் உரைக்கப்பட்ட சூத்திரத்துப் பொருட்கெல்லாம், எச்சம் ஆகி வரும் வழி அறிந்து - ஒழிவுபட வரூஉம் இடம் ஆராய்ந்து, கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்-சொல்லப்பட்ட வாய்பாடன்றிப் பிற வாய்பாடு தோன்றினும், கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே - அச்சொல்லப்பட்ட பத்து இலக்கணத்தானே உணர்ந்து உரைக்க என்றவாறு.

'இது களவிடத்து ஒழிந்தது; கற்பிடத்தொழிந்தது;' என்று அறிந்து என்றவாறு.

தலைச்சூத்திரத்துள் 'அன்பின் ஐந்திணை' என்றதல்லது அன்பு உணர்த்துமாறு ஆண்டு உணர்த்தியதில்லை. இதுவே ஒத்தாக அன்பு உணர்த்தும் விகற்பமெல்லாங் கொள்க. அன்பினுடைய ஐந்திணைக்குரிய **இறைச்சிப்பொருள்** உணர்த்திற்றில்லை; அவை * 'தெய்வம் உணவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,' ஐவகை நிலத்தின் ஒதப்பட்ட இடமுங் காலமுந் தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் யாழும் ஆடூஉப்பெயரும் மகடூஉப்பெயரும் மக்களும் பூவும் நீரும் நிலத்திற்கு தொடக்கத்தனவும், ஐந்திணைக்குரிய அவற்றின் நிமித்த அவை எல்லாம் இ

இனி, எண்வகை மணத்தி[illegible] விகற்பமும் இதுவே ஒத்தாகத் தந்துகொண்டுரைக்கப்படும். இனி, கந்தருவ வழக்கின் விகற்பமும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க. இனி, இயற்கைப் புணர்ச்சிக்கண்ணும் †விளையாட்டொக்கல் வேறிடம் படர இருவருந் தம்முள் தலைப்பெய்யுமாறும், புணரும் இடத்துத் தன்மையும், ‡ அது கன்மேற் பொதும்புபட்டுக் கோட்டுப்பூவுங் கொடிப்பூவும் நிரந்து, நீர்த்துறைமேற் சித்திரப்படாம் விரித்தாலே போன்று, வண்டுந்தும்பியும் வரிக்கடைப் பிரசமும் யாழுங்குழலும் முரன்றுகடற்கரையுங் காணியாறும் முழவுந் துடியும்பாடியம்ப, இரவோரன்ன §கொழு நிழற்றாய், நிலவோரன்ன வெண்மணலொழுகி, அகத்தார் புறத்தாரைக் காண்டல் எளிதாய், புறத்தார் அகத்தாரைக் காண்டல் அரிதாய், வானேரும் விழைவைத் தவிர்த்தோரும் விரும்பும் பொழிலுள், இயற்கைப் புணர்ச்சியது இறுதிக்கண், தலைமகனை

---

* தொல். அகத்திணையியல், சூ. 18.

† இடையிலுள்ள இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

‡ 'அதுதான் மேலார் பொதும்புபட்டு' என்பதும் பாடம்,

§ 'இருளிற்றாய்' என்பதும் பாடம்.

ஆற்றுவித்துப் பிரியும் பிரிவும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

இனி, பாங்கற்கூட்டத்துக்கண், தலைமகனது வேறுபாடு கண்டு பாங்கன் வினவத் தலைமகன் சொல்லினவும், அவை கேட்ட பாங்கன் கழறினவும், பாங்கற்கு எதிர் மறையாகச் சொல்லினவும், எதிர்ப்பட்ட தலைமகனது ஆற்றாமை கண்டு பாங்கன் தலைமகற்குக் கவன்றன பாங்கன், 'நின்னுற் காணப்பட்ட உரு எவ் ன்மைத்து?' என்னுமாறும், தலைமகன், த்தன்மைத்து என்னுற் காணப்பட்ட பாங்கன் அவ்விடன் ம் புக்க பாங்கன் ன்று னினவும், பாங்கன் மீண்டு வந்து இடங்காட்டினவும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க. * 'அவ்வியல் பல்லது' என்னுஞ் சூத்திரத்து விகற்பம் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

தலைமகன் தோழியை இரந்து குறையுறுமாறும், குறையுறுநின்றவழித் தோழி கையுறை மறுக்குமாறும், மதியுடம்படுக்குமாறும், படுத்தவழி இருவர் குறிப்பும்பற்றிக் கூட்டமுண்மை உணருமாறும், உணர்ந்த தோழி தன் நெஞ்சிற்குச் சொல்லுமாறும், பின்னைத் தோழி தலைமகனது ஆற்றுமைக்குக் குறை நேருமாறும், நேர்ந்தாள் தலைமகளைக் குறைநயப்புக் கூறுமாறும், தமர் இற்செறித்தவழித் தலைமகளது கற்பழிவு நோக்கி அறத்தொடு நிற்குமாறும், குறையுறுநின்ற தலைமகனைத் தலைமகளது அருமைபெருமை கூறித் தோழி சேட்படுக்குமாறும், தோழி அறத்தொடு நிற்கும் விகற்பமும், பகற்குறிக்கண் தோழியும் தலைமகனும் சொல்லும் விகற்பமும், 'இரவுக்குறியிடத்து வா,' என்று சொல்லும் விகற்பமும், இரவுக்குறி நிகழுமிடம் இன்னவிடமென்றுசொல்

* களவியல், சூ. 4.

லும் விகற்பமும், இரவுக்குறிக்கண் அம்பலும் அலரும் ஆமுறை இரண்டுங் களவாமாறும், வெளிப்பட்டபின்றை நிகழுஞ் சொல்லும், புணர்ந்துடன் போக்கும், உடன் போக்கின்கண் தோழியுந் தலைமகனுஞ் சொல்லும் விகற் பமும், *இடைச்சுரஞ் செலவழுங்குமாறும், அறத்தொடு நிலை மாட்சிமைப்படாத இடத்துத் தோழி தலைமகளைக் கையடைந்தாள் ஒழியுமாறும், தலைமகன் ஏன்று கொண்டு போமாறும், அவர்களை இ[illegible]கத் கண்டார் சொல்லும் முறைமையும், [illegible] செல்லுமாறும், பின் செல்ல இடைச்சுரத்த[illegible] சொல்லும் முறைமையும். [illegible]ர் தலைமகளது நிலை[illegible] மகன் மகிழ்ச்சியாட[illegible]கத் யினவற்றிற்கு வையடை வை[illegible]பிரிந்து [illegible] ளைத் தோழி ஆற்றுவிக்குமிடத்துத் தலைமகள் தோழிக் குச் சொல்லுவனவும், வரைவொடு புக்க வழித் தந்தை யுந் தன்னையன்மாரும் மறுக்குமாறும், அவ்வழி நற்றாய் அறத்தொடு நிற்குமாறும், கற்புக்காலத்துத் தலைமகன் தலைமகளைப்பிரியும் பிரிவென்று சொல்லப்பட்ட பிரிவும், பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளாகத் தோழி வற் புறுத்தினவும், பருவங்காட்டினவும், தலைமகன் வினை முற்றுவித்து வந்தவாறும், அஃதுணர்ந்த தோழி சொல் லினவும், தலைமகன் வினை முற்றினன் தேர்ப்பாகற்குச் சொல்லினவும், முகிலுக்குச் சொல்லினவும், தலைமகன் தலைமகளுடனுயிருந்து தோழி கேட்பச் சொல்லினவும், மற்றும் பரத்தையிற் பிரிவின்கண் துனி புலவி ஊடலும் அவற்றது விகற்பமும், பரத்தையிற் பிரிந்த தலைமகற் குத் தலைமகள் வாயில் மறுத்தனவும், வாயில் வேண்டிப்

---

* 'இடைச்சுரத்தின் நிகழ்வும், இதுவென்று சொல்லும் விகற் பமும், உடன்போக்கு மாட்சிமைப்படாதவிடத்துச் செலவழுங்கு மாறும், மாட்சிமைப்பட்டவிடத்துத் தோழி தலைமகளைக் கையெடுத் துத் தான் மொழியுமாறும், மொழியத் தலைவனேற்றுக்கொண்டு போ வான் நயத்தல் வண்ணமும்' என்று வேறொரு பிரதியில் உள்ளது.

பாணன் முந்துறுத்தனவும், *விருந்துமுந்துறுத்தனவும், வாயில் பெற்றுப் புக்கனவும், மற்றும் பிறவுமெல்லாம் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

சூ0. †களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன

'என்பது என்னுதலிற்றோ?' எனின், மேல் வகுத்த களவு கற்புகட்குப் பிறிதும் ஆவதோர் புறனடை உணர்த்து [illegible] று.

பாருள்: களவு கற்பு எனக் கண்ணிய - களவென் [illegible] வோரால் வகுத்துரைக்கப்பட்ட ஒழுக்கங் [illegible] ரானுஞ் சஞ்சரித்தானும் [illegible] ன் உயர்ச்சி மேன- [illegible] யென்ஃ [illegible] னுரைது உளத்தின்கண் நிகழுன்ற அன்பினது உயர்வின்கண்ணவாம் என்றவாறு.

தேவர்க்கும் நாகர்க்கும் இவ்வொழுக்கம் அவர் உலகத்திலில்லை என்பார், 'ஈண்டையோர்' என்றார். எனவே, அன்னேர்க்கு அஃது ஓரோர் காலத்து இவ்வுலகத்து நிகழும் என்றாராயிற்று. அஃது இவ்வுலகினும் இயற்கையான நிலைபெறுது புலவரான் இல்லது இனியது நல்லது என நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்பார், 'கண்ணிய' என்றார். இனி இரட்டுற மொழிதலான், 'ஈண்டையோர்' என்பதை ஒரு பெயராகக் கொள்ளாது, 'ஈண்டை' 'ஓர்' எனக்கொண்டு, ‡ 'தானே அவளே தமியர்' என்ற தனுல் தானே அவள் அவளே தானென இயன்ற ஈருடலின் ஒருயிர் போல்வார் உளத்தென்று கொள்ளினும் அமையும். 'அன்பின் உயர்ச்சி' எனவே, அஃதில்லாவிடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறு என்பதூஉம்,

---

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† இச்சூத்திரத்திற்கு உரை பழைய எட்டுப் பிரதியில் இல்லை. இதனுரை நடையை உற்று நோக்குங்கால், இது பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டதென்று கருதற்கு இடந்தருகின்றது.

‡ களவியல், சூ. 2.

அதனானே அஃது உயர்ந்தோர்மாட்டது என்பதூஉம், அவருள்ளும் அரசர்க்கே சிறந்தது என்பதூஉம் பெற்றும். 'அற்றுயின், 'உயர்ந்தோர் மேனை,' எனப் பாடம் ஓதலாகாதோ?' எனின்,

* "அடியோர் பாங்கினும் †வினைவல பாங்கினுங்
கடிவரை யிலபுறத் தென்மனூர் புலவர்."

என மற்றை வருணத்தோர்க்குஞ் சிறுபான்மை அஃ துரியதென்று தழீஇக்கோடல் கருதப்பட்ட

கள வியல்

என்னும்

இறைய

தெய்வப்புல [illegible] செ

முற்றுப்பெற்றன.

* தொல். அகத்திணையியல், சூ. 23.

† 'வினைவலர்' என்பதும் பாடம்.

ஸ்ரீ:

மேற்கோள் இலக்கியக் குறிப்புரை

(எண்—செய்யுள் எண்)

(க) வையை வார் பொழிலகத்துக் கண்ணிணை
டாகவும், மென்முலையை அரும்பாகவும், செவ்வாயைத் த
ராகவுங் கொண்டு எ
அமைந்த பூங்கொடி
என் கண்ணிணை கள்.

இது தலைவன் நெஞ்சொடு கூறிய கிளவி.

(உ) உரை உறை வேந்தன் - புகழ் பொருந்திய வேந்தன், உரை உறை தமிழ் என இயைத்தலுமாம். உசிதன் - ஓர் பாண்டியன், தக்கோன் என்பது சொற்பொருள். பூம்பொழில் மேல் உறை தெய்வம் - சூரமகள், வரை உறை தெய்வம் - வரையமகள், வானுறை தெய்வம் - வானமகள், திரை உறை தெய்வம் - நீரமகள், இத்திருநுதல் - இவ்வழகிய நெற்றியை உடையாள்.

பூம்பொழிலின் மேலுறை தெய்வம் சூரமகள் என்பதனைத் தஞ்சை வாணன் கோவை உரையாசிரியர், "பாரணங்கோ திருப்பாற்கடலீன்ற" என்று தொடங்குஞ் செய்யுளின் உரையில், பாரணங்கோ என்பதற்குப் "பாரிடத்துப் பொழிலின் மேலிருந்து புவியினுள்ளோர் சிறப்புச் செய்ய அச்சிறப்பைக் கொள்ளுந் தெய்வப் பெண்ணே!" என்று கூறி, விசேட உரையில், "பாரணங்கோ என்பதற்குச் சூரமகளிர் என்று கூறினமையால், இறையனர் அகப்பொருளில் (42-ஆம் பக்கத்தில்) ஐயத்திற்குக் காட்டிய பாட்டில் பொழிலின் மேல் உறை தெய்வம் எனச் சூரமகளைக் கூறியவாறு கண்டுகொள்க," என்று கூறியதனால் அறிக.

'கொல்லோ' என்பவற்றுள், கொல் அசை; ஓகாரங்கள் ஐயப்பொருளன.

அவ்வுரையாசிரியர் மேற்குறித்த செய்புளின் விசேட உரையில்,

"பிரிநிலை வினவே யெதிரீமறை யொழியிசை
தேரிநிலைக் கிளவி சிறப்பேரடு தோகையி
இருமுன் றென்ப வோகா ரம்மே."

(தொல். சொல். இடையியல், சூ. 8.)

எனச் சூத்திரத்துள் ஐய ஓகாரங் கொண்டிலரால் எனின், இச் [illegible] கொண்டிலர்; எழுத்ததிகாரத்து, உயிர் மயங்கிய [illegible] ணரவிற்றுப்பதமுடிப்புழி,

"மாறுகோ ளேச்சமும் வினவும் ஐயமும்
[illegible] யாகும்."

யிர் மயங்கியல், சூ. 88.)

[illegible] சூத்திரத்தில் ஐய ஓகா[illegible] ண்டனர்; அதற்குதார ணம் 'பத்தோ பதினென்றே!' என உரையாசிரியர் காட்டிப் போந்ததனனுங் கொள்க," ஏன்று கூறியவற்றை ஈண்டு நோக்குக.

(சு) பாவடியாண்ப் பராங்குசன் - பரவிய அடியையுடைய யாஞைச் சேனையைக் கொண்ட பராங்குசன், பாழி - பகைவர் ஊர், பகை தணித்த - பகைவர் வலியை அடக்கிய (பகை என் பது பண்பாகு பெயராய்ப் பகைவரை உணர்த்த, அஃது இலக் கணையால் அவர்தம் வலியை உணர்த்திற்று), தூவ்டி வேல் மன்னன் - தூய்மையாகிய வடித்த வேலை ஏந்திய மன்னனது (பராங்குசனுகிய மன்னன் என்றியைக்க), (இச்சேயிழையின்) கன்னித்துறை - கன்னியாற்றின் துறையில் பூத்த, சுரும்பார் குவளைப்பூ வடிவாள் நெடுங்கண்ணும் இமைத்தன - சுரும்புகள் மொய்க்கும் குவளைப் பூவையும் கூர்மையாகிய வாளையும் போன்ற நெடிய கண்களும் இமைத்தன ('சேயிழையின் கண்ணும் இமைத்தன,' என இயைக்க), பூமிதன்மேல் சேவடி தோய்வ கண்டேன் - பூமியின்மீது இவளுடைய சேவடிகளும் தோய்வன வாயின (கண்டேன்), ஆதலின் இவள் தெய்வப்பெண் அல்லள்.

(ச) விழிஞத்து - விழிஞத்துக்கண், வேறும் என நின்று இகல் மலைந்தார் - வெல்லுவோம் என உறுதியுடன் நின்று வன் மையோடு போர் செய்த பகை அரசர்கள், விண் போய் ஏறும் திறம் கண்ட கோன் - சுவர்க்கமடைதற்குக் காரணமான

வகையைச் செய்த வேந்தனது, தென் - தெற்கின்கண்ண தாகிய, பொதியில் இரும்பொழில்வாய் தேறுந்தகைய வண்டே - பொதியில் மலையின்கண் உள்ள பெரிய சோலைகளில் பல மலர்களையும் ஆராய்ந்தறியும் (பெருந்)தன்மையை உடைய வண்டே, அணி ஆம்பல் நறுமலர் - அழகிய ஆம்பல் நறுமலர் களுள், மெல்லியல் செந்துவர் வாய் நாறும் தகைமையமே - மென் மையான தன்மையினை இயல்பாக உடைய இத்தலைவியின் மிக்க செம்மையை உடைய வாயை ஒப்ப மணம் வீசும் மலர்களும் உளவோ? சொல்லு - (நீ பெருந்தன்மையை உடைய[illegible] உண்மையே கூறுவாய் என்னுந் துணிபால் உன்னைக் [illegible] றேன்) சொல்லு.

பக்கம் 49:—'மழைவளர்[illegible]

மழைவளர்தரூஉ

யைப் போலப் பொரு[illegible]கும் பெய[illegible] உடைய தித்தனது, பாண்ட நெல்லின் உறந்தை ஆ[illegible] கருக்கொண்ட நெற்பயிரினையுடைய உறையூராகிய அவ்விடத் தின்கண், கழைநிலை பெறுஅக் காவிரி நீத்தம் - ஓடக்கோல் நிலை பெறுதலில்லாத காவிரியாற்றின் வெள்ளத்தில், மாண் ஒள் இழை - குழை முதலாகிய சிறந்த ஒளியை உடைய அணிகளை அணிந்தவளாகிய, நீ வெய்யோளொடு - நீ விரும்பிய பரத்தை யுடன், வேழ வெண்புணை தழீஇ - வேழமாகிய வெள்ளிய தெப் பத்திலிவர்ந்து, பூழியர் கயம் நாடு யானையின் - சேரர்களுடைய கயத்தை நாடிச் செல்லும் யானையைப் போல, முகன் அமர்ந்து - பரத்தையினிடம் விரும்பிச் (சென்று), ஆங்கு - அவ்விடத்தில், ஏந்து எழில் - மிக்க அழகையுடைய, ஆகத்து - மார்பின்கண் உள்ள, பூந்தார் குழைய - மலர் மாலைகள் பொலிவழியும்படி, நெருநல் - நேற்று, புனல் ஆடினை - நீராடினாய்.

(நி) தூஉண்டை வண்டினங்காள் - தூய்மையையும் வட்ட வடிவினையும் உடைய வண்டினங்களே, (இதில் 'உண்டை' என் பதற்குச் சுழலப் பறத்தலையும் என்றும் பொருள் கொள்ளலாம்) முதற்பத்து 4-ஆம் திருவாய்மொழி 'அருளாக நீரருளி' என்று தொடங்கும் 6-ஆம் பாசுரத்தில் 'ஆழி வரிவண்டே' என் பதில் ஆழி என்பதற்கு வட்ட வடிவமான என்றும், சுழலப்பறக் கின்ற என்றும் வியாக்கியானத்திற் பொருள் கூறப்பட்டிருக் கின்றது. இச்செய்யுளில் உள்ள 'உண்டை' என்பதும் 'ஆழி'

என்பதுபோல அவ்விருபொருளுங் கொள்ளுதற்குரியதாயிருத்தலே நோக்குக.) துன்னிநில்லாக் கோஉண்டை - மனத்தில் அன்பு பொருந்தி நட்புத் தன்மையில் நிற்காத பகை அரசர்களின் படை வகுப்பை, கோட்டாற்று - கோட்டாறு என்னும் பதியின்கண், அழிவித்த கோன் கொங்க நாட்ட - அழியச் செய்த கோனது கொங்க நாட்டின்கண்ணவாகிய, செங்கேழ் மா உண்டை வாட்டிய நோக்கி - செவ்விய நிறத்தினையுடைய மா வடுக்களை வாடச் செய்த கண்களையுடையாளது, வார்குழல்போல் கமழும் - நீண்ட [illegible] வாசனை வீசும், பூ உண்டை உளவோ - பூக்களின் [illegible] உள்ளனவோ? உங்கள் கானல் பொழில் அகத்து - [illegible] உங்கள் ஓலியையுடைய சோலையின்கண் (கானற்பொழில் - ஓலி [illegible] [illegible] [illegible]

(எ) விண்டு - மனம்மாறுபட்டு, படர் - அழிய, விழிஞத்து - விழிஞம் என்னும் ஊரில், ஒண்தேர் - (வெற்றியினால்) ஒளியினை உடையதாகிய தேரினை உடைய, உரிதன் எங்கோன் - உரிதனுகிய எங்கோனது, கொல்லிச்சாரல் - கொல்லி மலையின் சாரலில், ஒளிமலர்த்தாது உண்டு உழல்வாய் - விளக்கமாகிய மலரின் தாதுக்களை உண்டு திரிவாய், நீ அறிதி அன்றே - மலர்களின் மணத்தை நீ அறிவாயன்றே? ('வண்டே, மடந்தை குழல்போல் கமழும் மது மலர்கள் உளவேல் உரையாய்,' என்க.)

(அ) அன்று - அந்நாளில், வானவற்கு ஆய் - சே[illegible] னுக்குத் தூணையாய், பூலந்தை - பூலந்தை என்னும் ஊரில், மலைந்தார் - போர் செய்தவர்கள், ஒருங்கு அழல் ஏற - ஒன்று ஈமநெருப்பிலே ஏறும்படி [illegible] சாரலில் உள்ள, ஒண் [illegible] நீ அறிதி; (அச்சாரலி[illegible] கருங்குழல்போல் வ[illegible] கடிமலர் உளவோ? எனக்குச் சொல். கடிமலர் - சிறந்த மல[illegible]

(கூ) தேற்றம் இல்லாத - (பகை மன்னரை அடல் வேண்டின் அப்பொழுதே அதனை ஆற்றுந் தன் திறத்தினைத்) தெரிதல் இல்லாத, தெவ்வேந்தரை - பகைவேந்தர்களை, சேவூர் - சேவூரின் கண், செரு அழித்து - போரில் அழித்து, (அவர்க்குக் கூற்றம் ஆயவன் என்க.) கொங்கு - தேன், (வண்டே, நீ கொல்லிச் சாரலில் உள்ள கொங்கு உண்டு உழலாநிற்கின்றனையாதலின், பல மலர்களின் மணத்தையும் அறிவாய். அங்ஙனம்) நீ அறிந்த நல்ல மணங் கமழும் மலர்களுள், (மங்கைவார் குழல்போல் நாற்றம் உடைய மலர்கள்) உளவோ? எனக்கு மாற்றம் உரை.

பக்கம் 50:—'கொங்கு தேர் வாழ்க்கை' என்னுஞ் செய்யுள்:

கொங்கு தேர் வாழ்க்கை - பூந்தாதை ஆராய்ந்துண்ணும் வாழ்க்கையினையும், அம் சிறை - (அழகிய) உட்சிறையினையும் உடைய, தும்பி - வண்டே, காமம் செப்பாது - (நீ என்னிலத்து வண்டாதலின் என்பாற்கொண்ட) விருப்பத்தாற் கூறாமல், கண்டது மொழிமோ - (உண்மையாய்) அறிந்ததையே சொல்வாயாக, நீ அறியும் பூ நீ அறிந்த மலர்களுள், பயிலியது கெழீஇய நட்பின் - (எழுமையும் என்னோடு) பழகுதல் பொருந்திய நட்பினையும், மயில் இயல் - மயில் போன்ற சாயலையும், செறி எயிறு - செருங்கிய பற்களையும் உடைய, அரிவை கூந்தலின் - இவ்வரிவையின்

கூந்தலைப்போல, நறியவும் - நறுமணமுடைய மலர்களும், உள வோ - உள்ளனவோ ? கொங்கு - தேனை என்றலுமாம். அம் சிறை - அழகிய சிறை, உட்சிறை. இரட்டுற மொழிதலால் இவ் விரு பொருளும் கூறப்பட்டன. மொழிமோ - இதில் 'மோ' முன்னிலை அசை.

(கo) மின்னின் - மின்னலினும் (மின்னலைப்போல என் றலுமாம்), பொலிந்த - விளக்கங்கொண்ட, செவ்வேல் வலத் தான் - செவ்விய வேலாற் பகைவரை அழிக்கும் வன்மையுடைய வன் [illegible]னிற்கு - அரசனுக்கு, வானங் கொடுத்த - விண்ணுலகத் தந்த (வானங்கொடுத்த செவ்வேல் வலத்தானுகிய செங் கால் மன்னன் என்க), நெடும்பணைத் தோள் - நெடிய மூங் [illegible] சைகள்.

அணி நிற ஏர் முடி அழகையும் ஒளியை [illegible] ண்ட பரம்பரையாக வருங் கிரீடத்தைத் தரித்த அரசரை, ஆற்றுக்குடி அழிய - ஆற்றுக்குடி என்னும் ஊரில் அழியும்படி, துணிநிறவேல்வலம்காட்டிய-பகைவரைத் துணிக்குஞ் செயலையும் ஒளியையும் உடைய தன் வேலினது வலிமையினைக் காட்டிய, மீனவன் - பாண்டியன், தொண்டி - ஓர் ஊர், பிணி நிறம் வார் குழல் பெய்வளைத்தோளி - (கண்டார்) மனத்தைப் பிணிக்கும் (உடலின்) நிறத்தையும் நீண்ட கூந்தலையும் வளை அணிந்த தோளையும் உடையாய், மணி நிறம் பொன் நிறம் ஆக - உன்னுடைய செம்மணி போன்ற நிறம் (பசப்பால்) பொன்னிறம் ஆகும்படி, ஆவி வருந்துவது - நின் உயிர் வருந்துதல், என் - எதனால் ?

(கஉ) பூழியன் - பாண்டியன், (பூழியனும், வேந்தனும், விசாரிதன் என்னும் பெயரையுடையவனுமாகி நின்ற பிரான் என இயைக்க) முதல் அறியா வண்ணம் - (தான் எப்பொருட் கும்) முதல்வனும் தன்மையை எவரும் அறியாதபடி, முன் னுள் - (விசாரிதனைத் தோன்றுதற்கு) முன்னுளில், வெள்திரை மேல் நின்ற பிரான்-வெள்ளிய அலைகளை உடைய திருப்பாற்கட லிற்பொருந்திய பெருமானது, முசிறி அன்னுய்-முசிறி என்னும் ஊரைப்போன்றவளே, அழுங்கற்க - வருந்தற்க.

(கங) பா அணை-பல வகையாகிய பாக்கள் பொருந்திய, (இன் தமிழ் வேந்தனும், பராங்குசன் என்னும் பெயரையுடைய

வனுமாகிய வெஞ்சிலையான் என இயைக்க.) பாழி வென்ற - பாழி என்னும் ஊரை வென்ற (பாழி என்னும் ஊரிற் பகை வரை வென்ற என்றவுமாம்), எம்மூர் - எம்மூரின்கண்ணவாகிய, தூவண மாடச் சுடர் தோய் நெடுங்கொடி - தூய்மையாகிய வெண்ணிறத்தினையுடைய மாடங்களிற் பொருந்திய நீண்ட கொடிகள் (நீண்டு நெடுமை என்பது உயர்ச்சி என்னும் பொருளது), தன்னி நின்று - நெருங்கி நின்று, நும் ஊர் - உங்கள் ஊரின்கண்ணவாகிய, ஆவண வீதி எல்லாம் நிழல் பாய - எல்லாக் கடைத்தெருக்களிலும் நிழல் பாயும்படி (அவ் அண்வரும் - அணுகியிருக்கும், இனையல் - (ஆதலின்) தற்க.

நான்காமடியிலுள்ள '[illegible]
துன்னி என்பதனோடி'

(கசு) தென் - [illegible]ணகண்ணதாகிய, நறை நறையாறு என்னும் ஊரின்கண், திணி நிற நீள் தோள் அரசு உக - வன்மையையும் நல்ல நிறத்தினையுங் கொண்ட நீண்ட தோள்களையுடைய அரசர் அழியும்படி, துணி மின்னுர் நிற வேல் கொண்ட - பகைவர் (உடல்களைத்) துணிக்குஞ் செயலையும் ஒளியையும் உடைய வேலை ஏந்திய, தொண்டி - ஓர் ஊர், எம்மூர் நிற மாடத்து மாட்டிய - எம்மூரின்கண்ணவாகிய சிறந்த நிறத்தினை உடைய மாடங்களில் தொங்கவிட்ட, வான் சுடர் மணி மாலை - சூரியனைப்போன்ற மணி மாலைகள், (நும்மூர் அணி நிற மாளிகை மேல்) பகல் பாரித்து - பகல்போல ஒளியைப் பரப்பிக்கொண்டு, அணவரும் - அணுகியிருக்கும், துயரல் - (ஆதலின்) நீ வருந்தற்க. மூன்றுமடியிலுள்ள 'மணி' என்பதனை மாலை என்பதனோடியைக்க.

(கரு) வயவர் - படை வீரர், நுமர்கள் புனங்காவலர் - உம்மவர்கள் தினைப்புனங்காத்தற்பொருட்டு, இட்ட - ஏற்றிய, குரூஉச்சுடர் - ஒளி அமைந்த விளக்கு, படித்து - விதமாக அருகிலுள்ளது (எங்கள் வாழ்பதி என இயைக்க.)

(கசு) சேல் அங்கு உளர் வயல் சேவூர் - சேல் மீன்கள் வயலாகிய அவ்விடத்தில் உலாவும் சேவூரின்கண், அங்கு மால் அடைவித்த - போர்க்களத்தில் மயக்கமடையச் செய்த, ஏலம் - மயிர்ச்சாந்து, 'எம்மூர் மாடத்துச் சீர் சூலம், நும்மூர் மாடத்தில் கொடியைத் தடக்கும்' என இயைக்க.

(கள) சின வேல் - இதில் வேலையுடையானது சினம் வேலைச்சார்த்திக் கூறப்பட்டது. இஃது இலக்கணை. செந்நிலத்து - செந்நிலத்தின்கண், நரல் - ஒலிக்கப்பெற்ற, பூஞ வேய் அணைய தோளியினுடைய ஆகத்தைப் புணர்ந்த செயல் முழுதும் ('புணர்ந்தது எல்லாம்' என்பது ஒருமையிற்பன்மை மயங்கியது). கனவே, நனவாய்விடினும் இனிக் கண்ணுறவின்கண் எய்தாது. கண்ணுறவின் கண் - நனவின்கண்.

(கஅ) இகல் மலைந்த - பகைமையினால் எதிர்த்த (தமது [illegible] பினால் எதிர்த்த என்றலுமாம்), நில வேந்தரைப் பொன் [illegible] ாவித்த என்பது, நிலத்துக்குரிய வேந்தரைப் பொன் [illegible] லகுக்குரியவராகச் செய்த என்னும் நயமான கருத்துத் [illegible] ...ஞ்ஞ...ஞ...ஞ...

ஒள் துறைமேல் - (தென்) மதுரையில் வளர்க்கப் பெற்ற வள விய தமிழ் நூற்களிலுள்ள ஒளி மிக்கனவாகிய துறைகளின்மீது, உள்ளம் ஓடியதோ - நின் மனம் விரைந்து சென்றதோ? உற் றது - நின் உள்ளம் வாடுதற்குக் காரணமாகப் பொருந்தியது, அன்றி உண்டோ - அவற்றையன்றி வேறு யாதேனும் உண்டோ? துறைகள் ஒள்ளியனவாகலின் இவன் உள்ளம் அவற்றின்பால் விரைந்து சென்றிருக்கும் என எண்ணி, 'ஒண் துறைமேல் உள்ளம் ஓடியதோ?' என்றான்.

(உச) தெவ்வாய் - பகையாய், கடையல் - கடை னும் ஊரில், ('பண்டை உருவும் மொழியும் ஒவ்வா; வ கிணைந்து உள்ளியது என்?' என்க.)

(உடு) அரவின் வருத்த, வளை முளை யும் போன்ற பற்களை பெண்களுக்கு, (வளை ஈண்டு அதன் சிறையாகிய முத்தை உணர்த்தியது ஆகுபெயர்), இளையார் ஒருவர் அணங்க - இளையவர் ஒருவர் வருத்த, நைந் தால் - அவ்வருத்தத்தினால் ஆகும், யான் இரங்கின்றது - யான் வருந்துகின்றது. பாம்புக்குட்டியைக் குருளை என்றல், தொல். பொருள். மரபியலில்,

"நாயே பன்றி புலிமுத னுன்தும்
ஆயுங் காலைக் குருளை என்ப."

என்னும் 8-ஆம் சூத்திரத்தில் ஆயுங்காலை என்றதனாற் கொள் ளப்பட்டது. நைந்து - வருத்தம் (தொழிற்பெயர்.)

(உசு) அலை ஆர் - சேணையாகிய கடலையுடைய, (கழல் மன்னர் என்க.) ஆற்றுக்குடி - ஆற்றுக்குடி என்னும் ஊரில், அழல் ஏற - அழலில் ஏற, அயில்படை - கூர்மையாகிய படை, ('கூடல் அன்னார் ஒருவரது முலையாய் அரும்பி, மென் தோளாய்ப்பருத்து, சிலையாய் வளைந்து, குழலாய்ச் சுழன்றது என் சிந்தனை,' என்க).

(உஎ) (என் காதன்மை சென்றது,) மீண்டின்று - திரும்பி வரவில்லை.

(உஅ) (சிலம்பன்,) 'கொல்லிப் பொழில்வாய் ஏய்கின்ற ஆயத்திடை ஓர் இளங்கொடியைக் கண்டதனால் என் உள்ளம் தேய்கின்றது,' என்று கூறுவது அவனுக்கு அழகியது ஒன்று ஆகுமோ? என இயைக்க.

(உசு) தண் தேன் அறை நறுந்தார் மன்னர் - குளிர்ச்சி யாகிய வண்டுகள் ஒலிக்கப்பெற்ற நறுந்தாரை அணிந்த மன்னர், ('தண்தார்' என இயைக்க.) 'வண்டு ஏய் நறுங் கண்ணியாய்! கொல்லிப் பொழில்வாய் அங்கு நீ ஓர் மாதர் மதிமுகம் கண்டு அதனுல் தளரின் இனி இக்கடல் இடத்து நல்லார் யார்?' என இயைக்க.

பக்கம் 59:—'சிறுவெள் ளரவின்' என்னுஞ் செய்யுள்:

(தோழ,) சிறிய வெள்ளிய பாம்பினது அழகிய கோடுகளை குட்டியானது காட்டு யாஞ்சை வருத்தினுற்போல, பலும் நாணல் மூளையைப் போன்ற பற்களையுடையவளும் ளையையுடைய கையினுமாகிய ஒருத்தி, எம்மை வருத்

ப ம —'சிறுவெள்

ந் செய்யுள்:

ஆவ - (எம்) நண்ப, சிறார் 'வ உறு நண்ப - இளையவர் இன்பமடைதற்குக் காரணமாகிய நட்பையுடையோனே, புலவர் தோழ - அறிவுடையவருக்குத் தோழனே, கேளாய் - கேட்பாயாக, மாக்கடல் நடுவண் - பெரிய கடலின் நடுவிடத்தினின்று, எண்ணுள் பக்கத்து - எட்டாந் திதிக்குரிய, பசுவெண் திங்கள் - இளைய வெள்ளியசந்திரன், தோன்றியாங்கு - தோன்றினுற்போல, கதுப்பு அயல் விளங்கும் சிறுதுதல் - (ஒருத்தியின்) கூந்தலுக்கு அயலில் விளங்கும் சிறிய நெற்றி, புதுக்கோள் யானையின் - புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப்போல, எம் பிணித்தற்று - எம்மைப் பிணித்தது.

('பிணித்தன்று' என்பது வலித்தல் விகாரம் பெற்றுப் 'பிணித்தற்று' என்றுயிற்று.)

(ஙo) விழிஞக் கடல் கோடியுள் - விழிஞத்துக்கண் கடல் மூணியில், விண்டார்பட - பகைவர் அழிய, கொல்லிக் குடவரை - கொல்லியாகிய குடக்கு மலையின்கண் உள்ள, கொம்பர் அன்ன - பூங்கொம்பைப் போன்ற, (கொம்பு என்பது கொம்பர் என்றுயிற்று; இது போலி.) மதர்வை மெல் நோக்கம் - அழகிய மெல்லிய நோக்கத்தை, (இன்ன பிற கட்டுரை உரையார் என்க.)

(ஙக) மதி வாள் முகத்த - மதி போன்ற ஒளியையுடைய முகத்தினுள்ளவாகிய (அன்றி மதியைப்போல ஒளியைப் பரப்

பும் முகம் என்றனுமாம்.) முகத்த கண் என்க. (அக்கண்ணீணக் கண்டால் இப்பொழுது நீர் கழறிய கட்டுரை உரையீர் என்க.)

(நூஉ) வலித்து - கோபித்து, மதன் - வலி, அவர்கள் புண் கொண்ட நீரில் மூழ்க என்க. ('மடந்தை கண் கண்ட பின் இக்கட்டுரை உரையீர்,' என இயைக்க).

பக்கம் 61:—'அம்ம வாழி கேளிர்' என்னுஞ் செய்யுள் :

கேளிர் அம்ம - தோழரே யான் கூறுவதணைக் கேட்பீராக, நுண்தாது பொதிந்த செங்கால் - நுண்ணியதாது மூடிய சிவந்த காம்பினையும், கொழு மூகை - கொழுவிய மொட்டினையும் உடைய, முண்டகம் கெழீஇய - கழி முள்ளி பொருந்தி. மோட்டு மணல் அடை கரை - மோடசகிய மணல் அடைத்த கரையின்கண், பேஎய் தலீஇய - பேய்போன்ற தலேயினை உடை பிணர் அரைத்தாழை சருச்சரையாகிய அடியினை தான்று யினது, எயிறு உடை நெடுந்தோடு - முட்களாகிய பற்களை உடைய நெடிய மடல்கள், பல உடன் காப்ப - பல ஒரு சேர காப்ப, வயிறு உடைப்போது - நடு இடத்தைத் தமக்குப் பிறப் பிடமாக உடைய மொட்டுக்கள், வாழிதின் வீழீஇ - தாய்மையாக மலர்ந்து, புலவு பொருது அழித்த - புலால் நாற்றத்தினைப் பொருதுவென்று அழித்ததனால், பூநாறு பரப்பின் - அப்பூமணமே கமழுங் கடற்பரப்பின்கண், இவர் திரை தந்த - பரவுகின்ற அலை கள் கரையிலே கொண்டு வந்து சேர்த்த, ஈர்ங்கதிர் முத்தம் - குளிர்ந்த கிரணங்களையுடைய முத்துக்கள், கவர் நடைப் புரவி கால் வடு தபுக்கும் - விரும்பும் நடையினையுடைய குதிரையின் து காலிலே வடுப்படுத்து முடஞ் செய்யும், நல் தேர் வழுதி - நல்ல தேரையுடைய வழுதியின், கொற்கை முன் துறை - கொற் கைப் பட்டினத்து முதன்மையாகிய கடற்றுறைக்கண்ணதா கிய, வாங்கு கழி - வளைந்த கழியிடத்துள்ள, வண்டு வாய் திறந்த நெய்தற்போது - வண்டினால் வாய் திறக்கப்பட்ட நெய் தற்பூக்கள், புறங்கொடுத்த - அழகிற்குத் தோற்றுப் புறங் கொடுத்த, வான் முகம் - ஒளியினையுடைய முகத்தில் உள்ள, உண்கண் - மையுண்ட கண்ணினது, மாதர் மதையிய நோக்கு - காதலோடு கூடிய செருக்கிய பார்வையை, முன்னின்று கண்டனிராயின் - எதிர் நின்று பார்த்தீராயின், கழறலிர் - இவ் வாறு கூறீர், மன் - நீர் பார்த்திலீராதலின் இவ்வாறு கூறுகின் றீர்.

ஞாழி, ஓ என்பன அசைகள். 'அம்ம' என்பது ஒருவனை ஒருவன் 'ஒன்று கேள்' என்று சொல்லுதற்கண் வரும் இடைச் சொல்; அதனை, 'அம்ம கேட்பிக்கும்' (தொல். சொல். இடையியல், சூ. 28.) என்றதனால் அறிக. மன் என்னும் இடைச் சொல், ஈண்டுக் கழிவு குறித்து நின்றது.

"கழிவே யாக்கம் ஒழியிசைக் கிளவியேன்
றம்முன் றேன்ற மன்னைச் சோல்லே"

(தொல். சொல். இடையியல், சூ. 4.)

(சுரு) வன் தாள் களிறு கடாய் - வலிய தாளையுடைய ஆற்றினைச் செலுத்தி, இவ்விரு நிலத்தில் கருங்கயல் சூட்டிய சென்னிச் செம்பொன் வரைபோல் நின்றான் - இந்தப் பிரிய நிலத்தின்கண் மேன்மையினையுடைய மீன் எழுதிய கொடியை ... தை முடியை உடைய செவ்விய அழகிய இமய மலையைப்போல (எதற்கும் கலங்காமல்) நின்ற தலைவன், நிலை தளரும் என்றல் - தன்னிலையினின்று தளர்ச்சி அடைவான் என்றல் ('இவனை இனித் தெருட்ட வல்லார் யார்?' என்க).

(சுச) வல்லிச் சிறு மருங்குல் - பூங்கொடியைப் போன்ற சிறிய இடையினையும், பெருந்தோள் - பெரிய தோளினையும் உடைய, மடவார் - பெண்களின், வடிக்கண் புல்லி - மாவடுவைப் போன்றகண்களின் நோக்கைச் சேர்ந்து, பிரிந்து அறியாத - (பிறகு, நோக்குதலினின்று) நீங்குதலில்லாத (அழகினையுடைய), மந்தாரத்து - மந்தார மாலையையுடைய, எங்கோன் புனல் நாட்டு - எங்கோனது நீர்வளத்தினையுடைய நாட்டின்கண், (அண்ணலே) அக்கொம்பினைக் கண்டது - பூங்கொம்பு போலும் அம்மாதரை நீ கண்டது, அல்லித்தடந் தாமரையோ - அகவிதழினை உடைய தாமரை மலரிலோ, (அவன்தன் அணியார்) கொல்லிக்குடவரையோ - மேற்கின்கண்ணதாகிய கொல்லி மலையிலோ (உரைப் பாயாக.)

(சுரு) 'நின் ஒள் தார் அகலம் மெலிவித்த மாதர் உரை விடம் தாமரையோ? கொல்லிக்குடவரையோ? உரை,' என இயைக்க.

(சுசு) கொல்லிப் பூம்பொழில்வாய் - கொல்லி மலையின் பூக்களையுடைய அழகிய சோலையில் (இது இடம்), வடிவண்ணம் வேல் கண்ணினால் - வடிக்கப்பட்ட ஒளியையுடைய வேலைப் போன்ற கண்பார்வையினால், (என்னை வாட்டிய வாள் முதற்கு)

அடி வண்ணம் தாமரை; அல்குல் (வண்ணம்) ஆடு அரவு; அங்கை (வண்ணம்) அரத்தம் (அரத்தம் - அரக்கு); நுண்ணிடை வண்ணம் கொடி; செவ்வாய் வண்ணம் கொவ்வை; கொங்கை வண்ணம் கோங்கு அரும்பின்படி; (படி - தன்மை) (இவை இயல்).

(சுஎ) செம்பொன் சுணங்கு ஏர்வரும் - செவ்வியபொன் போன்ற சுணங்கினால் அழகு மிகப்பெற்ற, மாமூலை மணிச் செப்பு இணை - பெரிய தனங்கள் நீல மணியை (இடையிற் பதிக்கப்பெற்ற) இரண்டு செப்புக்கிண்ணங்களை ஒக்கும், வான வன் கானம் முன்ன - சேரன் காட்டை நாடிச் செல்ல, குருமா நெடுமதில் - நன்னிறம் அமைந்தமேன்மையாகிய உயர்ந்த மதில்களையுடைய, (கோட்டாறு என்னும் பதியின்கண் அப்பெரு கொடிக்குக் கொல்லியஞ்சாரல் இடம்; முகம் திங்கள்; கமலம்; முலை மணிச் செப்பினை; என்பன இயல்.)

(சுஅ) இடித்து அடங்கா உரும் - இடியின் உரு எழுந்திய கொடி, உரும் - இடி; முகிலிடை உருமாயின் இடித்து அடங்கும். (இது விதந்து கூறுத பிற குறிப்பின்பாற்படும்.) கொல்லி ஈர்ம்பொழில் இடம்; முகம், கமலம்; ஏர்பொடித்து அடங்காமுலை - அழகு தோன்றப் பெற்றுக் கச்சுக்கு அடங்காமல் உள்ள தனங்கள், கமலத்து அரும்பு ; (இவை இயல்.)

பக்கம் 63 :—'நிணங்கோள்' என்னுஞ் செய்யுள் :

நிணம் - கொழுப்பு, புலால் உணங்கல் - புலால் வற்றல் (இது தொண்டை நாட்டில் உப்புக் கண்டம் எனப்படும்), ஒப்புதல் தலைக்கூடாக - ஒட்டுதல் காரணமாக, ஆர்த்து உலாம் - ஒலித்து உலவும், ஞாழல் - புலி நகக் கொன்றை மலர் (முதலாகு பெயர்.) ('பூங்கானலில் ஓரணங்கு ஞாழல் கையிலேந்தி மன்னி உறையும் என்பது அறியேன்; அறிவனேல், ஆண்டு அடையேன்' என இயைக்க.)

(சுக) (அண்ணல் உள்ளம் தளர்வு செய்த) அவளே-அந்நங்கையே, இவள் - இந்நங்கை, மணற்றி மங்கை - மணற்றி மங்கை என்னும் ஊரின்கண், விண்டார் உடற் குன்றம் - பகைத்தவர்களின் உடல்களினாலாகிய மலையின்மீது, விழிகண் கழுகு ஏறி உறங்கக் கண்டான் - விழித்த கண்களையுடைய கழுகு ஏறி உறங்கச் செய்தவனது, (பொதியில் மலையின்கண் உள்ளது என்று அவன் சொன்ன கார்ப்புனம் இதுவே என்க.)

(சo) வேந்தர்கள் போய்க் கனவும் - அரசர்கள் தம்பதிக் கண் சென்று கனக்காணும்படி, கடையல் செற்ற - கடையல் என்னும் ஊரில் அவர்கள் (வீரச் செருக்கை) அழித்த, (வேந்த ஞகிய மந்தாரத்து மன்னன் எனவும், கனங்குழலார் மனமும் வடிக்கண்ணுந் தங்கும் மந்தாரத்து மன்னன் எனவுங் கொள்க), மந்தாரத்து மன்னன் - மந்தார மாலையை அணிந்த மன்னனது, (கொல்லிப்புனமும் இதுவே; அவன் தான் கண்ட பூங்கொடியும் இவளே. உம்மையையும் ஏகாரத்தையும் இரண்டிடத்துங் கூட்டுக.)

(சக) மால் கொல்லி வரைவாய்த் திருநெடும்பாவை அணி வள் - பெரிய கொல்லி மலையிலுள்ள அழகிய நெடிய பாவை ப் போன்ற இந்நங்கையின், கண்கண்டும் என்பதில் உள்ள உம்மை அந்நங்கையின் கருநெடுங்கண்களைக் கண்டபின் ஆற்றுத லின் அருமை குறித்து நின்றது; (உயர்வு சிறப்புப் பொருளது.)

(சஉ) வரி சிலை - கட்டுகளையுடைய வில்லை ஏந்திய, வஞ்சி யன்னாள் அரிய மலர் நெடுங்கண் கண்டும் - இவ்வஞ்சியன்னாளின் வேறெங்கும் காணுதற்கரிய செந்தாமரை மலர்போன்ற கண் களைக்கண்டும், அண்ணல் மால் ஆற்றியதே - நம்பெருமான் காதலை ஆற்றிவந்தது என்ன வியப்பு! ஈண்டு ஏகாரம் வியப்புக் குறித்து நின்றது. பெரிய நிலைமையவரே பெரியர் - மேன்மையாகிய மனநிலைமையினையுடையவரே மேலோர் ஆவர்.

பக்கம் 66 :—'துறைமேய்' என்னுஞ் செய்யுள் :

துறை மேய் - கடற்கரையில் மேயும், வலம்புரி தோய்ந்து - வலம்புரிச் சங்குகள் வந்து சேர்ந்து, மணல் உழுத தோற்றம் - மணலின்கண் உழுதலால் உண்டாகும் (கோடுகளாகிய) தோற்றம், மாய்வான் - மறையும்படி, பூப் பொறைமலி - பூக்களாகிய சுமை மிக்க, புன்னைப்பூ உதிர்ந்து துண்தாது போர்க்குங் கானல் - புன்னை மரத்தின் பூக்கள் உதிர்ந்து தம்முடைய நுட்பமான மகரந்தப் பொடிகளால் மறைக்கும் கானலில், கண் செய்த மலி உறை உய் யா நோய் - கண்களாற் செய்யப்பட்ட மிக்க மருந்தினுந் தீராத நோயை (உறை - மருந்து, நோய் - காதல் நோய்.), சுணங்கு ஊர் மென் முலையே தீர்க்கும் - சுணங்கு பொருந்திய மென்மை யாகிய தனங்களே தீர்க்கும். (போலும் என்பது ஒப்பில் போலி.)

பக்கம் 66 :—'மணங்கமழ்' என்னுஞ் செய்யுள்:

மம்மர் வெந்நோய் - (காதல்) மயக்கமாகிய கொடிய நோய், சுணங்கு அணி - சுணங்குக்கு அழகு செய்யும், வனமுலை அல்லது தீர்க்கலா - அழகிய தனங்களல்லாமல் வேறெவையும் தீர்க்க மாட்டா.

(சஙு) புல்லா மன் - மனம் பொருந்தாத பகை அரசன், தகைத்து -மேன்மையையுடையது.

(சச) (கன்னி உயர் பொழில்) வண்டு உளர் - வண்டுகள் சுழலும், கைதை - தாழை, வளாய் - கலந்து, கண்டல் - நீர் முள்ளி மலர்தலால், தண் தேன் துளி - குளிர்ந்த தேன் துளியானது, மன்னு வெள் மணல்பாய் இனிது - பொருந்திய வெண் மணலிற் பாயும் இனிமையையுடையது, (பாய் என்பது இனிது என்பதன் பகுதியாகிய இனிமை என்பதனோடு முடிந்தது. பொழில் பாய் இனிது என்க.

(சஙு) (அங்கு ஓர் வார் பொழில், பொன் ஏர் மலர் சிந்து தலால், கடி கமழ்ந்து, வான் உறை தேவரும் மேவும்படித்தாயிருக்கின்றது.) சிந்தி - சிந்துதலால், மேவும் - விரும்பும், படித்து - தன்மையையுடையதாயிருக்கின்றது.

(சசு) சேய் அரி பாய் காவி வென்று ஆய கண்ணுப் - செவ்விய அரிகள் பாயப்பெற்ற கருங்குவளை மலரை வென்று அமைந்த கண்களையுடையாய், (யான் நின்னை நினைக்கின்றது வீழ் பொழில் வாய்த் தேவி என்றாகும்) வீழ் - யாவரும் விரும்பும், பொழில்வாய்த் தேவி - பொழிலின்கண் உறையுந் தெய்வம் (சூரமகள்), அல்லியேல் - ஈ அத்தெய்வம் அல்லையாதலால், ஒன்று கட்டுரை - ஓர் உறுதிமொழியைக் கூறு (பேசு என்பது கருத்து.) ('அகலிடத்து ஆவி சென்றால் பின்னைப் பெயர்ப்பவர் யார்?' என இயைக்க.)

(சஎ) 'விரையுறை கோதை நின்னைப் பொதியில் வரையுறை தெய்வம் என்றேற்கு (என்றேற்கு - என்று சொன்ன எனக்கு), அல்லியேல் வாய்திறவாய் (பேசு); உயிர் செல்லின் மீட்பவர் பிறர் யார் ?' என இயைக்க.

(சஅ) 'அரிகேசரி கூடல் அன்ன சுரும்புடைக் கோதை நல்லாய், இவற்குத் துயர் செய்யும் என்று உன் கருநெடுங்கண் புதைத்தாய்; அங்ஙனம் கண் புதைத்த உன் கருத்துக்கு மாறாகப் பேரொளி சேர் கரும்புடைத் தோளும் எனது உள்ளங் கலக்கியது,' என இயைக்க.

கரும்புடைத்தோள் - மன்மதனது கரும்பு வில் எழுதிய தோள்.

(சசு) 'விசாரிதன் தெவ்வர் மனம் மெலிதல் போல எம் மனத்தை உன் பூந்தடங்கண்கள் மெலிவிக்கும் என்று எண்ணி அவற்றைப் புதைத்தாய்; அங்ஙனம் புதைத்த உன் காந்தள் விரலும் எம்மை உள்ளங் கலக்கியது,' என இயைக்க.

பக்கம் 69:—'சொல்லிற் சொல்' என்னுஞ் செய்யுள்:

சொல்லிற்சொல் எதிர் கொள்ளாய் - (நங்காய் நின்னைத் தழுவிக்கொண்டு) யான் சில கூறினுல் (அவற்றை) எதிரேற்றுக்கொள்ளாமல், நின் திருமுகம் இறைஞ்சி நாணுதி - உன் எழுகிய முகம் நிலம்நோக்கக் கொண்டு (கண் புதைத்து) நாணுன்றனை, கதும் என - விரைவாக, காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ - காமம் கைகடந்து மிகுமாயின் அதனைத் தாங்கியிருத்தல் எளிய செயலாமோ ? புலி நடுங்கக் கொடுமை இருங் கேழ் புறம் குத்தி - புலி நடுங்கும்படி அதன் வலைந்த கரிய நிறமுள்ள வரிகளையுடைய முதுகிலே குத்தி வீழ்த்தி, வீளையாடிய வேழத்தின் புலவு நாறு இன்தலை மருப்பு ஏய்ப்ப - வீளையாட்டயர்ந்த யானையினது புலவு நாற்றத்தையுடைய இனிய தினையையுடைய மருப்புப்போல, கடைமணி சிவந்த நின் கண்ணே கதவ - கடை மணி சிவந்த நின் கண்கள் மட்டுமா சினவாகின்றன ? அல்ல - அவைமட்டுமல்ல, நண்ணர் அரண் மதில் தலையர் ஆகவும் - பகைவர் காவலையுடைய மதிலிடத்துப் போந்தனராகவும், (உடனே அவரை எதிர்த்து வென்று) முரசு கொண்டு ஓம்பு அரண் கடந்த - அவரது முரசைக் கைக்கொண்டு அவராற் பாதுகாக்கப்பட்ட அரணையுங் கைப்பற்றிய, போர் அடு செழியன் - போரில் பகைவரைக் கொல்ல வல்ல பாண்டியனது, பெரும்பெயர்க் கூடல் அன்ன - பெரிய புகழையுடைய மதுரையைப் போன்ற, நின்கரும்புடைத் தோளும் அணங்கு உடைய - உன்னுடைய (தொய்யிலால் எழுதப்பட்ட மன்மதனது வில்லாகிய) கரும்பையுடைய தோள்களும் வருத்துதலையுடையன. யாழ - முன்னிலையசை; ஆல் - அசை.

(நெ) விதியை ஆம் ஆறு அறிபவர் யார் - ஊழினை அஃது இப்படி ஆம் ஏன்று அறிபவர் யார்? 'முன் எதிர்ப்பட்டு அணைந்த பொழுதையே இன்னும் யான் சென்று துன்னுவன்,' என இயைக்க.

(நிக) பேணி நில்லாப் பொருஞ் பார் அரசரை - தன்னை விரும்பி நிற்றலின்றிப் போர் செய்த பூமிக்கு அரசரை, பூலந்தை-பூலந்தை என்னும் ஊரின் கண்.

(நிஉ) துனி அகல - (உயிர்களின்) துன்பம் நீங்க, தொடு பொறியாய - அமைக்கப்பட்ட அடையாளமாகிய, கெண்டை-கயல் மீனின் உருவம் எழுதப்பட்ட கொடியை, பனி தாழ் - (எப்பொழுதும்) பனிதங்கிய (வடவரைமேல் வைத்த பஞ்சவன் என்க.) பஞ்சவன் - பாண்டியன், ('ஈர்ம்பொழில் கூடல் அன்ளது கூட்டத்தைப்போல இனிதாய், எனது உள்ளம் எல்லாங் குளிர்வித்தது,' என இயைக்க.)

(நிஊ) ஆர் மன்னு - கூர்மை பொருந்திய, 'ஈர்ம்பொழில் கோதையைப்போல் இனிதி ஆயிற்று,' என இயைக்க. நாணிய - (அவர்கள் நாணத்தைத் தன் நாணமாகக் கொண்டு) நாணிய (அன்றிப் புறங்கொடுத்து ஓடுபவர்களோடு போர் செய்ய நேர்ந்த தற்காக நாணிய என்றனுமாம்).

(நிச) 'நீரின் மலிந்த நெடுமாறன், செவ்வேல் நெடுமாறன்' என்க. நீரின் மலிந்த - நல்ல தன்மையின் மிக்க, நெல்லி - நெல் வேலியின்கண் புரிந்த, ஒன்னர் போரின் மலிந்த-பகைவரது போரிலே வெற்றியிற் சிறந்த, உரம்வெந்தாணை கொண்டகோன் - வன்மையினையும் பகைவர்களுக்குத் துன்பஞ் செய்தலையும் உடைய சேணையைக்கொண்ட மன்னனது, காரின் மலிந்த - (பருவத்தில்) மேகம் மழை பெய்தலால் வீளைவு மிக்க, ('பூம்புனம் காக்கின்ற காரிகைமீர் (நும்) ஊரின் பெயரும், நும் பேரும் (யான்) அறிய உரைமின்கள்,' என இயைக்க.)

(நிஙி) நிதியின் கிழவனும் நிலமகள் கேள்வனுமாகிய ஒன்னார்தம் மாவும் களிறும் கவர்ந்துகொண்டவனது பொதியில் என்க.

(நிசு) அறை ஓர் கழல் மன்னர் - புகழ்மைந்த கழலோப் பாதத்தில் அணிந்த மன்னர், ஆற்றுக்குடி-ஆற்றுக்குடி என்னும் ஊரின்கண், (கோன்று கொல்லிக்கார்ப்புனம் என்க.)கார்ப்புனம்-மேன்மையாகிய புனம்.

(நிஎ) பிறையின் மலிந்த சிறுதுதல் பேர் அமர்க்கண் மடவீர் - பிறையினும் அழகிற்சிறந்த சிறிய நெற்றியையும் பெரிய போரைச் செய்யும் கண்களையும் உடைய மடவீர்.

(நிஅ) வரும் மால் புயல் வண்கை மான் தேர் வரோதயன் - பருவத்தில் தோன்றுங் கரிய மேகம்போல (ஈன்கு) கொடுக்குங் கையினையும் குதிரைகளைக் கட்டிய தேரினையுமுடைய வரோதயனுகிய, (மண் அளந்த திருமாலவன் என்க.) வரோதயன் - வரத்தினுல் உதித்தவன் என்பது சொற்பொருள், மன்னர்கள் திருமாலின் அமிசம் பெற்றவர்கள் என்பவாகலின், மண்ணளந்த திருமாலவன் என்றார். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்' (திருவாய்மொழி, 4-ஆம் பத்து, 4-ஆம் திருவாய்மொழி, 8-ஆம் பாசுரம்.) என்ற பெரியார் அருளிச் செயலையும் ஈண்டு நோக்குக. (சேயிழையீர்,) கருமால் வரை அன்ன தோற்றம் - மேன்மையாகிய பெரிய மலையைப்போன்ற தோற்றத்தையும், கருங்கை - சிறந்த துதிக்கையையும், செங்கண் - (கோபத்தாற்) சிவந்த கண்களையும், வெண்கோட்ட - வெள்ளிய கோடுகளையும் (தந்தங்களையும்) உடைய, (கோட்ட குறிப்புப் பெயரெச்சம். செங்கண் என்பதை வெண்கோட்ட என்பதற்கு முன் இயைக்க.) பொரும் மால் களிறு ஒன்று - போர் செய்யும் மதமயக்கத்தினையுடைய ஒரு யானை, ('நும் புனத்து அயலில் போந்தது உண்டோ?') என இயைக்க.

(நிக) ('கடையலில் கண்ணுற்று எதிர்ந்ததெவ்வேந்தர்படத் தேரின்மேல் விண்ணுற்ற கோள் உரும் கொடி ஏந்திய வேந்தனது பொதியிலில்,' என இயைக்க.) கோள் - வன்மை, உருமுக்கொடி - இடியின் உருவம் எழுதப்பெற்ற கொடி, உரும் - இடி, ஈண்டு அஃது பொருளாகு பெயராய் அதனுருவத்தை உணர்த்தியது. ஓர் பகழி மூழ்க - தன்னுடலில் ஓர் அம்பு தைத்தலினுல், புண் உற்றமா - புண்கொண்ட யானை ('நும்புனத்து அயலில் போந்தது உண்டோ?' என இயைக்க.)

(சுo) 'நெடுங்கண் மடவீர், நுங்கள் புனத்தில் ஓர் பெருங் களிறு பிடியோடு போந்தது உண்டோ? உரையீர்,' என இயைக்க.

(சுக) (சேரலன் நறையாற்றில் வந்து) மனமாண்பு அழிய - தன் மனத்து வீரமாட்சி கெடும்படி, கனமாண் வனமுலை - மிக்க மாட்சிமையையும் அழகினையும் உடைய தனங்களையும், வரிவளை ஆர் கை காரிகையீர் - கீற்றுக்களையுடைய வளைகள் பொருந்திய கையினையும் உடைய நங்கைமீர், 'நும் இரும்புனத்து (கண்ணின் அழகால்) உங்கட்கு இனமாகிய மான் புகுந்ததுவோ? 'உரையீர்,' என்க.

(சூஉ) கொலை மாண் - கொல்லுதலில் மாட்சிமைப்பட்ட (கொல்லுதல் மிக்க), அயில் - வேல், இலைமாண் - இலையைப்போல அச்ச வடிவான மாட்சிமையாகிய, பகழியின் ஏவுண்டு - அம்பினால் (உடலில்) பாயப்பெற்று, ('ஓர் கலைமான் தங்கள் கார்ப் புனத்துப் புகுந்தது உண்டோ ? உரையீர்,' என்க.)

(சூங) கொல்லின் மலிந்த - கொல்லுதலிற் சிறந்த, ('பூங் குழலீர், நும் சிறு குடிக்குச் செல்லும் நெறி அறியேன் ; உரையீர்,' என இயைக்க.)

(சூச) தன்னும் புரையும் மழை உரும் ஏந்திய - (பிறர் மனத்தைக் கலக்குதலில்) தன்னையும் ஒக்கும் மேகத்தினிடையே தோன்றும் இடியின் உருவம் தீட்டப்பெற்ற, (தன்னும் புனையும் - பாண்டிய மன்னனுகிய தன்னையும் ஒக்கும் என்க.) இதில் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. 'தன்னும் புரையும் உரும்' என்க. அன்றித் 'தன்னும் புரையும் மழை' என இயைத்துக் கொடையில் தன்னையும் ஒக்கும் மேகம் என்றலுமாம்.) (வாள் முகத்தீர்) என் வினை உரைத்தால் - என் வினவுக்கு விடை கூறினால், (நுங்கள் வாயகத்து மன்னும்) சுடர்மணி - ஒளியையுடைய முத்துகள் (முத்துப் போன்ற பற்கள்), போந்துகுமோ - சிந்திப் போமோ (உக்குப் போமோ என்க.)

(சூநி) விரை ஆடிய கண்ணி-வாசனை வீசும் மலர் மாலையை அணிந்த, விண்தோய் வரையாடிய புனம் காவலும்-வானத்தைத் தோயும் மலைகளில் பொருந்திய புனத்தைக் காத்தலும், மானின் வழி வரவும் - மானின் பின்னே வருதலும், நிரையாடிய குழலாட்டும் - இயல்பாகிய ஒழுங்கு அமையப் பெற்ற கூந்தலையுடைய இந்நங்கைக்கும், இவற்றும் - இந்நம்பிக்கும், நினைப்பின் இல்லை - மனத்தின்கண் இல்லை; ('புனங்காவல் நிரையரிய குழலாட்கு நினைப்பில் இல்லை. மானின் வழிவரவு இவற்கு நினைப்பில் இல்லை,' என இயைக்க.) கண்ணினுள் உசைபாடுவர் - ஒருவருக்கொருவர் கண்ணினுல் பேசிக்கொள்கின்றனர், உள்ளத்து உள்ளது ஒன்றும் உளது - மனத்தின்கண் உள்ளதாகிய வேறொரு கருத்தும் இருக்கின்றது. உள்ளதும் என்பதில் உள்ள உம்மை பிரித்து ஒன்று என்பதனோடு கூட்டப்பட்டது. இஃது எச்ச உம்மை; இவ்வும்மையால் தழுவப்பட்ட கண்ணினுல் உரையாடுவர் என்பது உம்மை இல்லாத மொழியாதலின், அவ்வும்மையால் தொடர்ப்பட்ட மொழிக்கு முன் கூறப்பட்டது.

"எஞ்சுபொருட் கிளவி செஞ்சோ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்."

(தொல். சொல். இடையியல், சூ. 36.)

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாராகலின்.

(சுசு) பொருங்கண்ணி சூடி வந்தார் - போர் செய்தற்கு அடையாளமாகிய தும்பை மலர் மாலையை அணிந்து வந்த பகை வேந்தர், பூலந்தை - பூலந்தை என்னும் ஊரில், வாகை இருங்கண்ணி - வாகை மலர்களாலாகிய மேன்மையாகிய மாலையை, மருங்கு அண்ணி வந்த சிலம்பன்தன் - பக்கத்தில் நெருங்கி வந்த சிலம்பனுடைய (தலைவனுடைய), சிலம்பன்தன் ணும் வாணுதலாள் கண்ணும் தம்மில் கலந்தது (பன்மையில் ருமை வந்த மயக்கம்). (இங்கு ஓர் காரணம் உண்டு என்க.)

பக்கம், 84:—'நேர்ந்தநம் காதலர்' என்னுஞ் செய்யுள் :

நேமி நெடுந்திண் தேர் - வட்டக்காலையுடைய நெடிய வலிய தேர், தீர்ந்தாய் போல் தீர்ந்திலை - உறவாயினும் போலிருந்து உற வாயினையில்லை.

(சுஎ) (நேரிழையே) செந்திலத்து - செந்திலத்தின்கண், பொதியில் புனம் மாமயில் புரையும் - பொதியில் மலையின்கண் உறையும் சிறந்த மயில் போலும், ஏர் மன்னு காரிகை - வளர்தல் பொருந்திய அழகு, எய்தல் உண்டாம் எனின் - (சூணை யாடுதலால்) அடைதல் உண்டாகும் என்றால், ('யானும் நின் போல் நீல நெடுஞ்சூணை ஆடுவன்,' என இயைக்க.)

(சுஅ) '(தையல்!) பொதியில் மயில் அன்ன காரிகை நின் போல் எய்தல் உண்டாம் எனின் யானும் சென்று ஒண் சூணை ஆடுவன்' என இயைக்க.

பக்கம் 85:—'பையுள் மாலை' என்னுஞ் செய்யுள் :

பையுள் மாலை - (பிரிந்தார்) வருந்துதற்குக் காரணமான மாலையில், பழுமரம் படரிய - ஆலமரத்தை அடைந்த, கொவ்வுப் பறை வாவல் - கொய்ய இறகுகளையுடைய வௌவால், நோன் சிறை ஏய்க்கும் - வலிய சிறகை ஒக்கும், மடிசெவிக் குழவி- மடிந்த காதுகளையுடைய கன்றை, இடுகு கவுள் மடப்பிடி - இடு கிய கபோலத்தினையுடைய இளம்பிடி, பையாந்து தழீஇ - (சிங்கத் தைக் கண்டு) துன்பமுற்றுத் தழுவிக்கொண்டு, எவ்வம் கூர - வருத்தம் மிக (மிகவும் வருந்த, அதனைக் கண்ட) வெந்திறல்யாளி- கொடுமையையும் வன்மையையும் உடைய(ஆண்)சிங்கம், வெரீஇ-

அஞ்சும்படி (வெருவ என்பது வெரீஇ எனத் திரிந்து நின்றது.), சந்தின் பொரியரை மிளிரக் குத்தி - சந்தன மரத்தினது பொரியரையானது பிறழும்படி குத்தி, வான்கேழ் உருவ வெண்கோடு - சிறந்த ஒளியினை உடைய உருவத்தினைக் கொண்ட வெள்ளிய கொம்பை, உயக்கொண்டு கழியும் - வாங்கிக்கொண்டு செல்லும், கடுங்கண் யானை - கடிய கண்களையுடைய யானை, கால் உற ஒற்றலின் - காலால் நன்றாய் மிதித்தலால், கோவா ஆரம் - கோக்கப் படாத ஆரம் (சந்தன மரம்; இது குறிப்பு; கோக்கப்படும் ஆரம் - முத்து), வீழ்ந்தென - வீழ்தலால், (குளிர் கொண்டு) பேஎம் தாறும் - அச்சந் தோன்றுதற்குக் காரணமான, (தாழ் நீர்ப் பனிச் சுனையில்) வரை வயிறு கிழித்த - கிரௌஞ்சமென்னும் மலையின் நடு இடத்தைப் பிளந்த, நிழல் திகழ் நெடுவேல் - ஒளி விளங்கும் நீண்ட வேலையுடைய, திகழ் பூண் முருகன் - விளங்கும் அணிகளை அணிந்த முருகனது, தீம்புனல் அலைவாய் - இனிய நீரையுடை அலைவாய்ப் பதியிலுள்ள, கமழ் பூம்புறவில் - மணம் வீசும் மலர்களையுடைய காட்டின்கண், கார்பெற்றுக் கலித்த - மேகத்தைக்கண்டுதழைத்த, ஒள் பொறி மஞ்ஞை போல்வது-(தோகையில்) ஒள்ளிய பொறிகளைக் கொண்ட மயிலைப்போல்வதாகிய, கண் கவர் ஓர் காரிகை பெறுதல் உண்டு எனின் - (காண்பார்) கண்களைக் கவரும் ஒப்பற்ற அழகைப் பெறுதல் உண்டாம் என்றால், ('நின்போல் கோல் நேர் எல் வளை தெளிர்ப்ப யானும் ஆடிக் காண்கு,' என இயைக்க.) கோல்நேர் எல்வளை - திரண்ட செம்மையாகிய ஒளியை உடைய வளை, ஆடிக்காண்கு - ஆடிக்காண்பேன், தெளிர்ப்ப - ஒலிக்க. ('பிடி எவ்வங்கூர(க்கண்ட) கடுங்கண் யானை' என்க.)

(சுசு) 'கருமாமலர்க் கண்ணி, பிறைக்கொழுந்து கைதொழவந்து தோன்றிற்று; காண்,' என இயைக்க. (கண்டு தொழு என்பது கருத்து)

பக்கம், 86 :— 'முன்னும் தொழத்தோன்றி' என்னுஞ் செய்யுள்:

'மூள் எயிற்றாய்! பிறை நுதல் முன்னுந் தொழத் தோன்றி அத்திசையே இன்னுந் தொழத் தோன்றிற்று. காண்,' என இயைக்க.

(எ0) 'வரை அணங்கே' மந்தாரம் என்னுந் தண்டாரவஞ்சிய மாறன், சொல்லித்தாழ் சுனை ஆடிய அகன்றான். (ஆடிய -

ஆடை; செய்யிய என்னும் எச்சம்.) 'ஞண் தாமரை போல் முகத்த வளாகிய தலைவி உருவம் நின்னோடு ஒக்கும், அவள் வந்தால் இயங்கு,' என்த் தலைவியை அணங்கெனத் தம்மின் வேறுபடுத்துக் கூறினள். (தோழி, தலைவியின்பால் முன்னியினும் பொலிவு மிக்கிருத்தலைக் கண்டு கூட்டமுண்டாயிருத்தல் வேண்டும் என்று கொண்டு, அதனை நன்குணர்த்தற்பொருட்டு இங்ஙனம் வேறுபடுத்துக் கூறினள் என்க.)

(எக) 'அணங்கன்னாய், குன்றத்து அருவி நின் சேவடி தோய்ந்ததில்லை; (அங்ஙனமாகவும்) அத்தடஞ்சுனை, (நின் கண்ணுஞ் சிவப்பச் செவ்வாயும் விளர்ப்பச் செய்து வண்டு ஆர்வுள் நெடும்போதவற்றை (நினக்குச்) சூட்டவற்றோ?' என்க).

(எஉ) 'தென் கூடல் அன்ன மடந்தை(யே), இன்று நம் சூர்ம்பூனத்துப் புலவு ஆர் குருதி அளைந்த வெங்கோட்டு ஓர் பொரு களிறு கண்டேன்,' என இயைக்க. இலவு ஆர் துவர்வாய் - இலவம்பழம் போன்ற செந்நிறத்தினையுடைய வாய்.

(எங) புகழ் படைத்தல் கருதி - புகழ் படைத்தலைக்கருதி, கடையல் - கடையல் என்னும் ஊரில், 'கொல்லிப் பைம்பூம் புனத்துக் குருதி வெண்கோட்டது - ஓர் குஞ்சரம் கண்டேன்,' என இயைக்க.

பக்கம், 87 :—'பண்டிப் புனத்து' என்னுஞ் செய்யுள் :

'கார்நீலக் கண்ணுய், இக்களிற்றைப் பண்டு இப்புனத்துப் பகலிடத்து ஏனுள் கண்டறிவன்; (இப்பொழுது) இதன் கோடு உதிரம் உடைத்து,' என இயைக்க. திண்டிக் கதிரன் - திண்டி என்னும் ஊரில் உள்ள கதிரனது, பழையனூர் - ஓரூர், கதிரனது பழையனூர் என்க.

(எச) 'பைங்குழல் - (தேனுல் நனைந்த) பசிய கூந்தலை உடையாய்; (உன்) வாள் நுதல் வாடியது (எதனுல்)? கொந்து ஆடு - பூங்கொத்துகள் அசைந்துகொண்டிருக்கும், பொழில்வாய் - சோலையில், பண்ணை - (உன்னோடு) விளையாடுதலையுடைய, ஆயத்து - தோழியரோடு, கோலம் மெல் பூம்பந்து ஆடலின் - அழகிய மெல்லிய மலர்ப்பந்தை ஆடுதலால், இடை நொந்துகொல் - இடை நொந்ததனுலா ? (வெண்மணல் மேல் வந்து ஆடலின்) அடி நொந்துகொல் - அடி நொந்ததனுலா ? சொல்,' என்க.

(எடு) (நங்காய்,) இவ்வாள் நுதல் வருந்திய காரணம் - இவ்வாள் நுதல் வருந்தியதற்குக் காரணம், புனல் குடைந்து

கொல், சென்று பொற்கயிற்று ஊசல் ஆடிக்கொல், என்னை - (புன்ல் குடைதலும் ஊசல் ஆடுதலுமாகிய இவற்றுள்) யாது? சொல் என்க.

(எசு) 'மழையும் புரையும்' என்பதில் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. 'மழையும் சந்தனத்தின் தழையும் கண்ணியும் ஏந்திப் புனத்தில் நுழையும்; பிரியல் உரூன்; இவன் உள்ளியது அறியேன்;' என இயைக்க. நுழையும் - நுழைவன், வழை - சுரபுன்னை.

(எஎ) 'தண்பூந்தும்பை மலர்த்தார் முடிமேல் சூடிய மன்னன்' என இயைக்க. வரைப்புனம் - வரையிலுள்ள புனத்தின் கண், நீங்கான் வரும் - நீங்காமல் வருவன், தழையுந்தரும் தழையுந்தருவன், 'இவன் உள்ளியது அறியேன்,' என இயையும்.

(எஅ) மறிந்தார் புறங்கண்டு - மாறுபட்ட அரசர்களின் முதுகைக்கண்டு (காணியகோன் என்க.) சாரலில் வந்த நெறிந்து ஆர்கமழ் குஞ்சியானேடு இவளிடை - சாரலின்கண் வந்த கமழுங் குஞ்சியானிடையும் இவளிடையும், நின்றது எல்லாம் - பொருந்தியவற்றை எல்லாம் (பன்மையில் ஒருமை மயங்கியது.) அறிந்தேன்; 'பல நினைந்தென்னை? இவர் ஆருயிர் ஒன்றே,' என இயைக்க.

(எக) வைவேல் முகமும் கண்ணும் சிவப்ப-தன்னுடைய கூர்மையாகிய வேலின் கடையும் கண்களும் உடன் சிவக்க, கடையல் வென்றான் - கடையல் என்னும் ஊரின்கண் பகைவரை வென்றவனும், வானவன் - சேரநாட்டரிமையைப் பெற்றவனும் (அன்றித் 'தேவன் எனத் தக்கவனும்' என்றலுமாம்.) ஆகிய, ('மாறனது கடல்நாடு அணியவளும் பண்ணும் புரை சொல்லியுடையவளுமாகிய் இவளைப் பற்றியும் இவனைப் பற்றியும் எண்ணும் குறை என்னை? இருவர்க்கும் இன்னுயிர் ஒன்றே,' என இயைக்க.) பண்ணும் புரை என்பதிலுள்ள உம்மை இனமையிஞல் இசையையும் ஒக்கும் என்னும் பொருளைத் தருதலின் உயர்வு சிறப்புப் பொருளது.

பக்கம், 90 :— 'ஏனல் காவல்' என்னுஞ் செய்யுள் :

இவளும் ஏனல் காவல் அல்லள் - இவளும் தினைப்புனங் காத்தலைக் கருதினவள் அல்லள், இவனும் மான்வழி வருகுவன் அல்லன் - இவனும் மானின்பின் வருவோன் அல்லன், நம்மூன் நாணுவர் போலத் தம்முள் மறைந்து மது உண்டோர்

மகிழ்ச்சி போல உள்ளத்து உள்ளே மகிழ்ப; கண்ணினும் சொல்லும் ஆடுப; நரந்தம் கண்ணி - நரந்தப் பூமாலை, கரந்த உள்ள மோடு - (தங்கருத்தைப் பிறர் அறியாதபடி) மறைத்த மனத்தினுல், கருதியது - எண்ணியது, பிறிது - வேறொன்று உளது.

(அ0) படல் ஏறிய - வானத்தைத் தொடுதல் பொருந்திய, மதில் மூன்று - மூன்று மதில், (பஞ்சவனுகிய மன்னன் என இயைக்க.) (ஆடவர்கள்) கடல் ஏறிய - கடல் போல் வளர்ந்த, கழி காமம் - மிக்க காமம், பெருக - பெருகினுல், மடல் ஏறுவர் - மடல் ஏறுவார்கள், ('மாநிலத்து மற்றுஞ் செய்யாதன இல்லை,' என இயைக்க.)

(அக) 'மாறன் தென்னுடி அணியாய், ஆடவர்கள் அருநெடுங்காமம் பெருகுவதாய்விடின் பெண்ணைமடல் ஊரக் கருதுவர்,' என இயைக்க.

பக்கம், 94:—'மாவேன மடலும் ஊர்ப' என்னுஞ் செய்யுள்:

ஆடவர், காமம் முதிர்ந்தால் குதிரை எனக்கொண்டு பனை மடலையும் ஊர்வர்; அடையாளப் பூவைப்போலக் கொண்டு குவிந்த அரும்பையுடைய எருக்க மலர்களாலாகிய மாலையையுந் தலையில் அணிவர்; வீதியில் பிறர் தம்மைக்கண்டு ஆரவாரிக்க வும்படுவர்; வரை பாய்தல் முதலிய வேறு செயலையும் உடையர் ஆவர்.

(அஉ) 'நில மன்னனும், நேரியனும், மாறனுமாகிய திங்கட் குல மன்னன்' என இயைக்க. நெடுங்களத்து அட்ட - பெரிய போர்க்களத்திலே பகைவரை அழித்த (மன்னன் என்க.) உலம் மன்னும்தோள் அண்ணல் - திரண்ட கல்லைப்போலப் பொருந்திய தோள்களையுடைய மேலோனே, 'நீ அருளின் மிக்கோன் ஆதலின் மன்னு பல புள் இனமும், (அவற்றின்) பார்ப்பும், சிறையும் - மூட்டைகளும் அழியப் பெண்ணை மடல் ஊரக்கொளாய்' என இயைக்க. அழிய - அழியும்படி, ஊரக்கொளாய் - ஊரமாட்டாய், கொல் - அசை.

பக்கம், 94:—'வேள்ளாங் குருகின்' என்னுஞ் செய்யுள்:

'அருளின் மிக்க அண்ணலே, குவி மடல் ஒங்கு இரும் பெண்ணை மீமிசை வெள்ளாங்குருகின் பிள்ளையும் பல; சிறு கருங்காக்கை அவையினும் பல; (பெண்ணை மீமிசை) தொடுத்த தூக்கணங்குரீஇக் கூட்டுள சிறை (முட்டைகள்) அவையினும் பல.

ஆகலின், அவைகள் அழியும்படி நீ மடல் ஊரமாட்டாய்,' என் றுள் தோழி என்று கொள்க.

(அசு) (அரிகேசரி அகல் ஞாலம் அன்னுள்) வண்ணம் - வடிவம் (நிறம் என்றலுமாம்), குழல் நாற்றமும் - கூந்தலின் வாசனையையும், (மற்றவள்தன் நடையும், மொழியும் எழுதப் படிச்சந்தம் உளவே?' என இயைக்க.) படிச்சந்தம் - சித்திரம், (படி - ஒன்றன்படி எழுதப்படும், சந்தம் - வடிவு நிறம் முதலி யன; சித்திரம் என்பது.)

(அச) ஐய, கேட்பின் தென்னடு அணையாள் கிளிசேர் மொழியும், கிளிசேர் மொழி - கிளிகள் தங்கள் இனமெனக் கருதி வந்து சேர்தற்குக் காரணமான மொழி (அன்றி கிளிபோன்ற மொழி என்றலுமாம்.) கருங்குழல் நாற்றமும் எழுத எளிதே? (எழுத - எழுதுதல், ஈண்டு இவ்வகர ஈற்று வினையெச்சம் தொழிற்பெயராய் எழுவாயாய் நின்றது), எளிதே - எளிதா? அவற்றை எழுதிப் பின் மடல் ஊர்க.

(அடு) 'நீர் வில் எழுதிக் கூடல் அன்னுள் புருவக்கொடி என்றிர்; தாமரையின் முற்று மூகை எழுதி (அவள்) முலை என்றிர்; (இனி அவள்) சொல் என நீர் எழுதத் துணிகின்றது கிள்ளையோ? 'எழுதக்கூடிய புருவக் கொடி, முலை என்னும் இவற்றையே எழுத முடியாமல் இவற்றின் உவமைகளை எழுதிக் காட்டிய நீர், எழுதமுடியாத சொல்லை எப்படி எழுதுவீர்? அதனை யும் அதன் உவமையாகிய கிளியை எழுதிக் காட்டிவிடத் துணி வீர்போலும்!' என நகையாடிக் கூறினள் தோழி என்க.

(அசு) என்பால் இன்ன நாள் அவள் (அத்தலைவியின்) ஆரருள் (வையை நெடுநீரிடை) தாங்கும் புணையொடு தாழும் - (தன்பால் உள்ளவரை நீரில் அமிழாதபடி) தாங்கும் தெப்பத் தோடு செல்லுதற்குரிய ஆழமாகிய, புனல்வாய் - புனலில், யான் ஒழுகின் - யான் சென்றால், ஆங்கு வரும் - ஆங்கும் என்னோடு வரும், ஆல் - அசை, அன்னது - அத்தன்மையுடையதா யிருக்கின்றது.

(அள) 'கூடார், காடார் கருவரையின்கண்ணும், கலி வானின்கண்ணும் செல்லும்படி, அன்று கடையல் என்னும் ஊரில் (அவர்களைச்) செற்ற கோனுகிய நெடுமாறன்' என இயைக்க. 'கூடல் அன்னளாகிய மலர்க்குழலாள், எங்கு நிற்பினும், என்னையன்றி (என்னை விட்டு என்பது) புனலும்

ஊசலும் ஆடாள்; (என்பால் அவளுக்குள்ள) ஆருள் ஈது,' என இயைக்க.

பக்கம், 96 :—'தலைப்புணைக் கொளினே' என்னுஞ் செய்யுள்:

மாண்ட - மாட்சிமை கொண்ட, மாரிப்பித்திகத்து - மழைக் காலத்தில் மலரும் பிச்சியினது, நீர்வார் கொழுமுகை - நீர் ஒழுகப்பெற்ற வளப்பமாகிய அரும்பினுடைய, செவ்வெரிந் உறழும் - சிவந்த புறத்தை ஒத்த, கொழுங்கடை மழைக்கண் - கொழுமையாகிய கடையிணையுடைய குளிர்ச்சியாகிய கண்களையும், துளி தலைஇய தளிர் அன்னெள் - மழைத்துளிகள் தன்னிடத்துப் பெய்யப்பெற்ற தளிரைப்போன்ற மென்மைத் தன்மையினையும் உடையாகிய எம்பெருமாட்டி, புணைத்தலைக் கொளின்-(யான்) தெப்பத்தின் தலைப்பக்கத்தைக் கைக்கொண்டால், புணைத்தலைக் கொள்ளும் - தானும் தெப்பத்தின் தலைப்பக்கத்தைக் கைக்கொள்வாள், புணைக்கடைக் கொளின் - யான் தெப்பத்தின் கடைப்பக்கத்தைக் கைப்பற்றிக்கொண்டால், புணைக்கடைக் கொள்ளும் - தானுந் தெப்பத்தின் கடைப்பக்கத்தைக் கைப்பற்றிக்கொள்வாள், புணை கைவிட்டு - தெப்பத்தைக் கைவிட்டு, புனலொடு ஒழுகின் - யான் புனலொடு சென்றால், ஆண்டும் வருகுவள் போலும் - அங்கும் (என்னெடு) வருவாள் போலும், (இப்போது எம்பெருமாட்டிக்கு என்பால் உள்ள ஆருள் அத்தகையதாயிருக்கின்றது.) பித்திகம் - சிறு சண்பகம் என்றுஞ் சொல்லப்படும்.

(அஅ) 'பூமாண் குழலாய், ஏமாண்சில அண்ணல் (பண்டு போல, இன்றும்) தேமாந்தழையொடு கண்ணியுங் கொண்டு செழும்புனத்தில் வந்து நின்றார், பண்டுபோல இன்று உரைப் பதோர் பொய்ம்மொழி அறியேன்,' என இயைக்க. பண்டு போல இன்று உரைப்பது ஓர் பொய்ம்மொழி-முன் உரைத்தது போன்று இன்று உரைத்தற்குரிய ஒரு பொய்ம்மொழி.

(அகூ) 'கடியார் புனத்து அயல் ஓர் நெடுந்தகையை வைகலுங் காண்பல்; கருத்துரையான்; (அவன்) அடியார் கழலையும் அலங்கல் அம் கண்ணியையும் உடையவனாயிருக்கின்றான். அவன் மண்ணளந்த நெடியான் புதல்வனே (மற்றியாவனே) அறியேன்,' என இயைக்க. அலங்கல் அம் கண்ணி - அசைந்து கொண்டிருத்தலையுடைய அழகிய மாலை, மண்ணளந்த நெடியான் புதல்வன் - ஈண்டு மன்மதன், (பிரமன் எனக்கோடல் சண்டேப் பொருத்தமின்று.)

(கூ0) வைஎய நன்னுடி அணியாய், கழலனும், கடுஞ்சிலையனு மாகிய (ஓரண்ணல்) கண்ணியையும் தண் அம் தழையையும் ஏக் திக்கொண்டு இவ்விரும்புனத்தை அகலாமலிருக்கின்றன். அவன் எண்ணியது யாதோ (அறியேன்.)

(கூக) பொன்னியல் பூண் மங்கை - பொன்னால் இயன்ற பூணை அணிந்த மங்கையே! 'நம் வார் புனம் கட்டழித்துத் தின்னிய வந்த களிறு தடிந்த கிலம்பன் தந்த இப்பூந்தழை வாடி பவோ?' என இயைக்க. கட்டழித்து - அடியோடு அழித்து, தின்னிய வந்த - தின்ன வந்த (தின்னிய - செய்யிய என்னும் விணையெச்சம். வாடுப-பலவின் படர்க்கை; அ - விகுதி.)

(கூஉ) 'அரைதரு மேகலை அன்னம் அன்னுய், கண்ணிய ணுகிய ஓர் விருந்தினன் வார் புனம் வந்து மாவினவும்; (வார் புனம்) கையகலான்; யாவனெனி? (அறியேன்)' என இயைக்க. அரைதரு மேகலை - இடுப்பில் அணிந்த மேகலையையுடைய (இடுப் பில் மேகலையை அணிந்த என்பது.)

(கூங) 'சுரும்பார் கருங்குழலாய், (ஒரு நம்பி) அரும்பார் தழையுங் கொண்டு (வந்து, 'நின் குறையை முடித்துத் தருகின் றேன்' என்று யான் சொன்ன) பொய்யை மெய்யென்று கொண் டானுகலின், நம் புனத்தை அகலாமலிருக்கின்றன்; (அவன்) பெரும்பான்மையும் இன்றும் (என்பால்) வாராவிடான் (வாரா மலிரான்); வரின், இனிச்சொல்லுவது அறியேன்,' என இயைக்க. இனி - இப்பொழுது, சொல்லுவது - சொல்லுதற்குரிய பொய்.

(கூச) தெம்மாண்பு அழிந்து - பகை மன்னர் தங்கள் (வீரத்தின்) மாட்சிமை அழிந்து, (தெவ் என்னுமொழி, மகரம் வர, வகரம் மகரமாகத் திரிந்தது. இது தொல்காப்பியத்து எழுத்ததிகாரப்புறனடைச் சூத்திரத்தானும், நன்னூலில்,

"தேவ்வேன் மொழியே தொழிற்பெய ரற்றே;
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்"

என வரும் மெய்யீற்றுப் புணரியற் சூத்திரத்தானுங் கொள் ளப்படும். 'தென் நாடு அன்ன மெல்லியலாய், இம்மாத்தழை யன் அலங்கலங்கண்ணியன், நமது கடிப்புனத்துக் கைம்மா விஞய் வந்து அகலான்; யாவன்கொல்லோ!' என இயைக்க.

(கூடு) சிலை உடை வானவன் - விற்கொடியையுடைய சேரன் (விற்கொடி - வில்லுருவம் எழுதப்பெற்ற கொடி), வில்

உடை - (வில்லை உடைய) ஒளியையுடைய (வில்லை என்பது லகரமெய் தொகுத்தலாய் வில்லை என்றுயிற்று; வில் - ஒளி.) சிந்தை நிலை இடு வெந்நோயொடு - மனத்தின்கண் நிலையாகப் பொருந்திய கொடிய நோயுடன், முலை இடை நேர்பவர் - முலையின் சுமையால் இடை மெலிவடைகின்ற மடவார், நேரும் - வந்து சேரும்; ('மொய்குழலே, ஒரு நம்பி, சிந்தை நிலைஇடு வெந் நோயொடு இங்ஙீள் புனத்து முலை இடை நேர்பவர் நேரும் இடமிதனைக் கையகலான்' என இயைக்க.)

பக்கம், 99 :—'இலைசூழ்செங் காந்தள்' என்னுஞ் செய்யுள் :

இலை சூழ் - இலையாற்சூழப்பெற்ற, செங்காந்தள் எரிவாய் முகை - செங்காந்தளின் நெருப்பைப் போன்ற நிறம் வாய்ந்த அரும்பை, (எரி என்னும் பொருட்பெயர், ஈண்டு ஆகு பெயராய் அதன் நிறத்தையுணர்த்தியது.) அவிழ்த்த - மலர்வித்த, ஈர்த்தண் வாடை - மிக்க குளிர்ச்சியையுடைய வாடைக்காற்று, கொடிச்சி கதுப்பு உளரும் - கொடிச்சியின் கூந்தலைச் சுழலச் செய்யும், குன்ற நாடன் - குன்ற நாட்டை உடையவனுகிய ஒரு நம்பி, 'மொய் குழலே, முலை இடை நேர்வார்க்கு நேரும் இடமிதன் கண் உலவு உடை வெந்நோய் உழக்கும்; அந்தோ! இதற்கு நான் என்ன செய்வேன்!' என இயைக்க. ஆல் - அசை. உலவு உடை வெந்நோய் உழக்கும் - வருத்துதலையுடைய மிகக் கொடிய நோயால் வருந்தாநிற்கின்றனன்.

(கூசு) நெல்லை - நேற்று, கானல் அங்கு - கானலாகிய அங்கு, உறை துணையோடு ஆடும் அலவன் புகழ்ந்து - தன்னோடு உறையும் பெண் நண்டோடு விளையாடும் ஆண் நண்டைப்புகழ்ந்து, ('என்னை நோக்கி அறிவு ஒழிய மிகுதியும் நினைந்து சென்றனன் கானலாகிய அங்கு ஓர் நெய்தலை' என இயைக்க.)

(கூஎ) 'இச்செழும்புனத்து ஒருவர், கன்னியாற்றின்கண் உறையும் அன்னம் தன் பெடையின் மெய்யைத் (தன்) சிறகால் காக்க (அதனைக் கண்டு) 'இதன் செய்கை நன்று ஆம்,' என்று (கூறி) என்னை நோக்கி நயந்து உருகிச் சென்றார். பின் வந்தறியார்,' என இயைக்க.

பக்கம், 100 :—'புணர்துணையோடு' என்னுஞ் செய்யுள் :

'வணர் சுரி ஐம்பாலோய், இணர் தகை பூங்கானலின்கண் புணர் துணையோடு ஆடும் பொறி அலவனை நோக்கி, என்னையும் நோக்கி, உணர்வு ஒழியப்போன ஒலி திரை நீர்ச் சேர்ப்பன்

எண்ணம் உணரேன்,' என இயைக்க. வணர் சுரி ஐம்பாலோய் - வளைந்த கடை குழன்ற கூந்தலையுடையாய், இணர் தகை - பூங் கொத்துக்கள் நெருங்கியுள்ள, பொறி அலவன் - புள்ளிகளை யுடைய ஆண் நண்டு, உணர்வு ஒழிய - உணர்வு தன்னை விட்டு நீங்க, சேர்ப்பன் வண்ணம் உணரேன் - சேர்ப்பன் மனத்திற் கொண்ட கருத்தின் வகையை அறியேன். (ஈண்டுச் சேர்ப்பன் என்பது முதலாகு பெயராய் மனத்தை உணர்த்த, அஃது இட வாகு பெயராய் மனத்திற்கொண்ட கருத்தை உணர்த்தியது.)

பக்கம், 100 :—'ஒருநாள் வாரலன்,' என்னுஞ் செய்யுள் :

ஒரு நாள் வாரலன் - ஒரு நாள் வந்தானல்லன், இரு நாள் வாரலன் - இரு நாட்கள் வந்தானல்லன், பல நாள் வந்து - பல நாட்கள் வந்து, பணிமொழி பயிற்றி - பணிவாகிய மொழிகளைப் பல்காற்கூறி, என் நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை - எனது நல்ல மனத்தை இரங்கச் செய்த பிறகு, வரை முதிர் தேனின் போகியோன் - வரையினின்று முதிர்ந்து வீழ்ந்த தேன் இறாலைப் போலப் போனவனும், ஆசு ஆகு எந்தை - (கமக்குப்) பற்றுக் கோடாகிய எந்தையுமாகிய தலைவன், யாண்டு உளன்கொல்லோ - எங்கே இருக்கின்றானே! வேறு நாட்டுநல் புலம் - வேற்று நாட்டு நன்மையினையுடைய புலத்தின்கண், பெய்த - சொரிந்த, ஏறு உடை மழையின் - இடியேற்றையுடைய மழை நீர் கலங்கி வருவதுபோல, என் நெஞ்சு - என் மனம், கலுழும் - கலங்கும். தலைவன் தன் மொழியைக் கொள்வார் யாரும் இலராகக் கழிந் தான் என்னுங் கருத்துத் தலைவியின் உள்ளத்துத் தோன்றும் பொருட்டுத் தன்பால் உள்ள தேனை ஒருவருங் கொள்ளாது வரையினின்று முதிர்ந்து வீழ்ந்த தேன் இறாலை உவமையாகக் கூறினள் தோழி என்க. என்னை? தோழி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்கக் கருதினளாகலின் என்பது.

(கூஅ) '(தோழி!) கணி நிற வேங்கையும் கொய்தும்; மணி நிற மாமயில் கலாவம் பரப்பி நின்று ஆடலும் காண்டும்; தூநீர் அருவியும் ஆடுதும்,' என இயைக்க.

(கூக) 'வாள் நுதலே, விரை வளர் வேங்கையும் காந்தளும் கொய்தும்; வியல் அறைமேல் நிரை வளர் மாமயில் ஆடலும் காண்டும்; வரைவளர் மாநீர் அருவியும் ஆடுதும்,' என இயைக்க. வியல் அறைமேல் - பெரிய மலையின்மீது, நிரைவளர் மாமயில் - வரிசையாக உள்ள மேன்மையாகிய மயில்கள்.

(க00) 'அண்ணல்! நீ தந்த தண் தழையை வரோதயன் வஞ்சி அன்னாள் தன் மூலிமிசை வைத்து, மெல் தோள்மேல் கடாய், மொய் பூங்குழல் சேர் தலிமிசை வைத்துக்கொண்டாள்,' என இயைக்க.

(க0க) 'வண்டும் தும்பியும் தேன் கொழுதும் தார் அண்ணல்! நீ தந்த கொய் தழையைக் கூடல் அன்னாள், தொழுது தலிமிசை வைத்துக்கொண்டாள்,' என இயைக்க. கழுது - பேய், இழுது - நெய், கொழுது - கோதும், கொழுதல் - கோதுதல்.

(க0உ) மாற்றலர்க்கு விண் இவர் செல்வம் - தன் பகைவர்க்கு விண்ணுலகத்தை அடையுஞ் செல்வம் (விண்ணுலகத்தை அடைதலேயே ஒரு செல்வம் என்றார், உயிர்கள் அடைய விரும்பும் இன்பங்களை எல்லாம் விண்ணுலகடைந்தார் எய்துதலின். பகைவர் உயிர் நீங்க என்பதனை இங்ஙனம் நயம்படக் கூறினர். வில்லிபுத்தூரார் பாரதத்திலுள்ள, 'காளை உனைவிடுத்த' என்னுஞ் செய்யுளை ஈண்டு நோக்குக.) கண் இவர் பூந்தண் சிலம்பு-கண்டார் கண்கள் மேன்மேலும் பார்க்க விழைந்து செல்லும் அழகிய குளிர்ந்த மலை, பண் இவர் வண்டு-பண்ணைப்போலும் இனிய ஓசையைச் செய்யும் வண்டு, சோலை வளாய - சோலைகள் பொருந்திய, ('எம் பைம்புனம் காப்புடைத்து; (ஆகையால்,) சிலம்பிடை வாரன்மின்,' என இயைக்க. 'புனம் காப்புடைத்து' என்க.)

(க0ஙு) 'ஐய! இந்நீள் புனம் காப்புடைத்து; (ஆகையால்,) கொல்லி மல்லல் அம் சாரல் இங்கு நில்லாது இயங்குமின்,' என இயைக்க.

(க0ச) '(இந்தக்) கொல்லியாகிய மணி வரைவாய் (இனி இரவும் பகலுமாகிய) இரு பொழுதும் ஏவலரும் திண் சிலையாருமாகிய எமர் நீங்காமல் காவலராய் நிற்பர்; (ஆதலின்,) இக் கடிப்புனத்து நீர் வாரன்மின்,' என இயைக்க.

(க0ஞு) மின்னே மறைத்த செவ்வேல் - மின்னின் ஒளியைத் தன் ஒளியால் மறைத்த செவ்விய வேல். (பரிதியின் ஒளி முன் மற்றை ஒளிகள் மறைதலே ஈண்டுக் கருதுக.) வையை சூழ் - வையையாற்றைச் சார்ந்த, பௌவம் நீர்ப்புலவந்தன்னை - கடல் நீரின் புலால் நாற்றத்தை, (இள ஞாழல் மறைத்துக் கமழும் தண்பூந்துறைவா!) என்னை மறைத்து எண்ணியது -

என்னை மறைத்து நீ எண்ணியது, இவ்விடத்து இயலாதுகொல் - இவ்விடத்தில் இல்லாததொன்றே ? ('நீ எண்ணியது இவ்விடத்து உள்ளதாயின், என்னை மறைத்து எய்துதல் அரிது,' என்றுள் என்பது.)

(கoசு) 'கொல்லிக் கார்ப்புனத்து எனக்கு மறைப்பின் வண்டேய் நறுங்கண்ணி கொண்டேட குறையுற வந்ததனுல் நும் உள்ளத்து (உள்ளதை) மூடித்தல் உண்டே ?' என இயைக்க.

(கoஎ) '(விரையார் அலங்கல் நெடுந்தகையே !) நின்கண் மெலிவு உறுநோய் - உன்னிடத்து உள்ள நீ மெலிதற்குக் காரணமாகிய நோயை, (பொதியிலில் உள்ள) வேயே அனைய மென் தோளிக்கு நீயே உரையாய்,' என இயைக்க.

(கoஅ) புரைத்து ஆர் அமர் செய்து - குற்றமுடையதாகிய அரிய போரைச் செய்து, குரைத்து ஆர் குருதிப்புனல் - ஒலியையுடையதாகிய மிக்க குருதி நீர், நிரைத்து ஆர் கருமென் குழலிக்கு - வரிசைப்படித்தப்பட்டு கன்கு அமைந்துள்ள கரிய மெல்லிய கூந்தலை உடையாட்கு, ('நெடுந்துறைவா! சென்றுநின்று, நின் உள் மெலிவு கருமென் குழலிக்கு நீயே உரைத்தால் அழிவது உண்டோ ?' என இயைக்க.)

(கoக) 'நடாவும்' என்னும் பெயரெச்சம் ஈற்றுயிர்மெய் கெட்டு 'நடாம்' என நின்றது. (நடத்தும் என்பது பொருள்.) நெல் வேலி வென்றுனகிய நெடுமாறன் என்க. (வென்றுன் - வினையாலணையும் பெயர்.) நெறிகமழ் பூங்கன்னிக்கானல்-மணம் வீசும் மலர்களையுடைய கன்னியாற்றைச் சார்ந்த கானல். பின் குமரிக்கானல் என வருவதும் அது. கன்னியாறு - குமரியாறு. 'கானலின்கண் விளையாட்டு அயர நின்ற செறி குழலார் பலர். அவர்களுள் அண்ணல் சிந்தனை யார்கண்ணதோ?' என இயைக்க.

(கக0) 'தொண்டிச் சூழ் துறைவாய் வண்டல் ஆடும் வரி நெடுங்கண் இளையரும், வளையாரும், வன முலையாருமாகிய நங்கையர் பலருளர்; அவருள் அண்ணல் இன்னருள் யார் கண்ணதோ ?' என இயைக்க. வளையார் - வளையை அணிந்த வர்கள்.

(கக க) '(அம் கானலின்கண்ணதாகிய இப்பூந்துறை), குமரித்திரை தொகுத்த - குமரித் திரையால் தொகுக்கப்பட்ட, பின்

னுஞ் சுடர்ப்பவளத்தின் அருகில் புன்னையின் பொன் தாது சிந்தப் பெற்றமையால் வான வில்லைப் போன்றது,' என்க.

(ககஉ) கார் அணி சோலை - மேகத்தைத் தொடுஞ்சோலையையுடைய, தேர் அணிதாழை - தேர்களால் அழகு செய்யப்பட்ட சேணை, நீர் அணி வெண்முத்தினுல் - நீரால் (கரையை) அணிவிக்கப்பட்ட வெள்முத்தினுல், ஏர் அணி - மிக்க அழகினையுடைய, ('தென் கன்னித்துறைவாய், இந்தெடுமணல்மேல் (நாங்கள்) இழைத்த ஏர் அணி வண்டலை இவ்வெறிகடல் சிதைக்கின்றது,' என இயைக்க.)

(ககஙு) பொன் அயர் வேங்கை அம்பூந்தழை - (அழகினுக்குத் தோற்றுப்) பொன் சோர்வு அடையும் வேங்கை மரத்தினது அழகிய பூவால் ஆகிய தழையை, ('பொன்னயர் அம் பூ' என்க.) மின் அயர் பூண்-(ஒளிக்குத் தோற்று) மின்னல் தளரும் ஆபரணம், விழிஞத்து ஒன்னார் மன் அயர்வு எய்த - விழிஞத்தின்கண் பகைவர்களின் அரசன் தளர்ச்சியடைய, தன்னயர் - தமையன்மார், (தன்னையர் என்பது எதுகை நோக்கித் தன்னயர் என நின்றது.) பூணிலை சிலம்பா - பூணினையுடையையாகிய சிலம்பா, 'வேல் கொண்ட வேந்தனது அம்மாந்தை என்னும் ஊரை அன்ன (எங்கள்) தலைவியின் தன்னையர் தீயர்; இத்தண் புனத்து (அவர்கள்) பலகால் வருவார்கள்; (ஆதலால், நீ) வாரல்,' என இயைக்க.

(ககச) வீண் அயர் வாளியர் - (போர் செய்தலாகிய) பயன் இன்மைக்குத் தளர்ச்சியடையும் அம்புகளையுடையவர் '(உயர் வரைவாய் இக்கொய்புனத்துக் குறவர், ஈட்டியராயும், நாயினராயும், வாளியராயும், எப்பொழுதுங் கொடிய சிலையராயும் இருப்பர்; (ஆதலின், நீர்) நண்ணன்மின்,' என இயைக்க.)

(ககஙு) 'தோடு இயல் பூந்தொங்கலாய்-இதழ்கள் செறிந்த பூக்களாலாகிய மாலையையுடையவனே, தென்கூடல் அன்னாள் நீடிய வார்குழல் நீலமுஞ் சூடாள் நினைந்து நின்றாள்;(அவள்பாற்) சென்று சொல்லுவது அறியேன்,' என இயைக்க.

பக்கம், 111:—'நெறிநீர் இருங்கழி' என்னும் செய்யுள் :

'எறிநீர்த்தண் சேர்ப்ப! நெறிநீர் இருங்கழி நீலமுஞ்சூடாள்; பொறி மாண் வரி அலவன் ஆடனும் ஆடாள்; சிறு தூதல் வெயர்வு அரும்பச் சிந்தியாநின்றூட்டு யான் என் செல்லிச் செல்கோ ?' என இயைக்க. பொறிமாண் வரி அலவன் - புள்ளி

களால் மாட்சிமையாகிய கீற்றுக்களையுடைய நண்டோடு, 'யான் என் சொல்லிச் செல்கோ' என்பதை, 'யான் சென்று என் சொல்கோ?' என விகுதி பிரித்துக் கூட்டிக்கொள்க.

(ககசு) 'கமழ் பூஞ்சிலம்பா! உறந்தை அன்னுள், (எங்க ளுடைய) கட்புலனைச் செல்லுந் தெய்வம் கண்டாய்; (அவள் பால் இம்மாற்றங்களை எவ்வாறு வட்கு இலன் ஆகி மொழி வன்?' என இயைக்க). வட்கு - வெட்கம்.

பக்கம், 112:—'நேருநலும் முன்னுள்' என்னுஞ் செய்யுள்:

பெருமை! (நீ புதுவையாகலின்) நெருநல் எல்லியும் - நேற்று மாலை வரையினும், முன்னுள் எல்லியும் - அதற்கு முன்னுள் மாலைவரையிலும், கிளத்தல் காணி - நேரே சொல்லுதற்கு வெட்கமுற்று, நேர் இறை வளைத்தோள் - செவ்விய சந் தையுடைய வளையணிந்த தோளை உடைய, (இறை - சந்து, "நின்கொடி விளங்கிறைய தோள்களவின் பெறீஇயர்" ஐங்குறு நூறு, செய். 367, அடி, 1, 2) (நின் தோழி செய்த) ஆர் அஞர் வருத்தம் - பொறுத்தற்கரிய துன்பத்தினாலாகிய மன வருத்தத்தைக் கூறி, எற்குறை உறுதிர் - என்பாற் குறையுறுகின்றீர், ('புதுவை' என்னும் ஓரமையில் உறுதிர் என்னும் பன்மை மயங்கி வந்தது.) மலையம் - பொதிய மலையில் உள்ள, வாய்கோல் மிளகின் கொழுங்கொடி - பொருந்திய திரட்சி யையுடைய வளப்பமான மிளகுக்கொடி, (கோல் - திரட்சி, 'ஆய்கோல் அவிர்கொடி' மதுரைக் காஞ்சி, அடி. 563.) இனி, 'ஆய்கோல் மிளகு' எனப் பிரித்துச் சிறிய திரண்ட மிளகு என்று பொருள் கூறலுமாம். ஆய் - சிறுமை, ('ஆய்நுதன் மடந்தை' புறநானூறு, செ. 249, அடி, 10.) தூஞ்சு புலி வரிப்புறம் தைவ ரும் - தூங்கும் புலியினது கீற்றுக்களை உடைய முதுகைத் தட விக் கொடுக்கும், (மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகள் எமக் கோர் கடவுள் அல்லளோ? அவள்,) எம் பதத்துச் சொற்குறை எளியள் அல்லள் - எம்போல்வார்களால் குறையை உணர்த்துதற் குரிய எளிமையையுடையாள் அல்லள்.

(ககஎ) நுமர் - உம்முடைய சுற்றத்தார், (நீர் வள நாட் டிடை மன்னு செல்வர்; எமர் கொல்லியஞ்சாரல் குறவர்கள்; இவற்றால் உமக்கும் எங்கட்கும் பெரிதும் வேறுபாடு உளது. ஆதலின்,) நடை மன்னும் என்று - இவ்வொழுக்கம் (இருவர்க்

கும்) ஒக்கும் என்று எண்ணி, ('நீர் எம்மை வந்து நண்ணன்மின்,' என இயைக்க.)

(ககஅ) சேவூர் - சேவூரின்கண், வானவன் தானுடை. மான் இணைய - சேர மன்னன் தன் அன்பிற்குரியவளாகக் கொண்ட மான் விழி போலும் விழியையுடைய மனையாள் வருந் தும்படி, அமர் செற்று - அவனது போர்த்திறனை அழித்து (அன்றி, அவனைப் போரில் வலி கெடச் செய்து என்றலுமாம்.), புறங்கண்ட - அவன் முதுகிடச் செய்த, (கொற்றவஞ்சிய மாறன் எனவும், சேவூரின்கண் அமர் செற்றுப் புறங்கண்ட மாறன் எனவும் இயைக்க.) 'சொல்லின் தமக்கு உற்றவர், ஒள் புனல் நாட்டு அறு செல்வர்; ஆய்வு இடின் - (நீர்) ஆய்தலைச் செய் யின், மற்று எமர் குடக்கொல்லி வாழுங் குறவர்கள்,' என இயைக்க.

(ககக) 'இழை வளர் பூண் அண்ணலே! நீ, ஈர்ம்புனல் நாடனை; எமர் குழை வளர் ஆரத்து அருவியஞ்சாரல் குறவர்கள். குழை வளர் ஆரத்து - தளையையுடைய மூங்கிலையும், அருவி அம் சாரல் - அருவியையும் அழகையும் உடைய சாரல்.

பக்கம், 113:—'இவளே, கானம்' என்னுஞ் செய்யுள்:

இவள் - உன்னால் காதலிக்கப்பட்ட இவள், கானம் நண் ணிய காமர் சிறுகுடி - (கடற்கரைச்) சோலை பொருந்திய அழகிய சிறு குடியில் உறைகின்றவர்களாகிய, நீல் நிறப் பெருங்கடல் கலங்க - நீல நிறத்தையுடைய பெரிய கடலும் கலங்கும்படி, உள் புக்கு - (கடலின்மேற் செலுத்தப்படும் கட்டு மரங்களிற்) கடலுக்குள்ளாகச் சென்று, மீன் எறி பரதவர் மகள் - (வலை வீசி) மீனைப் பிடிக்கின்ற பரதவர் பெண்ணுவள், நீ நெடுங் கொடி தூங்கும் - நீ நெடிய கொடிகள் (காற்றால் அசைந்து) மூடங்கும், நியமம் மூதூர் - கடைத்தெருக்களையுடைய பழைய ஊரின்கண் உள்ள, கடிந்தேர்ச் செல்வன் - விரைந்து செல் லும் தேரினையுடைய செல்வனுடைய, காதல் மகன் - அன்புக் குரிய மைந்தனுவாய்,(ஆதலின், உங்கள் இருவர்நிலைக்கும் பொருத் தமில்லை.) நிணச்சுரை அறுத்த - நிணத்தையுடைய சுரை மீனை அறுத்த தசைகளை (அறுத்த - பலவின் படர்க்கை வினையாலணை யும் பெயர்), உணக்கல் வேண்டி. - காயவைத்தல் வேண்டி, இனப் புள் ஓப்பும்-(வெயிலிற்போட்டு) அவற்றைக் கூட்டமாகியகாக்கை கள் கவராதபடி அப்பறவைகளை ஓட்டிப் பாதுகாக்கின்ற, எமக்கு

நலன் எவன் - எங்கட்கு நின் சிறந்த நலன் எதற்காக வேண்டும், புலவு நாறுதும் - (சுறுமீனை அறுத்துப் பரப்புதலால்) யாம் புலவு நாற்றம் நாறுகின்றோம், செல நின்றீமோ - (இந்நாற்றத்தை நீ பொறுத்து ஆகலின், எம் அருகில் வாராமல்) சேய்மைக்கண் நில் (ஈயும் மோவும் முன்னிலைக்கண் வரும் அசைகள்; றகரமெய் ஆண்டு ஈகாரம் நிற்றற்கு வந்த மெய்.), பெருநீர் விளையுள் எம் சிறு நல் வாழ்க்கை - கடல் நீராகிய விளை வயலையுடைய எம்முடைய சிறிய நல்ல வாழ்க்கையானது, புரைவதோ அன்று - (நும்மோடொக்க) உயர்வு உடைத்தோ அன்று; எம்மனோரிற் செம்மலும் உடைத்து- எம்மைப் போன்ற பரதவர்களில் (நின்னைப் போன்ற) செல்வர் களையும் (எங்கள் மரபு) உடைத்தாயிருக்கின்றது.

பக்கம், 113:—'நீடுநீர்க் கானல்' என்னும் செய்யுள்:

'ஐய! நெருநலும் நித்திலங்கொண்டு நீடுநீர்க் கானலின் கண் வந்தீர்; யாம் எம்மூரில் இவற்றுற் குறைவிலம். ஆதலின் கழங்கும், அணிவிளக்கும், அம்மனையும், பாடிய வைப்பனவும், பந்தாடப்படுவனவும், பிறவும் எல்லாம் பனிநீர் முத்தம்,' என இயைக்க. பாடிய - பாட.

பக்கம், 114:—'முன்னைத்தம் சிற்றில்' என்னும் செய்யுள்:

முன்னைத்தம் சிற்றிலானது ஓதக்கடலில் மூழ்கிப் போகக் 'கடலே, அன்னைக்கு உரைப்பன்; அறிவாய்,' என்று அலறிப் பேரும் தன்மை மடவார் எனவும், வெண் முத்தம் கானலின் கண் போவாரைப் புன்னை அரும்பு எனப் பேதுறுக்கும் புகாரே எம்மூர் எனவும் இயைக்க. (இதனால் 'நீர் கையுறையாகக் கொணர்ந்த முத்துக்கள் எம்மூரில் இல்லாதனவல்ல. எம்மூரிலே அவை மிகுதியாக உண்டு,' என்பதைத் தலைவனுக்குத் தோழி தெரிவித்தமை நன்கு விளங்குதல் காண்க.)

(கஉ0) 'கொல்லித் தண் புனத்து (வந்து) வேழம் வினவுதிர்; மென்பூந்தழையும் கொணர்ந்து நிற்றிர்; (தண்புனத்தை) அணைந்து அகலிர், ஆழம் உடைய கருமத்திர் போல்திர்,' என இயைக்க. ('நீர் கருதி வந்தது யாதோ?' என்பது எஞ்சி நின்றது.) சோழன், சுடர்முடி வானவன் (சேரன்), தென்னன் (பாண்டியன்) எனக்கூறியது துன்னுத மன்னர் தாழ உரும் எந்திய கோணுகிய இவன் சோழனுடு சேரனுடு பாண்டிநாடு என்னும் மூன்நாட்டின் கண்ணும் தன் ஆணையைச் செலுத்தியவன் என்பதை விளக் கிற்று.

(கூஉக) 'கொய்புனத்துள் ஏவுற்ற புண்ணேறு மான் வந்ததோ? என்னும் ஈர்ஞ்சிலம்பா, நின் கைவார் தழை மாவுற்ற புண்ணிற்கு இடு மருந்தோ?' என இயைக்க. (மா-ஈண்டு மான்)

(கூஉஉ) '(மாதர்களின்) வேல் நக நீண்ட கண் நாளும் விரும்பும் கண்ணியாய்,' எனவுப், 'சுரும்பு அரற்றவும், தேன் நகவும் வண்டு ஆர் கண்ணி,' எனவும், 'நீண்ட கண்ணி' எனவும் இயைக்க. தேன் நக - தேன் (வெளி வார்த்து) விளங்க, சிறிது உண்டு - (நின்பாற் சொல்ல வேண்டியது) சிறிது உண்டு. ('நீ கொணர்ந்த இக்கமழ் தழையைக் கொல்லியாகிய மால் வரை வாய்க் கானக வாழ்நரும் கண்டறிவார்,' என்க.)

(கூஉங) 'கடியார் கமழ் கண்ணியாய், இக்கொய்தழையையான், துடியார் இடையையும், வடிவேற் கண்ணையும் உடைய மடந்தைதன் சொல் அறிந்தாற் கொள்வல்,' என இயைக்க. கடி ஆர் - விளக்கம் அமைந்த (கடியார் கண்ணி என்க. அன்றிக் கடியார் என்பதைக் கண்ணியானுக்கு அடையாக்கி, 'உலகக் காவலையுடைய கண்ணியாய்,' என்று கூறியதாகக் கொள்ளுதலு மாம்.) (வடியார்-வடித்தல் பொருந்திய, [கூர்மையாக்கப்பட்ட] வேல் எனவும், இலங்கு இலை வேல் எனவும் இயைக்க.)

(கூஉச) அம் கேழ் - அழகிய நிறத்தினையுடைய, (அலர் நறுங்கண்ணியினுய்!) இருஞ்சிறைவாய் - (பகைவர்களின்) பெரிய மதிலினிடத்து, செங்கேழ் - செவ்விய ஒளியினையுடைய, அயில் நலம் கொண்டவன் - வேலினது நன்மையைக் கொண்டவன் (வேலால் அடைதற்குரிய வெற்றியைப் பெற்றவன்), செங்கேழ் மலர் இன்தளிர் - செந்நிறத்தினையுடைய மலர்களையும் (காட்சிக்கு) இனிய தளிர்களையும் உடைய, (இளம் பிண்டி என்க.) 'நீத்தழையை (நீ) அருளித்தரினும், எங்கேழ் அவருக்கு இயைவன போலா,' என இயைக்க. எம் கேழ் அவருக்கு - எம்முடைய (நல்) நிறத்தினையுடைய தலைவியாருக்கு, இயைவன போலா - ஏற்பனவாகத் தோன்றில. (தழை - பால் பகா அஃறிணைப் பெயராகலின், பன்மை முடிபேற்றது. 'தழைகள் போலா,' என்க.)

(கூஉஞ) வேரித் தடந்தொங்கல் அண்ணல்! (அண்ணல் - அண்மை விளி.) பாரித்த - (போர்க் களத்திலே சேனைகளைக் கொண்டுவந்து) பரப்பிய, பறந்தலைக்கு ஓடிப்படப் பரிமா வாரித்த - பறந்தலையின்கண் வீரங்கெட்டுத் தோற்றோடத் தன்

குதிரையைச் செலுத்திய, (ஓடிப்பட என்பதைப் 'பட்டோட' என விகுதி பிரித்துக் கூட்டுக.) 'அண்ணலே, நீ விருந்தாய் இருந்தமையால், மாந்தழையை ஏழை தன் பூரித்த மென்முலைமேற் பூணியில் பொல்லாது ஆம்,' என இயைக்க. கொல் - அசை. ('புதியவனுகிய நீ அளிக்கும் தழையை எங்கள் தலைவி பூணியின் தீமையுண்டாம்,' என்பது பொருள். பலரும் பழிப்பர் என்பது கருத்து.)

(கஉசு) (இன்தேன் அகலாப்பூமாண் கமழ் கண்ணியாய்!) நின்றது ஒன்று உண்டு - உனக்குச் சொல்ல வேண்டியதாய் அமைந்த செய்தி ஒன்றுளது. நீ ஏந்தி வந்த இத்தேந்தழையை (நான் ஏற்றுக்கொள்வதேயன்றி எங்கள்) ஏமாண் சிலை நுதல் ஏழையும் ஏற்கும்; (ஏற்றுக்கொள்வள் ஆயின்) இது (எங்கள்) பூழியர் கோனுகிய பராங்குசனது கொல்லிப்பணிவரைவாய்த் தேமாண் பொழிலின் அகத்தன்றி இல்லை. ('எங்கள் மலையகத்துத் தழையை யான் கொண்டு சென்று எங்கள் தலைவியினிடம் நீ தந்தனவென்று சொல்லிக் கொடுத்தல் தகுதியாகாது,' என்று தலைவனுக்குத் தோழி கூறினள் எனக் கொள்க.)

(கஉள) 'இருந்தண் சிலம்பா! இச்சந்தனத்து ஈர்த்தழை, எம் நிலத்து எம்மலைமேல் இருப்பனவாகும்: (ஆகலின், எங்கள் நிலமாகிய) இந்நிலத்து இம்மலைமேலவாகிய இத்தழைகளை (நீ தந்த கையுறையாக ஏற்றல்) ஒவ்வாது,' என இயைத்துக் கொள்க. ('ஒவ்வாது' என்பது ஈறு தொக்கு 'ஒவ்வா' என நின்றது.)

பக்கம், 117:—'அருள்புரி நெஞ்சமோடு' என்னும் செய்யுள்:

அருள் புரி நெஞ்சமோடு - (நம்மேல்) அருள் அமைந்த மனத்தோடு, எஃகு - வேல், வந்தோன் - தலைவன் (வீணையாலணையும் பெயர்.) தந்த நீ-தலைவனுடு என்னைக் கூடுவித்த நீ, ஆனு-நீங்காத, அரும்படர் - அரிய துன்பத்தை, 'தோழி! வந்தோன் தவறு உடையனும் அல்லன்; தந்த நீ தவறுடையையும் அல்லை; யானே தவறுடையேன்,' என இயைக்க.

(கஉஅ) 'கன்னி வார்த்துறைவாய்ப் பந்தார் விரலியாகிய இத்தடங்கண்ணி தன் பாவைக்கு வேண்ட ஒருவர் பைம்போது தந்தார்; தர, அவை கொண்டு அணிந்தாள்,' என இயைக்க.

(கஉக) 'வையை நாடனையாள் ஆகிய இத்தடங்கண்ணி, அங்கோர் காளையைக் கண்டு, கண்போல் குவளையம்போது இரப்ப,

அவன் (அத்)தண்போது கொடுத்தான் ; அணிந்தாள்,' என இயைக்க.

(கஉ0) 'வரைவாய்த்தறுகல் புனமும் சிதைத்து எங்கள் தம்மையும் தின்ன வந்த சிறு கண் களிறு கடிந்து இடர் தீர்த்த சிலம்பனே இப்பேதை உறு கற்புடைமையின் உள்ளும்,' என இயைக்க.

(கஉக) 'பொதியில் புனஞ்சேர் தினையும் கவர்ந்து எம் மையும் போகா வகை புகுந்த சினஞ்சேர் களிறு கடிந்து இடர் தீர்த்த சிலம்பனைக் கனஞ்சேர் மூலை மங்கை இப்போதும் உள் ளும்,' என இயைக்க.

(கஉஉ) 'வையை(யின்)வீங்கிய தண்புனல் ஆடி (அதில்) விளையாட்டயர் பொழுதில் தேங்கிய தெண்திரை (நின் சேயிழை யாளை) வாங்க (அடித்துக்கொண்டு செல்ல) நின் சேயிழையாள் ஒழுகி நீங்கிய போது (அந்நீரில் அகப்பட்டு ஆதரிப்பார் இல்லா மல் தவித்துக்கொண்டு சென்றபோது) ஓர் நெடுந்தகை வந்தருள் செய்தனன்,' என இயைக்க.

(கஉங) 'வையைத்துறைவாய்ப் பொன்னுர் புனல் எம்மை வாங்கும் பொழுது அங்கொர் பூங்கணை வேள் அன்னன் ஒரு வன் அணைந்து எமக்குச் செய்த ஆர் அருளை யாமும் சின்னளும் மறந்திலம்,' என இயைக்க.

பக்கம், 121:—'காமர் கடும்புனல்' என்னுஞ் செய்யுள்: (என்தோழி,) எம்மோடு கலந்து - எங்களோடு கூடி, காமர் கடும்புனல் ஆடுவாள் - விருப்பத்தையுடைய மிக்க விரைவினை யுடைய நீரை ஆடாநின்றவள், தளர்ந்து அஞ்சி-கால்கள் தளர் தலாலே அஞ்சி, தாமரைக்கண் புதைத்து அதனோடு ஒழுகலால்- செந்தாமரை மலர்போன்ற கண்களைப் புதைத்து அந்நீரிலே போகையினாலே,(ஒரு தோன்றல் அருளினால் தன்) தீர்நாகம்நறும் பைந்தார் தயங்கப் பாய்ந்து - நீண்ட சுரபுன்னை மலர்களாற் கட் டப்பட்ட நறிய குளிர்ந்த மாலையசையும்படி அந்நீரிலே குதித்து, பூண் ஆகம்-அணிகளை அணிந்த இவளது மார்பை, உறத்தழீஇப் போதந்தான் - (தன்னுடைய மார்போடு) பொருந்தத் தழுவிக் கொண்டு வந்து கரையிலே போகவிட்டான், அகன் அகலம் - (அவனுடைய) அகன்ற மார்பை,வரும் முலை-(இவளுடைய) வள ரும் முலைகள், புணர்ந்தன என்பதனால் - கூடின என்று பிறர் சொல்லும் சொல்லாலே, அருமழை தரல் வேண்டின் தருகிற்

கும் பெருமையள் - நமக்கு அரிய மழையை நாம் பெய்வித்க விரும்பினால் (அவள்) அதனை நமக்குத் தர வல்ல கற்பின் பெருமையை உடையவள் ஆயினள்.

(கஉச) 'வல்லத்தின் தென்னற்குப் (பாண்டியனுக்கு) மாறாய் எதிர்ந்த காரணத்தால் உயிர்நீங்கிய பகைவர்களின் உடல் அவன் கைவாளால் அறுபட்டது போல மறியை அறுத்து உண்பித்து வெறி அயர்ந்து தண்ணிய தாரை அணிந்த முருகனை வருவிக்கின்ற வேல (பூசாரியே!) நின் மிக்க பலியைத் தண்ணிய அழகிய சிலம்பனது (தலைவனது) ஒள்ளிய தாரை அணிந்த மார்பும் உண்ணுமோ?' என இயைக்க. (கொல்-அசை.) வெறி அயர்ந்து-வெறியாடி, உடலின் - இதில் இன் ஐந்தனுருபு, ஒப்புப்பொருளில் வந்தது. மறி - ஆட்டுக்குட்டி.

பக்கம், 122:—'முருகயர்ந்து வந்த' என்னும் செய்யுள்:

முருகு அயர்ந்து வந்த-முருகனை வழிபட்டு வந்த, முதுவாய் வேல - பேச்சு முதிர்ந்த வாயையுடைய வேலனே, சினவல் ஓம்பு - கோபித்தலை விடுவாயாக, வினவுவது உடையேன் - யான் நின்னைக் கேட்பது ஒன்றை உடையேன், வேறு பல் உருவின் - வெவ்வேறுகிய பல நிறத்தினைக்கொண்ட, சில் அவிழ் மடையொடு-சில சோற்றையுடைய பலியுடன், சிறு மறிகொன்று-சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, இவள் நறுநுதல் வீவி - இத் தலை மகளின் அழகிய நெற்றியைத்தடவி, வணங்கினை கொடுத்தியாயின் - (அக்கடவுளை) வணங்கிப் பலியாகக் கொடுப்பாயானால், அணங்கிய - (இவளை) வருத்திய, விண் தோய் மாமலைச் சிலம்பன் - வானத்தை அளாவிய பெரிய மலையையுடைய தலைவனது, ஒண் தார் அகலமும் - ஒள்ளிய மாலையை அணிந்த மார்பும், பலி உண்ணுமோ - நீ கொடுக்கும் அப்பலியை உண்ணுமோ?

(கஉடு) வேர் அணங்கும் - மனத்தின் அடியிடமும் தோய்ந்து வருத்தும், (இளமெல் முலையாட்கு), இருந்தண் சிலம்பன் தார் அணங்கு ஆவது அறிந்தும் - பெரிய குளிர்ந்த மலையையுடைய தலைவனுடைய மாலை வருத்தத்தைச் செய்வதாயிருத்தலை (இச்செவ்வேள்) அறிந்திருந்தும், வெறியின்கண் தாழ்ந்தமையால் - வெறியாட்டின்கண் வந்து பொருந்தினமையால், ஆர் அணங்கு ஆயினும் ஆக - அரிய தெய்வம் ஆயினும் ஆகுக; இச்செவ்வேள் அறிவிலனே - இம்முருகன் அறிவில்லாதவனே.

(கஉசு) மின் அணங்கு ஈர் இலை வேல் - (ஒளியால்) மின்னலை வருத்துவதும் (பகைவருடலைப்) பிளப்பதும் அச்ச வடிவானதுமாகிய வேலையேந்திய (தென்னர்கோன் என்க), (இச்செவ்வேள் தன் அணங்கு அன்மை அறிந்தும் வியல் நாட்டவர் முன் வெறியின்கண் தாழ்ந்தமையால்) அணங்கு மன் ஆயினும் ஆக - தெய்வங்களுக்குத் தலைவனுமாக, இச்செவ்வேள் மகியிலனே - இம்முருகன் அறிவில்லாதவனே.

பக்கம், 123:—'கடவுட் கற்சுனை' என்னும் செய்யுள் :

முருகே - முருக வேளே! கடவுள் கல் சுனை - கடவுள் தன்மையையுடைய மலையில் உள்ள சுனையில், அடை இறந்து அவிழ்ந்த - இலைகளை விலக்கிக்கொண்டு மேலே எழுந்து மலர்ந்த, பறியாக்குவளை மலரொடு - கொய்யாத குவளை மலர்களைக் கொய்து அவற்றோடு, குருதிக் காந்தள் ஒள்பூ - குருதியைப் போன்ற நிறத்தினையுடைய ஒள்ளிய மலர்களை, உருகெழுக்கட்டி-வடிவு விளங்கக் கட்டிச் சூடி, அருவி இன் இயத்த - அருவியாகிய இனிய வாச்சியம் ஒலிக்க, பெருவரை அடுக்கம் - பெரிய மலையின் பக்கங்கள் எல்லாம், பொற்ப - பொலிவு பெற, சூர் மகள் ஆடும் நாடன் - சூரர்மகள் ஆடாநிற்கும் நாடனது, மார்பு தர வந்த - மார்பு தந்ததனால் வந்த, படர்மலி - (தலைவி) கருதலிற் குறைபாடில்லாத, அருநோய்-நீக்குதற்கு அரிய இக்காதல் நோயானது, நின் அணங்கு அன்மை அறிந்தும் - நின்னால் வந்த நோய் அல்லாமையை நீ அறிந்திருந்தும், அண்ணாந்து - தலை நிமிர்ந்து, கார் நறுங்கடம்பின் - கார் காலத்து மலரும் நறிய கடப்ப மலர்களால் ஆகிய, கண்ணி சூடி - மாலையைச் சூடி, வந்தோய் - வந்தனை (இது வினையிடத்து ஈற்று ஆகாரம் ஓகாரமானது. இங்ஙனம் வினையிடத்து வருதல் சிறு பான்மையாம். 'பெயர்வினையிடத்து' என்னும் நன்னூற் பொதுவியற் சூத்திரத்தின் விசேட உரையில் 'வினையாலணையும் பெயரிடத்தல்லது, வினையிடத்து ஆ ஓ ஆதல் சிறுபான்மை எனக்கொள்க,' என அதன் உரையாசிரியர்கள் கூறியதை ஈண்டு நோக்குக.) கடவுள் ஆயினும் ஆக - நீ தெய்வமாயினுமாக, மன்ற மடவை - நீ திண்ணமாக அறிவின்மையையுடையை, வாழிய - நீ நெடுங்காலம் இம்மடமையோடு வாழ்வாயாக. (மன்ற என்பது தேற்றப் பொருள் தரும் இடைச்சொல். இஃதப்பொருளினதாதலை, 'மன்றவென்

ளெவி தேற்றஞ் செய்யும்' [தொல். சொல். இடையியல், சூ. 17.] என்னும் சூத்திரத்தான் அறிக.)

(கஉஎ) 'இறை வாய் அணி வளையாய்! இரவினெல்லாம் துறைவாய் இளம் புன்னீமேல் அன்னம் ஒன்றும் துயின்றில; என்னீ?' என இயைக்க. கொல் - அசை. ஒன்றும் துயின்றில - சிறிதுபோதும் தூங்கிற்றில.

(கஉஅ) இரண அந்தகன் - பகைவர்களுக்கு யமனைப் போன்றவன் (இரணம் - பகை), இரணந்தகன் அறியுந் தமிழ் என்க. அறியுந் தமிழ் - ஆராயுந் தமிழ், பால் நின்ற இன் தமிழ்- பாலிற் பொருந்திய இனிமையைப் போன்ற இனிமையையுடைய தமிழ். 'இன் தமிழ் அண்ண நல்லாய்! நம் பைங்கானலின் வாய்த் தூ நின்ற மெல் சிறை அன்னம் இன்று ஒன்றும் துயின்றில,' என இயைக்க. இதில் 'அன்னந் துயிலாமைக்குக் காரணம் என்னீ?' என்பது எஞ்சி நின்றது.

பக்கம், 127:—'புன்னை நனைப்பினும்' என்னும் செய்யுள்:

'கடலோதம்' என்பதை 'ஒதக்கடல்' என மாறுக. இஃது அண்மை விளி. 'என் தோழி நடையொக்கும் அன்னத்தை நனையாதி; வாழி,' என இயைக்க.

பக்கம், 127:- 'அரவஞ மென்தோள்' என்னும் செய்யுள்:

ஈர்ங்கதிர்த்திங்காள்! இரவெலாம் நின்றுய்; (அங்ஙனம் நின்றிருந்தும்) 'கரவலம்' என்று (கூறி) அரவஞ மெல் தோளாளர் அனுங்கத் துறந்தாரைக் கண்டகதில (என்னே),' என இயைக்க.

(கஉக) 'அளிய என் சிந்தனீயே! ஒளியார் திருநுதலாளை எளியள் என்று உன்னி வந்து விளியா வருந்துயர் செய்தமையால் மாறன் கடிமுனீமேல் தெளியா வயவரின் தேய்வாய்,' என இயைக்க.

(கசஅ) 'அளிய என் சிந்தனீயே! ஏரார் குழல் மடவாளை எளியள் என்று உன்னி வந்து தீரா விழுமம் தந்தாய்; ஆதலின், மாறன் கழல் பணிந்து சேரா வயவரில் தேய்வாய்,' என இயைக்க.

பக்கம், 128:—'குணகடல் திரையது' என்னும் செய்யுள்:

நெஞ்சே - மனமே! குணகடல் திரையது - கீழ் கடலின் கரையின் அருகில் உள்ளதாகிய, பறைதபு நாரை - (மூதுமை யால்) சிறகுகள் நீங்கப்பெற்ற நாரை, திண்தேர்ப் பொறையன் - திண்ணிய தேரையுடைய சேரனது, தொண்டித்துறைமுன் - (மேல் கடற்கரையில் அமைந்த தொண்டி என்னும் பட்டினத்

தின் கடற்றுறையின்மூன் உள்ள, அயிரை அரு இரைக்கு - அயிரை மீனுகிய பெறுதற்கு அரிய இரையைப் பெறுதற் பொருட்டு, அணவந்தது ஆங்கு-தலையை மேலே எடுத்தாற்போல, சேயள் அரியோள் - நெடுந் தூரத்தில் உள்ளவளும் பெறற்கு அரியவளுமாகிய தலைவியை, படர்தி - நினைத்தாய், நோயை - நீ துன்பத்தையுடையாய், நோய்ப்பாலோய் - துன்பத்திற்குக் காரணமாகிய ஊழ் வினையையுடையாய்.

(கசக) 'இன்று எங்கள் ஆடு இடம், மருள்போன்ற சிறகு களையுடைய வண்டுகள் பாட, நிலவு அன்ன வார் மணல் மேல் இருள்போல் நிழல்பு ஆய் அறிந்தார்கட்கு ஈர்ந் தமிழின் பொருள் போல் இனிதாய், பொதியிலின் கோனது அருள்போல் குளிர்ந்து அன்னமும் துன்னும் நீர்த்து,' என இயைக்க. வண்டின் சிறகுகள் கருநிறங்கொண்டு தம்பாற்பல புள்ளிகள் மயங்கப் பெற்றிருத்தலின் அவற்றை 'மருள்போல் சிறை' என்றார். நிழல்பு - நிழலைச் செய்து, வினையெச்சம்; 'ஆய் அறிந்தார்' என்பது வரிப்புனை பந்துபோல நின்றது. ஆய் அறிந்தார்கட்கு - ஆராய்ந்து அறிந்தவர்கட்கு.

(கசஉ) எங்கள் ஆடு இடம், தொண்டி வண்டு ஆர் புன்னைத் தூ மலர்கள் தாவிய வெண்மணற்றுய், அறிந்தார்கட்குத் தண் தமிழின் ஆவியும் போல இனிதாய் உளது,' என இயைக்க. தமிழின் ஆவி - தமிழ் நூற்களின் உயிர். (ஈண்டு உயிர் என்றது அகமும் புறமுமாகிய பொருள்களை; இடம் நோக்கி அகப் பொருளை என்றலுமாம்.)

(கசஙு) 'பஞ்சுறை தேர் அல்குலாய்! யான் சென்று காந்தளம்போது தருவேன்; (அப்போதுகள் உள்ள) நேரி நெடுவரை வாய் மஞ்சுறை சோலையின்கண் தெய்வம் வளாய் மேவும் வரையகம்; ('ஆதலின், அது நீ வருதற்குரிய பான்மையது அன்று,' என இயைக்க.) தெய்வம் வளாய் மேவும் - தெய்வங்கள் தம்மிற் கலந்து பொருந்தியிருக்கின்ற.

(கசச) 'விரி கோதை நீ இங்கு நில்; யான் சென்று, தீவிரி காந்தள் தருவேன்; கொல்லி சூழ்ந்த வரையகமாகிய அங்கு உள்ள பூவிரி வார்பொழில், தெய்வம் உடைத்து; (ஆதலின், அது) நின்னுல் வரற்பாற்று அன்று,' என இயைக்க.

பக்கம், 130:-'செங்களம் படக்கொன்று' என்னும் செய்யுள்:

(தோழி!) யான் சென்று காந்தட் பூவைக் கொணர்ந்து தருவேன்;) குருதிப் பூவின் குலை - சிவப்பாகிய பூங்கொத்துக்களைக் கொண்ட, காந்தட்டு - காந்தளையுடையதாகிய (குன்றம்), செங்களம்பட - (போர்க்களம் இரத்தத்தாற்) சிவந்த களமாகும்படி, அவுணர்க்கொன்று தேய்த்த - அசுரர்களைக் கொன்று இல்லையாக்கிய, செங்கோல் அம்பின் -(இரத்தத்தாற்) சிவந்த திரண்ட அம்பினையும், செங்கோட்டியாழை - (இரத்தத்தாற்) சிவந்த கொம்பையுடைய யாழையையும், கழல் தொடி - கழல விடப்பட்ட வீரவளையையும் உடைய, சேய் குன்றம் - முருகவேளாகிய தெய்வத்தினது மலையாகும் ('ஆதலின், அது நீ வருதற்குரியது அன்று,' என்க.)

(கசஅ) 'குருமாமணி வண்ணனும் கோனும் ஆகிய நெடுமாறன்,' என்க. குருமாமணி வண்ணன் -நல்ல நிறத்தினையுடைய நீல மணி போன்ற திருமால், (மன்னர்கள் திருமாலின் அமிசம் பெற்றவர்கள் என்பது முன்னே கூறப்பட்டது.) 'என் சிந்தனை மாறன் குமரி முந்நீர் அருமாமணி திகழ் கானலின்வாய் வந்து அகன்ற கொண்கன் திருமாமணித் தேரொடுஞ் சென்றது,' என இயைக்க.

(கசசு) 'குமரிக் கருங்கழி மேய்ந்த வண்டானங்கள் (நாரைகள்) அன்னம் புரையும் நடையாள் புலம்பு எய்த அத்தம் என்னும் பொன் அம் சிலம்பில் கதிரோன் மறைதலும் போயின,' என இயைக்க. ('வண்டானங்கள் போயின,' என்க. ஆல்-அசை.)

(கசஎ) தன்னைப் புல்லாத மன்னர் பூலந்தை என்னும் ஊரின்கண் மருங்கு அழி குருதி நீரில் மூழ்கக்கண்ட (செய்த) பொருங்கழல் மாறனகிய எங்கோனுடைய தொண்டியின் கானலின்கண்ணுள்ள வண்டார் கருங்கழி மேய்ந்த அன்னம், கதிரொடும் (சூரியனோடும்) பெருங்கழியின்கண் (வைத்த) தம் காதன்மை நீங்கி இவனில் (இத்தலைவனைப் போலப்) பிரிந்தன. தலைவனை இவனில் என அண்மைச் சுட்டாற்கூறியது, அவன் தம் நெஞ்சினும் கண்ணினும் நீங்காமல் நிற்றலை நோக்கிற்றேயன்றி, அவன் அண்மையினிருத்தலை நோக்கியது அன்று: என்க. என்னெனின், அஃது அவன் அண்மையினிருத்தலை நோக்கியதெனின், தோழி குறிப்புப் பொருளின்றி வெளிறுபடக் கூறினள் என்பது படும். (இனி 'இவளைப் பிரிந்தன' என்

னும் பாடத்துக்கு 'இத்தலைவியைப் பிரிந்தன,' எனப் பொருள் கொள்க.)

(கசஅ) 'மண்மேல் பரந்து ஆயின சீர் அரிகேசரிக்கு அன்று அளகாட்டி உடைந்து போயின தெவ்வரின் கானலில் புள்ளினம் எம்மெல்லியலாளே வெந்தீ பாயின மாலைக்குக் காட்டிக்கொடுத்துப் போயின,' என இயைக்க. 'தெவ்வர்தம் படையொடு போயிஞற்போலப் புள்ளினம் தம் படையொடும் போயின,' என்க.

(கசகூ) 'எம் அன்னை நின்று கார்வண்ணன் போல் வண்ணன் காவிரி நாடனையாள் ஏர் வண்ணம் நோக்கி என்னையும் நோக்கினள்,' என இயைக்க.

(கநo) 'எம் அன்னை நின்று, உளம் அலையாமை திருத்தி - தங்கள் மனம் அச்சத்தினுல் அலையாமலிருக்கும்படி திருத்திக் கொண்டு, பொருவான் உடன்று எழுந்தார் - போர் செய்யக் கோபித்து எழுந்த பகை அரசர்கள், களம் - போர்க்களத்தின் கண், மலையாமைக் கடையல் வென்றூன் - (தன்னை எதிர்த்துப்) போர் செய்தல் மூடியாதபடி அவர்களைக் கடையல் என்னும் ஊரில் வென்றவனுடைய, கடல்தானை அன்ன வள முல்லைவான் முறுவல் தையல் - கடல்போன்ற சேனை பகை மன்னரை வெல்லுதற்குத் துணை புரிவது போலத் தன் காதலராகிய நீர் மன்ம தனை வெல்லுதற்குத் துணை புரிதற்குரியவளான எம்பெருமாட்டியின், ('ஆகத்து வந்து அரும்பும் இளமுலை நோக்கி என்னையும் நோக்கினள்,' என இயைக்க. 'வந்து அரும்பும்' என்பதை 'அரும்பி வரும்,' என மாற்றி இயைக்க; அரும்பி வளரும் என்பது பொருள்.)

(கநக) 'சிலம்ப! எம் பூம்புனம், மாறன் கடி முனைமேல் (வந்த) அயல் மன்னர் போலக் கொய்யப்பட்டு மாள்கின்றது; மன்னும் செயலாவது சொல்லாய்,' என இயைக்க. மன்னும் செயல் ஆவது - (அதனைத் தடுத்தற்குப்) பொருந்திய செயல் ஆகிய ஒன்றை.

(கநஉ) 'வெற்ப! பொன் தேர் திகழும் அணி வரைச் சாரல் புனத்தினை, இருஞ்சிறைவாய் மன் தேர் அழிய வென்றூன் முனைபோல் கொய்யப்பட்டு மாள்கின்றது; என் தேர் அழியாவகை என்னை?' என இயைக்க. மின் ஏர் திகழும் - மின்னலின் அழகோடு விளங்கும், மழை கால் கழிய - மேகம் நீர்த்தாரையைச்

சொரிதல் நீங்க, வியல் அறைவாய் - பெரிய மலையின்கண் உள்ள, பொன் நேர் திகழும் - பொன்னுக்குச் சமமாக விளங்கும், என் நேர் அழியா வகை என்னை - எனது நேர்மையாகிய செயல் கெடாமலிருத்தற்குரிய விதம் யாது?

(கநிஙு) 'பூம் பொதியிலாகிய வரையார் திணைப்புனம் கால் கொய்ய நல் நாள் வரைந்து நின்ற விரையார் மலர் இயல் வேங்காய்! நினக்கு விடை இல்லை,' என இயைக்க. நினக்கு விடை இல்லை - (இனி நாங்கள்) உன்பால் விடைபெற்றுச் செல்லுதல் இல்லை. (அன்றி, 'நினக்கு விடை இல்லையே,' என்று கொண்டு, 'நீ இவ்விடத்தினின்று நீங்கும்படி விடை கொடுத்தனுப்புவார் இல்லையே!' என்றலுமாம்.)

(கநிச) வான் உடையான் - இந்திரன், வஞ்சியர்தம் கோன் - சேரனது, உடையாப்படை - தோற்காத சேனை, 'கொல்லி வேங்காய்! நினக்கு விடை இல்லையே,' என இயைக்க.

(கநிரு) 'நல் நுதலாய்! நம் அரும்புனம், கொல்லி வேங்கையை மெல் அரும்பாகக் கொய்தல் அன்று செய்தாம் எனில் நிற்பது அன்றே? (அச்செயலை அன்று செய்யாமையின்) நாம் கன்று செய்தாம் அல்லம் (ஆயினேம்),' என இயைக்க.

(கநிசு) '(சிலம்பன்,) வலம்புனைவில்லோடு கொல்லிச் சாரலை நண்ணி, இருவிப்புனத்தைக் கண்டு வாடி நின்றால், வேங்கைச் செழும்பொழில் சிலம்பனை 'கையற்க' என்னுங்கொல்?' என இயைக்க. இருவிப்புனம் - கதிரை அரிந்த தாளையுடைய புனம்.

(கநிஎ) 'பூலங்தையின்கண் பெருங்கண்ணி சூடி வந்தார் படப்பொன் முடிமேல்வாகை இருங்கண்ணி அணிந்த எம்கோன்,' என்க. 'சிலம்பில் (எங்கள்) கருங்கண்களையுடைய தலைவி காக்கின்ற பைம்புனத்தைக் கால் கொய்ய நாள் வரைந்து கொடுத்த பெருங்கண்ணியாரை இன்னும் பொன் வேங்கை என்று பேசுவதோ?' என இயைக்க. பெருங்கண்ணியார் - பெருங்கண்களையுடையவர் (பெரிய வேங்கை மரம்), கணி - வேங்கை மரம், அது சிலேடைப் பொருளையும் எதுகையையும் நோக்கிக் கண்ணி என விரித்தல் விகாரம் பெற்று நின்றது.

(கநிஅ) 'மைக்கின்ற சாரலையுடைய விண் தோய் பொதியிலாகிய வரையக வாணர் பைங்கின்ற ஆடரவு ஏர் அல்குலாள் (இத்திணைப்புனத்தை விட்டுச்) செல்லும்படி நாளைப்பணித்தத் (திணை அறுத்தற்கு நாளைத் தெரிவித்த) இங்கின்ற வேங்கையைக்

குறைக்காமல் இளஞ்சந்தனத்தைக் குறைத்தனர்; (ஆகையால், அவர்) மடையரே,' என இயைக்க. வினயம் - தருமம்; வினையச் சரத்தன் - தருமத்தைக் காக்கும் கணைகளையுடையவன்.

(கருகு) 'பூஞ்சிலம்பா! வாள் கண் மடந்தை திறத்திட்டு அறந்திரிந்து நின்கண் பொய் ஒன்று நிகழும் என்றால் இவ்வியல் இடம் பின்னை மெய் ஒன்றும் இன்றி ஒழியும்,' என இயைக்க. (கொல், ஓ - அசைகள்.)

(கசுo) டால் திரை இரும்புனல் சேவூர்-பாற்கடலைப்போல் பல நலங்களுக்கு இடமாகிய மிக்க நீரையுடைய சேவூர், வண்டு ஆர் விரைப்பால் நறுங்கண்ணியாய் - வண்டுகள் மொய்க்கப்பெற்றதும் வாசனைக்கு இடமானதுமாகிய நறுங்கண்ணியை உடையாய்! 'வையை அன்னாள் திறத்து நீ பொய்ம்மை சொல்லின் இவ்வுலகினுள் மெய்ம்மை என்பதை உரைப்பவர் இனிப் பிறர் யாவர்?' என இயைக்க. திரை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கடலைபுணர்த்தியது ஆகுபெயர். கொல், ஓ - அசைகள்.

பக்கம், 136:— 'வெள்ளி விழுத்தோடி' என்னும் செய்யுள்:

ஊர்க்குறு மகளிர் - ஊரில் உள்ள சிறு பெண்கள், வயின் வயின் - பல இடங்களிலும், காஞ்சி மீமிசை - காஞ்சி மரத்தினது நிழலிலே, தமர் வளம்பாடி-தம் சுற்றத்தவர்களுடைய மேன்மைகளைப் பாடி, மீன் சினை அன்ன - மீனினுடைய முட்டையைப் போன்ற, வெள் மணல் குவைஇ - வெண்மையாகிய மணலைக் குவித்து, வெள்ளி விழுத்தொடி - வெண்மையாகிய வளையைப் போன்ற கணுக்களையுடைய, மெல் கரும்பு உலக்கை - மெல்லிய கரும்பாகிய உலக்கையினால், வள்ளி முண் இடை நுடங்க - தங்கள் கொடியைப் போன்ற நுண்ணிய இடை துவளும்படி, குறு வழி - குற்றம் வழியில் உள்ள நீர் நிலைகளில், ஆரல் அருந்திய - ஆரல் மீனை உண்ட, சிறு சிரல் - சிறிய சிச்சிலிக் குருவி, மருதின் தாழ் சினை உறங்கும் - மருத மரத்தினது நீண்ட கிளைகளிலே துயிலும், தண் துறை ஊர - குளிர்ந்த நீர்த் துறையை உடைய ஊரரே, அனைய பெரியோர் ஒழுக்கம் - உயர்ந்த குணஞ் செயல்களால் தம்மைத்தாமே ஒப்பவராகிய பெரியோர்களின் ஒழுக்கங்கள், விழையா உள்ளம் - (அறத்தின் புறத்தவாகிய) பொருள்களை விரும்பாத (தங்களுடைய) மனம், விழைவது ஆயினும் - விரும்பும் தன்மையை உடையனவானு

லும் (விழைவது என்பது பன்மையில் ஒருமை மயங்கியது), என்றும் - எப்பொழுதும், கேட்டவை - தாங்கள் கேட்ட நூற்பொருள்களை, தோட்டியாக - அங்குசமாகக் கொண்டு, அங்கு மீட்டு - தங்கள் மனங்களாகிய யானைகளை அவை சென்ற அவ்வாறுபிகந்த வழியினின்று மீட்டு, அறனும் பொருளும் வழாமை நாடி - அறம் புரிவதினும் பொருள் ஈட்டுதலினும் தவறுதல் உண்டாகாத வழியை ஆராய்ந்து, தன் தகவு உடைமை நோக்கி - (செய்ய) முன்னியதன் தகுதி உடைமையை எண்ணி (அறிந்து), அதன் பின் - அங்ஙனம் எண்ணி அறிதலின் பின்னரே, முன்னியது முடித்தல் ஆகும்-(தாங்கள் செய்ய) எண்ணியதைச் செய்து முடித்தல் உளதாம், அதனால் - ஆதலின், அரிய பெரியோர்த் தேருங்காலை-பிறர்பாற் காணற்கரிய பெருமையாகிய குணம் செயல்களையுடையவர்களை ஆராயுமிடத்து, தும் ஓர் அன்னோர் - நும்மை ஒப்பவர் ஆவர், நும் மாட்டும்-அத்தன்மையராகிய நும்மிடத்தும், இன்ன - இத்தகைய, பொய்யொடு மிடைந்தவை தோன்றின் - பொய்யோடு கூடிய சொற்கள் உளவானால், இ உலகத்தான்-இந்த உலகத்தின்கண் (ஏழன் உருபில் மூன்றன் உருபு மயங்கியது), மெய் யாண்டு உளது - மெய்யானது மற்றியாரிடத்தில் உளதாகும்? ஓ - அசை, ஏ - ஈற்றசை.

(கசுக) அணங்கி வரா மன்னர் - (தன்னை) விரும்பி வராத வேந்தர்கள் (வந்து அணங்கா என்பதனை அணங்கி வரா என விகுதி பிரித்துக் கூட்டுக), கந்து அணங்கு ஆம் மதயானைக் கழல் மன்னன் - யானை அணை தறி வருந்துதற்குக் காரணமான மதத்தையுடைய யானையையும் (பாதத்தில் அணிந்த) வீர கண்டையையும் உடைய அரசனது, (தழல் போல் விரியும் கொந்து என்க.) கொந்து - பூங்கொத்துக்களையும், அணங்கு - தெய்வத் தன்மையையும் உடைய, பிண்டி - அசோக மரம், கார்ப்பொதியில் - மேகங்களைத் தன்பாற் கொண்ட பொதியமலை, '(எங்கள்) சாந்து, சந்தனம்; எங்கள் பூ, அம்செங்காந்தள்; யாம் விளையாடும் பொழில் ஈர்ம்பிண்டி,' என இயைக்க.

(கசுஉ) 'கடையலின்கண், ஒன்னார் தளர்ந்து ஓட வைவேல் கொண்ட வேந்தன் கார்ப் பொதியிலில் எம் கருங்குழல் போது காந்தளாகிய அழகிய போதாகும்; எம் சாந்தம், சாந்த மாகும், (யாம்) விளையாடு இடம், பிண்டித்தளை அவிழும் பூந்தளம் எரிபோல் விரியும் - அசோக மரத்தினது முறுக்கு அவி

ழும் போதுகளின் இதழ்கள் நெருப்பைப்போல மலரும், பொழில் அகம் - சோலையாகிய இடமாகும். (விளையாடு இடமும் என்பதில் உள்ள உம்மை அசை-)

(கசுஙு) 'கொல்லிச் சாரலின்வாய் மணிநிறமாமயில் பொன் ஏர் மலர் தழைந்த கணிநிற வேங்கையின்மேல் துயிலாது கலங்கினை,' என இயைக்க. கணி நிறம் - கருதற்குரிய சிறந்த நிறம், அணி நிற மாப்பகடு - அழகிய உடம்பையுடைய கரிய யானை, துணி நிற வேல் - (பகைவர் உடலைத்) துணிக்கின்ற ஒளியையுடைய வேல், கணி நிற வேங்கை - சோதிடனைப் போல் நாளைக் குறிக்குந் தன்மையையுடைய வேங்கை மரம்.

(கசுச) 'கொல்லி அருவரைவாய்ப் பயிலும் வண்டும் தேனும் பண்ணைப்போல முரல்கின்ற வேங்கைப் பசும்பொழிலின்கண் உள்ள மயில்கள் (தங்கள்) துணையோடுந் துயில்கின்றனவில்லை; என்ன செய்தன ?' என இயைக்க. தோகை - சினையாகு பெயர். கயில் கொண்ட வார் கழல் - கடைப்புணர்வினையுடைய மேன்மையாகிய வீர கண்டையையும், போர் - போர்த்திறனையும் உடைய, ('மன்னர் ஓட' என்க.)

(கசுஞ) 'பஞ்சவன் வஞ்சிப்பூம்புறவில் உறையும் பூழிப்புற மஞ்ஞை அன்ன நல்லாய்! என்னெடு வரின் நின் கண் போல் மலரும் தாழிக்குவளைத் தடமலர் கொள்கம்,' என இயைக்க. பூம் புறவில் - அழகிய காடுகளில், தாழிக்குவளை - மண் தொட்டிகளில் வைத்து வளர்க்கப்படும் குவளை.

(கசுசு) ('ஸிசாரிதனுகிய அழித்தவன்' என்க.) 'தீந்தமிழ் போல் வளைக்கு ஒன்று கைம்மங்கையாய்! முல்லைகள் நின் வாயுள் வந்து முளைக்கின்ற முள் எயிற்று ஏர்கொண்டருட்பின. சென்று கொள்வோம் (வருக.),' என இயைக்க. 'தீந்தமிழ் போல் மங்கையாய்' என்றும், 'வளைக்கொன்று கைம்மங்கையாய்' என்றும் இயைக்க. 'வளையை அணிந்த கைம்மங்கை, வளைக்கொன்று கை' என இரண்டனுருபில் நாள்கனுருபு மயங்கிற்று. கோடும் - கொள் தம்; இதில் தும் விகுதி எதிர்காலம் காட்டிற்று.

(கசுஎ) 'அண்ணல் நீ செய்த ஆர் அருள் வஞ்சி அன்னைட்கு அலராய் விளைகின்றது,' என இயைக்க. ஆல் - அசை.

(கசுஅ) 'வென்றோனுகிய மானதன்' என இயைக்க. பொருள் தான் என நின்ற மானதன் - உலகோர் அடைதற்குரிய கல்வி

யும் செல்வமுமாகிய பொருள்கள் இவனே என்று சொல்லும் படி நின்ற மானதன், மருள்தான் என வண்டு பாடும் தண் தார் அண்ணல்! (நீ) கன்னி ஈர்ம்பொழில்வாய் வந்து செய்த அருள் இவ்வாய் இகழக்கு அலராய் விளைகின்றது. ஆல் என்பதும், மற்று என்பதும் அசை.

பக்கம், 146:—'அறிந்தோர் அறனிலர்' என்னும் செய்யுள் :

'ஐய! புன்னை அம் கானல் - புன்னை மரங்களையுடைய அழகிய சோலையிடத்து, புணர் குறி வாய்த்த - புணர்தற்கு நீ பலகாலுங் குறித்த குறியின் வந்து நின்ற, பின்னீர் ஓங்கி என் தோழிக்கு அன்னை - பின்னிய குளிர்ச்சியாகிய கூந்தலையுடைய என் தோழிக்கு ஐயோ, நின் அருள் - அவளிடம் புரிந்த நின்னுடைய அருள்கள், அறிந்தோர் அறனிலர் - கற்பன கற்றறிந்தவர் எல்லாம் அறவழியின்கண் நிற்பவரல்லர், என்ற அலர் சிறந்த - என்று (எவ்விடத்தும்) கூறப்படும் அலராய்ப்பரந்தோங்கின (அவ்வலரொலி), படுமணியானைப் பசும் பூண் சோழர் - ஒலிக்கின்ற மணியையுடைய யானையையும் பசிய பூண்களையும் உடைய சோழர்களின், கொடி நுடங்குமறுகின் - கொடிகள் அசைகின்ற தெருக்களையுடைய, ஆர்க்காட்டு ஆங்கண் - ஆர்க்காடு என்னும் ஊரில், கள் உடைத் தடவில் புள் ஒலித்து ஓவாத் தேர் வழங்கு தெருவின் அன்ன - கள்ளையுடைய சாடியில் வண்டுகள் ஒலி செய்து நீங்காமலிருக்கும் தேர்கள் செல்லுங் தெருவினை ஒத்த, ('புள் ஒலித்து நீங்காத் தெரு, தேர்வழங்கு தெரு' என்க.) கௌவை ஆகின்றது - பேரொலியாய் இராநின்றது; இன் உயிர் கழியினும் நனி இன்னாதே - அவளது இனிய உயிர் நீங்கிய பின்னும் மிக்க இன்னாமையைத் தரும் தன்மையையுடையது காண்.

(கசுசு) 'வார் அணி பூங்கழல் அண்ணல், கன்னி அன்னாள் தன்னைப் பிறரும் கருதிப் பொன் அணிவான் கார் அணிவார் முரசு ஆர்ப்ப வந்தார்; ஆகி வலிக்கின்றது என்?' என இயைக்க. இதற்காக உன்னுடைய மனம் செய்யப் பொருந்தி நினைக்கின்றது யாது ?

(கரo) 'விண் உரிஞ்சும் சோலச் சிலம்ப! வேலைத்துளைத்த கண் ஏழைத்கிறத்து நெடுமாறன் கூடலின்வாய்த் திருமனை முற்றத்துத் துணிவு ஒன்று அறிந்து கடி முரசு இன்று காலை இயம்பும்,' என இயைக்க.

(களக) 'ஏர் மலி தார் அண்ணல்! பிறரும் (நல் நாளைக்) கருதி வார் மலி கொங்கை மடந்தையை வேறு ஓர் மணம் (புரிதல்) கருதிக் கார் மலி வார் முரசு ஆர்ப்ப வந்தார். இதன் திறத்து எண்ணுவது என்?' என இயைக்க.

(களஉ) 'விண் தோயுஞ் சிலம்ப! வேயும் புரையும் மெல் தோளி திறத்துக் கூடல் அகநகர்வாய் ஏயுந் திருமனை முற்றத்துத் துணிவு ஒன்று அறிந்து எறி முரசு இயம்பும்,' என இயைக்க.

(களங) 'கூடல் அன்ன மெல் தொத்து அணி குழல் ஏழை திறத்து விளைவு அறிந்து இன்று ஒத்தது ஒன்று நீ துணி; அன்றுயின், நாளை மணமுரசு எம்மூர் மன்றத்து நின்று முழங்கும்,' என இயைக்க. மெல் தொத்து - மென்மையாகிய பூங்கொத்து. (கொல் - அசை.)

(களச) 'நலம் புரி தெய்வம் அன்னாய்! குலம் புரி கோதை யைத் தென் புனல் நாட்டு ஒருவற்கு இயைந்து காப்பு அணிந்தார்; மணமுரசு நாளை, கொடிமாட முன்றிலின்கண் முழங்கும். (அதனைத் தடுத்தற்குச்) செய்வது என்?' என இயைக்க. (கொல் - அசை.)

(களஞ) 'சீர் செய் வண்டு முன் நாள் மலர் என்று அணையும் கண் ஏழையினுடைய முகிழ் போன்ற முலைக்கு விலையாகத் தமர், விசாரிதன் வீங்கொலி நீர்த் தென் நாடு எனினுங் கொள்ளார், (இதன் திறத்து) இது செய்க என்று என்னுல் என் சொல்லல் ஆம்?' என இயைக்க.

(களசு) 'மண்பாய் நிழற்றும் - பூமியின்கண் பரவி நிழலைச் செய்யும், (பால் புரை வெண்குடைத் தென்னனனவன்) பறந்தலைக்கு - பறந்தலையின்கண், ஒடி வென்ற வேல், புரை வெம்மைய கானங்கள் எனினும் நும்மோடு ஏகின் அக்கொம்பினுக்கு அவ் வேந்தன் செய்ய கோல் புரை தண்மைய ஆம்,' என இயைக்க.

(களஎ) கால் நீர்க் கடையல் - வாய்க்கால்களின் வழியாக வரும் நீர் வளப்பத்தினையுடைய கடையல் என்னும் ஊரின்கண், (போர் மன்னர் படக் கடந்த சத்ரு துரந்தரன் என்க.) 'கானம், சத்ரு துரந்தரனது முனைபோல் அழல் அணி வெம்மையவாயினும், எம் நேர் இழைக்கு நும்மோடு ஏகின் நிழல் அணி அவன் குடையின் தண்மையவாம்,' என இயைக்க.

(களஅ) ஏண் - பெருமை, இகல் - வலிமை, 'சேணும் என்னெடி அகலாது ஆடித் திரிந்து வந்த நாணும் அழியும்படிக்குக்

கற்பு மேம்படுதலின் (அந்நாண்) நைகின்றது,' என இயைக்க. சேணும் என்னோடு அகலாது ஆடித் திரிந்து வந்த - (நான் செய்யுமிடத்துச் சென்றும்) அச்செய்யுமிடத்தினும் என்னை விட்டு நீங்குதலின்றி ஆடித் திரிந்து வந்த (நாண்) என்க. நாணும் என்பதன்கண் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. 'அழிய' என்னும் வினையெச்சம் காரியப்பொருட்டு. 'மேம்பட' என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டு. கற்பு மேம்பட்டமை, நாண் அழிதற்கும் அது நைதற்கும் காரணமாயிற்று.

பக்கம், 149:—'அளிதோ தானே' என்னும் செய்யுள் :

தோழி-, நாண் - நாணம், நம்மொடு - நம்முடன், கனி நீடு தாங்கும் அளவை தாங்கி உழந்தன்று-மிக நெடுங்காலம் (காமத்தைத் தன்னுள்) தடுக்கும் வரையினும் தடுத்திருந்து வருந்தியது, காமம் நெரிதர - காமம் மென்மேலும் நெருங்கி வருத்துதலால், வான் பூங்கரும்பின் - வெள்ளிய பூவையுடைய கரும்பினுக்கு இடமான, ஓங்கு மணல் சிறு சிறை - மிக்க மணலையுடைய சிறு கரை, தீம்புனல் நெரிதர - இனிய நீர் நெருங்கி மோதுதலால், வீழ்ந்து உக்கது ஆங்கு - அழிந்து வீழ்ந்தாற்போல, இனிக் கைந்நில்லாதுமன் - இனிமேல் அஃது என்னிடம் நிற்காமல் போய் விடும். மன் - கழிவுப் பொருளில் வந்தது.

பக்கம், 149:—'சிலரும் பலரும்' என்னும் செய்யுள் :

தோழி ! வாழி-, மறுகில் பெண்டிர் - நம்மூர்த் தெருவில் உள்ள பெண்களுள், சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி - ஒவ்வோரிடத்திற் சிலரும் ஒவ்வோர் இடத்திற் பலருமாகக் கூடி நின்று கடைக்கண்ணால் (நம்மைச் சுட்டி) நோக்கி, மூக்கின் உச்சி சுட்டு விரல் சேர்த்தி - (வியப்புடன்) மூக்கின் நுனியிலே சுட்டு விரலை வைத்து, அம்பல் தூற்ற - பழிச்சொற் கூறித் தூற்றுதலால், அன்னை - (அவற்றைக் கேட்டு அவற்றை உண்மை எனக் கொண்ட நம்) அன்னை, சிறு கோல் வலந்தனள் அலைப்ப அலந்தனென்-சிறு கோலை (ஏந்திச்) சுழற்றி அடித்தலால் வருந்தினேன், கானல் புது மலர் தீண்டிய - கடற்கரைச் சோலையில் உள்ள புதிய மலர்களைத் தீண்டிய, பூநாறு குரூஉச்சுவல்-பூமணம் வீசும் நல்ல நிறம் பொருந்திய பிடரி மயிரையுடைய, கடுமா பூண்ட - விரைந்து செல்லும் குதிரை பூண்ட, நெடுந்தேர் கடைஇ - நெடிய தேரைச் செலுத்தி, நடுநாள் வருஉம்-(இரவின்)

கள்ளிருளில் வாராகிற்கும், இயல் தேர்க்கொண்கனெடு - (நன்கு) இயன்ற தேரையுடைய கொண்கனுடன், செலவு யான் அயர்ந்திகின் - நீ செல்லுதலே யான் உடன்படாகின்றேன்; (நீ செல்வாயாக; அங்ஙனம் நீ சென்றால்) இ அழுங்கல் ஊர் - பேரொலியையுடைய இவ்வூரானது, அலர் சுமந்து ஒழிக - அலர் தூற்றிக் கொண்டு போவதாக. ஆல் - அசை.

(கஎக) 'தென்னவன் தேத்தண் பொதியிலின்வாய் வேய்ஒத்த தோளி! நும்மோடு வரவு விரும்பவும் தன் ஆயத்தவரை நினைந்தனளாக, கண்கள் நீர்கொண்டு அலமந்தன,' என இயைக்க. பகை மலைந்தார்-பகையால் மலைந்தவர், அலமந்த - சுழன்றன.

பக்கம் 150:—'விளம்பழங் கமழும்' என்னும் செய்யுள்:

விளம்பழங்கமழும் - (மூடை தீர விளம்பழம் இட்டுவைத்தலால் அந்த) விளம்பழத்தின் மணங்கமழ்கின்ற, கமஞ்சூல் குழிசி-நிறைந்த தயிர்த்தாழியில், பாசம்கின்ற - கயிறு (ஆடித்) தேய்த்த காரணத்தால், தேய் கால் - தேய்ந்த தண்டினையுடைய, மத்தம் - மத்தினால், நெய் தெரி இயக்கம் - வெண்ணெய் தோன்றும்படி கடைதலால், வெளில் முதல் முழங்கும்-(தயிர்கடைதற்கு நட்ட) தறியின் அடியில் முழக்கம் எழுகின்ற, வைகு புலர் - தங்கிய (இருள்) நீரும், விடியல் - விடியற்பொழுதில், மெய்கரந்து-(தன்) மெய்யைப் பிறர்க்குத் தோன்றுதபடி மறைத்துக்கொண்டு, தன் கால் - தன் காலினுள்ள, அரி அமை சிலம்பு கழீஇ - அரிகள் இடப்பட்ட சிலம்பைக் கழற்றி, பல் மாண் வரி புனை பந்தொடு வையெ செல்வோள் - பல மாட்சிமைப்பட்ட வரிந்த புனைந்த பந்துடன் சேர ஓரிடத்தில் வைக்கச் செல்பவள், இவை காண் தோறும் - இவற்றைக் காணுந்தோறும், என் ஆயத்தோர் நோவர்-என் தோழிமார்கள் நோவாகிற்பார்கள், அளியரோ அளியர் - அவர்கள் மிகவும் இரங்கத் தக்கவர்களேயாவார்கள், என - என்று தனக்குள் நினைந்து, நும்மொடு தான் வரவு அயரவும் - நும்மோடு தான் மேற்கொள்ள நிற்கவும், கண் தன் வரைத்தன்றிக் கலுழ்ந்தன - (அவளுடைய) கண்கள் அவள் அளவில் அடங்காதவாய் அழாகின்றன.

(கஅ0) 'ஏந்தல்! (நீ வையை காடன்ன மாதரைக் கொங்கை தளரினும், கூந்தல் நரைப்பினும் இ அங்கை அடைக்கலம் என்றே கருதி அருள்க,' என இயைக்க. கண்டாய் - முன்னிலையசை.

(கஅக) 'நல்மலைநாட ! வேந்தர் பெம்மான் கொன்மலி வேல் நெடுங்கண் இணைப் பேதைக்கொடியினை மென்முலை வீழினும் கூந்தல் நரைப்பினும் இகழல்,' என இயைக்க.

பக்கம் 151:—'அண்ணுந் தேந்திய வனமுலை' என்னும் செய்யுள்:

பூக்கேழ் ஊர - மலர்கள் விளங்கும் ஊரை உடையானே, இன் கடுங்கள்ளின் இழை அணி நெடுந்தேர் - இனிய கடுப்புடைய கள்ளுணவையும் இழை அணிந்த நெடிய தேரையுமுடைய, கொற்றச் சோழர் - வலி மிக்க சோழ மன்னர்கள், கொங்கர்ப் பணீஇயர் - கொங்கரை அடக்கும்பொருட்டு, வெண்கோட்டு யானைப் பேர்கிழவோன்-வெள்ளிய கோட்டினையுடைய யானையையுடைய 'பேர்' என்னும் ஊரின் தலைவனுகிய, பழையன் வேல் வாய் அன்ன-பழையன் என்னும் சேனைத் தலைவனிடத்திலிருந்து (தப்பாத) வேற்படையைப் பெற்று வைத்திருந்தது போன்ற, நின் - உன்னுடைய, பிழையா நல்மொழி - தப்புதலில்லாத நல்ல மொழியை, தேறிய இவட்கு - தெளிந்த இவளுக்கு, அண்ணுந்து ஏந்திய வனமுலை தளரினும் - அண்ணுந்து உயர்ந்த அழகிய முலைகள் தளர்ந்தாலும், பொன் ஏர் மேனி மணியின் தாழ்ந்த நல் நெடுங்கூந்தல் நரையொடு முடிப்பினும் - பொன்போன்ற அழகிய மேனியிலே கருமணி போலத் தாழ்ந்த நல்ல நெடிய கூந்தல் நரையுடனே முடிக்கப் பெற்றாலும், நீத்தல் ஓம்பு - (அப்பொழுதும் 'இவள் நம் புணர்ச்சிக்குப் பயன்படாதபடி முதிர்ந்துள்ளாள்,' எனக் கருதிக்) கைவிடாதே கொள்.

பக்கம், 152:—'பெருநன் ருற்றின்' என்னும் செய்யுள்:

ஆடு அமை ஒழுகிய - அசையாநிற்கும் மூங்கில்கள் ஈண்டு வளர்ந்த, தண்நறுஞ்சாரல்-தண்ணிய நறிய மலைப்பக்கத்தின்கண், மெல் நடை மரை ஆ - மெல்லிய நடையையுடைய மரை ஆ, துஞ்சும் நல் மலை நாட - துயிலுதற்கு இடமாகிய நல்ல மலை நாட்டை உடைய தலைவனே, பெருநன்று ஆற்றின் - பெரிய நன்மையொன்றைத் தமக்குஞருவர் செய்தால், பேணுரும்உளரே-அங்ஙனஞ் செய்தாரைப் போற்றுதாரும் உளரோ ? ஒரு நன்று உடையள் ஆயினும் - (நின் புணர்ச்சிக்குப் பயன்படாமல் நின்பால் அன்பு செய்தலாகிய) ஒரு சிறு நன்மையை மாத்திரம் உடையளாதற்குரிய முதுமைப் பருவத்தை அடைந்த காலத்தினும், புரி மாண்மி - (இவள்பால் நீ) விருப்பம் மாட்சிமைப்

பட்டு, புலவி தீர - இவளது புலவி நீங்கும்படி செய்து, அளி - (இப்பொழுதைப் போலவே) தண்ணளிசெய்து காக்கக்கடவாய். மதி - அசை.

பக்கம், 152:— 'நனைமுதிர் ஞாழல் சினைமருள்' என்னும் செய்யுள்:

நனை முதிர் - அரும்புகள் முதிர்ந்த, ஞாழல் - ஞாழலினது, சினை மருள் இரள் வீ - மூட்டைகள் (கண்டு) மருளும்படியான இரண்ட மலர்களை, நெய்தல் - நெய்தலினது, மாமலர் பெய்தல் போல - கரிய மலர்களில் பெய்தல் போல, ஊதை தூற்றும் - குளிர் காற்று (நீரைக்கொண்டு வந்து) தூவுகின்ற, உரவு நீர்ச் சேர்ப்ப - கடற்கரைக்குத் தலைவனே (உரவு நீர் - வன்மையாகிய நீரையுடையது; கடல்), தாய் உடன்று அலைக்கும் காலையும்-தாய் கோபித்து அடிக்கும்போதும் (அலைத்தல் - வருத்தல்; இஃதீண்டு அடித்தல் என்னும் பொருள் தந்து நின்றது; இது மரபு வழு வமைதி), வாய் விட்டு அன்னாய் என்னும் குழவி போல - வாய் விட்டு அன்னாய் என்று அழைக்கும் குழந்தையைப்போல, இன்னா செயினும் இனிது தலையளிப்பினும் - (நீ) இன்னாதவற்றைச் செய்தாலும் இனிதாகத் தலைபளி செய்தாலும், நின் வரைப்பினள் என் தோழி - நின் அருளின் வரைப்புக்குட்பட்டவள் என்னுடைய தோழி, தன் உறு விழுமம் களைஞர் இலள் - (நின்னை அன்றித்) தனது மிக்க துன்பத்தை நீக்குவார் பிறரை இல்லாதவள்.

பக்கம் 152:-'இவளே நின்னல திலளே' என்னும் செய்யுள்:

மாமலை நாட - சிறந்த மலைநாட்டையுடையவனே, இவள் - இத்தலைவி, நின் அலது இலள் - நின்னையன்றித் (தன் அன்பிற் கிடனையிருப்பவர் பிறரை) இல்லாதவள், யாயும் - இவளுடைய தாயும், குவளை உண்கண் இவள் அலது இலள் - குவளை மலர் போன்ற மை தீட்டிய கண்களையுடைய இவளையன்றித் (தன் அன்பிற்கிடனையிருப்பவர் பிறரை) இல்லாதவள், யானும் ஆயிடையேனே - யானும் அத்தன்மையையுடையவளே, (ஆதலின்) மறவாது ஈ - ('என்றும் பிரியேன்' என்று நீ சொன்னசொல்லை) மறக்காமல் எப்போதும் இவளைத் தலையளிசெய்து காப்பாயாக. ஏ - அசை நிலை; மகரமெய், அவ்வசை நிலை ஆண்டு நிற்றற்கு வந்தது.

(கஅஉ) வையை சூழ் வியல் நாடு - மதுரை, மணி அறல் யாறு - நீலமணியைப் போன்ற கரிய மணல்களை உடைய யாறு. 'பண் அமைய சொல்லாய்! யாம் செல்லும் கானகம், வையைசூழ் வியல் நாட்டகம்போல் வண்டு ஆர் பொழிலும், மணி அறல் யாறும் மருங்கு அமைந்து கண்டார் மகிழும் தகைமையது,' என இயைக்க.

(கஅங) சிறியபைங்கண் களிறு ஊர்ந்து என்க. தென்பாழி-தெற்கின்கண்ணதாகிய பாழி என்னும் ஊர், செற்று எதிர்ந்தார் - கோபித்து எதிர்த்தவர்கள், முறிய - (தம்மைச் சூழத்) தளிர்களையுடைய, பைம்போதுகள் - பசுமையாகிய மலர்கள். 'என் நல் தோழீ! (நாம் செல்லும்) நறிய பைங்கானம், வையை நாட்டகம்போல் முறிய பைம்போதுகள மேல் வண்டு பாடி முருகு உயிர்க்கும்,' என இயைக்க.

பக்கம், 153:—'அழிவிலர் முயலும்' என்னும் செய்யுள்:

வால் எயிற்றேயே - வெண்மையாகிய பற்களையுடையாய், யாம் செல்லும் ஆறு - நாம் செல்லும் வழி, கானம் - காடுகள் எல்லாம், மா நீண கொழுதி - மாமரத்தில் உள்ள அரும்பைக் கோதி, மகிழ் குயில் ஆலும் - மகிழ்கின்ற குயில்கள் விளையாடும், நறுந்தண் பொழில - நறிய தண்ணிய சோலையையுடையன, குறும்பல் ஊர - (அன்றியும் அடுத்தடுத்திருக்கும்) குறிய பல வாகிய ஊரையுடையன, சிதைவு இல முயலும் - சிதைவின்றிய செயலைச் செய்ய முயல்கின்ற, ஆர்வ மாக்கள் - ஆர்வத்தினையுடைய மாந்தர்கள், வழிபடு தெய்வம் - (அச்செயல் முற்றுப் பெறும்பொருட்டுத் தாம்) வழிபடுகின்ற தெய்வத்தை, கண் கண்டால் ஆங்கு - கண்ணுக்கெதிரிலே கண்டாற்போல, அலமரல் வருத்தம்தீர நின்நலம் மெல்பணைத்தோள் எய்தினம் - (நின்னைப் பெற யாம் நெடுங்காலம் முயன்ற நல்வினையால்) சுழற்சியையுடைய எம்முடைய வருத்தம் எல்லாம் தீரும்படி நின் அழகிய மெத்தென்ற பருத்த தோள்களை அடைந்தனம், ஆகலின் - ஆதலால், பொரிப்பூம்புன்கின் - பொரியைப்போன்ற பூக்களையுடைய புன்கமரத்தின், எழில் தகை - அழகு மிக்க, ஒள் முறி - ஒள்ளியதளிரை, சுணங்கு அணி - சுணங்கினுக்கு அழகு செய்துகொண்டிருக்கும், வனம் முலை - அழகிய முலைகளில், அணங்குகொளத் திமிரி - (இன்பத்) தெய்வம் சிறப்போடு வீற்றிருக்கும்படி அப்பி, நிழல் காண்தோறும் - நிழலைக் காணுந்

தோறும், நெடிய வைகி - (அந்நிழலிலே) நெடும்பொழுது தங்கி, மணல் காண்தோறும் வண்டல் தைஇ - மணல்களைக் காணுந்தோறும் (சிற்றில் அமைத்து) விளையாடி, வருந்தாது ஏகு - வருத்தமின்றி மெல்லச் செல்வாயாக. மதி - அசை.

(கஅச) 'சிலை மன்னு தோள் அண்ணலே! அரிகேசரியாகிய முத்தக் குடையான் இகல் வேந்தரைப்போல் மலை மன்னும் வெய்யோன் மறைந்தனன்; வழியில் நடந்து வந்த வருத்தத்தினுல் நின் துணையாகிய மாது வாடி வந்தாள்; (ஆதலினுல்) எம் சிறு குடிக்குச் சேர்ந்தனை செல்,' என இயைக்க. 'அளியார் மாலை' என்க; வண்டுகள் பொருந்திய மாலை என்பது பொருள். இலை மன்னுமாலை-(மலர்களுக்கு இடை இடையில்) இலைகள் பொருந்திய மாலை.

(கஅடு) 'கூர்வேல் விடலையே! கூடலை (மதுரையை) அன்னுஞும் மிக மெலிந்தாள்; குன்றூர் சுடரோன் மறைந்தனன்; எம் சிறு குடி அணித்து; (எம் சிறு குடியிலே) தங்கிச்சென்றுல் இழிவு உண்டோ?' என இயைக்க.

பக்கம், 154:—'எம்மூர் அல்லது' என்னுஞ் செய்யுள்:

பூந்தார் பார்ப - பூமாலையை அணிந்த மார்பையுடைய தோன்றலே, வெம்முரண் செல்வன் - வெப்பமாகிய வலிய செல்வத்தினையுடைய சூரியன், கதிரும் ஊழ்த்தனன் - (சாய்வுற்றதோடு) கதிர்களையும் இழந்தனன், பெருங்கல் ஆறு - பெரிய மலைகளின் இடையமைந்த வழிகள், அரிய - (வன்மையுடையவர்களாலும் நடத்தற்கு) அரியன, சேய - மிக நெடியவை, மடந்தை - இந்நங்கை, இளையள் - இளையவள், மெல் இயல் - மென்மைத் தன்மையையுடையாள், சேர்ந்தனை செல் - (எம்மகத்தின்கண் வந்து) தங்கிச் செல்க. மோ - முன்னிலை அசை.

(கஅசு) 'தென்புனல் நாட்டில் உள்ள பழனங்களை இன்றே சென்று சேர்திர்,' என இயைக்க. இளையவர் வாயும் முகமும் மலர்ந்த கமலம் மணித்தடம் - இளையவர்களுடைய வாயையும் முகத்தையும்போல மலர்ந்த கமல மலர்களையுடைய அழகிய தடம், தடத்துப்பாயும் கயல் அவர் கண்போல் பிறழும் பழனங்கள் - தடத்தில் பாய்கின்ற கயல்கள் சென்று அவ்விளையவர்களுடைய கண்களைப் போலப் பிறழுகின்ற வயல்கள்.

(கஅஎ) 'தமிழ் நாடு அன்ன தாழ் குழலியுடையாள் ஒள் முத்தவார்கழல் கைதந்து என் ஊரு வறுமுலையின்கண் முத்தங்

கொண்டு முயங்கிற்றெல்லாம் வெங்கழை போய் விண்முத்த நீள் சுரஞ்செல்லியவோ?' என இயைக்க. ஊறு வறு முலையின்கண் - பால் ஊறப் பெறுத வறிய முலையின்கண், முத்தங்கொண்டு - முத்தமிட்டு, வெங்கழை போய் விண் முத்தம் - விரும்புதற்குரிய மூங்கில்கள் சென்று விண்ணினுக்கு முத்தங் கொடுக்கின்ற, (ஈண்டுக்கொடுக்கின்ற என்னும் சொல்லைப் பெய்து பொருள் கொள்க).

பக்கம், 155:—'பேயர்த்தனேன் முயங்க' என்னுஞ் செய்யுள்: கழல் தொடி ஆய்-கழலும்படி இடப்பட்ட தோள்வளைகளை உடைய ஆய் என்னும் வள்ளலின், மழை தவழ் பொதியில் - மேகங்கள் தவழும் பொதியில் மலையில் உண்டான, வேங்கையும் காந்தளும் நாறி - வேங்கை மலரின் மணமும் காந்தள் மலரின் மணமும் கமழப் பெற்று, ஆம்பல் மலரினும் - ஆம்பல் மலரை விட, தண்ணியள் - குளிர்ச்சியை உடையவளாய் இருப்பவளாகிய என் செல்வி, யான் பெயர்த்தனென் முயங்க - யான் (முன்னே ஒருமுறைத் தழுவி) மீண்டுந்தழுவ, வியர்த்தனென் என்றனள் - நான் வியர்வை அடைந்தேன் என்றாள், அது - அவ்வாறு நான் மீண்டுந் தழுவியது, தனியாகுதல்-(அவளது) வெறுப்புக்குக் காரணமாயிருந்ததை, இனி அறிந்தேன் - (அப்பொழுது அறிந்திலேன் ஆயினும்) இப்பொழுது அறிந்துகொண்டேன்.

(கஅஅ) 'கூடலின்வாய் ஆடக மாடம் கடந்து அறியாத என் ஆரணங்கு, வேடி அகஞ் சேர்ந்த வெங்கானத்தில் விடலையின் மெல் அடிமேல் பாடகம் தாங்கி நடந்தது எவ்வாறு?' என இயைக்க.

(கஅக) 'உறந்தை அன்ன தெளி முத்த வாள் முறுவல் சிறியாள்தன் சிலம்படி, நளிமுத்த வெள் மணல் மேலும் பனிப்பன; (அத்தகைய அவள் அடிகள்) நண்பன் பின் போய் முளியுற்ற கானம் இறந்தன போலும்!' என இயைக்க.

(கஉ0) 'தழை கெழு பாவை பலவும் வளர்க்கின்ற தண் குரவே! கூடல் அன்ன இழை கெழு கொங்கை என் பேதை ஓர் ஏதிலனோடு இயைந்து இக்கழை கெழு குன்றம் கடப்பவும் நீ கண்டு நின்றனையே!' என இயைக்க.

(கஉக) 'குரவே! வியல் நாட்டகத்து ஓர் மணற்பொலி பாவை பயந்தேன் வருந்தவும், நீ கடத்துள் எனைப் பல பாவை பயந்தும் ஓர் இருந்தியர் எய்தாய்; (ஆதலின்), நினைப்பு அரும் புண்ணியம் செய்தாய்,' என இயைக்க. பயந்தேன் வருந்தவும் -

பயந்த யான் வருந்தவும் (பயந்தேன் - வினையாலணையும் பெயர்), எணைப் பல - எத்தணையோ பல ('எத்தணை' என்பது 'எணை' என மருவியது).

(ககூஉ) மாறன் எங்கோன் முணைபோல் சுரம் - மாறனுகிய எங்கோனது போர் முணைபோல் வெய்யதாகிய சுரத்தின்கண், அவன் பின் சென்ற ஆறு சொல் என்ற போழ்து - அத்தலைவன் பின் சென்ற விதத்தைச் சொல் என்று யான் சொன்ன போழ்து. 'பல்லவம் ஆக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவு, (சுரத்தின் கண்) வாள் நுதலாள் அவன் பின் சென்றவாறு சொல் என்ற போழ்து எனக்குச் சொல்லுமே?' என இயைக்க. சொல்லுமே - சென்ற வகையை எனக்குச் சொல்லுமா?

(ககூஉ) 'பொன்கழல், (இந்த) வில்லான் விறல் அடி மேலன வாய் இருக்கின்றன; பாடகம் வெள் முத்து அன்ன பல்லாள் இணை அடி மேலனவாய் இருக்கின்றன; பஞ்சவற்கு நிகர் மலைந்த புல்லாதவர் என அருஞ்சுரம் போந்தவராகிய இவ்விருவரும் யார்?' என இயைக்க. (போந்தவர் - வினையாலணையும் பெயர்).

பக்கம், 156:—'வில்லோன் காலன' என்னுஞ் செய்யுள்:

ஆரியர் - ஆரியக்கூத்தர், கயிறு ஆடி பறையின் - கழையிற் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடும்போது கொட்டப்படும் பறையைப்போல, கால் பொரக் கலங்கி - (மேல்) காற்றனது தாக்குதலால் நிலைகலங்கி, வாகைவெள் நெற்று ஒலிக்கும்-வாகை மரத்தினது வெள்ளிய நெற்றுக்கள் ஒலிக்கும், வேய்பயில் அழுவம் - மூங்கில் செறிந்த பாலை நிலப்பரப்பில், முன்னியோர் - (கடந்து செல்ல) நினைந்துவரும் இவ்விருவருள், வில்லோன்காலன கழல் - வில்லை உடைய இவ்வாடவனுடைய காலில் இருக்கின்றன வீரக்கழல்கள், தொடியோள் அடி மேல சிலம்பு-தோள்வளையை அணிந்த இம்மகளுடைய அடிமேல் இருக்கின்றன சிலம்பு, நல்லோர் யார் - நற்குணமுடையவர்களாகிய இவர்கள் யாவர்? அளியர் - இவர்கள் அளிசெய்யத்தக்கவர்கள். சிலம்பும் என்பதில் உள்ள உம்மை அசை.

(ககூஉ) 'அருஞ்சுரத்தூடு வருகின்ற அந்தணிர்காள்! இக்குன்றிடத்துச் செங்கோல் கலிமதனன் பகைபோல் கழலான் ஒருவன் பின் குழலாள் ஒருத்தி சென்றாளோ? உரைமின்,' என இயைக்க.

(கசுரு) 'குன்றிடத்து நடையால் மெலிந்து வருகின்ற அந்தணிர்! இவ்விருஞ்சுரத்து ஒள்தீந்தமிழ்போல் இடையாள் விடலை பின் சென்றனளோ?' என இயைக்க.

(கசுசு) மாறன் முனைபோல் நெடுஞ்சுரம் - மாறனது போர்க்களம்போல நீண்ட சுரம். வெறி கமழ் கோதை நின்றது இங்கே; விடலை தன் கைப் பொறி கெழு திண் சிலை வாளியின் எய்த பொருகளிறு இஃதாம்,' என இயைக்க.

(கசுஎ) 'மாறன் தென்னேரி முன்னுல் இடிவில்லைப் போன்ற புருவத்தவள் நின்ற சூழல் இது; அண்ணல் கருவில் தொடு கணையால் எய்த களிறு உதுவாம்,' என இயைக்க.

(கசுஅ) 'அரிகேசரி தெவ்வரைப் போல் இன்று கடத்தில் சென்று (பின்) பழனங்களைக் காண்பர்,' என இயைக்க.

(கசுக) 'அருவரைபோன்று உருவாய் மதக்களிறு உந்தி நட்டாற்றுப் (பகை மன்னரை) வென்றுன் மனம் போன்று உயர்ந்த தொகு வாயன சுணை சேர் குன்றத்தை நீங்கினவுடன் பழனங்களைத் துன்னுவர்,' என இயைக்க.

(உ00) கடவரை - கடத்தின்கண்ணதாகிய மலை. 'மாறனது மலயம் என்னும் தடவரை (தன்கண் தோன்றிய) தண் சந்தனத்தைத் தானே அணிந்து (அச்சந்தனத்தின் நறுமணத்தை) அறியாது. (அதுபோல உங்கள் மகளின் இன்பத்தை நீங்கள் துகர்தற்கு உரியீர் அல்லீர்; ஆதலின்) கடவரை காதலஞ்சூடு கடந்த கயல் நெடுங்கண் படவரவு அல்குல் உம் பாவைக்கு இரங்கின்மின்,' என இயைக்க.

(உ0க) 'தண் குமரி முந்நீர் முத்தங்கள் பயந்தால் அணிவார் பிறர் என்ப; (நீர்) இந்நீர்மையீர்; வெந்நீர்மையினையுடைய அருஞ் சுரத்தின்கண் காளை பின் சென்ற நும் மெல்லியல் மாட்டு இரங்கன்மின்,' என இயைக்க.

(உ0உ) 'முந்நீர்க் கருங்கடல் வெண்சங்குகள் (தாம்) ஈன்றனவாகிய தண் கதிர் முத்தங்களை (அச்சங்குகள்) என்றும் அணிந்தறியா; (அத்தன்மை போல) ஞாலத்துள் பெண் பிறந்தார் தம் பெற்றோர்க்கு உதவார்,' என இயைக்க.

பக்கம், 158:—'எறித்தரு கதிர்தாங்கி' என்னும் செய்யுள்:

உறித்தாழ்ந்த கரகமும் - உறியிலே தங்கின கமண்டலத்தையும் (கரகம் - கமண்டலம்), உரை சான்ற - புகழ் மிக்க, முக்கோலும் - (அரி அயன் அரன் என்னும் மூவரும்

ஒருவர் என்பதைத் தெரிவித்தலேபுடைய) முக்கோலியும், நெறிப்பட - முறைமைப்பட, சுவல் அசைஇ - தோளின்மேல் வைத்து, எறித்தரு கதிர் - (ஞாயிறு) வீசுதலைச் செய்கின்ற (வீசுகின்ற) கதிர்களின் வெப்பத்தை, தாங்கி - தாங்க, ஏந்திய குடை நீழல் - எடுக்கப்பட்ட குடையின் நிழலிலே, வெவ்விடை - (வெம்மை + இடை) வெப்பமாகிய காட்டிடத்திலே, செலல் மாலை - செல்லுதலே இயல்பாக உடைய, ஒழுக்கத்தீர் - ஒழுக்கத்தை உடையீர்களும், வேறு ஓரா நெஞ்சத்து-(அம்மூவரையும் ஒருவராக நினைத்தலன்றி) வேறாக நினைத்தல் அறியாத மனத்தினையும் உடையீர்களுமாகிய, குறிப்பு - (விருப்பத்தைச் செய்யும்) ஐம் பொறிகளும், ஏவல் செயல் மாலை - (நுமக்கு) ஏவல் செய்தற்குக் காரணமான தன்மையையுடைய, கொளைநடை - கோட்பாட்டையும் (நுமக்குரிய) ஒழுக்கத்தினையும் உடைய, அந்தணீர் - அந்தணர்களே, பெருமை - (இவர்களுக்கு ஆசிரியனை) பெரியோனே, என் மகள் ஒருத்தியும் - என்னுடைய மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும் - வேறொருத்தியின் மகன் ஒருவனும், தம் மூளை புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர் - தங்கள் மனம் ஒன்றுக் கொன்று ஒத்துக் கூடியதனால் (முன்னே) தாங்களே அறிந்த புணர்ச்சியை உடையவர்களாயிருந்தவர்களாகிய (இப்பொழுது பிறர் அறிந்த புணர்ச்சியை உடையவர்களாகிய), அன்னார் இருவரை-அத்தகையராம் இருவரை, காணிரோ-(நீங்கள்) கண்டிலீர்களோ, காணேம் அல்லேம் - காணாதிருந்தேம் அல்லேம், கடத்திடைக் கண்டனம் - இக்காட்டிற் கண்டோம் (கண்டு அஃது அறமென்றே கருதி அவர்களை விலக்காமற் போந்தேம்), நீர் - நீவிர், ஆண் எழில் அண்ணலோடு - ஆண் மக்கட்குக் கூறப்படும் அழகினை உடைய தலைவனுடனே, அருஞ்சுரம் முன்னிய - இவ் வரிய காட்டிடத்தைக் கடந்து செல்ல எண்ணிவந்த, மாண் இழை மடவரல் - மாட்சிமைப்பட்ட அணியினையணிந்த மடப்பத்தை உடையாளுக்கு (மடவரல் - மடப்பத்தினது வரவினை உடையாள்; அன்மொழித் தொகை.), தாயிர் போல்திர் - தாயாந் தன்மையையுடையீர் போன்றிருக்கின்றீர். (இது தரவு.)

(1) பல உறு நறுஞ்சாந்தம் - மணமுடைய பொருள்கள் பலவுங்கூடும் நறுமணமுள்ள சந்தன மரங்கள், பகைப்பவர்க்கு அல்லது - மெய்யிற் பூசிக்கொள்பவர்க்கு அன்றி, மலையுள் பிறப்பினும் - மலை இடத்துப் பிறந்தனவாயினும், மலைக்கு அவை

தாம் - மலைக்கு அச்சந்தன மரங்கள்தாம், என் செய்யும் - என்ன பயனைக் கொடுக்கும்? (ஒரு பயனையுங் கொடா.) கிணையுங் கால் - ஆராயுங்காலத்து, நும் மகள் - நும்முடைய மகள், நுமக்கும் ஆங்கு அனையளே - நுமக்கும் அச்சந்தன மரங்களைப் போலப் பயன்படும் பருவத்துப் பயன் பட்டாதவளே ஆவள்.

(2) சீர்கெழு - தலைமை பொருந்திய, வெள்முத்தம் - வெள்ளிய முத்துக்கள், அணிபவர்க்கு அல்லது - அணிவார்க்குப் பயன்படுவது அன்றி, ஈருள் பிறப்பினும் - கடலிடத்துப் பிறந்தனவாயினும், அவைதாம் - அம்முத்துக்கள், நீர்க்கு என் செய்யும் - அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? தேருங் கால் - ஆராயுங்காலத்து, நும்மகள் - நும்முடைய மகளும், நுமக்கும் ஆங்கு அனையளே - நுமக்கும் அம்முத்தங்களைப் போலப் பயன்படும் பருவத்துப் பயன்படாதவளேயாவள்.

(3) ஏழ் புணர் இன் இசை - ஏழு நரம்புகளாற் கூட்டப் பட்டனவாகிய இனிய இசைகள், முரல்பவர்க்கு அல்லது - பாடுவார்க்குப் பயன் கொடுப்பது அன்றி, யாழுள் பிறப்பினும் - யாழிடத்தே பிறந்தனவாயினும், அவைதாம் - அவ்வினிய இசைகள், யாழ்க்கு என் செய்யும் - அந்த யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? சூழுங்கால் - ஆராயுங்காலத்து, நும்மகள் - நும்முடைய மகளும், நுமக்கும் ஆங்கு அனையளே - நுமக்கும் அவ்விசைகளைப் போலப் பயன்படும் பருவத்துப் பயன்படாதவளே ஆவள். (இவை மூன்றும் தாழிசைகள்.)

எனவாங்கு - அசை. (இது தனிச் சொல்.)

இறந்த கற்பினுட்கு எவ்வம்படரன்மின் - (ஆதலின்) மிக்க கற்பினை உடையாளுக்கு வருத்தம் உறுதிருமின், சிறந்தானை - இருமுது குரவரினுஞ் சிறந்தவனாகிய கணவனை, வழிபடீஇ - வழிபட்டு, சென்றனள் - அவன் பின்னே போனாள், அறந்தலைப் பிரியா ஆறும் - அறத்தினின்று நீங்காமல் மறுமை இன்பத்தின் கட் செல்லுதற்குரிய வழியும், மற்று அதுவே - அவ்வழிபாடே யாம்.

மற்று என்பது வினைமாற்றுய் இம்மை இன்பம் துகர்தலின் வேறான மறுமை இன்பம் நுகர்தலை உணர்த்திற்று.

'அறந்தலை; பிரியா வாறு மற்றதுவே' என்பது பாடமாயின், 'அறந்தலை - (இங்ஙனங் கணவனை வழிபட்டுப்புரியும் இவ்வில்லறமே) அறங்களிலே தலையாய அறமாம்; பிரியா ஆறும்-நீங்காமல்

மறுமை இன்பத்தை அடைதற்குரிய வழியும், மற்று அதுவே - அவ்வில்லறமேயாம்' எனப் பொருள் கொள்க.

(இது சுரிதகம்.) இப்பாட்டு நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா.

(உ0ஈ) 'விரைந்து செல்வீர் - வழியிடை விரைந்து செல்கின்றவர்களே, '(நீங்கள் சென்று), 'சத்ரு துரந்தரன்தன் முனை போல் வெம்மைச் சுரத்தினூடு (உங்கள் தோழி) வருகின்றனள்' என்று, அம்மைத்தடங்கண் என் ஆயத்தவர்க்கு அறிமின்கள்,' என இயைக்க.

(உ0உ) கோடரில் - மலைகளின் உச்சிகளைப்போல (கோடு - மலையின் உச்சி, அர் - போலி; கொம்பு - கொம்பர் என்பதிற் போல), காடரில் - காட்டில் வசிப்பவர்களைப்போல் (இல்-ஒப்புப் பொருளதாகிய ஐந்தனுருபு), வேடர் இல் - வேடருக்கு இருப்பிடமாகிய. 'குன்றகஞ் சேர் காடரில் வேந்தர் அரண் விட்டுக் காட்டிற் செலச்செற்ற மன்னன்,' என்க. 'விரைந்து செல்வீர், (நீங்கள் சென்று, 'உங்கள் தோழி) செலச்செற்ற மன்னன் கைவேல்போல் வெய்ய வேடரில்லாகிய வெஞ்சுரத்தூடு மீண்டனள்,' என்று ஓடரி வாள்கண் என் ஆயத்தவர்க்கு உரைமின்கள்,' என இயைக்க.

பக்கம், 159:—'கவிழ்மயிர் எருத்தின்' என்னுஞ் செய்யுள்:

'(அன்புடையீர், நம்மூர்க்குச் செல்லுதற்கு) மூன்னுற விரைந்த நீர், ('தும்முடைய தோழி) கவிழ் மயிர் எருத்திற் செந்நாய் ஏற்றைக் குருளைப்பன்றி கொள்ளாது கழியும் சுரநனிவாராநின்றனள்' என்பதை இன்னகை முறுவல் என் ஆயத்தோர்க்கு உரைமின்,' என இயைக்க. குருளைப்பன்றி - பன்றிக்குட்டி, கவிழ் மயிர் எருத்து - கவிழ்ந்து தொங்கும் மயிரை உடைய பிடர், செந்நாய் ஏறு - ஆண் செந்நாய்.

(உ0ஊ) வேல! தென்னர் கோன் அயில் போல் வெங்கண் நெடுஞ்சுரத்தூடு மீண்ட விடலை,என் தையலைக் கெடல் அருஞ்சீர் நங்கள் மனைக்கே வர நல்குமோ? நல்கு தங்கள் மனைக்கே செல உய்க்குமோ? சொல்லு,' என இயைக்க.

(உ0எ) 'உதிதன் எந்தைகோன் செரு முனைபோல் சுரத்தூடு மீண்ட விடலை, என் பேதையை வதுவை செய்ய எம் நீது இல் செல்வத் திருமனைக்கே நல்குங்கொல்; தனது பெருமனைக்கே உய்க்குமோ? உரையாய்,' என இயைக்க.

பக்கம், 160:—'அருஞ்சுரம் இறந்தஎன்' என்னுஞ் செய்யுள்: அறுவை தோயும் - துகில் பொருந்திய, ஒரு பெருங்குடுமி - சிறந்த பெரிய முடியையும், சிறு பை நாற்றிய பஃறலை - (அதன் கீழ் உள்ள) சிறிய பைகளைத் தொங்கும்படி விட்ட வேறு பல (சிறிய) முடிகளையும் உடைய, கருங்கோல் ஏந்தி - சிறந்தகோலை ஏந்தி, ஆகுவது அறியும் - இனி வருவதை அறிந்து கூறும், முது வாய்வேல-பழமைமையாய்ப் பயின்றசொற்களை உடையவேலனே, யாய் - தாய், அருஞ்சுரம் இறந்த - (தன் காதலனுடன்) அரிய சுரத்தைக்கடந்து சென்ற, என் பெருந்தோள் குறுமகள் - என்னுடைய பெரிய தோள்களையுடைய சிறு மகள், திருந்து வேல் விடலையொடு - (தன்னுடன் வந்த) திருந்திய வேலை உடைய விடலையொடு, வரும் என - வருவாள் என்று, புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி - புனையப்பட்ட மாட்சிமையாகிய மதிலில் செந் நிறத்தை ஊட்டி, மணிமணல் அடுத்து - மணியின் முன்னிடத் தில் மணலைப் பரப்பி, மாலை நாற்றி - மாலைகளைத் தொங்கவிட்டு, இனிது உவந்து அயரும்-நன்கு களித்துத்தன்னை மறந்திருப்பள், என்ப - என்று உலகோர் கூறுவர், யானும் - நானும், பிணைமான் நோக்கின் மடநல்லாள் - பெண் மானின் கண்களைப் போன்ற கண்களையும் இளமையையும் நற்குணங்களையும் உடைய என் பெண்ணை, ஈன்ற நட்பிற்கு - (தான் பத்துத்திங்கள் வயிற்றிற் சுமந்து வருந்தி) பெற்ற அன்பின்பொருட்டு (அவள் தலைவன் என்பால் அருள்புரியாதுயினும்), இன்னகை முறுவல் ஏழையை-அழகிய பற்களையும் புன்சிரிப்பையும் உடைய அப்பெண்ணை, பல் நாள் - பல நாட்கள், கூந்தல் வாரி - அவளது கூந்தலை வாரி, நுகப்பு இவர்ந்து - என்னிடப்பிலே சுமந்து (இவர்வித்து என் னும் பிறவினை இவர்ந்து என்னுந்தன்வினையாயிற்று),ஓம்பிய-காப் பாற்றிய, நலம் புனை - நலத்தினைக் கொண்ட, உதவி மன் உடை யேன்-உதவி மிகுதியும் உடையேன், அஃது அறிகற்பின் அன்று - அதனை அறிந்த (நெஞ்சுன்றிய) நினைவினால் அவன் என்பால் அருள் புரிதலன்றி, மற்று இல்ல - அவனை அருள் புரியும்படி செய்தற்குக் காரணமாகிய வேறு நலங்கள் என்கண் இல, மாறாது வரும்பனி கலுழும் கங்குல் - நீங்காமல் வரும்பனி சிந்து கின்ற இராப்போதுகளில், ஆனாது துயரும் - நீங்காமல் வருந்து கின்ற, எம்கண் இனிது படீஇயர் - எங்களிடத்தில் இனிமை பொருந்தும்படி, முந்துற - முன்னாக, எம் மனைத் தருமோ - எங்

கள் மணைக்கு அழைத்து வருவானே? தம் மணை உய்க்குமோ - தங்கள் மணையின்கண் அழைத்துக்கொண்டுபோய்ச் சேர்ப்பானே? அவன் குறிப்பு யாது - இவற்றுள் அவன் மனக்கோள் யாது? (அதணை), கழங்கின் திட்பம் - உன் வெறியாட்டத்தின் வன்மையினால், கூறுக - சொல்லுக. மாது, ஓ - அசைகள்.

(உ0ள) மாறன் இவ்வையத்தவர் மகிழ-மாறனது இங்காட்டில் உள்ளவர்கள் களிக்க, 'காளையை ஈன்ற கடன் அறி கல்நெஞ்சின் காரிகை, மாறன் இவ்வையத்தவர் மகிழ நாளை நம் இல்லுள், வதுவை அயர்தர நல்குங்கொல்?' என இயைக்க.

(உ0அ) 'பொய்யே புரிந்த அக்காளையை ஈன்ற பொலங்குழை, (நம் இல் உள்) வென்றனது மெய்யேறிய சீர் மதுரை விழவினைப்போல் நெய் ஏர் குழலி வதுவை அயர்தர நேருங்கொல்?' என இயைக்க.

பக்கம், 161:—'நும்மனைச் சிலம்பு' என்னுஞ் செய்யுள்:

'வென்வேல் மையற விளங்கிய கழலடி பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கு, 'நும்மனை சிலம்பு கழீஇ அயரினும், எம்மனை வதுவை நல் மணம் கழிக,' எனச் சொல்லின் எவன்?' என இயைக்க. ஓ, மற்று, ஏ - அசைகள்.

(உ0ஊ) 'அன்பர், மாறனது இகல் மூணபோல் கொன்று ஆறு அலைக்கும் சுரத்தூடு நீங்கலும் (என்னுடைய) கோல் வளைகள் சென்றால் அதணை இவ்வூரவர் பிறிதாகச் சிந்திப்பர்,' என இயைக்க.

பக்கம், 164:—'தோல்கவின் தோலைய' என்னுஞ் செய்யுள்:

தோழி! அலர் கவிந்து - மலர்கள் தலை கவிழ்ந்து, மாமடல் அவிழ்ந்த - பெரிய இதழ்கள் விரியப்பெற்ற, காந்தள் அம் சாரல் - காந்தள்களையுடைய அழகிய சாரலின்கண், ஞால் வாய்க் களிறு - தொங்குகின்ற வாயையுடைய ஆண் யாணை, பாந்தள் பட்டென - பெரும்பாம்பின் வாயில் அகப்பட்டதாக, பிடி - பெண் யாணை, துஞ்சாத் துயரொடு அஞ்சு பூசல் - நீங்காத துயரத்தோடு அஞ்சிப் புரிந்த (பிளிறலாகிய) பேரொலியானது, நெடுவரை விடர் அகத்து இயம்பும் - பெரிய மலையிடத்துள்ள விடர்களிற் சென்று எதிரொலியை உண்டாக்கும், கடுமான் புல்லிய - கடிய வேகத்தினை உடைய புல்லி என்பவனுடைய, காடு இறந்தோர் - (திருவேங்கட மலையின்) காடு

களிற் சென்ற நம்முடைய தலைவர், தொல்கவின் தொலைய-பழை மையாகிய (என்) அழகு கெடும்படி, தோள் நலம்-(என்) தோள் களின் (பல) நலங்களையும், சாய் - (என்னைக் கூடி) அழித்து, நல்கார் - (எனக்கு) இன்பந்தராமல், நீத்தனராயினும்-(கைவிட் டுச் சென்றார் என்று கூறுகின்றனை. அங்ஙனம்) கைவிட் டுச் சென்றாராயினும், செம்பியன் - சோழன் (கிள்ளி வளவன்), குட்டுவன் - சேரலனது, அகப்பா - (கழுமலத்தின்) மதில், அழிய தூறி - (ஒருங்கு) அழியும்படி இடித்தொழித்து, பகல் தீவேட்ட ஞாட்பினும் - (அவ்வூரை) அன்றைப் பகலே தீயின் வாயில் இட்ட போரைவிட, மிகப்பெரிது - மிகப் பெரிதா கிய, அலர் எழச் சென்றனர் ஆயினும்-பழிச்சொல் உண்டாகும் படி சென்றாராயினும், நட்டனர் - (நம்பால் மிக்க) அன்பு வைத் தனர் (ஆதலால், அவர் குறித்த பருவத்து வந்து தலையளி செய் வர்), வாழி - (ஆகையால் அவர்) நீடி வாழ்வாராக.

(உகo) இகலே புரிந்து - பகைமையே செய்து (பகையே கொண்டு, அன்றித் தங்கள் வன்மையாகிய செயல்களையே செய்து என்றலுமாம்), இருஞ்சிறை வான் - பெரிய சிறகையும் வானிடத்தையும், புகல் புரிய - தங்கள் புகலிடமாக அடையும் படி, மிகலே புரிகின்றது - வளர்ந்தே வருகின்றதை,பகலே புரிந்து இரை தேர்கின்ற - பகலிலேயே விரும்பி இரை தேடி உண்கின் றன. 'கன்னி அன்னுள் புலம்புறு நோய் மிகலே புரிகின்றது கண்டும் நாணப் பறவைகள், இவ்வியன் கழிவாய்ப் பகலே புரிந்து இரை தேர்கின்ற,' என இயைக்க.

(உகக) 'மலைபோல் களி யாணை, அடும்யாணை' என்க. 'செங் கோல் மன்னன் வஞ்சியன்னாய்! நீ நினைக்கின்றது படும் அலை (ஒலி) போல் வண்டு மகிழ்ந்து பாடிச் செங்காந்தள் பைந்தேன் பருகும் நெடுமலை நாடனை நீங்கும் என்றோ?' என இயைக்க.

பக்கம், 165:—'குழலிசைய வண்டினங்கள்' என்னுஞ் செய் யுள்.

குழலிசைய வண்டினங்கள் - குழலின் இசையைப்போன்ற இனிய இசையைப் பாடும் வண்டின் கூட்டங்கள், கல் அருவி தூஉம் - மலை அருவி நீரைச் சொரிகின்ற, அளிய - அளிசெய்யத் தக்கன, அழல் எரியில் - வெப்பஞ்செய்யும் நெருப்பில், 'வண்டு இனங்கள் செங்காந்தள் குலைமேற்பாய, அயல் வாழ் மந்தி, '(அவ்

வண்டுகள்) அழல் எரியில் மூழ்கின; அந்தோ! அவை அளிய,' என்று கலுழ்வனபோல் கல்(மலை) ஆனது அருவி தூஉம் நிழல் வரை நாடன் நீப்பன் அல்லன்,' என இயைக்க.

(உகஉ) 'சான்றோர் - (பார்ப்பாரும்) பிற சான்றோரும் ஆகியவர்களின் வரவும், விடுத்தவர்தம் (தலைவரது) தகவும், நமது வான் தோய் குடிமையும் நோக்கின் அல்லான் (நோக்கி மகட்கொடை நேர்தலல்லது), வள் பொருள் கருதின், இம்மெல் இயற்குச் செம்பியனகிய மாறனது செந்கோல் மணந்த மீன் தோய் கடல் இடந்தானும் விலை அன்று,' என இயைக்க.

(உகங) 'நடையால் இதுவென்று நேரின் அல்லால் ஒள் நுதற்கு உசிதன் உலகும் விலை அன்று,' என இயைக்க.

பக்கம், 168:—'சான்றோர் வருந்திய' என்னும் செய்யுள்:

'சான்றோர் வருந்திய வருத்தமும், நமது வான் தோய்வு அன்ன குடிமையும் நோக்கித் திருமணி வரன்றும் குன்றம் கொண்டு இவள் வருமுலை ஆகம் வழங்கின் நன்று; அஃது அன்றி, அடை (தற்குரிய) பொருளைக் கருதுவிராயின், செம்பியன் பங்குனி விழவினையுடைய வஞ்சியுடன் உள்ளி விழவினையுடைய உறந்தையும் சிறியதாம்,' என்க. (இதன் பொருள் வெளிப்படை.)

(உகச) 'கருங்கடலே! 'காதலர் தம்மை நெருங்கி மாறன் தன் அம் குமரிப்போது அலர் கானல் புணர் குறி வாய்த்தாள் புலம்பி நைய எதிலர் (போல்) நோய் செய்வதோ?' என ஊனம் கழறினென்,' என இயைக்க.

பக்கம், 176:—'ஒள் தூவி நாராய்' என்னுஞ் செய்யுள்:

'ஒள் தூவி நாராய்! நின்சேவலும் நீயும் ஆய், வண்டு ஊது பூங்கானலின்கண் வைகலும் செல்திர் (செல்கின்றீர்; அங்ஙனம் செல்கின்ற நீங்கள்) எம் காதலரைக் கண்டீர் (கண்டு), 'பெண் (பெண்ணின் பொருட்டுத்) தூது வந்தோம்,' என உரைத்துக் கழறியக்கால் (வற்புறுத்திச் சொன்னால்) காதலர் (உங்களைக்) கடிபவோ?' என இயைக்க.

(உகநி) 'தகவு இன்மை, மயங்கு இருள் நாளின்கண் வந்த நீர்த்துறைவனுக்கு என் கண்படாத நிலைமை சொல்லாது இளஞ் சேவல் தழீஇத் தன் கண்படாநின்ற அன்னத்தோடு,' என இயைக்க.

பக்கம், 177:—'புன்கண்கூர் மாலை' என்னுஞ் செய்யுள்:

இன்கள் வாய் நெய்தால் - இனிய கள்ளைக்கொண்ட வாயை உடைய நெய்தலே! புன்கண்கூர் மாலை - துன்ப மிகுதற்குக் காரண மாகிய மாலைப் பொழுதில், புலம்பும் என் கண் போல்—, துன் பம் உழவாமல் - (துயிலுதலின்றித்) துன்பத்தால் வருந்தாமல், துயிலப்பெறுதி - துயில்கின்றாய், நீ எய்தும் கனவினுள் - (அத் துயிலின்கண்) நீ காணும் கனவின்கண், வன்கண்ணர் - கொடு மையை உடையவராகிய (எங்கள்) தலைவரானவர், கானல்-கான லின்கண், வரக்கண்டறிதியோ - வரக்கண்டறிவாயோ?

(உகசு) 'நெடுந்தேர்க்காயுங் கதிரோன்! மலையிற்போய் மறைந் ததனால் ஆகிய கனை இருளாகிய இன்ன நாளில் இம்மடந்தை தனித்தவளாய், அரிகேசரி முனை போல் தேயும் நினைவொடு துஞ் சாள்; இச்சேயிழையாள் தாயும்துயில் மறந்தாள்,' என இயைக்க.

(உகள) திங்கள் கல் சேர்ந்த - திங்கள் அத்தகிரியைச் சேர்ந்த. 'திங்கள் கல் சேர்ந்த அரையிருளின்கண் ஊருந்துயின்று இடம் காவலோடு அன்னை உள்ளுறுத்து எல்லாரும் துயிலினும் நமலிகள் துஞ்சா; வரோதயனது வஞ்சியன்னாள் தேம்தண் சிலம் பணைச் சேருந்திறம் என்னை?' என இயைக்க. நமலிகள் - நாய் கள்.

(உகஅ) 'அந்தண் கூடல் அன்னாய்! இவ்வியன் நகரானது (நகரிஅள்ளார்; இடவாகுபெயர்), பொன்னுகிய உம்பரது பேருல கில் மேவும் (எடுக்கப்படும்) விழவொடு (விழாவுடன்), 'பொன்னும் உம்பர் மேவும் விழவொடு' என்பதற்குப் 'பொன்னுகிய உம்பரது உலகத்தில் எடுக்கப்படும் விழாப்போன்ற விழாவுடன்' என்று பொருள் கொள்க; (இன்று) இரவில் (தேவர்கள் பொருட்டுப்) பூவும், புகையும் கமழ்வித்துத் துஞ்சாது (துயில்கிலர்),' என இயைக்க.

(உகக) வடிக்கண் - கூர்மையான நோக்கினையுடைய கண். 'தென்னவன்கூடல் அன்னாய்! வடிக்கண்கள் இரண்டினாலும் வள் நகரைக் காக்கும் வைவேல் இளைஞர்களுடைய துடிகளின் கண் இரண்டும் (இன்றைக்) கங்குல்தலை (தலை - ஏழன் உருபு) ஒன் றும் (சிறிதும்) துயின்றில,' என இயைக்க.

(உஉ0) 'வென்று களங்கொண்ட கோனது தமிழ் நாடு அன்ன மெல் இயலாய்! நிலா மதியானது இன்று இவ்விரவின் கண் விசும்பிலே நின்று பகல்போல் விரியாநின்றது; இருள்சென்று

இடம் கொண்டது எங்கு ?,' என இயைக்க. கொல், ஓ - அசை கள்.

பக்கம், 178:—'இரும்பிழி மகாஅர்' என்னுஞ் செய்யுள்:

இரும்பிழி மகாஅர் - மிக்க தேன் உண்டி களிக்கும் மக்களை உடைமையினால், அழுங்கல் மூதூர் - ஆரவாரத்தினையுடைய இப்பழைய ஊரில் உள்ளார் (ஊர் - இடவாகு பெயர்; 'அழுங் கல் இம்மூதூர்' என்க), விழவு இன்று ஆயினும் - விழாவினை உடையதாயிராவிடினும், துஞ்சாது ஆகும் - துயிலாதிருக்கின் றனர்; மல்லல் ஆவணம் - வளப்பத்தினை உடைய கடைத்தெரு வில் இருப்பவர்களும், மறுகு - மற்றைத் தெருவில் இருப்பவர் களும் (ஆவணம், மறுகு - இடவாகு பெயர்), உடன்மடியின் - ஒருங்கு துயிலினும், வல் உரை - வன்மையாகிய பேச்சையும் (வல் உரையாவது, பிறர் தடுக்க முடியாத பேச்சு), கடுஞ்சொல் - கொடிய சொற்களையும் உடைய, அன்னை துஞ்சாள் - தாய் துயி லாள், பிணி கோள் அருஞ்சிறை - பிணியையும் கூற்றினையும் போலும் தப்புதற்கு அரிய சிறைக்காவலை உடைய, அன்னை துஞ் சின் - தாய் துயின்றாலும், துஞ்சாக் கண்ணர் காவலர் - துயி லாத கண்களை உடையவர்களாகிய ஊர் காவலர்கள், கடுகுவர் - விரைந்து வருவார்கள், இலங்கு வேல் இளைஞர் - விளங்குகின்ற வேலை உடைய அவ்விளைஞர், துஞ்சின் - துயின்றாலும், வை எயிற்று - கூரிய பற்களையும், வலஞ்சுரித்தோகை - வலமாகச் சுரிந்த வாலையும் உடைய, ஞாளி மருளும் - நாய் குரையாகிற்கும், அரவ வாய் ஞமலி - ஒலியினைக் கொண்ட வாயை உடைய நாய், குரையாது மடியின் - குரைக்காமல் துயின்றாலும், விசும் பின் அகல் வாய் மண்டிலம் - விசும்பினது அகன்ற இடத் தில் உள்ள சந்திரன், பகல் உறழ் நிலவு கான்று - பகலின் உருவினை ஒக்கும் நிலாவைச் சொரிந்து, நின்று விரியும் - நிலைபெற்று விரியாநிற்கும், திங்கள் கல் சேர்பு - சந்திரன் அத்த கிரியைச் சேர்தலின், கணை இருள் மடியின் - மிக்க இருள் வந்து சூழ்ந்ததாயினும், இல் எலி வல்சி - வீட்டெலியாகிய உணவினை உடைய, வல் வாய்க் கூகை - வலிய வாயை உடைய கூகைச் சேவலானது, கழுது வழங்கு யாமத்து - பேய் இயங்கும் நடு யாமத்தில், அழிதகக் குழறும் - அழிவு உண்டாகும்படி குழறு கிற்கும், வளை கண் சேவல் - (வசித்தற்கு மரத்தின்) பொந்தினை விரும்பும் கூகைச் சேவலானது, வாளாது மடியின் - குழறாமல்

துயின்றனும், மணைச்செறி கோழி - மனையின்கண் செறிக்கப் பட்ட கோழி, மாண் குரல் இயம்பும் - (தனது) மாட்சிமைப் பட்ட குரலை எடுத்துக் கூவாகிற்கும், எல்லாம் மடிந்த காலத்து - இவை எல்லாம் துயின்ற ஒரு காலத்தில், ஒரு நாளும் நில்லா நெஞ்சத்தவர் வாரலர் - (என்னிடத்தினின்றும்) ஒரு நாளும் பிரிந்து நிற்காத நெஞ்சத்தினை உடைய காதலர் வாரலர், அதனால், அரிபெய் புட்டில் ஆர்ப்ப - பருக்கைக் கற்களைப் பெய்த சதங்கை கள் ஒலிக்க, பரிசு இறந்து-ஓட்டத்தில் மிக்கு, ஆதி போகிய-ஆதி என்னுங் கதியிற்றோர்ந்த, பாய் பரி நல் மா - பாய்ந்து செல்லும் விரைவினையுடைய நல்ல குதிரைகளையும், கொச்சி வேலி - காவல் வேலியினையும் உடைய, தித்தன் உறந்தை - தித்தனது உறை யூரைச் சூழ்ந்த, கல் முதிர் புறங்காட்டு அன்ன - கல் முதிர்ந்த புறங்காடு போன்ற, பல் முட்டின்று - பல இடையூறுகளை உடையதாயிராகின்றது, நம் களவு - நமது களவொழுக்கம். (ஆதி - குதிரையின் நேரோட்டம். 'அன்ன' என்பது 'முட் டின்று' என்பதன் பகுதியாகிய 'முட்டு' என்பதனைக் கொண்டு முடிந்தது. முட்டின்று - குறிப்பு வினை முற்று; இதில் இன் சாரியை என்க.)

(உஉக) 'கொல்லி அருவரைவாய் (கள்ளின்) மருள் தங்கு வண்டு அறை (ஒலிக்கின்ற) சோலைப் பொதும்பின் வழங்கற்கு இன்னு (ஆயிருக்கும்) இருள் தங்கு நீள் நெறியில் எம்பொருட்டு வந்தியங்கன்மின்,' என இயைக்க.

(உஉஉ) புனம் வரை வாய் - புனத்தின்கண் மூங்கில்கள் பொருந்திய, அரை எல்லி - நள்ளிரவில், எண்கு - கரடி. 'பண் குடை சொல் இவள் காரணமா(கத்) தென்னனது புனம் வரை வாய் எண்கு உடைப்பொதியிலாகிய நீள் வரை அரை எல்லி நீ இயங்கன்மின்,' என இயைக்க. ('இயங்கன்மின்,' என்றதற்கேற்ப 'நீயிர்' என்னுமல், 'நீ' என்றுள், துணையின்றித் தலைவன் தனிவரு தலை நோக்கி); இதனால், 'எண்குடை நீள்வரை (நெறியில்) அரை எல்லியின்கண் நீர் தனி வருதலின் எங்கட்கு அச்சமிகுகின்றது,' என்பதைக் குறிப்பித்தாள் என்று கொள்க.

(உஉங) 'ஐய! சேவை வென்றனது பொதியில் பொன் பிதிர்ந்தால் அன்ன மின்மினி சூழ் புற்றின் முற்றிய சோற்றின் பிதிர் எண்கு ஏறு வாங்கித் திளைத்து உண்ணும் ஈண்டு இருளின் கண் அன்பு எதிர்ந்தாலும் வருதல் பொல்லாது,' என இயைக்க.

(உஉச) கணை இருள் நள் இரவின் - மிக்க இருளை உடைய நடு இரவின்கண், ஐ அமை - அழகிய மூங்கில், மை - மேகம். 'ஐ அமை தோய் வெற்ப! மாறன் மை தோய் பொதியிலின் தெய்வம் எல்லாம் மருவிப் பிரியாத சிறு நெறியில் கை அமை வேலை விளக்காக(க் கொண்டு) வாரல்,' என இயைக்க.

(உஉநி) மங்கைக்கு - மங்கையை (உருபு மயக்கம்). 'விண் தோய் சிலம்பா! தோள்வாய் மணிநிறம் மங்கைக்கு வாட்டவும் (அவளைத்) துன்னுதற்கு மாறனது மை தோய் பொதியிலாகிய கோள்வாய் இளஞ்சிங்கம் நீங்காதனவாய்த் திரிதருகின்ற குன்ற கத்தினூடு நாள்வாய் வருகி (வருகின்றாய்),' என இயைக்க. ('இங்ஙனம் நீ வருதல் அச்சத்தினை விளைக்கின்றது. ஆதலின், நீ வாரற்க,' என்பது எஞ்சி நின்றது).

(உஉசு) 'பூந்தண் சிலம்ப! விசாரிதன் விண் தோய் குடுமிப் பொதியிலின்கண் உள்ள தேந்தண் சிலம்பினது என்றும் அரிமா திரிதரும் நெறியினூடு காந்தள் மூகை அன்ன மெல்விரல் ஏழை தன் காரணமாக இரவில் வருதல் பொல்லாது,' என இயைக்க.

(உஉஎ) 'ஐய! தொழுதுங் குறையுற்று வேண்டுவல்; மாறன் எங்கோன் முனைபோல் கழுதும் (பேயும்) துணிந்து வழங்கல் செல்லாத கணை இருளில் அழுதும் புலம்பியும் நையும் இவள் பொருட்டாக வாரல்,' என இயைக்க.

(உஉஅ) 'மைதலை வைத்த வள் பூங்குன்ற நாட! மைதலை வைத்த - மேகங்களைக் குவட்டிற்கொண்ட, நெய்தலைவைத்த வை வேல் - நெய் முனையிற் பூசப்பெற்ற கூர்மையாகிய வேல். 'மாறன் எம் கோன் முனைபோல் கழுது கை தலை வைத்துக் கண் சோரும் கணை இருளிலை பூங்குழலாள் பொருட்டாகப் பொய் தலை வைத்த அருளொடு நீ வரவு ஒழி,' என இயைக்க.

(உஉக) பறந்தலைக்கு - பறந்தலையின்கண் (உருபு மயக்கம்). 'அணி கொண்ட தார் அண்ணல்! (அண்மை விளி), சுடர் தோய் பொதியில் (சுடர்-சூரியனும் சந்திரனும்), கானவர்,மணிகொண்டு வேழங்கடியும் மயங்கு இருளில் வாரல்,' என இயைக்க.

(உஙo) உரவும் கடல் - வலிமை செய்யும் கடல். (உரவும் என்பது உரவு என்னும் பெயரின் அடியாகப் பிறந்த வினை; பொய்த்த என்பதிற்போல), இடம் - குறியிடம், இன் அருள் என்று ஆயினது-உன்னுடைய இனிய அருளானது பகல் இரவுகளில் எப்பொழுதைப்பற்றியானது? இரு பொழுதினும்

அமைந்திருப்பதேயாகும். 'இன் அருள் என்றும் ஆயினது,' என்று கொண்டு, 'உன்னுடைய இனிய அருள் இரவு பகலாகிய எப்பொழுதும் அமைந்திருப்பதாகும்,' என்று பொருள் கூறுதலுமாம். இப்பொருளில் முற்றும்மை தொக்கது எனக் கொள்க. '(ஐய!) தையலானவள், கன்னியங்கானலில் (குறி) இடம் நீ பகல் (மாத்திரம்) வரவு மகிழ்ந்திலள்; வெய்யோன் மலையிற் போய் மறைந்த இரவும் (இரவினும்) வரவு ஊனம் என்ன (வருதலால் என்ன இடையூறு உண்டாம்?) ('உன்னுடைய) இன் அருள் என்று ஆயினது,' என இயைக்க.

(உஉக) அடிமேல்-தன் அடியின்மீது, அகல் இடம் எல்லாம் வணக்கி-விசாலமாகிய இடத்தினை உடைய பூமியில் உள்ள வேந்தர்களை எல்லாம் வணங்கச் செய்து, உயர்த்த கொடிமேல் உரும் அதிர்-தன் தேரின்மீது உயர்த்திய கொடியில் உள்ள இடி அதிரும் (கூர் இருளில் என்க.) 'காதற்றலை நின்றீர்! மாறன் முன்னாள் உயர்த்த கொடிமேல் உரும் அதிர் இருளின்கண் வாரன்மின்; நீர் மகிழும் படிமேல் பகல் வம்மின்; (அவ்வாறு வருதலை) என் பல் வளை (என் பல் வளையையுடைய பெண்) விரும்பும்,' என இயைக்க. பல்வளை - அன்மொழித் தொகை.

(உஉஉ) அஞ்சாது எதிர் மலைந்தார் அமர் நாட்டுடன் மடிய - அஞ்சுதல் இன்றி எதிர் நின்று மலைந்தவர்கள் விரும்பும் நாட்டில் உள்ள படைகளோடு மடிய, வர ஊனம் என்ன-வருதலால் இடையூறு யாதுளதாம்? 'மஞ்சு ஆர் சிலம்ப! தென்னன் கல் நாடு அனைய பஞ்சு-ஆர் அகல் அல்குல்பால் பகல் வந்தால் பழி பெரிது ஆம்; மயங்கு இருளின்கண் வந்தால் ஊனம் என்ன?' என இயைக்க.

(உஉஊ) ஓதம் கடைந்து - திருப்பாற்கடலைக் கடைந்து, (ஓதம்-கடல். அஃதீண்டுத் திருப்பாற்கடலை உணர்த்தி நின்றது.) ஏதம் - காவல் முதலியவற்றுள் எய்துந் துன்பம். மாது அடைந்த மெல் நோக்கி திறத்து - நின்பால் விருப்பஞ் செறிந்த மெல்லிய நோக்கத்தையுடையாளிடத்து. 'ஐய! பழியினெடு ஏதம் எய்துதலால் அங்கு மாது அடைந்த மெல் நோக்கி திறத்து வாரன்மின்,' என இயைக்க.

பக்கம், 183:—'கறங்குவெள் ளருவி' என்னுஞ் செய்யுள் :

கறங்கு வெள் அருவி பிறங்கும்-ஒலிக்கின்றவெள்ளிய அருவி விளங்கும், மலைக்கவான்-மலையின் சாரலில், தேன் கமழ்-தேன்

கமழ்கின்ற, இணர் வேங்கை சூடி - கொத்தாகிய வேங்கை மலர்க ளைச்சூடி, பெண்டிரொடு தொகைஇ மறுகில் தொண்டகப் பறைச் சீர்வாங்கும் - பெண்டிரொடு கலந்துவந்து தெருவில் தொண்டகப் பறையின் தாளத்திற்கொப்ப ஆடவர் ஆடாகிற்கும், சிறு குடிப் பாக்கத்து - சிறு குடிப்பாக்கத்தின்கண், இயல் முருகு ஒப்பினை - இயங்காகிற்கும் ஒரு முருகனை ஒப்பாயாகி, வயநாய் பிற்பட-உன் காய் பின்னேவர, பகல்வரின் - பகற்போதின்கண் வருவாயானால், கௌவை அஞ்சுதும் - (அதனால் வரும்) அலருக்கு அஞ்சாகிற் போம்; அடுபுலி - அடுகின்ற புலியானது, கயவாய்ப் பெருங்கை யானை கோள் பிழைத்து - பெரிய வாயையும் நீண்ட துதிக்கை யையும் உடைய யானையைக் கொள்ளுதலிற்றப்பி, இரும்பிடி கன்றோடு விரைஇ இகல் கொள இரீஇ-அந்த யானை கரிய பெண் யானையோடும் கன்றோடுங் கலந்து வன்மை கொண்டி (வேறோர் இடத்தில்) மறைந்திருக்கும்படி செய்து, வழங்கும் - திரியும், ஆர் இருள் நடு நாள் - நிரம்பிய இருளையுடைய நள்ளிரவில், தனியை வருதல் - நீ தனியளாகி வருதலை, அதனினும் அஞ்சு தும் - அவ்வலருக்கு அஞ்சுதலினும் மிகுதியாக அஞ்சாகிற் போம், பல் நாள் - பல நாளினும், புணர் குறி செய்த - புணரும் (இடமாகக்) குறித்தலைச் செய்த, புலர் சூரல் ஏனல் - முற்றிய கதிரையுடைய தினைப்புனத்தில், கிளிகடி பாடலும் ஒழிந்தனள் - (தினையைக் கவரவருங்) கிளியை ஓட்டும் பாட்டைப் பாடுதலையும் ஒழிந்தனள், தான் என் ஆகுவள்கொல் - என் தோழி (இனி) என்ன ஆகுவளோ, தான் அளியள் - அவள் இரங்கத்தக்கவள், நின் அலது இலளே - நின் (அருளை) அன்றி(ப் பிறிதொரு பற் றுக்கோடும்) இல்லாதவளேயாயிருக்கின்றாள்.

(உரை) அலை கடலே - அலைகின்ற கடலே, இரவின் எல் லாம்-இராமுழுதும். 'அலைகடலே! நினைத்து உரும்எந்தியகோனது கன்னித் தாழ் துறைவாய்ப் பொன் போலும் மலர்களையுடைய கானலும் நோக்கிப் புலம்பு கொண்ட என் போல் இரவின் எல் லாம் துயிலாது நின்று (துயிலாதிருந்து) ஏங்குதி; (நீயும்) அன் போடு ஒருவற்கு அறிவு இழந்தாயோ?' ('உரை' என்பது எஞ்சி நின்றது.)

(உருபு) செங்நிலத்தை வெம்போர் வென்றோன் - செங் நிலத்தை வெம்போரில் வென்றவனுகிய ('இயல் நில வேந்தன்' என்க). ஒலி கடலே - ஒலிக்கின்ற கடலே. 'ஒலி கடலே! விசா

ரிதனுடைய வெல் கழல் சேர்ந்து ஒன்றூர் மூணபோல் (இரவு முழுதும்) கலங்கித் துஞ்சாய்; (என்போல்) நினக்குப் பொன் பயப்பித்து நல் நிறம் கொண்டு புணர்ந்து அகன்று சென்றூர் உளரோ? சொல்லாய்,' என இயைக்க.

பக்கம், 184:—'பறைவாய் ஒலிஓதம்' என்னுஞ் செய்யுள்:

வீராய் - கடலே! பறைவாய் ஒலி ஓதம் - பறையினின்று உண்டாகும் ஒலியைப்போன்ற ஒலியை உடைய அலைகள், பந்தர் உகளும் - (கரையின்கண் உள்ள) பந்தல்களிற் சென்று பாயும், துறைசேர் - துறையின்கண் உள்ள, சிறு குடியார் துஞ்சினும் - சிறு குடியினர் துயின்றாலும், நிறை இல் - நிறை கெடுதற்குக் காரணமாகிய, மருள் மாலை - மயக்கத்தைச் செய்யும் மாலைப் போதின்கண், எம் போல நீத்த - எம்மை நீத்துச் சென்றாற் போல உன்னை நீத்துச் சென்ற, துறைவன் நீ உடையையோ - ஒரு கடற்கரைச் சேர்ப்பனை(என்போல)யும் உடையையாயிருக்கின்றனையோ? ('உரை' என்பது எஞ்சி நின்றது. வாழி - அசை.)

(உகசு) 'ஐய! மாறனுகிய எங்கோனது நேரி என்னும் மைந்நின்ற குன்றத்தின்கண் உள்ள சிறு குடியில் நீர் வந்து நின்றால், நின்று கை கூப்பி வரை உறை தெய்வம் என்னது (என்று நினையாமல், நீர் எம் தலைவியோடு களவொழுக்கத்தில் நிற்பதை) மெய்ந்நின்று உணர்ப எனின், மற்று இம்மெல்லியல் உய்யுமோ?' என இயைக்க.

(உகஎ) 'அன்னாய்! நெருநல் நிகழ்ந்தது கேள்: எம்மனையானவள், 'நெடுமாறனது குமரி அம்பூம் பொழில்வாய் மின் ஆர் மணிநெடுந்தேர் ஒன்று கங்குல் வந்து மீண்டது உண்டு,' என்னை முகஞ் சிவந்து எம்மையும் நோக்கினள்,' என இயைக்க. ('இன்னது கருதி என்பது அறியேன்,' என்பது ஈண்டு எஞ்சி நின்றது.)

(உகஅ) 'வாள் நெடு மாறன் மலயம் என்னும் விண் இவர் குன்றத்து அருவி சென்று ஆடி ஓர் வேங்கையின் கீழ்க் கண் இவர் காதல் பிடியொடு நின்ற கருங்களிறு பண் இவர் சொல்லி கண்டாள்,' என இயைக்க. ('கண்டு, 'இது போல நம் பெருமானும் நமக்கு வழிபட அமையுங்கொல்,' என்றாள்,' என்பது எஞ்சி நின்றது.)

(உகக) வானோர்க்கு அமுது இயற்றிக் கொடுத்தான் குல மன்னன் - திருப்பாற்கடலைக் கடைந்து அதினின்று வானவர்

களுக்கு அமுதத்தை உண்டாக்கிக் கொடுத்த திருமாலின் அமிச மானவனுகிய சிறந்த மன்னன் (கொடித்தான், படித்தான் என்ப வினையால் அணையும் பெயர்கள்). 'தொடித்தால் மலரும்பைங் கோதை(யே)! பராங்குசனது கன்னி அங்கானலின்கண் உள்ள பறவைகள், நம் தூதாய் (ச் சென்று) துறைவனுக்கு வடித்தான் படா(த) வண்ணம் (நமது நிலையைச்) சொல்லுங்கொல்?' என இயைக்க. தொடித்தால் மலரும் பைங்கோதை என்றது, தலைவன் தன்னை வரைந்துகொள்வதினால் மகிழும் மனநிலையை உடைய ளாயிருக்கின்றனள் தலைவி என்பதனை உணர்த்திற்று. (இஃது உள்ளுறை உவமம்.)

பக்கம், 190:—'அண்ணுந் தேந்திய வனமுலை' என்னுஞ் செய்யுள் :

இதன் குறிப்பை 307-ஆம் பக்கத்திற்காண்க.

(உசo) 'விசாரிதனுகிய தென்னனது கல் நாட்டு உறை பெண் அணங்கே! பொய் இல்லாத சொல்லார், மை இலாத தம் கல்வியை மிகுத்து வருவது எண்ணிச் செல்வர் போலும்,' என இயைக்க.

(உசக) 'அஞ்சுடர் வாள் நோக்கிய கோனது அம் தண் கூடல் அன்ன நுடங்கு இடையே! அன்பரானவர், தேக்கிய தெள் திரை முந்நீர் இரு நிலம் காக்கிய (காக்கச்) செல்வது காதலித்தார்,' என இயைக்க.

(உசஉ) 'நெடுநீர் வையை நாடன்ன நேரிழையே! நமர், தாக்கிய போர் வய வேந்தர் சந்து இடை நின்று ஆக்கிய (ஆக்க) செல்வது காதலித்தார்,' என இயைக்க.

(உசஙு) 'தென் புனல் நாடு அன்ன சேயிழையே! நமர், வாரார் முரசின் விரை சேர் மலர் முடி மன்னவற்காய்ச் சேரார் முணைமிசைச் சேறல் உற்றார்,' என இயைக்க.

(உசச) 'வள் தீந்தமிழ் அன்ன மடமொழியே! வில் நவில் தோள் அன்பர், கல் நவில் தோள் மன்னனது தெம்முனைமேல் செல்வர்,' என இயைக்க.

(உசஞ) 'தொடலைக் கமழ் நறுங்கண்ணியினுய்! அரிகேசரி தென் குமரிக் கடலைப் பருகி இரு விசும்பு ஏறிய கார் முகில் படலைப் பனி மலர்த் தாரவர் வைகிய பாசறைமேல் சென்று தோன்றுங்கொல்,' என இயைக்க.

(உசசு) (வாம்+மான் - வாவும் என்னும் பெயரெச்சம் ஈற்றுயிர்மெய் கெட்டு வாம் என்றுயிற்று.) 'ஆர்க்கும் வண்டு ஆர் தேமா நறுங்கண்ணியாய்! வாமான் நெடுந்தேர் வயமன்னர் வாள் முனையின்கண் சென்று தோன்றுங்கொல்,' என இயைக்க.

(உசஎ) வலஞ்சிறை கோலி - வலப்புறச் சிறகினுள் அடக்கிக்கொண்டு. '(பாகனே!) வையை நாடு அன்ன சேயிழை, (ஆண்) அன்னம் அன்பால் இன் பார்ப்பு ஒடுங்க வலஞ்சிறை கோலி, இடஞ்சிறையால் பெடை புல்லி நடுங்கும் அரும்பனி நாளின் கண் என்பால் படரொடு என்னும்?' என இயைக்க.

(உசஅ) 'தமிழ் நாட்டுக் குருகு, வலஞ்சிறைக்கீழ் இன்பு உடைப் பார்ப்புத்துயிற்றி இடஞ்சிறைக்கீழ் மெல் பெடை புல்லி நரல்கின்ற வீழ் பனியை அன்பு உடை மாதர் கண்டு ஆற்றுங் கொல்,' என இயைக்க.

(உசகூ) கலவாப் படியார் படைமா மதில்மேல் - மனங் கலத்தல் இல்லாத தன்மையை உடைய அரசர்களது சேனையை யுடைய மதிலின்மீது (படியார்-நிலத்தையுடைய அரசர்கள் என்றலுமாம். பார்த்திபர் என்பதனை நோக்குக), பனி வந்து - பனி வர (எச்சத்திரிபு), பாரித்தது - தோன்றியது. 'கொடி ஆர் இடை மடமான் பிணை நோக்கி(யின்) குழை (குண்டலத்தை யுடைய) முகம், அன்று கடி ஆர் இரும்பொழிற்கண் (என்னை) வாட்டி, இன்றும் கலவாப்படியாரது படையையுடைய மாமதில் பனி வந்து (வர, என்னை வாட்டுதற்குத்தானும் வந்து)பாரித்தது,' என இயைக்க.

(உருo) மீன் திளைக்கும் - ஒளி மிக்குப் பொருந்திய (வய வாள் என்க), மீன் - முதனிலை திரிந்த தொழிற்பெயர், தோன்றின்று - தோன்றியது. 'எங்கோனது வஞ்சி அன்னளின் மதி முகம், கயவாய் மலர்போல் கருங்கண் பிறழவும், வெள்தேரடு இலங்கவும், நயவார் முனைமிசைத் தோன்றின்று,' என இயைக்க.

(உருக) 'தென்னனது செங்கயலோடு (கண்ணும்) சிலையும் (புருவமும்) கிடந்த திருமுகம், அயல் (பக்கத்தில்)தங்கு வெள் ஒளி ஓலையதாய் (குழையை உடையதாய்ப்)பொங்கு அயல் வேந்தர் (வீறு கொண்டு எழுந்த பகை அரசர்) எரி மூழ்கத் தோன்றின்று,' என இயைக்க.

(உருஉ) மாறன் விண்டார் முனைமேல் - மாறனுடைய பகை அரசர்களின் முனைமேல் (அன்றி நெடு மாறனை வெறுத்த அரசர்

களின் முனைமேல் என்றேனும், நெடுமாறனுல் வெறுக்கப்பட்ட அரசர்கள் முனைமேல் என்றேனும் பொருள் கூறுதலுமாம்). 'வென்றே களித்த' என்றதை வேலுக்கேனும், நெடுமாறனுக்கேனும் அடையாக்குக. '(பாக!) நெடுமாறன் விண்டார் முனைமேல்சென்று வினை முற்றி மீண்டனம்; காரும் சிறிது இருண்டது; இள வஞ்சி என்ன நின்றே வணங்கும் ஏழை நெடுநகர்க்கு இன்றே புகும் வண்ணம் திண் தேர் ஊர்க,' என இயைக்க.

பக்கம், 206:—'உலகுடன் நிழற்றிய' என்னுஞ் செய்யுள்:

பாக!—, உலகு உடன் நிழற்றிய - உலக முழுதுக்கும் ஒருங்கு நிழலைச் செய்த, தொலையா - (வழிவழி வரும் தங்குடியினின்றும்) என்றும் நீங்குதல் இல்லாத, வெள்குடை - வெண் கொற்றக் குடையையும், கடல் போல் தானை - கடல் போன்ற (மிக்க) சேனையையும், கலிமா - வலிய குதிரையையும் உடைய, வழுதி அமர் வென்று உழந்த - பாண்டியன் (பகைவர்களைப் போரில்) வென்று வருந்திய, வியன் பெரும்பாசறைச் சென்று-மிகப்பெரிய படைவீட்டை அடைந்து, வினைமுடித்தனம் - வினை முற்றி மீண்டோம்; ஆயின் - ஆனுல், கார் பெயற்கு எதிரிய - மேகம் பெய்யும் நீரை எதிர்நோக்கியிருந்த, காண்தகு - யாவருங் காணத் தக்க, புறவில் - காட்டிலே, கணங்கொள் வண்டின் அம் சிறைத் தொழுதி - கூட்டமாயிருக்கும் வண்டுகளின் அழகிய சிறகுகளின் கூட்டம், மணங்கொள் முல்லை மாலை ஊர்ப்ப - மணத்தினைக் கொண்ட முல்லை மாலைகளில் ஆரவாரத்தினை உண்டாக்க, பொழுது - கார் காலம்; வந்தன்று - வந்துவிட்டது; உதுக்காண் - உதனைக்காண்; தண்ணுமை - தண்ணுமையின் ஒலியானது (தண்ணுமை என்னும் காரணத்தின் பெயர் அதனுல் உண்டாக்கப்படும் ஒலியை ஆகு பெயராய் உணர்த்திற்று), பல் மலர்ப் பொய்கை - பல வகையான மலர்களையுடைய பொய்கையின்கண், படு புள் - துயில்கின்ற புட்களை, எழுப்பும் - எழுப்புகின்ற, காய் நெல் - (கதிர்) முற்றிய நெற்களைக் கொண்ட, படப்பை - வயல்களை உடைய, வாணன் சிறு குடி - வாணனது சிறு குடியிலுள்ள, தண்டலை - சோலையின்கண் உள்ள (பல வகையாகிய) மலர்கள், (தண் + தலை - என்பது தண்மையாகிய இடத்தை உடையது என்றதலின் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப்பெயர்; அஃது ஆகுபெயராய்த்

தண்டலையாகிய இடத்திலுள்ள மலர்களை உணர்த்தியது), கமழும் கூந்தல் - கமழும் கூந்தலையும், ஒள் தொடி - ஒள்ளிய வளையையும் உடைய, மடந்தை - (என் அன்புடைய) நங்கையினுடைய, தோள் இணை பெற - தோள் இணையை (யான்) பெறும் பொருட்டு, நின் வல் வினை நெடுந்தேர் - உன்னுடைய (கற்ற) வல்ல வினையினுற் செலுத்தப்படும் நெடிய தேர், வல் விரைந்து - மிக விரைவாய், செல்க - (உன்னுற்) செலுத்தப்படுவதாக.

(உருஉ) பட்டு ஆர் - பட்டாடை அமைந்த, ('அரிகேசரியாகிய மருகன்' எனவும், 'முன்னுள் ஆயிரம் யானைகளை ஐயம் இட்டானுடைய மருகன்' எனவும் இயைக்க). கட்டு ஆர் - முருக்கு உற்று உள்ள, கமழ் கண்ணி போல் - கமழும் மாலையின் அரும்புகள் மலர்தல் போல. 'மருகனது தென்னாட்டு இருள் மேகம் கண்டு ஈர்ம்புறவில் கட்டு ஆர் கமழ்கண்ணி போல் மலர்கின்ற கார்ப்பிடவைப் பட்டு ஆர் அகல் அல்குல் பாவையும் காணுங்கொல்,' என இயைக்க.

(உருச) 'வாள் மன்னனது தென்னாட்டு இருஞ்சுருள்போய் விரிந்த புதவங்களை மேய்ந்து தம் மெல் பிணைகளை விட்டு அகலாதனவாய்த் திரிந்த திண்கோட்ட கலைமாஉகளும் செழும்புறவு புரிந்த மெல் ஓதியை வாட்டுங்கொல்,' என இயைக்க.

(உருரு) 'வெள்ளஞ் சென்ற நெறி கெழு வெள் மணல் மேல் நெய்யில் பால் விதிர்த்தால் அன்ன அம்துண் பொறிகெழு வாரணம் பேடையை மேய்விக்கும் பூம்புறவானது, செம்பியனது தென்னாடு அனைய வென்றி வெறி கமழ் கோதையினுடைய கண்களின் வேட்கையை மிகுத்தன்று,' என இயைக்க. வாரணம்-கோழிச் சேவல். 'நெய்யில் பால் விதிர்த்தால் அன்ன அம் துண் பொறி கெழு வாரணம்' எனவும், 'வாரணம் வெள் மணல் மேல் பேடையை மேய்விக்கும் பூம்புறவு,' எனவும் இயைக்க.

(உருசு) 'ஆழித் திருமாலாகிய அதிசயன்' என்க. ஆழி - ஈண்டித் திருப்பாற்கடல், சூழி - யானையின் முகபடாம், பூழி - புழுதி, தோன்றின்று - தோன்றியது, காண்-(பாக நீ இதனை) அறி; (அன்றி, முன்னிலை அசை என்றலுமாம்.) தேர் துணிக - தேரை விரைவாகச் செலுத்துக. 'பாக! துயர் தோன்றின்று காண்; சூடுமி அம் கோழிச்சேவல், காலால் குடைந்து பேடையைப் பூழித்தலை இரை ஆர்வித்துத் தான் நிற்கும் பூம்புறவின்கண் ஆற்

றுக் குடியின்கண் அதிசயற்கு உடைந்தாரது சூழிக் களிற்றைப் போலத் திண் தேரைத் தூணிக,' என இயைக்க.

(உரிஎ) வான் இடை வார் புயல் - வானிடைத்தோன்றிய பெரிய மேகம், மைம்மாண் குழலாள் பரம் அன்று - மையைப் போலுங் கரியது ஆகிய மாட்சிமைப்பட்ட கூந்தலை உடையாள் (கண்டு) ஆற்றற்குரியது அன்று. ('இம்மேகத்தைக் கண்டு என் பிரிவுக்கு ஆற்றுது மிகவும் வருந்துவள்,' என்பது இதன் கருத்து.) முன்னுக - முற்படச் செலுத்துக; 'பாக! வானிடை வார் புயல் மைம்மாண் குழலாள் பரம் அன்று; ஆதலின், (வேறு) கைம்மாவின் சுவட்டைத் தொடர்ந்து, கனல் (போல்)விழிக்கும் மொய்ம் மாமதக்களி வேழங்கள் பின் வரும்படி (பிற்பட்டுப் போகும்படி) புறவின்கண் தேரை முன்னுக,' என இயைக்க.

(உரிஅ) தாவடி முள் உறீஇ - (குதிரைகளின்) தாவிச்செல்லும் அடிகளில் பிருதியும் முட்கள் தைத்தலால், தேர் முடுகாது என்றல் - தேர் விரைந்து செல்லாது என்றல், முன் தான் இழைத்தவற்றோடு-முன்தான் இழைத்தனவாகிய கூடல்களோடு. 'பாக! (குதிரைகளின்) தாவடி உற முள் உறீஇத் திண் தேர் முடுகாது என்றல் விசாரிதனது தென் புனல்நாடு அன்ன மெல் இயல், முன் தான் இழைத்தவற்றோடு இற்றை நாளும் இழைக்குங் கொல்,' என இயைக்க.

(உரிக) கடிக்கண்ணி - வாசனையை உடைய மாலை, கன்னி வாகை - இளமையிற் பெற்ற முதல் வெற்றி (கம்பகாடர், பால காண்டம், தாடகை வதைப்படலத்துள், காகுத்தனுகிய ஐயன் செய்த முதற்போரைக் 'கன்னிப்போர்' என்றது காண்க.), வாகை - ஒரு வகை மரம்; அஃது அதன் சினையாகிய மலரை உணர்த்த, அஃது அதனுலாகிய மாலையை உணர்த்திற்று. அது வெற்றி பெற்றவர்கள் சூடுவது. வெற்றி பெற்றதனைச் சூடும் மாலையின் பெயர் ஈண்டு வெற்றியை உணர்த்தியது. இது மும்மடி ஆகுபெயர். வாகைகொண்டே முடிக்கண்ணியா வைத்த - அவ்வெற்றி மாலையையே தன் முடிக்குரிய மாலையாக வைத்த (மும்மதில் வேந்தன் என்க). வடிக்கண்ணி - கூர்மையாகிய கண்ணுக்கினை உடையாள், சூளிகை - நிலாமுற்றம். 'கொண்டல்கள் மும்மதில் வேந்தனது முசிறி அன்ன வடிக்கண்ணி வாட வளமணி மாளிகைச் சூளிகைமேல் கொடிக்கு அண்ணிதாம் வண்ணம் வந்து ஆர்த்தன,' என இயைக்க.'வடிக்கண்ணியை வாட்டுதற்பொருட்டுக்

கொண்டல் பலவும் ஒன்றுய்க் கலந்து வந்து ஆர்த்தன' என்பான், 'அண்ணிய,' எனப் பன்மையாற் கூறப்பட வேண்டிய குறிப்பு வினைப்பெயரை 'அண்ணித' என ஒருமையாற் கூறினன்.

(உசுo) 'செழுமுகிலே! பற்றுத மன்னர், புண் தோர் குருதி யிற் படியச் செற்றுனது புன்ல் நாடி அணையாள் (கடிநகர்க்கு நீ முன் சென்றால், உன்னைக்) கண்டி ('தலைவர் தாம் குறித்த கார்ப் பருவம் வந்தும் இன்னும் வந்திலரே!' என்று எண்ணி) ஏர் (அழகு) அழிந்து கலங்கும்; (ஆதலின்,) அவளது கடி நகர்க்கு என் திண் தேர் செல அன்றி (என் திண்ணிய தேர் சென்ற பிறகு அல்லாமல்) முன் செல்லல்; வாழி (நீ வாழ்வாயாக),' என இயைக்க.

(உசுக) கொல் தாங்கு அயில் மன்னன் - கொல்லனுல் நன்கு செய்யப்பட்ட வேலை ஏந்திய மன்னன் (ஈண்டுத் 'தாங்கு' என்பது இலக்கணையாய் 'நன்கு செய்யப்பட்ட' என்னும் பொருளை உணர்த்தி நின்றதோர் அஃறிணைச் சொல்). 'நெடு மாறனது கூடல் அன்ன இளமுலை மாதே! செற்றூர் பணி திறை (வணங்கிக் கொடுத்த திறை) கொண்ட நம் அன்பாது செழு மணித் தேர்ப் பொன் தார்ப் புரவிகள் நமது கடைவாய் முன் ஆலித்து வந்து புகுந்தன,' என இயைக்க.

(உசுஉ) செழுநகர்க்கு - செழுநகர்க்கண். 'மாறனது மாந்தை அன்னுய்! நங்கள் (நம்முடைய) செழுநகர்க்கண் காரும் கலந்து முழங்கி மின் வீசின்று (வீசியது); காதலர்தம் தேரும் சிலம்பிப் புகுந்தது,' என இயைக்க.

(உசுந) '(நங்காய்!) நெடுமாறனது வியன்முடிமேல் நின்ற வனுகிய சிவபிரானது (நெடுமாறனுல் வணங்கப்படும் சிவபிரான் என்பது கருத்து.) மணி கண்டம் போல் (நீல கண்டம் போல்) இருள் கூர்கின்ற நீள் முகில், முன் (உன்) முகிழ் முலை ஆர முயங்கி முறுவல் உண்டு சென்றூரது வரவிற்குத் தூதாகி வந்தது,' என இயைக்க.

(உசுச) 'குளத்தை வென்ற படையானது பகைமுனைபோல் (நெடுநாள் வரையினும்) சென்று நீடிய பாசறை(யின் இருப்பு) வஞ்சி இடையாள் (தன் நீர்) மடையார் குவளை (போன்ற) நெடுங்கண்களிற் பனி மல்க வந்து உடனுக (உடனுய் - எச்சத் திரிபு) இனிது கழிந்தன்று (இனிதாகக் கழிந்தது)' என இயைக்க. 'பாசறை இருப்பு இனிதாகக் கழிந்தது,' என்க.

'பாசறையின்கண் நான் வஞ்சியாளாகிய உங்கள் தலைவியை என்றும் மறந்திலேன்,' என்பது கருத்து.

(உசுடு) 'விசாரிதனது தென் புனல் நாடு அன்ன மெல் இயலே! நமர், இல்லார் (பொருள் இல்லாதவர்) இருமையும் நன்மையை எய்தார் என்று (என்பது கருதி) இரு நிதிக்கு(ப் பெரும்பொருளைத் தேடற்பொருட்டுக்) கல் ஆர் (மலைகள் நிறைந்த) சுரத்தூடு செல்வதே நினைந்தார்,' என இயைக்க.

(உசுசு) எரிவு ஏய் கானம் - எரிதல் பொருந்திய காடு. '(தோழி!)காதலரானவர் செங்கோல் மன்னனது தெம்முனைபோல் எரிவு ஏய் கானம் கடந்து சென்றே பொருள் செய்வது,' என இயைக்க.

(உசுஎ) நிரை தங்கு - வரிசையாகிய, சங்கு - வளை (காரணவாகுபெயர்), வரை தங்கு - மலைகள் பொருந்திய. '(நங்காய்!) நமர் விசாரிதனது வெம்முனைபோல் வரை தங்கு கானிற் செல்லுப (செல்வர்) என்றலும் வாள் நுதலாளின் நிரை தங்கு சங்கு கழல, கண் நித்திலம் (நீர்த்துளிகளை; உவமையாகு பெயர்) சிந்த, அரை தங்கு மேகலை (அரையில்) நில்லாமல் மெல் அடி மேல் வீழ்ந்து அரற்றின,' என இயைக்க. வெம்முனையில் வரை தங்குதலாவது, வரை (மலை) போன்ற யானைகள் தங்குதல்.

(உசுஅ) பூந்தடங்கண் - செந்தாமரை மலர் போன்ற கண்கள், முத்தம் தந்தன - முத்துப்போன்ற நீர்த்துளிகளைச் சொரிந்தன. 'ஏந்திய புகழீர்! (நான் எம் தலைவியை நோக்கி,) 'மாறன் தன் மாந்தை அன்ன மின் ஏந்திய இடையாய்! நமர் வெங்கானம் செல்வர்,' என்னப் பொன் ஏந்திய (பொன்னிறம் பூத்த) அவளுடைய இளமுலையில் பூந்தடம்கண் முத்தம் தந்தன; போய் என்? (நீர் பொருட்குச் சென்று யாது பயன்? இதனைக் கேட்ட பின்னரும் உமக்குப் பொருண்மேற் செல்ல விருப்புள்ள தாயின் நீர் சென்று) இனி இரும்பொருளைச் செய்யும்,' என இயைக்க.

(உசுக) 'எங்கோனுடைய தெவ்வர் போலச் சென்று, அத்தம் என்னும் ஒரு நெடுங்குன்றத்தின்கண் மறைந்து உலகு எல்லாம் வளாய் (சுற்றிக்கொண்டு) குணபால் (கிழக்குத் திக்கில் உள்ள உதயம் என்னும்) திருநெடுங்குன்றம் கடந்தால் அதன் பின் ஆகும் செஞ்சுடர் வருவது; (இவ்வாறு) வரும் நெடுங்கங்குலை(த் தலைவி) இனி எவ்வாறு நீந்தும்?' என இயைக்க.

(உஎ0) 'பராங்குசனுகிய மன்னனது வெல் களம் போல விரிந்த அந்தி நட்ந்தால், இடையில் வரும் இருள்போய்க் கடை யாமமாகிய கல் ஊழி மெல்ல நடந்தால், அதன் பின்னே அன்றே (அதன் பிறகு அல்லவா) காய் கதிர் வருவது ? ('இத்தகைய நீண்ட கங்குலே எம்முடைய தலைவி இனி எவ்வாறு கடப்பள் ?' என்பது எஞ்சி நின்றது.)

(உஎக) வென்று வாய் கனிந்த - (பகைவர்களைப் பலகால்) வென்று முனையானது அவ்வெற்றியிற் சிறந்துவிளங்கும், மானம் கதிர் வேல் - மேன்மையினே உடைய ஒள்ளிய வேல், கொல்லி வரை அணிந்த - கொல்லி மலையின்கண் அதனை அழகு செய்து கொண்டுள்ள. 'நானக் குழல் மங்கையே! வரோதயனது கொல்லி வரை அணிந்த கானத்திடைப் பிடியைக் கை அகலாத கருங் களிற்றைத் தேன் நக்க தாரவர் காண்பர்; (கண்டால் மேல்) அவர் செல்லார்; செல்ல ஓட்டி (நீ அவர் செல்லுதற்குச் சம்மதித்து) நன்று செய்தாய் (நல்ல காரியத்தைச் செய்தனை),' என இயைக்க.

(உஎஉ) மருள் மன்னும் வண்டி அறை - (தேன் குடித்து அதனால்) மயக்கங்கொண்ட வண்டுகள் ஒலிக்கும். 'வெள் வளை யாய்! இருள் மன்னும் மேகமும் கார் செய்து எழுந்தன; மருள் மன்னு வண்டி அறை தாரவர் தாமும் அரிகேசரியினது அம் தண்கூடல் அன்ன பொருள் மன்னும் எய்தி (பொருளை மிகுதி யும் எய்தி), நம் பொன்னகர்க்கு (பொன்னகர்க்கண்) வந்து புகுந் தனர்,' என இயைக்க.

(உஎங) 'தகரக் குழலாய்! மாறனது கூடலின் வாய், மகரக்கொடியவன்றனக்குரிய நீண்ட வேனிற்காலத்து மலர்களை விலக்குப் பகர (விலை பேசக்) கொணர்ந்து இல்லந்தோறும் திரியும் இப்பல்வளை தகவு இலள்,' என இயைக்க. 'வேல் நின் மலர்' என்று பிரித்திருப்பதை 'வேனில் மலர்' எனத் திருத்திக் கொள்க.

பக்கம், 211:—'அழுந்துபடு விழுப்புண்' என்னுஞ் செய்யுள்:

'(தோழீ!) படி - (நெடுங்காலத்திற்கு முன்) உண்டாகிய, அழுந்து விழுப்புண்ணின் வாய்-ஆழ்ந்த பெரிய புண்ணின் வாயில் உள்ள, வழும்பு புலரா - நிணங்காயாத, எவ்வம் நெஞ்சத்து - துன்பத்தை உடைய மார்பில், எஃகு எறிந்தால் ஆங்கு - வேலைப் பாய்ச்சினாற் போல, பிரிவு இலபுலம்பி-(என்னருகில் நின்று) பிரிவு

இல்லாதனவாய் வருந்தி, துவலும் குயிலினும்-கூவுங் குயிலிலிவிட, தேறு நீர் கெழீஇய - (நன்கு) தெளிந்த நீர் பொருந்தி வருகின்ற, யாறுநனி கொடிது-யாறு மிகக் கொடிதாயிராகின்றது; மதனின் தூய்-துட்ப அழகினையுடைய பஞ்சி போன்ற, தலை இதழ்-மேலே புற இதழையுடைய, பைங்குருக்கத்தியொடு - பசிய குருக்கத்தி மலருடனே, விரவு-விரவிய, பித்திகை மலர்-சிறு சண்பக மலரை, கொள்ளீரோ என்று - விலைக்கு வாங்குவீரோ என்று, வண்டு சூழ் வட்டியள் - (அம்மலர்களை இட்டு வைத்தலால்) வண்டுகள் மொய்க்கப்பெற்ற கடகப் பெட்டியைக் (கையில்) உடையவளாய், திரிதரு - திரியாநிற்கும், தண்டலை உழவர் - சோலையில் உள்ள உழவர்களின், தனி மடமகள் - ஒப்பற்ற இளமையினையுடைய பெண், அதனினும் கொடியள் - அவ்யாற்றினும் கொடியளாய் இராகின்றாள். தான், ஏ - அசைகள்.

(உளை) '(அன்புடையீர்! நான் எம் தலைவியை நோக்கி), 'மாறனது தென் நாடு அன்ன நேரிழையாய்! நம் காதலர் இவ் வாய் (இவ்விடம்) வருவர்' என்ன உற்றேற்கு (என்று சொல்லத் தொடங்கிய எனக்கு) எதிரில் சேயிழைக்குச் செவ்வாய் துடிப்பக் கருங்கண் சிவந்த,' என இயைக்க.

(உளநி) தின்னத்தந்த - (நீ நின் கண் சிவப்பு முதலியவற்றால் யான்) கொள்ளும்படி உண்டாக்கிய, கன்றே அமையும் - மன வெதுப்பொன்றே போதும், கல் வேண்டா - (நீ என்மீது) கல் எறிதல் வேண்டா, (தஞ்சைவாணன் கோவையில், 'எம்பிராட்டி! போற்றிப் புகன்ற கன்றும் எனக்கே தரும்; எறிந்த கல்மிகை' என்று கூறியதையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக. தஞ்சை. கோ. செ. 394.) வயல் அணி ஊரனும் - வயல்களால் அழகு செய்யப்பட்ட ஊரையுடைய தலைவனும், சென்றே ஒழிக - பரத்தையின் இடத்திலேயே சென்றிருப்பானாக, அடியேன் அடி வலங்கொள்ள அருளுக - அடியேன் நின் அடியை வலங்கொண்டு செல்ல அருளுக. (திருக்கோவையாரில் 'அடியேன் ஆடி வலங் கொள்வன், பணி மொழியே' என்றதை ஈண்டு நோக்குக. திருக்கோவையார். செ. 387). 'தின்னத்தந்த' என்றது 'கன்று' என்றதற்கேற்ப ஒருவாறு சொல்லில் நயக் தோன்றக் கூறப்பட்டது என்க. பல் யாண்டு - நீ பல்லாண்டு நலமுற வாழ்க. ('வயல் அணி ஊரனும் பல் யாண்டு சென்றே ஒழிக,' என்பது பாணன்து உள்ளக் கருத்து எனக் கொள்க.)

'தலைவியே! வயல் அணி ஊரனும் சென்றே ஒழிக; தின்னத் தந்த கன்றே அமையும்; கல்வேண்டா; பல்யாண்டு; வயல் அணி ஊரனும் பல்யாண்டு சென்றே ஒழிக. கடல் ஞாலம் மிக அகலிது அன்றே? அடியேன் அடி வலங்கொள்ள அருளுக,' என இயைக்க.

(உஎசு) 'கழுது (பேயானது) தெம்மன்னர்களின் இழுது கிணந்தின்று இன் குருதியிற்படிய' என்க. அழுது சுவல் சென்ற-அழுது தோள்மேல் இவர்ந்துகொண்ட, அக்கு அரையான்-சங்கு மணியைப் பூண்ட இடுப்பை உடைய பிள்ளை. 'கன்னி (நாடு) அன்ன மின் ஏர் இடையாய்! அழுது சுவல் சென்ற அக்கு அரையானெடும் வந்தமையால் தோன்றலைத் தொழுது வழிபடற் பாலை; (தோன்றலின்) பிழைப்பை எண்ணல்,' என இயைக்க.

(உஎஎ) 'தென்புனல் நாடு அன்ன பல்வளையே! தந்தை பேரான்-மகன் ('தந்தை பெயரன்'-ஐங்குறு. செ. 403). வார் ஓர் சிறுபறை பூண்டு, மணிக்காசு உடித்துச் சுவலின் இருப்ப வந்தான் (வந்தவனுகிய தலைவனது) பிழைப்பை எண்ணப்பெறாய் (எண்ணுதை),' என இயைக்க.

(உஎஅ) 'வென்றவனுகிய யானையினன்' என்க. மணி உடையானெடு-மணியோடு கூடிய உடையை உடைய மைந்தனெடு, ('அன்புடையீர்! நீர்) உடை மணியானெடு வருதலின், கன்னி (நாடு) அன்னாளின் பொரு கயற்கண்கள், ஊடல் சிவப்பு ஒழிந்தும், அடை நீல மணியின் அணி நிறம் கொண்டும் அலர்ந்தன,' என இயைக்க.

(உஎக) 'மணி நீர் வையை வார் துறைவாய் எங்கையைத் தீம்புனல் ஆட்டிய ஈரம் புலர்த்தி உம் அங்கையின் சிறடி தீண்டி வந்து எமக்குச் செய்யும் ஆர் அருள் செய்யீர்,' என இயைக்க.

(உஅ0) 'அரிகேசரியினது வாள் புரையும் தடங்கண்ணி! நமர் கேளே பெருக்கும் அரும்பொருள் செய்தற்குக் கேடு இல் திங்களில் (ஒரு) நாளே குறித்துப் பிரியல் உற்றார்; (இதற்கு நீ) வலிக்கின்றது (வருத்துவது) என்?' என இயைக்க. கேளே, நாளே என்பவற்றின் ஏகாரங்கள் பிரிநிலைப் பொருளன. வாளே என்பதன் ஏகாரம் தேற்றப் பொருளது.

(உஅக) இகலே கருதி-வெற்றியையே வேண்டி (அன்றித் 'தங்கள் வன்மையையே எண்ணி' என்றலுமாம். ஏகாரம் பிரி

நிலைப் பொருளது). 'வார்ந்து ஆர் கருமெல் குழல் மங்கை! பிறைக்கொழுந்தை மாநிதிக்கு என்று அகன்ற ஈர்ந்தாரவர் இன்று காண்பர்கொல்,' என இயைக்க.

(உஅஉ) தொழித்து ஆர் - ஒலித்துச் சூழும், கங்கை சூழ் சடைமேல் இழித்தார் - கங்கையைச் சுற்றப்பட்ட (தமது) சடையிலே வானின்கணின்று இழிந்து வந்து தங்கச் செய்தவராகிய முக்கண்ணரது, காரிகையே விழித்தார் பட - (மற்றொன்றினையுங் கருதாமல் அணிகள் முதலியவற்றுற் செய்துகொள்ளப்படும் தங்கள்) அழகையே நோக்கி நின்ற பகை மன்னர்கள் அழிய, விழிஞக்கடல் கோடி - விழிஞக்கடல் கோடியின்கண், வாள் கழித்தான் - (வாளை உறையினின்று) கழித்தவனது (சுமரி நன்னீர் என்க.) 'தொழித்து ஆர் சிறை வண்டு அறை குழலாய்! சுமரி நல் நீர் கொண்டு எழுந்த கண முகில், கங்கை சூழ் சடை மேல் இழித்தாரது மணி கண்டம்போல் இருண்டன,' என இயைக்க. ('அதனைத் தலைவர் காண்பரோ எனக் கவன்றேன்,' என்றுள் தலைவி என்க).

(உஅங) உளங்கொண்டு வாடின்று - மனம் எண்ணி வாடியது, நட்டாற்று எதிர்ந்தார் உதிர வெள்ளம் குளங்கொண்டு தோற்பித்தமைகான் - நட்டாற்று எதிர்ந்தவர்களது உதிர வெள்ளமானது குளமாகும்படி (அவர்களைத்) தோற்கச் செய்தமைகாரணமாக (நெடுமாறன் என்க.), கொண்டல் களங்கொண்டு-மேகம் வானத்தைத் தனக்கு இடமாகக்கொண்டு, களவின்-வஞ்சனையினையுடைய. 'நெடுமாறனது கை போலுங் கொண்டல், களங்கொண்டு கார் செய்த காலைக் களவின் கலைமுகத்த இளங்கண்டகம் விடாகத்தின் நா ஒக்கும் (நாவினையொக்கத் தோன்றும்) ஈர்ம்புறவை உளங்கொண்டு (அதனைத் தலைவர் காண்பரோ என்று எண்ணி) வாடின்று,' என இயைக்க. ('யான் ஆற்றேன் ஆயது, 'தலைவர் குறித்த பருவம் வந்தது கண்டு தாம் எடுத்துக்கொண்ட செயல் முடியாது மீள்வர்கொல்,' என்றுகும்,' என்றுள் என்பது.)

(உஅச) 'அரிகேசரியினது தென் புனல் நாடு அனையாய்! கனலும் செந்தீத்தழலும் குளிர்ந்து பொடிப்படப் போர்க்கின்ற தாழ்பனீ (மிக்கபனி, நின்கையின் நின்று) கழலும் வரி வளையைக் காக்க (கழலாமல் தடுத்தற்காக), வந்தன்று - வந்தது. ('இதனைத் தலைவர் காணின் விரைந்து வருவர்,' என்றுள் தோழி என்பது.)

(உஅநி) 'ஆற்றுக்குடியைத் தனது குனியார் சிலை ஒன்றினால் வென்ற கோனது கொங்கநாட்டின்கண் உள்ள கனி ஆர் (கனி நிரம்பிய) களவின் அகத்து முட்களானவை, கதிர்முத்தங் கோப் பனபோல் பனி ஆர் சிதர் துளி (மிக்க துளிகளை) மேற்கொண்டு நிற்றற்குக் காரணமாகிய (இப்பனிப்) பருவங்கள் (எம்பெரு மாட்டியினது) தனி ஆர் (தனிமையை ஆற்றியிருக்கும்) தகை நலம் (மேன்மையாகிய நலத்தினை) வாட்டுங்கொல்,' என இயைக்க.

(உஅசு) வான் - மேகம் (இடவாகு பெயர்), மாந்தை அன்னாள் தான் நலந்தேய் அப்பனி கழிந்தது - மாந்தை அன்னாள் தான் நலந் தேய்தற்குக் காரணமாகிய அப்பனியானது கழிந்தது. 'மாந்தை அன்னாள் தான் நலந்தேய் அப்பனி கழிந்தது; தண் தென்றல் தேன் நலம் தண்குவளைப் போதின்கண் வளாய் வந்து தீ விரியும்; மெல்லியற்கு வேனல் அம் காலம் எவ்வாறு கழியும்?' என இயைக்க.

(உஅஎ) 'மெல்லியலாய்! பிண்டியின் தேமலர்கள் சென்னி நிலாவினனாகிய வார்சடையோன் வில் இயல் காமனைச் சுட்ட வெந்தீ, நங்கள்மேல் வெய்யவாய்ச் சுடர் விண்டு அவன்மேல் (அம்மன்மதன்மேல்) செல்லிய பாரித்த போன்றன,' என இயைக்க.

(உஅஅ) 'சேயிழையானவள் (தன்)பணை முலைமேல் செஞ் சாந்து அணிந்து வந்து (வந்தாள்-வந்து, முற்றெச்சம்) செய்த கோலத்தினால் அடுகளி யானையினது அகல் ஞாலம் அன்ன பஞ்சு ஆர் அகல் அல்குலாள் தன்மை சொல்லும்,' என இயைக்க.

(உஅகூ) 'மின் ஆர் அயில் மன்னனது தென் புனல் நாடு அன்ன மெல்லியல் தோழி, (தலைவியை நோக்கி நின்று,) 'அன்னாய்! பொன் ஆர் புனல் அணி ஊரன் வந்து உன் இல் புறங் கடையான்,' என்னு(த) அளவில் (என்று சொல்லாததற்கு முன். என்பதைச் சொல்லி முடித்தற்குள் என்பது கருத்து) தலைவி சிவந்தாள்; சிவந்தும் (அங்ஙனம் தலைவி கோபித்தும், தோழி) இயல்வது அன்று என்று சொல்லிச் சிவப்பாற்றினள்,' என இயைக்க.

(உகூ) 'இந்நீள்நிறத்துக் கோடிய நீள் புருவத்து மடந்தை கொழும்பணைத் தோள் வாடிய வாட்டம் உணர்ந்து மனையிடை

வந்தமையால் அரிகேசரியின் தெவ்வர்போல் (தலைவியைப்பிரிந்து) அகன்று ஏடிய (பரத்தையரிடத்துத் தாமதித்த) காதலர் தாமே பெரியர்,' என இயைக்க.

(உகூக) 'தண் துறை சூழ் வயல் ஊரன், வையை நாடு அன்ன கோல் வளை இவ்வண்டு உறை கோதை வருந்த நல்லார் கள் இல்லில் வைகுதலால், பெரிதும் தகவிலள்,' என இயைக்க.

(உகூஉ) 'தமிழ் நாடு அன்ன தாழ் குழலாள் (தலைவி) ஆர் புனல் பரந்து வரும் ஊரனது பண்பு இன்மையை எங்களையும் (எங்களுக்கும்) கரந்தாள்; ஆதலால், கடல் இடம் எல்லாம் புகழ்தரும் கற்பினளே,' என இயைக்க.

(உகூங) 'வெஞ்சுடர் நோக்கும் நெருஞ்சியில் ஊரனை வெண்முறுவல் செஞ்சுடர்வாள் முகத்தாளுக்கு முன்னை (முன்னர்) என்பால் திரியலனேல் (திரிக்கலனேல்;) 'திரியலன்' என்னும் தன்னினை 'திரிக்கலன்' என்னும் பிறவினைப் பொருட்டு. 'அரிகேசரியினது கோளமன் நாட்டு உடைந்தவர்களுடைய வாட் படைபோல என் சங்கங்கள் உடைக,' என இயைக்க.

பக்கம், 226:—'குறும்புசூழ் இருக்கை' என்னும் செய்யுள்:

'குறும்புசூழ் இருக்கை மறந்தலை மணந்து, சிறுகூழ்வல்சியிற் சிறுவரவிற்று; அந்நாட்டுள்ளும்,எம் ஊர்,புல்வாய் வலக்கொல்லே சிதர்பற்றி வள நனி குறைந்த வாரித்து ஆம் அன்றே? அவ்வூருள்ளும் பிறந்த இல்லம் கல்லாச் சிறியோர் இல்லம் ஆம் அன்றே?' என இயைக்க. 'எம் ஊர் ஆம்' என்பதன்கண் உள்ள 'ஆம்' என்பதனை 'வாரித்து' என்பதற்குப் பின்னும் 'சிறியோர் இல்லம்' என்பதற்குப் பின்னும் இயைக்க.

(உகூச) 'எறி புனலூர! (யாங்கள்),வேலை முன்நீர் வரைப்பில் விசாரிதனது எறிதரு கோல் செல்லும் எல்லையின்கண் உள்ளேம் அல்லேம்; எமது இல்லம் நீர்மை இல்லாச் சிறியவர் வாழ் பதியே; எமக்கு நின் இன் அருள் சிறிது எவ்வாறும் அமையும்,' என இயைக்க.

(உகூநி) 'வரோதயனுகிய காவலன்' எனவும், 'வல்லத்தின் கண் ஒன்னர் கரிய வைவேல் கொண்ட காவலன்' எனவும் இயைத்துக்கொள்க.('வல்லத்து ஒன்னர் கரிய வைவேல்கொண்ட காவலன் காக்கும் கடல் இடம் போல் பெரிய நல்நாட்டுப் பெரிய நல் ஊரில் பெரிய இல்லிற்கு உரியவராகிய மிக்கீர்க்கு இவ்வாறு

ஒழுகுவது இயல்புகொல்! (இயல்பாகுமா! இயல்பு அன்று)' என இயைக்க.

(உகூசு) 'வில் ஒன்று சேர் பொறி வானவனும் (பொறி - இலச்சினை) மற்றைப் பொருந்தாத அரசர்களும் (பொருந்தார் என்பதன் பின் உள்ள விளக்குறியை 'நமக்கியார்' என்பதனோடு கூட்டுக.), கொல் ஒன்று வாட்படையான் - கொல்லுதல் பொருந்திய வாட்படையான். 'நெஞ்சே! கொல்லொன்று வாட் படையானது தமிழ் நாடு அன்ன கோல்வளை நமக்குயார் (நமக்கு என்ன உறவினள்? இவள் ஒரு தெய்வப் பெண்ணுய் இருக்கின் றனளே! இவளை நம் காதலி என்று எண்ணி), இரவலர்க்கு இல் என்று ஈதல் செய்யாதவன் இல்லம் எனப் புல் என்று வாடிப் புலம்பல்,' என இயைக்க.

(உகூஎ) அரை அணங்கும் துகிலாள் அல்லள் - (நம் பிரி வின்கண்) இடையை வருத்துந் துகிலை உடையவள் அல்லள். (பிரிவின்கண் தான் அணிந்த துகிலும் தன்னை வருத்துவதாகக் கொள்பவள் என்பது கருத்து.), அணங்கும் உரைத்தமிழ் - (யாவராலும்) விரும்பப்படுஞ் சொற்களை உடைய தமிழ், நிரை அணங்கும் பனிநீர் - வரிசையாய் நின்று கண்டாரை வருத்தும் பனித்துளி போன்ற நீர்த்துளி. 'உதிதனது ஒள்பூம் பொதியிலின் கண் யான் மம்மர் எய்தவும், மம்மர் எய்தி(த்தன்னை நோக்கி, 'நீ) பொதியில் வரை அணங்கோ? அல்லையோ?' என்று கேட்கும் படியாகவும், உண் கண்களானவை நிரை அணங்கும் பனி நீர் கொள்ளவும் நின்ற இந்நேரிழையானவள் அரை அணங்கும் துகிலாள் அல்லள்,' என இயைக்க.

(உகூஅ) துளியும் - ஒரு சிறு நீர்த் துளியையும், ஒளியும்- ஒளி செய்யும் (பிரகாசிக்கும்; ஒளி என்னும் பெயரினடியாகப் பிறந்த பெயரெச்ச வினை), தெளியும் - தெளிந்திருக்கும், ('ஆளி யும்' என்பதன்கண் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது.) 'நெஞ்சே! தெளியுஞ் சுடர் ஒளி வாள் மன்னனது செங்கோல் எனச் சிறந்த அளியையும் பொருது நைய நின்ற இவ்வாயிழை துளியும் துறந்த வெங்கானத்துச் செலவு இன்று சொல்லுது மேல் ஒளியுந் திருதுதல் வாடி உய்யாள்,' என இயைக்க.

(உகூக) கலி மதன் - மிக்க வன்மையை உடையவன் (மிக்க மாட்சியையுடையவன் என்றுமாம்). 'நெஞ்சம்! (அண்மை

விளி.) இக்நெய் ஆர் குழலாள், மை ஆர் தடங்கண் வரும் பனி சோர வருந்தி நின்று இனையக் காய் கலிக்கு வெய்யானது பகை என வெஞ்சுரத்தினூடு நீங்குதுமோ? ('நீங்குதல் இயலாது,' என நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியவாறு.)

(கூ00) மாறனது பொருமுனைபோல் அருமா நெறி - மாறனது பொருமுனை பகைவர்கள் எவரும் வெல்லுதற்கரியது ஆதல் போல எவரும் செல்லுதற்கு அரிய பெரிய வழி, பொருட்குச் செல்வதோ - (மழைக்கண்ணியின் வருத்தத்தினை நோக்குதலை விட்டுப்) பொருட்குச் செல்லுதற்குரியதாகுமா? செல்லுதற்கு ஆகாது. பெருமா மழைக் கண்ணும்-(அவள் வாட்டம் எய்தியதே யன்றி அவளுடைய) மிக்க கருமையை உடைய குளிர்ந்த கண்களும் (நித்திலந்தந்தன என்க. உம் எச்சப்பொருட்டு), பேதுற - (அவள்) மனங்கலங்கும்படி. 'நெஞ்சே! அவள் தன் பெருமா மழைக்கண்ணும் நித்திலந்தந்தன. இத்தகைய அவள் பேதுற மாறனது பொருமுனைபோல் அருமா நெறியானது பொருட்குச் செல்வதோ? அன்று,' என இயைக்க.

பக்கம், 232:—'மருந்தெனின் மருந்தே' என்னுஞ் செய்யுள்:

'(நெஞ்சே!) தோன்றிய தேமலிக்கொண்ட அழகிய பெருமையினை உடைய இளையவான முலைகளையும், பெரிய தோள்களையும், தண்ணியதாகிய இடையையும் உடைய கற்கள் பொருந்திய காட்டை உடையவர் நல்கிய மகள், (காம நோய்க்கு மருந்து வேண்டும் எனின் எனக்கு) மருந்தாவள்; (போக துகர்ச்சிக்குரிய செல்வம் வேண்டும் எனின் எனக்கு) அச்செல்வமும் ஆவள்.

பகடு - பெருமை. 'மருந்தும், செல்வமும் இவளேயாயிருத்தலின் பொருள்தேடச் செல்லுதலைத் தவிர்வேமாக,' என நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்கினன் தலைவன் என்பது.

(கூ0க) 'செல்லார் அவர் என்றுயான் இகழ்ந்தேன்; அவள் தன்கண் சுரம் செல்ல ஒல்லாள் என்று அவர் இகழ்ந்தார்; இவை இரண்டும் குளந்தை வென்ற வில்லான் பகைபோல் எனது உள்ளம் மெலிவிக்கும்,' என இயைக்க.

பக்கம், 235:—'செல்வார் அல்லரேன்' என்னுஞ் செய்யுள்:

'(தோழி!) செல்வார் அல்லர் என்று - தலைவர் நம்மைப் பிரிந்து செல்வார் அல்லர் என்று எண்ணி (பிரிந்து செல்லார்

என்று எண்ணி), யான் இகழ்ந்தனன் - யான் அவரது செலவை விலக்கக் கருதிலேன், விடுவாள் அல்லள் என்று - (நாம் செல்ல அவள்) விடுவாள் அல்லள் என்றெண்ணி, அவர் இகழ்ந்தனர் - அவர் என்னிடஞ் சொல்லிப் பிரியக் கருதிலர். அ இடை - அக் காலத்தில், இரு பேர் ஆண்மை செய்த பூசல் - (எங்கள் இருவ ரிடத்திலும் பொருந்திய) இரண்டு பெரிய ஆண்மை செய்த போரால், என் அல்லல் நெஞ்சம் - எனது துன்பத்தையுடைய நெஞ்சம், நல் அரா- நல்ல பாம்பு ('நல்லார்' என்பதை 'நல்லரா' எனத் திருத்திக்கொள்க), கதுவியது ஆங்கு - கடித்ததனால் கலக்கம் அடைதல் போல, அலமலக்கு உறும் - (இப்பொழுது) மிக்க கலக்கத்தை அடையாநின்றது.

(கூ0உ) 'வெண்குடை வேந்தனுடைய நண்ணார்தம் மதிற் பாய்ந்து இடாவும் (குத்தும்) மதமாவானது, மழை (மேகம்) பெய்யும் ஓதை என (ஓசையைப்போல) முழங்க, அம்முழக் கத்தையும் அதனைக் கேட்டு மலர்வனவாகிய பிடாவையுங் கண்டு மெலிவது என்?' என இயைக்க. (கார்ப்பருவம் அன் றென்றுள் தோழி என்பது.)

(கூ0ஙு) விடக்கு - ஊன், (விசாரிதனுகிய வேந்தனுடைய) நண்ணார் முனைபோல் - பகைவர்களின் முனையில் யானைகள் ஒன்றோடொன்று சென்று பொருதல்போல, கடக்குன்றம் சென்ற வம்பினை - காட்டு யானைகள் ஒன்றோடொன்று பொரு தலால் உண்டாகிய புதுமையாகிய ஓசையை (கடக்குன்றம் - யானை, வம்பு - புதுமை, அஃதீண்டுப் புதுமையாகிய ஓசையை உணர்த்திற்று.) 'பொன்னே! விசாரிதனுகிய வேந்தனுடைய நண் ணார்தம் முனைபோல் கடக்குன்றம் சென்ற வம்பினை மடக் கொன்றைகள் கார் என எண்ணி மலர்ந்தன. நம் காதலர் பொய் யலர். (நீ) நையல்,' என இயைக்க. (இதுவும், 'பருவம் அன்று,' என்றது.)

(கூ0ச) 'பூரித்த மெல் முலையாய்! விசயசரிதனது விண் தோய் கொல்லி மலைமேல், மூரிக்களிறு கை ஏற்ற (கையாற்றிய காரணத்தால்) முழங்கு கொண்டல் பெய்த மாரிக்கு முல்லையின் வாய் நக (வாய் மலர்தலைக் கண்டு) நீ வருந்துவதே (நீ வருந்துத லாகுமா?)' என இயைக்க.

பக்கம், 237:—'நீரற வறந்த' என்னுஞ் செய்யுள்:

மடந்தை - மடந்தையே! நீர் அற வறந்த - நீர்முற்றும் வற்றிய, நிரம்பா - நடந்து முடிக்க முடியாத, நீள் இடை - நீண்ட வழியில், துகில் விரித்தால் அன்ன - வெளிய ஆடையை விரித்தாற்போன்ற, வெயில் அவிர் உருப்பின் - வெயில் வீசுகின்ற வெப்பத்தாலே, அஞ்சுவரப் பனிக்கும் - அஞ்சும் படியாக நடுக்கத்தைச் செய்யும், வெம் சுரம் இறந்தோர் - கொடிய கார்ட்டின்கண் சென்ற நம் காதலர், தாம் வர - தாம் வருவோம் (என்று), காண்வரத் தெளித்த - அழகு பொருந்தத் தெளியக் கூறிய, பருவம் இதுவோ என்றிசின் - பருவம் இது தானோ என்று வினவுகின்றனீ, மதியின்று - அறிவு இல்லாமல், மறந்து - (பருவகாலத்தை) மறந்து, கடல் முகந்த - கடல் நீரை உண்டதனால் ஆகிய, கமம் சூல் மா மழை - நிறைந்த சூலை உடைய கரிய மேகம், பொறுத்தல் செல்லாது இறுத்த வள் மழை - தான் தாங்கமாட்டாமல் பெய்த வளவிய மழையை (நோக்கி), பிடவும் கொன்றையும் கோடலும் பல (உம்) - பிடவும் கொன்றையும் காந்தளும் மற்றும் பலவும், மடவ ஆகலின் - அறிவில்லாத அஃறிணைப் பொருள்களாகலின், தேர்வில - ஆராயாதனவாய், அயர்ந்த உள்ளமொடு கார் என்று - மறதியுற்ற மனத்துடனே கார் காலம் என்று கருதி, மலர்ந்தன - மலர்ந்து விட்டன. (அவற்றைக் கண்டு நீ கார் காலம் என மயங்கற்க.)

(௩0நி) வெய்யார் அமரிடை நெடுங்களத்து வீழ - கொடியவர்களாகிய பகை மன்னர் போரிலே மாண்டு நெடிய போர்க்களத்தில் விழ, செந்தூவி வெள் அம்பு உதைத்த - செவ்விய இறகுகள் கட்டப்பட்ட வெள்ளிய அம்புகளைச் செலுத்திய, (கை ஆர் சிலையை உடைய மன்னன் என்க) 'மை ஆர் தடங்கண் மடந்தை! (அண்மைவிளி). கன்னி நல் நீர்கொண்ட கார்முகில்கள், நெய் ஆர் அயிலவர் காண வாள் முனைமேல் பொழிந்த (பொழிந்தன; அதனைக் கை ஆர் அயிலவர் காணின் குறித்த பருவம் வந்துவிட்டது என்று விரைவின் வருவர்; வருந்தற்க,' என்றுள் தோழி என்பது).

௩0சு 'துடி ஆர் இடையாய்! (நம்மை விட்டுப்) பிரிந்து சென்ற அடி ஆர் கழலார் (நம்மை வந்து) அணுகும்படி அகன்ற விசும்பின்கண்ணுகிய மேகம் (விசும்பு என்பது தன்கண்ணுகிய மேகத்தை உணர்த்திற்று. இஃது இடவாகு பெயர்) 'வந்து ஆர்த்தது; (அவர் பொய்யார் ஆகலின், இனி வருவர்; நீ) வருந்தல்,' என இயைக்க.

(கூ0எ) ஆம் மான் அனைய மெல் நோக்கி - (குளிர்ந்த) மான் கண்போன்ற மென்மையாகிய கண்களையுடையாய்!('ஆம்நோக்கு,' 'மான் நோக்கு' என இயையும்). 'தீந்தமிழ்நருடைய கோமான்தது கொடிமேல் (இருக்கும்) இடியை(ப்போன்ற) கூர்ம்புயலின்கண் உள்ள உரும் (இடிகள்) ஆர்க்கின்றன; (அவை)அகன்று சென்ற தேமா நறுங்கண்ணியாரையும் (கொணர்ந்து நமக்குக்) காட்டும்; அழுங்கல்,' என இயைக்க. ('தீந்தமிழ்நர் கோமான் கொடிமேல் இடி (போன்ற) உரும்தன்கண் ஆர்க்காநிற்கப்பெறும் கூர்ம்புயல் அகன்று சென்ற தேமாநறுங்கண்ணியாரையுங் காட்டும்; அழுங்கல்' என இயைத்தலுமாம்); மழை வண்ணன் மாறன் - திருமாலாகிய மாறன்.

(கூ0அ) கூர் எயிறு - கூர்மையாகிய பற்களைப் போன்ற அரும்புகள் (எயிறு, உவமையாகு பெயராய் அரும்புகளை உணர்த்திற்று.), வான் - மேகம் (இதுவும் ஆகு பெயரே. வான்-இடம்; மேகம் இடத்திலுள்ள பொருள்); 'மடந்தை! (விளி) வான் குருந்தம் பொருந்தி அதிர்தலின், முல்லைகள் கூர் எயிறுகளை ஈன்றன; நம் காதலர் வருவர்; நெடுமாறனது நெடுமூனையில் உள்ள பகைவர்களைப்போல(ப்பலவற்றையும்) நினைந்து வருந்தல்,' என இயைக்க.

(கூ0கூ) தமிழ் நாடு அன்ன நேர் இழையே! தண்புயல் நோக்கிப் புலமுற்றும் (வயல்கள் யாவும்) பரந்து, அதன்பால் முற்றும் நலம் (அவ்வயல்களினிடத்து முதிர்ந்து பெருஞ்தற்குரிய நலங்கள்) யாவுந் தோன்றின; (நம்முடைய) நலமும் வந்த (வந்து விட்டன). 'நம்முடைய நலமும் வரும்' என்னும் எதிர்காலம் தெளிவு பற்றி இறந்த காலமாயிற்று. 'முற்றும் நலம் வந்த,' 'நம்முடைய நலமும் வந்த' என 'வந்த' என்பதை ஈரிடத்துங் கூட்டுக. வந்த - பலவின்பால் முற்று.

(கூ0ஏ) 'கடல் ஞாலம் அன்னாய்! ஏர்மூகில்கள் (நம்மை) நிறையாம் வகையில் வைத்து நீத்த தலைவரது தேரோடு (தேருடன், கையினின்று சோர்ந்ததனால்) நீ பிணித்த இறை ஆர் (கையிற் பொருந்துதற்குரிய) வரிவளைகளும் (முறையே) நம்முடைய மனையின் மூன்னிடத்தும் நின் கைகளிலுஞ் சேர வந்து ஆர்த்தன,' என இயைக்க.

(கூ0க) 'அம் தண் கூடல் அன்ன கருநெடுங்கண் மடவாய்! திருநெடுங்கோதையும், தெய்வந் தோழாள்; பெருநெடுந்

தோள் அண்ணலும், தெவ்வர் மேற்செலினும் போர்ந்து அன்றித் தங்கான் (வினை முடித்து வருவதன்றி அங்குத் தங்குதல் செய்யான்); அவரது காதன்மை அன்னது,' என இயைக்க. ('கோதையும்' என்பதன்கண்ணுள்ள உம்மையை 'அண்ணல்' என்பதனோடுங் கூட்டுக).

(கூகஉ) 'கொல்லிப் பனி வரைவாய்க் கார் மன்னு கோதை அன்னளும் அருந்ததி (போன்ற) கற்புடையாள்; போர் மன்னு வேல் அண்ணலது பொன் நெடுந்தேரிற் பூண் புரவிகளும், போர் மன்னன் ஏவச் சென்றனும் மூன்ற மிசைச் சேர்ந்து அறியா (தங்கி அறியா),' என இயைக்க.

(கூகஊ) 'வஞ்சி அன்னள், தெய்வம் சேர்ந்து அறியாள்; மன்னன் தானே பணிப்பினும் நெடுந்தகை, வல்லத்துத் தன் நேரார் மூன்ற என்றுந் தங்கி அறியான்,' என இயைக்க.

பக்கம், 239:—'கானங் கோழி' என்னுஞ் செய்யுள்:

மடந்தை - தலைவி, கானம் கோழி கவர் குரல் சேவல் - காட்டுக் கோழியினது கவர்த்த குரலை உடைய சேவலினது, ஒள்பொறி எருத்தில் - ஒள்ளிய புள்ளிகளை உடைய கழுத்தில், தண்சிதர் உறைப்ப - தண்ணிய நீர்த்துளிகள் துளிக்கும்படி, புதல் நீர் வாரும் - புதலின்கண் நீர் ஒழுகும், பூநாறு புறவில் - மலர் மணம் வீசுகின்ற முல்லை நிலத்தில் அமைந்த, சிறு ஊரோள் - சிறிய ஊரில் உள்ளாள், செம்மல் தேர் - தலைவனது தேர், வேந்து விடு தொழிலொடு - வேந்தனால் ஏவப்பட்ட தொழிலை மேற்கொண்டு, வேறு ஊர் செலினும் - வேற்றூருக்குச் சென்றனும், சேர்ந்து வரல் அறியாது - தங்கி வருதலை அறியாது.

(கூகச) 'கோல் வளையே! இனையை ஆகுதல் நீள் புனல் கூடல் அன்ன நலத்திற்கும், நாணிற்கும், ஞாலத்தின் நல்ல நங்களது குலத்திற்கும் தக்கது அன்று,' என இயைக்க.

(கூகஎ) 'செம்பியனகிய மாறனது (சோழ பாண்டிய நாடுகளுக்குரியவன் என்பது) செழுங்குமரியாகிய மானின் நிறம் (மான் - பெண்ணின்) போன்ற, வெள் திரை தோன்றினை (திருப்பாற்கடலில் தோன்றினை; நீ திருமகள் என்பது கருத்து; இது தலைவியை நோக்கிற்று) மண் அளந்த நீல் நிற வண்ணனும் (இது தலைவனை நோக்கிற்று. தலைவன் ஈண்டுக் கண்ணனுகக் கூறப்பட்டனன் எனக் கொள்க.) தம் முன்னினது (பலராமனது) நிறம்புரை தீம்பால் நிற வெள் சங்கம் ஏந்தினன்,' என

இயைக்க. 'தம்முன் நிறம்புரை வெள்சங்கம், நீம்பால் நிறவெள் சங்கம்' என இயைக்க. (தம் முன் நிறம் பாலுக்கும் பால் நிறம் சங்கத்திற்கும் உவமை எனக் கொள்ளின் அடுத்துவரல் உவமை என்னும் அலங்காரக் குற்றமாம்).

பக்கம், 242:—'புரிவளை வான்கோடு' என்னுஞ் செய்யுள்:

(நீ) புரிவளை வான்கோடு புத்தேளோடு ஒத்தி-நீ புரிவளையை அணிந்ததனால் வெள்ளிய சங்கத்தையுடைய பலராமனை ஒத்திருக்கின்றாய் (இது தலைவியை நோக்கிற்று.); திருவளர் மார்பனும் (இஃது ஈண்டுக் கண்ணன் என்னும் பொருட்டாய்த் தலைவனை நோக்கிற்று.) தம்முன் உருவம் புரையும் நின் கேழ் ஏந்தினன் - பலராமனது உருவினை ஒத்த நின் சங்கம் போன்ற சங்கை ஏந்தினன்.

(நகசு) 'வயங்கு இழாய்! வெங்கானம் சென்றவர் வருவர்,' என இயைக்க.

(நகள) 'பண் அனைய சொல்லாய்! நின் நுடங்கு இடை போல வணங்குவனவாகிய கொடியை அன்பர் (தலைவர்) கண்டால் கானம் கடக்கிற்பரோ? கடவார்,' என இயைக்க.

(நகஅ) உம் வெற்பு எடுத்து நின்றான் - உம்முடைய கோவர்த்தன மலையை எடுத்து நின்றவனுகிய திருமால் (ஈண்டுக் கண்ணன் திருமால் எனப்பட்டான், திருமாலின் அவதாரமானவன் ஆகலின். ஈண்டுத்தலைவியை நோக்கி, 'உம் வெற்பு எடுத்த' என்று கண்ணன் ஆயர்கள் பொருட்டுக் கோவர்த்தன மலையை எடுத்த வரலாற்றைக் கூறலின் ஈண்டுக் கூறப்பட்ட தலைவி முல்லை நிலத்தாள் எனக் கொள்க.) பொலங்கொன்றை - அழகிய கொன்றை மரங்கள், பொன் மலர்ந்து - பொன்போன்ற மலர்கள் மலரப்பெற்று; 'மடந்தை! (விளி), மெல்லியல்; நீள் புயலில் உம் வெற்பு எடுத்து நின்றான் அளந்த நிலமுங்குளிர்ந்தது; (நீள்புயலால் நிலமும் குளிர்ந்தது என்க. நிலமும் என்பதிலுள்ள உம்மை எதிரது தழுவிய எச்சப் பொருட்டு), பொலங்கொன்றை(யும்) பொன் மலர்ந்து பொலிவுற்றன. (இவற்றுற்) சென்றார் வருவர் என்பதை நன்கு அறிந்தேன்,' என இயைக்க.

(நகக) 'திரைபொரு நீர் (கடலைப் போன்ற நீர்ப்பெருக்கினை உடைய) குமரிப்பாவைக்கு இணை அனையாய்! பூவைப் புது மலர் வண்ணன் பண்டு கொண்டு (முன்னர் வயிற்றிடத்தக் கொண்டு) இத்த (ஈந்த) பல்முகில்கள், நெடுமாறனது கடற்றுறை

நாடாகிய தூவைச் சுடர் வேலவர் (தலைவர்) சென்ற நாட்டினுந் தன்னுங்கொல்,' என இயைக்க.

(சூஉ0) 'நல் நுதலே! கோடல் மலர்ந்து குருகு இலை தோன்றின; கொன்றை, பாடல் மஞ்ஞி வண்டு பாண் செயச் செம் பொன் (செம்பொன் போன்ற மலரை) பாரித்த (தந்தன); அரிகேசரியாகிய அம் தண் பொன்னி நாடனுடைய பகைபோல் (என் மனம்) மெலிகின்றது; என் செய (நான் செய்தற்குரியது யாது?)' என இயைக்க.

(சூஉக) 'தளிதருதண் சிலம்பா! அரிகேசரியினது அம் தண் கூடல் அன்ன ஒளி தரு வாள் நுதலாள் நைய (நீ) இவ்வாறு ஒழுகுவது தக்கது அன்று,' என இயைக்க.

(சூஉஉ) 'பொன்னே! உறு வெம் சுரத்து நான் கொய்து கொண்டு (வந்து) குழல்மிசை நயந்து அணிந்த கானக்குரவின் அம்போதே கமழும் என் கைத்தலம்; வரோதயனது வாள் முனைபோல் ஊனப்பட நினைந்து ஊடல்,' என இயைக்க.

(சூஉங) சூ0எ-ஆம் செய்யுளின் குறிப்பை நோக்குக.

(சூஉச) 'என் நெடுந்தகையே! எதிர்ந்தார் ஓடிம் நிலைமை கண்டானது வையையாற்றின்கண் ஒள் நுதல் மங்கையரோடு ஆடும் நிலைமையை அல்லை; அம் பொழில்வாய் அவரொடு நீடும் நிலைமையும் அல்லை; (மற்றென் நிலையினை?) சொல்லாய்,' என இயைக்க.

(சூஉஞ) வண்டு மெல் பூ வள்ளத்துத் தே மகிழ் - வண்டுகள் மெல்லிய பூவாகிய வள்ளத்தில் உள்ள தேனை உண்டு மகிழும், தேர் வழி - தேர் சென்ற உடன். 'குருதி வெள்ளத்துச் செங்கழு நீர் வைத்த கோனது தொண்டி வண்டு மெல் பூ வள்ளத்துத் தே மகிழ் கானில் வந்தார் (வந்த தலைவர்) சென்ற தேர் வழி ஒலி கடல் எம் உள்ளத்தினூடு (நாங்கள்) சிதைய வந்து ஊரும்,' என இயைக்க. 'நாங்கள்' என்பது எஞ்சி நின்றது.

(சூஉசு) 'குருகு இனம், இரணைதயன்றன் வடி ஆர் அயில் அன்ன கண்ணி தன் வாட்டம் உணர்ந்தும் வள் பூங் கடி ஆர் கருங்கழி மேய்கின்றன; (ஆதலின்) கானலில் கலந்து அகன்ற கொடியாரினுங் கொடிய,' என இயைக்க.

இதில் எஞ்சி நிற்கும் குறிப்பெச்சம் 'சொல்வாள் தோழி' என்பதும், 'கேட்பாள் தலைவி' என்பதுமாம். 'கேட்பான் சிறைப்புறத்தானாகிய தலைவன்,' என்றுமாம்.

இந்நூலுரையில் பயின்று வந்துள்ள

உவமைகள்

அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போல, 2.

ஆவிற்கு இரு கோடு போல, 34.

கடல் வெதும்பின் வளாவும் நீர் இல்லது போல, 60. [12.

கடுத்தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போல,

கண்ணுடி மண்டிலத்து ஊது ஆவி போல, 53. [போல, 2.

கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம்

கலங்கற் சின்னீர் தெருளாமையான் உண்பானை, அறிவு உடையானெருவன் பேய்த்தேரைக் காட்டி, 'உதுக் காணுய் நல்லதொரு நீர் தோன்றுவது; அந்நீர் பருகாய்; இச்சேற்று நீர் பருகி என் செய்தி?' என்று கொண்டுபோய் நல்லதொரு நீர் தலைப்படுவித்து ஊட்டியது போல, 12.

கனல்முன் இட்ட மெழுகு பாவை போல, 53.

காமவல்லியும் கற்பகக் கொழுந்தும் நடை கற்பதென, 54.

கார் மருங்கின் மின்னுப்போல, 52.

குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் போல, 18. [59.

குன்றமுருண்டால் குன்றி வழியடை ஆகாதவாறு போல,

கெடுத்துத்தேடும் நன்கலம் எடுத்துக்கொண்டாற்போல, 68.

கொழுச்சென்ற வழித் துன்னுசி சேறல் போல, 1.

கோடையால் தெறப்பட்டு வாடிநின்ற சந்தன மரம் மழை பெற்றுத் தளிர்த்தாற்போல, 63.

சந்தனமும் காஞ்சிரையும் மரம் எனப்பட்டதே போல, 90.

தகை மாண்ட நெடுஞ்சுவர்க்கு வகை மாண்ட ஓவியம்போல,

தாமரைக் கொட்டையின் அல்லியே போல, 111. [2.


தாரகை நடுவண் தண்மதி போல, 55.

நாண் வழிக் காசு போல, 39.

நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங் கொடாதது போல, 41.
நீர் மருங்கின் கொடிப்போல, 52.
நீர் வழி மிதவை போல, 39.
நீருடை நிலத்து நிவந்த நீள் மண மரம் வெப்பத்தால் தெறப்படாதது போல, 50.
பள்ளத்து வழி வெள்ளம் போல, 59.
புனல் ஓடும் வழியில் புற்சாய்ந்தாற்போல, 39.
போகாக் குமரியை உடையார் போல, 172.
மணிக்கலம் கதுவாய்ப்பட்டது போல, 118.
மழைக் கொண்டலில் மின்னுப்புக்கு ஒளித்தாற்போல, 54.
மூடியிருந்து வேவதோர் கொள்கலம், மூய் திறந்தவிடத்து ஆவியெழுந்து முன்னின்ற வெப்பம் நீங்கினாற்போல, 131.
யானை தொடுவுண்ணின் மூடுங்கலம் இல்லது போல, 60.
வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற்போல, 38.
வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதி வழுவித் தலைப்பெய்தாற்போல, 38.
வேலேறு படத் தேளேறு மாய்ந்தாற்போல, 51.

அரும்பதம் முதலியவற்றின்

அ க ரா தி



(எண் - பக்க எண்)

அக்கரையான் - சிறுவன், 216.
அகத்திணை - அக ஒழுக்கம், 42.
அகத்தியம் - செய்தானுற் பெயர் பெற்ற நூல், 4; தலைச் சங்க நூல், இடைச் சங்கநூல், 6.
அகத்தியனார், 5, 6. [164.
அகப்பா - கோட்டை மதில்,
அகப்பொருள் உலகியலாகாமை, 30; புலவர் நாட்டிய ஒழுக்கம், 30, 73.
அகம் - வீடு, 8. [பு, 62.
அகலம் - விருத்தியுரை, 16; மார்
அகலிடம் - பூமி, 67.
அகவயின் - உள்ளிடம், 3.
அகழ்தல் - தோண்டுதல், 22.
அகன் பொழில் - விசாலமான சோலை, 38. [பூமி, 95.
அகன் ஞாலம் - விசாலமான
அச்சக்கிளவி, 180.
அச்சம் என்பது, 39.
அசுர மணம், 29.
அஞ்சிறை - உட்சிறகு, 50, 206.
அட்ட - அழித்த, 86.
அட்டில் - சமையலறை, 142.
அட்டில் முதலிய இல்லுறுப்புகள், 142.
அடிநிழற்றிரங்கல், 155.
அடியுறை - பாத காணிக்கை, 55.
அடுப்ப - சேர்க்க, 39.
அடுப்பார் - சேர்ப்பார், 30.
அடும் - சமைக்கும், 140.
அடுவான் - சமைப்பவன், 35.
அண்ணி - நெருங்கி, 84.
அண்வருதல் - சமீபித்தல், 53.
அணங்க - வருத்த, 59.
அணங்காட்டு - துன்புறல், 118; வெறியாடல், 118. [59.
அணங்கியோள் - வருத்தியவள்,
அணவரும் - சமீபிக்கும், 53.
அணி - அழகு, 37, 46.
அணித்து-அருகில் உள்ளது, 53.
அணிமை - சமீபம், 54, 240.
அத்தாணி - சபை, 213.
அத்தை - முன்னிலை அசைச் சொல், 59.
அதர்ப்படயாத்தல் - வழி நூலாகச் செய்தல், 5. [டது, 17.
அதிகாரம் - பல ஒத்தக்கொண்
அதிசயன், 207.
அதிரியன் - பாண்டியன், 66.
அந்தணர் குடையும் கரகமும் கொள்ளல், 156, 158.
அம்பல்-புறங்கூற்று, 143, 144.
அமர் - போர், 81, 82.
அமிழ்து - தேவாமிருதம், 81.
அமை - மூங்கில், 180.
அமையும் - பொருந்தும், 40.
அயிர்ப்பு - சந்தேகம், 144.
அயில் - வேலாயுதம், 58, 81.
அரக்காம்பல் - செவ்வல்லி, 45.
அரசனுழை - அரசனிடம், 9.
அரண் - கோட்டை, 98.
அரத்தம்-செங்குவளை மலர், 63.
அரமகள் - தெய்வப் பெண், 42.
அரவின்குருளை - பாம்புக்குட்டி, 59.
அரிகேசரி, 58, 60, 69, 70, 81, 95, 132, 138, 147, 154,

157, 160, 165, 177, 178, 203, 206, 210, 217, 218, 224, 225, 239, 245.
அரிமா - சிங்கம், 73, 180.
அரிமா நோக்கம், 73.
அரிமான் - சிங்கம், 35.
அருகுதல் - அறிதல், 102; சார்த்துதல், 102.
அருத்தம் - பொருள், 212.
அருத்தாபத்தி, 191.
அருந்ததிக் கற்பு, 239.
அரும்பொருள் வினை நிலை - அசுரமணம், 29.
அருமறைக் கடவுள் - சிவபிரான் (இறையனர்), 3.
அருமை - துன்பம், 53.
அருமை சாற்றல், 112.
அருமையறிதல், 54.
அருவி - மலையாறு, 36. [94.
அருளால் அரிதென விலக்கல்,
அல்குல் - பெண் குறியின் மேல் பரப்பு, 54.
அல்ல குறிப்படுதல், 126.
அல்லி - அக இதழ், 111, 144.
அலகிடல் - பெருக்குதல், 8.
அலமலக்கு - கலக்கம், 235.
அலர் - பழி, 143, 145.
அலர் அறிவுரைத்தல், 145.
அலவன் - நண்டு, 100.
அலைவாய் - திருச்செந்தூர், 86.
அவ்வரி - அழகிய வரி, 59
அவத்தம் - பயனின்மை, 110.
அவயவம் எழுதல் அரிதென விலக்கல், 95.
அவருழை - அவரிடம், 77.
அவலக் கவலை-வீண் மனத்துயர்,
அவாவி - விரும்பி, 13. [13.
அவிர் - விளங்குகின்ற, 3.
அவைக்களம் - சபை, 14.
அழல் - தீ, 3.
அழல்விர் சோதி அருமறைக் கடவுள் - சிவபிரான், 3.
அழனிறக் கடவுள் - இறையனர், 8.
அழுங்கற்க - வருந்தாதே, 52.
அழுங்கி - வருந்தி, 58. [157.
அழுங்கு தாய்க்கு உரைத்தல்,
அளகம் - கூந்தல், 51.
அளாநாட்டுப் போர், 132.
அளவினுற் பெயர் பெற்ற நூல்-பன்னிரு படலம், 4.
அளி - கிருபை, 183.
அளை - வளை, 59.
அளைந்த - தோய்ந்த, 87.
அறத்தொடு நிற்றல் - தக்கதனைச் சொல்லி நிற்றல், 173; கற்பின் தலை நிற்றல், 173.
அற நிலை - பிரம மணம், 29.
அறம் - தக்கது, கற்பு, 173.
அரன் - தருமம், 13.
அறிதி - அறிவாய், 45.
அறியாமைப் பிரிந்த தலைமகனையுடையாள் சொல்லியது, 235. [டல், 108.
அறியாள் போன்று நினவுகேட்
அறிவல் - அறிவேன், 10.
அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி - ஆடவர் நாற்குணம், 38, 60.
அறிவு என்பது, 38.
அறிவுடையாளர், 6.
அறுநீர்ச் சுனை - நீர் வற்றிய சுனை, 23.
அறுவகைப் பாசாண்டிகர், 11.
அன்பிற்று - அன்பினையுடையது, 4.
அன்பின் இலக்கணம், 18.
அன்பின் ஐந்திணை, 1, 18.
அன்புடையாரின் குணம் - சாவின் சாதல் நோவின் நோதல் முதலியன, 18.

அன்றில் - கிரௌஞ்சப் பறவை, 23.
அன்றே - அல்லவா, 45, 76, 78.
அன்னன் - அத்தகையன், 9.
அன்னுய்-அப்படிப்பட்ட நீ, 46.
அனங்கன் - மன்மதன், 59.
அணுமித்து-அனுமானித்து, 18.
ஆ - பசு, 29, 34.
ஆக்கிய - ஆக்க, 201. [வன், 2.
ஆக்கியோன் - (நூல்) செய்த
ஆகம் - மார்பு, 51.
ஆகாதே - அன்றே, 40, 135.
ஆங்க - அசைச்சொல், 57, 201.
ஆகினி - ஈரப் பலா, 37.
ஆட்டை - வருஷம், 12.
ஆடகம் - பொன், 37.
ஆடவர் நாற்குணம், 38, 60.
ஆடவர் மடலேறுதல், 93.
ஆடூஉப் பெயர், 249. [10.
ஆண்டைப் பெருங்குமாரனார்,
ஆதரம் கூறல், 148.
ஆதல் - ஆவது, 76.
ஆதித்தன் - சூரியன் (பாலித் தெய்வம்), 23.
ஆபவோ - ஆவார்களோ, 33.
ஆம்பல் - செவ்வல்லி, 45, 47.
ஆமான்-காட்டுப் பசு, 238, 247.
ஆயம் - தோழியர் கூட்டம், 32, 72, 173.
ஆய மகளிர் - தோழியர், 32.
ஆயிடை - அவ்விடம், 3, 235.
ஆர் - உவம உருபு, 238.
ஆர்ப்பெடுத்து-ஆரவாரித்து, 10.
ஆரணங்கு - அரியதெய்வப்பெண் போன்றவள், 56; தெய்வம், 123.
ஆரம் - சந்தன மரம், 22.
ஆராய்வுழி - ஆராயும்போது, 8.
ஆரிட மணம், 29.
ஆல வட்டம் - விசிறி, 37.
ஆலவாயிற்பெருமானடிகள், 10.
ஆலவாய் - மதுரை, 3.
ஆவணவீதி - கடைத்தெரு, 53.
ஆவணியவிட்டம் (மதுரைத்திருநாள்), 125.
ஆவயின் - அவ்விடம், 20.
ஆழி - சக்கராயுதம், 207.
ஆள் - வீரன், 157, 217.
ஆள்வினை - முயற்சி, 33, 198.
ஆளி - யாளி போன்ற ஒரு விலங்கு (யாளிச்சிங்கம்), 35.
ஆற்றகில்லாள் - சகிக்கமாட்டாள், 148.
ஆற்றுது உரைத்தல், 209.
ஆற்றுமை கூறல், 209.
ஆற்றுக்குடி - ஓரூர், 52, 81.
ஆற்றுக்குடிப் போர், 49, 52, 59, 60, 66, 81, 87, 111, 127, 204, 207, 219, 230, 238.
ஆற்றுவல் - ஆற்றுவேன், 217.
ஆற்றெழுக்கு, 74.
ஆறலைத்தன - வழி பறி செய்த பொருள்கள், 23. [179.
ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி,
ஆனேறு - எருது, 29.
இகத்தல் - நீங்குதல், 142; இறத்தல், 141.
இகல் - போர், 46, 55. [237.
இகின் - இறந்தகால இடைநிலை,
இசை நுணுக்கம் - இடைச் சங்கத்து இசை நூல், 6.
இடம் மூன்று, 244.
இடந்தலைப்படல் - இடத்திற் சந்தித்தல், 56.
இடந்தலைப்பாடு, 70.
இடாவும் - மோதும், 237.
இடுக்கண் - துன்பம், 8, 70. [3.
இடுகுறி-இட்டு வழங்கும் பெயர்,
இடுகுறியால் பெயர் பெற்ற நூல்-நிகண்டு, கலேக்கோட்டுத்தண்டு, 4.

இடும்பை - துன்பம், 12.
இடை - இடையீடு, 44.
இடைச்சங்க காலத்தொகை 3700 வருடம், 6.
இடைச்சங்கத்தார், 6.
இடைச்சங்கத்தார்பாடியவை, 7.
இடைச்சுரத்துக் கண்டோர்கூற்று, 156.
இடையாமம் - நடு இரவு, 9.
இணை விழைச்சு-இருவர் காமத்தாலான புணர்ச்சி, 11.
இத்துணை - இவ்வளவு, 30, 42.
இதழ் - தகடு, 8. [24.
இந்திரன் - மருத நிலத்தெய்வம்,
இம்மை - இவ்வுலகம், 9.
இயக்கன் - கந்தருவன், 42.
இயல்பிற்று - இயல்பினை உடையது, 28.
இயலிடம் கூறல், 63.
இயலிடம் கேட்டல், 62.
இயற்கை - முறைமை, 2
இயற்கை அன்பு, 45.
இயற்கைப் புணர்ச்சி - தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி,
இயற்பட மொழிதல், 164. [43.
இயற்பழித்தல், 164.
இயைபு - சேர்க்கை, 12; தொடர்பு, 73, 169.
இயையான் - பொருத்தமாட்டான், 30.
இரங்கல் - வருந்தல், 18.
இரணந்தகன், 127.
இரணேதயன், 248.
இரந்து பின்னிற்றல் - தலைவியை இரந்து இதம் சொல்லுதல், 79. [என்றல், 181.
'இரவினும் பகலினும் நீ வருக,'
இரவுக்குறி, 132, 139.
இரவுக்குறிக்கு இல் வரைப்பு இடம்; மனையகம் அன்று, 142.
'இரவுக்குறி' என்பதன் இலக்கணம், 140. [182.
இரவும் பகலும் வரவு விலக்கல்,
'இரவு வருக,' என்றல், 182.
இராக்கத மணம், 29.
இரியல் போதல் - அழிந்து போதல், 58.
இரீஇ - இருக்கச் செய்து, 9.
இரீயினர் - நிலைபெறச் செய்தவர், 5.
இருக்கும் - இருப்பான், 9.
இருங்குஞ்சி - கருமயிர், 38.
இருக்கை முடவர், 196.
இருஞ்சிறை, 134. [249.
இருது - பருவம், 22, 35, 217,
இருதுக் காட்சி, 29.
இருந்துணை - பெருந்துணை, 65.
இருந்தையூர்க் கருங்கோழி - ஒரு தமிழ்ப் புலவர், 6.
இருநிலம் - பெரும்பூமி, 55, 62.
இருப்புழி-இருக்கும் சமயம், 9.
இரும்பொழில் - பெருஞ்சோலை, 38, 46, 83. [யர், 71.
இருமுது குரவர் - தாய் தந்தை
இரு வகை எச்சம், 244, 247.
இருவயினெஞ்சல், 44.
இருவர் நினைவும் ஒரு வழி உணர்தல், 84.
இருவருமுள்வழி அவன் வரவுணர்தல், 89. [135.
இருவிப்புனம் - தினைக்கொல்லை,
இல் செறிக்கில் - வீட்டில் அடைத்தால், 71.
இல்லையால்- இல்லாமையால், 78.
இலக்கணத்தது - இலக்கணத்தையுடையது, 31.
இலேசு - விதப்புச்சொல், 235.
இழிதரும் - இறங்கும், 37.
இழுக்கி - தவறி, 56, 173.

இழுக்கு - குற்றம், 56.
இழுது - நெய், 180.
இளந்திருமாறன், 7.
இளந்திரையம் - செய்வித்தாணற் பெயர் பெற்ற நூல், 4.
இள நாகனார், 10.
இளமாக்கா - இளமரச் சோலை, 142.
இளிவந்தன - இகழ்ச்சியான செயல்கள், 93.
இளிவரவு - இகழ்ச்சி, 172
இளைஞர் - வீரர், 38.
இளையர் - வீரர், 81.
இளையார் - தோழியர், 108.
இற்றை - இன்று, 58.
இறத்துபாடு - மரணம், 45.
இறப்ப - மிக, 77.
இறப்பவும் - மிகவும், 25.
இறவுளர் - குறவர், 23
இறை - முன் கை, 127, 238.
இறைச்சிப் பொருள், 249.
'இறையனார் களவியல்' என்னும் பெயர்க் காரணம், 13. [79.
இன்னணம்-இன்ன வண்ணம்,
இன்னாது - துன்பந் தருவது, 108.
இனியாரோடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போல்வது உலகத்துத் தன்மை, 64.
இணைய - வருந்த, 232.
இணையல் - வருந்தாதே, 53.
இணைகின்றது-வருந்துகிறது, 59.
இணையாகல் - நீ வருந்தற்க, 63. [முறை, 2.
ஈ:தலியற்கை - பாடஞ்சொல்லு
ஈவோன் - ஆசிரியன், 2.
ஈர்ம்பொழில் - குளிர்ச்சியான சோலை, 63, 69, 70.
உக்கிரப் பெருவழுதி - கடைச் சங்கத்து இறுதிப் பாண்டியன், 7, 14.
உகுப்பல் - கொட்டுவேன், 11.
உசுமோ - சிந்துமோ, 83.
உசிதன் - பாண்டியன், 42, 50, 66, 67, 68, 95, 99, 109, 121, 134, 155, 157, 160, 168, 179, 180, 181, 209, 230, 232, 241.
உடம்பட்டு விலக்கல், 95.
உடன் போக்கு, 151.
உடீஇ - உடுத்தி, 9.
உடைத்து - உடையது, 172.
உடைந்தார் - தோற்றவர், 225.
உண்டை - தொகுதி, 49.
உண்பல் - உண்பேன், 11.
உண்மையன்பின் இயல்பு, 19.
உணா - உணவு, 22.
உத்தர குரு - அறுவகைப்போக பூமிகளுள் ஒன்று, 11. இது மேரு மலையின் வடக்கில் உள்ளது. இங்குக் கற்பக விருட்சம் உண்டென்றும், தானமும் தவமும் செய்த ஆடவரும் பெண்டிரும் பதினாறாண்டுக் குமரரும் பன்னீராண்டுக் குமரியருமாய் இவ்விடத்தில் தோன்றி எப்பொழுதும் இன்பந் துய்ப்பர் என்றும் நூல்கள் கூறும் (திரு. தி. அ. அனந்தகாத நயினார் திருக்குறள் ஆராய்ச்சி, பக். 28.)
உத்தர மதுரை - கடைச்சங்கம் இருந்த இடம், 7. [206.
உது - சுட்டுப் பெயர், 12, 157,
உதுக்காணுஞ் - சிறிது தூரத்தில் தோன்றுவதைப் பார், 12.
உப்பூரி குடி கிழார், 5, 9, 10.

உய்க்கப்பட்டு - செலுத்தப் பட்டு, 57.
உய்க்கும் - சேர்க்கும், 28.
உய்யக் கொண்டமையான் - பிழைக்கச் செய்ததால், 11.
உரம் - வலிமை, 80.
உரித்து - உரியது, 21.
உரிப்பொருள் - திணைக்கு உரிய பொருள், 21, 24. [142.
உரிமையிடம் - அந்தப்புரம்,
உருத்திர சன்மன், 5, 9, 10.
உரும் - இடி, 63, 82, 83.
உரும் ஏத்திய கோன் - பாண்டியன், 63, 82, 114, 121, 183.
உருவெழுதல் அரிதெனல், 95.
உருளரிசி - கொத்தமல்லி, 32.
உரையிற் கோடல், 199.
உலகம் - இடம், 21.
உலகியல்பு உரைத்தல், 158.
உலம் - கல், 147, 241.
உலா - பவனி, 73.
உவகை - சந்தோஷம், 68.
உவமம் - உவமை, 30.
உவர்க்கழி - உப்பங்கழி, 23.
உழத்தல் - வருந்துதல், 93.
உழை - இடம், 9, 77.
உள்ளி - நினைத்து, 7.
உள்ளி விழா - கருவூர்த் திருநாள், 125; உறந்தைத் திருநாள், 169.
உளப்பாடு - இணக்கம், 43.
உளம் - எண்ணம், 77.
உளவே - உளவோ, 45.
உற்றதுரைத்தல், 59.
உறந்தை - உறையூர், 25, 112, 155, 169, 179.
உறவினள் - விரும்பினள், 103.
உறையூர்ப் பங்குனியுத்திரம், 125.
ஊசல் - ஊஞ்சல், 36.
ஊடல் - பிணக்கம், 24, 216.
ஊடல் மூவகை, 228.
ஊர் எறிந்தன - கொள்ளையிட்ட பொருள்கள், 23.
ஊர் துஞ்சாமை - ஊரார் தூங்காதிருத்தல், 125, 178. [164.
ஊர்மேல் வைத்து உரைத்தல்,
ஊரெறி பறை-பாலைப் பறை, 23.
ஊறு - இடையூறு, 172.
எஃகு - ஆயுதம், 60.
எங்கை - என் தங்கை, 216.
எச்சம் - ஒழிபு, 14, 244.
எடுத்த - செய்த, 140. [187.
எண்கு - கரடி, 172, 179, 180,
எண் கேறு - ஆண் கரடி, 180.
எண்ணுள் பக்கத்துத் திங்கள் - அஷ்டமிச் சந்திரன், 60.
எண்வகை மணமும் அவற்றின் வேறு பெயரும், 29.
எண் வகை மெய்ப்பாடு, 244.
எதிர் நூல், 15.
எய்தும் - அடைவான், 29.
எய்துவிக்கும் - அடையச் செய்யும், 34. [பன்றி, 35.
எய்ப்போத்து - ஆண் முள்ளம்
எருத்து - கழுத்து, 239.
எல்லி - இரவு, 180.
எலுவ-தோழனே, 60. [ளது, 62.
எவ்விடத்து - எவ்விடத்திலுள்
எழில் - அழகு, 53.
எழீஇ - எழுப்பி, 213.
எழுபது பரி பாடல், 7.
எள்ளுநர் - இகழ்பவர், 196.
எற்பாடு - சூரியோதயம், 21.
எற்புச் சட்டகம் - எலும்புடல் (Skeleton), 21. [79.
எற்றுக்கோ - எதற்காவோ, 74,
என்காறும் - என் வரையில், 65.

என்கின்றனல் - என்று கூறுகின்றனலையால், 53.
என்ப - என்று சொல்லுவர், 1.
என்மனார் - என்று சொல்லுவர், 1, 30, 240.
'என்மனார்' என்னும் சொல்லுக்கு இலக்கணம், 31.
என்று - எண்ணுதற்குரியதோர் வாய்பாடு, 194.
என்றும் - என்று சொல்லுவோம், 45.
என்னும் - என்று கூறும், 76.
என்னுமோ - என்று கூறுமோ, 74.
என்னையர் - என் தந்தையர், 109.
ஏ - அம்பு, 69, 82, 204. [39.
ஏகதேசம் - சிறுபான்மை, 30,
ஏண் - வலிமை, 149. [182.
ஏதம் - துன்பம், 88, 197, 172,
ஏதிலது - மாறானது, 183.
ஏதிலர் - அயலார், 171, 176.
ஏதுக்கருத்தன், 140.
ஏமம் - பாதுகாப்பு, 125.
ஏமுறும் - களிக்கும், 59.
ஏர் - அழகு, 41, 66, 70, 128.
ஏலம் - மயிர்ச் சாந்து, 53.
ஏழை - பெண், 54, 70, 147, 180, 206.
ஏற்றிழிவு - உயர்வு தாழ்வு, 137.
ஏறு - காளை மாடு, 24.
ஏறு கோட்பறை - முல்லை நிலப் பறை, 23.
ஏனல் - தினை, 87, 183.
ஏனாதி - படைத்தலைவன், 34.
ஏனாதி மோதிரம், 34.
ஏனோர் - மற்றவர், 166.
ஐ - கோழை, 12; அழகு, 180.
ஐங்குறுநூறு, 7.
ஐந்திணை, 20.
ஐந்திணை மஞ்சிகை - (ஐந்து இணை மஞ்சிகை) ஐந்து ஜதைக் குண்டலம், 25.
ஐந்திணையாடை - (ஐந்து இணை ஆடை) ஐந்து ஜதை ஆடை, 25.
ஐயம் - சந்தேகம், 41, 42.
ஐயன் - தலைவன், 10.
ஐயாட்டை - ஐந்தாண்டு, 9.
ஐயுறுவல் - சந்தேகிப்பேன், 67.
ஐவகைப் பொருள் கோளும் அவற்றின் பொருளும், 245.
ஐவனம் - மலை நெல், 22.
ஒக்கல் - சுற்றம், 249.
ஒக்கும் - பொருந்தும், 75. [18.
ஒண்பொருள் - சிறந்த பொருள், ஒண்ணுதல் - ஒளி பொருந்திய நெற்றி, 36.
ஒப்பித்தல் - ரூபித்தல், 30.
ஒப்பு - பிராசாபத்திய மணம், 29.
ஒரீஇ - நீங்கி, 172.
ஒருங்கு - ஒன்றுக, 200.
ஒரு சிறை நிலை, 245.
ஒருதலை - நிச்சயம், 4, 19, 54.
ஒருதலைப்படாது - நிச்சயப் படாது, 9.
ஒருப்பட்டு - சம்மதித்து, 9.
ஒருவழித் தணத்தல், 165.
ஒருவற்கு - ஒருவனுக்கு, 43.
ஒருவாமை - அழியாமல், 15.
ஓராவழி - ஒவ்வோரிடத்தில், 10.
ஒவ்வாது - பொருந்தாது, 44.
ஒவ்வாப்புடை - பொருந்தாத பகுதி, 30.
ஒழுகலாறு - ஒழுக்கமுறை, 18.
ஒழுகுவது - நடப்பது, 73.
ஒள்ளியான் - சிறந்தவன், 15.
ஒளிப்பினும் ஊழ் வினை ஊட்டாது கழியாது, 35.

ஒற்று - வேவு, 197.
ஒறுப்பல் - தண்டிப்பேன், 197.
ஒன்னூர் - பகைவர், 183.
ஒன்றும் - சிறிதும், 127.
ஒன்னர் - பகைவர், 67, 81, 86, 106, 108, 109, 209.
ஓத்து - இயல், 14, 17, 249.
ஓதம் - கடல், 127, 182, 184.
ஓதற்பிரிவு உரைத்தல், 200.
ஓதி - கூந்தலையுடையவள், 206.
ஓதை - ஓசை, 237.
ஓம்படித்து உரைத்தல், 151.
ஓம்படை - பாதுகாப்பு, 151.
ஓமை - பாலை நில மரம், 23.
ஓர்ப்பு என்பது, 38.
ஓல் - தாலாட்டு, 36.
ஓலுறுத்த - ஒலி செய்ய, 54.
ஓவியம் - சித்திரம், 2.
கங்குல் - இரவு, 209. [151.
கங்கை மணலன் - பாண்டியன்,
கட்டி - வெல்லம், 12.
கடம் - காடு, 156, 157.
கடம்பு - கடப்ப மரம், 42.
கடம்பு அமர் கடவுள் - முருகக் கடவுள், 42.
கடலிடம் - பூமி, 60.
கடா - கேள்வி, 18, 30, 54.
கடாய் - செலுத்தி, 60.
கடாவல்-செலுத்தல், 45.
கடா விடுதல்-பிணையடித்தல், 24.
கடாவினுய் - வினவினுய், 26.
கடாவுவான் - செலுத்துவான், 207. [207.
கடி - வாசனை, 37, 66; காவல், கடிதல் - ஓட்டுதல், 22.
கடி மனை - மணவீடு, 239. [11.
கடியப்பட்டன - நீக்கப்பட்டன,
கடி - கசப்பான மருந்து, 12.
கடுங்கோன் - தலைச்சங்கத்துக் கடைப் பாண்டியன், 6.
கடை காப்பார் - வாயில் காப்பவர், 8.
கடைச்சங்க காலத் தொகை 1850 வருடம், 7.
கடைச் சங்கத்தார், 6.
கடைச் சங்கத்தார் பாடியவை, 7.
கடைப்பிடி - கற்ற பொருள் மறவாமை, 38; பின்பற்றுதல், 59.
கடையல் - ஓரூர், 55, 65, 81, 82.
கடையல்போர், 55, 56, 59, 63, 65, 81, 82, 87, 90, 95, 96, 104, 109, 121, 130, 134, 138, 148, 161
கண்டம் - கழுத்து, 208, 218.
கண்டமை கூறல், 66.
கண்டவர் கூறல், 156.
கண்டல் - தாழை, 23, 66.
கண்ணழித்தல் - பதப்பொருள் சொல்லுதல், 17.
கண்ணி - தலை மாலை, 36; மலர் மாலை, 42, 83; நினைத்து, 83.
கண்ணி மூன்றுடை வேந்தன் - பாண்டியன், 113. [யார், 10.
கணக்காயனர் - நக்கீரர் தந்தை
கணிகையர் - தாசிகள், 19.
கணை - அம்பு, 38.
கத்திகை - மலர் மாலை, 55.
கதம் - கோபம், 157.
கதி - வழி, 38.
கதிர் - கிரணம், 3, 38.
கதிரோன் - சூரியன், 132, 177.
கதுமென - திடீரென, 75, 78.
கதுவாய்ப்படல்-குற்றமடைதல், கந்தருவ வழக்கம், 1, 30. [118.
கபாட புரம் - இடைச்சங்கம் இருந்த இடம், 6.
கமம் - நிறைவு, 237.
கரவு - களவு, 85.

கரு-மேன்மை, 2; பிண்டம், 222.
கருத்தன், 140.
கருதுப - எண்ணுவர், 144.
கருப்பொருள், 22.
கருப்பொருள் மயங்கியும் வரப் பெறும் என்பது, 24.
கரும்புடைத் தோள் - மன்மத னுடைய கரும்பு வில்லின் வடி வம் எழுதிய தோள், 69.
கருமக்கருத்தன், 140.
கரு மாட்சிமைப்படும் விதம், 222.
கருவி - காரணம், 15.
கருவிக் கருத்தன், 140.
கருவூர் உள்ளி விழா, 125.
கலிமேறு பட்டினம்-துறைமுகப் பட்டினம், 23.
கலவார் - பகைவர், 203.
கலாய்த்து - கோபித்து, 11.
கலாவம் - மயிலின் தோகை, 37.
கலி - ஒரு தமிழ் நூல், 6.
கலிமதனன், 156, 232, 237.
கலிக்கோட்டுத் தண்டு - இடி குறி யால் பெயர் பெற்ற நூல், 4.
கலிமான் வினுதல், 82.
கவடு - வஞ்சம், 231.
கவலும் - வருத்துவாள், 75.
கவற்சி - வருத்தம், 8, 62, 179.
கவறல் - துன்புறல், 90.
கவன்று - துன்புற்று, 8, 62, 67.
கவன்று உரைத்தல், 154.
கவாஅன் - மலைச்சாரிவு, 183.
கவின் - அழகு, 53.
கவினி - அழகு பெற்று, 53.
கழல் - வீர கண்டை, 38.
கழற்றெதிர்மறை - இடித்துரைத் தலே எதிர்மறுத்துக் கூறல், 60.
கழறுதல் - இடித்துரைத்தல், 60.
கழறும் - இடித்துரைப்பான், 60.
கழிக் கானல் - கழிக் கரைச் சோலை, 72.
கழிபடர் - மிக்க துன்பம், 175.
கழியுவகை - பெருங்களிப்பு, 53.
கழீஇ - கழுவி, 56.
கழுது - பேய், 104, 179, 180, 181, 216.
கழுமலம் - சோணாட்டுள்ள தோர் ஊர், 169.
கழை - மூங்கில், 49.
களத்தூர்ப்போர், 87, 114.
களரியாவிரை - ஒரு தமிழ் நூல், 6.
களவியல் - சிறப்பினால் பெயர் பெற்ற நூல், 4; பெயர்க் காரணம், 13.
களவியலுரை வரலாறு, 10.
களவு - கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கம், 17.
களவுக்கால வரையறை, 189.
களித்தாள் - கள் அருந்தி மயங் கியவள், 29.
களிறு - ஆண் யானை, 81, 82.
களிறு தரு புணர்ச்சி, 121.
கற்கந்து - கல் தூண், 35.
கற்ப - கற்பார்கள், 13. 120.
கறுத்து - கோபித்து, 109, 115.
கறை - விஷம், 81. கை, 8.
கன்மாப் பலகை - சங்கப் பல கன்னி - கன்னியாகுமரியாறு, 63, 66, 88. யன், 63.
கன்னிப் பெருமான் - பாண்டி
கனலி - சூரியன், 38. 64.
கனவும்படி - கனக்காணும்படி,
கணீயிருள் - நெருங்கிய இருள், 181.
காக்கிய - காக்க, 200.
காக்கை பாடினியார், 3.
காசு - பொன் நாணயம், 39.
காஞ்சிரை - எட்டி மரம், 90.
காட்சி - காணுதல், 34, 41.
காட்டுதும் - காட்டுவோம், 78
காண்டும் - காண்போம், 9, 34.

காண்பல் - காண்பேன், 69.
காதன்மை - அன்பு, 59, 239.
காந்தர்வ மணம், 29.
காப்பணிதல் - திருமணத்தில் காப்பு நாண் கட்டுதல், 147.
காப்பு - காவல், 105, 124.
'காப்பு உடைத்து,' என்று மறுத்தல், 105. [கிளவி, 177.
காப்புச் சிறை மிக்க கையறு
காமம் - விருப்பம், 40.
காமமிக்க கழிபடர் கிளவி, 175.
காமப் புணர்ச்சி, 39, 43.
காமன் - மன்மதன், 38.
காய்கதிர் - சூரியன், 210.
காய்சின வழுதி - தலைச்சங்கத்து முதற்பாண்டியன், 6.
கார் - கார்காலம் (ஆவணி, புரட்டாசி) 21; மேகம், 52, 203.
காரணிகன் - பரீட்சகன் (காரணத்தினுல் ஆராய்கின்றவன், Examiner), 9.
காரிகை - அழகு, 80; அழகு, 85.
காலம் மூன்று, 244.
காவல் கடிகுதல், 125, 178.
காவற்குற்றப்படுதல் - காவல் செய்வதில் தவறுதல், 75.
காவற்பிரிவு உரைத்தல், 200.
காவி - நீலோற்பல மலர், 67.
காவிரி நாடு, 133.
கானங்கோழி - முல்லை நிலப் பறவை, 23. [தல், 210.
கானத்தியல்பு தோழி உரைத்
கானல் - கழிக்கரைச் சோலை, 72.
கானவர் - வேடர், 181.
கிடத்தும் - கிடப்போம், 9.
கிடக்கை - நிலை, 30, 73.
கிணை - மருத நிலப் பறை, 24.
கிழத்தி - தலைவி, 225.
கிழமை - உரிமை, 57.
கிழமை கொள்ளுதல் - சுற்ற மாகக் கொள்ளுதல், 167.
கிழவி - உரியவள் (தலைவி), 79.
கிழவோன் - உரியவன் (தலைவன்), 56, 76, 220, 223.
கிளந்து - சொல்லி, 79.
கிளப்பது - சொல்வது, 15.
கிளர்ந்தது - பெருகியது, 35.
கிளவி - சொல், 20, 47.
கிழை - சுற்றம், 111.
கீரங்கொற்றனர், 10.
கீரந்தை - ஒரு தமிழ்ப் புலவர், 6.
குஞ்சரம் - யானை, 87.
குஞ்சி - தலை மயிர், 38.
குட்டம் - ஆழம், 173.
குட்டுவன் - சேரன், 164.
குடக்கு - மேற்கு, 3.
குடைதும் - நீராடுவோம், 36.
குணக்கு - கிழக்கு, 3, 128, 210.
குமரிக் கடல், 203.
குமரி முங்நீர் - குமரிக்கடல், 131, 158.
குமாரசுவாமி - முருகக் கடவுள், 10. [வுள், 9.
குமார தெய்வம் - முருகக் கட
குரல் - (தினைக்) கதிர், 183.
குரவர் - பெற்றோர், 40, 143; ஆசிரியர்கள், 196. [246.
குரவு - பாலை மரம், 155, 156,
குரவை - கை கோத்து ஆடும் கூத்து, 22.
குரவொடு வருந்தல், 155.
குருகு - ஒரு தமிழ் நூல், 6; கொக்கு, 204; குருக்கத்தி, 245.
குருதி - இரத்தம், 216.
குருளை - குட்டி, 59.
குருஉ - திறம், 53.
குல முறை கூறி மறுத்தல், 112.
குழல் - கூந்தல், 45.

குழவி - குழந்தை, 131 [ரன், 3.
குழவித் திங்கள் - பிறைச் சந்தி
குழறல் - ஒலித்தல், 125.
குழு - கூட்டம், 33.
குளந்தைப்போர், 209, 235.
குற்றேவல் - சிறு தொழில், 76.
குறி - பெயர், 3.
குறிஞ்சிக்குப் பொழுது, 22.
குறிதலைப்பெய்தல் - குறித்த இடத்திற் கூடுதல், 56.
குறிப்பெச்சம், 244, 248.
குறியாள் கூறல், 108.
குறியிடம் கூறல், 137. [138.
குறியிடத்துக் கொண்டு சேறல்,
குறுந்தொகை நானூறு, 7.
குறுங்கண்ணி - சிறிய தலைமாலை, 3, 55.
குறும்பு - பாலை நிலத்தூர், 226
குறும்பொறை நாடன் - முல்லை நிலத் தலைவன், 24.
குறுணி - எட்டுப்படி கொண்ட முகத்தலளவை, 149.
குறைபுற உணர்தல், 89.
குறையுறுதல், 77.
குன்றி - குன்றி மணி, 59.
குன்றெறிந்த முருகவேள், 5.
கூகை - கோட்டான், 125.
கூட்டம் - புணர்ச்சி, 44.
கூட்டமில் நாட்ட வகை, 119.
கூடகாரம் - மேல்மாடம், 142.
கூடல் - மதுரை, 3, 59, 68, 70, 95, 96, 104, 147, 203; சேர்க்கை, 70.
கூடல் கொழுந்தமிழ், 59.
கூடார் - பகைவர், 96.
கூடுப - கூடுவார்கள், 74.
கூத்த நூல் - அபிநயத்தைப் பற்றிய நூல், 213.
கூத்தப்பள்ளி - அரண்மனையைச் சார்ந்த நாடக சபை, 142.
கூத்து - ஒரு தமிழ் நூல், 7.
கூதிர் - பனிக்காலம், (ஐப்பசி, கார்த்திகை), 21.
கூர - மிக, 48.
கூவல் - கிணறு, 23.
கூவுவித்து - அழைப்பித்து, 8.
கூழைக்கற்றை - பெண்டிர் தலை மயிர்த் தொகுதி, 119.
கூற்றம் - சொல், 145. [243.
கூற்றியல் - ஓர் இலக்கண நூல்,
கூற்று - சொல், 41; இயமன், 109.
கெண்டை - மீனக் கொடி, 70.
கேட்போர், 5, 242.
கேழ் - நிறம், 69, 242.
கேள் - உறவு, 217.
கைக்கிளை - ஒருதலைக்காமம், 42.
கைகோள் - ஒழுக்கம், 4, 243.
கைதருமேல் - உதவி செய்யுமாயின், 69.
கைதை - தாழை, 23, 66, 141.
கைம்மா - யானை, 207.
கைம்மிக்கோடல் - கட்டுக்கடங்காது செல்லல், 60. [144.
கைம்மிகல் - அளவு கடத்தல்,
கையாறு - செயலொழிந்தயர்தல், 13, 183.
கையுறை - கையிற் கொடுக்கும் பொருள் (தலைவன் தலைவிக்குத் தரும் பொருள்), 76.
கைவல் மகடூஉ - கைத்திறம் உடைய பெண், 16
கொங்க நாடு, 49.
கொங்கு - தேன், 50.
கொட்டகாரம் - பண்டங்கள் வைக்கும் அறை, 142.
